உ

ராஜராஜேஸ்வரி துணை.

ய: 787

புகழ்கொண்ட நாதிபனான போஜன் முதலிய பூபாலரால்

"கவிகோடி மகுடமணி"

என்றும்,

ஆங்கிலேயநாட்டு அபார கவிகளால்

"ஷேக்ஸ்பியர் ஆப் இந்தியா"

என்றும்

சிந்தை மகிழ்ந்து கொண்டாடும்

செல்வப்பெயர் பூண்ட கவீந்திரனாகிய

## காளிதாச மஹாகவியின் சரித்திரம்

என்னும்

# கவிரத்ன சிந்தாமணி

இஃது

**சிதம்பரம் - குருநாத. கந்தசுவாமி முதலியாரால்**

மணிப்ரவாள ரூபமாக இனிய செந்தமிழ் நடையில்

இயற்றப்பட்டது.

இரண்டாம் பதிப்பு

**B. R. இரங்கசாமி நாயகர்**

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

சென்னை.

All Rights Reserved.

பதிப்பு உரிமை]

1929

[விலை ரூபா 1.

# ரிஜிஸ்டர் காப்பிரைட் அறிவிப்பு

சென்னை பெத்துநாயகன்பேட்டை, வைத்தியநாத முதலி தெரு, 35-ெந. வீட்டில் குடியிருந்து காலஞ்சென்ற சிதம்பரம். குருநாத கந்தசாமி முதலியாரால் வசனரூபமாய் இயற்றி, பதிப்பித்து விக்கிரயம் செய்துவந்த காளிதாஸ மகாகவியின் சரித்திரம் அல்லது "கவிரத்ந சிந்தாமணி" என்னும் நூலின் காப்பிரைட் சுதந்தரத்தை 1928ளு ஜூன்மீ 21உ யில் ஷை கந்தசாமி முதலியாரின் குமாரர்களும் வார்சுதாரர்களுமாகிய G. K. வேதகிரி முதலியார் (1), G. K. செல்வராஜ முதலியார் (2), G. K, கோபால கிருஷ்ண முதலியார் (3), மைனர்கள் G. K. ராமநாதன், G. K. மீனாக்ஷி சுந்தரம் இவர்களுக்கு தமையனும் கார்டியனுமான G. K. வேதகிரி முதலியார் (4), ஆகிய இவர்களிடமிருந்து அடியில் கையொப்பமிட்டிருக்கும் நான் கிரயத்திற்கு வாங்கி இரண்டாம் பதிப்பு அச்சிட்டு வெளிப்படுத்தி யிருப்பதால், இனி இந்நூலை யாரும் அச்சிடக்கூடாது. அச்சிடுவரேல் அதனால் எனக்கு ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும், பினல்கோர்ட்டு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாகவேண்டுமென்பதை அறிக்கையிட் டிருக்கின்றேன்.

இங்ஙனம்,

B. R. இரங்கசாமி நாயகர்,

புரொப்ரைட்டர்,

திருமகள்விலாசம் பிரஸ்,

20, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

6A31a

# முகவுரை

"புஷ்பேஷு ஜாஜி புருஷேஷு விஷ்ணு நாரீஷு ரம்பா நகரீஷு காஞ்சி
நதீஷு கங்கா ந்ருபதீஷு ராமா காவ்யேஷு மாகః கவி காளிதாஸः ||

பூவினில் மல்லி மேலாம் புருஷரிற் புண்ட ரீகன்
மேவுநந் நகரிற் காஞ்சி மெல்லியர் தம்மில் ரம்பை
பாயுமா நதியிற் கங்கை பார்த்திபர் தம்மில் ராமன்
காவியந் தம்மின் மாகம் கவிகளிற் காளிதாசன்.

உலகவிளக்காய் ஒப்பற்று விளங்கும் சாக்ஷாத் சரஸ்வதியானவள் ஜீவகோடிகளின் விவகாரங்களை நடப்பித்து அவர்கள் மனமகிழும்படி அங்கங்கே யமைந்துள்ள அநேக ஜாதிமத பேதங்களுக்குத் தக்கபடி பலபல பாஷா ரூபங்களாகப் பரவியிருக்கின்றாளென்பது யாவரும் அறிந்த விஷயமே. அப்படிப்பட்ட பாஷைகளை அந்தந்தக் காலங்களிலே தோன்றிய அவதார புருஷர்களாலே வெளிவந்த அபார வர்ணனைகளாலே அலங்காரமுற்றனவென அறிவதற்கு உதாரணமாகக், கீழ்நாட்டிலே லக்ஷ்மணகவி, பீமகவிகளால் ஆந்த்ரபாஷையும்; கம்பன், ஒட்டக்கூத்தன் முதலானவர்களால் திராவிட பாஷையும்; மேல்நாட்டில் ஹோமர் முதலான மகாகவிகளால் க்ரீக் பாஷையும், ஆந்தொனி, ப்ரூஸ் முதலான சிறந்த மேதாவிகளால் ரோமகபாஷையும்; ஷேக்ஸ்பியர், மில்டன் முதலான அபாரகவிகளால் நமது ராஜாபாஷையாக விளங்கும் ஆங்கிலேய பாஷையும் அமைந்து விளங்குவதுபோல, நமது ஆரிய நாட்டிற்கே சிறப்புடையதாய், மற்ற இதர நாட்டவர்களால் "எங்கள் பாஷைகளுக்குத் தாயகமிதுதான்" என்றெடுத்துச் சிலாகித்துப் புகழ்வதாய், சிருஷ்டிகாலந் தொடங்கியே மூவர்களாலும் தேவர்களாலும் முனிவர்களாலும் வழங்கப்பட்டுச் சிறப்புற்று வருவதாய், இலக்கிய இலக்கண இலக்ஷணங்களெல்லாம் பூரணமாயமைந்துள்ளதாய்ச், சகல புவனங்களிலும் வழங்கக்கூடியதான தேவபாஷை

யாகிய ஸம்ஸ்கிருத பாஷை யென்னும் பூங்கொடியைத் தன் ஹிருதயமாகிய மகா சமுத்திரத்தினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட திவ்வியமான ஜீவரத்தினங்களால் அலங்கரித்து அழகுபார்த்தவன் புவனம் பதினாலும் போற்றும் புகழ்கொண்ட புவனேஸ்வரியின் பூரண கடாக்ஷமுற்ற புண்ணியனே. ஆழ்ந்த சிந்தையோடும் அபாரமாக இயற்கைப் பொருள்களை வர்ணிப்பதில் இணையில்லாமல் எங்கும் புகழ்கொண்ட இவனை வணங்காத முடிமன்னரில்லை. கற்றுவல்ல போஜன்முதலிய காவலராலும், கீர்த்திபெற்ற பாண பவபூதாதி பாவலராலும் நன்கு மதிக்கப்பட்ட இம் மகாகவி இதர மன்னர்களால் எவ்வளவோ சன்மானம்பெற்றாலும், மாளவவேந்தனாகிய போஜன் சபையின் புகழாபரணங்களிலே மகுடாபரணமாக (Poet-Laureate) விளங்கினனென்பதும், இவன் சரிதத்தைக் கவனிப்போர்க்கு இவனை வரகவி என்பதற்கும், தெய்வீக வரப்பிரசாதியென்பதற்கும், தேவர்களாலும் முனிவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவனென்பதற்கும், இவன் சரிதையிலடங்கிய அநேக அற்புதங்களால் தெரிந்துகொள்ளலாம். இத்தகைய கலா சமுத்திரமாகிய மகாகவியின் வாழ்நாட்களி லடங்கிய அபார விஷயங்களை அற்ப அறிவினையுடைய சொற்பழக்க மில்லாத சாதாரண யான் எழுதத் துணிந்ததும்,

போங்குங் கதிரோன் பேரொளியை
அங்கையிலடக்கு மாண்மை போலாம்.

எனது தந்தையார் காலத்தி லவரிடம் வந்த அநேக ஆந்த்ர கவிகளாலும் தேவபாஷாக்ஞானவந்தர்களாலும், நாடகாலங்காரப் பிரியர்களாலும், இக் காளிதாச மகா கவியைப்பற்றி அபாரமாக வர்ணித்ததை அப்போது நான் சிறுவனாயிருந்தாலும் அப்படியப்படியே கவனித்தவனாய் அவைகளினருமை யிப்போதுதான் 'தருணிகளின் அருமை தக்க வயதினர்க்கே விளங்குவதுபோல' விளங்கவும் கொண்டு, என்னைப்போல இதனிடத்தில் அளவுகடந்த நாட்டத்தையுடையவர் ஆகமெல்லாம் கொள்ளைகொண்டு ஆநந்திக்கும்படி இவ் வற்புத நூலையு மியற்றியுள்ளேன்.

எப்படிப்பட்ட அபராஞ்சிப் பொன்னால் ஓராபரணத்தையமைக்கவென்றாலும் அதற் கிடையிடையே ஒட்டுப்பொன்னின் கூட்டுறவு மின்றியமையாததோ அப்படியே ஒரு அருமையான

நூலுக்கும் சாதாரண மல்லாத சில விஷயங்களிடையிடையே வருவனவும் அந்நூலின் அலங்காரத்திற்கே அத்தியாவசிய மென்பதை அறிவிற் சிறந்த பெரியோர் அறியாமற்போகார்.

அதிககவனத்தோடே எழுதிமுடித்த இந்நூலுட் சிறிதுகுற்றங் குறைகள் எங்கேயாவது காணப்பெறினும் அவைகளைக் கவனியாது குணமொன்றையே கருதும் பெரியோர்களுக்கு அநேக வந்தனம்.

இந்நூலுக்கு வேண்டிய சில பாகங்களை அங்கங்கே எடுத்துக் காட்டிச் சிலாகித்த காலம் சென்ற கனம்-ஸ்ரீலஸ்ரீ. சிதம்பரம். ஆதி நாராயண சாஸ்திரியாரவர்களுக்கும், காலம் சென்ற-பிரசிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் (Sanskrit Professor) எம். ஏ. சேஷகிரி சாஸ்திரியார் அவர்களுக்கும், லண்டன் கதா சங்கத்து அங்கத்தினரும், ஆங்கிலேய பாஷா விற்பன்னரும் இராஜாங்க உத்தியோகத்தினரும், அநேகபாஷாக்கியானவந்தரும், எனது அத்யந்த நண்பரும், இக் கதாநாயகனைப்பற்றி எவ்வளவோ எனக்கெடுத்துரைத்தவரும், இப்போதுதான் கொஞ்சநாள்களுக்கு முன்னே அகாலமாக இவ் வுலகப்பற்றை நீங்கியவருமாகிய உத்தமகுண பண்டித நடேச சாஸ்திரியாரவர்களுக்கும் எனது நன்றியறிதலை எடுத்துக்காட்டுவதினின்றும் தடுக்கக்கூடாதவனாயிருக்கின்றேன்.

இத்தகைய பண்டித ரத்னங்களால் கொண்டாடும் சிறந்த நூலும் எங்கு முலாவும்படி எல்லாம் வல்ல இறைவன் களிகூர்வாராக. ஓம். சுபம்.

சென்னை:
8-1-1907.

இப்படிக்கு,
இந்நூலாசிரியன்.

# விஷய அட்டவணை


| தொடர் எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | இந்தியாவின் எல்லைகளும் அதன் சிறப்பும் | 1 |
| 2 | சுகாதார நகரச் சிறப்பு | 3 |
| 3 | சதாநீகன் வரலாறு | 5 |
| 4 | மகாயோகி மன்னனைக் காண வருதல் | 8 |
| 5 | உலோமகை வரலாறு | 10 |
| 6 | சதாநீகன் படை யெழுச்சி-உலோமகையைக் காணல் | 15 |
| 7 | சதாநீகன் உலோமகையை மணம் புரிதல் | 19 |
| 8 | அமாவாசையிற் பருவமும், உலோமகையின் சாப வரலாறும் | 25 |
| 9 | சதாநீகன் உலோமகையோடுங் காட்டுக்குச் செல்லல். வனக் காக்ஷி | 28 |
| 10 | சதாநீகன் உலோமகைக்கு அவ்வன விசேஷங்களைக் காட்டிச் செல்லுதல் | 30 |
| | (a) குரங்கின் கூட்டம் | 30 |
| | (b) யானைக் கூட்டம், (அதாவது, யானைகள் வரிசை வரிசையாகப் போர் வீரரைப்போல் ஒழுங்கு பெற்றுச் செல்லுங் காட்சி) | 31 |
| | (c) புஜங்க கிரிகளின் போராட்டம் | ,, |
| | (d) தேளின் கூட்டம், (அதாவது தேள்களின் படை யெழுச்சித் திட்டம்) | 32 |
| | (e) காடி விளையாட்டு, (அதாவது காடிகள் கட்டிப் புரளும் விளையாட்டு) | ,, |
| | (f) தேன் கூட்டின் சிறப்பு | 33 |
| | (g) மலைப்பாம்புகளின் தோற்றம் | ,, |
| 11 | ஆண் பக்ஷி வருதல், (பக்ஷிகளின் சம்பாஷணை) | 34 |
| 12 | தாரா நகரம், (போஜன் தர்பார் சிறப்பு) | 35 |
| 13 | மதுமந்த நகரம்-சுதன்மன் வரலாறு | 38 |
| 14 | வித்தியா ரத்தினம் | ,, |

15 சங்கீதத் திறமை கொண்ட தன் மகளுக்கு அரசன் சாஸ்திராப்பியாசம் செய்வித்தல் 41
16 அரசகுமாரியை வாதில் வெல்லும்படி அநேக தேசத்து மன்னர் மன்னரும் மகா வித்துவான்களும் வருதல்-(அவர்கள் தோல்வி) 45
17 மதியூகிமந்திரி மணமகனைத் தேடித் தேசசஞ்சாரம் செய்தல் 47
18 ஏகசிலா நகரத்து வேதியனுக்கும் வேந்தன் மகளுக்கும் வாதம் 48
19 வேதியனை மந்திரி சினேகித்தல் 50
20 அநுஷன், மன்னவன் மகட்கு மணாளனைத் தேடிச் செல்லல் 52
21 அம்பரீஷன் அனுஷனைச் சந்தித்தல் 53
22 காடே கதியாய்ச் செல்லும் இக் கவிவாணர்முன் கட்டைவெட்டி தோன்றுதல் ,,
23 கட்டைவெட்டியைக் கவிவாணனுக்கிக் காவலன் சபைக்குக் கொண்டுவருதல் 56
24 மகா வித்துவான் அரசனைக் காணல் 58
25 அநுஷன் அம்பரீஷானுடைய வித்யா சாமர்த்தியம் 59
26 காலைத் தோற்றம்-சுதன்மன் சபை வித்தியா விசேஷம் 61
27 வித்துவானு (கட்டைவெட்டி)க்கும், காவலன் மகளுக்கும் வாதம் 63
28 வித்யாரத்தினத்திற்கும் வித்வானு (கட்டைவெட்டி)க்கும் மணம் செய்வித்தல் 66
29 மாலை வர்ணனை 67
30 பள்ளியறைச் சிறப்பு 68
31 (பள்ளியறையில்) வித்வானுடைய அலங்கோலம் 69
32 வித்வான் (கட்டைவெட்டி) தன் வரலாறு கூறல் 72
33 இராஜராஜேஸ்வரியின் பிரசன்னம் (இராஜ குமாரியைத் தேற்றல்) 74
34 புவனேஸ்வரியா லெடுத்துரைத்த கட்டைவெட்டியின் வரலாறு ,,
35 கட்டைவெட்டிகாளிதேவியைக் கண்டு வணங்கி வரம் பெறல் 77

36 ஶ்யாமளா தண்டகம், (கட்டைவெட்டி காளிதாசன் ஆதல்) 79
37 காளிதாஸன் ராஜகுமாரியை நீங்கித் தேச சஞ்சாரம் செய்தல் 89
38 காளிதாசனுடைய பூர்வஜன்ம வரலாறு 92
39 சுதர்ம சபையில் நாடகம். திரிலோசனனை வஞ்சித்த பாகம் 104
40 பிரமசபையின் விசேஷம்-தூர்வாசருக்குச் சாபம் 100
41 ஸ்ரீலக்ஷ்மிதேவியின் சுப்பிரசன்னம் 102
42 பிரமன் முதலியோர் பூலோகத்தில் அவதரித்தல் 104
43 போஜபூபதியின் வரலாறு 106
44 தாரா நகரச் சிறப்பு ,,
45 போஜன் சிம்மாதனம் ஏறுதல் 123
46 காளிதாஸன் தாரா நகரம் வருதல் 124
47 ,, விலாசவதியைக் காணல் 131
48 ,, போஜன் மைத்துனனை அவமானம் செய்தல் 134
49 நகர் வலம் வரும் போஜன் முதல்முதல் காளிதாஸனைக் கண்டு சம்பாஷித்தல் 135
50 காளிதாஸன் போஜன் சபாமண்டபத்தை யடைதல் 138
51 மாலை வர்ணனை 141
52 காளிதாஸன் போஜன் கீர்த்தியைப் புகழ்தல் 146
53 சதுர்வேத சம்பன்னர் நால்வர்: வேந்தனிடத்தில் காளிதாசனால் சன்மானம் பெறுதல் 148
54 லக்ஷ்மீதர கவி (போஜனைப் புகழ்தல்) 151
55 (குவிந்தன் போஜனிடம் முறையிடுதல்) 152
56 பாணகவியின் வறுமை நிலை 153
57 கள்ளர்க ளிருவரின் மனத்தூய்மை 155
58 க்ரீடாசந்த்ரன் வருதல் 157
59 ராமேஶ்வரகவி வருதல் 160
60 போஜன் காளிதாஸன்மேல் வெறுப்புறல் 161
61 (இதர வித்வான்கள் கலகம்) 167
62 லீலாவதியின் கற்பினிலைமை (போஜன் சந்தேகந்தெளிதல்) 171
63 வித்துவான்களெல்லாம், வேந்தன் வெறுக்க, வேறூர் புகல் 177
64 காளிதாஸன் வித்துவான்களின் இடர் தீர்த்தல் 178

65 போஜன் காளிதாஸனைக் காணல் 180
66 தோற் கமண்டலம் 183
67 பிராமணச் சிறுவன் 184
68 அந்தக வித்வான் 185
69 சீமந்த கவி 187
70 பயிர் வர்ணனை ,,
71 குலாலன் மனைவி 188
72 போஜ விக்கிரமார்க்க தாரதம்மியம் 189
73 வேடச் சிறுமி ,,
74 ஸ்ரீ காந்தன் 190
75 ஜாநுதக்நம் (முழங்கால் ஆழம்) ,,
76 சுகதேவ கவி 192
77 வாசுதேவ கவி 194
78 பவபூதி 196
79 உத்தராராம சரித்திரம் 201
80 காளிதாஸன் காசியாத்திரை - வேதவியாசரைக் காணல் 202
81 மன்னன், மகா கவிக்கு மரணதண்டனை விதித்தல் 206
82 கொலையாளிகளின் மனத்தளர்வு 209
83 காட்டு மிருகங்களின் உபத்திரவம் 210
84 வேடுவர் வருதல் ,,
85 வேட்டை நாய்கள் வருதல் 211
86 ஜயபூபாலன் வேட்டைக்குச் செல்லல் ,,
87 (ஜயபூபாலனுக்கு உண்டான) ஸஸேமிரா - சாப நிவிர்த்தி 216
88 ஸ்ரீரங்கநாதர் கருடாரூடராகக் கவீந்திரனுக்குக் காக்ஷியளித்தல் 222
89 காளிதாசன் மாநசயோகிக்கு ஸ்ரீசக்கர மகிமை யுரைத்தல் 224
90 மூடவித்வான் காளிதாசனால் போஜனிடம் சன்மானம் பெறல் 225
91 சந்திர வர்ணனை 226
92 பிரமசாரி ,,
93 (காளிதாஸன் அல்லாள தேசத்திற்குச் சென்று அரசனை யடைதல்) 227

94 (கூர்ஜரதேசத்து மாக பண்டிதர் வருதல்) 228
95 காளிதாஸன் மறுபடியும் காவலனை யடைதல் 229
96 மாம்சமூட்டை ராமாயணமானது ,,
97 பதிவிரதா மகத்துவம்-(கனற்சட்டியும் குழந்தையும்) (கண்டசுத்தி) 231
98 நாவற்பழங்கள் (கண்டசுத்தி) 232
99 (கற்பின் மிக்காள் கையுலக்கை) (கண்டசுத்தி) ,,
100 (காகங் கரையலே கணவனைக் கட்டிக்கொண்டவள்) (கண்டசுத்தி) 233
101 கனற்கட்டியை வர்ணித்தல் 234
102 செப்புக்குட வர்ணனை (கண்டசுத்தி) ,,
103 ஹநுமான் ராமாயணம் நர்மதையி லகப்பட்ட சிலா கண்டம் } 235
104 காளிதாசனும், பிரமராக்ஷசும் 236
105 கவிசேகரன் 238
106 (மோர் வர்ணனை) 240
107 (போஜன்: சுலோசனி யென்னும் ஆயர்குல மாதை மணம் புரிதல்) ,,
108 போஜனுக்குத் தலைநோய் காணல் 241
109 டம்டம்ட டம்டம்ட டம்டம்ட டம்டம் (கண்டசுத்தி) 243
110 உஷாத்கால வர்ணனை ,,
111 (தண்டி காளிதாஸ தாரதம்மியம்) 244
112 போஜன்மேல் சரமகவி பாட மறுத்த காளிதாசன் வேறூர் புகல் 246
113 போஜன் காளிதாசனை ஏகசிலா நகரத்தில் சந்தித்தல் ,,
114 காளிதாசன் சரமகவி பாடக் காவலன் மரித்தல். அதையே திருப்பிப் பாட அரசன் உயிர்த்தெழல் 247
115 அந்தப்புர ரகசியம்-லீலாவதி ஹூ ஹூ ஹூ என்றல் 248
116 (பிராமணப்பிள்ளையின் தாயார் திவசத்திலே) காளிதாசன் ஆகாய கங்கையை வரவழைத்தல் 249
117 நவீனதாசியால் நாவலன் மரணம் 250
118 (போஜசம்பு - ராமாயணம்) 252
119 போஜன் காளிதாசாதி பூரண நிலைகள் ,,

| | | |
|---|---|---|
| 120 | பள பப்பள பப்பள கண்டசுத்தி) | 253 |
| 121 | பக்ஷிகள் இரண்டும் வலையிற் படுதல் | ,, |
| 122 | பட்சிகளின் மீட்சி | 254 |
| 123 | பக்ஷியைப் பிடித்துத் தருமாறு விலாசவதி காளிதாசனைப் பிரார்த்தித்தல் | 255 |
| 124 | காளிதாசன் அமாவாசையைப் பௌர்ணிமியாகத் தோற்றுவித்தல் | ,, |
| 125 | புவனேஸ்வரியின் அருளால் அமாவாசையில் பௌர்ணமி தோன்றல் | |
| 126 | உலோமகையின் சாப நிவிர்த்தி | 258 |
| 127 | சதாநீகன் மறுபடியும் அரசாக்ஷியை யடைதல் | ,, |


## விஷய அட்டவணை

முற்றிற்று.

# சாத்து கவிகள்

திருப்பத்தூர் வித்துவான்

## குமாரசுவாமி முதலியார் அவர்கள்

இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மாவணவுங் கவிகந்தங் காளிதா சச்சரித வசன மென்னுங்
காவணமே நற்கந்த மதுவினிய தமிழுரையாற் கலந்த கந்தந்
தேவணவு மறிஞரக நன்குவக்க மகரந்தந் தேக்க வாக்கும்
நாவணவுஞ் சித்ரவச னக்கந்தச் சாமிகுரு நாத வேளே. (1)

எவன்கமல னெனப்புகல்வோன் எவன்தாரா நகர்க்கதிப
    னேவன் போஜன்
அவன்கமல வகமலரக் கவிபாநு வுதிசலதி
    யாகப் போந்த
வவன்சரித மன்னவய ஞக்குலகெ லாம்வியக்கத்
    தந்தா னெங்கள்
சிவன்றருப சுப்பிரமணி யக்கந்தச் சாமியெனுஞ்
    செம்மன் மன்றே. (2)

---

வேலூர் மிஷன் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

## வே. இரத்தினவேலையர் அவர்களியற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா

திருவளர் செந்தமிழ்த் திருப்பாற் கடலினை
யொருமதி யதனு லுயர்வுற மதித்தே
பொருவரு ஞானம் போதமே முதலாப்
பொருள்படு மவையெலாம் பொற்புற வமைத்துநற்
பொருடெறி புவியுளோர் புண்ணிய ரியாரும்
அரிதினிற் கிடைத்த வமுதென மாந்திட
ஒருபெருங் குடைக்கீ ழுலகெலா மளித்தவவ்
வொருதனிச் செங்கோ லுத்தம போஜனே
திருவடி பணிந்திடுங் திகழ்காளி தாசனே
உரியவோர் நற்கதா நாயக னக்கியே
அருங்கவி ரத்னசிந் தாமணி யென்றே
இருநில மதனி லியற்றின னெருநூல்
பெருங்குண மேருவாம் பெரியோர் வழிவரு
திருமுரு சொற்சுவைத் தெளிகந்த சுவாமியே.

விநாயகர் துணை

## செல்வக்கணபதி சிந்தனை

ஆரணம் போற்றுருஉ மாதியாய் நின்ற
வாரண முகத்தோன் வார்கழற் போற்றுதூஉம்.

## குமாரக்கடவுள் துதி.

ஆறு முகமுண்டு பன்னிரு கையுமுண் டாதரித்தே
ஆறுதல் சொற்குண தேவிய ரிருவருண் டங்கையினி
லேறிய வேலுண்டு வெற்றி மயூரமுண் டேவல்செய்ய
மீறிய சிங்கக் துரைவீர வாகுண்டு வேலவர்க்கே. (1)

ஏவலா யிவர்க ளெங்கணும் போற்ற
ஆவலா யடியேற் கருள்புரி வண்ணம்
தாவியே வருவான் தயாபர னெங்கள்
மூவரு மறியா மூலகா ரணனே. (2)

## தேவி வணக்கம்

செங்க ணெடுமாலுஞ் செங்கமலத் தற்றுணு
மங்கண் விசும்பி லமர்வேந்துங்—துங்கமுற
என்று மிவரேத்து மீஸ்வரியே யென்றாயே
யின்றுன் னருளளிப்பா யெற்கு. (3)

அடர்ந்த வண்ட புவனத் தவர்க்கெலாந்
தொடர்ந்த வெம்பவத் தொல்பிணி போக்கியே
கடந்த ஞானிய ராக்குநின் பொற்பத
மடைந்து சொல்வது மாதரித் தாள்வையே. (4)

## பரமசிவ வணக்கம்

கல்லாவின் கீழிருந்தே கற்றுணர்ந்தார் நால்வர்க்குஞ்
சொல்லாத நான்மறையின் சொற்பொருளைச்—சொல்லாக
முன்னின்ற கைகாட்ட மோன நெறியளித்தே
என்னென்று னெங்கட் கிறை. (5)

அப்பெருந்தகை யடிமலர்ப் பரவுதூஉ
மிப்பெருங்கதை யெங்கு முலாவவே. (6)

## குரு வணக்கம்

கந்த வேளைக் கருத்தி லிருத்தியே
எந்த வேளையு மீச னிவனென
அந்த மாக வடிபணிந் தேத்துரூஉ
மெந்தை பாத மிருதயத் துன்னுவாம். (7)

## ஆசிரியன் பெயர்.

எட்டாத வடமொழியில் முன்னஞ் சொன்னா
ரிலகுகவி மககாளி தாசன் காதை
ஒட்டாத மற்றோரு முணரும் வண்ண
மோங்குதமிழ்த் தெளிவுபெறு நடையிற் சொன்னான்
மட்டாருஞ் சோலைவயல் சூழுஞ் சென்னை
மாநகரின் மாக்ஷியுறுங் குழந்தை வேலின்
தட்டாத தவப்புதல்வன் கந்த சுவாமி
தாரணியிற் றமிழ்மாதுந் தழைக்க வென்றே. (8)

# கவிரத்ன சிந்தாமணி

## இந்தியாவின் எல்லைகளும், அதன் சிறப்பும்

சுவர்க்க மத்திய பாதல மென்னு மூவுலகத்தினு முதன்மை பெற்ற பூவுலகத்தின் வாழ்வாய், ஜம்புத்தீப மத்யஸ்தான விராட்டு ரூப மகம்மேருவின் தக்ஷணபாக மத்தியரேகைக்கு உத்தரமாக வோங்கி வளர்ந்து - வானமளாவிய உன்னத சிகரங்கள் வாய்ந்து - கனத்து விசாலித்துச் செடிகளடர்ந்து - கொடிகள் படர்ந்து - சிறு மரமாதிய பெருமரமெல்லாஞ் செறிந்ததுவாகி - விபூதி தூளித ருத்ராக்கத் திரிபுண்டரதாரியாகிய சிவபெருமானே போலுஞ் சிறந்து விளங்கித் - தன்னைத் தரிசிக்கும் ஆன்மகோடிகளின் தளர்ச்சியை நீக்கிக் கிளர்ச்சி யுண்டாக்கித் - தனப்பெருக்கையுந் தன்ம சிந்தையையு மளித்து - அஞ்ஞானத்தினின்று நீங்கி விஞ்ஞான விவேகத்தால் விளக்கமுறச் செய்விக்குந் திறத்ததாய், மகாயோகிகளுக்கே யுரிய வாசஸ்தலமாய்க், கண்டவர் மனமுங் கண்ணுங் கொள்ளைகொண் டுண்ணுங் கோலம் பூண்டு, அண்டவரைப்போல் அடுக்கடுக்காய்ப் பத்திகொண்ட மேகவரைகளுறையப்பெற்று அதி மேன்மையுற்ற இராஜபர்வதமாகிய ஹிமயமலைக்கும், இதற்கு அநேக காவதங்களுக்கு அப்பாலாகி இரணிய தேஜஸ்ஸோடுங் கூடி விளங்கு மயேந்திரபுரிக் கருகேயுள்ள குமரித்தீவுக் கடுத்த தக்ஷண மகாசமுத்திரதீரத்திலே, சகல லக்ஷணங்களோடுங்கூடி முன்னொருகாலத்திலே இலங்கைக்குச் சென்று இராவண சம்மாரஞ் செய்து, இராஜ மகிஷியாகிய ஜானகியோடும் அயோத்திக்குத் திரும்பிய ஸ்ரீ இரகு நந்தனனால் ஜீவஹத்தியும் பிரமஹத்தியுந் தொலையும் பொருட்டு லக்ஷக்கணக்காய்ச் சிவலிங்கஸ்தாபனம் செய்யப்பட்டுச் சிறந்து விளங்கிய சேதுவுக்கும் மத்தியிலே, அகண்டு பரந்து கிழக்கிலு மேற்கிலுங் குணகடலையுங் குடகடலையும் எல்லையாகப் பெற்றுக், காட்டரண் என்ன! மலையரண் என்ன! நதியரண் என்ன! இவையெலாஞ் சூழவும், நிலவளம் நீர்வளமுற்றுக் - குடிவளங் கொண்டு- செந்நெலே கன்னலாகச் செழிப்புற்றுக் - கலைமகளுந் திருமகளுங் கருணை பாலிக்கவே, கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளுங் கரை கடந்த வெள்ளம்போற் பெருகாநிற்கவும்;

காலத்திரயங்களாகிய பூத பௌஷிய வர்த்தமானங்களைப் பூரணமா யறிந்து புகலுந் தன்மையிலும், சதுர்வித உபாய சாமர்த்தியத்திலும், அரசிறை நிர்வாக நிபுணத்வத்திலும், அதிசூக்ஷ்ம புத்தியிலும், ஆழ்ந்த ஆராய்ச்சியிலும், தீர்க்காலோசனையிலும், நடையுடையாதி பாவனைகளிலும், வீரத்துவத்திலும், விவேகத்திலும், சத்துக்களைக் கிரகிக்கும் சாமர்த்தியத்திலும், ஆசாராதி கிருத்தியங்களிலும், அகண்டித லக்ஷ்மி பிரசன்னத்திலும், அறம் - பொருள் - இன்பம் - வீடு என்னு நான்கு மடைவதற்காக அமைந்துள்ள அனுஷ்டானங்களிலும், அரிய தேவதா பக்தியிலும், குரு சிஷ்ய பாரம்பரையிலும், வள்ளன்மையிலும், வனப்பிலும், வாய்ந்த குலமுறையாதி கொள்கையிலும், அருமையான விஷயங்களையெல்லாம் அவ்வளவிலேயே ஐயம் திரிபு அற எடுத்துரைக்கும் ஆற்றலிலும் யாதொரு குறைவுபடாத குடிகளை யுடையதாய்;

அதி நுட்பமாகிய அங்கம் - கணிதம் - சிற்பம்முதலிய அரிய நூல்களிலும், தர்க்கம் - மீமாம்ஸமுதலிய தக்க நூல்களிலும், வேதம் - வேதாங்கம் - இதிகாசம்முதலிய விவேக நூல்களிலும், பிரம்ம வித்தையாகிய வாத வைத்திய ஜோதிஷ மாந்திரீகாதி மர்ம நூல்களிலும், கல்லானுலுங் கரையச்செய்யுங் கானவித்தையிலும், பரதசாஸ்திராதி சுரதவித்தையிலும், நாடக அலங்காராதி நளின வித்தையிலும், ஆகர்ஷணுதி அட்டமாசித்தியிலும், தளராத்தனஞ்சயமாய்த் தானிட்டது பிக்ஷையாக மற்றைய தேசமெல்லாம் தன்னையே நாடிக் கையேந்தி எதிர்பார்க்கச் செய்விக்குந் திறத்ததாய்;

இதற தேசத்து மன்னர் மன்னராலும் மண்டல புருஷராலும் வெகுகாலமாகப் பேரவாவோடும், "பூர்வதிக்கிலே பொன்னுய் விளையும் புண்ணிய பூமியொன் றிருக்கிறதாமே! அதற்குப் பெயர் கான் (ஆரிய) தேசமாமே! அது வெகு செழிப்புற்று, எங்கே பார்த்தாலும் பச்சென்று விளங்கி அகண்டு நீண்டு ஒழுங்குபெற்ற இராஜ வீதிகளெல்லாம் அடுக்கடுக்காய் மேன்மாடிகளுடைய அநேக சித்திர விசித்திராலங்கார சோபிதமாகிய சொர்னவீடுகளாய் நிறையவும், அங்கங்கே மனிதர் சஞ்சரிக்கும் பாதைகளெல்லாம் பசும்பொன்னுல் தளவரிசை யிட்டதாமே! லக்ஷக்கணக்காய்ப் பொருளை வைத்து வர்த்தகம் செய்பவர்களையும் லக்ஷியம்பண்ணுக் கோடீதாரிகள் குலாவப்பெற்றதாமே! அதி லடங்கிய மற்றைய ஜனங்களெல்லாம் மகா தேஜஸ்ஸோடுங் கூடி அதிலாவண்ணியம் உற்றவராய், முழுமதி

போன்ற தங்கள் முகங்களிலே லக்ஷ்மியானவள் தாண்டவமாடவும், வித்துவத் திறத்திலும் - விவேகத்திலும் - வீரத்துவத்திலும் - விதரணையிலும்-சத்துக்களைக் கிரகிக்கும் சாமர்த்தியத்திலும், விமரிசையுற்றவர்களாமே! நால்வகை யோனி எழுவகைப் பிறப்பின் எல்லா ஜீவன்களுக்கும் இதயகமலம்போல விளங்கி இவ்வளவு மகதைஸ்வரியமும் பெற்றுச், சர்வாலங்கிருத பூஷணமாய், அஷ்டலக்ஷ்மிகளும் தமதிஷ்டம்போலக் கொஞ்சி விளையாடுங் குபேர சம்பத்தையுடைய அத்தேசத்தையும் நாமெப்போதாவது நமது ஜன்மாந்தரத்திற் பார்க்கப்போகிறோமா! நாமும் சகல பாக்கியமு மடையும்படி அத்தேசத்தில் வசிக்கத்தான்போகிறோமா?'' என்ற இதுவே கனவாய் இரவும் பகலுந் தூக்கமின்றிச் சதா ஏக்கங் கொண்டு, இருந்தவிடத்திலேயே திருந்திய மகாயோகிகளைப்போல மௌனமுற்று ஏமாந்துபோகச் செய்விக்குந் திறத்ததாய், பரதக்கண்டம் என்னும் விரதப்பெயரை வெகுநாளாகத் தாங்கி தற்காலத்திலே ஹிமஸ்ஸேது பரியந்தமாக விசாலித்த இந்தியா என்னும் பெயர் பூண்டதே இந்து தேசமாம்.

## சுகாதார நகரச் சிறப்பு

இகபரத்துக்குரிய எல்லாவித சுகபோகங்களையும் அளிக்கவல்ல இவ் இந்துதேசத்தின் இன்பவாரியாகிய நேத்திரஸ்தானமாய்க் காடுமூடி கனகமய சிகரக் காக்ஷியைமாத்திரங் கொடுத்துவருவதும், ஒருகாலத்தில் மகா சிற்பியாகிய மயன் என்னும் இராக்ஷத சிற்பியால் அவனுக்குக் காண்டவ தகனத்திலே பிராணனை யளித்த தயாநிதியாகிய தநஞ்சயன் என்னும் கம்பீர புருஷனும் காண்டீபனுடைய லக்ஷியஸ்தானமாக ஏற்படுத்திய, இந்த்ரபிரஸ்தத்திற்குத் தென்மேற்காக இருபது காதவழிக்கு அப்பாலுள்ள எல்லாவிதத்திலும் நன்மையையே யளிக்கவல்ல ஏமநாடாகிய மாளவநாட்டிற்கு நேர் தெற்காக நெடுந்தூரத்துச் சாக்ஷியாய், நீண்டமலைச் செறிவுற்று கான்யாறு சூழவும், கருத்த மேகங்கள் பெருத்த கர்ச்சனைகளோடுங் கார்காலம்போ லெங்குஞ் சூழ்ந்து உருண்டு பருத்து நீண்ட யானைத் துதிக்கைகொண்டு ஓயாது தாரைதாரையாக மாதமும் மாரி பொழியவும் மகா செழிப்புற்றமனோரதப் பொருளாய் விநோத காக்ஷிகளையுடையதே உத்கர்ஷமாம். அந்நாட்டிலுள்ள,

காவேலாங் குயில்கள் கூவுங் காடெலாம் விளையுஞ் செங்நெல்
மாவேலா மடர்ந்த சோலை மயிலெலா மாடல் செய்யு
மாவலா யலர்ந்த புட்பத் தளியெலா முரலு மெங்குங்
காவலா ரிடங்க டோறுங் கறங்குமா முரச வோதை.

இப்படியாகச் சகல வைபவக் காக்ஷியாய் அகிலலோகமுங் கீர்த்தி கொண்ட அந்நாட்டின் இராஜதானியாகிய சுகாதாரம் (The City of Thousand Delights) என்னும் நகரமானது ஆழ்ந்த அகழி சூழவும் அண்டமளாவிய மதிற்புற முடையதாய்ச் சப்தபிர காரணத்தோடு மகா வீரர் காவல் பூண்டு, ஸ்ரீமகாபாரதத்திலே சிறந்து விளங்கிய அஜாதசத்துருவும், அகண்டித லக்ஷ்மி பிரசன்னனுமாகிய அர்ச்சுனனுடைய மதலையாய் அதிரதத்தலைமை பூண்ட அபிமந்யுவுக்காகப் பதின்மூன்றாநாள் சண்டையிலே தநுர்வேத பாண்டித்ய சிலாகுருவாகிய துரோணாசாரியாராலே ஏற்படுத்திய தேவர்களுக்கும் அசாத்தியமாகிய பத்மயூகம் போன்றது.

சிற்பசாஸ்திர கணிதப்படி மூன்று குரோசதூர விஸ்தீர்ண முடைய இம் மகா பட்டணத்தின் தடாகம் நிறைந்த செழுநிறச் சோலைகள்தோறும் கருநிறக் குயில்கள் கானம் பாடவும், பலவித மரங்களி னெழுங்கு பெற்ற பசுநிறச் சாலைகள்தோறும் பார்வைக்கு இனிய அதி விசித்திராலங்கார சோபிதமான அநேக கண்களை யுடைய நீண்ட கலாபங்களை விரித்துப் பச்சைமயில்கள் ஆடவும், சன்னமாக இழைத்த இனிய தாதுக்களினின் றெழும் சப்தசுரங் களையும் பாடவல்ல கண்டத் தொனி பெற்றுக் கின்னர இசை போலப் பண்பாடும் அறுகாற் பறவைகள் எங்கும் ரீங்காரித்து ஆலாபிக்கவும், மரங்கொத்திமுதலிய பக்ஷிகளெல்லாம் மத்தள தாளம் தத்திமவென்று தாங்கிப்போடவும், இவைகளுக்கெல்லாம் அநுகுணமாக இளையவர் மனதை யுருக்கும் இளந் தென்றலானது திவ்விய பரிமள மனோரஞ்சித மகரந்தத்தேனோடுங் கூடி மதுதுளிக்கும் நிலப்பூ என்ன! நீர்ப்பூ என்ன! கொடிப்பூ என்ன! கோட்டுப்பூ என்ன! இவைகளையெல்லா மங்கங்கே மலரச் செய்வித்து மகிழ்விக்கவும், மனோன்மஸ்தாய்ப் பருத்து வளர்ந்து, பூதாகார வுருவங் கொண்டு பூரித்தெழுந்த தேக்கு, சந்தனமுதலிய திவ்விய விருக்ஷங்களெல்லாந் தங்கள் தங்கள் தாஷ்டீகமா யுருண்டு நீண்ட கிளைகளாகிய கரங்களைக் கொட்டி, புஷ்பமாரிகளைப் பொழிந்து, "சபாஷ்! நன்றாயிருக்கிறது! நன்றாயிருக்கிறது!!" என்று சொல்லி ஆநந்திக்கவும், எங்கே பார்த்தாலும் மங்களகரமாய் இமையாநாட்

டங்கொண்ட இலக்குமிதேவியாரைத் தமது இதய கமலத்துடைய சாக்ஷாத் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய தெய்வப் பதியாகிய மகா வைகுந்தம் போன்றது.

## சதாநீகன் வரலாறு

இதிலமைந்து விளங்கும் அநேக மாடமாளிகைகளும்-கூட கோபுரங்களும்-சபாமண்டபங்களும்-கொலுக்கூடங்களும்-யாகசாலைகளும்-பாகசாலைகளும்-அஸ்வசாலைகளும் - அரங்கங்களும் - மதில்களும்-மதிற்புறங்களும்-கொத்தளங்களும்-அநேக பெருத்த கட்டடங்களும் அதற்கென்றே வந்த அவதார புருஷர்களாகிய மகா சிற்பிகளின் இலக்ஷியத்திற்கு இலக்காய், சகல லக்ஷணங்களும் பூண்டு, நாநாதேசத்துப் பிரஜைகளும் நாடி வந்து நாள்தோறும் இமையா நாட்டமாய்ப் பார்த்துப் பார்த்துப் பார்த்தவிடமெல்லாம் புதிதாய்த் தோன்றவும், 'இது நாம் முன் பார்த்ததுதானோ? அல்லபோலிருக்கிறதே! இது நமக்குப் புதிதுதான்! இந்தப்புறம் வந்தோமா? இல்லை போலத்தானிருக்கிறது, ஓ! அந்தப்புறந்தான் பார்த்தோமா?' என்பதாய், இப்படியாகப் பார்த்ததையே எத்தனை தடவைகளிற் பார்த்தாலும்* அத்தனை தடவைகளிலும் புதிதுபுதிதாக விளங்கிப் பூரிப்பை யுண்டாக்கிப் பார்க்க வந்தவர் மனமுங் கண்ணுங் கொள்ளை கொண்டுண்ணும் அதிவிசித்ர வேலைப்பாடுகளமையவும், அருமையாகத்தானே எடுத்துரைப்பக் கூடியதாய்ப் புண்ணியமே திரண்ட மகாயோகிகளின் வரப்பிரசாதமாக அமைந்த அந்நகரத்தை யாள்பவனே சதாநீகனும்.

சகல சாஸ்திர ப்ரவீணனாய், தநுர்வேத பாண்டித்ய சம்பன்னனான அவ்வரசச் சிறுவனும் மன்மத ரூபியாய், மதஜலத்தைப் பொழிந்து கதங்கொண்டு கட்டுத்தறியை முறித்து அதஞ் செய்யும் அநேக வலுத்த யானைக்கூட்டங்களையெல்லாம் அப்படியப்படியே ககன மார்க்கத்திலே வாறி யெறிந்து வாயுவுக்கு இலக்காக்கிக் கறங்கு போலு முழலச்செய்விக்கும் பீமசேனனைப்போல வுறம்பெற்று, ஒப்பற்ற கரவேகத்தாலும் சரவேகத்தாலும் * ஷட்சக்ரவர்த்திகளி

* அரிச்சந்த்ரோ நளோ ராஜா: புருகுத்ச ப்ரூரவ:
சகர: கார்த்தவீர்யஸ்ச ஷடைதே சக்ரவர்த்திந:

லொருவனாகிய † கார்த்தவீரியனைபோலும் விளங்கி, அகிலலோகமுந் தன்னை அடி பணியவும் அஜாத சத்துருவாய் ஆறிலொரு கடமை கொண்டு யாகாதி கிருதுக்களாலும் அறநெறி வழாத தன்மையாலும் மகா தானங்களாலும்,

---

† முன்னொரு காலத்திலே உத்தியான வனத்திலே தன் தோழியோடும் உலாவிக்கொண்டிருந்த மண்டோதரியானவள் தன் எதிரிலே மதிலின்பேரில் இரண்டு சிட்டுகள் ஆணும் பெண்ணுமாய் அணையக் கண்டு, இராஜஸ்திரீ ஆகையால், அதைச் சகிக்கலாற்றாது, "இராவணேச்வரன்மேல் ஆணை; நீங்கள் கூடலாகாது," என்றனள்.

அவைகள் மறுபடிங் கூடவும், தாதி நகைத்தனள்.

இராஜஸ்திரீயும் "ஏன் நகைத்தாய்?" என்றனள்.

அதற்குத் தாதியும், "அம்மணீ! உன் புருஷனுக்கு மேற்பட்டவனாய் ஆக்ஞாசக்கிரம் கொண்ட கார்த்தவீரியன் ஏகச்சக்கிராதிபதியா யிருக்கிறான்; ஏதோ அவன் பேரிலேமாத்திரம் ஆணை வை; இந்தச் சிட்டுகள் மறுபடியும் கூடுமா பார்ப்போம்" என்றனள்.

உடனே மண்டோதரியும் அப்படியே "அர்ச்சுனன்மேல் ஆணை," என்றனள்.

அப்போதும் அச் சிட்டுகள் அஞ்சாமற் கொஞ்ச ஆரம்பிக்கும்போது, பஞ்சாசத்கோடி பூமண்டலாதிபதியின் ஆக்ஞாசக்கிரமும் அந்த க்ஷணமே வந்து ஆண் சிட்டின் தலையைக் கொய்து சென்றது.

அதைக் கண்ட இராஜஸ்திரீயும் வெட்கித் தலை குனிந்தவளாய் இதை இராவணனுக்கு உரைத்தனள்.

அவ் வசுரவேந்தனும் "அப்படிப்பட்ட நரனும் அவனியி லிருக்கின்றானா! இதோ! அவனை அதம்செய்து வருகிறேன்," என்று அயோத்தியை யடைந்து, அங்கே அர்ச்சுனனும் அநேக அரசமாதரோடும் சரயுநதியி லிறங்கி, அதிற் போகுந் தண்ணீரைத் தன் இடதுபக்கத்து ஐந்நூறு கரங்களாலும் ஆற்றின் குறுக்கே யடைத்து, மற்ற ஐந்நூறு கரங்களாலும் அவர்களோடும் நீர் விளையாடிக்கொண்டிருக்கக் கண்டு, "இது சமய மல்ல" என்று அதற்கு இறக்கத்திலே கொஞ்சதூரத்திலே சென்று அங்கே மணலைக் குவித்து லிங்கப்பிரதிஷ்டை செய்து சிவபூசை பண்ணிக்கொண்டிருந்தனன்.

நீர் விளையாடி அரசமாதரோடும் அரண்மனைக்குத் திரும்பிய அர்ச்சுனனாலெடுக்கப்பட்ட ஐந்நூறு கரங்களினின்றுங் கனவேகமாய்ப் புறப்பட்ட ஆற்றின் வெள்ளத்தா லடியுண்டு அநேக காததூரத்துக்கு அப்பால் கொண்டு போகப்பட்டு, கடலில் தள்ளுண்டு, களைத்துத் தவித்து, எப்படியோ கரையேறிய இராவணனும், "அப்பா! இவனுடைய கைந்நீருக்கே இவ்வளவு பாடென்றால் இவனோடும் எதிர்த்துப் போராட எவர்க்குத்தான் திறம்?" என்று அப்படியே வெட்கித் திரும்பிவிட்டனன்.

* "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி."

என்பதற்கு இலக்காகாது மாத மும்மாரி பொழியவும், அகாலமிருத்து வென்பது தன்னுடைய புரஜனங்களை யணுகவொட்டாதபடி மகா செழிப்போடும் விளங்கிய அவ்வரசிளங் குமரனுக்கும் ஐம் மூவாண்டுங் கழியவும், அழகிய பதினறுமாண்டு பாலிய பருவம் வந்தது. தன்னுடைய பதினேழுவது வயதிலேயே தகப்பனை யிழந்து தரணியைக் காக்கும்படி இரணிய சிம்மாதனம் ஏறிய இராஜவள்ளலாய், இகலரசர் முடி யிறைஞ்சுந் தாளினனாய், எங்கும் பிரக்யாதி கொண்ட இவனும்,

† "காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே யின்பம்."

என்பதை நினைத்து,

‡ "இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை."

என்பது மனதிற் படவும், கல்வித் திறத்திலும்-கற்பின் திறத்திலும் விதரணையிலும்-விவேகத்திலும் தன்னை யொத்து விளங்கிக் கட்டழ கமைந்து தன் மனம்போல நடக்க வல்ல கன்னிகையைக் கருத்திற்கொண்டு, தன்னுடைய சபை நிறைந்த வித்துவான்களையும்-கவிவாணரையும்-புரோகிதரையும்-பிராமணர்களையும்-இன்னும் மற்ற தூதர்களையும் இதோடுகூட தனது ஆசிரியரையும் நோக்கி, அவரவர்களுக்குத் தக்கபடி கட்டளையிட்டுத் தான் கோரிய பெண்ணைத் தேடி வரும்படி அனுப்பினன்.

இங்ஙனம், இறைவன் ஆக்கினையைச் சிரமேற்கொண்டு சென்ற இவர்கள் இவ் வவனி அம்பத்தாறு தேசங்களிலும் அதற்கப்பாலும் அடுத்துத் தேடியும் இவ்வரசனுக்கு உகந்த இரத்தின சூடாமணியை, இதயகமலம் போன்ற உதயபானுவை, இகபரச் செல்வமாகிய இலக்குமியைப், பின் தூங்கி முன்னெழும் பேதையை, மகா கற்பின் மிக்க உத்தமியை "இவள்தான்" என்று ஏற்படுத்தி வந்தவர் எவரு மில்லை. அப்படியிருந்தும் அதி சூக்ஷ்ம புத்தியையுடைய அவ் வரசச்செல்வனும் அப்போது தனக்கு அறுநான்கு ஆண்டாகியும் அலையா மனத்தனாய்த், தளராத் திடச்சித்தங் கொண்டு, தனஞ்

* திருக்குறள்: பாயிரம்-௨-ம் அதி.-வான்சிறப்பு-௩.

† ஔவையார் தனிப்பாடல்.

‡ திருக்குறள்; இல்லறவியல்-௫-ம் அதி.-இல்வாழ்க்கை-எ.

சயக்குன்றம் போன்றனன். அரிஹரப்பிரம்மாதிகளுக்கும் அதீதமாய் அரிய தபோதனர்க்கும் அகோசரப் பொருளாய் விளங்கிய மாசிலாமணியையும் தன்வயப்படுத்தித் தவநிலை குலையும்படி செய்வித்த தாஷ்டீக புருஷனைத், தராதலம் போற்றவும் மராமரம் ஏழையும் ஓரேயொரு கணையால் ஊடுருவத் தாக்கிய உத்தம புருஷனுடைய ஒப்பற்ற மதலையாய், சதுர்த்தச புவனங்களிலுந் தன்னிச்சைபோல மச்சக்கொடி நாட்டிய மன்மதன் என்னு மகாப்பிரபுவின் மயக்கத்துக்கு இலக்காகாமல் மாக்ஷிமைகொண்ட இவனையும் காணும்படி திவ்யக்ஞான தேஜோன்மய ஞானுதீத திருவருட்சித்தனொருவன்,

* "சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மேவனோ வுயிர்க்கு."

என்னுந் திடங்கொண்ட சமாதியினின்று நீங்கி, தேசவிசாரணையின் பொருட்டு நாட்டிற் புகுந்து நானாவித காக்ஷிகளையும் நாடிப் பார்த்துக்கொண்டே இவ்வரசனுடைய அரண்மனையைக் கிட்டி மன்னனைக் காண வந்தனர்.

அதைக் கண்ட அரசச் செல்வனும் அறிவிற் சிறந்தவனாகையால் அப்படி வருகிற மகா புருஷனுடைய சொரூபத்தைக் கவனித்தவனாய்த், தான் கோரிய யாவும் குறைவற முடிப்பிக்கும் குரவனிவனெனக் கொண்டு, அகம் நிறைந்த ஆநந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று, அத் தபோதனரை அநேகவிதமா யுபசரித்துத், தன் அழகிய மாளிகைக்கு எழுந்தருளச் செய்வித்து, அங்கும் ஓர் பெரிய ஆதனத்திலே அம் மகா புருஷன் அமரவும், அவருக்கு அர்க்கிய பாத்திய முதலிய யாவும் உதவி அக மகிழ்ந்தனன்.

அச் சிவயோகியும் அவ்வரண்மனையில் அநேக விசித்திர விநோதங்களையெல்லாம் கவனித்தவராய், உலகவாஞ்சையை வெகுகாலத்திற்கு முன்னமே வெறுத்தவராய்ச் சமாதிநிட்டையி லிருந்துவிட்டவ ராகையினாலே அவைகளெல்லாம் தனக்கோர் அற்புதமாக விளங்கவும் ஆச்சரிய வசத்தராய், 'இவைகளெல்லாம் என்ன தேவ நிர்மாணந்தானோ! மனிதனால் ஆகக் கூடியதோ!' என்று தனக்குள் தானே சிந்தித்துக்கொண்டிருக்கையில், இராஜ கார்பாரிகளில் சிலர் அங்கு வந்து, "சுவாமி! பராக்கு! சமயமாயிற்று; ஸ்நானத்துக்கு எழுந்தருளவேண்டும்," என்றனர்.

* திருக்குறள்: பாயிரம்-ச-ம் அதி.-அறன் வலியுறுத்தல்-க.

உடனே "ஓம்" என்று எழுந்தருளிய அம் மகா இருடியும் அந்தப்புரத்திலே மஞ்சனச் சாலையின் அழகையும், அவ்விடத்திற் சலசலவென்று பாய்ந்துகொண்டிருக்கும் ஜலத்தின் தெளிவையும், அந்த ஜலம் விழுந்து நிறைந்து ஆழ்ந்தகங்கையைப்போல விளங்கி-விதம்விதமான புஷ்பராசிகளால் நிறைவுற்று, அம்ஸம்-சக்கிரவாக முதலிய பக்ஷிஜாதிகளெல்லாம் அங்கங்கே உலாவவும், பூவும் பிஞ்சுமாய்ப் பச்சென்றுவிளங்கித் தழைத்த மரங்களெல்லாம் நாற்புறமும் கவிந்து நிழலைத் தரவும், மனோரம்யமாய் விளங்கிய அழகிய தடாகத்தையுங் கண்டு, அதி விறங்கி, பரிமளங்கொண்டு அதி மாரிதுரியமுற்ற அதன் சுத்தோதகத்திலே ஸ்நானமாடி, சகலவித சடங்குகளையு முடித்துக்கொண்டு, போஜன சாலையையும் அடுத்தனர்.

அங்கே பலவிதமான அழகிய தட்டுகளிலும் - தங்கத் தாம்பாளங்களிலும்-பொற்கிண்ணங்களிலும் ஷட்ரசோ வர்க்கான்னங்களும் பதினெண்வகைப் பதார்த்தங்களும் நிறைந்திருக்கக் கண்டு, மனம் நிறைந்த ஆசையுடனே மன்னவனு விடப்பட்ட பொன்னணியாசனத்தில் எழுந்தருளிப் புளகாங்கித முற்றனர்.

இதற்குள்ளாக அம் மகாயோகிக்கு வேண்டிய யாவும் ஆயத்தமாயின. அழகிய ஓர் தலைவாழையிலை யிடப்பட்டு, அதன் மத்தியிலே அன்றலர்ந்த மல்லிகைப் பூப்போல விளங்கிச் சன்னமாக விழைத்த வெள்ளிக்கம்பிபோல மெல்லியதான அன்னக்குவியலையும், அதன் சிகரத்திலே அழகிய தங்கரேக்கினுல் மூடப்பட்டு எத்திக்குங் கமழும் புத்துருக்கு நெய்யினுல் இனிய மணங்கொண்டு பூர்வதிக்குப் பூரண மதியம்போல் விளங்கி மனம் பூரிக்கச் செய்யும் துவரம் பருப்பின் அழகையும் ஆர அமரப் பார்த்து ஆனந்தங்கொண்டு, அருகிலிருந்து விசிறிக்கொண்டிருக்கும் அரசவள்ளலைப் பார்த்து, "ஐயனே! இவ் விசிறியை உன் அன்பிற்குகந்த இளவரசியின் கையிற் கொடுத்துவிட்டு என் எதிரி லுட்கார்ந்து என்னேடும் அமுது புசிக்கவேண்டும்" என்றனர்.

அதைக் கேட்ட அரசிளங்குமரனும் எடுத்துப்போட்டவனுய், நடுங்கிய சரீரத்தோடே ஆகமெல்லாம் மயிர்க்கூச்சிடவும் அப்படியே அசந்து, சற்று மௌனமுற்று, மெல்லிய குரலோடே, மிகவும் தாழ்ந்த மாதிரியாய், "ஐயனே! அறிவிற் சிறந்து பெருமை வாய்ந்து அழகின் மிக்க மனையாளும், அடியேற்கு இதுகாறும் கிட்டாமலே அபாக்கியனுக இருக்கின்றேன்" என்றனன்.

இதைச் செவியுற்ற தபோநிதியும் இதய முடைந்தவராய், அதி கோபத்துடனே அவ்வாசனத்தினின்று மெழுந்தருளி, "அரசப் பதரே! யார் உனக்கு இப்படிக் கற்பித்தது? இல்லறக்கிழத்தியை வகித்துக் கிருககிருத்தியம் நடத்துவதற்கு ஏலாத நீயோ என் போன்ற தபசிகளுக்கு அன்னமளிக்க வல்லவன்! ஆகா நன்று யிருக்கிறது! மதி கெட்டவனே! *'அக்கினிஹோத்திர மில்லாத வீட்டில் போஜன மெடுக்கப்போகாது' என்பது என்னுடைய மாத்திரமேயல்ல, என்னைப்போன்ற மகாயோகிகள் எல்லோருடைய சம்மதமு மப்படியேயாம். அப்படியிருக்க, யான் எப்படி யிப்போது உன் வீட்டிற் புசிக்கப்போகும்? ஆகையால், உன் அன்னம் யான் புசியேன்" என்று அவ்விடம் விட்டு அகன்றனர்.

அப்போது அப் பார்த்திபனும் அசந்து, நிலை தளர்ந்து, கண்ணுங் கண்ணீருமாய்க் கலுழ்ந்து, மெய்நடுங்கிக், கை கால் உதறவும்-உதடு துடிக்கவும்-உள்ளம் நெக்குவிடவும் அச் சித்த புருஷனைத் தொடர்ந்து சென்று, அவருடைய பாதபங்கயங்களிற் பணிந்து, அப்படியே அவருடைய உபயதாமரைகளையும் உள்ளத் திருத்தி இறுகப் பிடித்துக்கொண்டு, "ஐயனே! அருள் பழுத்த பழமே! அப் பழத்தின் சுவையே! ஆரமிர்தே! கரும்பே! தேனே! அடியேனு மிப்படிப்பட்ட மகா சாபத்திற்கு இனியு மிலக்காகாத படி தம்பதி சமேதனுய்த் தங்களைப்போன்ற தபசிகள் மனம் பூரிக்கும்படி இல்லற தருமம் நடாத்துவதற் கேற்ற இல்லக்கிழத்தியை யானெங்கே காண்பேன்? எப்படி யடைவேன்? யான் இன்புறுவதற் கேற்ற கன்னிகையும் இப் படியி லிருக்கின்றனளோ!" என்று அடிக்கடி அவர் பாதத்திற் பணிந்து கேட்டனன்.

## உலோமகை வரலாறு

எல்லா வுயிருங் கைகூப்பும் இன்பவள்ளலாகிய அம் மகாபுருஷனுங் கருணைவள்ளலாய்ச்சற்று நிதானித்து, அவ்வரசச் செல்வனைப் பார்த்து, "அரசனே! உன்னன்பிற் குகந்த பட்ட மகிஷியும்

* அக்கினி ஹோத்திரமாவது:—கிருகஸ்தன் மத்தியான போஜனத்திற்கு முன்னே தேவாராதனை செய்து அந்தத் தெய்வப்பிரசாதத்தை மனைவி கையினின்றும் வாங்கி ஹோமாக்கினிக்கு ஆகுதி யளிப்பதேயாம். இதைச் செய்த பிறகே சாதுக்களுக்குப் பிக்ஷை செய்விப்பதாம்.

உலோமகை யென்னும் பெயரோடே உத்பலதேசத்தரசன் மகளாய் உதயபானுவைப்போல வளர்ந்துவருகின்றனளே! உலோமகன் என்னும் அவள் தகப்பனோ செல்வச் செறுக்குற்றவன்; சேனைபல முடையவன்; மகா வீரன்; சத்துருக்களால் ஜயிக்கப்படாத கோட்டை மதில்களை யுடையவன்; அவனும் உன் ஜன்ம வைரி யென்பது உனக்கே தெரியுமன்றோ! அக் கன்னிகையை உனக்கும் மணம் புரிவிக்க அவன் உடன்படான். ஆகையால், ஜயசாலியாகிய நீயும் உன்னுடைய நால்வகைச்சேனையுடனேயும் சேனாவீரருடனே யும் படையெடுத்துச் சென்று, ரணகளத்திற்புகுந்து, உன்னுடைய ஒப்பற்ற கரசர வேகத்தால் அவ்வரசனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தாலன்றி அஜாத சத்துருவாகிய அவனும் உன் எண்ணத்திற் கிணங்கான்; பொன்போன்ற அக் கன்னிகையும் உன்வச மாகாள். நீயும் இப்போதே படையெடுத்துச் சென்று, ரணகளத்திற் புகுந்து, கொடையாளனாகிய அவ் வரசனையும் புறமுதுகிட்டு ஓடச்செய்து, அறிவிற் சிறந்த அக் கன்னிகையையும் உன்னன்பிற் குகந்த பட்டத் தரசியாய்க் கொள்வாயாக!" என்று ஆசீர்வதித்துச் சென்றனர்.

இப்படி அச் சித்தபுருஷன் அநுக்கிரகித்த வார்த்தைகளைச் செவியிலேற்று ஆநந்த வெள்ளத்தில் மூழ்கினவனானாலும், அவ் வரசவள்ளலும் அறிவிற் சிறந்தவனாகையால், 'நாமும் நால்வகைச் சேனையுடனே சென்று ரணகளத்திற் புகுந்து - உயிருக்கொட்டிச் சண்டை செய்து - ஜெயத்தைக் கொண்டு-நாம் குறித்துச் சென்ற பொருளை யடைவதாகக் கொள்வோமானாலும், அப் பொருள் நம் எண்ணம்போ வில்லாவிட்டால் நாம் செய்த முயற்சியெல்லாம வீண்தானே! என்னத்திற்கு ஆறுற்போல! ஆகையால், அப்படி நாம் படையெடுத்துப் போவதற்கு முன்னமே நாம் நாடிய பொரு ளும் நம் எண்ணம்போ விருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள் வோம்' என்று தீர்மானித்து, இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கை யில், இவ்வரசனுக்கும் நல்ல உபாயம் ஒன்று நினைவுக்கு வரவும், உடனே தன்னுடைய கைபாக்கிருகத்திலே பஞ்ச சரத்திலே வாசஞ் செய்யும் பைங்கிளிகளி லொன்றின்மேல் தன் பார்வை யைச் சேலுத்தி, அதைப் பார்த்து, "அறிவிற் சிறந்து, பகுத்தறி வுற்று, மானிடரைப்போல எதையு மறிந்துகொண்டு எளிதிற் காரி யங்களைச் சாதிக்கவல்ல நீயும் பல பாஷைகளிலும் பழகியிருக்கின் றனை. யான் உனக்குக் கட்டளை யிடப்போவதும் உனக்குக் கூடாத

காரியமல்ல; ஆகையால், என் எண்ணத்தை முடித்துக் காட்டுவ தற்கு உன்னையும் நான் எதிர்பார்த்தவனா யிருக்கின்றேன்'' என்றனன்.

இதைக் கவனித்துத் தெரிந்துகொண்ட இளங் கிஞ்சுகமும் இதயக் களிப்பெய்தி, இராஜவல்ளலைப் பார்த்து, "ஹே இராஜாதி ராஜா! இராஜ பூபாலா! இரு கரைகளிலும் இரத்தின ராசிகளை யொதுக்கிச் செல்லும் திரைகளையுடைய திவ்வியமான நதிவளங் கொண்ட நாட்டையுடையவனே! ஐயபூபாலனாயிருக்கிற உன்னால் ஆகாத காரியமும் ஒன்றுண்டோ? யானோ அற்ப பிராணி; அதி லுங் கூட்டி லடைபட்டிருப்பவன்; மற்புய வேந்தர் புகழும் மகா ராஜனே! அடியேனாலும் தங்களுக்கு ஓர் காரியம் நிறைவேற வேண்டுமானால் அதற்கும் ஒரு தடை யுண்டோ? நான் அற்ப பிராணியானாலும் என்னுடைய சொற்ப மனோபலத்தால் எப்படிப் பட்ட காரியங்களையும் ஏற்றபடி முடித்துக் காட்டும் திறம் எனக் குண்டு. ஆகையால், உங்கள் எண்ணத்தையும் ஒரு நிமிஷத்திலே முடித்துக் காட்டி, உங்கள் மனம் பூரிக்கச் செய்வேன். இதில் உன க்கு ஐயம் வேண்டாம்; என் ஐயனே!'' என்று சொல்லி மௌன முற்றது.

இதைக் கேட்டவுடனே சதாங்கனும் சற்று நிதானித்து, ஒரு தாளபத்திரத்திலே (ஏட்டிலே),

> "மாதரா ரென்பார் மதுவுடையா ரதரத்தே
> போதவே யவர்களுள்ளம் பொருந்திய ஆலகாலம்,"

என்றெழுதி அக் கிளியைக் கூட்டினின்றுங் கையி லெடுத்துக் கொண்டு, அதன் கழுத்தில் இவ் ஏட்டை ஓர் ஆபரணமாக அணி வித்து, "ஓ! செஞ்சொன் மின்னார் முன்கை ஆபரணமே! நீயும் இப் போதே ஆகாயமார்க்கமாய்ச் சென்று அழகிய பூஞ்சோலைகள் நிறைந்த உத்பலதேசம் அடைந்து, உலோமகைபா லடுத்து, அவ ளளிக்கும் உத்தரத்தைப் பெற்று வருவாய்!'' என்றனுப்பினன்.

இப்படி அவ்வரசன் உத்தரத்தைப் பெற்று, எழில்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சிவ்வென்று பறந்து சென்று உலோமக நக ரத்தை யடைந்து, அதி உன்னதங் கொண்டு ஆழ்ந்த அகழி சூழ் ந்து அண்ட மளாவிய மதிற்புறமுடைய கோட்டையுட் சென்று, சப்த பிராகாரத்தோடுங் கூடிய அந்தந்த வீதிகளெல்லாம் அடுக்கு

வரிசையுற்ற மேன்மாடிகளுடையதாய் ஒழுங்கு பெற்றுத் தங்கமய உப்பரிகைகள்மேலெல்லாம் விதம் விதமான கொடிகள் பறக்கவும்- அங்கங்கே பெருத்த கட்டடங்களின் சிகரங்களெல்லாம் இரத்னமயமாய் விளங்கவும், இளஞ்சோலைகளின் பசுமரங்களெல்லாம் பலவிதமான புஷ்பராசிகளை மலர்வித்து இரத்னகம்பளம் விரித்தாற்போலக் கண்ணைக் கவறவும் - இவைகளையெல்லாம் ஒவ்வொன்ருய்க் கவனித்துக்கொண்டே தான் நாடிவந்த நாயகியைத் தேடிச் செல்லும் போது, அரண்மனையை யடுத்த ஓர் உய்யானவனத்தைக் கண்டது.

அது வெகு ரமணீயமாய்க் காணவும், அதில் அங்கங்கே சிறு வாய்க்கால்கள் பாயவும், அவைகளில் ஓடும் ஜலமானது வெகு தெளிவாய் சிலசிலவென்று ஓடிக்கொண்டிருந்தது. அதில் அங்குமிங்குமாய்ப் பாய்ந்துகொண்டும் துள்ளியுந் திரியும் ஜலசரங்களெல்லாம் கண்ணுக்கு ஓர்விதக் களிப்பைத் தந்தன. அவ் வுய்யானவன முழுதும் சலவைக்கற்களுடையவும் சந்த்ரகாந்தங்களுடையவும் மேடைகளால் நிறைவுற்றன. கனிவர்க்கங்களைக் கொடுக்கக் கூடிய மரங்களையெல்லாம் அந்தப் பூங்காவில்தான் பார்க்கவேண்டும். மா, பலா, வாழை, மாதுளை, கிச்சிலி, கொய்யா, இலந்தை, நாரத்தை, நாவல், அத்தி, விளா, இலந்தை, பேரீந்துமுதலிய மதத்த மரங்களெல்லாம் ஏராளமாகக் கனிகளை ஏந்தி நின்றன. இளங்காற்று வீசவே எங்கும் மணங் கமழ்ந்து இன்பம் விளைவித்தது. இவைகளையெல்லாங் கவனித்துக்கொண்டே ஆங்குள்ள ஓர் இளஞ்செடியின் அடர்ந்த கிளைகளொன்றில் அக்கினி தங்கியது.

அதற்கு முன்னமே அநேக தாதியரோடே அங்கு வந்து செய்குன்றங்களில் ஏறி விளையாடியும், பந்துகள் அடித்தும், அம்மானாடியும், ஊஞ்ச லாடியும், ஓடி ஒளித்தும், இன்னும் பலவிதமான விளையாட்டுகளிலே மனதைச் செலுத்தி வெறுத்தும், மற்றத் தாதியரெல்லாம் அகன்றுபோகவும் தான்மாத்திரம் ஏகாந்தமாய் ஓர் சந்திரகாந்த மேடையின்மேல் தங்கி இளைப்பாறித் தன் எதிரிலே மாங்கிளையொன்றிலே தங்கியிருந்த பஞ்சரவாசியைக் கண்ணுற்றனள்.

பார்வைக்குப் பச்சென்று விளங்கிச் சிவந்து நீண்டு வளைந்த மூக்கும், செழித்த கண்களும், கண்டத்தில் கறுத்த ரேகையும், கம்பீர பார்வையுமுடையதாய்க் கண்டவ ரதிசயிக்குங் காக்ஷியதா

ய்த் தன்னெதிரில் விளங்கவே, அதைக்கண்ட அம் மங்கையர்க்கரசி யும் எடுத்துப்போட்டவளாய், அக் கிளியை ஆர அமரப் பார்த்து, ஆச்சரியங்கொண்டு, அடங்கா மகிழ்ச்சியுடனே அது தன்னிடத் தில் வந்து தங்கவேண்டுமென்ற அவாவைப் பலவித மணிகள் பதித்த அணிகளால் நிறைந்த மார்பகத்துற்ற விம்மிதத்தின் அசை வானது எடுத்துக் காட்டவும், முகமானது வெயர்த்து உதடு துடிக்க வும், உள்ளம் நெக்குவிடவும், வாய்திறந்து ஒருவாறு அக்கிளியைப் பார்த்து, ஒருவித சோகத்தோடே, "ஓ ரமணீயமே! வஞ்சியர் கொஞ்சும் கிஞ்சுகமே! அவர்கள் முன்கை மோகனமே! அவர்களி லொருவளாகிய என்னிடத்தும் வந்து தங்கி ஆநந்தத்தை விளைவிப் பையோ? ஹே! ககனவாசி!" என்று அப்படியே ஏரிட்டவண்ணமா யிமைத்த கண் மூடாது அவ் விளங்கிளியையே பார்த்துகொண் டிருந்தனள்.

இப்படி யொருவித ஆராமையோடே தன்னை யடையவேண்டு மென்ற அவாவானது முன்னுக்குத் தள்ளவும், தன்னையே எதிர் பார்த்திருக்கும் அத் தராதிபன் மகளின் மனக்களிப்பானது எண் மடங்கு அதிகரிக்கும்படி தடாலென்று பறந்து வந்து அவளது தடந் தோளில் தங்கியது. அப்படி வந்து தங்கிய அவ் வழகிய கிளியை அங்கையா லணைத்துத் தடவி முத்தமிட்டுத், தன்னிடது கையி லேந்தி, அதனழகைக்கவனித்து ஆச்சரியங்கொண்டு, அதன் கழுத் தில் தங்கிய சீட்டை யவிழ்த்து, அதில் கவிரூபமாக,

"மாதரா ரென்பார் மதுவுடையா ரதரத்தே
போதவே யவர்களுள்ளம் பொருந்திய ஆலகாலம்."

என்றெழுதி யிருக்கக் கண்டு இதயம் பூரித்துத், தலையை யசைத்து, 'நம் உள்ளத்தைக்கொள்ளைகொள்ளும் உத்தமபுருஷன் இவன்றான்' என்று நிச்சயித்து, அதற்கு உத்தரார்த்தமாக,

"ஆதலா லதர பான மாடவர் செய்து பின்னுங்
காதலோ டவர்கள் மார்பிற் கனத்ததா டனமே செய்வர்."

என்றெழுதி,கவியைப்பூர்த்திசெய்து, மறுபடியும் அக்கிளியின் கழுத் திற் கட்டிப்,பாலும் பழமு மளித்துப் போய்வரும்படி யனுப்பினள்.

அப்படி விடைபெற்றுத் திரும்பிய அப் பஞ்சவர்னக் கிளியும் அரசனிடம் வந்து நடந்தவிருத்தாந்தம் யாவும் ஆதியோடந்தமாய்த் தெரிவித்து, அவளுடைய அழகின் சிறப்பையும் அறிவின் மேன் மையையும் அரசனுள்ளத்திற் பதித்துவிட்டது.

இவைகளையெல்லாங் கேட்டுக் களித்த அரசனும் அக் கிளியின் கழுத்தி லணிந்திருக்கும் சீட்டை யவிழ்த்து, அதில் தானெழுதிய கவியைப் பூர்த்திசெய்திருக்கக் கண்டு, அதன் அர்த்தபாவத்தையும், ஏகாரத்தி லடங்கிய பொருள் நோக்கத்தையும் ஆழ்ந்து சிந்தித்து, அக மகிழ்ந்தவனாய், உடனே மந்திரிபிரதானிகளை வரவழைத்து, அவர்களுக்கு இதையெடுத்துச்சொல்லி, யுத்தத்திற்காக ஆயத்தமாகி,நால்வகைச்சேனையுடனே சேனாவீரர்களெல்லாம் தன்னைப் புடைசூழவும், யுத்தகோலம் பூண்டு,

"நீங்கருங் கவச மார்த்து நேரலர் மேளலி தேய்க்கும்
பூங்கழ னரல வீக்கிப் போரேனிற் பொருப்பு மஞ்ச
வீங்கிய குவவுத் தோளில் வெங்கணை புட்டி ருங்கி
வாங்குவிற் றடக்கை யேந்தி மறலிகண் புதைப்ப நின்றான்."

## சதாநீகன் படையெழுச்சி - உலோமகையைக் காணல்

இப்படி உறுத்தெழுந்த கோலத்துடனும் வீராவேசத்துடனும் தன்னுடைய திரண்ட சேனையுடனே மகா வேகத்துடன் கருந்தூள் செந்தூளானவை ககனத்தை மறைக்கும்படி, யுகாந்தகாலத்து ஊழிபோல உருண்டு திரண்டு ஒருவரும் நிகரில்லாமல் உத்பல தேசத்தை நாடி, இதற்கென்றே ஏற்படுத்தப்பட்டு, எதிரிகளின் செய்கைகளை நூறுமைல் தூரத்திலே நடப்பதானாலும் இன்னதென்று தெரிந்துகொண்டு அரசனுக்கு அறிவித்து அப்போதே அதற்கு வேண்டிய யாவும் சித்தப்படுத்தும்படி செய்யவல்ல தூதர்களாலே, அறிந்துகொண்ட மிக்க புகழ் படைத்த உலோமகனும் உடனே,

"கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு."*

என்னும் புகழ்கொண்ட அமைச்சரையும் சேனாவீரரையும் அழைப்பித்து, அவர்களோடும் ஆலோசித்து, நால்வகைச் சேனைகளையும் சேனாவீரரையும் ஆயத்தமாக்கித், தானும் யுத்தசன்னத்தனாய்ப் பாரிய வில்லைத் தாங்கி எதிரியின் வரவை யெதிர்பார்த்திருந்தனன்.

சதாநீகன் சேனையானது சமுத்திர கோஷம்போல் ஆரவாரித்து எதிரியின் எல்லையில் வரவும், உருத்திர கோலம் பூண்ட உலோமகன் சேனையானது உறுத்தெழுந்து சதாநீகன் சேனையைத்

* திருக்குறள்: அங்கவியல் - ௬௪ - ம் அதி. - அமைச்சு - க.

தாக்கித் தவிடுபொடியாக்கி மூலைக்கொருவராய் முறிந்தோடச் செய்தது.

அதைக் கண்ட சதாநீகனும் சிதறியோடிய தன் சேனையைத் தன் சேனுவீரராலும் மந்திரிப்பிரதானிகளாலும் முன்போல ஒழுங்கு படுத்தித் தன் சேனையின் தூசிப்படைக்கு முன்னே வந்து உலோமகனைக்கண்டு,உறுத்த பார்வையுடனே ஓங்கிய வில்லை வளைத்து அம் மகா வீரனைப் பார்த்து, "நீயோ என்னோடும் எதிர்த்துப் போராடும் வீரன்! இதோ பார்! ஒரே ஒருபாணத்தால் உன்னையும் ஓட அடிக்கிறேன்" என்று சபதங் கூறி, உருண்டு திரண்டு நீண்டதாய், கறுகறுத்ததாய், மழமழத்ததாய், அங்கங்கே தங்கக் கட்டுகளுடையதாய், கங்கபக்ஷிகளி னிறகுகள் பூண்டதாய்ப் பளபளப்புற்ற அதி தீக்ஷண்யமான அநேக பாணங்களை விடுத்தனன்.

அவைகளை யெல்லாம் அலக்ஷியமாக நடுவதுபாதியில் துண்டித்துப் பின்னும் சில பாணங்களை யேவிச் சதாநீகனையும் அவன் சேனுவீரரையும் சேனைகளையும் நோவச் செய்தனன்.

இதைச் சகிக்காத சதாநீகனும் தீக்ஷணியமான சில பாணங்களை விட்டு அரசனுடைய தேர் பரி சாரதி யாவையும் போக்கி, வில்லையும் ஒடித்து, வெறுங்கைய னாக்கி,மகுடபங்கஞ் செய்து, மறுபடியும் சில பாணங்களை விட்டு உலோமகனைக் கைகால் ஆடவொட்டாமற் செய்யவும், ஒன்றுந் தோன்றாது அப்படியே வெட்கித் தலை குனிந்தவனாய் ஓட்டம் பிடித்தனன்.

இப்படிச் சதாநீகனால் ஆகர்ண பரியந்தமாக வாங்கிவிட்ட அடல் வாளிகளுக்கும் ஆற்றலாகாது இடையிலிருந்த சேனுவீரர்களும் சேனைகளும் இருந்தவிடம் தெரியாமற் சிதறிப்போயினர். இப்படியாக ஒரு முகூர்த்த நேரத்திலே ரணகளமெல்லாம் படுகளமாக்கிச் சங்கம் பூரித்தஜயசாலியாகிய சதாநீகனும் தங்க மிழைத்த கபாட வாயில்தோறும் சிங்கக்காவல் பூண்ட உலோமகனுடைய அரண்மனையுட் புகுந்து, அந்தப்புரம் போந்து, அங்கே அழகெலாந் திரண்ட வுருவாய், அமோக வாரிதியாய், அநேக சேடியர் மத்தியிலே 'உடுக்கள் நடுவிலுற்ற உவாமதியம்போல' விளங்கும் உலோமகையைக் கண்ணுற்றனன்.

"தந்தை ரணகளத்திற் புகுந்து புறமுதுகிட்டான்" என்பதைக் கேட்டதுமுதல் தயங்கி வாடித் தன் சேடியரால் "தந்தை

திரும்பி வருவார்" என்று தைரியஞ் சொல்லவும், ஒருவாறு தேறி இருந்தவள் அப்போதுதான் தற்செயலாய் வந்து தன்னெதிரில் தோன்றிய ஓர் மகா புருஷன் வரவால் எடுத்துப்போட்டவளாய்த் தடாலென் றெழுந்து, நாணத்தால் தலை குனிந்து, தரையைக் காலாற் கீறிக்கொண்டு நின்றனள்.

அதைக் கண்ட தாதியும் அப்படி வந்தவன் அரசவள்ளல் என்றறிந்துகொண்டு, அவனுடைய அழகால் அந்தப்புரமெல்லாம் தங்கமயமாய்த் தகத்தகாயமாய்ப் பிரகாசிக்கவும், அங்கிருந்த ஸ்திரீகளுக்கெல்லாம் ஒருவித ஆச்சரியமும் அச்சமு முண்டாகவே, தலைமைச் சேடியும் அதி வினயத்துடனே, கம்பீரமான பார்வையை நாற்புறமும் செலுத்தி, ஏதோ கேள்வி கேட்கப்போகும் பாவனையாயிருந்த அரசகுமாரனைப் பார்த்து, அச்சத்தோடே கம்பீர நடையிலே, "ஐயனே! குமாரக்கடவுளோ! விமானத்தி லூர்ந்து செல்லும் வாசவன் மகனோ! மகா சிற்பிகளின் நிர்மாணமாக ஏற்பட்ட சிலாபிம்பமோ என்று ஐயுறும்படி அவ்வளவு அழகும் அமைப்பும் வாய்ந்த தங்களை நீங்கியதால் ஒளி யிழந்த தேசம் யாதோ? தங்கள் திருநாமத்தாற் சிறப்புற்ற திவ்வியாட்சரங்கள் எவையோ? தங்கள் பிரிவாற்றுமையால் தயங்கி வாடுவோரும் யாரோ?" என்று தாழ்ந்த மாதிரியாய் அத் தாதி கேட்டனள்.

அதைச் செவியுற்ற இராஜவள்ளலும் சற்று நிதானித்துச், 'சாதாரண தாதியும் அறிவிற் சிறந்தவளாய்க் கற்று வல்ல வித்துவரத்தினங்கள்போலக் கம்பீர நடையிலே வார்த்தை சொல்லுகின்றனளே! இவர்களுக்கெல்லாம் நாயகமாய் எல்லாராலும் கொண்டாடக்கூடிய இவ்விராஜ புதல்வியும் எவ்வளவு கருத்தமைந்தவளாயிருக்கவேண்டும்? ஆகா! அச் சித்த புருஷனும் ஆதியிலே நமக்கு எவ்வளவு நல்ல மனதோடும் அநுக்கிரகித்தனரோ! அதற்கு எண்மடங்கு அதிகமாகவே யிருக்கின்றதே! இவ்வளவு செல்வமும் சீரும் பெற்று எல்லா விதத்திலும் சிறப்புற்று இந்திரசேனையைப்போல விளங்கு மிவளும் நமக்கு வாய்ப்பளோ!' என்று மனதில் நிதானித்துக்கொண்டு, உடனே அத் தாதி கேட்ட கேள்விக்கு உத்தரமாக "சேடியருள் சிறந்து விளங்கும் சீமாட்டீ! நான் நீங்கியிருப்பதால் பொலிவிழந்த தேசத்தை உத்கர்ஷம் என்பர். நால்வருணத்தாரும் கொண்டாடும் என் திருநாமத்தாற் சிறப்புற்ற எழுத்துக்களின் சமூகத்தைத்தான் சகல ராஜாக்களும் சதாநீகன் என்பர். நான் கோரி

வந்த பொருளும் சேடியர் நாயகமே! அதோ உங்கள் மத்தியிலே சேண்மதியம் (தூரத்துத் திங்கள்)போல விளங்கிச் சிறப்புற்ற சீமந்தினியே" என்றனன்.

இதைக் கேட்டவுடனே, இதற்கு முன்னமே திடீரென் றெழுந்து நின்று நாணத்தால் தலை குனிந்தவளாய்த் தரையைக் காலாற் கீறிக்கொண்டு நடந்தவைகளையெல்லாங் கவனித்திருந்த ராதிபன் மகளும் பெருமூச்சு விட்டு, விம்மிய குரலோடே, ஒரு வித தொனியோடே, தகப்பன் தோல்வியடைந்ததா லுண்டான துயரம் நிறைந்த முகத்தினிடத்திலே இப்போது தற்செயலாய் வந்து தன்னெதிரிலே நிற்கும் உயர்ந்த நெற்றியும்-உன்னத பார்வையும்-சிவந்த உதடும்-சிறந்த கன்னங்க ளிரண்டினுங் கறுத்த மயிர்ச் செறிவின் அழகும்-தடந்தோளும்-விசாலமார்பு முடைய கம்பீர புருஷனுடைய கண்டவ ரதிசயிக்குங் காக்ஷியால் ஒருவித மகிழ்ச்சியானது தோன்றி மின்னலைப்போல அடிக்கடி மறைந்து காணவும், தன் தலைமைப் பாங்கியைக் கடைக்கண்ணாற் பார்த்து, "ஹே! பிரியை! ரூபாவதி! நான் என்ன சொல்லப்போகிறேன்! நானொரு காலத்திலே, உய்யான வனத்திலே, உங்களையெல்லாம் நீங்கி ஏகாந்தமாய்த் தனித்திருக்கும்போது, என்னெதிரி லிருந்த மாமரத்தின் இளங்கிளையி லுட்கார்ந்து என்னிதயம் பூரிக்கச்செய்த இனிய பஞ்சவர்னக் கிளியை யனுப்பி என் ஆகமெல்லாங் கொள்ளை கொண்டவரும் இதோ என்னெதிரிலே இளங்கதிர்போலத் தோன்றி என்னிதய கமலத்தை மலரச் செய்விப்பவருமாகிய இவருக் கென்றே என்னை ஏற்படுத்திய எல்லாம் வல்ல கடவுளுக்கும் நான் என்ன பதில் நன்றியைச் செலுத்தப்போகிறேன்? மற்ற விஷயங்களெல்லாம் உனக்கே தெரிந்திருக்கிறது" என்று சொல்லி மறுபடியும் தலை கவிழ்ந்தவளாய்த் தரையைப் பெருவிரலாற் கீறிக்கொண்டிருந்தனள்.

அச்சமயம் அவர்க ளிருவருக்கும் நடுவிலிருந்த தலைமைப் பாங்கியும் அறிவிற் சிறந்து அநேக விஷயங்களையெல்லாம் அதி விரைவாகக் கவனம்பண்ணும் அதிசாமர்த்தியமுற்று, எதிர்காலத்தையும் இறந்த காலத்தையும் இதனிடையே நிகழும் நிகழ்காலத்தையும் நன்கு ஆராய்ந்து, இனி நடக்கவேண்டிய காரியங்களை நிதானித்துக்கொண்டு, தக்கபடி வார்த்தை சொல்வதில் மிக்க புகழ் படைத்தவளாகையாலே, ஆழ்ந்த கருத்தோடே அதி கெம்பீர

நடையிலே அரசகுமாரனைப் பார்த்து, தலை தாழ்ந்து அஞ்சலி அஸ்தளாய், தாழ்ந்த மாதிரியாய் விநயத்துடனே, "ஐயனே! அதிவீர பராக்கிரமங்கொண்ட அதிரதவீரரெல்லாம் அடி வணங்கவும், அரசர்க்கரசாய் அஜாத சத்துருவாய் அவனியை ஒரு குடையிலாண்டு வந்த எங்கள் அரசவள்ளலை யெதிர்த்து இரண்டொரு நாழிகைபிலேயே இரணகள முழுமையும் வெட்டவெளியாக்கி, வெற்றிவேற் காவலனையும் வெறுங்கையனாக்கி வென்னிட்டோடச்செய்து, விஜய சங்கம் பூரித்து ஜெயங்கொண்டு சிறந்த எங்கள் அந்தப்புரமும் போந்த தங்களுக்கும் ஆகாத காரியமும் ஒன்றுண்டோ? தாங்கள் கோரி வந்த காரியத்திற்குத் தடையென்ன இருக்கிறது? ஆனால், அரசர்க்கரசே! இராஜமகிஷியும் அரசன் ரணக்களத்திற் புகுந்து புறமுதுகிட்டு ஓடி யொளித்ததாய் வந்த செய்தி காதில் விழுந்தது முதல் அன்ன ஆகாரமின்றி ஆறாத்துயர்கொண் டிருக்கின்றனர். அரண்மனையிலுள்ளோ ரெல்லாரும் அப்படியே அழுதகண்ணும் சிந்தையுமா யிருக்கின்றனரே! நாங்களும் அத் துயரினின்றும் நீங்கினோமல்லேம். ஆகையால், ஐயனே! இவைகளுக்கெல்லாம் வகையேற்படுத்தி, இராஜ புதல்வியை - எங்களரசிளங்குமரியை - உங்களிஷ்டப்படியே உவந்து மணம் புரிந்து உங்கள் நகருக்கும் செல்லலாம்" என்றனள்.

## சதாநீகன் உலோமகையை மணம் புரிதல்

இதைக் கேட்டவுடனே இதயங் களிகூர்ந்த இராஜ சிங்கமும் ஏவலாளரைக் கூவி, அவர்களால் மந்திரி பிரதானிகளை வரவழைத்து, ஓடிப்போன அரசனை யெங்கிருந்தாலும் தேடிக் கொணரும்படி ஆக்ஞாபித்து, அப்படியே அவர்கள் கொண்டுவரவும், அப்பொழுதே அவ்வரசனைச் சிங்காசனத் தேற்றுவித்து, இராஜமகிஷிக்கும் அரசச் செல்விக்கும் அங்கிருந்த மற்றெல்லோர்க்கும் மகிழ்ச்சியுண்டாக்கி, அவர்க ளெல்லோரு மனமகிழ, மறுநாள் உதயத்திற் கெல்லாம் மன்னவன் மகளை மணப்பந்தலிலே அநேக பந்துமித்திரர்கள் மத்தியிலே அந்தணர்முதலிய பெரியோர்கள் ஆசி கூறவும், இராஜ வாத்தியக்கருவிகளெல்லாம் அங்கங்கே ஆர்ப்பரிக்கவும், தேவ வாத்தியங்கள் முழங்கவும், பூமாரி பொழியும் பந்தலிலே நல்ல சுப முகூர்த்தத்திலே விவாகமாடி, எண்ணான்கு அறமும் இனிதுற

இயற்றி, அந்தணர்முதலிய ஆதுலர்களின் அவாக்கெட வழங்கி, உண்டு களித்துப் பண்டு பழகினவர்போல ஒருவரையொருவர் அளவளாவி, சின்னாள் அங்கிருந்து தன்னகர் சேர விரும்பி, உலோமகன் சமுகத்துற்றுத், தன் எண்ணத்தை யறிவித்து உத்தரவளிப்பக் கேட்கவும், அவ்வரசனும் மருகனை உவந்து கொண்டாடி வாழ்த்தி, அந்தப்புரம் போந்து மகளைக் கண்டு வேண்டிய புத்திமதிகளைப் புகட்டிப் போய்வரும்படி அவ்விருவருக்கும் விடை யளித்தனன்.

பின்னர் இருவரும் இராஜமகிஷியை யடுத்தனர். அப்படி வந்து தன்னை வணங்கிய தம்பதிகளை ஆசீர்வதித்துத் தன் மகளை வாறியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு, பிரிவை நோக்கிச் சற்று வருந்தினவளானாலும் அறிவிற் சிறந்தவளாகையால், உடனே தைரியம்கொண்டு, தன் மகளுக்கு வேண்டிய பட்டாடைமுதலிய யாவும் உதவிப், பத்தாவின் கூடச் செல்லப் பணித்து, மருகனைப் பார்த்து மகளினருமையைத் தெரிவித்து, தக்கபடி நடத்தும் விதங்களை எடுத்துக் கூறி, உபசார வார்த்தைகளால் உளம் பூரிக்கச்செய்வித்து, ஊர்போய் வரும்படி உத்தரவளித்தனள்.

இப்படி மாமன் மாமி இருவரிடத்தும் விடை பெற்ற இன்பவள்ளலும் மற்றுமுள்ள பந்துமித்திரர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் அன்பு காட்டி, அவர்கள் மன முவக்கச்செய்து, விடைபெற்றுத் தன்னுடைய யானை சேனை பரிவாரங்களெல்லா முன்செல்லவும், மந்திரி பிரதானிகள் தன்னைச் சூழ்ந்துவரவும், எக்காளம்-பேரிடங்கா - நகாரமுதலிய பேரொலி முழங்கவும், சுவேதப்பரிகள் நான்கும் பூட்டிய சூர்ய க்ரணங்களைப் பரப்பும் பாரிய ரதத்தில் தன் பாரியும் தானுமாய் ஆரோகணித்து, ஆரவாரத்துடனே சென்றனன்.

இப்படிச் சென்ற அரசனும் இளஞ்சோலைகளாற் சூழ்ந்து எங்கே பார்த்தாலும் பச்சென்று விளங்கிப் பார்வைக்கு இனியனவாய்ப் பசுமைகொண்ட செஞ்சாலிகளால் செழுமையுற்ற வயல்கள் நாற்புறமும் சூழவும்,

செங்நெலே கன்ன லாகச் செழுங்கன்னலே கமுக மாக
மந்நிய கமுகே தெங்காய் வானுற வோங்கிக் காட்ட
மின்னலார் மேகஞ் சூழ மிகச்செழிப் புற்ற நாட்டின்
பன்னருந் தோற்ற மெம்மாற் பகர்ந்திடப் போகு மோதான்.

என்னச் சிறப்புற்று வளமை கொண்ட தனது நாட்டை யடைந்து, நகர்வலம் வந்து, நல்ல ஓரையிலே அரண்மனையில் அடிவைத்து அந்தப்புரம் போந்து, அநேக தாதியர் மத்தியிலே தான் தேடிக் கொணர்ந்த ஸ்திரீகள் சூடாமணியை சிறப்புறச் செய்வித்தனன்.

இப்படிச் செய்து சிந்தை மகிழ்ந்த இகலரசர் முடியிறைஞ்சுந் தாளினனும் குடிகளின் க்ஷேமத்தைக் கவனித்தவனாய் இராஜகாரியத்திலே மனதைச் செலுத்தி எல்லாராலுங் கொண்டாடும்படி இராச்சியபாரம் பண்ணிவந்தனன்.

இதற்குள்ளாக இளவேனிற்காலம் வந்தது. இளந்தென்றல் வீசவும், எல்லாவித ஜீவராசிகளும் சோபிதங் கொண்டன. சிறு சிறு பூண்டுகளும், செடிவகைகளும், இவைகளுக்கிடையே யுள்ள கொடிவகைகளும் துளிரெடுத்து, எங்கே பார்த்தாலும் பச்சென்று விளங்கி இனியமணங் கமழும் புஷ்பராசிகளை எங்கு மலர்வித்தன. பாரிய மரங்களெல்லாம் பார்ப்பவர் கண்களைக் கவரும் காக்ஷியனவாய்ப் பசுமை கொண்டன. பற்பல இடங்களினின்றும் பறந்து வந்து கூடிய பக்ஷி ஜாதிகளெல்லாம் இனிய குரலெடுத்து இசை பாட ஆரம்பித்தன. குயில்கள் கூவின. மயில்கள் ஆடின. மரங்கொத்திமுதலிய மற்றைய பறவைகளெல்லாம் உரங்கொண்ட தங்கள் மூக்குகளாலே மரங்களைக் கொத்துவதும் மத்தள தாளம் தத்திமவென்று தாங்கிப்போடுவ தொத்தன. அநேக சிறுசிறு பறவைகளெல்லாம் அவைகளுக்கேற்ற தொனியெடுத்துப் பாடின. நல்ல புஷ்பராசிகளிலே யெல்லாம் குமுகுமு வென்று குமிழியிட்டுப் பாயும் நறிய தேனை யுண்டு நல்ல அறுகாற் பறவைகளெல்லாம் சப்தசுரங்களையும் பாடவல்ல கண்டத் தொனியோடும் ரீங்காரித்து ஆலாபித்தன. இருண்ட அரணியங்களிலேயுள்ள திரண்ட மிருக ஜாதிகளெல்லாம் எதேச்சையாய்த் திரிய ஆரம்பித்தன. திங்களும் பூரண கலையோடும் நிறைய ஆரம்பித்தது. தாழையு மந்தகாசஞ் செய்தது.

இவ்வளவு அலங்காரத்தோடு மநோரம்மியங் கொண்ட இந்தச் சமயத்திலே இளமையுற்ற ஆடவர் மகளிரெல்லோரும் இதயக் களிப்பெய்தினர்.

இதற்கென்றே இச்சுரதகாலத்தை முன்னமே கவனித்து எதிர் பார்த்திருந்த இறைவன்மகனும் தன்மனோரதத்தைப் பூர்த்திசெய்ய மனங்கொண்டவனாய்ப், பிராமண பெரியோர்களையும் புரோகிதரை

யும் வரவழைத்து அவர்களைப் பார்த்து, "அந்தணர்காள்! அறிவின் மிக்க நீவிர் அறியாதது ஒன்று மில்லை. அவனியிலுள்ளார் யாவர்க்கும் அவாவென்பது தொடர்ந்தே யுள்ளது; அதிலுங் காம விழைவினைக் கரைகண்டார் யாரே? இல்லற நடாத்த இச்சிக்கும் ஒவ்வொருவனும் இதனூடே சென்றுதான் வெளிப்படவேண்டும். ஆகையால், இல்வாழ்க்கையென்னும் இப் பேராற்றைக் கடப்பதற்குற்ற தெப்பமாயுள்ள என்னருமைத் துணைவியை யான்,

* "காத லிருவர் கருத்தொருமித்
தாதரவு பட்டதே யின்பம்."

என்றபடியே கொள்ளுமாறு அதற்கேற்ற நாளொன்றைப் பஞ்சாங்க சுத்த கணிதப்படிக் கணக்கிட்டு ஆராய்ந்து தெரிவிக்கவென்றே உங்களை யாம் அழைப்பித்தது" என்றனன்.

மன்னவன் வார்த்தையை இவ்வண்ணம் செவியிலேற்ற புண்ணியபுருஷர்களும் முன்னமே 'இப்படி இறைவன் ஆக்ஞாபிப்பான்' என்பதை எதிர்பார்த்தவர்களாய் எல்லாவற்றையும் ஆராய்ந்து வைத்திருந்தவர்களாகையாலே, உடனே அரசன் உத்தாரப்படித் தங்கள் சாஸ்திரக்கட்டுகளைத் தாராளமா யவிழ்த்துத், தாங்கள் குறித்திருந்த நாளையே உள்ளத்திற் கொண்டு, அதற்கு வேண்டிய அங்கங்களெல்லாம் ஏற்படுத்தி, அரசன் சமுகத்தூற்று, "அண்ணலே! அரசர்க்கரசே! அஜாத சத்ரு! அகண்ட சாம்பிராச்சியமுடைய ஆண்டவனே! நாளை அமாவாசை கழித்த பஞ்சம திதியோடுங் கூடிய சுபயோக சுபநட்சத்திரமுற்ற சுக்கிரவாரமே தங்கள் ஆசைக்கிழத்தியின் அந்தப்புரம் செல்வதற் கமைந்த நாள்" என்று சொல்லி ஆசீர்வதித்தனர்.

உடனே அரசனும் மந்திரி பிரதானிகளை நோக்கி ஆக்ஞாபிக்கவும், அவர்களெல்லாரும் அரசனாணையைச் சிரமேற்கொண்டு, குறித்த தினத்திற்கு வேண்டிய யாவும் குறைவரச் செய்து முடித்து அரசனுக்கும் தெரிவித்தனர்.

நாடியிருந்த நாளும் நெருங்கியது.

(க) மந்தமாருதம் வீசவும், மணங்கமழும் சோலையிலுள்ள கோட்டுப் பூக்களும், நந்தவனங்களிலுள்ள நல்ல ஜாதிக்கொடிப் பூக்களும், பூங்காவிலுள்ள நிலப்பூக்களும், அன்னம் சக்கிரவாகம் முத

* ஔவையார் தனிப்பாடல்.

விய பக்ஷிகள் நீங்காத அழகிய தடாகத்துள்ள நீர்ப்பூக்களும், மற்றுமுள்ள புஷ்பராசிகளும் ராசிராசியாக வந்து குவிந்தன.

(உ) வாழை, மா, பலா, மாதுளை முதலிய மாதுரியமான கனி வர்க்கங்களெல்லாம் வந்து நிறைந்தன.

(௩) தயிர்க்குடங்களும் - நெய்க்குடங்களும் - நல்ல மதுக்குடங்களும் கண்டவர் அதிசயிக்கும்படி கணக்குமித மில்லாமல் வந்து தங்கின.

(௪) வாழைமரங்களும், தாழை விழுதுகளும், மாங்கொத்துகளும், இளநீர்களும், பனங்காய்களும், பந்தலுக்கென்று வந்து பரவின.

(௫) காய்கறிகளெல்லாம் மட்டுக்கடங்காமல் அங்கங்கே மலைபோற் குவிந்தன.

மற்றும் வேண்டுவன எல்லாம் வந்து சேரவும், மகத்தான கொட்டாரப் பந்தல்களால் மாக்ஷிமைகொண்ட அரசன் அரண்மனை முழுதும் விநோதமுற்று விளங்கியது.

குறித்த நாளும் வந்தது. கோமகனும் குணதிசையில் அருக்கனொளி பரவு முன்னமே தான் செய்யவேண்டிய நித்திய கடன்களைக் குறைவற முடித்துக்கொண்டு, கடவுளை வாழ்த்தி, அன்றைக்கு வேண்டிய சடங்குகளை யெல்லாம் சரிவர நடத்தி, மாதானம் வழங்கி, பந்துமித்திரர்களும் வந்த விருந்தினரும் தன்னோடு உண்டு களிக்கவும் குதூகலித்து, அந்தப்புரம் செல்லவேண்டிய காலத்தை அவாவோடும் எதிர்நோக்கி யிருந்தனன்.

இதற்குள்ளாக மாலைப்பொழுதும் வந்தது. வாலைப்பருவ மங்கையரெல்லோரும் மணங்கமழும் புஷ்பராசிகளாலும் கனங்கொள்ளும் ஆபரணங்களாலும் அலங்காரம் உற்றனர். இருளாகிய யானைப் படையானது முன்னே செல்லவும் - இளந்தென்றலாகிய தேரேறி - கரும்பு விற்பிடித்து - சுரும்பு நாணேரிட்டு - பூரணச்சந்திரனையே பூங்கொடையாகக் கொண்டு புவிபோற்றுங் காமனும் போருக்குப் புறப்பட்டானென்பதை அங்கங்கே புஷ்பங்களில் ரீங்காரிக்கும் கரிய வண்டுகளும் இனிய குரலெடுத்து மாமரங்களினின்றுங் கூவும் குயிற் கூட்டங்களும் தெரிவித்தன. மயில்கள் ஆடவும், தாழைகள் மந்தகாசம் செய்யவும், மனோரம்யம் கொண்ட இவைகளை யெல்லாங் கவனித்த சதாநீகனும் சகல சடங்குகளும் நிறைவேறவும் அந்தப்புரம் சென்றனன்.

தந்த மிழைத்ததாய்த் தங்கத்தால் செதுக்கு வேலைகொண்டு இரத்தின விராசிகளால் எடுத்துக் காட்டப்பட்ட பள்ளி அறையின் கதவங்களைத் திறந்தவுடனே கோடிசூரியப் பிரகாசமான குலோப்புகள் என்ன! லஸ்தர்கள் என்ன! மத்தாப்பு விளக்குகள் என்ன! மகத்தான மின்சார விளக்குகள் என்ன! அங்கங்கே சுவற்றிற் பதித்த சோபித தீபங்கள் என்ன! இவைகளால் நிறையவும், இந்திர விமானம்போலச் சுந்தரங்கொண்டு எங்கே பார்த்தாலும் விசித்திர விநோத மனோரம்ய உருவங்கள் விளங்கவே, அத்தர் புனுகு ஜவ்வாது முதலிய நல்ல வாசனைத் திரவியங்களாலும் புஷ்பவகைகளாலும் அதிரம்யங் கொண்டு ஓரங்களிலெல்லாம் சரிகை வேலை கொண்ட ஒப்பற்ற பட்டுத்திரைகளின் பந்திகளாலும், விலை யேறப் பெற்ற விதம்விதமான படுதாக்களின் விமரிசையாலும், கைதேர்ந்த சிற்பிகளின் திறத்தைக்காட்டிக் கண்ணைக் கவரும் சித்திரங்களாலும் சிறப்புற்ற அந்தப் பள்ளியறையின் அலங்கரிப்பையும் கண்ணுற்றுக் களிப்படைந்தனன்.

இப்படி யமைந்த சையாக்கிருகத்தின் மத்தியிலே உன்னதங் கொண்டு உள்ளம் பூரிக்கச் செய்யும் மகாவிந்தம்போல விளங்கும் சன்னமாக இழைத்த வெள்ளிக்கம்பிபோல வெளிப்படும் கிரணவொளியால் காந்தி கொண்ட முத்துச் சரங்களெல்லாம் கொத்துக் கொத்தாய் எட்டுத்திக்கிலும் எடுத்துக்காட்டவும், நல்ல பவழக்கால்கள் நான்கும் தந்த மிழைத்ததாய்த் தங்கக்கட்டுகள் பூணவும், நடுவரிசையெல்லாம் அபரஞ்சிமயமாய் மேற்பித்திகை யெல்லாம் மேன்மை கொண்ட பருமணிகளாகிய நவரத்தினங்களால் வேலைப்பாடுற்றதாய் மேலணியின் ஓரங்களிலெல்லாம் முன்னமே எடுத்துக் காட்டியதுபோல் முத்துப்பந்திகளால் சிறந்து விளங்கி, மெல்லிய வெண்பட்டுக்களால் மெதுவுற்று, சிவந்த சூரியகாந்தப்பட்டின் குஞ்சங்களால் தொங்க லணிகொண்டு, பச்சைவர்ன படுதாக்கள் நாற்புறமும் சூழவும், நடுவில் பஞ்சணை மெத்தை யிடப்பட்டு - பன்னீர் நிறைந்து பலவகை ஜாதிபுஷ்பங்கள் தெளிக்கப்பட்டு-அதி உன்னதங் கொண்ட சயனத்தை யடுத்தனன்.

அப்படி யடுத்த அரசவள்ளலும் அதற்கெதிரிலே அழகிய ஓராசனத்தின்பேரில் பொற் கிண்ணங்களாகவும் தட்டுகளாகவும் நிறைந்திருக்கக் கண்டனன்; அறுசுவையோடுங் கூடிய ரசவர்க்கங்களெல்லாம் கிண்ணங்களிலும், அதி மாதுரியங் கொண்ட அதிரசம்,

லட்டு, ஜிலேபி, ஹல்வா, பர்ப்பி முதலிய பலகாரங்களெல்லாம் தட்டுகளிலும் நிறம்பியிருக்கக் கண்டனன்; கனிவர்க்கங்களையும், கண்டு-சர்க்கரை-வாதுமை. முதலிய இனிப்புப் பண்டங்களையும் தனது இதயம் பூரிக்கக் கண்டனன்.

## அமாவாசையிற் பருவமும், உலோமகையின் சாப வரலாறும்

இவற்றை யெல்லாம் இப்படிக் கவனித்த இறைவனும் தன் காதலியின் வரவை எதிர்நோக்கியிருந்தனன். இதற்குள்ளாக இராஜ புதல்வியும் இனிய நீராடி, புதிய பட்டாடை யுடுத்து, பொன்னுபரணங்களும் இரத்தினுபரணங்களும்பூண்டு, நெற்றியில் திலதமணிந்து, ஜாதிமல்லிகை முடித்துச், சந்திரபிம்பம்போல விளங்கித், தன்னிரு மருங்கிலும் தாதியர் சூழ்ந்து தாங்கவும், பெண் யானையின் நடை கொண்டு, மயிலின் சாயலோடும் அன்னத்தின் அமைதியோடும் மெல்ல மெல்ல நடந்து தன் காலி லணிந்திருக்கும் நூபுரங்களுடையவும் மோதிரங்களுடையவும் கலீர் கலீர் என்னும் சப்தத்தால் தன் வரவை முன்னதாகத் தன் காவலனுக்கு அறிவித்துச் சென்று, மெதுவாக சயனத்தை யடுத்தனள்.

அப்படி வந்த தன் ஆருயிருக்குயிரை அன்போடும் சிலாகித்து வார்த்தையாடி, அங்குள்ள விநோதங்களையெல்லாம் எடுத்துக்காட்டிச் சிறப்பித்துக்கொண்டிருக்கும்போதே அம் மாதரழகிக்கும் ஓர் வித மயக்க முண்டாகி, முகம் வேறுபடவும் - தேகம் வியர்க்கவும் - தெளிவின்றி வாடித் துவளுகின்றதைக் கண்ட வள்ளலும், தேகத்தில் ஒருவித மயிர்க் கூச்சிடவே, திடீரென்று எடுத்துப் போட்டவனாய் மனவருத்த முற்றுத், தன்காதலியை இடது கையால்தாங்கித் தத்தளித்து, ஒருவாறு மனந்தேறி, "ஹே! பிரியை! இஃதென்ன கோலம்? ஏன் இப்படி நீ துவளுகின்றனை? மயங்கி விழுகின்றனை? இஃதென்னமாயம்? யாரிட்ட சாபம்? நீயு மிவ்வாறு வருந்துவதற்கு யாதாவது காரண முண்டோ?" என்றனன்.

அதைக் கேட்ட அவ்வாரணங்கும் தன்னிரு கைகளையுங் கபோலங்க ளிரண்டினும் சேர்த்துப் பெருமூச்செறிந்து, தன் ஆருயிர் நாதனை நோக்கித் தாராளமாய் வாய் திறந்து, "ஹே! பிராணநாதா! என்ன சொல்லப்போகிறேன்! என் அறியாத வயதிலே நடந்த ஒரு

காரியம் இப்போதுதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. என் இளம்பிராயத்திலே, ஏழு எட்டு வயதிலே, இளநிலா நிலவு காலும் ஒருநாள், உய்யானவனத்திலே உன்னதமான மரங்கள் சூழவும், சன்னமாக இழைத்த வெள்ளிக்கம்பி போலச் சூரியரஸ்மிகள் உட்புகுவதால் ஒருவித வெளிச்ச முண்டாகவும், சலசல வென்று ஜலம் பாயும் சிற்ருேடையால் குளிர்ந்த காற்று வீசவும், ஆநந்த மயமாய் விளங்கிய ஓரிடத்திலே உலாவிக்கொண்டிருக்கும்போது, அங்குத் தாழ்ந்த மரக்கிளைகளொன்றிலே கிளிக ளிரண்டு ஒன்றுகூடி விளையாடப் பார்த்த நான் அறியாத் தன்மையால் அவைகள் சண்டையிடுவதாகக் கருதி, சரேலென்று அவைகளை யடுத்து வேறுபடுத்தினேன். மிகுந்த ஆசைப் பெருக்கத்தால் கூடியிருந்தவைகளாகையாலே, அப்படி யென்றால் பலவந்தமாய்ப் பிரிக்கப்படவே, பந்தமகன்றவைகளாய்ப் பதைபதைத்துக் களைத்து விழுந்து தேறி, மனிதரைப்போலத் தெளிவாகப் பேசுந் திறம் பெற்றவைகளாகையாலே, என்னைப் பார்த்து, "மன்னவன் மகளே! நல்ல குலத்திற் பிறந்தும், கல்வியாற்றலிற் சிறந்தும், அறிவின் மிக்காள் என்னும் புகழ் பூண்டும், என்னத்திற்கு ஆனாய்? இப்படியும் எங்கள் இன்ப விழைவைக் கெடுக்கலாமோ? துன்பத்தில் விடுக்கலாமோ? துஷ்டையாயினையே! நீயும் உன்னிஷ்டம் போல ஆசைப் பெருக்கால் உன் பத்தாவை அணையப்போகும்போது ஒருவித மயக்க முண்டாகி உன் சிரசானது ஒன்பது சுக்கலாய்ப் பிளந்து போகக்கடவது! உன் ஆருயிரும் நீங்கக்கடவது!'' என்று கொடிய சாப மிட்டன.

அச் சாபத்தைக் கேட்ட நான் அறியாதவளானாலும் திடுக்கிட்டவளாய் மூர்ச்சித்து, அறிவின் விவேகத்தால் ஒருவாறு தேறி, அவைகளைப் பார்த்து, "அறிவிற் சிறந்த கிளிகாள்! அறியாமையாற் செய்த வொன்றைச் சாந்த பிராணிகளாகிய நீங்கள் பொறுக்கலாகாதா! நான் வேண்டுமென்று செய்ததல்லவே! உங்களுக்கே அதன் உண்மை தெரியலாம். உத்தம ஜீவிகளே! நீங்கள் மெத்தவும் வருந்தியது என் சித்தத்தைக் கலக்கிவிட்டது. அதோடு நீங்களிட்ட சாபத்தால் தாங்கமாட்டாத தாபத்தை யடைந்திருக்கின்றேன். தயை செய்யவேண்டும். தத்தைகாள்! இப்போது நீங்களிட்ட சாபமும் என்னைத் தொடாதிருக்கும்படி அருள் செய்யவேண்டும்" என்று வேண்டி அப்படியே நின்றதின்பேரில், அவைகளும் சாந்த பிராணிகளாகையாலே, உடனே கோபம் தணிந்து, சற்று நிதா

னித்து, "சற்குண முடையாளே! நீயும்இச் சாபத்தின் வேகத்திற்கு இலக்காகாமலிருப்பதற்கு ஓர் உபாயம் சொல்லுகின்றோம். எப்படியென்றால், "அருக்கனுக்குரிய தினமாய் ஆரிருள் சூழ்ந்த அமாவாசையாய், அன்றையத்தினம் பருவம் வரவும், அந்நிலவொளியிலே நீங்களிருவரும் ஒன்றுசேரில் உங்கள் ஆசை நிறைவேறும்படி உனக்கிப்போது யாங்களிட்ட இக் கொடிய சாபமும் அடியோடே நீங்கிப் போகும்," என்று சொல்லி மறைந்துபோயின.

"அந்தக் கொடிய சாபத்தின் வேகத்தால்தான் அடியாளு மிப்படி வருந்துகின்றேன். இல்லாவிட்டால் இகபோகங்களுக் குரியவெல்லாம் எங்கும் நிறையவும், மகத்தான அரசர்களெல்லாம் மணிமுடி வணங்கும் மகாவீரப்பிரதாபத்தை வகித்த மன்மதரூபியாகிய தாங்கள் அருகி லிருக்கவும், அநங்கன்பாணம் அனலாய்க்கொளுத்தவும், ஆகாயத்துற்ற அருக்கனழலால் வாடித் துடிக்கும் புழுவைப் போல் வருந்தும் யானும் இப்படியும் தங்களெண்ணத்தையும் அலக்ஷியம் பண்ணுவேனோ? ஆ! என் இறைவே!" என்று சொல்லும் போதே அச் சாபத்தின் வேகம் அதிகரிக்கவே, அப்படியே மறுபடியும் களைத்து விழுந்தனள். அதைக்கண்ட சதாநீகனும் மனமுடைந்தவனாய்,மெய்ம்மறந்து,ஒன்றுந்தோன்றாது, உடனே மனந் தேறி, 'ஆகா! என்ன செய்வோம்! இதுவும் வினையின் வலியா! இதற்கென்று நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டோமே! பிறகு ஏதோ மகாபுருஷன் அனுக்கிரகத்தால் இவ் வுத்தமியைக் கண்டுபிடித்தோமே! இதோடு நமது கலி நீங்கியதென் றிருந்தோமே! எங்கே மழை விட்டும் தூவான்விடவில்லையே! இஃதென்ன விபரீதம்! புருஷனைக் கூடவென்றால் அதற்கொரு பொல்லாத சாபமா; இதைப் போக்கவென்றால் சாத்தியமாகக் காணவில்லையே! ஆதிவாரமாமே! அமாவாசையாமே! அதிற் பருவமென்றால் அஃதெப்படி வரும்? அமாவாசையும் பருவமும் ஒன்றாய் வருவதுண்டோ? உத்தரார்த்தமும் தக்ஷணார்த்தமும் ஒன்று கூடுவதுபோ லிருக்கிறதே! இஃதென்ன விபரீதம்? எப்படியாகும்? ஏதேது? இனி நமக்கு இகசுகம் இல்லைபோலும்! என்ன செய்வோம்! இல்லறவாழ்வைத் துறந்த நாம் இனி வீடடைவதற்குரிய முன் சாதனமாகிய *வானப்பிரஸ்தாச்சிர

* பிரமசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், துறவறம் என ஆச்சிரமங்கள் நான்கினுள்ளும் வானப்பிரஸ்தமாவது,இல்லறதருமத்தைக் குறைவறநடத்திய ஒருவன் தன் இல்லக்கிழத்தியோடும் வனத்திற் சென்று காய் கிழங்கு முத

மத்தையடைந்து வனங்களிற் சஞ்சரித்துக் கூடுமானால் மறுபடியும் இல்லம் பெறலாம்: இல்லையானால் வீடு பெறலாம்,' என்றெண்ணி, ஒருவாறு தேறி, உதயத்திற்கெல்லாம் தனக்குரிய மந்திரி பிரதானிகளையும்-சேனைத் தலைவர்களையும்-சேனாவீரர்களையும் வரவழைத்து, அவர்களைப் பார்த்து,"நாம் ஒருகாரியார்த்தமாகக் காட்டிற்குச் செல்கின்றோம். மீண்டு வருமளவும் நீங்களெல்லோரும் நாமிருந்து நடத்தி வருவதுபோல யாவையும் சரிவர நடத்திவரவேண்டும்," என்று சொல்லித் தன்செங்கோலை மந்திரி கையிலொப்புவித்துத், தானும் தன் பட்டத்துத் தேவியுமாய் அடர்ந்த காட்டிற்குச் சென்றனன்.

---

## சதாநீகன் உலோமகையோடுங் காட்டுக்குச் செல்லல்.

### வனக் காக்ஷி

இவ்வாறு இவர்கள் போகும்போது இளவேனிற் கால மாகையாலே, பாரிய மரங்களெல்லாம் இளந்துளிர் எடுத்துப் பச்சென்று விளங்கிப், பலவிதபுஷ்பங்களை வருஷித்துப் பரந்த நிழலைத்தந்தன. இளந்தென்றல் வீசி மனதுக்கு ஓர்வித இன்ப மளித்தது. சிறுசிறு செடிகளும் பூண்டுகளும் நல்ல பனித்துளிகளை உண்டு பச்சென்று விளங்கின. தரையிற் படரும் கொடிகளும் புற்களும் பலவித மலர்களால் சிங்கார முற்றன. இரத்தினக் கம்பளம் விரித்தாற் போன்ற இவைகள்: பாதங்களுக்கு மெதுவு கொடுத்தன. அங்கங்கே மரங்களில் கொத்துக் கொத்தாய் மலர்களைப் பத்தி பத்தியாய் மலர்விக்கும் கொடிவகைகளின் தோற்றல் கண்டவர் அதிசயிக்கும்படி அடுக்கு வரிசையுற்றுக் கண்ணைக் கவர்ந்தன. அங்கங்கே மயில்கள் ஆடுவதும், மாங்குயில் கூவுவதும், மான் கூட்டங்கள் தாவிச்செல்லுங் காக்ஷியும், ஆநிரைகளின் தோற்றமும், அயலில் நிற்கும் ஆயர்கள் அவைகளைக் கூவிப் புள்ளங்குழல் ஊதிப் பூரிப்பதும், அவைகளைக் கேட்டு மகிழும் ஆனிரைகளின் கொண்டாட்டமும் இவர்கள் ஆகமெல்லாங் கொள்ளை கொண்டன.

---

லானவைகள் ஆகாரமாக, மனைவியால் தன் நிஷ்டைக்கு வேண்டிய உபசாரணையை மாத்திரம் பெற்று மற்ற இகபோகங்களை வெறுத்தவனாய்த் தவம் புரிவதேயாம். இதில் மனையாள் பணிவிடைக் குரியளாயிருத்த லொன்றேயாம்.

இவைகளையெல்லாங் கவனித்துக்கொண்டு இவர்கள் கொஞ்சத் தூரம் போகும்போது, அங்கே இவர்களுக்கு எதிரிலே நல்ல மலையொன்று தோன்றியது. அதன்மீதேறிச் செல்லும்படி அம்மலைச் சிகரத்தை நோக்கிய அரசியும் அண்ணலைப்பார்த்து, "ஹே பிராணநாதா! பார்த்தீர்களோ! இம் மகா பர்வதத்தின் சிகரத்தோற்றம் என்ன மனோகர காக்ஷி! கொண்டல் கவியுங் கொடிமுடிகளெல்லாம் புண்டரீகாக்ஷன் பொன்முடிபோலும் பொலிவுற்று விளங்குகிறதே! இன்னும் இதன் தோற்றம் எப்படியிருக்கிறதென்றால், பலவித வர்ணங்களைக் கொண்ட புஷ்பராசிகளைத் தாங்கிக்கொண்டு-பச்சென்று விளங்கிய பாரிய மரங்களின் செறிவால் மகா உன்னதங்கொண்டு-மகத்தான முடிமன்னர்க்குரிய அம்பாரிபோல விளங்கவும், இச் சிகரத்தின் முன்னணியானது இணைத்த மத்தகத்தைப்போலக் கறுத்து விளங்கி, இதனுச்சியினின்றும் ஊற்றாய்ப் பெருகி இழியும் ஓடையி னிருபுறமும் எட்டிய தூரம்வரையில் எங்கே பார்த்தாலும் ரம்யகரமாய், உயர்ந்த இரத்தினக் கம்பளங்கள் விரித்தாற்போல ஓரமெல்லாம் சிவந்து, மயிர்ச்சுணையின் செறிவுற்று, மத்தியிலே பசுமைகொண்டு, பத்மதளம்போலப் பரந்து, பனிதாங்கி யென்னும் பெயர்பூண்டு, மெத்தவும் சன்னமாகிய ஈர்க்குபோல் நடுவினின்றுங் கிளம்பிய காம்பி னுனியிலே கண்ணைக் கவரு மநேக புஷ்பங்களைத் தாங்கி வட்டவடிவினதாய் அவரவர்கள் இஷ்டசித்தியை யளிக்க வல்ல மட்டில்லாப் புகழ் படைத்த மகா மூலிகையின் சமூகத்தால் அம் மத்தகத்தி விட்டு இருபுறமும் தாழ்ந்து புரளும் மலர்மாலையை யொத்து விளங்கவும், கதங் கொண்டு கட்டுத்தறியை முறித்து அதம் செய்து யாருக்கு மடங்கபடாது மதங்கொள்ள வல்ல பட்டத்து யானை பவனி வருவதை யொத்து விளங்குகின்றதே? ஆகா! இந்த ஓடையின் அப்புறத்திலே இதோ தெரிகிற பெரிய தடாகத்தைப் பார்த்தீர்களோ! என்ன தோற்றம்! எவ்வளவு ரமணீயம்! என்ன விசாலம்! ஜலத்தெளிவைப் பார்த்தீர்களோ! பத்மவிலாசங்களைப் பார்த்தீர்களோ! கிரவுஞ்சம் என்ன! ஹம்ஸப்பறவைகள் என்ன! ஆகா! என்ன விநோதம்! என்ன விநோதம்!! ஹே நாதா! இத் தடாகத்தினின்றும் ஒருவித பரிமளம்வீசுகிறதே! இஃதென்ன ஆச்சரியம்! இதனிடத்திலே இவ்வளவு மணங் கமழக் காரணமென்ன?" என்று வருந்திக் கேட்கவும், இப்படித் தன்னை எடுத்துரைக்கச் சொல்லி இமைத்தகண் மூடாது அத் தடாகத்தைச் சுற்றி வளைத்துப் பார்க்கும் தன் பட்ட மகிஷியின் முகத்தை நோக்கி,

"இலவு மிந்திர கோபமும் புரையித ழினியோய்
அலவு நுண்டுளி நருவிநீ ரரம்பைய ராடக்
கலவை சாந்துசெங் குங்குமங் கற்பக மளித்தப்
பலவுந் தோய்தலிற் பரிமளங் கமழ்வன பாராய்."

"ஹே இன்பரசமே! இதோ தெரிகிற மலைச்சிகரத்தினின்றும் மார்பிற் புரளு முத்தாரம்போல அசைந்தசைந்து வருகின்ற மகா வோடையின் மருங்கெலாம் மஹாத்துக்களாகிய சித்தர்களின் இருப்பிடமாகும். கரும்பாம்புகள் காவல் பூண்ட கர்ச்சுனைகளினின்றும் இளங்காற்றினால் அசைவுற்றுச் சிறு சிறு துளிகளாக இறங்கி நிறையும் அருவி நீரால் நிறைவுற்றது; ஆழ்ந்த கங்கையைப் போன்றது. மங்கையர்க்கரசியே! அழகிய மாதர்களாகிய அநேக அரம்பா ஸ்திரீகளும் அப்ஸரமாதர்களும் அடிக்கடி வந்து நீராடிப் போவதினால் அவர்கள் தேகத்தி லணிந்த இனிய கலவைச்சாந்தும், குங்குமச் சேறும் களபகஸ்தூரிகளும் இன்னு மற்ற வாசனைத்திரவியங்களும் இந்த நீரிற் கரைந்து பரிமளிக்கிறதைப் பார்த்தையா? தெளிவுற்றுத், திவ்வியமாக விளங்கி, கையி லெடுத்தால் மிக லேசுற்று, மதுரங் கொண்ட இத் தடாகத்தின் நீரை யுண்டு களிக்கும்படி இதன் அயலிலுள்ள குகைகளிலே சித்தர்களும்-ரிஷிகளும்-முநிவர்களும்-சிறந்த கண நாதர்களும் வாசஞ் செய்வார்கள். வனவாசிகளாகிய சிங்கம், கரடி, புலி, செந்நாய் முதலிய எல்லாம் இத்தடாகத்தி னீரையுண்டு களித்து எங்கும் உலாவித் தங்கள் முழைகளை நாடிச் செல்லும். கருநாகங்க ளிடையிடையே காணப்பெறும். இத் தடத்தில் நான் அடிக்கடி என்னிஷ்டம்போல உலாவிவந்தவனுகையால், என் காலடி படாத இடமே கிடையாது. இதனாற்றான் இதைப்பற்றி எனக்கு இவ்வளவு சவிஸ்தாரமாய்த் தெரியும்" என்று சொல்லிக்கொண்டே அப்பாற் பத்து கோல் தூரம் சென்றனன்.

---

## சதாநீகன் உலோமசைக்கு அவ்வன விசேஷங்களைக் காட்டிச் செல்லுதல்

1-வது, குரங்கின் கூட்டம்:—

அவ்வடர்ந்த வனத்தில் சதாநீகனும் அப்படிச்செல்லும்போது, ஒருபக்கத்திலே சாகாமிருகங்களெல்லாம் தொடர்ந்த மரங்களின் அடர்ந்த கிளைகளி னுனியில் தங்கள் வால்களைச் சுற்றி மற்றொரு

கிளைக்கும் அதற்குமாக ஊஞ்சலாடவும், அதிலொரு குரங்கு அகண்டு பரந்த படத்தையுடைய ஆடும் பாம்பொன்றை அங்கையிற் பிடித்துச் சங்கையோடே யதைத் தூரத்தில் நீட்டி, மற்ற தன்னின மாகிய குரங்குகளுக்கெல்லாம் அதை யொரு வேடிக்கையாக்கி, அவைகள் தன்னைச் சூழவும், தான் ஒரு பாம்பாட்டியைப்போல விளங்கி, அப்பாம்பு தன்படத்தைச் சுருக்குந்தோறும் அதைத் தன் முகத்தருகிற் கொண்டுவருவதும், உபூ என்று ஊதி மறுபடியும் படமெடுக்கச் செய்விப்பதும், தன்னைச் சூழ்ந்து சுற்றிலும் உட்கார்ந்து வேடிக்கைப் பார்த்திருக்கும் மற்றக்குரங்குகளுக்கெல்லா மனக்களிப் புண்டாக்குவதுமாகிய இவைகளையும்,—

2-வது, யானைக் கூட்டம்:—

மற்றொரு பக்கத்திலே, கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் கன்னங் கறேலென்று விளங்கி, ஒழுங்கு பெற்ற போர்வீரரைப் போல அணிவகுத்துச் செல்லும் யானைக்கூட்டங்களையும், அவைகளுக்கு முன்னே இரண்டு மதத்த யானைகள் பருத்த கிளைகளைத் தறித்து, சிறுத்த உலக்கைகளாகத் தங்கள் துதிக்கைகளிற் பிடித்துக் கொண்டு தாங்கள் போகும் வழியில் தங்களைப் பிடிக்கும்படி யாராவது மனிதர்கள் பள்ளங்களை வெட்டி மறைத்து வைத்திருக்கிறார்களோ என்னவோவென்று தங்கள் பலங் கொண்டமட்டும் அங்கங்கே குத்திக் குத்திப் பார்த்துக்கொண்டே செல்லவும், மற்றும் இரண்டு கிழயானைகள் தழற்பொறிபறக்கக் கண்களையுருட்டி அயலிற் சிதறும் அநேக குட்டி யானைகளையு மற்ற யானைகளையும் அதட்டி அத்துமீறவொட்டாமல் பத்திகொண்டு செல்லப் பணித்துப் பக்கங்களிற் பாதுகாத்து வரவும், மற்றும் பெருத்த தந்தங்களையும், முகத்திலே சிறுத்த புள்ளிகளையும், கறுத்த தேகங்களையுமுடைய பெரிய யானைகளெல்லாம் வரம்பு மீறாமல் பின்னால் காளமேகம்போலக் கர்ச்சனை செய்துகொண்டு கம்பீரமாய்ச் செல்லவும், கண்டவர் மனமுங் கண்ணுங் கொள்ளை கொள்ளும் இக் கரிக்கூட்டத்தின் காக்ஷியையும்,—

3-வது, புஜங்க கீரிகளின் போராட்டம்:—

பணைத்த பாம்பொன்று இணைத்த படத்தை யெடுத்தாடவும், இதை வெகு தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த இரண்டு கீரிகள் எதிர்த்தோடிவந்து அதனோடும் போரிட்டு அதின் படத்தின் வேகத்திற்கு ஆற்றாதனவாய் அவைகளிலொன்று அப்பாம்பை அப்

புறமிப்புறம் போகவொட்டாமல் ஆட்டங் காட்டவும், மற்றொன்று மகா வேகத்துடனே மடமடவென்று ஓடிமறைந்து, சற்றுநேரத்திற் கெல்லாம் சுவர்ணமய தேஜஸ்ஸோடும சுந்தரமுற்ற அரசகிரியொன் றை ஒரு பெரிய கிரியின்மேல் ஏற்றிக்கொண்டு அநேக கிரிகள் சூழும்படி அழைத்துவந்து அப் பாம்பி னெதிரில் விடவும், அப்படி வந்த சிறிய வுருவத்தையுடைய அரசகிரியின் கம்பீரபார்வை மாத் திரத்திலேயே தனது நெடியபடத்தைத் தடாலென்று கீழே போட் டுத் தயங்கி வாடிய அக் கொடிய நாகத்தின்மேல் முன் போராடிய கிரிக ளிரண்டும் அப்பொழுதே அதன்மேல் விழுந்து அதைத் துண்டமாடித் துள்ளி விளையாடுவதையும், பார்த்துக்கொண்டே போகும்போது இவர்கள் கண்டு அதிசயிக்கும்படி இவர்கள் போகும் வழியில் அங்கே சில,

4-வது தேளின் கூட்டம்:—

பாறைகளின் சந்துகளினின்றும் புறப்பட்டு, பாதையினடுவிலே பந்திபந்தியாய் ஒழுங்கு பெற்றுப் போர்வீரரைப்போலச் செல்லும் தேள்களின் கடையில், அங்குஷ்ட அளவினதாய், செக்கச்செவே லென்று சிவந்த ரூபத்தையும், சிறந்த நவமணிக்கோர்வை போன்ற கொடுக்கின் அழகையும், உயர்ந்த பார்வையையுமுடைய இராஜதே ளானது ஒரு பெரிய தேளின்மேல் உட்கார்ந்து தான் போகும்வழி யிலே, பொன்னோ வெள்ளியோவென்று புவியி லலையும் பொய்வாதி களாலிடப்பட்ட தாம்பிரமுதலியதகடுகளையும், தடையாக நேரிடும் பர்வதம்போன்ற பாறைகளையும் தன்கொடுக்கின் வேகத்தால் (ஒரே யொரு கொட்டினுல்) பஸ்மீகரப்படுத்திப் பஞ்சாய்ப் பறக்க அடித் துப் பாதையைச் செவ்வைப்படுத்திப் பாங்காய்ச் செல்வதையும்,

5-வது கரடி விளையாட்டு:—

இன்னொரு பக்கத்திலே, கறுத்த மயிரும், சிறுத்து நீண்ட பெ ருத்த முகமும், உறுத்த நோக்கும், உறுமுஞ் செய்கையும், திருத்த மாக வளைந்து நீண்டநகங்களும் உடைய ஆண்கரடியானது, அழகிய பெண்கரடியைத் தன் துடையிற் படுக்கவைத்துத் தழைந்த மா - பலா - வாழைமுதலிய மரங்களின் மது துளிக்குங் கனிவர்க்கங் களைக் கைகொண்டமட்டும் வாரிக் காதலோ டளிக்கவும், அவைகளை யெல்லாங் கையாற் றட்டி யெறிந்துவிட்டு, மெய்யூடு உருவக் கட்டி யணைத்துக் கடகடவென்று புரண்டுவிளையாடித் தன்காதலனை மகிழ் விக்குங் காக்ஷியையும்,

6-வது தேன்கூட்டின் சிறப்பு:—

மற்றொரு பக்கத்திலே மலைகளி னுச்சியிலே பெருத்த பாறைகளின் சந்திலே திருத்தமாகக் கட்டிய தேன் கூட்டினின்றும் தனது துதிக்கையால் வருத்தத்தோடும் வாங்கிய தேனைப் பருத்துச் சூல் கொண்ட தன் பெண் யானைக்களிக்கவும் அதை யுண்டு மதத்து ஒய்யாரமாய் நடந்து முன்னே செல்லும் உன்னத கோலத்தையும்,

7-வது மலைப்பாம்புகளின் தோற்றம்:—

வேறொரு பக்கத்திலே, வெளுத்த மேகங்கள் விரிந்த ஆகாயத்திலே பரந்து சென்று பரவையில் மேய்ந்து பார்வதியின் உருவந் தாங்கிப், பர்வத மடைந்து பளிச்சென்று மின்னி மடமடவென்று இடிக்கவும், மனமயங்கி வாடிய மலைப்பாம்புகளெல்லாம் அப்படியப்படியே மகாயோகியைப்போலத் தம்மை மறந்து தரையிற் படிந்து கிடக்கவும், அவைகளை ஏறும் படியாகக் கொண்டு இருளர்முதலிய காட்டுவாசிகளெல்லாம் கூசாமல் அதன்மேல் கால் வைத்துச்செல்லுங் காக்ஷியையும், இன்னும் பலவிதமாகிய,

கோடுறு களிறு பன்றி கோவலபயி லாளி சிங்கம்
நீடிய வரக்கர் சேவண நிலவிய வரைக டோறுங்
கூடிய குரங்கி னீட்டங் குலவிய கலைகள் புல்வாய்
தேடிய தெரிவைக் கேதான் தெளிவுறக் காட்டிச் செல்லும்.

இப்படியாக வெகுதூரம்வரைக்கும் அக் காட்டில் தன் காதற்கிழத்திக்கு வேடிக்கைக் காட்டிக்கொண்டு செல்லும்போது, அங்கேயொரு பெரிய ஆலமரம் எங்கே பார்த்தாலும் பச்சென்று விளங்கி, குளிர்ந்த காற்று வீசுவதால் குதூகலத்தை யுண்டாக்கக் கண்டு இளைப்பாறும்படி அதனீழலிற் றங்கித், தன் பத்தினியின் துடைமேல் தலை சாய்த்து, அதன் கிளைகளி னழகையும் அவைகளிற் றங்கியிருக்கும் அநேக பக்ஷிஜாதிகளின் விநோத காக்ஷியையும் பார்த்துக்கொண்டேயிருந்தனன்.

அப்போது அம் மரக்கிளைகளி லொன்றில் அதிரூப சௌந்தரியத்தோடும் பலவித வர்னங்களைக்கொண்டு ஆச்சரியத்தை யுண்டாக்கித் தன் பர்த்தாவின் (ஆண்பக்ஷியின்) வரவை நாடிப் பலவிதமாய்ப் பாடிக் கூவிப் பரதவித்து மூர்ச்சித்து மறுபடியுந் தெளிந்து இருபுறத்திலுந் தன் பார்வையைச் செலுத்தி எங்கு மிருளாய்த் தோன்றவும், அப்படியே ஏங்கி அசந்திருக்கும் சரோருகமென்னும் ஓர் பெண் பறவையைக் கண்ணுற்றனன்.

---

# ஆண் பக்ஷி வருதல்

நீண்டதூரஞ் சென்று மீண்டும் வருதற்கு நெடுநேரமாகவே, தன் பெட்டையின் தனித்த நிலைமையை மனத்தி லுன்னிய மகபக்ஷி நிமிஷமுந் தரிக்காததுவாய், அதைக் காணும் வேட்கையால் கரவேகத்தா லுந்திய சரவேகம் போலச் சரேலென்று பறந்து வரவும், அதை யதிதூரத்திலேயே கண்ணுற்ற பெண்பக்ஷியும் அதிவேகமாக ஆகாயத்திற் கிளம்பும் அர்ச்சுனன் அம்பேபோலும் சிவ்வென்று பறந்து சென்று தன் ஆருயிரை யெதிர்கொண்டு இரண்டுமாகத் திரும்பித் தமதிருப்பிடம் வந்து இளைப்பாறியபோது, பெண் பக்ஷி ஆண் பக்ஷியைப் பார்த்து, "ஆ என் இதய ரஞ்சிதமே! என்னையும் பிரிந்து இருட்டின் முன்னமே எழும்பிச் சென்றும் திரும்பி வருதற்கு இந்நேரமாயிற்றோ? என்ன தடை நேரிட்டதோ! வெகு தூரம் செல்லவும் விடாய் மேலிட்டுக் களைத்து விழுந்தனையோ! அல்லது, அங்குத் தோன்றிய அரிய காக்ஷிகளெல்லாம் அடியாளையு மறக்கச்செய்தனவோ? மற்றும் வலுத்த ககனவாசிகளின் உறுத்த பார்வைக்கும் ஆற்றாது ஓடி யொளித்தனையோ? நம் இனமாகிய பக்ஷிஜாதிகளுக்காகவே அங்கங்கே வேடர்முதலிய வனவாசிகளா லிடப்பட்ட வலைகள்முதலிய தடைகளிற் சிக்கித் தயங்கி வாடினையோ? இன்னும் என்ன நேரிட்டனவோ!" என்று வினவியது.

அதற்கு அவ் வாண்பக்ஷியும், "அழகெலாந் திரண்ட அரம்பா ஸ்திரீகளின் அணிகளி லொன்றாய், அவர்கள் கரம் பார்த்துத் தங்குங் ககனவாசியே! என் ஆகமெல்லாங் கொள்ளைகொண்ட ஆருயிர்க்குயிரே! ஆ என் கண்மணியே! என்ன சொல்லப்போகின்றேன்! இன்று காலையில் யான் எழுந்தபோது யார் முகத்தில் விழித்தேனோ! எந்நேரத்திற் புறப்பட்டேனோ! உன் கூட்டை விட்டு நீங்கி யொரு குரோசதூரங்கூடப் போயிரேனே! அப்போது இருந்தாற்போல இருந்து ஆகாய மிருண்டது; அருக்கனும் ஒளி மாழ்கினான்; அநேக பக்ஷிஜாதிகளெல்லாம் அங்கங்கே கும்பல் கும்பலாகப் பறக்க ஆரம்பித்தன; மயில்க ளாடின; குயில்கள் வாடின; மந்தமாருதம் வீசவும் மரங்களுஞ் செடிகளு மலர்ந்துதோன்றின; அதனால் மனதிற்கு ஓர் வித உல்லாச முண்டாயது; வற்றி யுலர்ந்த ஆறுகளிலெல்லாம் வெள்ளம் வந்தது. இந்த வேடிக்கைகளையெல்லாம் வானத்திலே வட்டமிட்டு உலாவிக்கொண்டே பார்த்திருந்தபோது எனக்கும்

இன்னு மநேக பக்ஷிகளுக்கும் இடியிடித்தாற்போ லொருவித நடுக்க முண்டாயிற்று. 'மேக கர்ச்சிதம்போலச் சப்தமிட்ட அப் பிராணியும் என்னவோ'? என்று அங்கு மிங்குமாய்ப் பார்த்துக்கொண்டிருக் கையிலேயே, ஆ என்னிதய பூஷணமே! என்ன சொல்லப்போகின் றேன்? இருண்ட கண்ணும் - மருண்ட பார்வையும் - இரண்டு பக்க மூஞ் சுருண்ட மயிர்கள் சூழ்ந்த இறக்கையும் - திரண்ட நெற்றியில் உருண்டு நீண்டு வளைந்த மூக்கும்-சிவந்த காலு முடையதாய்த் துல் லியமாகிய மெல்லிய ரோமங்கள் உன்னதமாகக் கழுத்தைச்சுற்றி லும் சூழ்ந்திருப்பதால் கழுகரசென்னும் பெயர் வாய்ந்து, காலனும் நடுங்குங் கோர ரூபங்கொண்டு விகாரகதியாய்த் தன் குகையிலிருந் தும் புறப்பட்ட வீரசிம்ம மொன்றால் விரட்டவும், வெகுவேகமாய்ப் பறந்து வந்த அப் பாரிய பக்ஷியும் அது காததூரத்தில் வரும் போதே ஆழி சூழ்ந்த அவனியிலுள்ள ஊழிக்காற்றை யெல்லாம் ஒருமிக்கத் திரட்டி வாரித் தன்வசங் கொண்டுவருவதுபோலத் தன் சிறகின் வேகத்தா லுண்டாகிய காற்றின் வலியால் அந்தரத்துலாவி நின்ற சுந்தர பக்ஷிகளெல்லாம் கரகரவென்று அப்படியப்படியே சுழன்று சுழன்று தொப் தொப்பென்று கீழே விழுந்துபோகவும்; அதற்குத் தப்பிய சில வலிவுள்ள பக்ஷிகளும் யானும் திக்குத் திசை தெரியாமல் நெக்குவிட்டுப் போகும்படித் திசா திசைகளிலும் சிதறிப்போனேம். அதன் சிறகின் வேகத்தா லுண்டான காற் றிற்கே யாற்றாது அநேக காத தூரத்துக்கப்பால் கொண்டுபோகப் பட்ட யானும் அங்கே யொரு சோலையிலிருந்த அரசமரம் ஒன்றின் மேல் அப்படியே விழுந்து மூர்ச்சித்து, உன் அதிர்ஷ்டத்தால் கொஞ்ச மூர்ச்சை தெளியவும், அத் தோப்பை யடர்ந்த வளத்தை யெல்லாம் வளைத்துப் பார்த்துக்கொண்டே அதற்கப்பால் கொஞ்சத் தூரஞ் சென்றேன்.

---

## தாரா நகரம்

அங்கே 'அளகாபுரியோ! ஆயிரங் கண்ணனாகிய இந்திரன் பதியோ!' என்று சொல்லும்படி அவ்வளவு செழிப்பும் சிறப்புங் கொண்ட பட்டணம் ஒன்று தோன்றக் கண்டேன். அதன் வளப்பத் தைப் பார்க்கும்படி சென்ற யான், அதன் எல்லையிலேயே அநேக பிராமணர்களும் வித்வான்களும் கவிசிரேஷ்டர்களும் நிறைந்திருக்

கக் கண்டு, 'இப் பட்டணத்தின் வெளியே ஏககாலத்தில் இவ்வளவு வித்வான்கள் ஒன்றுகூடக் காரண மென்னவோ? இவர்க ளெங்கிருந்து வந்தார்கள்?' என்று பார்க்கும்படி அங்கே போனபோது, அக் கூட்டத்திலே யொருவித சத்த முண்டாயது. 'அஃதென்ன?' என்று உற்றுக் கேட்கையில், "ஆகா! அந்த மகாநுபாவனு! சாரதாம்ஸம் ஆச்சுதே! சகல சாஸ்திரப்பிரவீணனுன அவனுக்கு ஈடு இவ் வவனியிலு முண்டோ! ஆதிசேஷனும், ஆயிரங் கரங்களையுடைய பாணுசூரனும், அன்றலர்ந்த புஷ்பங்களையே பாணமாகவுடைய அநங்கனும்: அவனது வாக் விசேஷத்திற்கும், கரவேகத்திற்கும், கண்களைக் கவரும் வனப்பிற்கும் ஆற்ருதவராய் ஆழி சூழ் இவ் வையகத்தினின்றும் அகன்றனரென்ருல், அற்ப ஜீவிகளாகிய நாமெல்லோரும் அவனுக்கு எம்மாத்திரம்? நமக்கு வித்வான்களென்ற பெயர் இருந்தென்ன? அவனது பாத தூளிக்கும் ஈடாவோமோ? அவனுடைய அழகிய சுலோகங்களின் ரசபுஷ்டியே புஷ்டி; அதிலமைந்து விளங்கும் அலங்காரமே அலங்காரம்; அப்படியிருப்பதாலன்ருே? அஷ்டதிக்குங் கீர்த்திகொண்டு தனதிஷ்டம்போல ஆணை செலுத்தும் அழகிய நமதரசன் போஜனும் அருமையாகிய வித்துவான்களுக்கெல்லாம் அபாரமாகத் திரவிய மளிப்பவன் இவ் வரகவியின் கவியிலடங்கிய வாக்கியங்களின் ஒவ்வோ ரக்ஷரத்திற்கும் லக்ஷக்கணக்காய்ப் பொன்னை வாரி லக்ஷியமின்றி மேரை யளிக்கின்றனனே! அவனை அரைக்ஷணமேனுங் காணுவிடில், 'ஹே மகா கவி! ஹே மகா கவி காளிதாசா!!' என்று எப்போது பார்த்தாலும் இதுவே நினைவாய் 'ஆவிழந்த கன்றைப்போல' அலைகின்றனனே! ஆகையால், இவனுடைய பெருமையே பெருமை" என்றிப்படி யவர்கள் புகழ்ந்து பூரிக்கக்கண்ட யான் 'அப்படிப்பட்ட ஆரிய சிரேஷ்டனை, அரிய வித்வசிரோன்மணியைப் பார்ப்போம்' என்று அப் பட்டணத்துட் புகுந்து, அதனடுவில் விளங்கும் அழகிய போஜனுடைய வானமளாவிய சபாமண்டபத்தைக்கண்டு, அதன் ஸ்தூபியின் வழியாய் இறங்கி, அங்கு ஒரு சாளரத்திற் றங்கித், 'தேவர்கள் மத்தியமுற்ற திருமாலைப்போலும்,' 'அநேகவித ஜாதிபுஷ்பங்களிற் சிறந்து விளங்கும் அரவிந்தம்போலும்' சோபிதங் கொண்டு, அங்கிருக்கும் அதி சூக்ஷ்ம புத்தியையுடைய அரிய வித்துவான்களெல்லோரும் அதிசயிக்கும்படி அடிக்கடி அநேக சுலோக பாகங்களை அபாரமாகக் கொட்டி விநோதமாகத்தானே தன் வித்தியா சாமர்த்தியத்தைக் காட்டி, வரப்பிரசாதியாகிய தன்னுடைய வாக் விசேஷத்தா லுண்டாகும்

அநேக புதுபுது மொழிகளையெல்லாம் அங்கிருப்பவ ரியாரும் செவியாகிய வாய்மடுத்து அமிர்தபானம்போ லுட்கொண்டு அதி சயிக்கச் செய்வித்து, அவர்களுக்கெல்லாம் சிரோபூஷணமாக விளங்கிய அம் மகானுபாவனையுங் கண்டேன். அடங்கா மகிழ்ச்சி யுட்கொண்டேன்.

அரசனை தொண்டு செய்ய ஆநந்தப் பெருக்கால் அக மகிழும் அந்த மகா கவியின் அங்கமெல்லாம் நிறைந்த பேரழகையும், அவனது அருட்பார்வையையும், அதற்கேற்ற நடையுடையாதி பாவனைகளையும் பார்த்துக்கொண்டே யிருந்த யான்: கோர்த்த முத்துப்போன்ற தந்த பந்தியும், கொவ்வைக் கனிபோன்ற இதழும், கொடிபோன்ற இடையும், அன்னம் போன்ற நடையும், சுவர்னச் சாயலுமுடைய சுந்தரமகளீரின் சோபிதப் பொருளே! உன்னையு மறந்தேன்; உணவையுந் துறந்தேன்; ஒன்றுந் தோன்றாமல் ஒரு ஜாம நேரம் அப்படியே யிருந்த யான் அவனது விருத்தாந்தத்தை யும் அறிந்துவந்தேன்" என்றது.

அதைக் கேட்ட * பேடும், "ஆ என் மனோரதமே! அடியாளையு மறக்கச் செய்தனவோ அம் மகாநுபாவனுடைய அரிய செயல்கள்? அப்படிப்பட்டவனையுங் கண்ணாரக் கண்டு வந்தீர்களோ? அவனது சரித்திரத்தைத் தெரிந்து வந்த தாங்கள் அதையும் எனக்குச் சொல்லவேண்டும்" என்றது.

அதற்கு அவ் ஆண்பக்ஷியும் அடங்கா மகிழ்ச்சி கொண்டு தேகமெல்லாம் புளகிக்கவும், அம் மகா புருஷனது அத்தியாச்சரிய கரமான விவேகத்தை விளைவிக்கும் விநோத கதையையும் ஆதியோடந்தமாய்ச் சொல்லத்தொடங்கிக் "கவனமாய்க் கேள்!" என்றது:—

அப்போது அம் மரத்தடியிற் படுத்திருந்த நயனபாஷா வல்லவனாகிய சதாநீகனும் தன் பத்தினியின் றுடையின்பேரில் தூங்குபவனைப்போலவே யிருக்குந் தான் இப் பக்ஷிக ளிரண்டிற்கும் நடக்கப்போகிற சம்பாஷணையை நாடினவனாகிச் செவி வாயாகச் சேஷ்டை யற்றிருந்தனன்.

ஆழ்ந்த சிந்தையோடும் தன் வாய் பார்த்திருக்கும் பேட்டின் அவாவுக்கும் ஆற்றலாகாத ஆண் பக்ஷியும், "உலகத்திலிருக்கும் உத்தமிகளுக்கெல்லாம் உஷத்காலத்துச் சூரியன்போல ஒப்பற்று விளங்

* பேடு - பெண் பறவை.

கும் பத்மினி ஜாதிப் பெண்களின் பாங்கமமைந்த லக்ஷணங்களி லொன்ருய், அவர்கள் முன்னங்கையிற் சிறந்து விளங்கி மழலைச் சொற்களைக் கொட்டி மனமகிழ்விக்குங் கோமளமே! என் மனங் கொண்ட பூமணமே!

## மதுமந்த நகரம் சுதன்மன் வரலாறு

இப் பூலோகத்துக் காக்ஷியாய்ப் பொலிவுற் ேருங்கிய பூமியாம் பரத கண்டத்திலே, விந்தகிரிக்கு அடுத்து மந்தமாருதம் வீசுவதால் மதுமந்தம் என்னும் பெயர் கொண்ட பட்டணத்திலே, சூரிய வம்சத் தோன்றலாகிய சுதன்மன் என்னும் ஓர் அரச னிருந்தான். மன்மதாகாரியாகிய அவனது மனம்போல நடக்கவல்ல அதி நுட்ப சாலியாகிய சுந்தரவதி யென்னும் ஓர் அரசச் செல்வியும் அவனுக் குப் பட்ட மகிஷியா யுற்றனள். யௌவன ரூபிகளாகிய இவர்க ளிருவரும் ஒத்த மனத்தினராய், இல்லற தர்மங்களை விதிவழாது இயற்றி வருதலால், விதரணையுற்ற தங்களுக்கும் பூர்வபுண்ணியமே திரண்ட பூலோக ரதியென்று சொல்லும்படி ஓர் புத்திரியு முதித் தனள்.

## வித்தியா ரத்தினம்

கார்காலத்துக் கனத்த மேகத்தையும் - கடற்கரை யோரத்து கறுத்த மணலையும் - அமாவாசைக்கு முன்னே தோன்றுந் தடித்த இருளையும் ஒத்து மிகு பளபளப்போடும் முன்னெற்றியிற் சுருண்டு விழுந்தும் - பக்கங்களிலும் பின்புறத்திலும் வளைந்து நீண்டும் - வளமையுற்றுப் பசுமைபெற்ற மயிர்ச்செறிவும், அகண்ட நெற்றியும், வளைந்த புருவமும், வனப்பெலாங் கொள்ளை கொண்டு விசாலித்த கண்களும், நீண்டு வளைந்து நுனி சிறுத்த கூரிய மூக்கும், பவழ இதழும், சித்திரித்த வாயும், சிறிக்குந்தோறும் சிறு பள்ளம் விழுந்து செல்வ மிகுதியைக் காட்டும் சிவந்த கன்னங்களும், சிறிய முகவாய்க்கட்டையும், அழகிய காதும், ஆழியி லுதித்த சங்கை யொத்து அங்கங்கே யிரேகைகள் பொருந்தி யெழில்பெற்ற கந்தரமும் (கழுத்தும்,) அகண்ட மார்பும், ஆலிலை போன்ற வயிறும், அரவிந்தம் போன்ற நாபியும், நீண்ட கையும், நேர்ந்த தொடையும்,

உருண்டு நீண்டு திரண்டு பணைத்த முழந்தாளும், சிறத்து விளங்குங் கணைக்காலும், செந்தாமரையை யொத்த பாதங்களு முடையவளாய், ஸ்ரீமகாலக்ஷ்மியேபோலும் சிறந்து விளங்கி, முப்பத்திரண்டு லக்ஷணங்களும் பொருந்தி, சர்வாங்க சுந்தரியாய், சாக்ஷாத் சரஸ்வதியே யென்ன முகவிலாசமுற்று, அரசன் மடிமீதும், அரசியின் மார்மீதும், மற்ற சேடியரின் முடிமீதுமாக அடியானது பூமியிற் படாதபடி அவ்வளவு அருமையாய் வளர்ந்துவந்த அக் குழந்தைக்கும் ஐந்தாமாண்டு அதிகரிக்கவும், அரசனும் அதற்கு வேண்டிய வித்தியாரம்பத்தின் பொருட்டு அநேக பிராமணர்களை வரவழைத்து அவர்களனுமதியின்பேரில் நல்ல சுபமுகூர்த்தமொன்றை யேற்படுத்தி, அதில் அப் பெண்ணுக்கும் வேண்டிய ஆடையாபரணாதிகளை யணிவித்து, ஆரிய சிரேஷ்டனொருவனால் அநேக பிராமண பெரியோர்கள் மத்தியிலே அக்ஷராப்பியாசம் செய்வித்துக் கலாசாலைக்கு மனுப்பிவிட்டனன். அங்கேயுற்ற அநேக சங்கீத வித்வான்களெல்லாம் அவரவர்கள் கற்றுணர்ந்த அபூர்வ பாகங்களையும் அப்படியப்படியே அழுத்தமாய்க் கற்பிக்கவும், அவ்வளவையும் ஏகசந்த கிராகியாய்க் கற்பூரதீபம்போலக் கமனம்பண்ணி அவைகளெல்லாம் 'பசுமரத்தாணிபோல்' மனதிற் பதியவும், வீணாவேணு முதலிய விநோத வித்தையிலும், அபிநயசாஸ்திராதி அபூர்வபாகங்களிலும், பரதசாஸ்திராதி சுரத நூல்களிலும் மகா சோபிதமுற்றுத் திருத்தமாகத்தானே யிவ்வளவையும் அப்பியசித்துச், சிறந்து விளங்கிய தனக்கும் நிகராவா ரிவ்வுலகிலில்லை யென்னும்படி சாமர்த்தியங்கொண்டு வித்தியாரத்னம் என்னும் பெயரும் பெற்றனள்.

இதற்குள்ளாக அப் பெண்மணிக்கும் ஈரைந்தாண்டு மதிகரித்தது. அப்போது ஒரு நாள் அந்தப்புரத்திலே அரசியோடும் வார்த்தையாடிக்கொண்டிருந்த அரசனும் ஆச்சரியங் கொண்டு, அரசபத்தினியைப் பார்த்து, "ஹே! இன்ப சகி! இதென்ன விந்தை! இதோ காண்கிற சாளரவாசிகளாகிய நாகணமுதலிய பக்ஷிகளெல்லாம் மோகனகதியோடும் தோரணமாக இராகாலாபனைசெய்து இதயம் பூரிக்கச் செய்கின்றனவே! இவைகள் இவ்வளவு தீர்க்கமாக இனிய இராகத்தோடும் அறிவிற் சிறந்த மானிடரைப்போல உள்ளங் கனியப் பாடுகின்றனவே! இவ்வளவுக்குங் காரணம் யாரோ?" என்றனன்.

6431a

அதற்கு அரசமாதும், "ஹே பிராணநாதா! இவ்வளவுக்குங் காரணம் நம்மிளஞ் செல்வியே," என்றனள்.

அதற்கரசனும், "ஆ! அப்படியா! ஆனால், நமது அருமைச் செல்வியை வரவழைப்பாயாக! நாம் பார்க்கவேண்டும்" என்றனன்.

உடனே சுந்தரவதியும், அங்கேயொரு பக்கத்தி லிருந்து கொண்டு அடப்பம் உதவிவரும் ஒரு தாதியைப் பார்த்து "நீ போய்ச் சங்கீதசாலையிலிருக்கும் நமது அரச புதல்வியை அழைத்துவா!" என்னலும், அத் தாதியும் அதி துரிதமாய்ச்சென்று அரசகன்னிகையைக்கொணர்ந்து சுதனமன்முன் விட்டு, "சுவாமி! தேவர் பராக்கு!" என்றனள்.

அப்போது அரசனு மவ்வரசிளங் குமரியை யெடுத்து வாரியணைத்து முத்தமிட்டு, மடிமீதிருத்தி, உள்ள முவந்து, "ஆ! என்னருமைச் செல்வமே! நீயுமித்தனை நாளாக அப்பியசித்த சங்கீதத்திலுனக்கும் நிகராவா ரிவ்வுலகி லில்லையென்று உன் தாயும் சாதிக்கின்றனளே. அதையும் நீ நிறுநிறுத்த வல்லையோ! உன் கானவித்தையும் அப்படிப்பட்ட ஒப்பற்றதுதானோ? அப்படியானால் ஏதோ இரண்டொரு கீதங்களைப் பாடி பார்ப்போம்" என்றனன்.

உடனே அவ் வுலகபாலகன் புதல்வியும் உளம் பூரித்தவளாய், உதயதாமரைபோல முகமானது மலரவும், "அப்படியே தேவர் திருவுளம்" என்று, தந்த மிழைத்து, அங்கங்கே தங்கக்கட்டுகள் பூண்டு, சிங்கமுகச் சிகரத்தாற் சிறப்புற்றுச் சப்தசுரங்களோடும் சந்தமமைந்து ஒப்பற்று விளங்கும் இரேணு என்னும் வீணையை வாங்கி இடது கரத்தி லணைத்து, இசைகளை மூட்டி, இராக ஆலாபனை செய்து, இரண்டொரு கீதங்களை பாடினள்.

இதற்குள்ளாகவே அங்கிருந்தவ ரியாவரும் அப்படியப்படியே அசைவற்றுப் போயினர்; பக்ஷிஜாதிகளெல்லாம் படத்தி லெழுதிய பாவைபோ லாயின; மற்றைய பிராணிகளெல்லா மெய் மறந்தன; கிருமிகீடாதிகளும் எறும்பு முதலானவைகளும் இருந்த இடத்திலேயே திருந்திய மகாயோகிகளைப்போல் செயலற்று நின்றன. இவ்வாறு கல்லு மிளகும்படி, இனிய கானம் பாடிய அப் பெண்ணின் அவயவங்கள் அசையாமலும், அதரம் கோணாமலும், புருவம் நெளியாமலும், பற்களானவை பளபளப்போடும் பாதிமாத்திரமே

வெளியில் தெரியவும், ஒரே தன்மைப்பட்டு முகமானது சந்திர பிம்பம்போலச் சுந்தரங் கொள்ளவும் சோபித முற்றனள்.

## சங்கீதத் திறமை கொண்ட தன் மகளுக்கு அரசன் சாஸ்திராப்பியாசம் செய்வித்தல்.

இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இன்பவள்ள லாகிய சுதன்மனும் ஆநந்த பரவசனாய், அருகிலிருக்கும் அரசபத் தினியைப் பார்த்துத் தலையசைத்து, "ஹே! சகி! உன் வாக் விசே ஷத்துக்குமெச்சினேன்," என்றுகூறி, இரண்டொருகீதத்தினாலேயே அங்கிருந்த எல்லாரையு மிதயம் பூரிக்கச் செய்வித்து உதய பாநு வைப்போல ஒப்பற்று விளங்கிய உலகவிளக்கை, இலகும் பைங் கிளியை, இருகையாலும் தாராளமாய் வாரியெடுத்து, "என்னிதய வாழ்வே! இரத்தின பூஷணமே! உனக்கும் நிகராவா ரிவ்வுலகிலும் உண்டோ? சங்கீதத்தில் நீ யிவ்வளவு சாமர்த்தியவதி யென்பதை இதுகாறும் உணர்ந்தேனில்லை. இன்றைக்கு உன் தாயின் அந்தப் புறவாசிகளாகிய நாகணமுதலிய பக்ஷி ஜாதிகளின் சங்கீத நாணய மன்றோ மங்காத ஒளிபெற்ற மகா சாமர்த்தியம் பொருந்திய உன் அரிய வித்தையையும் வெளிப்படுத்தியது. உனக்குச் சங்கீதத்தி லிவ்வளவு சாமர்த்திய மிருப்பதற்குச் சாஸ்திர ஆராய்ச்சியு மிருக்கு மேல் சாரதாவைப்போலச் சகல லோகங்களிலு புகழ் பெறுவாய். ஆகையால், உனக்கும் இன்றியமையாச் சாஸ்திரப் பயிற்சிக்கு வேண்டிய உத்தம சிரேஷ்டனொருவனை யுதவிப் பூரணமடையச் செய்விக்கின்றேன்" என்பதாக உறுதி கூறி, அநேக ஆடையாபர ணங்களை யளித்து, அகமகிழ்வித்து, அரசியோடும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தான்.

அப்போதுவாயிற் காப்பாளனொருவன் ஓடோடியும்வந்து அரச னெதிரில்நின்று, "ஐயனே! தேவர் பராக்கு! தங்கள் ஆணையின்படி வந்திருக்கு மதியூகி மந்திரியும் திருவுளச்சித்த மெதிர்பார்க்கின்ற னர்," என்றனன்.

உடனே அரசனும் பக்கத்திலிருந்த பட்டமகிஷியைத் திரைப் பக்கம்போக சமிக்ஞைசெய்து, மந்திரியை யுள்ளே வரும்படி யுத்தர மளிக்கவும், அப்படி அரசனுக்கிணையால் அங்கே வந்த மந்திரியும்

மன்னவனுக்கு வேண்டிய மரியாதைகளை யியற்றி, உசிதவார்த்தைகளால் உள்ளம் பூரிக்கச் செய்வித்து அங்கு ஓர் ஆசனத்தி லமர்ந்தனன்.

அப்போது காலத்திரயங்களையும் கண்டறிந்து கடைவிரலி லமைத்து நராதிபர்க்கேற்ற எவையும் நயம்பெற வுரைத்து இதம்பெறச் செய்யவல்ல உத்தமனாகிய மந்திரியின் உள்ள மறியத் திருவுளங்கொண்ட திருவுடைய மன்னனும், "ஹே மந்திரீ! என்ன சொல்லப்போகின்றோம்? நமது அரசச்செல்வியின் சங்கீத சாமர்த்தியத்தைப் பார்த்தையோ? இரண்டொரு கீதங்களினாலேயே இவ்விடத்துற்ற நரமனுஷ்யாளேயன்றி நாகணமுதலிய பக்ஷிஜாதிகளும், கிருமி கீடாதிகளும், மற்றைய சராசர வஸ்துக்களும் சத்தடங்கி, சதாநிஷ்டை கூடிய மகாயோகிகளைப்போல மனமானது ஒருநிலைப்படவும், இருவினையற்ற ஓவிய மொத்து ஒருசெயலுமின்றி ஓய்ந்துபோகச் செய்தனவே! நாநா பக்கங்களிலுமிருந்து நம்மை நாடி வந்து, 'இம்மையி லிவர்க்கும் ஈடுண்டோ' என்று சொல்லும்படி இசை பாடி அசையாத புகழ்பெற்ற அநேக அரிய வித்துவ பூஷணங்களின் விநோத கீதங்களை யெல்லாம் வேண்டியவரையிலுங் கேட்டுப் பூரித்து கெடிபெற்ற நாமும் நஞ்செல்வியி னயத்த குரலுக்கும் நவீனமாகிய வீணாநரம்புகளின் நளின இசைக்கும் செவி கொடுத்து அவைகளின் வசமாகி, அப்படியே அசந்து, "இப்படிப்பட்ட இசையை இனிமேலுங் கேட்கப்போகிறோமா?" என்று ஏக்கங்கொண்டு அப்படியே தூங்கிவிட்டோமென்றால், இதர பிராணிகளின் செயலை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? ஆகையால், மந்திரீ! அழகும், அறிவும், அதற்கேற்ற இனிய குரலும், இசையும் பெற்ற இவ்வரசச் செல்விக்கு இன்றியமையாப் பெருஞ் செல்வமாகிய இலக்கிய இலக்கணமாக வுற்ற அநேக அரிய நூல்களையும், அதிநுட்ப சாஸ்திரங்களையும் விதிவழியாகத்தானே விதரணையாக விப்பிரனொருவனைக்கொண்டு கற்பிக்குங் கடமை யுன்னுடையது" என்றனன்.

அதைக்கேட்ட அமைச்சனும், உடனே எழுந்து, வாய்பொத்தி நின்று, "ஐயனே! தேவர் திருவுள மறியாத தொன்றுமில்லை. 'ஸ்திரீகளாய்ப் பிறந்த பேர்க்கு, திண்டி யிரண்டு பங்கும், தீவிரமாகிய புத்தி நாலுபங்கும், சாமர்த்தியம் ஆறு பங்கும், காமம் எட்டுப் பங்குமாய் அதிகரித்துள்ளன' என்று சாஸ்திரங்களெல்லாஞ் சாதிக்

கின்றனவே! அப்படிப்பட்ட ஸ்திரீகள் அருமையாகிய சாஸ்திர ஆராய்ச்சியும் செய்வார்களானால், அவர்களும் புருஷர்களுக்கடங்கி நடக்கவோ? ஸ்திரீகள் படிப்பதினா லுண்டாகுங் கெடுதிகள் தேவர் திருவுள்ளம் அறியாததல்லவே! ஆகையால், அப்படிப்பட்ட ஸ்திரீக ளும் ஆழ்ந்த கருத்தோடும் அநேக நூல்களைப் பார்ப்பார்களே யானால் ஆழிசூழும் இவ்வையகத்தில் ஆடவரையு மதிக்கவோ? ஆனா லும், தேவரீர் ஆக்ஞைக்குத் தடை சொல்ல அடியேன் தரமல்லவே! ஆகையால், தாங்கள் அது விஷயமாய் அவ்வளவு சொல்லவும் அல க்ஷியமாய்க் கொள்ளுவனோ?'' என்று சொல்லிச் சும்மாவிருந்தனன்.

அப்போது அரசனும் சற்று நிதானித்து, "மந்திரீ! நீ சொல்வ தும் சரிதான்; ஆகிலும், நமதருமைச் செல்விக்கு நாம் வாக் களித்துவிட்டோம்; அது நிறைவேறத்தான்வேண்டும்: ஆகையால், நீ அதை அவசியம் முடித்துவைப்பாயாக'' என்றனன். இப்படியாக மந்திரிக்குங் கட்டளையிட்டுப் புதல்வியையும் சங்கீத சாலைக்கு அனுப்பிவிட்டுத், தானும் அந்தப்புறம் சென்றனன்.

அடுத்த நாள் உதயத்திலேயே அமைச்சனும் அழகிய வித் தியாசாலை யொன்று ஏற்படுத்தி, அதில் அநேக அபூர்வ சாஸ்திரங் களை யெல்லாங் அங்கங்கே அமைத்து, அரிய நூல்களாகிய அங்கம்-கணிதம்-சிற்பம்-வியாகரணம்-தர்க்கம்-மீமாம்ஸம்-வேதம் - வேதாங் கம் - புராணம் - இதிகாசம் - சாஸ்திரம் முதலிய அநேகவற்றையும் விநோதமாகத்தானே நிறைத்து, அதன் மத்தியிலுற்ற வித்தியா மண்டபத்தில் 'அம்பரோக்ஷன் என்னும் ஆரிய சிரேஷ்டனால் சாஸ் திராப்பியாசம் செய்வித்தனன்.

சகலமான பணிப்பெண்களும் வேலையாட்களும் சைகைமாத் திரத்திலேயே காரியங்களையெல்லாம் சரிவர நடத்திச் சந்தோஷிப் பிக்கவும், இராஜகுமாரியும் யாதொரு குறைவில்லாமலும் மந்திரி யின் கண்காணிப்பினால் அரவிந்தத் துறைமகளைப் பிரார்த்தனை செய்து ஆரம்பித்து நாளடைவிலே அரிய நூல்களை யெல்லாங் கற்றுச் சகலகலா செல்வியாகிய சாக்ஷாத் சரஸ்வதியைப்போலப் பிரகாசித்தனள். அகோசர விஷயமானாலும் அவ்வளவிலேயே கவ னித்து அறியவல்ல அவ்வரசகுமாரிக்கும் ஐம்மூவாண்டுங் கழிய வும் மங்கைப்பருவமாகிய பதினாறும் ஆண்டும் ஆரம்பித்தது.

அப்போது, மாதுளம்பூவின் இதழும் மல்லிகைப்பூவின் தந்த பந்தியுமுடைய அம் மங்கைக்கு மேனியானது மாந்தளிர் போலு

மெனவு கொடுத்தது; அவயவங்களெல்லாம் அங்கங்கே அகண்டு பரந்து அழகு கொண்டன; முகமானது புன்னகை யுற்றுப் பூரணச் சந்திரன் போலும் விளங்கியது; 'கான்தேசத்து வெல்வெட்டென்னுங் கரும்பட்டோ? கார்காலத்துக் காளமேகமோ? கடற்கரை யோரத்துக் கறுமணலோ?' என்று சொல்லும்படி இருண்டு தாழ்ந்து படிப்படியாகச் சரிந்து விழுந்து மிகு பளபளப்புற்றுப் பசுமை கொண்டு பாதத்தளவும் நீண்ட கூந்தலும், மேடுபள்ள மின்றிச் சமமாகத்தானே பரந்து விசாலித்த நெற்றியும், 'பதப்பட்ட சலவைக் கல்லோ, பாங்கமைந்த கண்ணாடியோ' என்று சொல்லும்படி மினுமினுப்புற்று - காந்திகொண்டு நிழலாடுங் கபோலங்களும், வில்லை யிட்ட புருவமும், வேலும் வாளும் விரவிய கீழ்மேல் இரப்பையும், அகண்டு பரந்து-காதளவும் நீண்டு-கடை சிவந்து-செவ்வரி படர்ந்து-சேற்கெண்டையொத்துச் சிறந்து விளங்கிய கண்களும், உயர்ந்து நீண்டு உன்னதங் கொண்டு முனை சிறுத்து முகிழம்பூவை யொத்து விளங்கிய மூக்கும், வளமை பெற்ற மகா சிற்பிகளால் சித்திரித்த இதழும், சிறிக்குந்தோறும் சிறு பள்ளம் விழுந்து செல்வமிகுதியைக் காட்டும் சிவந்த கன்னங்களும், சிறிய முகவாய்க்கட்டையும், அங்கங்கே மடிந்து விழுந்து அகண்டு சுனைகள் பருத்த காதும், சமுத்திரத்துற்ற வலம்புரிச் சங்கை யொத்து மூவிதரேகைகள் பொருந்தித் திரண்டு கமுகை வென்ற கந்தரமும் (கழுத்தும்), அகண்டு பரந்த மார்பிடமெல்லாங் கவர்ந்து பூரித்தெழுந்து மதர்த்து விளங்கும் விம்மிதங்களும், ஆலிலைபோன்ற வயிறும், அதனடுவில் ஆழ்ந்த சமுத்திரத்தின் ஓரத்துற்ற அலைகளா லெறியவும் அங்கங்கே கரைகளி லொதுங்கிய கறுமணலின் காந்திகொண்ட உரோமச்செருவின் ஒதுக்கமும், அரவிந்தம் போன்ற நாபியும், அரம்பையை யொத்த துடையும், உருண்டு திரண்டு பணைத்து நீண்ட முழந்தாளும், சிறுத்து விளங்குங் கணைக்காலும், ஆமையின் முதுகு போன்ற பரடும், நடு உயர்ந்து நாற்பக்கமும் பூமியிற் படியவும், தனம்-பதுமம்-சங்கம்-துவசம் முதலிய அநேக இராஜ சின்னங்களெல்லா மமையவும், செந்தாமரை யொத்து விளங்கும் சிவந்த பாதமும், சிறு பயற்றங்காய் போன்ற விரலும், தாழ்ந்து-திரண்டு-நீண்டு-பசிய வேயை வென்ற பைந்தோளும், பாங்கமைந்து முழந்தாள் தடவும் முன் கையும், நடுவுயர்ந்து உள் சிவந்து ஒப்பற்ற ரேகைகளெல்லாம் அங்கங்கே யமையவும் மெதுவுற்று உன்னதங் கொண்ட உள்ளங்கையும், சன்னமாகத் திரண்டு நீண்ட விரல்களும்,

அன்னத்தின் மூக்கை யொத்துச் சிவந்த நகங்களும் உடையளாய், 'ஸ்ரீ மகாலக்ஷ்மியோ, தாருகவனத்துத் தபோதனரெல்லாந் தயங்கும்படி சாக்ஷாத் பகவான் கொண்ட மோகனுவதாரமோ; அல்லது திவ்விய பரிமள மாலே யணிந்த திரண்ட தோள்களேயுடைய தேவதாசிகளிற் சிறந்து விளங்குந் திலோத்தமையோ!' என்று சொல்லும்படி யெழிலுற்று, எல்லா லக்ஷணங்களும் ஏற்கனவே பொருந்தவும் வார்ப்படம்போல் விளங்கினள் அவ்வரசிளங்குமரி.

---

## அரச குமாரியை வாதில் வெல்லும்படி அநேக தேசத்து மன்னர் மன்னரும் மகா வித்துவான்களும் வருதல்

சகல சாஸ்திரப் பிரவீணமுற்றுச் சிறந்து விளங்கும் அவ்வரச கன்னிகையுந் தன் ஆசிரியனுக்கு வேண்டிய தக்க மரியாதைகளேச் செய்து, காணிக்கையாக அநேக ஆடையாபரணங்களேயும் சுவர்ண புஷ்பங்களேயும் சமர்ப்பித்து, அவ் வித்தியாகுருவின் ஆசீர்வாதம் பெற்று, தந்தைக்கும் நமஸ்கரித்து, தான் இனிமே லிருக்கவேண்டிய கன்னிகாமாடத்திற்குப் போய்விட்டனள்.

மங்கைப்பருவமுற்ற தன் மகளுக்கு மணஞ் செய்யக் கருதிய மன்னவனும், மண்டலத்து மன்னர் மன்னருக்கும்-மகாராஜாக்களுக்கும்-மற்றும் வித்வத்திற் சிறந்து விளங்கும் விற்பன விவேகிகளுக்கும் தூதர்கள் மூலமாகவும், புரோகித பௌராணிகர் மூலமாகவும், "சங்கீத சாகித்திய சாமர்த்தியராய்ச் சகல சாஸ்திரப் பிரவீணமுற்றுச் சந்திரனேப்போலச் சுந்தரங்கொண்டு மந்தரமனேய தோள் வலியாலே அந்தரத்துலாவும் அமரரும் அஞ்சும் ஆண்மை படைத்தவர் அந்தணராயினும் சரி, அவனிபர் ஆயினும் சரி, எவரொருவர் என் புத்திரியை எதிர்த்த வாதில் வெல்ல வல்லவரோ அவர்க்கே அவளுரியவளாகவும், என் அரசும் அவரதாக அஷ்டைஸ்வரியத்தையு மடையலாம்" என்று எழுதி அவனி அம்பத்தாறு தேசங்கட்குமறிவித்தனன்.

காவலனல் கருதி விடுத்த கட்டுரையைக் காதிலேற்று வாதில் வெல்ல வரிந்து கட்டிய வயவேந்தரும், புவிபாலரும், கவிவாணரும், தனவந்தரும், தக்க நாள் பார்ப்பவரும், சகுனங்கள் ஆராய்பவரும், குறி கேட்பவரும், குலதெய்வ கோரிக்கை கொள்வாருமாய் அவ

ரவர்கள் நிச்சயித்த சுபதினத்திலேயே பிரயாணமாகி, மதுமந்த நகரம் வந்தடைந்து, மன்னவன் அரண்மனை வாயிலிற் சேர்ந்து, அரசனுக்கிணையால் உள்ளே விடப்பட்டு, உயர்ந்த வித்தியா மண்டபத்தி னடுவிலே அரசனு விடப்பட்ட ஆசனத் தமர்ந்து, அதை யடுத்த திரைச்சீலைக்கு அப்பாலிருந்துகொண்டு நிறைநிறையாக நீண்ட தாரைபோற் சுலோகங்களைக் கொட்டி நேர்ந்த மன்னரை யெல்லாம் நெட்டுயிர்ப்பெய்தச் செய்வித்து, அதற்கு மஞ்சாத அரிய வித்துவான்களை யெல்லாம், பெரிய பெரிய கேள்விகளாலே பிரமித்துப் போகச் செய்வித்து, அவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் அவ்வளவிலேயே விடையளித்து, அகம்பூரிக்கும் அவ் வரசகுமாரியின் அதிநுட்ப கேள்விகளுக் கெல்லாம் விடையளிக்க மாட்டாதவராய், மாறுமுகங் கொண்டு மனம் வெட்கி ஓட்டம் பிடித் தனர்.

இப்படியாக அம் மாதரழகியின் இரண்டொரு சமஸ்யை களுக்கே ஏற்ற விடை கொடுக்காது தோற்றோடிப்போன இவர்கள்: மனந் தளர்ந்து, முகம் வாடி, தலை கவிழ்ந்து, சலித்து, "சீ! சீ!! நம்முடைய பிழைப்பும் ஒரு பிழைப்பா! நாமிருந்தென்ன! இறந் தென்ன! இனி எப்படி நாம் ஊர் போய்ச் சேருகிறது? எப்படி நம்மவர் முகத்தில் விழிக்கிறது? என்னத்தைச் சொல்லுகிறது?" என்றனர்.

இவர்களில் சிலர் "இவளது கடைவாயிலில் காத்திருந்தாலும் போதும்" என்றனர்; இன்னும் சிலர் "இவளது முகவொளியே நமக்குப் போதுமான காக்ஷி" என்று அவ் வூரிலேயே குடிகொள்வா ராயினர்; அவளது இனிய குரலுக்கும் ஆற்றாத இளைஞராயுற்ற மற்றுஞ் சிலர் மனம் வேறுபட்டு 'இனம் பிரிந்த மானைப்போல' ஏங் கித் திரிந்தனர். இன்னும் சிலர் மனைவி மக்களையும் உரிய பொருள் களையும் அடியோடே மறந்து, சடைமுடி தரித்து, சன்னியாசங் கொண்டு, காடே கதியாய்த் திரிய ஆரம்பித்தனர்.

இவர்களில் வித்துவான்களா யுள்ளவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அதி ரோஷங்கொண்டு, "இவள் என்ன கேவலம் ஒரு பெண்! இப்படி நம்மை யெல்லாம் அவமானம் பண்ணவும் சும்மா விருக்கிறதா? அப்படியல்ல! இவளை எப்படியாவது ஒரு ஏதுங் கெட்ட மூடனுக்கு மணம் புரிவித்து மோடனம் செய்வித்தாலன்றி நமக்கும் ஒரு பெருமை யுண்டாகாது. ஆகையால், அப்படித்தான்

செய்யவேண்டும்" என்று ஆலோசித்து அதற்குத் தக்க அடிமூட னொருவனை ஆராயும்படி அடர்ந்த வனத்திற் சென்றனர்.

## மதியூகி மந்திரி மணமகனைத் தேடிச் தேச சஞ்சாரம் செய்தல்

தன் மகளை நாடிவரும் நாநாதேசத்து மன்னர் மன்னரும், மகா வித்துவான்களும், சாமர்த்தியம் பொருந்திய வாக் ப்ரௌடகரும், வளமை பெற்ற வடபாஷா சமுத்திரத்தை வாரியுண்ட கவிவாண ரும், இளமையுற்ற தனசீலரும் அவளது அகோசரமாகிய அரிய கேள்விகளுக்கெல்லாம் ஆற்றலாகாமல், வாய்திறக்கவும் கூடாமல், வந்த வழியே சொந்தமாக முன்பின் பாராமல் வெட்கித் தலை கவிழ்ந்து வெறிபிடித்தவர்போல் ஒரேவழியா யோட்டம் பிடிக்கின் றனரே! மற்றுஞ் சிலர் வாயிற்படி கடந்து உள்ளே வரவும் மனங் கூசி மாழ்கிப்போயினரே! ஏது! மந்திரி சொல்லுக்கு மதிப்புண டாச்சுதே! சரியாய்ப் போச்சுதே! இனி நாமென்ன செய்கிறது? மன்னர் மன்னரையு மதியாது, மகா வித்துவான்களையு மோடனம் செய்து மமதை பூண்ட நம்மகளுக்கேற்ற புருஷனை நாம் எங்கே காணப்போகிறோம்? ஆதியி லமைச்சனுரைத்ததை அலக்ஷியம் பண்ணினோமே! அப்படிச் செய்ததும் ஆபத்தாய் விளைந்ததே! என்று தன்னைத்தானே நொந்துகொண்டு, மந்திரியை வரவழைத்து, "ஹே மந்திரி! நீ ஆதியில் சொன்னதும் சரியாய்விட்டது. ஆகை யால், இதற்கு ஒரு விதாயமும் நீதான் செய்யவேண்டும்; அதாவது, நீ தக்க பிரயாசை யெடுத்துக்கொண்டு சகல சாஸ்திரப் பிரவீண னை ஒரு சிறுவனை யெப்படியாவது கண்டு பிடித்துக்கொண்டு வரவேண்டும்; அவன் அரச வம்சமானாலும் சரி, அந்தணனே யானாலு மாகுக; அவனுக்கே இந்தப் பெண்ணைக் கொடுத்து, என் இராச்சியத்திற்கும் அவனையே அரசன் ஆக்குவேன்," என்றனன்.

இதைக் கேட்ட மந்திரியும், 'இதென்ன வம்பு நமக்கு வந்தது! நாம் எங்கே போய்த் தேடுகிறது? எவனைப் பிடித்து வருவது?' என்று தனக்குள்ளே தானே நினைத்துக்கொண்டு, அரசனுக்கும், "நல்லது ஐயனே! அப்படியே தேவரீர் ஆக்ஞையின்படியே தேடி வருகின்றேன்" என்றுசொல்லி, வேண்டிய திரவியங்களை யெடுத்துக் கொண்டு, வேற்றரசர் நாடுகளிற் புகுந்து அங்கங்கே தேடி, அநேக

பாலியர்களையும் நாடி, அரசனுக்கேற்ற அவதார புருஷனைக் காணு மல் அலுத்து, மனஞ் சலித்து, மகா வேஷ்டை கொண்டு ஏங்கி, கடைசியாக ஏகசிலா நகரத்தை யடைந்தனன்.

எங்கே பார்த்தாலும் பச்சென்று விளங்கித் தங்க மிழைத்த கபாட வாயில்களையுடைய அநேக வீடுகளின் சிகரங்களெல்லாம் சோபிதமுற்ற இரத்தினக் கலசங்களாய் நிறையவும், கோடீதாரிகள் குலாவிய அப் பட்டணத்தின் அழகையும் அதில் நிறைந்திருக்கும் அகண்ட இராஜவீதிகளின் ஒழுங்கையும் ஆர அமரப் பார்த்துக் கொண்டு வரும்போதே அருக்கனும் மேற்கடலி லாழ்ந்தனன். அழகிய நிலவு புறப்பட்டது. அன்றைத்தினம் பௌர்ணமியா யிருக்கவும் மனமகிழ்ச்சி கொண்ட மந்திரியும் மற்ற வீதிகளையும் பார்க்கும்படி போய்க்கொண்டிருந்தனன்.

---

## ஏகசிலா நகரத்து வேதியனுக்கும், வேந்தன் மகளுக்கும் வாதம்

மந்திரி அங்கே ஓர் அழகிய புருஷனைக் கண்டு, அவனும் தன் எதிரில் உய்யான வனத்தினின்றும் வந்துகொண்டிருக்கும் இராஜ குமாரியைநோக்கி,'வாராய்! வாராய்!' என்று கூப்பிடுகிறதில் ஏதோ ஒரு அர்த்த மிருக்கிறது, என்று ஊகித்து, அப்படியே நின்றனன்.

அப்போது அம் மன்னவன் மகளும் அந்தணனிடத்திற்கு வந்து "ஐயரே! தேவரீர் என்னைக் கூப்பிட்ட காரணமென்ன?" என்னவும், அதற்கு அப் பிராமணனும், "ஹே! பால்யவதி! பூரண நிலவைப் பார்த்தையோ?" என்றனன். அதற்கு அவ் வரசிளங் குமரியும் "ஆகா! ஐயரே! என்ன சொன்னீர்? நீர் பிதா ஸ்தானத்தி லிருப்பவராகியும் அப்படியும் நீர் சொல்லப்போமோ?

முன்பிறப்பும் பெற்றேனு முரியநல் லாசிரியன்
அன்பினிவர் மூவருமே அரியபிதாப் போன்றவரா
லென்பினுருகு மிதயத்தோ மிப்படியு மிப்படியி
லின்பமுனக் களிக்க வென்னைநீ நாடுவதோ.

நான் இப்போது அரசன் காதுகாப்பிலிருப்பதால்,

அரிய தவத்தாலு மாரியனுய்ப் பிறந்தவனே!
பிரிய முனக்களிக்கப் பேதைநீ பிதற்றுவதோ?

கரியநேடு மாலவனைய காவலனு னுன்னுயிரை
யுரியும் படிசெய்வே னுள்ளபடி பாராய்நீ!

என்று சொல்லவும், இதைக் கேட்ட பிராமணனும் காமங் கதுவப் பட்டவனுகையால் தாமசகுணத்தோடும் திமிர்ந்து பார்த்து, 'வாராய்!' வாராய்! என்பதையே பன்னிப்பன்னிப் படிக்கலானுன்.

அதைக் கண்ட அரச கன்னிகையும் அதிக கோபங்கொண்டு, "அறிவென்பது சிறிது மில்லாத அசட்டுப் பிராமணப்பதரே! கொஞ்சமேனும் அச்சமின்றிக் கொச்சை மொழிகளைக் கொட்டும் லச்சை கெட்டவனே!

பழுத்தநல் லறிவின் மிக்க பார்ப்பனக் குலத்தில் வந்தோய்!
அழுத்தமாங் கல்வி தன்னை யடியேற்கு மளித்த நீயுஞ்
செழித்தநின் செல்வங் குன்ற சிறப்போடு வம்ச மாறி
யிழித்துமே யாருங் கூற வென்னையும் நாட லாமோ?

அடாத வார்த்தைகளைச் சொல்லும் நீ படாத பாடு படும்படி அரசனு லுனக்கு ஆக்ஞை புரிவிக்கின்றேன்; என் திராணியைப் பார்"? என்று சொல்லி, அவ்விடம் விட்டகன்று, அந்தப்புரத்துக் கன்னியாமாடம் புகுந்து, அங்கே தனக்கு முன்னமே வந்து காத்துக்கொண்டிருக்கும் அன்னையினிடம் இவ் வநியாயத்தை யெடுத்துச் சொல்லி, அவ் விராஜமகிஷியால் அதை அரசனுக்கு அறிவிக்கவும், அம் மன்னவனும் அடுத்தநாள் உதயத்துக்கெல்லாம் அப் பிராமணனை வரவழைத்து, "ஹே பிராமணோத்தமா! நேற்றிரவு நம் இராஜபுதல்வி இராஜேசுவரியின் ஆலயத்தைச் சூழ்ந்த உய்யான வனத்திற்குச் சென்று திரும்பி வருகையில் 'வாராய்! வாராய்!' என்று வாய் குளறினீராமே; எல்லாந் தெரிந்த நீரும் இப்படிச் செய்யலாமோ?" என்றதட்டிக் கேட்டனன்.

பதட்டுவாய்ப் பார்ப்பானும் வாய் குளற, பயப்பிராந்திகொண்டு, "ஓ! மகப் பிரபு! உம் வார்த்தைக்கு மறு வார்த்தை யுண்டோ? மண்டலாதிபதீ! மகிதலத்தில் மானிடராய்ப் பிறந்தவர் ஐயறிவோடும் பகுத்தறிவுற்று அண்டசராசரங்களிலும் பூரணமாக நிறைந்து காரணகாரியப்பொருளாய் விளங்கும் சாக்ஷாத் பகவானை அவ்வவ் வியற்கைப் பொருளாகவே அமைத்து வர்ணிப்பதுண்டு; அதுபோலவே, யானும் நேற்றைத்தினம் நிலவு புறப்படவும், அது பூரணகலையோடு நிறைந்திருக்கவும் நிலா வர்ணனை செய்துகொண்டிருந்தேன். அதுவே யொழிய விதி வழுவாக வேறொன்றும் செய்தவனல்லவே" என்றனன்.

அப்போது அரசனும், "அப்படியானால் அந்த வர்ணனையை நாம் கேட்கும்படி ஏதோ எடுத்துச்சொல்லும் பார்ப்போம்?" என்னவும், உடனே பிராமணனும் ஒப்பற்ற கவீப்வரனாகையால்:—

இல்லந்தோறு மெழில்கொண்டவ ரெங்குமுள ரவர்த
முள்ளந்தோறு மொளிர்கொண்டெழு முவகைக்கொரு வித்தாய்
பள்ளந்தோறும் பணிலந்தரு முத்தாமென வோங்கித்
தன்னந்தனி யாகவருந் தாரீரய்நீ வாரீரய்." என்றனன்.

இதைக் கேட்ட அரசனும் இயலிசை நாடகத்திறமை வாய்ந்த இவ் வித்துவானுடைய வாசா வல்லபத்திற்கும் மனங் களித்து, அப் பூசுரனைப் பார்த்து, "ஆகிலும், ஐயரே! இந்தத் தடவை யும்மை மன்னித்தோம். இனி யொருதரமும் நீரிப்படிச் செய்யப்போகாது. அதிஜாக்கிரதையாய் நடந்துகொள்ளும்" என்று ஆக்ஞாபித்து அனுப்பிவிட்டனன்.

## வேதியனை மந்திரி சிநேகித்தல்

இது இங்ஙனமிருக்க, இராத்திரியெல்லாம் 'இப் பிராமணன் கெதி என்னவாமோ?' என்று இதுவே நினைவாய் இமை கொட்டாது விழித்துக்கொண்டிருந்து விடிந்ததும் வேந்தனவையுற்றுச் சாந்த மொழிகளால் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு போன பிராமணனைத் தொடர்ந்து சென்று, "ஐயரே! அநேக வந்தனம்! உய்யும்படி நீர் வாழ்நாள் கழிப்பதும் இவ்வூரிற்றானோ? உத்தமரே! உம்முடைய உள்ளங்களிக்கு மில்லமு மெங்கே யுளதோ?" என்று சொல்லிக் கொண்டே இரண்டடி அப் பிராமணன் பின்னே சென்றனன்.

அப் பிராமணனுந் திரும்பிப் பார்த்து, தனக்குள்ளே தானே, 'இதோ! என் பின் யாரோ வொருவன் வருகின்றான்; இவனது ரூபலாவண்யத்தைப் பார்த்தாலோ ஏதோ ஒரு சாதாரணனைப் போலத் தோன்றுகிறது; கண்டத் தொனியும் வாசாரூடியுமோ வாய்ந்த மன்னவர்க்குற்ற மந்திரக்கிழவனாகத் தோற்றுவிக்கின்றனவே! முகத்திலும் சின்னவள் தாண்டவம் சிறந்து விளங்குகின்றது; இவர் யாரோ மகானுபாவனாய்த்தா னிருக்கவேண்டும்,' என்று நினைத்து, உடனே திரும்பி மலர்ந்த முகத்தோடும், "உத்தமருள் சிறந்து நித்தியமாய் விளங்குஞ் சத்தியனே! உமக்கு மெய்த்தவமுற்ற சித்திகளெல்லா மென்மேலும் பெருகவும் மேன்மை யடையக் கடவீர்" என்று ஆசீர்வதித்தனன்.

அப்போது அம் மந்திரியும், "ஐயரே! தங்களைப் பார்க்கவுந் தக்யனுனேன். மங்களகரமாகிய தங்கள் ஆசீர்வாதத்தினுல் மன மகிழ்ந்த யான் எண்ணி வந்த காரியமும் ஈடேறுமென்று சொல்வ தற்கு ஏதேனும் தடை யுண்டோ? அப்படி யான் கோரி வந்ததும் என்னவென்ருல், ஆழ்ந்த கங்கை சூழ்ந்த அவனியிலுள்ள அநேக தேசங்களிலுஞ் சிறந்து அழகிற் பொலிந்து அதிவிநோதமுற்ற அரண் சூழ்ந்த வலுத்த கோட்டையையுடைய மதுமந்த நகரத்து மன்னவனுகிய சுதன்மனுடைய முதல் மந்திரி யான். அவனுடைய அருமைச் செல்வியின் பெருமைகொண்ட மணவினை கருதி அவனி ஐம்பத்தாறு தேசங்களையும் நாடி மணிமுடி புனையு மன்னவர் குலத் தில் மாசற வுதித்துக் காசினியோரெல்லாங் கண்டு மகிழுங் கட்டழ கமைந்து வாசாவல்லவனுய் வரிவில் ஏந்தும் பூபாலனைப், புகழ் பெற்ற அவ் வரசிளங் குமரிக்கேற்ற புண்ணியனை தேடித்தேடி வாடிப்போனேனேயல்லாமல் வகையொன்றுங் கண்டேனில்லை. வளமை பெற்ற இந்த நகரத்தையும் நேற்றுத்தான் அடைந்தேன். நிலவு புறப்பட்டதும் நிலா வொளியில் ஊர் புதுமையைப் பார்க்கும் படி யுலாவிவந்த யான் உத்தமரே! அதற்கும் உவமையாக வும்மைக் கண்டேன். உமக்கும் இராஜகுமாரிக்கு முண்டான சம்பாஷணை யால் 'இதில் ஏதோ ஒரு அதிசய மிருக்கிறது' என்று மிகுந்த அவா வுடனே 'எப்போது இந்திரதிக்குச் சிவந்து காட்டுமோ?' என்று எதிர் பார்த்திருந்த யான் அப்படி அருக்கனுங் குணகடலி லுதித்ததும் அரசன் முன்னே கொண்டுவிடப்பட்ட தங்களுடைய வாக்கு விசே ஷத்தால் நோக்கந் தங்களிடத்திலாகத் தொடர்ந்து வந்தேன்" என்று சொல்லி, மறுபடியும் "அறிவிற் சிறந்து விளங்கும் ஆரியரே! தாங்களும் அநேகருக்குத் தக்க கல்வி புகட்டி யிருக்கலாமே! அவர்க ளில் யாரேனும் அப்படிப்பட்ட கல்வித் திறமை வாய்ந்து, கட்டழ கமைந்து, காவலன் வழியிற் ேறுன்றிப், பாவலர் போற்றும் பண்பிற் சிறந்தாரு முளரோ?" என்றனன்.

அதற்குப் பிராமணனும் குலுங்க நகைத்து, "உங்கள் மன்ன வன் மகளும் அவ்வளவு அகண்ட அறிவினைப் படைத்தவளோ? அழகின் மிகுந்தவளோ?" என்றனன். அதற்கு மந்திரியும், "ஆ! ஐயனே! அதென்ன அப்படிச் சொல்கின்றீர்களே! அவளது ரூபலா வண்யத்திற்கும், அகண்ட அறிவிற்கும், ஆழ்ந்த கல்விக்கும், அடுக் கடுக்காய்ப் பத்திகொண்டு வெகு முடுக்காக வெளிப்படும் விநோத

வார்த்தைகளுக்கும், அநேக தேசத்து மன்னர் மன்னரும் - மண்டல புருஷரும்-எண்டிசா முகங்களிலுங் கீர்த்திகொண்ட இசைவாணரும் மாத்திரமா! இயலிசை நாடகத் துறைகளில் வளமையுற்று-இளமையிலேயே எங்கும் பிரசித்திகொண்டு - இராஜ விருதுக்களெல்லாம் பெற்று - வித்துவான்களெல்லாம் புடைசூழும்படி வெற்றிகொள்ள வந்த கெட்டிக்காரனாகிய அம்பரீஷனே: இப் படியில் எல்லோரும் நகைக்கும்படி ஒப்புவமை யில்லாத அவ் வுத்தமியின் உற்ற கேள்விகளுக்கெல்லாம் உள்ளந் தடுமாறவும் ஒன்றுந் தோன்றாமல் தலை கவிழ்ந்தவனாய்க் கைகளைத் தாழவிட்டு மௌனங்கொண்டு மனம் வெட்கிப்போயின னென்றால், அவளது வித்தியா சாமர்த்தியத்தையும் நம்மா லளவிடற்பாலதோ?" என்றனன்.

பிராமணனும், "அப்படியா!" என்று அயர்ந்து, "நம்மோடு கூடக் கல்வி பயின்று நாடெல்லாங் கீர்த்தி கொண்ட நம்முடைய கூட்டாளிக்கே இவ்வளவு பாடென்றால், நாம் எம்மாத்திரம்!" என்று உள்ளே நிதானித்துக்கொண்டு, தலை யசைத்து, "ஐயா! அப்படியானால், அதற்கு வேண்டிய முயற்சிகள் யாவும் நானே செய்து, இன்றுமுதல் இதுவே வேலையாய் அநேக தேசங்களை யடுத்து அவ் விநோத புருஷனைத் தேடிக்கொண்டு வருவது என்னுடைய கடமை. உத்தரவு தாரும்" என்னவும், உடனே மந்திரியும் அதற்கு "ஆம்" என்றருளி, தாம்பூலத்தோடு தக்க பரிசளித்துத் தான் கோரி வந்த புருஷனை நாடிச் செல்ல விடுத்தனன்.

---

## அநுஷன், மன்னவன் மகட்கு மணாளனைத் தேடிச் செல்லல்

இப்படியாக மந்திரியின் விடை பெற்று எரிகின்ற வெயிலுக்கும், இடி மின்னல் காற்றுக்கும், இவைகளை யடுத்த மழை மாரிகளுக்கும் எவ்வளவும் சளையாது எங்கெங்கேயோ ஓடித் தேடியும் எவனும் அகப்படாமல் இளைத்துக் களைத்துச் சலிப்புற்று, இளந் துளிர்களால் பசுமையுற்று, வளமை கொண்ட ஓர் வடவால விருக்ஷத்தின் கீழ் வந்து தங்கினன்.

## அம்பரீஷன் அனுஷனைச் சந்தித்தல்

அப்போது அவ் வழியாக அநேக அரிய வித்வான்கள் நிறைந்த கூட்டமொன்று, "ஆகா! அவ்வரச கன்னிகைக்கும் நாம் பின்னிடப் போமா! எப்படியாவது அவளை நாம் மோடனம் பண்ணுவதே சரி" என்று சபதமிட்டுக் காடே கதியாய்க் கனவேகமாக வருகிறதைக் கண்டு, 'அதென்ன' என்று பார்க்கும்படி அம் மரத்தின்மேல் ஏறிய போது, அக் கூட்டத்தையும் அதன் முகப்பில் இவனுடைய பாலிய சிநேகனுன அம்பரீஷனையுங் கண்டு, மரத்தினின்று மிறங்கி எதிர் கொண்டு சென்று, தன் துணைவனை யிறுகத் தழுவிக்கொண்டு, "இதென்ன கூட்டம்? இதற்கு நீர் என்ன தலைமைப் பாராட்டம்?" என்றனன்.

அதற்கு அம்பரீஷனும் அரசகுமாரியால் தான் அடைந்த அவமான முழுவதையும் ஆதியோடந்தமாய்ச் சொல்லி, அதற் காகத் தான் அடிமுட்டாள் ஒருவனைத் தேடிச் செல்வதாகவும் சொன்னபோது, அனுஷனும், "அப்படியானல் நானும் உம்மைத் துணை கொண்டேன்; அவளை எப்படியாவது நாமெல்லோரும் சேர்ந்து அவமானப்படுத்துவதே சரி" என்று அவர்களோடும் அதிவேக மாய்ச் சென்றனன்.

## காடே கதியாய்ச் செல்லும் இக் கவிவாணர்முன் கட்டைவெட்டி தோன்றுதல்

இப்படியாக வீடுவாசலையும் பெண்டு பிள்ளைகளையுந் துறந்து, மக்கள் மனுஷரையு மதியாது வெறுப்புற்றுக் காடே கதியாய்ச் செல்லு மிவர்கள் அதிஷ்டமென்பது, அங்கே இவர்கள் போகும் வழியிலே ஒரு பெரிய பூவரசமரத்தின் உயர்ந்த கிளையொன்றிலுட் கார்ந்துகொண்டு அதன் அடியை வெட்டிக்கொண்டிருக்கும் ஒருவ னைக் கண்டு, கட்டழகமைந்து-காமனை வென்று-குபேரன் மகனுகிய நளகூபரனையும்: குமாரக்கடவுளையும்: வாசவன் மகனுகிய ஐயந்தனை யும் வாரி யெறியும் வளமை பெற்று-இளமையுற்று - எழில்கொண் டிருந்தும், இவ்வளவுக்கும் விரோதமாக அவன் செய்யும் விபரீத செய்கைக்கு வெகு ஆச்சரியங்கொண்டு, ஆரவாரித்து,'மகா தேஜஸ் ஸோடுங் கூடிய இவன் இவ்வளவு மௌடீகமாக எதிரிலிருக்கும்

அபாயத்தை யெவ்வளவு மதியாமல் இப்படி வெட்டுகின்றனனே! இன்னம் இரண்டு வெட்டுத்தானே! இப் பட்டி மகன் எமலோகம் சேர்வனே! இவனுக்கென்ன பயித்தியமோ! எப்படி யிருந்தாலும் இவன்வாசாவாக எல்லாவற்றையும் விசாரிப்போம்' என்று அருகிற் சென்றனர்.

அடர்ந்த ஜனங்கள் தொடர்ந்து வெகு ஆரவாரத்துடனே தன்னையடுத்து வரக்கண்டு, மனதில் திகில் கொண்டு, கால் கை தடுமாறவும், விலவித்து வேறொன்றுந் தோன்றாமல், பேய் பிடித்தவன் போல் மௌனமுற்று, வாய் குளறவும் விடவிடத்துப் பயந்து, திடீரென்று கீழே குதித்து ஓடவிருக்கும் இவனைக் கண்ட அம்பரீஷனும் அடுத்து வந்து, "அடே பயலே! ஆரடா! கட்டைவெட்டி? நீ யார்? என்ன பார்க்கிறாய்? ஏன் இப்படி மிரள மிரள விழிக்கிறாய்? இன்னம் இரண்டே வெட்டுத்தானே! இப் பூமியிலும் நீ யிருக்கவா?" என்றனர்.

அதற்கு அம் மூடனும் "பே—பே—ஊ—ஊ—ஏ—ஏ—" என்று உரை தடுமாறவும், விழித்த கண்ணினனாய் வெட்டுந் தொழிலையும் விட்டுவிட்டு, அப்படியே அம் மரக்கிளையில் அசைவற்றிருந்துவிட்டனன்.

அப்போது, அம்பரீஷனைக் காட்டில் கண்டு கலந்துகொண்டு துணையாக வந்த அனுஷனும், அதிர்ந்த குரலோடும், "அடே மூடா? அபாயத்தை யெண்ணாத அறிவிலி! சஷ்! வா; அடி மரத்திற்கு இறங்கி வா! அடிமூடா!" என்று அதட்டிச் சொல்லவும், உடனே அக் கட்டை வெட்டியும் ஒன்றும் பேசாமல் கீழே இறங்கி வந்து அப்படியே நின்றனன்.

அப்போது அவ் வித்வக்கூட்டத்தில் எழுந்த ஆரவாரத்தையும் காகோஷத்தையும் ஒருவாறு அடக்கிய அனுஷனும் அந்த நிரக்ஷர குக்ஷியைப் பார்த்து, ஓரக்ஷரமுந் தெரியாத ஒண்டி மூடா! சண்டிமாடே! உனக்குத் தலைமையானவர் யார்? உனக்குற்ற தொழிலுமிதுதானோ? மற்றும் ஏதாவதுண்டோ? மறைக்காமல் சொல்!' என்று அதட்டிக் கேட்டனர்.

அதற்கு அப் பிதட்டல்கொண்ட பேதையும் பெருமூச்சுவிட்டு, "ஐயே! பே!—பே!!— நா—ஊ—ஊ—மாடு மேய்ப்பே—ன். அதோ—அங்கே—வீடு—கஞ்சி ஆமாம்—வாப்பாங்கோ!—குடிப்

பேன்—துணி குடுத்தா கட்டிக்கிவே—ன். துண்ணக்கூடவும் கொடுப்பாங்கோ—இண்ணைக்கி ஊட்லே—உபூ என்றதுக்குங்கூட ஒண்ணு மில்லே. என்னை அதுக்கு வெட்டிவரச் சொன்னுங்கோ! வந்தே—ன். வெட்னே—ஊம் அசையல்லே. அத்தா.—அம்படித் தா—ன். அப்பாணே, ஆத்தா இல்லே அப்பே—ன் இல்லே ஆமில்லே. இத்தான்—இம்படித்தான்'' என்றனன்.

அதைக் கேட்ட அனுஷனும் அம்பரீஷனைப் பார்த்து "அத்தானே! ஆள் உருவாயிருக்கிற இந்த அடிமுட்டாள்தான் நம்ம அரசகுமாரியை அவமானப்படுத்துவதற்கு அமைந்தவன். ஆளைப் பார்த்தீரா? எவ்வளவு அழகா யிருக்கின்றான்! அடிவயிற்றை யெல்லாம் சல்லடைபோட்டு அரித்தாலும், அரை அக்ஷரம் கூட அகப்படாதுபோலிருக்கிறது. ஆகையால், இவன் சும்மாதான் மௌனம் சாதிக்கவேண்டும். இவனைத் தலைவனாகக்கொண்டு அம் மன்னவன் மகளை நாம் தான் பேதிக்கவேண்டும். ஆகையால், இவன்தான் கழுவுக்கேற்ற கோமுட்டி. இவனால்தான் நம் காரியம் முடியவேண்டும்'' என்று சொல்லி, கட்டை வெட்டியைப் பார்த்து, "அடே! பயலே; கட்டை வெட்டி! அப்படியானால் நல்லது; நாங்கள் உனக்கு நல்ல சோறு போடுகிறோம்; துணி கொடுக்கிறோம்; நாங்கள் சொல்லுகிறபடி கேட்கிறையா? எங்கள் பின்னால் வருகிறையா?'' என்று கேட்டனர்.

இம் மகா மூடனும், "ஊம் சரிதான். சோறு போட்டா—துணி குடுத்தா—ல் ஊ—ம் போதும் அப்படியே வாரேன்'' என்றனன்.

அப்போது அம்பரீஷனும் அனுஷனைப் பார்த்து, "அத்திமரே! இவனைக்கொண்டுதான் இறைவன் மகளின் இறுமாப்பை எப்படியாவது அடக்கவேண்டும். அப்போதல்லவோ நாம் கொண்ட சபதம் நிறைவேறும். இதற்கு நீரென்ன யுக்தி சொல்லுகிறீர்? ஏதோ பார்ப்போம். நீரும் ஒரு பிரபல வித்துவானாச்சுதே'' என்றனன்.

அதற்கு அனுஷனும், "அவ் வரசகுமாரியோ அறிவிற் சிறந்தவள். வரிவிற் கொண்ட வயவேந்தரையும், பரிவிற் புகுந்த பாவாணரையும், உருவிற் சிறந்த உத்தமரையும் சொல்லுக்குச் சொல் நொடிப்பெடுத்து, பல்லக்கில் வந்த உம்மையே பாதசாரியாய் ஓட்டம் பிடிக்கச் செய்வித்தனளே! கவிச்சிங்கங்களெல்லாம் கலகலத்து விடவிடத்து கை கால் உதறல்கொண்டு நடுநடுங்கவும்,மலமலவென்று

கண்ணீருகுத்துக் காடே கதியாய்த் திரிய விடுத்தனளே! அதில் நீரும் ஒருவரா யிருக்கின்றீரே! மற்றவர் பாட்டைச் சொல்லவும் வேண்டுமோ; பார்த்தீரோ அத்தானே? ஆகையால், இவன் அங்கே கொஞ்சங்கூடவாயைத்திறக்கக்கூடாது;முக்கா லுங்கூடாது. சொன்னேன்! சொன்னேன்!! நாம் இவனைச் சாக்ஷி பூதமாகக் கொண்டு காரியத்தைச் சாதிக்கவேண்டும். நாம் இவனுக்குப் பட்டாடையுடுத்திப் - பலவித ஆபரணங்களைப் பூட்டி - அலங்காரம் செய்து- அழகு சுவராகப் பல்லக்கி லெடுப்பித்துக்கொண்டு, பக்கத்துக்குப் பத்துபேர் வித்துவான்களை சுமக்கவும், நமக்கெல்லாம் இவனைத் தலைவனாகக் கொண்டு, நாம் இருவருமே சூாமரை யிரட்டவும், நம்மைச் சேர்ந்த மற்றவர்களெல்லோரும் இவனைக் கற்றவன்போலக் கனம்செய்துவரவும், காவலன் சபைக்குச்சென்று அங்கிருப்பவரெல்லோரும் ஆச்சரியப்படும்படி அரியாசனமொன்றில் இவனையமர்த்தி, அரச கன்னிகையின் அரிய கேள்விகளுக்கெல்லா மிவன் மௌனம் சாதிக்கவும், அறிவிற் சிறந்த நாமே அடுத்த விடைகொடுத்து வெற்றி பெறவேண்டும். இதற்கென்ன சொல்லுகிறீர்?" என்றனர்.

அதற்கு அம்பரிஷனு மற்றுமுள்ளோரும், "ஆம்! ஆம்!! அப்படித்தான் செய்யவேண்டும். அதுதான் உத்தமம்" என்று ஆரவாரித்தனர்.

## கட்டை வெட்டியைக் கவிவாணனுக்கிக் காவலன் சபைக்குக் கொண்டு வருதல்

அப்போது அம்பரிஷனும் அக் காட்டு மிராண்டியைப் பார்த்து, "அடே! காட்டாளி! கவனமாய்க் கேட்கிறாயா? இன்றுமுதல் எங்களிடத்தில் நீ எல்லாச் சுகமும் பெறுவாய்; நீ நாங்கள் சொல்லுகிறபடி கேட்கவேண்டும். உன்னை யார் என்ன கேட்டபோதிலும் ஒன்றுக்கும் பேசாதே! எல்லாம் கண் சாடையும் கை சாடையுமாகத்தானே இருக்கட்டும்; மற்றவைகளுக்கெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுகின்றோம்" என்று சொல்லி, அவனை யதற்குஉடன்படுத்தியிட்டுக்கொண்டு வருகையில், வழியில் வந்துகொண்டிருந்த ஒரு நாவிதனைக்கொண்டு இவனுக்கு இஷ்டம்போல க்ஷவரகல்யாணம் செய்வித்து, ஸ்நானம் ஆட்டி, நல்ல சந்தனமுதலிய பரிமள திரவியங்களைப்பூசிப், பட்டாடையையுடுப்பித்துச்,சரிகைச்சால்வைகளைப்

போர்த்துவித்துச், சகலாபரணாலங்காரமும் செய்வித்துச், சரிகை வேலைகளாலும் சன்னமாக இழைத்த வெண்பட்டினாலும் வேலைப்பாடமைந்து விநோதமுற்று விமானம்போலமைந்த வெள்ளிப் பல்லக்கில் இவனையு மெடுப்பித்துக்கொண்டு, பக்கத்திலே பக்குவமாக க்ஷாமரை போட்டு வரவும், மற்றுமுள்ள வித்துவான்களெல்லாம் தங்கள் தங்கள் விருதுக்களை யெல்லாம் தக்கபடி பிடித்து வரவும், மகா ஆடம்பரத்துடனே வரும் இப் பெரிய கூட்டத்தின் இரைச்சலை வெகு தூரத்திலேயே கேட்டு விரைந்தோடிவந்த மந்திரியும் 'இது ஏதோ ஒரு பெரிய கூட்டம்' என்று நிதானித்து, "எல்லாம் வித்துவான்கள் மயமா யிருக்கிறதே! இதற்குத் தலைவன் எப்படிப்பட்ட வித்துவானோ" என்று நெருங்கிப் பார்க்கையில், இளமைத் தன்மையும் - ஏறிட்ட கெம்பீர பார்வையும் - அங்கங்கே அழகு கொண்டு விசாலித்த அவயவங்களி னமைப்பையு முடையவனாய், அதிக விலைபெற்ற பத்தரை மாற்றுத் தங்கம்போலப் பளபளத்து மின்னலையும் பின்னிடச்செய்பு மேனிகொண்டு மிகு சிறப்புற்ற சாயலோடு விளங்கவும், "இவன் யாரோ மகா புருஷன்! எத்தேயத்தினனோ? எத்திறத்தினனோ? இப் படிவம்போல் எங்கும் நாம் பார்த்ததில்லையே! ஒருவேளை நம் இராஜகுமாரியைத்தான் நாடிச் செல்கின்றனனோ! இவ்வளவு ஆடம்பரத்தோடும் செல்லு மிவனை இன்னானென்றறிய வேண்டும்" என்று அக் கும்பலிற் புகுந்து, பல்லக்கினருகிற் சென்று, அங்கே க்ஷாமரை யிரட்டிவரும் அநுஷனைப் பார்த்து, ஆநந்தங் கொண்டு, "ஐயரே! வந்தனம்! யார் இவர்?" என்றனன்.

உடனே அனுஷனும் "ஆகா! வாரும்! வாரும்!! மகப்பிரபு! நல்ல சமயத்தில் வந்தீர்! நம் அதிஷ்டம் நன்றாய்ப் பலித்தது. நமது அரச குமாரிக்கும் நல்ல வரன் கிடைத்தான். உள்ளே யிருக்கும் ஆசாமியைப் பார்த்தீரா? ஒப்புவமை யில்லாத வுத்தமன்; அறிவெலாந் திரண்ட வுரு; அழகிற் சிறந்த மன்மதன்; ஆரிய புதல்வன்; மாரிபோற் கவிமழை பொழியு மகா சாமர்த்தியன்; தேறிவந்தோம் என்றவர்க்கு நீங்கள் தெளிவுற்றது மிவ்வளவுதானே! இதோ இன்ன மெவ்வளவோ இருக்கிறதே! என்னிதய கலசத்திலென்று எடுத்துக் காட்டி இறுமாந்து ஒருமாந்தரையு மதியாது வருபவன். நமது உத்தமியைத்தான் நாடி வருகின்றான். மகப்பிரபு! நாம் கோரிய காரியமும் தெய்வச்செயலாய்க் கூடிவந்தது" என்றனன்.

உடனே மந்திரியும் "அவ் ஆரியனுக்கு வேண்டிய அநேக உபசாரணைகளைச் செய்து, முகமன் கூறி, இவ் விஷயத்தை முன்னதாக அரசனுக்குத் தெரிவிக்கும்படி அதிவேகமாய்ச் சென்றனன்.

பிறகு, இக் கூட்டம் போகும் வழிகளிலெல்லாம் அங்கங்கே யிருக்கும் அரைக்கால், கால், அரை, முக்கால், வித்துவான்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராய் இக் கூட்டத்தில் வந்து சேரவும்; கொடி பிடிப்பவனும் வித்துவான், குடை பிடிப்பவனும் வித்துவான், தடி பிடிப்பவனும் வித்துவான், சாமரை யிரட்டுவோனும் வித்துவான், தண்டிகை தாங்குவோனும் வித்துவான், அண்டையில் வருவோனும் வித்துவான், இப்படியாக எங்கே பார்த்தாலும் எல்லாம் வித்துவான்கள் மயமாய் விளங்கவும், வெகு வேடிக்கையாகச் சென்றது.

---

## மகா வித்துவான் அரசனைக் காணல்

கண்டவர் மனமுங் கண்ணுங் கொள்ளை கொள்ளும் அக் கல்விக் கடலின் பெருக்கமானது அண்டமளாவிய, மதிற்புறமுடையதாய் ஆழ்ந்த அகழி சூழவும் மைப்படியு மாகூதிமை கொண்ட நீண்ட சிகரங்களாற் சிறந்து விளங்கிய அநேக கூடகோபுரங்களை அங்கங்கே யுடைய மதுமந்தத்தின் எல்லையை யடைந்ததும், அந்நகரத்திலுள்ள மகா ஜனங்களெல்லாம் "ஆ! இதென்ன!" என்று அப்படியே அசந்து, ஆவென்று வாய் திறந்து அண்ணாந்து விண்ணோக்கி, அவ் வித்துவான்கள் வரும் வேடிக்கையை ஆச்சரியமாகத்தானே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அக் கூட்டமும் அதிக ஜாக்கிரதையுடனே அடிமேலடிவைத்து அப் பல்லக்கை அசையவொட்டாதபடி கொண்டு செல்லவும், அதன் மத்தியில் அப் பல்லக்கில் வந்த பாக்கியசாலியும் பார்த்திபனுடைய அரண்மனை வாயிலை யடைந்தனன்.

இதற்குள்ளாக முன்னதாக அரசனுக்கு வந்து அறிக்கை செய்த மந்திரியும் எதிர்கொண்டு வந்து ஏற்ற மரியாதைகளைச் செய்து இறைவனுடைய மகா சபைக்குக் கொண்டுபோயினன். அப்போது அக் கூட்டத்திற் றலைமையாயிருந்த சில வித்துவான்களும் கூடச் சென்றனர்.

இவர்களையெல்லாம் அரசன் தன் மந்திரி பிரதானிகளுடன் எழுந்து உபசரித்து, அவரவர்க்கும் ஏற்ற ஆசன மளித்து, அரிய வித்துவானுக்கும் பொற்பீடமொன்றுதவி அதிலிருக்கச் செய்வித்து, அவனது அங்கமெல்லாம் நிறைந்த பேரழகை அகம் பூரிக்கப் பார்த்து, ஆநந்தங்கொண்டு, "ஆ! இப்படிப்பட்ட புருஷனும் அவனியி லிருக்கிறானே! நம்முடைய மகள் செய்த புண்ணியமே புண்ணியம்! இத்தகைய புருஷனல்லவோ நம் மகளுக்கு இனிய மணாளன்; இதை விட்டுக் கண்டதை யெல்லாங் கணக்காக்கினால், நம் மகளும் அவைகளுக்கு இசைவளோ?" என்று நிதானித்துக்கொண்டு, மந்திரியைப் பார்த்து மௌனமுற்றனன்.

அப்போது மந்திரியும் இவ்வரிய வித்துவானுடைய இரு மருங்கிலும் எழுந்தருளி யிருக்கும் அம்பரீஷன் அநுஷன் இவர்களில் முன்னவனைப் பார்த்து, "இவரது ஜனனத்தால் ஏற்றமுற்றது எந்நாடோ? இவரையும் பிரிந்து வாடி கவலையுற்றவரும் எத்திறத்தினரோ? இவருடைய திருநாமத்தால் பெருமையுற்ற எழுத்துக்களும் எவையோ?" என்றனன்.

அதற்கு அம்பரீஷனும் அரசனைப் பார்த்து, "மன்னர் மன்னனே! மண்டலாதிபதீ! எண்டிசையும் பிரக்யாதி கொண்ட இவரது ஜனன நாட்டை ஐந்தரநாடு என்பர்; ஆரியகுலத்து ஐயன்; ஐந்தரநாதன் என்னுந் திருநாம முடையார். அநேக அரிய நுட்ப சாஸ்திரங்களை யெல்லாம் ஐயந்திரிபற வுணர்ந்திருப்பவராகையால், அவசப்தமாய்ப் பேசும் ஆர்கலிசூழ மவனியில் உற்றோர்க்கும் அகப்படாதவராய், நவவியாகரண பண்டிதனாகிய தான் வாய் திறப்பதும் அரிது. அப்படி எப்போதாவது நேரிட்டாலும் அதன் அர்த்த பாவத்தை நாம் சாதாரணமாக அறிந்துகொள்வது அதிலும் அரிது. இதுவே இவரது வரலாறு" என்று எடுத்துச் சொல்லித் தானும் மௌனமுற்றனன்.

---

## அநுஷன் அம்பரீஷானுடைய வித்யா சாமர்த்தியம்

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், அவ் வித்வ சபையிலே அங்கங்கே அதி விசித்திரமாகச் சித்திரித்திருக்கும் அநேக ரூபங்களை யெல்லாம் ஆச்சரியமாக அதுவே வேலையாய்க்

கவனித்துக்கொண்டிருந்து அவைகளி லொருபக்கத்திற் ரூேன்றிய சித்திரம் பத்துத் தலைகளும் இருபது கரங்களும் பார்க்கப் பயங்கரமாய் எழுதியிருக்கக் கண்டு, "இவன்தானு ராபணன்?" என்றனன் மகா வித்துவான்.

அதைக் கேட்ட அரசனும் திடுக்கிட்டு மந்திரியைப் பார்க்கவும், அவனும் அனுஷனைப் பார்த்து, "ஏ பிராமணோத்தமரே? இதென்ன! உங்கள் தலைவர் இவ்வளவு சுத்தமாய் வார்த்தை சொல்லுகின்றனரே!" என்றனன்.

அதற்கு அம்பரீஷனும் "அது அப்படியல்ல. அதன் அர்த்த பாவத்தை நான் சொல்லுகின்றேன் கேளுங்கள்!" என்று புலஸ்தியப் பிரமாவின்பௌத்திரர்களாகிய இராவண கும்பகர்ண விபீஷணுதிகளின் பின் இருவருடைய பெயர்களிலும் பகார சப்தமானது தொனித்துக்கொண்டே யிருக்கவும், இராக்ஷசகுல சிரேஷ்டனுய் எல்லா வுலகங்களும் அடிபணியும் பிரக்கியாதி கொண்ட இராவணனுடைய பெய்ரில் மாத்திரம் இப் பகார சப்தம் இல்லாமற் போனதேன்? என்னும் சமஸ்யை தோன்ற,

ஸ: "கும்பகர்ணே பகாரோஸ்தி பகாரோஸ்தி விபீஷணே |
ராக்ஷஸாநாம் குலசிரேஷ்டோ ராபணோ நசராவண: ||

தம்பிவிபீ ஷணற்குந் தப்பாம லுற்றதுகாண்!
அன்பினவன் முன்ஞேற்கு மப்படியே பாவிருக்க
செம்போன் மணிமுடியான் ஜெயவீர ராவணற்கு
மங்கோன் றிலதாயி ஞச்சரிய மிதுவன்ரே?

"கும்பகர்ணனில் பகார சப்தம் இருக்கின்றதே! விபீஷணனிலும் அது அப்படியே விமரிசையுற்றது! வெற்றிகொண்டு மூவுலகத்திலும் பிரக்கியாதி பெற்றவனுக்கு இராபணன் என்றிருக்கவேண்டியது இராவணனென்று இருக்கிறதே இது என்ன ஆச்சரியம்!" என்று சொல்லுகிருர். இராவணனென்று சொல்வது கிரமத்திற்கு வேறுபட்டிருப்பதால், இராபணனென்றே சொல்லவேண்டு மென்பது எங்கள் தலைவருடைய கருத்து" என்று வெகு சாதுரியமாக எடுத்துரைத்தனன்.

அதைக் கேட்ட அரசனும் அவனுடைய சபையாரும் ஆச்சரியங்கொண்டு "இவரது மனோபாவமே பாவம்" என்று தலையை யசைத்துப் புகழ்ந்துகொண்டாடினர்.

அவர்களில் சிலர் "நமதரசன் மகளும் இம் மகாநுபாவனைத் தனக்கேற்ற மணவாளனாகக் கொள்ளப் பூர்வத்தில் என்ன தவம் செய்தனளோ?" என்றதிசயித்தனர்.

இதற்குள்ளாக இவ் வதிசயத்தைச் சேடியரா லுணர்ந்த இறைவன் மகளும், இதயம் பூரித்துத் தன்னிஷ்ட தேவதையைத் தியானித்துத், தன் இஷ்டம் பலித்ததென்று சந்தோஷ முற்றனள்.

இதற்குள்ளாக இவைகளை யெல்லாங் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருந்த பார்க்கவனும், மேருவுக்கு வடபாகத்துற்று அங்குற்றார்க்கும் இவ்வதிசயத்தைச் சொல்லி, "உங்களூரிலு மிப்படிப்பட்ட விசேஷ முண்டோ?" என்று கேட்கப்போனவன்போல் குடகடலிலாழ்ந்தனன். மாலைப்பொழுதுங் குறுகியது. மன்னவனு மற்றவர்க்கெல்லாம் விடை யளித்து, மகா வித்துவானுக்குந் தக்க விடுதி யொன்றமைத் தனுப்பிவிட்டுத் தானும் அந்தப்புரம் சென்றனன்.

---

## காலைத் தோற்றம்—சுதன்மன் சபை வித்தியா விசேஷம்

'நேற்றையத்தினமே அவ்வளவு அதிசயங் கண்டோமே; இன்றைக்கும் என்ன நடக்கப்போகின்றனவோ அவைகளையும் பார்ப்போம்' என்று அதிவேகமாக ஓடிவந்தவனைப்போல ஆதவனும் உதய கிரியில் ஒளிவிட்டுக் கதிர் பரப்பினன். அதற்கு முன்னமே கோழியுங் கூவிற்று. பக்ஷிஜாதிகளெல்லாம் பலவிதமான தொனியெடுத்து அங்கங்கே பறக்க ஆரம்பித்தன. மரங்களுஞ் செடிகளு மற்றக் கொடி வகைகளும் பார்வைக்குப் பச்சென்று விளங்கி மகரந்தத் தேனோடுங் கூடிய மது துளிக்கும் புஷ்பராசிகளை மலரச் செய்விக்கவும், அவைகளில் பலவித வர்னங்களை யுடையனவாய்க் கண்ணுக்கினிய காக்ஷியளித்து மாக்ஷிமைகொண்ட பிரமபீஜ ரீங்காரத்தால் பொம்மென்று அலரும் பொன்வண்டுகளும் கறுவண்டுகளும், அங்கங்கே குபு குபுவென்று குமிழியிட்டுப் பாயும் நறிய தேனை யுண்டு களிக்கவும், நல்ல நல்ல பாரிய மரங்களெல்லாம் நாநா பக்கங்களிலும் பரந்தகன்று பச்சென்று விளங்கித் தென்றற் காற்றினால் தேகத்திற்கு ஓர்வித இன்பம் விளைவித்தன. இடமகன்று விசாலித்து இரவிமதியை யெல்லையாகக் கொண்ட ஆகாயமோ இருண்டு படர்ந்த மேகத்தால் மறைவு பட்டது. பசுக்களும் எருமைகளும் நிறைநிறையாகப் பந்திகொண்டு செல்வது பார்ப்பவர் கண்ணுக்கு

மங்களகரமா யிருந்தது. அவ்வளவு பெருமைகொண்ட அன்று காலையில் உதயத்துக்கு முன்னே எழுந்து தங்கள் காலைக்கடன்களை முடித்துவந்த உத்தமசீடர்களாகிய அநுஷனும் அம்பரீஷனும் அப்பொழுதுதான் அரிதுயில் நீங்கி யெழுந்த அரிய வித்வானுக்கும் வந்தனை செய்தனர்.

அதற்கு அம் மகா பண்டிதனும் "ஆ! என்ன!!" என்றனன். அதற்கு அம்பரீஷனும் "ஐயனே! போதும் போதும். அந்தமட்டில் வாயை மூடு! நேற்றையத்தினமே நீ என்னமோ சபையில் வாய் திறந்ததும் போதும்; நாங்கள் பட்ட பாடும் போதும். நீ இனிமேல் யாதொன்றுக்கும் வாயைத் திறக்கவே வேண்டாம். ஆனால், ஒன்று; இராஜ புதல்வியும் உன்னுடைய தரிசனார்த்தமாக வுன்னதங் கொண்ட அச் சபைக்கும் வந்து உனக்கும் வந்தனை செய்வள். அப்போது மாத்திரம் அவளுக்கு ஆசீர்வாதமாக, "உனக்கு மூப் பிணியும் உண்டாவதாக" என்று சொல்லு! மறந்து போகாதே! அவசியம் சொல்லு! மற்றப்படி வேறொன்றுக்கும் வாய் திறவாதே!" என்றனன். அதற்கு அம் மகாநுபாவனும், "ஆ மா—எனக்கு—ஊம்—தெரியும்" என்றனன்.

இதற்குள்ளாகப் பொழுதும் ஏறியது; நாழிகையும் பதினைந்தாயது. அப்போது போஜனமெல்லா முடியவும், இராஜ துறந்தரர்கள் ஓடோடியும் வந்து, அவ் வித்வானைக் கண்டு வணங்கி, "ஐயனே! ஆச்சுது நாழிகை; அரசன் தங்கள் வரவுக்கு எதிர்பார்த்திருக்கின்றனர்" என்றனர்.

உடனே வித்துவான்களெல்லோரும் ஒன்றாகக் கூடித் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குரிய அங்கிபாகைமுதலிய அங்கங்களையெல்லாந் தரித்துக்கொண்டு அங்கங்கே நிற்கவும், அப்போது அம்பரீஷனும் அநுஷனும் அவ்வழகிய நிரக்ஷரகுக்ஷியை அநேகவித பட்டாடைகளாலும் பொன்னாபரணங்களாலும் வெகு மூடக்கா யலங்கரித்து, விலையுயர்ந்த வெண்பட்டுச் சால்வை போர்த்து, திண்டு திமாசிட்டு, கெண்டைச் சரிகைகளினாலே வேலைத்திறமை கொண்ட குச்சுகளெல்லாம் சரம்சரமாய்த் தொங்கவும், பார்வைகொண்ட பச்சைப் பல்லக்கிலே ஏற்றுவித்து, எதிரிலே விநோத கிலுட்டுகளிட்டு பட்டுக் கயிற்றினால் பந்திக்கப்பட்டுள்ள பலவித நூல்களையெல்லாம் அடுக்கடுக்கா யமைத்து அழகுபெறச் செய்வித்து, விதரணையுற்ற வித்துவான்களிற் சிலர் பல்லக்கைச் சுமந்து வரவும், மற்றுஞ் சிலர்

சாமரை போடவும், இன்னும் சிலர் இருமருங்குஞ் சூழ்ந்து எச்சரித்து வரவும், வேறு சில குட்டி வித்துவான்களெல்லாம் ஓட்டமும் பாட்டமுமாய் வேண்டிய உபசரணைகளைச் செய்துகொண்டு வேடிக்கையாய் வரவும், இவ்வளவு ஆடம்பரத்தோடும் அவ் வித்துவானை அரசனுடைய அலங்கார சபைக்குக் கொண்டுவந்தனர்.

## வித்துவானு(கட்டை வெட்டி)க்கும், காவலன் மகளுக்கும் வாதம்

அதற்கு முன்னமே அரச சின்னங்களோடும் இராஜாக்கினையால் வித்துவானுடைய வரவுக்கு எதிர்பார்த்திருந்த இராஜகார்பாரிகளாகிய, மந்திரி யென்ன! பிரதானி யென்ன! அரிகார் என்ன! கார்பாரியென்ன! இவர்களெல்லோரும் இவ்வித்துவான் வந்திறங்கியதும் வெகு மரியாதை செய்து வேந்தன் சமுகத்திற்குக் கொண்டு போயினர்.

அப்போது அரசனும் அவ் வித்துவானுக்கும் அழகிய பொற் பீடம் ஒன்றுதவி, அடுத்துநின்ற மற்றவர்களுக்கெல்லாம் அங்கங்கே ஆசனங்க ளளித்து, அநுஷனையும் அம்பரீஷனையும் வித்துவானுடைய இருமருங்கிலுமே அமரச்செய்வித்து அக மகிழ்ந்தனன்.

அப்போது இராஜகுமாரியும் அரசனுக்கினையால் சர்வாபரண பூஷிதையாய்ச் சரிகைப்பட்டு உடுத்தி, சோதிசொரூபமாகத்தானே காலிலிட்ட மோதிர வகைகளெல்லாம் கலீர்கலீரென்று சப்திக்கவும், பணைத்த மத்தகமும் இணைத்த தந்தங்களுமுடைய இளமையுற்ற பெண்யானையி னடையினளாய் எழில்கொண்ட இடை துவளவே, இருபுறமும் தாதியர்கள் தாங்கி வரும்படி இராஜ சபைக்கு வந்து திரைப்புறத்தி லிருந்துகொண்டு, இமையாநாட்டமாய்த் தன்னை வாதில் வெல்லும்படி தாஷ்டீகமாய் எதிரி லெழுந்தருளியிருக்கும் வித்துவசிரோன்மணிக்கும் வேண்டிய மரியாதையாக அஞ்சலி செய்தனள்.

அதைக் கண்ட அம்பரீஷனும் "அய்யனே! பாராக்கு! அரசகுமாரியும் இதோ உனக்கு அஞ்சலி செய்கின்றதைப் பாரும்" என்றனன்.

அப்போது அநேக விநோத காக்ஷிகளால் தன் மனம் எங்கேயோ அழுந்திப்போகவும் ஆனந்தத்தி லாழ்ந்திருந்த அடிக்கட்டையை வெட்டும் அம் மகா வித்துவானும் அவசரத்தினுல் அனுஷனும் அம்பரீஷனும் தனக்குச் சொல்லிவைத்த ஆசீர்வாதத்தை அறைகுறையாகக் கியாபகத்திற்குக் கொண்டுவந்து அவ் விராஜகுமாரிக்கும் வாழ்த்துதலாக "உனக்கு முப்பிணியு முண்டாவதாக!" என்று கூறினன்.

அரசனும் அங்கிருந்த மற்றெல்லோரும் "ஆ! இதென்ன!" என்று ஆச்சரியப்படவும், அகண்ட கல்விக்கு உரியவளாகிய அரசகுமாரியும் ஒன்றுந் தோன்றுதவளாய்த் திகைத்து, அநுஷனைப் பார்த்து, "ஐயரே! இதற்கு உங்கள் ஐயன் கொண்ட கருத்து என்னவோ?" என்றனள்.

அதற்கு அவ் ஆரியபூபதியும் அடங்கா மகிழ்ச்சியுடனே, "எல்லை காண்பதற்கரிய கல்விக்கடலை இதயகலசத்து அடக்கி, எதிரிட்டவரையெல்லாம் உதறல்கொண்டு ஓடச் செய்வித்து, உள்ள மகிழும் ஹே! உத்தமீ! அரசகுலத்தின் அணிவிளக்கே! என் அம்மணீ! இவரது மனோபாவத்தையும் எண்ணத்தையும் இன்னதென்று அறிவதற்கு எவர்க்குத்தான் திறம்? இவரோடு அநுதினமும் பழகிப் பழகிப் பண்பட்டுள்ள எனக்கே யல்லாமல் இதராளுக்கு எவ்வளவும் சாத்தியமாமோ? ஆகையால், அதன் விபரத்தை நானே சொல்லுகின்றேன் கேளும் அம்மா! சுந்தரி!"

ரு. ஆஸநே பாலபீடாச சயநே பதிபீடதஃ
போஜநே பந்து பீடாச த்ரிபீடாஸ்து ஸதாதவ ||

அரியவணை யமரும் போதுன் னருஞ்சுதர் வாது கோள்வர்;
சரியணை தன்னி லுன்றன் தலைவனுன் மேலிவுண் டாகும்;
வரிமவணை யமரு முன்றன் வலிதரு முறவின் மாரைச்
சரிவர நடாத்து மந்தச் சமர்த்தது முனக்குண் டாமே.

[ஆச]னையில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது மக்கட் பீடையும், [அ]தாவது, உன் பிள்ளைகளெல்லாம் உன்மேல் விழுந்து விளையாடி அலுக்கச்செய்யவும், அப்படியென்றால் உனக்கு அநேக புத்திராளுண்டாகவும்; பஞ்சணையிற் படுத்து உறங்கும்போது பத்தாவுக்கு [உ]னக்கும் பலவித இன்பசுகங்களாலே பாதையும், அதாவது, இடைவிடாத போக நுகர்ச்சியும், அப்படியென்றால், தீர்க்க சுமங்கலியமும் உண்டாகவும்; வரிசை கொண்ட பந்தி பந்தியாய்ப் போஜனத்திற்கு

எழுந்தருளும் பந்துக்கள் பிடையும், அதாவது, பந்துக்களோடு போஜனஞ் செய்வது மகா பாக்கியமாகையால் அதற்காகச் சரிப் படுத்திக்கொண்டு போகும் சாமர்த்தியமும், அதாவது அவர்களுக்கு உண்டாகும் பிணக்கை நீக்கிச் சரிப்படுத்திக்கொண்டுபோகும் வித ரணையும், அப்படியென்றால், உனக்கு ஏராளமான சம்பத்துண்டாக வும் உன் பந்துக்கள் உன்னை எப்போதும் சூழ்ந்துகொண்டிருக்கும் பாக்கியமு முண்டாகவும் என்பதாம். இதனாலேயே ஹே! புண் ணியவதி! நீ புத்திரவதியாய்ப், பத்தாவை யிணைபிரியாத பாக்கிய வதியாய்ப், பந்துமித்ராளோடும் சகல சௌபாக்கிய சம்பன்னளாய்ச் சதா வாழ்ந்துகொண்டிருப்பாய்" என்று எங்கள் ஐயன் கொண்ட கருத்தாக்கும்; இப்படிப்பட்ட ஆழ்ந்த மனதை யறிவதற்கு யாவரால் கூடும் அம்மணி!" என்று சொல்லி அப்படியே மௌனமுற்றனன்.

அப்போது அந்த அதிரூபவதியும், அம்பரீஷனுடைய அதி சாதுரிய வாசாருடிக்கும் - அவனுடைய தலைவனாக வந்த அடிக் கட்டை வெட்டும் அதிசய வித்துவானுடைய கம்பீர பாவனா விசே ஷார்த்தத்தோடுங் கூடிய ஆசீர்வாதத்திற்கும் ஆச்சரியங்கொண்டு, ஆநந்த பாஷ்பத்தினால் தன்னை மறந்தவளாய்த் தலை யசைத்து, 'ஆகா! இப்படிப்பட்ட மனோகரனை நான் என்னென்று புகழ்வேன்? எப்படி வர்ணிப்பேன்? ஒப்பற்ற இவனது மனோபாவத்திற்கும் உவமை கண்டிலனே!' என்று சிந்தித்து, 'இவனே எனக்குப் பர்த்தா வாக எல்லாம் வல்ல கடவுளே! எங்கு நிறைந்த பொருளே! என் இஷ்ட தெய்வமே! கூட்டிவைக்கவேண்டுங் குலதெய்வமே!' என்று பலவிதமாகத் தியானித்துச் சைகைமாத்திரையாகத்தானே வித்து வானைக் கேட்கக்கூடுங் கேள்வியாக யொரு விரலைச் சுட்டிக் காட் டினள்.

உடனே, அதுவரைக்கும் பேசாதிருந்த மௌன வித்துவானும் எதையோ நினைத்துக்கொண்டு இரண்டு விரலைக் காட்டினன். அதற்கு இராஜகுமாரியும் அனுஷனைப் பார்த்து, "இதற்கு உங்கள் தலைவன் கொண்ட கருத்தென்ன?" என்றனள்.

அப்போதவனும் "அம்மணி! நீ கேட்ட கேள்வியும் நித்திய னாகிய நிமலனைக் குறித்ததாய்க் கடவுள் ஒன்றே என்றனை; அதற்கு எங்கள் வித்வ பூஷணமும், நல்லது, அப்படியானால் அக் கடவுளும் சகல நிஷ்களமாகவும், சராசரமாகவும், இகபரமாகவும், சுகதுக்கங்க ளாகவும் இரண்டுபட்டிருக்க எப்படி நீ யொன்றே யென்று சொல்லு

வாய்? அது இரண்டுதான் இரண்டுதான் என்று எங்கள் தலைவன் சாதிக்கின்றனரோ" என்றெடுத்துச் சொல்லி பரபக்ஷ கண்டனமும் சுயபக்ஷ ஸ்தாபனமும் செய்தனன்.

அதைக் கேட்ட இராஜகுமாரியும் அதற்குமேல் ஒன்றுந் தோன்றாதவளாய் உடனே தன் கையிலிருந்த புஷ்பமாலிகையைத் தன் தலைமைச் சேடியின் மூலமாய் அவ் வித்துவான் கழுத்தி லணிவித்து வணங்கி நின்றனள்.

சகல மங்கள வாத்தியங்களு முழங்கின. சாதுக்களும் பெரியோர்களும் சகல கலாவல்லவனுக்கும் இவனுக்கும் சாம்பிராச்சிய முண்டாகவும், 'அகிலலோக பூஜிதையும் இவனே அடையக்கடவன்' என்று ஆசீர்வதித்தனர். அரசனும் ஆநந்தவாரியில் மூழ்கினன். அப்போது இராஜாக்கினையால் திருமண முடிப்பதற்கு வேண்டிய யாவும் ஆயத்தமாகவும் இதற்காகவே ஏற்படுத்திய புதிய கலியாண மண்டபத்திலே புரோகித பௌராணிகர்முதலிய யாவரும் வந்து நிறையவும் மணமகனைக் கொண்டுவந்தனர்.

## வித்யாரத்தினத்திற்கும் வித்வானு (கட்டை வெட்டி)க்கும் மணம் செய்வித்தல்

தங்கக் கட்டுகள் பூண்டு, செதுக்கு வேலைகள் கொண்டு, அங்கங்கே மணிக ளிழைக்கப்பட்டு, அடுத்தடுத்துப் பார்க்குந்தோறும் ஆநந்தத்தை விளைவிக்கும் அழகிய கலியாண மணையிலே உட்கார வைத்து, நல்ல சுபமுகூர்த்தத்திலே சடங்குகளுக்கும் ஆரம்பித்து, இதற்குள்ளாக மணமகளும் அங்கே வந்து சேரவும் வதூவரா ளிருவருக்கும் வேண்டிய நலங்குகள்முதலிய சடங்குகள் யாவும் குறைவற முடித்தனர்.

அப்போது மகா வித்துவானும் யாது நினைத்தோ, தன்னுயிர்த் துணையாம் இராஜபுதல்வியை என்னென்று மதித்தோ, அல்லது தான் இதுவரைக்கு மேய்த்துவந்த ஆடுமாடுகளி லொன்றாகக் கொண்டோ, அப் பெரிய மகா சபையிலே ஆசாரியரும் அநேக பிராமணப் பெரியோர்களும் ஆசீர்வதிக்கப்பெற்ற அழகிய திருமாங்கலியத்தை எடுத்துத் தன் கையிற் கொடுத்து, "வித்வசிரோன் மணீ! வேளையும் ஆச்சுது; ஊம் ஆகட்டும்" என்னவும், உடனே எழுந்து மன்னவன் மகளை நாடி அடங்கா மகிழ்ச்சியுடனே ஆடு

மாடுகளைப் பிணிப்பதுபோல அவளுடைய கழுத்திலே அஸ்தத்தி லிருந்த மாங்கலிய சூத்திரத்தினால் அழுந்தக் கட்டினன்.

காஷ்மீரதேசத்துக் காசூியாகிய பதுமினி ஜாதிப் பெண்களை யொத்துப் பத்தும் பதினைந்து மிராத்தல் இடைகொண்டு இடை விட்டு மின்னு மின்னலை யொத்து விளங்கி, இடையானது பூங்கொடி போலத் துவளவும், மகா மெதுவுற்ற மேனியளாகிய அவ் விராஜ குமாரியும் அது சகிக்கலாற்ருது 'தணலிலிற்ற மெழுகைப்போல'த் தவித்து, மோப்பமலரும் அனிச்சமலர்போலும் குழைந்து வாடி, நெட்டுயிர்ப் பெய்தினள்.

அங்குற்ற ரனைவரும் இதைக் கண்டு ஆச்சரியங்கொண்டு, "அதிசவுந்தரியமுற்ற இம் மகாவித்துவானும் நாகரீக மென்பதை யெவ்வளவு மறியார்போலும்" என்றனர்.

அப்போது அம்பரீஷனும் "ஆ! ஆ!! அப்படிச் சொல்லப் போகாது; அகண்ட கல்விக்கடல்; அருள் பழுத்த பழம்; அதிநுட்ப விஷயங்களை யெல்லாம் அப்படியப்படியே எடுத்துக்காட்டி அவைக ளின் சாராம்ஸங்களை யெல்லாம் அதி சுலபமாகத்தானே தெளியச் செய்விக்கும் விவேக புருஷன். இப்படிப்பட்ட இவருக்குத் தெரி யாத நாகரீகமும் நடையுடை பாவனையும் நமக்கென்ன தெரியும்? ஆகையால், அறிவிற் சிறந்த இராஜகுமாரிக்கும் தன்னகத்திலுற்ற அன்பினளவை இவ்வளவென் றெடுத்துக் காட்டும்படியே இப்படிச் செய்தனராக்கும்" என்றனன்.

அதற்கு அங்கிருந்த எல்லோரும் "ஆம்! ஆம்!! இவர் சொல் வது சரிதான்! சரிதான்" என்றனர். மற்றச் சடங்குகளெல்லாம் முற்றும் நிறைவேறவும், இடையில் நடந்த வித்வ பூஷணத்தின் மற்ற ஆபாசங்களை யெல்லாம் அம்பரீஷனும் அனுஷனும் தங்க ளுடைய அரிய வித்தியா சாமர்த்தியத்தினால் விமரிசையாக்கி வேந் தன் மகளுக்கும் விவாக முடிப்பித்தனர்.

## மாலை வர்ணனை

அதற்குப் பிறகு வெகுநேரமாகவும் அருக்கனு மேற்கடலி லாழுஞ் சமயமாயிற்று. அப்போது மாலைப்பொழுதுஞ் சமீபித் தது. அங்கங்கே மல்லிகை முல்லை முதலிய மலர்களெல்லா மலர்ச்

தன; தாழையும் மந்தகாசஞ் செய்தது; அவைகளிலெல்லாம் அறு காற்பறவைகள் ரீங்கரித்து ஆலாபிப்பதும், "மாலையாகிய மங்கையு மிதோ வருகின்ருள்; அவளைத் தொடர்ந்து மாரனுகிய மனோரத னும் கூரது கொண்ட வேல்போலுங் கண்ணினர்க்கு இலக்காகிய காளையர் மார்பைப் பிளக்கும்படி இதோ இருளாகிய யானைப்படை முன்னே செல்லவும் இளந்தென்றலாகிய தேரேறி, இடை யிடையே கணுக்களையுடைய இனிய கரும்புவிற் பிடித்து, சுரும்பு நாணே யிட்டு, புஷ்ப பாணங்களைப் பூட்டி, பொருந்திய ஐந்தெழுத்தையும் மந்திரமாகப் புகட்டி, பூரண சந்திரனையே பூங்குடையாகக்கொண்டு புறப்பட்டான், புறப்பட்டான்" என்று சங்கம் பூரிப்பதுபோலு மிருந்தது.

## பள்ளியறைச் சிறப்பு

அப்போது வாதில் வெற்றிகொண்ட வித்வானுகிய மணமகனுக் கென்று ஏற்படுத்திய சையாக்கிரகமானது சகலவித மங்களகரத் தோடுங் கூடியதாய்ச் சரிகை தாப்தாக்களாலும், பலவித ரத்தினங்க ளிழைத்து முத்துகிரைகொண்ட பட்டு தாப்தாக்களாலும், கொத் துக்கொத்தாய்த் தொங்கும் கித்திலக் கோர்வைகளாலும் அழகுற் றுத் தந்தப்பிடி பூண்டு தங்கக்கட்டுகளினுல் தளதளப்புற்று, எங்கே பார்த்தாலும் ஜிலுஜிலுவென்று சொலிக்கவும், நவரத்தினுலங்கார சோபிதமாகிய சுவர்ணமயக் கட்டிலினுமேல சுந்தரங்கொண்டு, அந்த ரத்தமரும் ஆசை கொள்ளும்படி அவ்வளவு விமரிசையா யமைக் கப்பட்டது.

அதற்கு முன்னமே அரசன் கொலு நீங்கி ஆயத்தமா யிருந்த ஆரிய வித்துவானும் அங்கே வர ஆரம்பித்தனன். பணிப்பெண்க ளெல்லாம் அங்கங்கே யணியணியாக நின்றுகொண்டு அவ்வாரிய பூபதிக்கும் எதிர்பார்த்திருந்தனர். கலியாணச் சடங்கினுல் கனம் பூண்டு மனங்கொண்ட பூரிப்புடனே 'இனந்தேடு மானைப்போல' எங் குந் தன் பார்வையைச் செலுத்தி அங்கே பள்ளியறைக்கு வந்த பண்ணவனும் அதிலமைந்திருக்கும் பலவித சித்திரங்களையும்-பாங் கமைந்த பதுமைகளையும்-பக்கத்திலுள்ள நிலைக்கண்ணுடிகளையும் பார்த்துக்கொண்டே யிருந்தவன்: அங்குற்ற இனிய கீதங்களுக்கும்- இன்னதன்மையவென் றெடுத்துரைப்பதற்கரிய விநோத காக்ஷிக

ளுக்கும் - நாற்புறமும் கமழும் நறிய வாசனைகளுக்கும் மெல்ல மெல்ல இடங் கொடுத்து மெலிந்த இந்திரியங்களுடனே மெய்ம்மறந் தவனாய் அப்படியே பஞ்சணையிற் படுத்து அயர்ந்து, மைப்படியுங் கண்ணுளையும் மறந்து, விற்பிடித்து வந்த வித்தகனையும் (மன்மதனை யும்) வென்னிட்டோடச் செய்வித்துத் தன்னிஷ்டம்போலத் தாராளமாய்த் தூங்கிவிட்டனன். அரவங்களெல்லாம் அடங்கிய சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு வந்த தராதிபன் மகளும் அழகிய தன் பர்த்தா அயர்ந்து நித்திரை செய்கிறதையும், அவன் காலொரு பக்கமும் தலையொரு பக்கமுமாய் விகார கதியாய்க் கைகளை விரித்து, திறந்த வாயும், உறத்த மூச்சுமாய்க் குறட்டைவிட்டுத் தன் தேகம் தனக்குத் தெரியாதபடி படுத்துக்கொண்டு உறங்குவதைக் கண்டு கொஞ்சநேரம் அவன் முகத்தை பார்த்துச் சற்று நிதானித்துத் தனக்குள்தானே யோசிக்கலானாள்:—

## வித்வானுடைய அலங்கோலம்

மேனியோ பத்தரைமாற்றுத் தங்கந்தான். முன்னே விளங்கு முகமோ தற்காலத்திலே மூதேவி குடிகொண்டதானாலும், முழு மதியம்போல விளங்குகின்றதே! புஜங்க ளிரண்டுமோ பூரித்தெழுந்து போருக்கு நின்ற விந்தகிரியை வெற்றிகொண்டதாய் விளங்குகின் றனவே! அகண்ட மார்போ, அறவிந்தத்துறை மகளின் ஆஸ்தானம் போலு மிருக்கின்றதே! பால்போன்ற முகத்தழகும் - பரந்தகன்ற மார்பழகும் - பாதங்களின் சிவப்பும் அமையப்பெற்ற ஆஜாநுபாகு வாகிய இம் மகா புருஷனும் ஆரண்ய வாசியாகிய விபாண்டகரின் விரிந்த தபோமகிமையால் வந்த வேதோத்தமனாகிய கலைக்கோட்டு முனியைப்போல சொகுசென்பதைச் சொப்பனத்திலு மறியார் போலும்; இல்லாவிட்டால் இப்படிப்பட்ட அழகிய ரூபவதியு மருகி லிருக்கவும், விநோத வாத்தியங்கள் எல்லா முழங்கி யடங்கவும், அநங்கனுடைய பாணமானது அமோகமாய் வந்து விழவும், அவ்வள வையும் அசட்டை செய்து இப்படியும் நித்திரை போவரோ? ஒரு வேளை நீண்ட தூரம் தான் செய்துவந்த யாத்திரையினிமித்தந் தான் இப்படியாக நித்திரை போகின்றனரோ! என்னவோ! அப்படி யிருந்தாலு மிருக்கும். எது எப்படியிருந்தாலு மிருக்கட்டும். எழுப்பலாமென்றாலோ நித்திரை பங்கமாமே! அல்லது, கொஞ்சம்

பொறுப்போமென்றாலோ, அநங்கன் பாணம் அனலாய்த் தகிக்கின்றதே! ஆ! இதற்கு என்ன செய்வோம்? அருகிலிருக்கும் சேடியரும் அப்போதே அகன்றனரே; ஆகிலும் பார்ப்போம்” என்று அழகிய தன் சிங்கார வீணையைத் தன் கையிலெடுத்துக்கொண்டு தந்திகளை முறுக்கி ஆலாபித்து இரண்டொரு கீதங்களை விநோதமாகப் பாடினள். அதையும் அந்த சித்ராபுருஷன் அணுவளவும் சட்டை பண்ணினவனே யல்லன்.

அதைக் கண்ட வேந்தன் மகளும் அடங்காத மோகப்பெருக்கால் ‘அவனையெழுப்புவதே சரி’ என்றெண்ணி இனிய மணங்கொண்ட பனிநீரை யெடுத்து முகத்திற் றெளித்தனள். உடனே அலண்டு கட்டி எழுந்த ஆட்டிடையனும், “அடே! அண்ணே! ஆரடா அங்கே! என்னடா! பார்த்தையோ! இந்த ஆடு பண்ணின வேலையை. எண்ணிப்பாராமல் என்மேல் கோமயமிட்டதே! ஆ இதென்ன ஆணவம்! அப்படியா!” என்றப்படியே அதட்டிக்கொண்டே மறுபடியும் உறங்கிவிட்டனன்.

அதைக் கண்ட அரசன் புதல்வியும் அப்படியே எடுத்துப் போட்டவளாய்த் திடுக்கிட்டு, மனங் கலங்கித் தியங்கித் தன்னைத் தானே நிதானித்துக்கொண்டு இவ்வளவையுஞ் சகித்தவளாய் ஏலலவங்காதி ஜாதிக்காயால் இனியமணங்கொண்டு பச்சைக்கற்பூர பவழச் சுண்ணாதிகளால் பக்குவப்பட்டு கமகமவென்று பரிமளிக்கும் தாம்பூலத்தைத் தன் பத்தாவின் திறந்துகொண்டிருக்கும் வாயினிற் கொட்டினள்.

முன்னமே கலவரங்கொண்டு மூடின கண்ணைத் திறவாமலே முணுமுணுத்துக்கொண்டு முழுதிலும் நித்திரைபோன மூடவித்வானும் அப்படியே அலறி யெழுந்து, துப்பென்று தாம்பூலத்தை யுமிழ்ந்துவிட்டு, இரண்டு கைகளாலும் வாயைப் பிடுங்கிக்கொண்டு, அப்போதுங் கண்ணைத் திறவாமலே, “ஆ! ஆ!! அந்த ஆட்டைப் பார்த்தையா! அடே! அது முன்னமே கோமய மிட்டது. இப்போது இது என்னடா என்றால் புழுக்கையும் போட்டதே! இதன் கர்வத்தைப் பார்த்தையா! எடடா தடியை! இறுக்கிவிடுகிறேன் பார்! எடுக்குதுபார் ஓட்டம்! அம்மா இதற்கிவ்வளவு ஆணவமா! ஆ— ஊம்—” என்று அதட்டிக்கொண்டே கட்டிலின் கால்களெல்லாம் கலகலத்துப் போகும்படி விலவிலவென்று உதைத்துக்கொண்டு

வெறிபிடித்தவன் போலத் தடபுடல் பண்ணினான். இவ்வளவுக்கும் தான் கண் விழித்தவனே யல்ல.

இதைக் கண்ட இராஜகுமாரியும் 'இவன் மகா வித்துவானு மல்ல! மண்ணாய்ப்போனவனுமல்ல! ஆடு மேய்ப்பவன்போலக் காணப்படுகிறதே! ஐயையோ! நான் செய்த பாவமும் எனக்கிப்படி நேரிடவேண்டுமா? இதற்கு நான் என்ன செய்வேன்? ஆ! தெய்வமே! இதுவும் யாரிட்ட சாபமோ? நான் கற்ற கல்வியு மிதற்குத்தானோ?' என்று கவலையுற்றுக் கண் கலுழ்ந்து (கண்ணீர்விட்டு), ஆகிலு மிவனை நாம் விசாரிப்போம்; என்ன சொல்லுகிறான் பார்ப்போம்" என்று சமீபத்தி லடுத்தனள்.

அப்போதுதான் கண் விழித்துப் பார்த்த அந்த மட்டி வித்வானும் கண்கொள்ளாக் காக்ஷியாய்க் கனகமயப் பட்டாடை யுடுத்து, நவரத்தின கஜித சோபிதாலங்கார சொர்ணமய ஆபரணாலங்கிருதங்கொண்டு, ஒளிவிட்டுக் கதிர் பரப்பும் தேஜஸ்ஸோடுங் கூடி, ஒப்பற்ற மகா லக்ஷ்மியைப்போல விளங்கும் அவ் வுத்தமியைக் கண்டு ஒன்றுந்தோன்றாதவனாய்த் திகிற்கொண்டு, முன்னமே அலண்டிருப்பவனானதால், கட்டிலினொரு மூலையில் ஒதுங்கி மிரண்ட பார்வையோடே மயிர்க்கூச்சிடவும்-கைகால் உதறவும்-கலகலத்தவனாய் மிரள மிரள விழிக்க ஆரம்பித்தனன்.

அதற்கு அக் கல்விக் களஞ்சியமும் தைரியங்கொண்டு, அடுத்தடுத்து அநேகமாய்க் கேட்டும் முரட்டுத்தனமாய் ஒன்றும் பேசாமலிருக்கக்கண்டு, கனகோபங்கொண்டு, கட்டிலின்புறத்திற் கட்டியிருந்த கட்கத்தை யுருவிக் கையிற் பிடித்துக்கொண்டு, கோபக் குறியைக் காட்டி, "நீ யார்? எந்த ஊர்? உன் பெயர் என்ன? உள்ளபடியே சொல்லு! இல்லையேல் இதோ! உன்னுயிரை இக் கத்திக்கே இரை யாக்குகிறேன் பார்!" என்றதட்டிக் கேட்டனள்.

என்னசெய்வான் பாவம், இடையனாயிருந்தவன்! நித்திரை கலவரத்தினால், "இது என்னடா கர்மம்! இந்த ஆடு சும்மா இருக்காதா! இது என்ன மநுஷரூபமாய் எதிரில் நிற்குதே! இது என்ன! பெண்போலிருக்குதே!" என்றப்படியே உற்றுப் பார்த்து, உரை தடுமாறவும், "அடே அண்ணே! ஆ! இதென்னடா இது? வனதெய்வமோ, என்னை வாரி விழுங்கவந்த காளியோ? அல்லது கூளியோ? காட்டேரியோ? இதென்னடா! அகோரம்! எடடா தடியை இறக்கி விடுகிறேன், பறக்கச் செய்கின்றேன்" என்றதட்டி உளறக்கண்ட

உத்தமியும் மெத்தப் பயந்தவளானாலும், சித்தங் கலங்காமல், இவனோ! நாகரீக புருஷனுமல்ல; இராஜ கிருகத்தையும் இராஜ ஸ்திரீயையும் இதுவரையில் பார்த்தவனுமல்ல.

இவனை நாம் இப்போது பயமுறுத்தலாகாது; நன்மையிலேயே கேட்போம்' என்று உடனே உருவின கத்தியை உறையிலிட்டுக் கீழே போட்டுவிட்டு, "ஐயனே! நான் ஆடுமல்ல, மாடுமல்ல; மற்றும் உன் ஆசைக்கு உகந்த அரசபத்தினி; உன்னோடு இன்பம் விளைவித்து ஒப்பற்ற காமக்கிழவனை உன் தோளுக்கு மிலக்காக்கிப் பின்னிடும்படி செய்ய வந்த பிரிய நாயகி" என்றனள். அதற்கு அம் மகா மூடசிரோமணியும், "ஆ—இதென்ன—எனக்கு—ஒண்ணுந் தெரியலேயே! நீயும் வேணும், நீ என்னமோ சொன்னேயே அதுவும் வேணும், ஊம்—ஒண்ணும் வேணும், ஊஹூம் போ! போ!" என்றனன்.

அப்போது அரசன் மகளும், "நல்லது; அது அப்படி யிருக்கட்டும்: நீ யார்? இங்கே எப்படி வந்தாய்? உன் வரலாறு என்ன? உள்ளபடியே சொல்லு! உனக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கின்றேன்" என்றனள்.

## வித்வான் (கட்டை வெட்டி) தன் வரலாறு கூறல்

அதற்கவனும், "இதெல்லாம் எனக்கேன்? என் பெயரா? எனக்குத் தெரியாது. என் குலமும் எனக்குத் தெரியாது. ஊஹூம் எனக்கு ஒண்ணுந் தெரியாது. என்னை நானிருக்கு மிடத்துக்கு அனுப்பிவிட்டால் அது போதும்" என்றனன்.

அதற்கு அவ் வரசபுதல்வியும், "அப்படியே ஆகட்டும்" என்னவும், அப்போது அவ்வாட்டிடையனும், "அம்மா! அப்படியானால், உன் பாதத்தாணை உள்ளபடியே சொல்லுகிறேன். நானோ ஒரு ஆடு மேய்ப்பவன்; என்னுடைய எஜமான் பத்தினியும் என்னை விறகு வெட்டிவரச் சொன்னதுண்டு. அதற்காக, நான் அடவிக்குச் சென்று அடர்ந்த ஓர் பூவரசின்பேரில் ஏறி, அங்கே யொரு கிளையிலுட்கார்ந்து, அக் கிளையின் அடிப்புறம் என் கைக்கு வாட்டமாயிருக்கவும், அதை என் பலங்கொண்டமட்டும் வெட்டிக்கொண்டிருந்தேன். அப்போது அவ் வழியாய் வந்த ஒரு பெரிய கூட்டமும்

என்னத்தைக் கண்டோ, என்னைத்தான் பார்த்தோ ஏகமாய் இரைச்சலிட்டு, என்னை வந்து சுற்றிக்கொண்டார்கள். அவர்களைப் பார்த்த நான் அப்படியே அசந்து மரம்போலாய்விட்டேன். அப்போது அக் கூட்டத்தி லொருவன்—என்னுடைய செய்கைக்கெல்லாம் சபையிலே என்னென்னமோ சொன்னானே அவன்தான்! அவன்தான்!!—என்னை அதட்டிக் கூப்பிடவே, அப்படியே பொட்டென்று கீழே யிறங்கிவந்து மரத்தடியில் நின்றேன். அப்போது அவர்களெல்லாம் ஒன்றுகூடி என்னமோ பேசிக்கொண்டார்கள். பிறகு என்னைப் பார்த்து, "அடே! மூடா! அடிமுட்டாள்! நாங்கள் சொல்லுகிறதைக் கேள்! நல்ல சாப்பாடு, துணி கிடைக்கும். நாங்கள் இட்ட வேலையைக் கேட்கவேண்டும்" என்றனர். "ஊம்" என்றேன். உடனே எனக்கு க்ஷௌரம் செய்வித்து, சகல ஆபரணங்களையும் பூட்டிப் பல்லக்கி லுட்காரவைத்து, பக்கத்துக்குப் பத்து பேர்கள் தூக்கிக் கொண்டுவந்தார்களே தெரியுமா? அதுதான் சமாசாரம். அப்புறம் நடந்ததுதான் உனக்குத் தெரியுமே! அதான்" என்று சொல்லிவிட்டு அப்படியே இருந்துவிட்டனன்.

இவ்வளவையுங் கேட்ட இராஜகுமாரியும் இடி இடித்தாற்போல நடுநடுங்கி, என்ன செய்வாள் பாவம்! அப்படியே ஏங்கி அடியற்ற பனைபோலத் தடாலென்று தரையில் விழுந்து தத்தளித்து, மனந் தடுமாறி, ஒருவாறு தேறி, புத்தியை நிதானித்துக்கொண்டு, 'ஆகா! இவ்வளவுக்குங் காரணம் இவ் வித்துவான்களல்லவா!' என்றறிந்துகொண்டு, 'ஐயையோ! தெய்வமே! யாரிட்ட சாபமோ? அநேக சாஸ்திரங்களைப் படித்தும், அரிய வித்தைகளை யெல்லாம் அப்பியசித்தும் என்னத்திற்கு? ஆற்றிற் கரைத்த புளியாய்ப் போயிற்றே! ஆ இதுவும் என் தலைவிதியா? இந்த ஆட்டிடையன்தானா எனக்கென்றிருந்தான். என் அம்மணீ! என்ன செய்யப்போகின்றேன்? என் குலதெய்வமே! ஈஸ்வரீ! உன் செயலு மிப்படித்தானோ? உனக்கு நான் அநேக நாளாய்ச் செய்த அரிய நோன்பிற்குரிய கூலியு மிதுதானோ? நான் உய்யும் வகையும் உண்டோ? ஒப்பற்ற ஜகன்மாதாவே! மெய்ப்பட்ட தெய்வமே! மேதினியி லெனக்கும் ஒரு மேன்மையு முண்டோ?' என்றப்படியே மறுபடியு மூர்ச்சித்து விழுந்துவிட்டனள்.

---

## இராஜராஜேஸ்வரியின் பிரசன்னம்

அப்போது அவள் ஆற்ருமைக்கு அருள் சுரந்த அகிலலோக மாதாவும் அப்படியே சுப்பிரசன்னமாகி "ஹே சுந்தரீ! உன் ஹிருதயங் களிக்குங் குலதெய்வமாக்கும் யான்! நீ யொரு துயருமின்றி யுய்யும்படி வந்தேன். உனக்கு ஒரு குறைவு மில்லை. ஓவியம் போன்றவளே! உடனே எழுந்திருப்பாயாக" என்றனள்.

அதைக் கேட்ட அரச கன்னிகையுங் கண்விழித்துப் பார்த்துக், கைகளால் முன் மயிரை யொதுக்கிக்கொண்டு, முக்காலும் வலம் வந்து, பக்கத்தில் விழுந்து பணிந்து, "ஆ! என் அம்மணி! எனக்கு மிப்படிப்பட்ட ஆபத்து வரவா? இவ் வாடு மேய்ப்பவன் தானு எனக்கென் றிருந்தான். என் பாக்கியமு மிப்படியாகவா! என் தாயே இனிமேல் இந்த ஜன்மமும் பூமியி லிருக்கவா! என் இஷ்ட தெய்வமே! இப்போதே என் உயிர்போனாலும் எனக்குச் சம்மதமே" என்பதாக வாய் குளறச்சொல்லி இரண்டு கண்களிலும் தாரை தரையாக நீரை விடுத்துக் கைகால் நடுங்கவும் களைத்து விழுவதைக் கண்ட காளிகாதேவியும் கருணைபூத்தவளாய்க் காவலன் மகளை நோக்கி, "ஹே! பாக்கியவதி! ஏன் இப்படிக் கசங்கி வாடுகிருய்? இவன் இடையனுமல்ல, மடையனுமல்ல; எல்லாராலுங் கொண்டாடக்கூடிய பிரமபீஜம்; இவனுடைய விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றேன் கேள்!

---

## புவனேஸ்வரியா லெடுத்துரைத்த கட்டைவெட்டியின் வரலாறு

"மகா தபோதனர்க்கெலாம் இருப்பிடமாய் மஹத்துவமுற்ற மகததேசத்திலே மகரிஷிகளின் ஆச்சிரமங்கள் அநேக முண்டு. அவைகளிலெல்லாஞ் சிறந்ததாய் அரிய தபோநிதியாகிய அத்திரி முனிவரின் வாச ஸ்தலமாய் அங்கங்கே செடிகளு மரங்களும் அடர்ந்து தோன்றவும், ஆசையை விளைவித்துப் பச்சென்று விளங்கிய பன்னசாலையும் ஒன்றுண்டு. அதற்கடுத்த கொஞ்சத் தூரத்திலே அமரகம் என்னும் அழகிய தடாகம் ஒன்று அசைந்தசைந்து துளிதுளியா யிறங்கும் அருவிநீரால் நிறைவுற்று, ஆழ்ந்த கங்கை

யைப்போல அழகுற்று, அகண்டு பரந்து, அநேகவித ஜாதி புஷ்பங்க ளெல்லாம் அங்கங்கே மலரவும் விநோதமுற்று, மநோரதமாகிய பரிமளங் கொண்டு, அரம்பா ஸ்திரீகளின் ஆடலுக்குரியதாய் அமைந்துள்ளது. ஒருநாள் வழக்கம்போல நீராட வந்த சப்த மாதர்களில் ஒளிகொண்ட காந்தியாலும்-ஒய்யார நடையினாலும்-கிளிபோலும் வார்த்தையாலும்-குயில்போலுங் குரலாலும்-மயில் போலுஞ் சாயலாலும் மற்றவர்களைவிட விமரிசை கொண்ட மதாலசை யென்பவள் வழக்கம்போல் உடை களைந்து, நீர் குடைந்து, அவர்களெல்லா மங்கேயே நீரிலிருக்கவும், தான்மாத்திரம் ஆடையை யெடுக்கக் கரைக்குமேல் வந்தனள்.

அப்போதுதான் நீர் வேட்கையால் குண்டிகையோடும் அங்கே வந்த அந்தணப்பெருமானும் அழகிய மார்பெலாங் கவர்ந்து பூரித்து முன்னே விளங்கு மோகப்பொருளையும், பூங்கொம்பைப்போலுந் துவளுமிடையையு முடையவளாய் மான்மிரட்சி கொண்ட அவ் வரம்பா ஸ்திரீயின் வனப்பும் இவர் மனத்தைக் கொள்ளை கொள்ள வும், மெய்ம்மறந்து மதன வேட்கையால் மயங்கி வாடிய மாதவனும்,

"கற்கண்டோ! சர்க்கரையோ! கன்னலிளம் பாகோ!
விற்கொண்ட மதன்கணையின் விரிமலரின் றேனோ!
கற்கனியின் தீன்சுவையோ! நானிலத்தி லிவள்தான்
கற்கொண்டு தேவர்முனங் கடைந்தெடுத்த வமுதோ!
என்னேனலா மிவள்பெருமை யெவருரைக்கப் போகும்?
பண்ணியநந் தவப்பயனோ! பண்ணவர்செய் தவமோ!
புண்ணியமே திரண்டவிந்தப் பூலோக ரதியோ!
என்னகத்தைக் கொள்ளைகொள்ளு மிவள்யாரோ! அறியேன்."

என்று சொல்லித் தன் தபோ மகிமையால் அவளாடையை அவள் கண்ணுக்குத் தெரியாமற்போகச் செய்விக்கவும், அம் மாதரழகியும் அப்படியே தியங்கி வருத்தமுற்று நிற்கும்போது, அவ் ஆரியசிரேஷ்டனும் அவளை யணுகி, "அழகிற் சிறந்தவளே! என் ஆச்சிரமத்தை யடைந்து பார்! அங்கே உன் ஆடை கிடைக்கும்" என்றனர்.

உடனே அத் தேவகன்னிகையும் அதிவேகமாகச் சென்று அவருடைய பன்னகசாலையுட் புகுந்தனள். அவளைப் பின்பற்றிச் சென்ற அத் தபோநிதியும் அப்படியே தானு முட்புகுந்து, அவளது வலக்கரத்தை அழுத்தமாய்ப் பிடித்துக்கொண்டு, "ஸ்திரீகளுக்கெல் லாஞ் சிறந்த நாயகமே! சித்தசன் கணையால் மெத்தவும் நொந்தேன்.

ஒத்த மனதாய் உன்னோடுங் கூடவும் வந்தேன்; சித்த முண்டானால் சிறப்புற்றேன்,'' என்றனர்.

அதற்கு அவள் இணங்கவே அவளோடும் அநேகவிதமாய் லீலைகள் புரிந்தனர். அதனால் அப்போதே, அதிரூப சௌந்தரியமுற்ற ஆண் குழந்தை யொன்று அத்தேவ கன்னிகைக்குப் பிறந்தது. அதைக் கண்ட மதாலசையும் ஆசையோடு எடுத்தணைத்து, முத்த மாடி, மீசையுந் தாடியுமாக எதிரிலிருக்கும் அம் மகயோகியின் கையி லளித்துத் தான் கோறி வந்த ஆடையைப் பெற்றுக்கொண்டு அகன்று போயினள்.

அவ் வத்திரி முனிவரும் அக் குழந்தையின் அதிரூப சௌந்தரியத்தைப் பார்த்து அக மகிழ்ந்து, அரிய தவத்தினால் வந்த அக் குழந்தைக்கும் ஆதாரமாக ஒரு புஷ்ப சயனத்தையும், அதன் ஆகாரமாக அக் குழந்தைக்குமேல் கொஞ்சத் தூரத்திலிருந்து அது அழுந்தோறும அதன் வாய்க்கு நேராகத் தேன் துளிக்கும் படி ஓர் வாழைக்குலையையும் ஏற்படுத்தி, இப்படியாக அதற்கும் ஒரு வழி யுண்டாக்கித் தானும் தன் அரிய தவத்தை நாடிச் சென்றனர்.

பிறகு அக் குழந்தையும் புஷ்ப சயனத்திற் பொருந்தி விளையாடி மேலேயிருந்து தனக்கு நேராகத் தான் வேண்டும்போது, அந்தத் தெய்வச் சிசுவின் அதிஷ்டமென்பது அவ் வழியே யொரு ஆயர்குலத்தான் வரவும், அவன் அக் குழந்தையின் அழுகுரலைக் கேட்டு ஆச்சரியங்கொண்டு, ஆகா! இந்த அடர்ந்த காட்டில் அறியாக் குழந்தையின் அழுகுரல் ஏது? இது என்ன மாயம்! ஏதோ போய்ப் பார்ப்போம்'' என்று அப் புதரினுள்ளே நுழைந்து பார்க்கும்போது, இவன் கொண்ட ஆச்சரியமும் எண்மடங்கு அதிகரிக்கும்படி அங்கே யொரு அழகிய புஷ்ப சயனத்தையும், அதற்கு மேலே கொஞ்சத் தூரத்திலே அரம்பையின் குலையொன்றையும், அதினின்றுந் தேன் துளிப்பதையும், அதை அக் குழந்தை அழுந்தோறும் உண்டு களிப்பதையும் கண்ட அவ் ஆயனும் ஆநந்தமுற்று, பிள்ளையில்லாக் குறையால் வருந்திய பேதையாகையால், பேரவாவோடும் அதை யெடுத்து அணைத்து, உச்சி மோந்து, உவகை பொங்கவும் எடுத்துச் சென்றனன்.

அக் குழந்தையும் அவ்விடையன் வீட்டில் வளர்ந்து, அவன் கொஞ்சநாளில் விதேகமடையவும், அடுத்த ஓர் ஆரியன் வீட்டி

லமர்ந்து, இட்ட தொழிற்கெலாம் ஏவலாளியாய்க் கடைசியாகக் கட்டைவெட்டும்படி காட்டிற்கு வந்தபோது, முற்று முணர்ந்த வித்வத் தலைவர்களாகிய அநுஷனும் அம்பரீஷனும் இவனைக் கண்டு, 'அடிமரத்தை வெட்டும் அறிவில்லாத இவனே தாங்கள் கொண்ட எண்ணத்திற்கு ஏற்றவன்' என்று, உன்னையும் அவமானம் பண்ண உவமானமாக உன் அலங்கார சபைக்குங் கொண்டுவந்து, ஒப்பற்ற தங்கள் வித்தியா சாமர்த்தியத்தால், ஒன்றும் தெரியாத இவனையும் விவேக புருஷனாக மெய்ப்பித்து, விமரிசை பெற்ற உனக்கும் உவந்த புருஷனாகச் செய்வித்தனர். ஆகிலும், நீ பயப்படாதே! உன் புருஷனையும் நீ யிப்போதே என் ஆலயத்திற்கு அனுப்பிவை! அங்கே அவன் என்னைத் தியானிக்கவும், அவனுக்குப் பிரசன்னமாகி வேண்டிய வர மளிப்பேன்." என்று சொல்லி மறைந்துபோயினள்.

இதைக் கேட்ட இராஜகுமாரியும் ஒருவாறு மனந் தேறி, உடனே அங்கேயொரு மூலையில் ஒதுங்கி யொளித்துகொண்டிருந்த அந்த மௌடீகனைக் கிட்டி, அவனுக்கு வேண்டிய தைரியஞ் சொல்லி, "ஐயனே! உனக்கு நல்ல காலம்; நான் சொல்லுகிறபடி கேட்கவேண்டும். இந்த ஊருக்கு ஈசானிய மூலையிலே இரண்டு நிலத்துக்கு அப்பால் ஈஸ்வரியின் ஆலயம் ஒன்றிருக்கிறது. இப் போது அங்கே யாரு மிருக்கமாட்டார்கள். இவ் வடர்ந்த இருளில் அக் கோயிலின் ஒருபக்கத்தி லிருந்துகொண்டு அகிலலோக மாதா வைப் - புவனம் பதினாலும் போற்றும் புவனேஸ்வரியை ஒரே மன தாய்த் தியானிப்பாயானால் உனக்கும் அந்த ஜகன்மாதாவானவள் சுப்பிரசன்னமாவள். 'உனக்கு வேண்டியது என்ன?' என்று கேட் பள் நீ வேறொன்றுங் கேட்காமல், 'வித்தை யளிக்க வேண்டுந் தாயே!' என்று கேள்! அப்படியே யளிப்பள். உடனே புறப்பட்டுப் போய் அப்படியே அடைந்துவா!" என்றனுப்பினள்.

## கட்டைவெட்டி காளிதேவியைக் கண்டு வணங்கி வரம் பெறல்

அவனும் அப்படியே ஆலசியம் செய்யாமல் அதிவேகமாகச் சென்று அக் கோயிலை யடைந்து, ஆழ்ந்த நீரிற் குதித்து ஸ்நானம் ஆடி, ஏகமனதோடும் நிமீலன நேத்திரனாய் அக் கோயிலுள்ளே ஒரு முகூர்த்தநேரம் அப்படியே யிருந்தனன். அப்போது அர்த்த

ராத்திரி வேட்டைக்குச் சென்று அங்கே திரும்பிவந்த புவனேஸ்வரி யும், கோயிற் கதவம் தாளிட்டிருப்பதையும், உள்ளே தன் பக்தன் ஒருமனதாய்த் தன்னையே தியானித்துக்கொண்டிருப்பதையுங் கண்டு உள்ளம் பூரித்துக், கதவை யிடித்துக் கனத்த குரலோடும் உங்காரி த்து, "உள்ளே யார்?" என்று அதட்டவும், கதவிடிக்குங் கனத்த குரலோசைக்கும் தடாலென் றெழுந்து கதவண்டை வந்து நின்று கொண்டு, "அம்மா! தாயே! நான்தான் உன் அடிமை; உள்ளே யிருக் கின்றேன்," என்னவும், பக்தரக்ஷகியும், "அப்பா! அப்படியானால் கதவைத் திற!" என்று சொல்லவே, அதற்கு அம் மகாநுபாவனும் "கதவைத் திறக்கவா! ஏதேது கூடாது. எனக்கு வேண்டிய வரத் தைக் கொடுத்தால்தான் கதவைத் திறப்பேன்" என்று ஓரே பிடி யாய்ச் சொல்லவே, இராஜராஜேஸ்வரியும் இவனுடைய மனவுறு திக்கு இதயங் களித்து, "அப்படியல்ல, கதவைத் திற! உனக்கு வேண்டிய வரத்தை யளிக்கின்றேன்" என்று சொல்லக் கேட்டு, "ஊஹூம்! அம்மணி! கதவு திறக்கமாட்டேன்; எனக்கு வேண்டிய தைக் கொடுத்தால்தான்" என்றனன்.

அப்போது துவாதச நாமாலங்காரியும், "அப்படி உனக்கு வேண்டியதுதான் என்ன?" என்று கேட்கவே, அதற்கவனும், "அம்மா! பரமேஸ்வரி! தாயே! எனக்கு வேண்டியது இணையில்லாத வித்தை. அதை யெனக்குப் பூரணமா யளிக்கவேண்டும் என் அம்மணி!" என்றனன்.

அப்போது அவ் அகிலலோக மாதாவும் "அப்படியானால் இக் கதவின் சந்துவழியாய் நாவை நீட்டு" என்று சொல்லி அதில் தன் சூலாயுதத்தின் முனையால் எல்லாவற்றிற்கு மேலாகிய பீஜா க்ஷரத்தை யெழுதி யருளி, "அப்பனே! உனக்கும் ஈடாவார் இவ் வவனியிலே பூத பௌஷ்ய வர்த்தமானங்களிலே ஒருவரு மில்லை" என்று ஆசீர்வதித்து அக மகிழ்ந்தனள்.

உடனே அக் கட்டைவெட்டியும் கதவைத் திறந்தவனாய் ஒப் பற்ற கவீஸ்வரனாகி உலகமாதாவாகிய புவனேஸ்வரியைக் கண்டு களித்து ஆநந்தவாரியால் உள்ளம் பூரிக்கவும், தேகம் புளகாங்கிதத் தினால் மயிர்க்கூச்சிடவும், அடியில் வருமாறு துதிக்க ஆரம்பித் தனன்:—

# ப்யாமளா தண்டகம்

ஸ்: *மாணிக்ய வீணா முபலாலயந்தீம் |*
*மதாலஸாம் மஞ்சுளவாக்விலாஸாம் ||*
*மாஹேந்த்ரநீலத்யுதிகோமலாங்கீம் |*
*மாதங்க கந்யாம் மனஸா ஸ்மராமி ||*

(இ-ள்) நவமணிகளிற் சிறந்த நல்ல மாணிக்கங்களின் சமூகத்தாலாகிய வீணையை இடதுகையிற் கொண்டு இனிய இராக ஆலாபனை செய்பவளும், யௌவன தேஜஸ்ஸோடே கூடிய மந்த நடையை யுடையவளும், அதி மாதுரியமான வாக்விசேஷத்தை யுடையவளும், இந்திர நீலத்தை யொத்த தேக காந்தியினால் எழில் கொண்டு இதயம் பூரிக்கச் செய்பவளும், மதங்கமாமுனிவருடைய மாதவச் செல்வியுமாகிய ப்யாமளா தேவியை மனதினாலே தியானிக்கின்றேன்.

ஸ்: *சதுர்புஜே சந்த்ர களாவதம்ஸே |*
*குசோந்நதே குங்குமராகசோணே ||*
*புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்பபாண |*
*ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத: ||*

(இ-ள்) நான்கு திருப்புஜங்களை யுடையவளும், சந்திரனுடைய மூன்றாம்பிறையைச் சிரோபூஷணமாகக் கொண்டவளும், உன்னதமாகிய ஸ்தனங்களை யுடையவளும், குங்குமத்தின் சிவந்த வர்ணத்தினால் தேக காந்தி கொண்டவளும், வெண்டாமரைப் பூவையும்-கரும்பையும்-பாசத்தையும்-அங்குசத்தையும்-புஷ்பபாணத்தையும் (அங்கங்கே) அஸ்தங்களிற் பொருந்தி யிருப்பவளும், உலகத்திற்கெல்லாம் ஒப்பற்ற ஆதாரமுமாகிய ஓ அம்மணி! ப்யாமளா தேவி! இதோ உனக்கு நமஸ்காரம்.

ஸ்: *மாதா மரகதஸ்யாமா மாதங்கீ மதுசாலிநீ |*
*குர்யாத் கடாக்ஷம் கல்யாணி கதம்ப வநவாஸிநீ ||*

(இ-ள்) மரகதத்தை யொத்த தேககாந்தி யுடையவளும், அமிர்தபானம் செய்பவளும், நித்திய மங்களமா யிருப்பவளும், கதம்பவனத்தில் வசிப்பவளும், தாயைப்போல ரக்ஷிப்பவளுமாகிய மதங்கமாமுனிவரின் மாதவமே! ஏ! சியாமளா தேவி! உன்னுடைய கிருபாகடாக்ஷத்தை யேழையின்பேரில் வைப்பாயாக.

ஸ்: *ஜயமாதங்கதனயே ஜயநீலோத்பலத்யுதே |*
*ஜயசங்கீதரஸிகே ஜயலீலாசுகப்ரியே ||*

(இ - ள்) ஹே மாதங்கீ! உனக்கு மங்கள முண்டாவதாக! நீலோத்பலம் போன்ற நிறத்தினளே! கருணை புரிவாயாக! சங்கீத ரஸனையுள்ளவளே! கடாக்ஷிப்பாயாக! இரதிக்ரீடாலங்கிருதமானவளே! வெற்றியைக் கொள்வாயாக!

தண்டகம்.

1. சு: ஜயஜந நீஸுதா ஸமுத்ராந்த ஹ்ருத்யங்ம
ணித்வீப ஸம்ரூட பில்வாட வீமத்ய
கல்பத்ரு மாகல்ப காதம்ப காந்தார
வாசப்ரி யே!க்ருத்தி வாசப்ரியே!

(இ - ள்) சகல ஜீவான்மாக்களுக்கும் தாயகயாகிய சியாமளா தேவீ! மங்கள முண்டாவதாக! க்ஷீரசமுத்திரத்தின் நடுவிலிருக்கும் மாணிக்கத்தீவின் உற்பவமாகிய வில்வ வனத்தின் மத்தியிலிருக்கும் கற்பகவிருக்ஷத்தைப் பூஷணமாகவுடையவளே! கதம்ப வன வாசத்திற் பிரிய முடையவளே! சாம்பவமூர்த்தியின் மறுங்கிவிருப்பவளே!

2. சு: ஸாதரா ரப்தஸங் கீதஸம் பாவனு
ஸம்ப்ரமா லோலநீ பஸ்ரகா பத்தசூ
ளீஸநா தத்ரிகே ஸாநுமங் புத்ரிகே ||

(இ - ள்) ஆலாபனையோடும் நடத்துகின்ற இராகதோரணையை எடுத்துக்காட்டிச் சிலாகிப்பதி லுண்டாகும் தீவிர கதியால் அசைந்தாடும் கதம்பவிருக்ஷத்தின் புஷ்பமாலிகையினாலே கட்டுண்டு பின்னவிடப்பட்ட ஜடையினாலே கூடியிருக்கும் பின்மயிரையுடையவளே! பர்வதராஜன் பாக்கியமே!

3. சு: சேகரீ பூதவீ தாம்ஸுரே காமயூ
காவளீ நத்தஸுஸ் நிக்தநீ லாலகஸ்
ரேணிஸ்ருங் காரிதே! லோகஸம் பாவிதே ||

(இ - ள்) சிரத்தி லணிந்திருக்கும் சீதமதியின் சந்திரிகையினாலே ஒளிவிட்டுப் பிரகாசித்துப் பசுமையோடு மெருகிட்டது போல உன்னதங் கொண்ட கறுத்த முன் மயிரின் வரிசையினாலே அலங்காரமுற்றவளே? அகிலலோக பூஜிதையுடையவளே!

4. சு: "காமலீ லாதநுஸ் ஸங்கிப ப்ரூலதா
புஷ்பஸங் தேகக்ருச் சாருகோ ரோசநா
பங்கசே ளீலலா மாபிரா மே!ஸுரா மே!ரமே! ||

(இ - ள்) மன்மதனுடைய கேளிக்கைக்காக வளைக்கப்பட்ட கரும்புவில்லையொத்த புருவங்களாகிய கொடிகளின் முனையில் வெளி வரும் முகிழ் விரியாத புஷ்பமோ என்று சந்தேகிக்கும்படியான அழகிய கோரோசனுதி கூட்டுவர்க்கங்களா லாகியதும் விசால மாகிய நெற்றியின் அலங்காரமுமாகிய நீண்டு முனை சிறுத்த பொட்டினாலே மனோகரங் கொண்டவளே! உத்தமியே! லக்ஷ்மியின் விலாசங் கொண்டவளே!

5. சு: ப்ரோல்லஸத் வாளிகா மௌக்திகஸ் ரேணிகா
சந்த்ரிகா மண்டலோத் பாஸிகண் டஸ்தலந்
யஸ்தகஸ் தூரிகா பத்ரரே காஸமுத்
பூதஸௌ ரப்யஸம் ப்ராந்தப்ருங் காங்கநா
கீதஸாந் த்ரீபவவ் மந்த்ரதந் த்ரீஸ்வரே பாஸ்வரே ||

(இ - ள்) மிகுந்த காந்தியினாலே பிரகாசிக்கின்ற வாளியினிடத் திலுள்ள (முத்துக்கள்) தாளங்களின் மண்டலாகிருதியான வரிசைக ளாலே உண்டாகின்ற ஒளி தங்கிய கண்டத்தினிடத்திலே பொருந் திய கஸ்தூரியினு லெழுதப்பட்ட மகரிகையிலே உற்பவித்த பரி மளத்தினால் வட்டமிட்டுச் சுழலும் பெண்வண்டுகளின் ரீங்காரத் தினால் அதிகரிக்கின்ற மந்திரவீணையின் தந்திகளா லுண்டாகும் நாதத்தையுடையவளே! திவ்வியமான தேஜஸ்ஸை உடையவளே!

6. சு: வல்லகீ வாதந ப்ரக்ரியா லோலதா
லீதளா பத்ததா டங்கபூ ஷாவிசே
ஷாந்விதே! ஸித்தஸம் மாநிதே! ||

(இ - ள்) வீணையினுடைய வாசிக்கிற விதரணையினாலே மிரட் சியையுடைய விரிந்த தளிப்பனையோலையினாலே செய்யப்பட்ட காதணியிற் பிரியமுடையவளே? தவச்சிரேஷ்டர்களெல்லோரும் தலை வணங்கப்பெற்றவளே!

7. சு: திவ்யஹாலாமதோத் வேலஹேலாலஸச்
சக்ஷுராந் தோளநஸ் ரீஸமா க்ஷிப்தகர்
ணைகநீ லோத்பலே! பூரிதா ஸேஷலோ
காபிவாம் ச்சாபலே! ||

(இ - ள்) தேவதாப்ரீதியான மதுவை யுண்பதினாலே மனோ ரதங் கொண்டு பூரித்துப் பிரகாசிக்கும் கண்களினுடைய கருமணி களி னொளியினாலே ஆக்ஷேபிக்கப்பட்ட ஒற்றைக் காதின்மேலிருக் கும் கருநெய்தற் பூவினையுடையாளே! குறைநிறையக் கோரிய குவ

லயத்தோர்க்கெல்லாங் அவர்கள் கோரிய யாவுங் கூட்டிவைப் பவளே!

8. சு: ஸ்வேதபிந் தூல்லஸத் பாலலா வண்யநிஷ்
யந்தஸந் தோஹஸந் தேஹக்ருந் நாஸிகா
மௌக்திகே! ஸர்வமந் த்ராத்மிகே!

(இ - ள்) சிறு சிறு வியர்வைத் துளிகளினாலே பிரகாசிக்கும் படியான நெற்றியினுடைய லாவண்யமே அப்படியே அத் துளிக ளின் பெருக்கால் கரைந்து வழிந்து ஒன்றுகூடியதோவென்று சொல்லும்படியான நாசிகாபரணமுடையவளே! (மூக்கிலணிந் திருக்கு முத்தானது முன்னெற்றியின் லாவண்யமெல்லாம் வியர் வைத் துளிகளின் சமூகத்தாலே கரைந்து வழிந்து ஒன்று கூடிய தை யொத்திருந்தது என்பது) சர்வமந்திர சொரூபமானவளே!

9. சு: குந்தமந் தஸ்மிதோ தாரவக் த்ரஸ்புரத்
பூககற் பூரதாம் பூலகண் டோத்கரே! ஸ்ரீகரே! ||

(இ - ள்) முல்லைப்பூவின் அளவினதாகிய தந்தவரிசையினால் உண்டா முறுவலினாலே சுந்தரங்கொண்ட முகத்தினிடத்திலே பிர காசிக்கும் கொட்டைப்பாக்கினுடையவும் பச்சைக் கற்பூராதி பரி மள திரவியங்களினுடையவும் சமூகத்தாலாகிய தங்கரேக்கினை யொத்த தாம்பூலத்தின் அழகு கொண்டவளே! சம்பத்தை யளிப் பவளே!

10. சு: குந்தபுஷ்ப த்யுதிஸ் நிக்தந் தாவளீ
நிர்மலா லோலஸம் மோஹஸ் மேரஸோ
ணாதரே! சாருவீ ணாதரே! ||

(இ - ள்) முல்லைப்பூவின் அளவினதாய் மோகத்தை விளைவிக் குந் தந்த வரிசையை யுடையவளே! அசைந்தாடும் பூங்கொத்தா லாகிய மாலையை யுடையவளே! குறுநகை யுடைய குறுவிந்தக் கல்லை யொத்த சிவந்த அதரங்களை யுடையவளே! மனோகரமாகிய வீணையை யுடையவளே!

11. சு: ஸுலலித நவயௌவ நாரம்ப சந்த்ரோத
யோத்வேல லாவண்ய துக்தார்ண வாவிர்ப
வத்கம்பு பிப்போக ஹ்ருத்கந்தரே! மந்தரே! ||

(இ - ள்) மிகுந்த மனோகரத்தை விளைவிக்கும் புதிது புதிதாய்ப் புறப்படும் இளமையின் அதிகரிப்பென்னும் சந்திரோதயத்தாலே கரை புரளும்படியான காந்தியென்னும் பாற்கடலிலிருந்து உண்டா

கும் சங்கினுடைய அழகையெல்லாங் கொள்ளை கொள்ளும்படியான ரேகாத்திரயங்களோடுங் கூடிய கண்டத்தையுடையவளே? மந்தகதியோடுங் கூடியவளே!

12. சு: பந்துரச் சங்கவீ ராதிபூ ஷாஸமுத்
யோதமா நாநவத் யாங்கஶோ பே! ஶுபே! ||

(இ - ள்) மனோரம்யமான விநோத ரத்நங்களாலே வேலைத் திறங்கொண்ட மேகலாபரணமுதலான பூஷணங்களாலே மிகவும் பிரகாசிப்பதும் சுப்பிரமானதுமாகிய சரீரத்தின் சோபிதங் கொண்டவளே! மங்களாகரமானவளே!

13. சு: ரத்நகே யூரரஸ் மிச்சடா பல்லவ
ப்ரோல்லஸத் தோர்லதா ராஜிதே! யோகிபிஃ பூஜிதே! ||

(இ - ள்) மணிகளிழைத்த புஜகீர்த்தியினுடைய காந்திகளானவை இளந்துளிர்களை யொத்து விளங்கவும், அத் துளிர்களையுடைய கொடிகளை யொத்த புஜங்களினாலே பிரகாசிப்பவளே! இருடியராலே பூஜிக்கப்படுபவளே!

14. சு: விஶ்வதிங் மண்டல வ்யாப்தமா ணிக்யதே
ஜஸ்புரத் கங்கணா லங்க்ருதே! ஸாதுபிஸ் ஸத்க்ருதே! ||

(இ - ள்) சமஸ்த திக்குக்களிலும் பிரகாசிக்கின்ற மாணிக்கங்களின் காந்தியினாலே ஒளி கொள்வதாகிய கையி லணிந்திருக்கும் கங்கணத்தினாலே அலங்காரங் கொண்டவளே! சாதுக்களாலே சிலாகிக்கப்பட்டவளே!

15. சு: வாஸரா ரம்பவே ளாஸமுஜ் ரும்பமா
ணாரவிந் தப்ரதிச் சங்கபா ணித்வயே!
ஸந்ததோ த்யதவயே! ||

(இ - ள்) உஷக்காலத்துச் சூரியரஸ்மியினாலே விரிகின்ற செந்தாமரைக்குச் சமானமாகிய அஸ்தங்களை யுடையவளே! எப்போதும் இளமையோடுங் கூடியவளே!

16. சு: திவ்யரத் நோர்மிகா தீதிதிஸ் தோமஸந்த்
யாயமா நாங்குளீ பல்லவோத் யந்நகேந்
துப்ரபா மண்டலே ப்ரோல்லஸத் குண்டலே! ||

(இ - ள்) ஜீவரத்தினங்கள் பதித்த மோதிரத்தின் காந்தியினால் சிவந்த நிறத்தோடுங்கூடி யிளந்துளிரை யொத்து விளங்கும் விரல்களினாலே அதிகரிக்கின்ற வளமை கொண்ட சந்திரனைப்

போன்ற முனை நகத்தை யுடையவளே! காந்தி மீறிய கர்ணபூஷண முடையவளே!

17. சு: தாரகா ராஜினீ காசஹாரா ராவளிஸ்
மேரசா ருஸ்தநா போகபா ராநமந்
மத்யவல் லீவளிச் சேத!வீ தீஸமுல்
லாஸஸந் தர்விதா காரசௌந் தரியரத் நாகரே! ஸ்ரீகரே! ||

(இ - ள்) நட்சத்திர வரிசையை யொத்த தரள வரிசையின் விமரிசையினாலே மனோஹரமாகும் ஆரத்தாலே வளமைகொண்ட குசங்களுடைய பூரிப்பினாலே தேய்ந்து வளைந்து கொடிபோலத் துவளும் இடையானதை இடுப்பி லணிந்திருக்கும் ஒட்டியாணத்தினா லெடுத்துக்காட்டவும் எழில் கொண்ட சிரேஷ்டபாகத்தை யுடையவளே! ஓ தனலக்ஷ்மீ!

18. சு: ஹேமகும் போபமோத் துங்கவ க்ஷோஜபா
ராவநம் ரேத்ரி லோகா வநம்ரே ||

(இ - ள்) பொற்குடத்தை யொத்துப் பூரித்து ஒப்பற்று விளங்கும் தனபாரத்தினால் இடையானது துவளுகின்றவளே! திரிலோகத்திலும் வியாபித்திருப்பவளே!

19. சு: லஸத்வ்ருத்த கம்பீர நாபீஸ ரித்தீர
ஸைவால ஸங்காக ரஸ்யாம ரோமாவ
ளீபூஷ ணே!மஞ்சு ஸம்பாஷணே! ||

(இ - ள்) ஒளிகொண்டு விருத்த வடிவினதாய் ஆழ்ந்து விசாலங்கொண்ட உந்தியாகிய தடக்கரையின் ஒதுப்புறவாசியாகிய கறுத்துப் பசுமைகொண்டு பந்தி கொண்ட (ரோமவரைகளாகிய) சைவலத்தின் அலங்கார முடையவளே! மகிழ்ச்சியைக் கொடுக்கும் வார்த்தையை யுடையவளே!

20. சு: சாருவிஞ் சத்கட ஸூத்ரகிர் பர்த்விதா
நங்கலீ லாதநு ஸ்விஞ்சிநீ டம்பரே
திவ்யரத் நாம்பரே. ||

(இ - ள்) மனோகரமாகத்தானே கணகணவென்று சப்திக்கும் ஏறிட்ட மன்மதனுடைய கேளிவிலாச வில்லினுடைய நாணோசையினால் களினங் கொண்டவளே! மலின மகன்ற மாணிக்கமுதலிய நவரத்தினங்க ளிழைத்த வஸ்திராபரணந் தரித்தவளே!

21. சு. பத்மரா கோல்லஸந் மேகலா பாஸ்வர
ஸரோணிஸோ பாஜித ஸ்வர்ணபூ ப்ருத்தலே
சந்த்ரிகா ஸீதலே ||

(இ - ள்) பத்மராகத்தினு லிழைக்கப்பட்டுப் பிரகாசிக்கின்ற மேகலாபரண சோபிதமுற்றுச் சுந்தரங் கொண்ட அந்தப்புரத்தின் காந்தியினுல் பின்னிடப்பட்ட சுவர்ன மலைகளை அதற்கு அயலி லுடையவளே! சந்திரனைப்போலுங் குளிர்ச்சியையுடைய என் அம்மணீ!

22. சு: விகஸித நவகிம்ஸுக தாம்ர திவ்யாம்ஸுக
கச்சந்ந சாருரு ஸோபாப ராபூத
ஸிந்தூர ஸோணாய மாநேந்த்ர மாதங்க
ஹஸ்தார்க ளே!ஸ்யாமளே! ||

(இ - ள்) அன்றலர்ந்த முருக்கம்பூவினை யொத்துச் சிவந்து காணும் திவ்ய வஸ்திரத்தினுலே மறைந்திருந்தும், தன் மனோகர மாகிய திவ்ய தேஜஸ்ஸினுலே அவ் வஸ்திரத்தின் காந்தியைப் பின் னிடச்செய்து பிரகாசிப்பதும், இந்திரனுல் ஏறப்பட்ட பட்டத்து யானையாகிய ஐராவதத்தின் சிந்தூரம் எழுதப்பட்டுச் சிறந்து விளங்கும் முன் கையை யொத்திருப்பதுமாகிய வளமை கொண்ட துடையினளே! நீலமேக சியாமளவர்ண தேககாந்தி கொண்டவளே!

23. சு: கோமலஸ் நிக்தநீ லோத்பலா பாதிதா
நங்கதூ ணீரஸங் காகரோத் தாமஜங்
காலதே | சாருலீ லாகதே! ||

(இ - ள்) மனோ உல்லாசத்தை யுண்டாக்குவதும் நுட்பமானது மாகிய நீலோற்பலாதி பாணங்களால் நிறைந்த மன்மதனுடைய அம்புப்பொதியை நிகர்த்ததும், அதிமேன்மை யுற்றதுமாகிய கடைச் சல் பிடித்த கண்டச்சதையை யுடையவளே! லீலா விநோதங் கொண்டவளே!

24. சு: நம்ரதிக் பாலஸீ மந்திநீ குந்தலஸ்
நிக்தநீ லப்ரபா புஞ்சஸஞ் சாதநூர்
வாங்குரா சஸங்கஸா ரங்ஙஸம் யோகரிங்
கன்னகேந் தூஜ்வலே ப்ரோஜ்வலே! ||

(இ - ள்) அஷ்டதிக்குப் பாலகர்களின் தேவிமார்களெல்லாம் நமஸ்கரிப்பதாலே, அவர்கள் முன் மயிரின் மனோகரமாகிய நீல ரேகைகளின் கற்றையானது சந்திரனைப்போல வளைந்த பிறை

யாய்ப் பிரகாசிக்கும் பாதத்தின் நகங்களின்மேல் விழுந்து பிரதிபிம்பிக்கவே அயலிலே மேய்ந்துகொண்டிருந்து, அதைக் கண்டு பசும் புல்லென் றெண்ணிக்கொண்டு பக்கத்தில் நெருங்கிவரும் மான் கூட்டங்களின் மகா மிருதுவான தொனி சூழும் பாதத்தையுடையவளே!

25. சு: தேவதேவே ஸனத்யேஸ யக்ஷேஸ பூதேஸ வாகீஸ கோணேஸ
வாய்வக்நி கோடீர மாணிக்ய ஸங்க்ருஷ்ட பாலாத போத்தாம
லாக்ஷார ஸாருண்ய லக்ஷ்மீக்ரு ஹீதாங்க்ரி பத்மத்வயே! அத்வயே!||

(இ - ள்) தேவர்களுடையவும், தேவேந்திரனுடையவும், நிருதியுடையவும், குபேரனுடையவும், ருத்திரனுடையவும், பிரமனுடையவும், கோணாதிபதிகளுடையவும், வாய்வு அக்கினிகளுடையவும் அழகிய ரத்தின கிரீடங்களின் மாணிக்க தேஜோன்மய உதயபாநுவின் ஒளியைக் கிரகிக்கின்ற தாமரைப் புஷ்பத்தை யொத்த ஒப்பற்ற உபயபாதங்களை யுடையவளே! இணை யில்லாதவளே!

26. சு: ஸுருசிரநவரத்ந பீடஸ்திதே ஸுஸ்திதே
ஸங்கபத்மத்வயோ பாஸ்ரிதே ஆஸ்ரிதே ||
தேவிதுர்க் காவட க்ஷேத்ரபா லைர்யுதே
மத்தமா தங்ககந் யாஸமூ ஹாந்விதே
பைரவைரஷ்டபிர் வேஷ்டிதே
தேவிவாமாதி பிஸ்ஸம்ஸ்ரிதே
லக்ஷ்மியாதி ஸக்த்யஷ்ட காஸேவிதே
பைரவீஸம்வ்ருதே
பஞ்சபாணேன ரத்யாசஸம்பாவிதே
ப்ரீத ஸக்தயாவ ஸந்தேசாநந்திதே ||

(இ - ள்) ஜீவமாணிக்யாதி நவரத்தினங்க ளிழைத்த ஸிம்மாதனத்தினளே! ஸங்கநிதி பத்மநிதியின் சம்பத்தை யுடையவளே! பக்தஜனப்பிரிய முடையவளே! துர்க்காதேவியுடனேயும், வடவிருக்ஷத்துடனேயும், க்ஷேத்திரபாலனுடனேயும் கூடியிருப்பவளே! மகரிஷியான மதங்கமாமுனிவருடைய செல்விமார்களின் சேர்க்கையை யுடையவளே! அஷ்டபைரவக்காவல் கொண்டவளே! வாமதேவி முதலியவர்களின் சம்பந்த முடையவளே! அஷ்டலக்ஷ்மி ஸேவித முடையவளே! பைரவிமுதலிய தேவதைகளால் சூழப்பட்ட ஓ அம்மணீ! ரதிக்கிரீடாலங்க்ருத முடையவளே! இஷ்டார்த்த சித்தியை யளிப்பவளே! இளவேனிற் பருவத்திலுல் இதயம் பூரிப்பவளே!

27. சு: பக்திபாஜாம் பரம்ஶ்ரேயஸேகல்பஸே
சந்தஸாமோஜஸே ப்ராஜஸே
யோகினா மாநஸேத்யாயஸே
கீதவித்யாநுயோகா வித்ருப்தேந
க்ருஷ்ணேந ஸம் பூஜ்யஸே
விஸ்வஹ்ருத்யேந கத்யேந பத்யேந
வித்யாதரைர்கீயஸே
யக்ஷகந்தர்வ ஸித்தாங்க நாமண்டலைர்மண்டிதே
ஸர்வஸௌபாக்ய வாம்சாவதீபிர்வ
தூபிஸ்ஸுராணாம் ஸமாராத்யஸே ||

(இ-ள்) பக்தியோடு முன்னைச் சிந்தை செய்பவர்க்கு வேண்டிய சிறப்பை யளிக்கின்றாய்; வேதத்தின் விளக்கொளியா யிருக்கின்றாய்; மகயோகிகளின் மனதினாலே தியானிக்கப்படுகின்றாய்; கான வித்தையா லுள்ளங் களிக்குங் காயாம்பூ வண்ணனாகிய கண்ணனால் சேவிக்கப்படுகின்றாய்; பக்தியிற் சிறந்த உள்ளத்தனாகிய பிரமனாலே பூஜிக்கப்படுகின்றாய்; சிறந்த வித்வ பூஷணங்களின் லோகாஸனையாகிய கவிகளாலும், கீர்த்தனங்களாலும், வாத்தியங்களாலும் துதிக்கப்படுகின்றாய்; யக்ஷ கந்தர்வ சித்த வித்தியாதர ஸ்திரீகளின் சேவிதத்தால் சோபிதங் கொள்ளுகின்றாய்; சமஸ்தவித சம்பத்துக்களையும் அடைய விரும்பும் தேவமாதர்களாலே பூஜிக்கப்படுகின்றாய்.

28. சு: ஸர்வவித்யாவிஸே ஷாங்கிதம் சாடுகா
தாஸமுச் சாரணை கண்டமூல் லோலவஸந்
வர்ணரேகாங்கிதம் கோமலம் ஸ்யாமலோ
தாரப க்ஷத்வயம் துண்டஸோ பாதிதூ
ரீபவத் கிம்ஸுகா பம்ஸுகம் லாலயந்
தீமிவ க்ரீடஸே ||

(இ-ள்) சகல வித்தையிலும் சம்பூரணமுடையதும், லாவண்ய கவிதா சாதுரியக் கண்டத்தொனி கொண்டதும், விசேஷித்த நல்ல வர்ணத்தோடுங் கூடிய ரேகைகள் பொருந்தி யிருப்பதும், மனோகரமாகியதும், கறுத்த வர்ணத்தினால் கம்பீரமுடைய இரக்கைகளையுடையதும், முருக்கம்பூவின் சாயலை மழுங்கச்செய்யும் காந்தி கொண்ட மூக்கினழகை யுடையதுமாகிய பஞ்சவர்ணக்கிளியை ஆலிங்கனம் செய்வதுபோலும் அபிநயிக்கின்றாய்.

29. சு: பாணிபத்மத்வயே நாபரே ணாக்ஷமா
லாகுணம் ஸ்பாடிகம் ஞானஸா ராத்மகம்

புஸ்தகம் பிப்ரதீ யேநஸஞ் சித்யஸே
தஸ்யவக் க்ராந்தராத் கத்யபத் யாத்மிகா
பாரதீ நிஸ்ஸரே (த்யேன்வாத் வம்ஸநா
தாக்ருதிர் பாவ்யஸே ஸோபிலக்ஷ் மீஸஹஸ்
ரைபரி க்ரீடதே.)

(இ - ள்) தாமரை போன்ற உபயாஸ்தங்களிலும் ஒப்பற்ற துல்லியமாகிய ஸ்படிகமாலையையும், உள்ளன்போடு பொங்கி வழியும் ஞானஸாரமாகிய புஸ்தகத்தையும், தரித்திருக்கும் பாவனையாக எவனொருவன் உன்னைத் தியானிக்கின்றானோ அவனுடைய வாக்கினின்றும், திவ்வியமான சுலோகங்களும், விசேஷார்த்தங்களும் அபாரமாகத்தானே வெளிப்படும்; எவனொருவனாலே இரண்டறக் கலந்த உமாமகேஸ்வரராக எண்ணப்படுமோ அப்படிப்பட்டவன் அநேக லக்ஷ்மீ தேவிகளோடும் கேளீ விலாசமாயிருக்கும் ஆதிமத்யாந்த ரஹிதனாகிய அம்புஜாக்ஷனுடைய அழகிய தேஜஸ்ஸைப் பெறுகின்றான்.

30. சு: கிம்நஸித் யேத்வபுஸ் யாமலங் கோமலம்
சாருசந் த்ராவசூ டாங்விதம் த்யாயதஸ்
தஸ்யலீ லாஸரோ வாரிதி ஸ்தஸ்யகே
ளீவனம் நந்தனம் தஸ்யபத் ராஸனம்
பூதலம் தஸ்யகீர் தேவதா கிங்கரீ!
தஸ்யவா சாகரீஸ் ரீஸ்வயம்.

(இ - ள்) எது சித்திக்காது? இளந்துளிர் நிறத்தினாலும், மநோகரத்தினாலும், மநோரம்யமான சந்திரனைச் சிரோபூஷணமாகக் கொண்டவளுமாகிய என் அம்மணியைத் தியானிக்கின்றவனுக்குச் சாகரம் போன்ற சரஸ லீலா போகமும், நந்தவனம்போன்ற நளின சாலையும், நவரத்தின கசித சிம்மாதனமும், வாணீயாகிய பணிப் பெண்ணும், லக்ஷ்மியாகிய சிரவணாநந்த சுகிர்த சம்பாஷணியும் அடையப் பெறுவன்.

31. சு: ஸர்வயந் த்ராத்மிகே ஸர்வமந் த்ராத்மிகே
ஸர்வமுத் ராத்மிகே ஸர்வஸத் யாத்மிகே
ஸர்வவர் ணாத்மிகே ஸர்வரூபே
ஜகந்மா த்ருகே ஹேஜகந் மாத்ருகே
பாஹிமாம் பாஹிமாம் பாஹிமாம் பாஹி.

(இ - ள்) சர்வ யந்திரங்களுந் தானாயிருப்பவளே! சர்வமந்திர சொரூபமானவளே! சர்வமுத்திரா சொரூபமாய் விளங்குபவளே!

சர்வ சத்தி சொரூபமானவளே! சர்வாக்ஷர சொரூபமாய் விளங்குபவளே! சர்வ சொரூபி! ஹே லோகமாதா! ஜகத்துக்கெல்லாங் காரணமாகி யதன் காரியமாய் விளங்குபவளே! ஹே! பராசக்தி! என்னை இரக்ஷிப்பாய்! என்னை இரக்ஷிப்பாய்! இரக்ஷிப்பாய்!

---

## காளிதாசன் ராஜகுமாரியை நீங்கித் தேசசஞ்சாரம் செய்தல்

இப்படியாக, நீண்ட சுலோகத்தாலே நெடுநேரமாகத் துதித்துக் கீழே விழுந்து பணிந்து பிரதக்ஷணஞ் செய்து புகழ்ந்து கொண்டாடவும், இராஜ ராஜேஸ்வரியும் இதயம் பூரித்தவளாய், "ஹே பக்தா! இதோ என்னுடைய அநுக்கிரக கடாக்ஷத்தினுலே இதழ் விரிந்த தாமரைபோலு முகத்தினளாகிய சரஸ்வதியின் அம்ஸம் வாய்ந்த நீயும் இப் பூலோகத்திலே எல்லாராலும் புகழ் கொண்டாடவும் நிகரொருவரு மில்லாமல் நீடித்திருக்கப்போகின்றாய். தாரா நகரத்திலே திசைமுகனும் போஜனாய் அவதரித்திருக்கின்றான். அவனுடைய சமஸ்தானத்திலே பிரதான பண்டிதனாகப் பிரக்யாதி கொள்ளப்போகின்றாய். மகா கவியாகிய உன்னைப் பார்க்கும்போதே உத்தமனாகிய போஜனும் உள்ளமீதூரவும் உவகை கொள்வன்; உனக்கு அநேகவிதமாய் உபசரணை செய்வன். என்னையே இதயத்திருத்தி இடைவிடாது தியானிக்கும் நீயும் இவ் விருநிலத்தின்கண்ணே எல்லா அரசர்களும் புகழ்ந்து கொண்டாடும்படி மகா கவிகளெல்லாம் காளிதாசன் என்னும் பெயரால் உன்னைக் கரங்குவித்துத் துதிக்கவே, அடங்கா மகிழ்ச்சி கொள்வை. உனக்கு ஈடாவார் இப் பூலோகத்திலே பூத பௌஷ்ய வர்த்தமானங்களிலும் புறப்படார்கள். என்னிடத்தில் பத்தி விஸ்வாசமுடையவனாக இருப்பாயாக!" என்றாசீர்வதித்து அந்தர்த்தான மாயினள். அப்போது காளிதாசனும் ஆநந்தவாரியி லாழ்ந்தவனாய் அவ்விடம்விட்டு அன்று அரசச்செல்வியின் அந்தப்புரத்திற்கு வந்து,தந்த மிழைத்த கபாடவாயிலில் நின்று கதவைத் தட்டினன்.

அப்படிச் சுலோகமே வாசகமாகக் கதவைத் தட்டிய தன் காதலனுடைய கல்வித் திறத்தைக் கண்டு உள்ளம் பூரிக்கவும்,

"அஸ்தி கஸ்சித் வாக் விசேஷ:?"

"ஏதாவது கொஞ்சம் ஸம்ஸ்கிருதம் தெரியுமா?" என்று அவ் வரசிளங்குமரியுங் கேட்டனள்.

அப்போது அரிய பூபதியும் அவள் கேட்ட கேள்வியைச் சிறப்பிக்குமாறும், அதற்கு உத்தாரமாகவும், அக் கேள்வியி லடங்கிய அஸ்தி—கஸ்சித்—வாக் என்னு மூன்று சொற்களுக்கு முறையே மூன்று நூல்களாக ஷை சொற்களையே முகப்பிற்கொண்டு முதலில் அஸ்தி என்று ஆரம்பித்துக் குமாரஸம்பவத்தையும், இரண்டாவது கஸ்சித் அன்று ஆரம்பித்து மேகதூதத்தையும், மூன்றுவது வாக் என்று ஆரம்பித்து ரகுவம்சத்தையும், சப்தமேகங்களும் ஒன்று கூடி சரசரவென்று வருஷிப்பதுபோல சளையாது பொழிந்து அவ் விரவிலேயே சமஸ்கிருதபாஷா சமுத்திரமானது புஷ்களமாகத் தானே நிறைவுற்றுத் ததும்பி வழிந்தோடும்படிச் செய்துவிட்டனன். இப்படியாக இனிய சந்தத்தோடும் எவர்களுங் கண்டு அதிசயிக்கும் ரூபக அலங்காரங்களைக்கொண்டு புதுமொழிக் கூட்டங்களால் இயற்கைப் பொருள்களை யெல்லாம் அப்படியப்படியே தற்பவமாகத்தானே எடுத்துக் காட்டி வர்ணித்து இதயம் பூரிக்கச்செய்த தன் காதலனைக் கண்டு, "ஆதரவில்லாத அர்த்தராத்திரி யாச்சுதே! என்ன அபாயம் நேரிடுமோ! அம்மணீ! அகிலாண்ட நாயகீ! இதோ! உன் பக்தன் உன்னிடத்திற்கும் வருகின்முன். ஒரு குறைவுமின்றி காக்கவேண்டுந் தாயே!" என்றிதுவே தியானமாய்க் கண்மேற் கண் போடாமல் (இமை கொட்டாமல்) கலவரித்துக் காத்துக்கொண்டிருந்து, கதவைத் திறப்பதற்கு முன்னமே காளமேகம்போலக் கவி மழை பொழியவும், களிகொண்ட காவலன் மகளும், காமனுடைய காசரவேகத்தால் சரசரவென்று வந்து விழுஞ் சரங்களையெல்லாம் சந்துகொடாமல் தடுக்கும் தன்மையில் தளர்ந்தவளாலுந் தளராத கல்விக் களஞ்சியமாகையால், அவ்வளவையு முள்ளடக்கி நாண மீதூரவும், "ஹே! பிராணநாதா! இந்நேரமாயிற்றே! தாங்கள் திரும்பி வரவும்? தேவர் இவ்விடம் விட்டகன்றதுமுதல் ஒரு நிமிஷமும் ஒரு யுகமாகவே நெட்டுயிர்ப்பெய்தி தேவர் திருமுகத்தின் தரிசனத்தாலன்றோ தேறித் தெளிந்தேன். இனி நிமிஷமும் பொறேன்" என்றனள்.

உடனே அக் குறிப்பறிந்த காளிதாசனும், "ஓ அம்மணீ! நன்றுயிருக்கிறதே! உம்முடைய பூரணகடாக்ஷ வீக்ஷண்யமன்றோ! புவனேஸ்வரியை உள்ளம் பூரிக்கக் கண்டு களிக்கச் செய்வித்தது;

அதனாலன்றோ கல்விக்கடலைக் கரைகண்டவனாய்க் காளிதாசன் என்னும் பெயரும் பெற்றேன். ஆகையால், அன்னையாகிய உன்னையும் அடியேன் வேண்டேன். உத்தமியாகிய நீயும், சித்தமலர்ந்து ஆசீர்வதித் தனுப்புவாய்" என்றனன். அதைக் காதில் வாங்கு முன்னமே அப்படியே தேகமெல்லாம் அனலாய்க் கொளுந்தவும், "அன்னையென்றனையே! அட பாவி! என்னையுங் கொன்றையே! இனி நான் இருந்தென்ன! இப்படி யென்னையும் ஏமாறச்செய்த நீயும் இனி உன்னால் விரும்பப்படும் இன்னொரு ஸ்திரீ எவளோ அவளால் பொன்னான உன்னுடலம் சின்னபின்னப்படவும் சீரழிந்து சாகக்கடவாய்" என்று கனத்த சாபமிட்டு அப்படியே களைத்துச் சோர்ந்து விழுந்து மூர்ச்சைபோயினள்.

அப்படிப்பட்ட அவஸ்தையிற்றானே அவளையும் நமஸ்கரித்து அப்பொழுதே அந்நாட்டைவிட்டு அகன்றவனாகி அநேக காததூரம் போய்விட்டனன். அப்படி அவன் அகன்றுபோன கொஞ்சநேரத்திற் கெல்லாம் மூர்ச்சை தெளிந்த கொற்றவன் மகளும் 'நமது நற்றவம் நன்றா யிருக்கிறது' என்று நகைத்தவளாகி, அந்த இரவிலேயே தன் அரண்மனையின் அந்தப்புரத்தினின்றும் அகன்று அகிலலோக மாதாவின் ஆலய மடைந்து, அவள் சந்நிதியினின்று அஜ் ஜகன் மாதாவைத் துவாதச நாமங்களாலும் துதிசெய்து, அளிந்த மனத்தளாகி, அகன்று பரந்து செவ்வரி படர்ந்து சேற்கெண்டையொத்து விளங்குஞ் சிறந்த கண்களினின்றும் நீரானது தாரைதாரையாய்ப் பெருகவும், ஆறாத் துயரங்கொண்டு அப்படியே இரண்டு கரங்களையும் சிரமேற்கொண்டு, "ஓ! அம்மணீ! சர்வ சமுத்பவகாரணீ! உன் உத்தரவாலன்றோ என் பத்தாவையும் உன் ஆலயத்துக்கு அனுப்பி வைத்தேன். உன்னுடைய தபோமகிமையால் ஒப்பற்ற கவிசிரேஷ்டனாய்த் திரும்பி வீட்டுக்கு வரவும், அவனுடைய வாக் விசேஷத்தைக் கண்டு வாத்சல்யங் கொண்டு 'வாரும்' என்றேன். அதற்கு அவனும், 'அன்னை' என்று அடி பணிந்தனன். 'ஐயோ! நான் உன் பத்தினியாச்சுதே! அப்படியும் சொல்லப்போமோ? கணவன் கொஞ்சம் குறைவா யிருந்தாலும் குணமாக்கிக்கொண்டு போவது குலமகளின் நிறைகற்புக்கும் அழகன்றோ? அப்படிச் செய்த என்னையும் அன்னை யென்றையே! கொன்றுவிட்டையே! நன்றிகெட்ட நீ நானிலத்திலே, இன்று நானிடும் இப் பெரும் வினை சென்று தாக்கவும் சேதம் எய்துவை! உன்றன் ஆவியும் ஒழியும்' என்ற நான் அப்படிச்

சொல்லி ஒன்றுந் தோன்ருது மெய்ம்மறந்தபோது என்னையும் கை நழுகவிட்டவனுய்க் காணும லெங்கேயோ போய்விட்டனன்'' என்றனன்.

இதைக் கேட்ட இராஜராஜேஜஸ்வரியும் இளஞ்சிரிப்போடும் "ஹே! இராஜகுமாரி! ஏன் இப்படிக் கலங்குகின்ருய்? நீ எதற்கும், பயப்படவேண்டாம். இவ் விராஜகோலத்தோடு உன்னைக் கூட இஷ்டமில்லாதவஞு யிருப்பதாலே, இதோ என் தபோ மகிமையால் இந்த ரூபம் நீங்கவும், இனி நீ தாசிரூபங் கொண்டு, அவனை யணையும்படி தாரா நகரம் சென்று, அங்கே தங்கி யிருப்பாயாஞல், அவனும் அங்கே வருவான். கவிகளை யெல்லா மயக்கும் உன் அரிய கவிக்கும் விடை யளித்து இடைதுவஞ முன்னேடு மிடைவிடாத போகத்தை யநுபவிக்கவும், "மடைதிறந்த வெள்ளம்போல' மனோரமயங் கொள்வாய்'' என்றருளி அந்தர்த்தானமாகவும், அப்போதே தாசிரூபத்தைக்கொண்ட தானும் அவ்விடம்விட் டகன்று, அழகிய தாராநகரம் வந்தடைந்து, அங்கே ஒரு தக்க விடுதியொன்று அமைத்துக்கொண்டு, கல்விக்களஞ்சியமாகிய காளமேகத்தின் வரவுக்கும் 'கானகத்து மயில்போலும்' எதிர்பார்த்திருந்தனள்.

---

## காளிதாசனுடைய பூர்வஜன்ம வரலாறு

அநேக இராச்சியங்களிலெல்லாம் பிரவேசித்து, விநோதகவியாகிய தன்னுடைய அபார சுலோகத்தாலே அங்கிருப்பவர்களை யெல்லாம் அப்படியப்படியே மெய்ம்மறக்கச் செய்வித்து, எங்கும் புகழ்கொண்டு, தக்க வெகுமதிகளாக விலையுயர்ந்த பட்டாடைகளையும் மலையில் விளையும், நவரத்தினங்களையும், அலைகடலின் முத்தாரங்களையும் அளவில்லாமற் கொண்டு, விற்பன விவேகிகளாகிய வித்துவ ரத்தினங்களெல்லாம் உற்பவ கவி யென்று உள்ளத்தில் மதிக்கவும் ஒப்பற்ற கவிச்சிங்கம்போல விளங்கி கலியுகாதி மூவாயிரத்து எழுநூரு மாண்டின் மத்தியிலே, கிறிஸ்துவின் 6-வது நூற்ருண்டின் ஆதியிலே, புகழ்பெற்றோங்கிய போஜனுடைய தாராநகரத்திற்கும் வந்தனன்'' என்று ஆண்பக்ஷி கூறியது.

பெண் பக்ஷியும், "அமிர்த தாரைபோலச் செவிக்கு இனிமை தரும் இம் மகா கவியின் கதையைக் கேட்கக் களிப்புண்டாகிறதே தவிரச் சலிப்பென்பதைச் சற்றுங் காணேமே! இப்படிப்பட்ட

மகானுபாவனும் பூர்வ ஜன்மத்திலே என்ன தவம் பண்ணியிருப்ப னோ? எப்படிப்பட்டவனோ? மைப்படியுஞ் சிகரகூடங்களையுடைய மகம்மேருவை யொத்த அப்போஜனுடைய மகா சபையிலே விளங் கினுனென்று சொன்னபோதே இன்னொருதரம்! இன்னொருதரம்! எப்படி விளங்கினுன்! எப்படி விளங்கினுனென்று கேட்டுக் கேட்டு உடலமெல்லாம் பூரித்து மயிர்க்கூச்சிட்டு மெய்ம்மறக்கச் செய்த தன்மையைச் சொல்லவும் வேண்டுமோ? அப்படிப்பட்டவன் வர லாறும் அதிசயத்தைத்தானே விளைவிக்கக்கூடும். அநேக அற்புத ஸ்தலங்களையெல்லாம் அடுத்து அங்கங்கேயுள்ள அரிய மகான்களை யெல்லாங் கண்டு சேவித்து, அவர்களுடைய ஆசீர்வாதப் பெருக் காலே அதிரகசியங்களையெல்லா மறிந்திருக்கும் தேவரீர் இவ் வபூர்வ ஜன்ம விருத்தாந்தத்தையும் பூரணமா யறிந்திருக்கலாமே? அப்படி யானுல் அதையு மடியாட்கு அநுக்கிரகிக்க வேண்டும்" என்றது.

அதற்கு அவ்வாண்பக்ஷியும் ஆநந்தப்பெருக்கால் தன் ஆகத்தி லுள்ள அன்பெல்லாம் வெளிப்படவும் அப்படியே அடங்கா மகிழ்ச்சி யுடனே அழகிய தன் இரண்டு இரக்கைகளையும் விரித்துத் தன் பேட்டை (பெண்பக்ஷியை) இறுகத் தழுவிக்கொண்டு, "ஆ! என் இன்ப ரசமே! இரகசியார்த்தங்களையெல்லாம் இன்னதென்று விசா ரிக்கும் உன் ஆழ்ந்த அறிவிற்கும் உவமை யுண்டோ? உன்னிடம் சொல்லக்கூடாத இரகசியமும் ஒன்று உண்டோ? ஓ என் மனோ ரதமே! விநோதமாகிய இக் காளிதாசனுடைய பூர்வஜன்மத்தை வினவிய நீயும் புத்தியை வேறெங்கும் போகவொட்டாமல் நிலை நிறுத்தி யுக்தி பூர்வமாய்க் கேட்பாயாக!

இன்று யான் வெளியிற் போய்த் திரும்பிவர வெகு நேரமாக வும், தனித்திருக்கும் உன்னையு மனத்தில் நினைத்து வருந்திய யானும் 'எப்படித் தயங்குகின்றையோ?' என்ற ஏக்காத்தால் மனம் உன்னிடத்திலாகவும் ஒரே வேகமாய்ப் பறந்து வருகையில் இடை யிலே யுற்ற பதரிகாவனத்திலே பச்சென்று விளங்கிய ஒரு தோப் பைக் கண்டு, அதில் ஒரு உயர்ந்த மாமரம் ஒன்றிருக்கவும் வழியி லுண்டான ஆயாசத்தினுல் அதை யடைந்து அதின் அடர்ந்த கிளை களிலொன்றில் தங்கினேன். பக்தவத்ஸலனுகிய சாக்ஷாத் பகவான் அம்புஜாக்ஷன், உரகராஜசயனுகிய உத்தமனுடைய அம்ஸாவதார னுன் நாராயண மகரிஷியின் ஆசிரமத்தையுடைய அந்த உய்யான வனத்திலே ஒப்பற்ற மரங்களெல்லாம் ஒன்று தவருமல் துளிர்த்

துப் பசுமைகொண்டு பார்வைக்கு இனிமையைத் தருவனவாய் அங்கங்கே செடிகள்முதலிய கொடிகளின் செறிவுற்று அடியெடுத்து வைப்பதற்குங் கூடாதபடி அடர்ந்து அநேகவித இரத்தினராசிகளை யெல்லாம் அங்கங்கே பரப்பிவிட்டதுபோல விநோதமாகிய புஷ்ப ராசிகளால் புஷ்களமுற்ற புல்பூண்டுகளாலே விமரிசைகொண்டு மனதுக் கிசைந்த கண்டத்தொனி யெடுத்துப் பாடவல்ல பக்ஷி ஜாதிகளெல்லாம் பறந்து திரியவும், விதம் விதமாகிய மிருகஜாதிகளெல்லாம் தங்கள்தங்கள் இசைபோல வேறுபாடின்றிக் கூடி விளையாடவும், 'நீறு பூத்த நெருப்பைப்போல' நிமீலனநேத்திராய் நிஷ்டை கூடிச் சேஷ்டையற்றிருக்கும் அத் தபோநிதியின் அற்புதக்காக்ஷியையும் அப்படியே பார்த்துக்கொண்டிருந்த யான் அங்கேயொரு மரக்கிளையில் சடுதியிற் றோன்றிய அழகிய காக்ஷியும் என் ஆகமெல்லாங் கொள்ளைகொள்ளவும் ஆச்சரியங்கொண்டு,'அஃதென்ன?', என்று நோக்கும்போது, அந்த அற்புதப்பொருளும் மகா சிற்பிகளாலும் அதிசயிக்கக்கூடிய சித்திரவேலை போலுஞ் சிறந்து பொன்மயமாக விளங்கிய இரக்கைகளையும்,திருந்திய கண்டரேகைகளையும், செந்தாமரை போன்ற கண்களையும், சிவந்த பவழம் போன்ற கால்களையும், உயர்ந்து நீண்ட கழுத்தையும், அதில் ஒரு ஒப்பற்ற சுவேதநிறத்தையும், வளைந்து முனை சிறுத்த மூக்கையும், வனப்புற்று விசாலித்துத் தழைந்த மயிர்ச்செறிவினையு முடையதாய் வளமை பெற்ற தேவபாஷையிலே இளந்தென்றலுக்குரிய இனிய கானங்களைப் பாடிக்கொண்டிருக்கக் கண்டேன். வலிய அதனிடத்திற் சென்று வார்த்தையாடி நேசங் கொண்டேன். அதுவும் என் மேற் பிரீதிகொள்ளவும் இன்று காலையில் யான் கண்ட இனிய காக்ஷியையும் அதனிடத்தில் விண்டேன். அண்டமாளாவிய அநேக சிகரங்களையுடைய கூடகோபுரங்களால் நிறைவுற்ற அத் தாராநகரத்தின் அதிசயத்தை யெல்லா மெடுத்துச்சொல்லி, அவைகளுக்கெல்லாம் ஆதாரமாகிய அபாரகவியையுங் குறிப்பிட்டு, "அப்படிபட்ட மகாநுபாவனும் பூர்வம் எப்படிப்பட்டவனோ?" என்றேன்.

அதைக் கேட்ட அந்த அபூர்வ பக்ஷியும் "அறிவிற் சிறந்து என்னோடும் அளவளாவிய அரிய நண்பனே! ஆ! அவ்வதிசயத்தையும் யான் அறிவேன். அதை உனக்குச் சொல்லாமல் யான் யாருக்குத்தான் சொல்லப்போகிறேன்? முன் ஒரு காலத்திலே, முற்றுமுணர்ந்து மும்மலங் கடந்த ஜீவன்முத்தர்களை நாடி ஆவலாய்

அங்கங்கே யோடித் தரிசித்து வந்த யான் இந்த வனத்திற்கும் வந்து தங்கினேன். அப்போதும் இதுபோலவே குளிர்ந்த காற்று வீசியது. அதனால் என் ஆயாசம் நீங்கவும், அங்கு மிங்குமாய்ச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கையில், அங்கே ஸ்திரீகளின் காலிலணியும் கணையாழியின் சப்தமானது கலீர் கலீரென்று முதலில் தூரத்திலே கேட்டது. அதைச் சற்றுக் கவனிக்கவும், வரவரச் சமீபிக்க லுற்றது. அந்தச் சப்தமும் சந்த தாளத்தோடுங் கூடிக் கர்ணாமிர்தம்போ லிருந்தது. கொஞ்சநேரத்திற் கெல்லாம், வஞ்சிக் கொடி போன்ற இடையும், வனத்திலுற்ற இளம்பிடி (யானை) போன்ற நடையும், உயர்ந்த இரத்தினங்க ளிழைத்த உடையும், பயந்த பார்வையும், பந்தி கொண்ட தந்த வரிசையும், பரந்து அகன்ற கண்களும், விரிந்த ஆகாயத்து விசித்திரங்களி லொன்றாகிய பிறைபோன்ற சாந்தணிந்த நுதலும், அகில்முதலிய வாசனைத் திரவியங்களின் புகையெலாம் படிபவும் புயல்போன்ற கூந்தலும், மயில்போன்ற சாயலும், மான் மிரக்ஷியும், சந்தனந் திமிர்ந்த மார்பினையு முடையவளாய் விசாலமாகிய முகத்திலே யொருவித விசாரத்தோடே அங்கே வந்த ஓர் அழகிய மோகவதியைக் கண்டேன்.

அவளுடைய அளவுற்ற அவயவங்களின் அமைப்பிற்கும், அதற்கேற்று உபுக்கெடுத்த அழகுக்கும், அபரஞ்சியின் சாயலுக்கும், மிதமிஞ்சிய எழில்கொண்ட மேனிக்கும், இனிய குரலுக்கும், என்னவோ அற்பபிராணியாகிய யானே எவ்வளவோ அதிசயித்தேனென்றால், அவனியின் ஆடவர்க்குச் சொல்லவும் வேண்டுமோ? அக் கட்டழகியும்,

அழகெலாந் திரண்ட அமோகவா ரிதியோ?
முழவுமென் றேளார் முன்கைநற் கிளியோ?
அநகனு குயிரா மருள்பெறும் ரதியோ?
உலகெலாம் விளங்குமிவ் வுத்தமிக் கோப்பாம்.

என்று சொல்லும்படி எழிலுற் றிருந்தனள்.

அப் பெண்மணியும் ஐம்புலனடக்கி இன்புறத் தவ மியற்றும் அந்த நாராயண மகரிஷியின் பாதாரவிந்தத்தைத் தாராளமாகச் சேவித்துக்கொண்டு, "தேவதேவனே! ஜெகதீசனே! தீனதயாளு! திவ்விய நாமனே! பக்தவத்ஸலா! பரமதயாளா! ஏழைபங்காளா! எம்பெருமானே! துஷ்டசம்ஹாரா! இஷ்டபரிபாலனு! ஏழைக்கிரங்க வேண்டும் என்னையனே!" என்று இரண்டு கண்களிலும் நீர் துளிக்க

வும், சிரமேற் கரங் கூப்பி அஞ்சலி அஸ்தளாய் வஞ்சிக்கொடி போலும் வாடி நின்றனள்.

அப்போது அந்தத் தபோநிதியும் கண்விழித்துக்கருணை பூத்த வராய், "கஞ்சமலரனைய கண்ணுளே! காசினி செய்த மாதவமோ! இங்கேயும் உன்னைக் காணக் கிடைத்தது. எங்கிருந்து வருகின்றாய்? ஏன் இப்படி ஓல மிடுகின்றனை? இந்திரன்முதலிய யாவரும் புகழு மினிய குரலையுடையாளே! உனக்கும் இப்போதுற்ற துயரம் ஏதோ?" என்றனர்.

அதற்கந்த அழகிய ரூபவதியும், "ஐயனே! யானே யக்ஷரூபி என்னும் ஓர் அப்ஸர ஸ்திரீ; என் வரலாற்றைக் கேளும் மகப்பிரபு! அண்டர் போற்றும் ஐராவதத்தண்ணலின் அழகிய சுதர்ம சபை யின் அரம்பா ஸ்திரீகளுக்குள் ஆட்டத்திலும் பாட்டத்திலும் சிறப் புற்று அழியாப் புகழ்கொண்டவள். அவைகளில் அதிலாவண்யமுற்ற யான் நேற்றையதினம் அச் சபைக்குப் போகவேண்டிய முறை யாகையால், அதற்காக அதிவிநோத அலங்காரத்தோடும் அங்கே போனபோது, நான் கொண்ட அழகைப் பார்த்து அங்கிருந்த அநேக ரிஷிகளுள்ளும், தபோதனர்களிலும், யக்ஷ கின்னர கந்தர்வ சித்த வித்தியாதரர்களிலும், அஷ்டதிக்குப் பாலகரிலும் என்மேல் திருஷ்டிகொள்ளாதவ ரில்லை. அவ்வளவு சோபிதமுற்ற என்னைப் பார்த்து இந்திரனும் மையல் கொண்டனன். இது இப்படியிருக்கவும், அச் சுதர்மசபையிலே ஆஜாநுபாகுவாய் அரவிந்தத் தண்ணல்போ லும் விளங்கிய அத்திரிமுனிவரும் அமரர்வேந்தனைப் பார்த்து, "ஓ இந்திரபூபதி! நேற்றையதினம் பாரத்துவாச மகரிஷியார் தேவ பாஷையில் நாடக ரூபமாக வியற்றிய மகாதேவனை வஞ்சித்த மோஹனவதாரபாகத்தை நடப்பிக்கப் பாத்திரமாக நளினரூபி யாகிய இவளைக்கொண்டு செய்யலாமே." "ஹே பாக்கியவதி! நீயும் அந்த சாக்ஷாத் பகவான் அநந்தசயனன் அன்றெடுத்த மோஹன வதாரத்தைக் கொள்ளவேண்டும்; இதோ இருக்கிற இரண்டுகோடி கந்தர்வர்களுக்குத் தலைவனாகிய நளகூபரன் என்னும் அளாகபுரிக் கிறையின் மைந்தனுக்கு அன்பனான அம்ஸனும் அழகிய சாம்பவ மூர்த்தியின் வடிவாய் வருவன். மற்றுமுள்ள ரம்பாதிகளும் சமயோ சிதமான பாத்திரர்களாய் வருவார்கள்." என்று ஆக்ஞாபித்து அகம் பூரிக்கவும், அவர்களெல்லோருந் தங்கள் தங்களுக்கேற்ற பாத்திரர்க ளாகத் தாராளமாய்ச் சபையில் வந்தனர்.

## சுதர்ம சபையில் நாடகம்.

## திரிலோசனனை வஞ்சித்த பாகம்

அப்போது நாரதர் கைலைக்குச் செல்லுதல்; அங்கே அம்முனி புங்கவரும் அருட்பெருங்கடவுளை நோக்கி, "ஐயனே! அமரர் என்னும் பெயர்பூணும்படித் தேவரும் ராக்ஷஸர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தனரே! அதனா லுண்டான அமிர்தத்தைத் தேவர்களுக்கு மாத்திரம் பங்கிடும்படியும், இராக்ஷதர்களை வஞ்சிக்கும்படியும் மாயன் மோகன ரூபங் கொண்டனரே! ஆகா! ஐயனே! அதைக் கண்ட அரிய தபோதனரென்ன! ஐம்புலனடக்கி இன்புறத்தவமியற்றும் இருடியரென்ன! ஐம்புலனொடுங்கவும் தென்பினை யிழந்த அடியேனைப் போன்ற அநேக நீடித்தவர்களென்ன! மற்றுமுள்ள சாதுக்கள்முதலிய பெரியோர்களும் அப்படியப்படியே அசந்து, அசைவற்று அறிவழிந்துபோயின ரென்றால், எங்கள் இறைவே! இசைந்த புஷ்பபாணத்தைக்கொண்டு எதிர்த்துப் போர்தொடுத்து எழில் பெற்றமதனையும் நுதல்கொண்ட விழியால் அதம்செய்த ஐயனே! இதங்கொண்ட அம் மோகினியின் அழகுக்கும் இலக்காகி தேவர் இதயங் கலங்காம னிற்கவோ!" என்று கூறுதல்.

அதைக் கேட்ட ஐம்முகத் தண்ணலும், அநேக கணநாதர்களையும் நீக்கி, அழகிய லோகமாதாவையும் அப்புறத்திருத்தி, "கொஞ்ச நேரம்" என்று சொல்லித், தன்னந் தனியாகத் தான் மாத்திரமே, இன்ன லிழைப்பவர்க்கும் இதம புரியக் கருதும் உள்ளன்பு கொண்ட உத்தமோத்தமனாய் உலகெலாம் அளித்துக் காக்கும் உரகசயனனுக்கு உகந்த பதியாகிய வைகுந்தற்திற்கு வருதல்.

அங்கே விஷ்ணுவைப் பார்த்து "பாற்கடல் கடைந்தபோது நீர் கொண்ட மோகனவதாரத்தை நாம் பார்க்கும்படி இப்போது எடுக்கவேண்டும்" என்று சொல்லுதல்.

அந்த க்ஷணமே அநாதரக்ஷகனும் அந்தர்த்தானமாகி அங்கே ஓர் அழகிய மோகனவதாரமெடுத்தல்; அழகெலாந் திரண்ட வுருவாய், அதிவினோதச் சாயலோடும், தூல்லியமாகிய நுண்ணிய ஓர் ஆடை யுடுத்து அவயவங்களெல்லாம் அங்கங்கே அளவுற்று உபுக் கெடுத்துத் தளதளப்புடனே எழில்கொண்டு எடுத்துக் காட்டவும், உன்னதமாகிய முன்னங்கையிலொரு முந்தானையைத் தாங்கி ஒய்

யார நடைகொண்டு கண்டவர் மனமுங் கண்ணுங் கொள்ளைகொண் டுண்ணும்படிக் காயாம்பூவண்ணன் கொண்ட மாயரூபத்தைக் கண் ணுற்ற மகாதேவனும் மாயையின் வசத்தராய் மனங் கலங்கவும் மயங்கி, அம் மோகினியைத் தொடர்ந்து செல்லுதல்; அவ்வாறு சிறிது தூரஞ் செல்லவும் அதி மோகத்தால் சாம்பவமூர்த்தியும் அம் மோகினியை ஆலிங்கனம் செய்யும்படி அவளது முன்னங் கையைப் பற்றுதல்; அப்படிப் பற்றிய பிடியினின்றும் தப்பித்துக் கொண்டு பூம்புதரொன்றில் அம் மோகினி மறையப் போதல்; அங்கே யொரு பூங்கொடியில் தன் ஆடை சிக்கிக்கொள்ளவும் திகம் பரியாகிய மோகினியும் லஜ்ஜையினாலே தயங்கி நிற்கவே, அதைக் கண்ட மகாதேவனும் மாயையின் வசமாய் மையல் மீறவும் இது தான் சமயம் என்று அம் மோகினியை ஆலிங்கனம் செய்யப் போதல்; ஆகிய அப் பாகத்தை அதிவிமரிசையாய் அபிநயித்து வந்த போது, சாம்பவமூர்த்தியின் கோலங் கொண்ட அம்ஸகுமாரனும் அபாரமாகிய ஆசை மேலீட்டினால் மோகினிரூபங் கொண்ட என்னை யும் ஆலிங்கனம் செய்ய வந்தபோது, திகம்பரியாக விருந்த யான், அந்தர்த்தானமாய்ப் போவது நியாயமாயிருக்கவும், அப்படிச் செய் யாமல் அவனிடத்தில் எனக்கு உண்டாயிருந்த அன்பின் மிகுதியால் அங்கேயே ஏகாந்தத்தில் இருந்துவிட்டேன். அவனும் என்னிடத் தில் அநேக நாளாய் ஆசைகொண்டிருந்தவனாகையால், என்ன செய் வோம் ஆண்டவனே! எங்கள் மனது ஒன்றுபடவும் புருஷன் என் றால் பூரிப்படையும் புல்லறிவாகிய ஸ்திரீ ஜாதி; அதிலும் அழகிற் சிறந்து அறிவின் மிகுந்த ஆண்மகனொருவன் அண்டையி லிருந்தா லோ? அவர்களுக்கும் வேறொன்றும் வேண்டுமோ? ஐயனே! இத னால், இந்திர பூபதியும் எங்குமில்லாக் கோபங் கொண்டு, என்னைப் பார்த்து, "ஹே ரூபவதி! இது ஏகாந்த ஸ்தலமாயிருந்தபோதிலும் நாடகத்துக்கு விரோதமாகையால், நீயும் இப்படிச் செய்யப் போமோ?

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்."

என்பதை மறந்தாயோ! தகாத காரியம் செய்தபடியால் நீயும் தாணி யிலே, அகாதமாகிய காடுகளடர்ந்த பரதக்கண்டத்தின் விந்தகிரிக்

* திருக்குறள்: அறத்துப்பால் - இல்லறவியல் - கச - ம் அதி. - ஒழுக்க முடைமை - அ.

குச் சமீபத்திலே சகல லக்ஷணங்களோடுங் கூடிய மாளவநாட்டிலே மானிட வுருவங் கொள்வாயாக; ஆசை மிகுதியை அளவு கடந்து காட்டிய நீயும் வேசைத்தொழில் பூண்பாயாக," என்று வேகமாகிய கொடிய சாப மிட்டனன்.

அதனால் மனம் வருந்திய என்னையுங் கண்ட என் பிரிய சகியாகிய ஊர்வசியும் சற்று, யோசித்து, "ஹே! பிரியை! உள்ளங் கவலேல்! நிமீலன நேத்திரனாய்ச் சதா நிஷ்டை கூடிய சாக்ஷாத் பகவானாகிய நாராயண மகரிஷியின் பாதாரவிந்தங்களைச் சரணாகதி யடைவாயானால், சகலமு முனக்குக் கைகூடும்" என்றனள்.

அதைக் கேட்ட அடியாளும் சர்வசமுத்பவ காரணராகிய தேவரீரைச் சரணாகதி யடைந்தேன். இன்றைக்கும் நான் பிரம சபையில் நடிக்கவேண்டிய முறை. அங்கும் யான் போகாவிட்டால் அரவிந்தத்தண்ணலும் என்ன ஆக்ஞை புரிவாரோ?" என்றனள்.

இப்படியாக மைப்படியுங் கண்களினின்று மைப்பொழியுந் தாரைபோல் கண்ணீரானது ஆறாய்ப் பெருகவும் நீறு பூத்தவளாய் நெட்டுயிர்ப்பெய்தி வாட்டமுற்றவளைக் கண்ட அம் மகரிஷியும் சற்று நிதானித்து, அவளைப் பார்த்து, "அழகிற் சிறந்தவளே! நீயு மின்றைக்குப் பிரம சபைக்குப் போ! அங்கே உனக்கு வேண்டிய யாவும் சரிகூடும்" என்று சொல்லி உடனே அவர் நிஷ்டை கூடி விட்டனர்.

அந்த நளினரூபியும் நாமிருக்கு மிவ்விடத்திற்கு வந்து இம் மரத்தின் கிளைகளி லொன்றைத் தன் இடதுகையாற் பிடித்துக் கொண்டு இளைப்பாறி நின்றனள். இதற்குள்ளாகச் சில ஸ்திரீ ஜாதிகளால் அங்கே கொண்டுவந்த அபூர்வமணிகளைப் பூண்டு ரதிதேவியும் பின்னிடும்படியாய் எழில் கொண்டனள். அப்போதக்கிளையில் அவள் கைக்கும் எட்டும்படியாய் அவ்வளவு அருகில் வந்து தங்கிய என்னையும், எடுத்துத் தன் முன்னங்கை யாபரணமாகக்கொண்டு என்னழகைப்பற்றி வர்ணித்துக்கொண்டே பிரம சபைக்குப் போனவள், அங்கேயிருக்கும் சாளரமொன்றில் என்னையும் விட்டு விட்டு நிறைந்த கொலுவுக்குச் சென்றனள்.

## பிரம சபையின் விசேஷம் - தூர்வாசருக்குச்சாபம்

அப்போது பிரமதேவனும், ஒரு நாரதர் என்ன! புலஸ்தியர் என்ன! மரீசி என்ன! காசிபர் என்ன! காலவர் என்ன! பாரத்துவாச, வசிஷ்ட, அத்ரி, விஸ்வாமித்திராதிகளென்ன! இப்படிப்பட்ட பிரம ரிஷிகளெல்லாம் எதிரிலிருந்துகொண்டு சாமவேதகானம் செய்யவும், இந்திராதிகளும் - அஷ்டதிக்குப்பாலகரும் அப் பிரமதேவனுக்கு நமஸ்காரஞ்செய்து அயலிலே அங்கங்கே எழுந்தருளவும், மற்றுமுள்ள முனிவர்களும் ரிஷிகளும் சதா வந்திக்கவும் சார்வபௌமனாகிய அச் சதுர்முகனும் சகஸ்திரதள பத்மபீடத்தின் மீது சகல மங்கள வாத்தியங்களு முழங்க எழுந்தருளியிருந்தனன்.

சாளரத்தில் என்னை விட்டுச் சபைக்குச் சென்ற அவ்வப்சரமாதும் பத்திபூர்வமாய் அச் சதுர்முகனுடைய பாதம் பணிந்து எழுந்து நின்றனள். வேதமூர்த்தியும் அவளை நோக்கி க்ஷேமம் விசாரித்துக் குசலப்ரஸ்னைகள் செய்து, "தேவமாதருள் சிறந்து விளங்குந் திவ்யரூபி! என்னுடைய ஒப்பற்ற நிர்த்தனத்தைக் கண்டு களிக்கத் தங்கள் தங்கள் பதிகளை விட்டு இங்கும் வந்திருக்கின்ற தபோதனர்களைப் பார்த்தையோ? ஆகையால், ஆலசியம் செய்யாமல் உன் அரிய வித்தையாகிய ஒப்பற்ற நிர்த்தனத்தால் இவர்களெல்லோருடைய இதயங் களிக்கும்படி சரஸ்வதியும் சபைக்கு வந்தவுடனே ஆரம்பிப்பாய்" என்றனர்.

அப்போதே பாரதியும் அழகிய வெண்பட்டு உடுத்து, சகலாபரண பூஷதையாய், வேதபுஸ்தகமும் வீணையும் மணிமாலையும் சின்முத்திரையும் விளங்கும்படி சுப்பிரசன்னமாயினள். அவையிலிருந்த எல்லோரும் அப்படியே பொட்டென்றெழுந்து புளகாங்கிதத்தால் உடல் பூரிக்கவும் மயிர்க்கூச்சிடவும் சிரமேற்றூக்கிய கரத்தினராய் அச் சகலகலாவல்லவியைத் துவாதச நாமங்களாலும், ஸ்ரீசூக்தத்தாலும் துதிக்க ஆரம்பித்தனர்.

அதைக்கண்ட தேவியும் அவர்களையெல்லாங் கையமர்த்தி யுட்காரச் சொல்லவும், அப்போதவர்களில் அரிய தவத்தினாலும் அபார சக்தியாலும் விபாண்டகரைப்போல விமரிசையுற்று உமையவள் பங்கனாகிய உருத்திர மூர்த்தியின் அம்ஸமாக விளங்கும் தூர்வாச மகரிஷிமாத்திரம் சிலரோடு சண்டையிட்டுக்கொண்டும், கண்டபடியெல்லாம் பேசிக்கொண்டும், இங்குமங்குமாய் ஓடிக்கொண்டும் சாம

வேதகானத்தி லுண்டாம் அபசுரத்தையுங் கவனிக்காமல எதையும் அலக்ஷியம் செய்து, அங்கிருப்பவரெல்லாரும் இவைகளைச் சகிக்க முடியாமல் காதுகளைப் பொத்திக்கொண்டு ஹரி ஸ்மரணை செய்யும் படித் தன்னிஷ்டம் போலக் கூச்சலிட்டுத் தன்னிடையிலிருக்கும் பட்டாடை யவிழ்வதுங்கூடத் தெரியாமல் கூத்தாடிக்கொண்டு மிருக்கக்கண்ட சிலபெரியோர்களெல்லாம், "இவரோ! மகா கோபி! ஒருவேளை நம்மையும் சபித்தாலும் சபிப்பர்; நமக்கேன் பொல்லாப்பு?" என்று தங்களுக்குண்டான சிரிப்பையு மடக்கிக்கொண்டு மௌனமாயிருந்தனர்.

அதைக் கண்ட சரஸ்வதியும் பவழம்போன்ற இதழ்களினிடையிலே பணில முயிர்த்த வெண்முத்தனைய தந்தபங்திகள் ஒளிவிட்டுப் பளபளப்போடும் பாதிமாத்திரமே பிரகாசிக்கவும் மந்தகாசம் செய்தனள். அதனால் பிரமதேவனும் குறுநகை கொண்டனர். அப்போது முனிவர்களும் ரிஷிகளும் "ஆ இதென்ன அநர்த்தகாலம்! எப்படி முடியுமோ?" என்று எதிர்பார்த்திருந்தனர்.

இவைகளை யெல்லாம் எப்படியோ தெரிந்துகொண்ட அத் தூர்வாசமாமுனியும் அரியதவத்தினராகிய தாம் அடங்காத கோப வயத்தராய் அச் சபை நடுங்கும்படி ஆர்த்து, அந்த அம்ஸவாகனியைப் பார்த்து, "ஆகா! அம்மணீ! ஜகதிக்கியாதா! நன்றாயிருக்கிறது! உலகத்திலே உத்தமஸ்திரீகளும், சாதுக்களாயிருப்போர்களும் அந்நியருடைய குற்றங்களை அணுவளவுங் கவனியார்கள்; அப்படியிருக்க, அறிவிற் சிறந்த நீயும் உன்னுடைய தந்தபங்திகள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்படி முறுவல்கொண்டனையே! அதைக் கண்ட அரவிந்தத்தண்ணலும் அடங்கா மகிழ்ச்சியுடனே முகமலர்ந்தனரே. ஆகா! அம்மணீ! இதோ நீயும் என் சாபத்திற் கிலக்காகி, இனிய உன்பதத்தாவையும் நீங்கி, உவராடை யுடுத்த வுலகத்திலே சென்று, தவவாய்மை கொண்ட தாராநகரத்திலே எவராலு மதிப்பதற்கரிய ஏமசபையின் மத்தியிலே எழுந்தருளியிருக்கும் காமனைப்போலுங் கட்டழகமைந்த காவலனுக் குகந்த பட்டமகிஷியாவாய்" என்று கனத்த சாப மிட்டனர்.

அதைக் கேட்ட சபை முழுவதும் அப்படியே அசந்துவிட்டது. அறவிந்தத்தண்ணலும் தன்னை மறந்து சாய்ந்துவிட்டனர். சரஸ்வதியு மூர்ச்சித்தனள் என்றால் சபையின் அழகைஅலங்கரிக்கவும் வேண்டுமோ? அப்போது சரஸ்வதியின் தலைமைப் பாங்கியும்

சகிக்காத கோபதீப்தளாய் அத் தபோநிதியைப் பார்த்து, "அகோ! பிராமணா! என்ன சொன்னீர்? நன்றாயிருக்கிறது! உம்முடைய அரிய தவத்தின் பெருமைக்கும் அவதி வந்ததோ! அகோரமாகிய கொடிய சாபத்தினாலே என் அம்மணியின் அகங் குன்றச்செய்தனையே! அதனால் அரவிந்தத்தண்ணலும் அசந்துபோயினரே! ஐம்புலனடக்கி அறிவை யொருவழிப்படுத்தி இன்புறத் தவமியற்றித் துன்பக்கடல் கடந்த துறவிகளாலும், தூய அறிஞர்களாலும் வரையறுத்து அளவிடற்கரிய ஆற்றலையுடைய அகிலலோகமாதாவைப், புவனம் பதினாலும் போற்றும் பூரணியை, சகலசமுத்பவ காரணியைச் சற்றும் எண்ணிப் பாராமல் சபித்தனையே! நீ அருமையாய்த் தேடிய அத்தனைத் தவத்தையும் அரைநொடியில் அவல மாக்கினையே! அளவு கடந்த கோபத்தைக் காட்டிப் பிளவுபட்ட முத்தம் போல என் அம்மணியின் மனத்தைப் பேதிக்கச் செய்தனையே! இதோ நீயும் என்னு விடப்படும் இச் சாபத்தால் உன்னுடைய தவமெலாந் தவிடாய்ப் பறக்கவும், பூமியிலே மானிடவுருவந் தாங்கி மாடுமேய்க்கு மடையனாக மயங்கக்கடவாய்" என்றனள்.

அதற்கு அத் தபோநிதியும் "அப்படி மயங்கு மென்னால், சிறந்துவிளங்கப்போகும் ஏமசபையிலே இறைவன் சிம்மாதனத்திற் கெதிரிலே அந்தரத்திலே சுந்தரங் கொண்ட கவரிவீசுந் தொழிலைக் கைக்கொள்வாய்" என்றனர்.

அப்போது இன்னது செய்வதென்பது தெரியாது ஏங்கியிருந்த அந்தச் சபையின் மத்தியிலிருந்த அகஸ்திய முனிவரும், அகண்ட பாற்கடலி லுற்பவித்துத் திரண்ட தோள்களையுடைய ஸ்ரீமந் நாராயணன் தேவியாய் அவர் திருமார்பி லுறையுஞ் செல்வத் திருமாதை, ஜெகமெலாம் புகழ் படைத்த ஸ்ரீதேவியைப் பத்திபூர்வமாகத் தியானிக்கவே, பக்தவத்ஸலியும் அவருடைய இஷ்டப்படியே மங்களகரத்தோடும் மகாதேஜஸ்ஸுடனே அங்கிருந்தவரெல்லாருங் கண்டு மகிழும்படி சுப்பிரசன்னமாயினள். அப்போது அவர்களெல்லோரும் ஆநந்த பாஷ்பவசத்தராய் அத் தேவியை யொவ்வொருவரும் சுலோகபூர்வமாக,

சு: நமஸ்தேஸ்து மகாமாயே ஸ்ரீபீடேசுரபூஜிதே |
சங்கசக்ர கதாஹஸ்தே மகாலக்ஷ்மி நமோஸ்துதே ||

என்று துதிக்க ஆரம்பித்தனர்.

அப்போது பிரமதேவனும், பாரதியும், அங்கிருந்த பெரியோர்களும் அம் மகாதேவிக்கு அடி பணிந்தனர். அது சமயம் சர்வ லோகரக்ஷகியும் சகஸ்திர தளாபத்மபீடத்தண்ணலை நோக்கிக் கருணை பாலித்தவளாய், "ஹே வத்ஸா! இவ்வளவு உற்பாதத்திற்குங் காரணம் உனக்குத் தெரியுமா! இத் தூர்வாசர் என்று எண்ண வேண்டாம்; இதற்கும் ஓர் காரண முண்டு:—

முன்னொருகாலத்திலே இச் சகலகலாவல்லவியும் நானுமாக ஓர் உய்யான வனத்திலே வேடிக்கையார்த்தமாக உலாவிக்கொண்டிருக்கும்போது, எங்களுக்குள்ளே 'யார்க்குச் சர்வசுதந்தர முண்டு?' என்பதைப்பற்றிச் சம்வாத முண்டானது. சரஸ்வதியும் தன்னுடைய அநுக்கிரக கடாக்ஷமில்லாதவர் தரணியி லடைவது மொன்று மில்லை யென்றும், தானே சர்வ சமுத்பவகாரணி யென்றும், கல்விக் கடல் கரைகண்டோர்க்குச் செல்வச்செறுக்குற்றோர் சேவகரே என்றும் சிறப்பித்துக் கூறினள். அதைக் கேட்ட யான் "அந்தமட்டும் போதும் அடக்கு உன் அதிகாரத்தை! ஆகா! என்ன சொன்னாய்! அறிவிற் சிறந்து அநேக சாஸ்திர ஆராய்ச்சி செய்து, நிபுணத்துவமுற்று, விநோத விற்பன்ன முற்று, விவேக புருஷனாக விளங்கினாலும், மநோபூர்வமாக என்னையும் பணிந்து என்னுடைய அநுக்கிரக கடாக்ஷத்தாலே இருநிதியம் படைக்காவிட்டால், என்ன பிரயோசனம்? செல்வமுண்டாகிக் கல்விபெருகவன்றோ சிறப்புண்டாகும். 'வித்தைக்குச் சத்துரு விசனந் தரித்திரம்' என்பதை விவேகமுற்ற நீயும் அறியாமற் போனதென்ன?" என்றேன்.

இதனால் ஒருவர்க்கொருவர் விபரீதமாக வாதிக்கவும் எங்களிருவர்க்கு முற்ற ஏற்றத்தாழ்வை இவ்வளவென் றறியக்கூடாமல் ஈஸ்வரியைத் தியானித்தோம். உடனே அம் மகாதேவியும் உதயகிரியின் பானுவைப்போல எங்களிருவர் மத்தியிலும் ஒளிவிட்டு, பிரகாசிக்கவே நாங்க ளிருவரும் நாணங்கொண்டு ஸ்ரீசூக்தத்தால் அத் தயாபரியைச் சேவித்து நின்றோம்.

அப்போது அவ்வம்மணியும், எங்களைப் பார்த்து, நீங்கள் கொண்ட சந்தேகம் நிவிர்த்தியாகும்படி நிலமகளுக்கு நேத்திரம் போன்ற நிடதபுரிக்குத் தென்மேற்காக நெடுந்தூரத்துக் காக்ஷியாக நிலைபெற்று விளங்குந் தாராநகரத்திலே போய்த் தங்குங்கள்! நாம் அங்கே பிரசன்னமாகப் போகின்றோம்; தேவபாஷையை அவலம்பித்துத் திராவிடாந்தர கர்னாடகாதி தேசபாஷைகளைக் கவியின் பிர

பாவத்தால் பிராமணருங் கைக்கொண்டனரே! வேதபாஷாபிவிருத்தியும் விவேக புருஷனாகிய விக்கிரமார்க்கனோடு மொழிந்து போய் விட்டது. இவைகளையெல்லாம் விருத்திக்குக் கொண்டுவந்து நிலை நிறுத்தும் பொருட்டும் திசைமுகனும் திரை கடல் சூழும் அவனியின்கண்ணே அகண்ட சாம்பிராச்சியத்தோடும் போஜனாயவதரிக்கப்போகின்றான். அவனுடைய அழகிய கல்விச் சபையிலே உங்களிருவருடைய தாரதம்யமும் ஒருவாறு வெளிப்படும்" என்று சொல்லி மறைந்தனள்.

## பிரமன் முதலியோர் பூலோகத்தில் அவதரித்தல்

ஆகையால், ஹே வத்ஸா! நீயும் அத் தாராநகரத்திலே அரசர்க்கரசாய் போஜனென்னும் புகழ்கொண்டு வித்வான்களுக்கெல்லாம் வேண்டிய வரையிலும் சன்மான மளித்து, வேதாதி பாஷைகளை விருத்திக்குக் கொண்டுவந்து, வெகு கீர்த்தி கொள்வாய்; இத் தூர்வாசருடைய கொடிய சாபத்தைக் கொண்ட இக் கலைமகளின் பணிமகளும் அப்படி நீ போய்த் தங்குந் தாராநகரத்திலே வித்வ சபையிலே கோடிசூரியப்பிரகாசமாய் விளங்கும் உன் சிம்மாதனத்திற்கு எதிரிலே அந்தரத்திலே சுந்தரங் கொண்ட பெண்கொடியாகக் கண்ணுக்கு அமையாக் காக்ஷியாகத்தானே விளங்கி, மாக்ஷிமை கொண்ட கவரி யிரட்டாநிற்பள். அவளுடைய தலைவியின் அருட்பார்வையால் அகண்ட கல்விக்கடலாய் விளங்கும் உன் அழகிய செல்வப்பெருக்கால் யானும் மங்குறுவேன். இத் தூர்வாசரிட்ட சாபத்தாலே ஏங்கி மனம் வாடிய இக் கொடியிடையும்—பாரதியும் பிடியிலடங்கு மிடையினளாய்ப் பிடிபோலும் நடைகொண்டு இருட்குலங் குடிகொண்ட கூந்தலானது படிப்படியாய்ச் சரிந்து விழுந்து பசுமையுற்றுப் பாதத்தை யளாவவும் பத்மினிஜாதியிலே பத்ம மலரின் மணங்கமழுந் தேகத்தினளாய் மகாதேஜஸ்ஸோடுங் கூடிய தனது இடது துடையிலே மச்சமுடையளாய், ஒப்பற்ற உலகவிளக்கா யவதரித்து உன்னரும் பட்டமகிஷியாய் வருவள். மகா கோபத்தைக் கொண்ட இத் தூர்வாசரும் இச் சாவித்திரியின் சாபத்தின் வேகத்திற் காற்றாது தாவித் திரியும் மான் கூட்டங்கள் நிறைந்த மகததேசத்திலே மானிடரூபங் கொண்டு அந்தணனாயுதித்தாலும் ஆடுமாடுகளை மேய்க்குந் தொழிலைக்கொண்டு அறி

விலியாய் அநேக விதமாய் வருந்தி வாடிக் கடைசியாகக் காவலன் மகளைக் கடிமணம் புரிந்து அவளாதரணையால் அகிலலோக மாதாவைப் - புவனம் பதினாலும் போற்றும் புவனேஸ்வரியை - இதயங் களிக்கும் இராஜராஜேஸ்வரியை இருகண்ணாலுங் கண்டு களித்து இருநிலத்திற் பணிந்து சிரமேற் கூப்பிய கரத்தினனாய் உருகிய மனதோடும் அவ் வொப்பற்ற மகாதேவியை ஓயாது துதித்துப் புகழ்ந்து கொண்டாடி அவளுடைய பூரண கடாக்ஷமுற்றுக் காளிதாசன் என்னுங் காரணப் பெயர் பூண்டு காவல ரெல்லாங் கண்டு களிக்கும் கவிச்சிங்கமாய்ப் புவி போற்றும் போஜபூபாலனுடைய வித்வசபையிலே புகழ்கொள்ளப் போகின்றனர். இதோ இச்சபையிலே இவ்வளவு பேருக்குங் குதூகலத்தை யுண்டாக்கிச் சபாலங்கிருதமாகவுற்ற இப் பொதுக் குலமாதும் புவியில் மன்னவன் மகளாயுதித்துச் சகலசாஸ்திரப் பிரவீணளாய்ச் சத்குண விவேகிகளால் மதிக்கப்பெற்று, மகா வித்துவான்களெல்லாம் மயங்கித் தியங்கிப் போகும்படி அதி நுட்ப கேள்விகளைப் போட்டு அயலிலிருப்பவரெல்லா மதிசயிக்கச் செய்வித்து ஆதவனொளிபோல் விளங்குவதானாலும் பொன்னகர்க்கு இறையின் பொல்லாத சாபத்தினாலே புவியிலே ஆடு மேய்க்கும் ஓர் அடிக்கட்டையை வெட்டுவோனுக்கு மணமகளாய், அப்படியும் அச் சாபத்தின் வேகம் அதிகரிக்கவே மாயாரூபிகளாகிய தாசிகளுக்குரிய வேஷதாரியாய்ப் பூசிதையுடைய வித்வ பூஷணத்திற்கே வேசையாயிருப்பள்" என்று சொல்லி எல்லோரும் பார்த்திருக்கும்போதே அம் மகாலக்ஷ்மியும் அந்தர்த்தான மாயினள்.

பிரமன்முதலிய யாவரும் பூலோக முற்றனர். தேவரும் ரிஷிகளுந் தங்கள் தங்களிடந் தேடிச் சென்றனர். அந்த அப்ஸரமாதும் தான் பூலோகத்திற்குத் திரும்பி வரும்போது இமோத்கிரியின் சாரலிலே என்னையும் விட்டு விட்டுத் தன் சாபம் ஈடேறவுந் தரணியிற் சென்றனள். கேட்டாயோ நண்பனே! இது இம்மகாகவியின் பூர்வ ஜன்ம விருத்தாந்தம்" என்று அப் புண்ணிய பக்ஷியும் புகலக்கேட்டு வந்தேன்" என்று ஆண்பக்ஷி சொல்லவும், அதற்குப் பெண் பக்ஷியும் அடங்கா மகிழ்ச்சி கொண்டு அப்படியே ஆநந்தவாரியில் மூழ்கியது.

---

# போஜபூபதியின் வரலாறு

அப்படி யாகந்தமுற்ற பெண்பக்ஷியும், "ஹே மநோரதனே! இக் காளிதாசனுடைய பூர்வ ஜன்ம விருத்தாந்தமு மிப்படிப் பட்டதோ! இதைக் கேட்டு யான் அடைந்த ஆநந்தத்திற்கும் எல்லை காணேமே! இதை நினைக்குந்தோறும் இதயம் பூரிக்கின்றதே! இவனுடைய இனிய தோழனுகிய போஜ பூபாலனுடைய புகழின் பிரதாபத்தையும் அடியாட்கு அருளவேண்டும்" என்றது.

எள்ளளவு மனதை இதர விஷயங்களிற் செல்லவிடாது, இத் தேவரஹஸ்யத்தையே கவனித்திருந்த சதாநீகனும் மற்ற விஷயங் களையுங் கவனிக்கும்படி தன்னை மறந்து நித்திரை கொண்ட தன் பத் தினியை மார்மீதிற்கொண்டு மரத்தடியில் தலை சாய்த்துப் படுத் திருந்தனன்.

அப்போது அவ்வாண் பக்ஷியும், "அரிய தவத்தி லுதித்து அறிவின் மிகுந்து அழகிற் சிறந்த தெரிவைமார்க்கெலாம் உரிய பொருளாய் அவர்கள் முன்னங்கை யாபரணமாக விளங்கி உள்ளங் கனியப் பாடும் ஒப்பற்ற மோகப்பொருளே! உற்றுக் கேட்பாயாக!

## தாரா நகரச் சிறப்பு

அடுக்கடுக்காய்ப் பத்திகொண்டு, அமோகமாக ஆர்ப்பரித் தெழுந்து விநோதவர்னங்களையுடைய திவலைகளை விஸ்தாரமாக வீசி, வரையாது கொடுக்கும் வள்ளலைப்போல ரத்னராசிகளை வாரி யெறிந்து வளமை கொண்ட கரைகளை மோதிக் கருத்தடங்கிய மகா யோகிகளைப்போலத் திரும்பிச் செல்லுந் திரைகளையுடைய ஆழ்ந்த கங்கை சூழ்ந்த இவ் வவனியின்கண்ணே, அநேக தேசங்களிலும் அதி சிறப்புற்று அஷ்ட திக்குகளிலும் விநோத வீரர்கள் காவல் பூண்டு ஆழ்ந்த அகழி சூழ்ந்த அண்டமளாவிய மதிற்புறமுடைய தாய், அகண்டு நீண்டு ஒழுங்கு பெற்ற சாலைகள் முழுதும் பூதாகார வுருவங்கொண்டு பூரித்தெழுந்த ஆல் அரசுமுதலிய அடர்ந்த விரு க்ஷங்களாய் நிறையவும், இருண்டு குளிர்ந்த காற்றிற்கிடமாய்க் குதூ கலத்தை யுண்டாக்குவதாய், அங்கங்கே அளவுகொண்டு வரிசை யுற்று வளமை பெற்ற வீதிகளெல்லாம் வேதசாலைகளும், யாகசாலைக ளும், விநோதமுற்ற சித்ரசாலைகளும், மாடமாளிகைகளும், மண்ட

பங்களும், சாவடிகளும், கொலுக்கூடங்களும், கொத்தளங்களும் பெருத்த கட்டடங்களுமாய் நெறுங்கவும், அழகிய இராஜவீதிகளெல்லாம் அடுக்கு வரிசை கொண்ட அநேக தளங்களை யுடையதாய் மனோரதங்கொண்ட மாளிகைகளாகத்தானே மாக்ஷிமை கொள்ளவும், அகண்ட அவ் வீதிகளி னடுவில் திருத்தமாக வெட்டப்பட்டு ஆழ்ந்து தெளிந்த நீரால் நிறைவுற்று அநேக நாவாய்களெல்லாம் கருத்தடங்கிய மகா யோகிகளைப்போல அங்கங்கே கரைகளிலே அசைந்தாடித் தூங்கிக்கொண்டிருக்கவும், மற்றுஞ் சில விநோத முற்ற ஓடங்களிலே அநேக கனவந்தரும் தனவந்தரும் அபூர்வ பணிகளைப் பூண்டு கனகமயப் பட்டாடை யுடுத்து கம்பீரமாய்ச் செல்லுங் காக்ஷியானது கண்களைப் பறிக்கவும், அப்படி இக் கால்வாய்கள் பாயும் வீதிகளின் இரண்டு புறங்களிலும் நிறைந்த பாரங் கொண்ட வண்டிகளெல்லாம் நிறைநிறையா யொழுங்குபெற்று நிற்கவும், செல்வ மிகுதியால் செழிப்புற்ற நாநாவித ஜனங்களெல்லாம் அவைகளை நாடிவந்து ஒன்றுகூடி மன்றுடி மலைமலையாகச் சாக்குகளை யெல்லாம் விலைக்கு வாங்கிச் செல்லும் வேடிக்கை கொண்டதாய், எப்போதும் சங்கு பேரிகை முதலிய வாத்தியங்களெல்லா முழங்கக் கூடியதாய், திருவிழாவின் ஆரவாரமுடையதாய், அடிக்கடி அநேக அரசர்களும், அகண்டித லக்ஷ்மீ பிரசன்னரான பிரபுக்களும், மற்றுமுள்ள கனவந்தரும்: மதத்த யானைகள் மீதும் வரவும் பரிமீதும், வளமை கொண்ட ரதமீதும், இளமைகொண்ட காளைகள் பூட்டிய வண்டிகள் மீதும் இவர்ந்து செல்லு மியல்பினை யுடையதாய், இவைகளுக்கெல்லாம் மத்தியிலே எங்கே பார்த்தாலும் சித்திர வேலையா யமையவும், அங்கங்கே அநேகவித இரத்தின விராசிகளாய்ப் பதிக்கப்பட்டு அபரஞ்சித் தகட்டினால் செதுக்கு வேலை கொண்டு உபுக்கெடுத்த அநேக அபூர்வ வுருவங்களெல்லாம் அப்படியப்படியே அழகுற் றமையவும், அலங்காரங் கொண்டு அதிசயிக்கக் கூடியதாய்ப் பதப்படுத்திய பலவிதமான சலவைக்கற்களினால் தளவரிசை கொண்டு பார்ப்பவர் முகங்கள் தெரியும்படி நிழலாடும் பளபளப்புற்று வழுவழுப்பினால் வளமைகொண்ட சுவர்களையும் அவைகளுக்குமேலே அதி உயரத்திலே வெகு லாவண்யமுற்று இளந்தென்றற் காற்றிற்கென்றே யேற்பட்டு இதயம் பூரிக்கச்செய்யும் ஏற்ற பலகணி வாயில்களையும் பலவித சாளரங்களையும் அவைகளுக்கு அப்பால் அனந்தனாலும் அளவிடற்கரிய விசித்ர அலங்காரங் கொண்ட வேலைப்பாடுகளையுடையதாய், அண்டம் அளாவிய

தாய்,கொண்டல்கவியுங் கொடி முடியானது புண்டரீகாக்ஷன் பொன் முடிபோலும் பொலிவுற்றுக் கதிர்க்குலைபோலும் பிதிர்வுற்ற கணக்கில்லாத ஜீவரத்தினங்களின் காந்தியானது கோடி சூரியப்பிரகாசமாய் ஜொலிக்கவும், அநேக காததூரத்துக் காக்ஷியாய் மாக்ஷிமை கொண்ட சபாமண்டபத்தால் உன்னதங்கொண்டதே தாரா நகரமாம்.

அந்நகரத்தை யாள்பவனே சிந்துலன் என்னும் அரசனும். ஜனங்களைப் பலநாள் பாதுகாத்துவந்த இவனது அந்தியகாலத்தில் இவனுக்குரிய தவப்புத்திரனு யவதரித்தனன் தராதலமெல்லாந் தன்னகத் தடக்கிய புராதன புருஷன் உந்தியில் வந்தோன். அப்படி அவனுக்கு விருத்தவயதி லுற்பவித்த இவனும் ஐயாண்டு பருவமடையு முன்னமே தனக்குற்ற தள்ளாமையைக் கருதிய சிந்துலனும் சற்றுலோசித்து மந்திரக்கிழவரை யழைப்பித்து,அவர்களோடு தன் அபிப்பிராயத்தை வெளியிட்டுத், தன் பின்னோனான முஞ்சன் மகா பலவானுயிருத்தலையும் தன் குழந்தை போஜன் அறியாதவனுயிருத்தலையும் கவனித்து, அடியில் வருமாறு சிந்திக்கலானான்:—

'நான் எப்போது அரசுபுரிவதற்குத்தக்க வயதினனான எனக்கு இளையானை விட்டு அரசாட்சியை என் குழந்தைக்குக் கொடுப்பேனே அப்போதே லோகம் என்னை நிந்திக்கும். அதோடு என் அருமைப் புதல்வன் ஆருயிருக்கும் முஞ்சன் நஞ்சுமுதலியவற்றால் ஹானியைத் தேடுவன். அப்போது கொடுத்த அரசும் பயனற்றதாய்க் குழந்தை யழிவதோடு குலநாசமாமே! ஏனெனில்,

சு: லோப: பிரதிஷ்டா பாபஸ்ய, ப்ரஸூதி ர்லோப ஏவ ச |
த்வேஷ க்ரோதாதிஜனகோ லோப: பாபஸ்ய காரணம் ||
லோபாத் க்ரோத: ப்ரபவதி, க்ரோதா த்ரோஹ: ப்ரவர்த்ததே |
த்ரோஹேண நரகம் யாதி ஸஸ்த்ரக்ஞோபி விசக்ஷண ||
மாதரம் பிதரம் புத்ரம் ப்ராதரம் வா ஸுஹ்ருத்தமம் |
லோபாவிஷ்டோ நரோ ஹந்தி ஸ்வாமிநம் வா ஸகோதரம் ||

பாவத்தை நிலைநாட்டுவதும், பாபத்துக்கு உற்பத்தி ஸ்தானமும், த்வேஷ க்ரோதாதிகளை ஜனிப்பிக்கிறதும்,பாபத்திற்குக் காரணமும் உலோபமேயாம்.

லோபத்தால் க்ரோதமும், க்ரோதத்தால் வஞ்சனையும், அவ்வஞ்சனையால் பன்னூற்றுரை படிந்த பாவலனும் பயங்கரமாகிய நரகத்தை யடைகின்றனன்.

மாதா, பிதா, சுதன், சகோதரன், சிநேகன், தலைவன் ஆகிய இவருள் யாவராயிருந்தாலும் லோபவயத்தனான ஒருவன் அவரைக் கொல்லாது விடான்' என்றிப்படி யாலோசித்து, அரசை முஞ்சனுக்களித்து, தன் குழந்தை போஜனை அவன் துடையிலுட்காருவித்தனன்.

பின்பு காலக்கிரமத்தில் சிந்துலன் சுவர்க்க மடையவும், அவனுக்குப் பின் இராஜ்ஜியபாரம் வகித்த முஞ்சனும் அண்ணனை விட எண் மடங்கு அதிகமாய்ப்போஜ குமாரனை யாதரித்தவனாய்ப் பெரியோர்களிடத்துப் படிக்கவிட அவனும் படித்துவந்தனன். முன் முதன் மந்திரியாயிருந்த புத்திசாகரனை அவன் வேலையினின்றுங் காரியாங்கத்தாலே வெளிப்படுத்தி அவ் வேலையில் வேறொருவனை நியமித்தனன்.

இவ்வாறு காலங்கழிந்து வருகையில் ஒருநாள் ஜோதிஷ சாஸ்திர வல்லவனாய், சகலசாஸ்திர ப்ரவீணனான பிராமணனொருவன் அரசச்சபைக்கு வந்து, அரசனை யாசீர்வதித்து, அவனளித்த ஓராசனத்து எழுந்தருளி, "ஹே இராஜாதிராஜா! ராஜபூபாலா!! என்னுடைய ஹிருதயமானது இப் பூலோகத்துற்ற எறும்புமுதல் யானைகடையாகவுற்ற எல்லாப் பிராணிகளுக்கு முண்டாகும் பூத பௌஷ்யவர்த்தமான விஷயங்களையெல்லாம் பூரணமாயறிந்துரைக்கும் பிரமவித்தையால் நிறைவுற்றிருக்கிறது. அதுபற்றியே என்னை இவ்வுலகத்தோர் எல்லாம் அறிந்தவனெனக் கூறுகின்றனர். ஏன் அப்படியென்றால்,

> சு: கண்டஸ்தா யா பவே த்வித்யா ஸா ப்ரகாஸ்யா ஸதா புதை: |
> யாகு ரௌ புஸ்தகே வித்யாதயா மூட: ப்ரதார்யதே ||

என்று சொன்ன விப்பிரனுடைய விசித்திரவார்த்தைக்கு மெச்சி, "என்னுடைய ஜனன ஆரம்பமுதல இதுவரையில் யான் நடந்துகொண்ட விருத்தாந்தங்களை உள்ளபடியே ஆதியோடந்தமாய் எடுத்துச் சொல்வீரேயானால் நீர் எல்லாம் அறிந்தவர்தான்" என்னவே, அந்தணச் சிரேஷ்டனும் உடனே அதற்கு வேண்டிய கிரகஸ்புட முதலிய யாவுங் கணித்து, அரசனால் அதுவரைக்கும் உள்ளும்புறமுமாகச் செய்துள்ளவை யெல்லாவற்றையு மொன்றையு மொளிக்காமல் அப்படியப்படியே எடுத்துரைத்தனன்.

அதைக் கேட்ட மன்னன் மனமகிழ்ந்தவனாய் ஐந்தாறடி முன் சென்று அவ் அந்தணனுடைய பாதங்களிற் பணிந்தெழுந்து அவ்

வேதோத்தமனை இந்திரநீல புஷ்பராக மரகதவைடூரிய மாணிக்கக் கற்களால் மதத்து விளங்கும் ஓராசனத்தி லிருக்கச்செய்து,

சு: மா தேவ ரக்ஷதி, பிதேவ ஹிதே நியுங்க்தே |
காந் தேவ சாபிரமய த்யபநீய தேகம் ||
கீர்த்திம் ச திக்ஷு விதனோதி, தனோதி லக்ஷ்மீம் |
கிம்கிம் ந ஸாதயதி கல்பல தேவ வித்யா? ||

(இ - ள்) ரக்ஷிப்பதிலோ அன்னை; நன்னடக்கையிற் புகுவிப் பதிலோ நல்ல பிதா; மனத்துயரை மாற்றி மகிழ்விப்பதிலோ மனைவி; இவர்களையொத்துத் திக்குத்திகந்தங்களெல்லாம் கீர்த்தி யைப் பரவச்செய்வித்துத் தனத்தை யளிப்பதுமன்றிக் கற்பகக் கொடியை யொத்த கல்வியானது இன்னம் எதைத்தான் உண்டு பண்ணித் தராது?

என்று சொல்லி, அப் பிராமணோத்தமனுக்கு அபாரமாகத் திரவியத்தை வாரி அவாக்கெட வழங்கி, உயர்குலத்துதித்த பத்துப்பரிகளையும் பரிசாக அளித்தனன். அப்போது அருகிலிருந்த புத்திசாகரனும் "சுவாமி! பராக்கு! தங்களருமைக் குழந்தை போஜனுக்கும் இம் மகானைக்கொண்டே ஜனனபத்திரிகை எழுதி முடிப்பது உத்தமம்" என்றனன்.

அதற்கு முஞ்சனும் "ஐயனே! போஜன் ஜாதகத்தைப் பாரும்" என்ன, பிராமணனும் "போஜனைப் பள்ளியினின்று மழைப்பியும்" என்றுசொல்ல, முஞ்சன் மிகக் களிப்போடும், சேவகரை யனுப்பிப் போஜனை யழைப்பிக்கவும், அவனும் வந்து தந்தைக்கு நிகரான தன் சிறிய பிதாவைச் சேவித்து நின்றனன்.

தன் வடிவால் மயங்கியிருக்கும் ராஜகுமார மண்டலத்தில், 'பூலோக புரந்திரன் போலும்,' 'உருப்பெற்ற வேள்போலும்,' 'உயிர் பெற்ற வார்ப்படம் போலும்' சோபிதமுற்ற போஜனைக் கண்ணாரக் கண்டு களிகொண்டு, அவ் விப்பிரன் "ஐயனே! மகாப் பிரபு! அறிவிற் சிறந்த போஜனுக்கு இப் பூலோகத்தில் உவமையு முண்டோ? ஐயந்தனையுங் குமாரக்கடவுளையும் வாரி யெறியும் வளமை கொண்டு சாக்ஷாத் விண்டுவைப்போல விளங்கு மிவனது சௌபாக்கியத்தை அளவிடுவதற்கு அரவிந்தத் தண்ணலாலும் ஆகாதென்றால் அற்ப அறிவையுடைய யானெப்படி யெடுத்துச் சொல்வேன்? ஆகிலும், ஏதோ என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் சொல்லுகிறேன்; இவ

னைப் பள்ளிக் கனுப்பிவிடும்'' என்று சொல்ல, அரசனும் போஜனை அப்படியே கல்விக்கழகத்துக்கு அனுப்பிவிட்டனன். ஜோசியனும்,

சு: பஞ்சாஸத் பஞ்சவர்ஷாணி ஸப்தமாசா தினத்ரயம் |
போஜராஜேந போக்தவ்ய: ஸகௌடோ தக்ஷிணபத: ||

(இ-ள்) வங்கதேசத்தோடுங் கூடிய தக்ஷண தேசத்தை (The Deccan)ப் போஜனும் ஐம்பத்தைந்து வருஷமும் எழு மாதமும் மூன்று நாளும் ஆளப்போகிறான்.

இதுவும் இவனுக்குப் பதின்மூன்றாவது வயது தொடங்கி (கலியுகாதி ௩௲௱௩-க்கு மேல்) என்று ஜனனபத்திரிகை எழுதக் கேட்ட அரசனுந் திடுக்கிட்டு முகவொளியிழந்து வருந்தி, அவ்வந்தணனை யனுப்பிவிட்டு, அன்றிரவில் தனது சையாக்கிருகத்திற்குச் சென்று அங்குத் தனியே சயனித்துக்கொண்டு, அடியில் வருமாறு சிந்திக்கலாயினன்.

'என்றைக்கு இந்த ராஜ்யலக்ஷ்மி போஜகுமாரனை யடைவளோ அன்றே யான் பிராணனை விட்டவனாகின்றேன்.

சு: தாநீந்த்ரியாண்யவிகலாநி, த தேவநாம,
ஸா புத்தி ரப்ரதிஹதா, வசநந் த தேவ; |
அர்தோஷ்மணா விரஹித: புருஷ: க்ஷணேந
ஸோப்யந்ய எவ பவதீதி விசித்ர மேதத் ||

(இ-ள்) தனக்கு முன்னிருந்த இந்திரியங்களியாவும் வேறுபடவில்லை; முன்னமிருந்த நாமதேயமே; முன்னிருந்த புத்திக்குக் குறைவு மில்லை; வாசாவல்லபமு முன்னிருந்ததுவே; இவ்வளவுக்கும், முன் தனத்தைப் படைத்தவன் அதை இப்போது இழந்தவாறே, அதே க்ஷணத்திலே அடியோடே வேறு மனுஷனாகத் தோற்றுவன். ஆ! இதென்ன ஆச்சரியம்!'' என்று மறுபடியும்

சு: சரீரநிரபேக்ஷஸ்ய தக்ஷஸ்ய வ்யவஸாயிந: |
புத்திப்ராரப்தகார்யஸ்ய நாஸ்தி கிஞ்சந துஷ்கரம் ||
அஸூயயா ஹடே நைவ ஸர்வோபாயோத்யமை ரபி |
பர்த்ரூணாம் க்ருஹ்யதே ஸம்பத் ஸுஹ்ருத்பிர்மந்த்ரி பிஸ்ததா ||

(இ-ள்) சரீர அபேக்ஷை யற்றவனுக்கும், சமர்த்தனுக்கும், முயற்சியுடையோனுக்கும், தீர்க்கபுத்தியால் எதையும் ஆராய்பவனுக்கும் ஆகாத காரியம் ஒன்று மில்லை. அதிகமாக இளகிய மனதுடையவனும், அடிக்கடி சபலசித்தமுடையவனும், பிறர் பழிப்

புக்கு அஞ்சுவோனும் ஒருகாலும் சம்பத்தை யடையான்'' என்று சொல்லிப், பின்னும் சொல்லுகிறான்:—

"எவனொருவன் பின் வரும் சுகத்தை யெண்ணி அதற்கு முன்னே தோன்றுங் கஷ்டத்தைப் பாராது முயன்று சுகமடைகின்றனனோ அவனே அறிவிற் சிறந்தவன்; அவ்வாறு செய்யாதவனே அறிவிலி, பகையையும், பிணியையு முனையிலேயே களைய வேண்டும்;'கையிலே குடையிருக்க மழைக்கு அஞ்சாதது போல'த் தெளிவுள்ளவொருவன் எதிரிக்கு அஞ்சுவனோ?'' என்று இவ்வாறு சிந்தித்து, அன்றெல்லாம் ஆகாரத்தின்மேலும் மனது செல்லாது, அப் பகலின் மூன்றும் ஜாமத்தில் அங்கரக்ஷகனை (Body Guard) ப் பார்த்துத், தன் மந்திராலோசனைக்கு உரியவனும் மகா பலவானுமாகிய வங்க தேசாதிபதியாகிய வத்ஸராஜனை அழைத்துவரச் சொல்லினன்.

அப்படி வந்தவனை யுட்காரச்சொல்லி மற்ற எல்லாரையும் அனுப்பிவிட்டு, அவனைப் பார்த்து "மண்ணுலகில் மன்னர் மனமுவந்து தந்தொழில் புரிவோர்க்குச் சன்மானமாத்திரமே செய்ய வல்லார். அவர்களோவென்னில், அரிய தம் ஆருயிரையும் உதவி புரிகின்றனர். கேட்டாயோ நீ! இன்றைக்குங் கெடிபெற்ற ஜோசியன் சொன்னபடி என் இராச்சியத்தை எப்படிப் போஜனிடம் ஒப்புவித்து இப் படியில் இஞ்சி தின்ற குரங்காக விழிப்பேன்! ஹே! வத்ஸா! என் வார்த்தையை இப்போது தடுக்காதே! எதிர்த்து ஒன்றுஞ் சொல்லாதே! என் முன்னோன் மகனாகிய போஜனை நீ இவ்வூர் புவனேஸ்வரியின் ஆலயத்திற்குக் கொண்டுபோய், அங்கே சிரச்சேதம்பண்ணி அச்சிரசை இவ்விரவின் முன்னேரத்திலேயே இங்குக் கொண்டுவா!'' என்றனன்.

அதைக் கேட்ட வத்சராஜன் அப்படியே எழுந்து கை கட்டி வாய் பொத்தி, "ஐயனே! தங்கள் வார்த்தையைச் சிரமேற் கொண்டேன். ஆனாலும், ஒன்று விண்ணப்பிக்கின்றேன். அது குற்றமானதானாலும் க்ஷமிக்கவேண்டும். ஐயனே! போஜனுக்கோ திரவிய மில்லை; சேனைபலமு மில்லை; பரிவாரங்களு மில்லை. இப்படிப் படிப்பட்ட அறியாக் குழந்தைப் பருவ முடையானை, இப் பால் வடியும் பாலகனை, எப்படிக் கொல்லுகிறது? இவனைக் கொல்வதற்கேற்ற காரணம் ஒன்றுங் காணேமே'' என்ன, அப்போது முஞ்சன்: சபையில் ஜோசியனால் நிகழ்ந்த யாவும் எடுத்துரைக்கக் கேட்ட

வத்ஸன் புன்னகையோடும், "ஆ என்னுண்டவனே! இதென்ன பிரமை தங்களுக்கு?

சு: த்ரைலோக்ய நாதோ ராமோஸ்தி வஸிஷ்டோ ப்ரஹ்மபுத்ரக |
தேந ராஜ்யாபிஷேகேது முஹூர்த்தஃ கதிதோ பவத் ||
தந்முஹூர்த்தேந ராமோபிவநம் ஸீதோவஸீம் விநா |
வஸீதா பஹாரோப்ய பவத்வைரிஞ்சி வசநம் வ்ருதா ||
ஜாதஃ கோயம்ந்ருப ஶ்ரேஷ்ட கிஞ்சிஜ்ஞ உதரம்பரிஃ |
யதுக்த்யா மந்மதாகாரம் குமாரம் ஹந்து மிச்சஸி ||

த்ரைலோக்ய நாதனுன ஸ்ரீராமன் பிரமபுத்திரரான வசிஷ்டரால் ஏற்படுத்திய அப்படிப்பட்ட முகூர்த்தத்திலேயே பட்டாபிஷேகத்தை யிழந்தவராய், அரணியமடைந்து, அங்கேயும் தன் காதற்கிழத்தியை (ஜானகியை)த் தானவவேந்தன் (இராவணன்) தாராளமா யெடுத்துச் செல்லவும் எவ்வளவு கலக்கமுற்றனர்! அப்படிப்பட்ட பிரமரிஷியின் வாக்கியமே தவறிவிட்டதென்றால் மற்றும் எவர் சொல்தான் மெய்யாகும்? இப்படிப்பட்ட வார்த்தையைக் கேட்டு மன்மதாகாரனுன போஜன் மரணத்தையும் விரும்பலாமோ? அற்பப் பிராமணன் சொல்லை நம்பிச் சிற்பிகளின் இலக்ஷியத்திற்கு இலக்கான சித்திரப்பதுமை போன்ற இச் சிறுவனை நான் எப்படி வதைப்பேன்? தன்னுெடு பன்னுள் பழகிய ஒருவனைக் கொல்லத் தடித்த மூடனும் உடன்படானே! ஐயனே! இப் போஜனை இதுவரையில் எவ்வளவோ இஷ்டமாய் வளர்த்து வந்த தாங்கள் இப்படியும் நினைக்கலாமோ? ஒருவேளை மீறித் தாங்கள் ஏதாவது அப்படிப்பட்ட ஆக்ஞை யெனக் களிக்கவும் நானும் இவனைக் கொல்லக் கொண்டுபோனுல் இறந்துபோன சிந்துலமன்னனுடைய பரமப்ரீதி பாத்திரர்களான மகா வீரர்களும் உமது அதிகாரத்தின் கீழிருக்கும் சூரர்களும் சும்மாயிரார்கள். உன் பட்டணத்தை அல்லோலகல்லோலப்படுத்திப் பாற்கடலைக் கலக்கினதுபோலக் கலக்கிவிடுவார்கள். அநேகநாளாய்த் தேவரீர் இராஜ்யம் தங்கள்வசமேயிருந்தாலும் ஜனங்கள் போஜனையே இராஜாவாக எண்ணியிருக்கிறுர்கள். 'எண்ணெயோ டெரியினும் விளக்கை யெப்படிக் காற்று அணைக்குமோ' அப்படியே புண்ணிய மிகுதியோடு கூடிய செல்வமும் அநீதியாலப் படியே யழிந்துவிடும். ஆகையால், போஜனைக் கொல்லுதல் உமக்குப் புகழன்று" என்று சொன்னதை 'ஈயத்தைக் காய்ச்சி யூற்றினதுபோல' இரு செவியிலும் ஏற்ற நாதிபனும் எங்குமில்லாக் கோபங்கொண்டு,

"ஹே வத்ஸா! நீ வேந்தனேயன்றி வேலையாளல்லவே! எஜமானனிட்ட வேலையைச் செய்யாத அடிமை யுயிர்த்திருந்தா லென்ன பயன்?" என்றனன்.

இதைக் கேட்ட வத்ஸராஜன் ஒன்றுந் தோன்றாதவனாய்ச் சற்று ஆலோசித்துக், 'காலத்துக்குத் தக்க கோலம்' எனக் கொண்டு, சும்மாவிருந்து, கதிரவன் மேற்கடல் படிந்ததும் சபையினின் றிழிந்து, காலாந்தருத்திரனைப் போலக் கடுஞ்சின முகத்தினனாய் வருகிறபோது, இவனுக்கு எதிர்ப்பட்டவ ரெல்லோரும் அப்படியப் படியே அங்கங்கே ஒதுங்க ஆரம்பித்தனர். தன் அரண்மனைக்குங் காவலாகச் சிலரை யனுப்பிவிட்டுத் தன் தேரைப் புவனேஶ்வரி யின் ஆலயத்திற்குப் போகும் வழியாகத் திருப்பிக்கொண்டு போஜனுடைய உபாத்தியாயரை யழைத்துவர ஓராளை யனுப்பினன்.

அதைக்கேட்ட அவர் அப்படியே அசந்து தளர்ந்து தள்ளாடி, நடக்கவும் சக்தியற்றவராய் வந்த சேவகனையே ஆதாரவாகக்கொண்டு வத்ஸன் முன்வர, அவனும் அவரைப் பணிந்து உட்காரவைத்து, "உத்தமரே! அரசன் மகன் ஐயந்தனை பள்ளியினின்று மழைப்பி யும்"? என்ன, அவ்வண்ணமே அழைப்பிக்க வந்தவனைச் சிறிது பரீக்ஷை செய்தனுப்பிவிட்டு மறுபடியும் அவரைப் பார்த்துப் "போஜனை யழைப்பியும்?" என்றனன்.

இவைகளை யெல்லாம் அறிந்துகொண்ட போஜன் கோப தீப்தனாய்க் கண்ணில் பொறி பறக்க அவடம் வந்து, "அடா! அரசனுடைய முக்கிய குமாரனான என்னைத் தனியே வெளியி லழைப் பிக்க உனக்கு என்னடா அதிகாரம்?" என்று அதிரோஷத்துடனே தன்னுடைய இடதுகாற் பாதுகையால் அவனுடைய கன்னத்தி லடிக்க, வத்ஸன் அப்படியே கையாற் பொத்திக்கொண்டு, "இளவரசே! இது என் குற்றமல்லவே! நான் அரசனாணையை நிறைவேற்ற வந்தவன்" என்று சொல்லிப் போஜனைத் தேரி லுட்காருவித்துத் தானும் ஏறிக்கொண்டு இரதத்தைத் தாராளமாய்த் தடதடவென்று ஊருக்கு வெளியே நடத்திவந்து, வேகமாய் விடக் கண்ட வேந்தன் மகனும் மனதில் அச்சங் கொண்டு, அநேக துர்ச் சகுனங்களையுங் கவனித்துக், கலவரித்து வருந்திய மனதோடும் கண் கலங்கி, "ஹே! வத்ஸா! இதென்ன ஆச்சரியம்! வேடிக்கையார்த்த மாய் வெளியிலே போவதென்றாய். வெகு தூரம் வந்துவிட்டோமே! அநேக துர்ச்சகுனங்கள் காண்கின்றனவே! எப்போது மிப்படி யான்

தனித்து வந்ததில்லையே! நீயோ உரையிற் கையிடுகின்றனை; கத்தியை யுருவிக் கையிற் பிடிப்பைபோ லிருக்கிறதே! புவனேஸ்வரியின் ஆலயமு மிதோ தெரிகிறதே! இதென்ன மர்மம்? ஹே! வத்ஸா! எனக்குத் தெரியச்சொல்வாய்!" என்றனன்.

அறியாதவனானாலும் போஜகுமாரன் புத்தியிற் சிறந்தவனாகையால், கஞ்சமலர் போன்ற கண்கள் சிவக்கவும், உதடு துடிக்கவும், 'உள்ளபடியே சொல்!' என்று அதட்டிக் கேட்கவே, உத்தமனாகிய வத்ஸராஜனும் உள்ளமுடைந்தவனாய்க், கண்களினின்றும் நீரானது வெள்ளம்போற் பெருகவும் உலககாவலன் மகனைப் பார்த்து உரை தடுமாறவும், "ஆ! என் இளவரசே! என்ன செய்வேன்! மகாபாபி! உள்ளதைச் சொல்லுகின்றேன். உன் இஷ்ட தெய்வத்தை நினைத்துக்கொள்! உனக்கு வரப்போகிறதாக ஜோஸியன் சொன்ன அகண்ட சாம்ராஜ்யத்தின்மேல் அளவு கடந்த திருஷ்டிவைத்த உன் சிறிய பிதாவினது பொறாமையின் பலனாக்கும் இது. சுவாமி காரியத்தில் தடையில்லாதவன் ஆகையாலே, நான் சொன்னதெல்லாம் பயன்படாமற் போகவே, எதிர்த்துப் பேசுவதற்குக் கூடாமல் விடைபெற்று உன் விலைபெற்ற ரத்தினம் போன்ற சிரசையும் வேறாக்கத் துணிந்து வந்தேன். ஐயனே! அரசனாணை அப்படிப் பட்டதாயிருக்கிறது. அடியேன் என்ன செய்வேன்?" என்று சொல்லிப் போய்க்கொண்டிருந்தனன்.

இது இவ்வாறிருக்க, "போஜனை வத்ஸன் நகர்ப்புறம் கொண்டு போனான்" என்ற சொல் ஊரெங்கு முழங்கியது. உடனே அங்குள்ள வீரர்களும் சூரர்களும் வீராவேசங் கொண்டவராய் "என்ன! என்ன!" என்று விசாரித்துச், சங்கதி தெரிந்துகொண்டு, அரண்மனையிலுள்ள யானைச்சாலை, ஒட்டகச்சாலை, அஸ்வசாலை, தேர்ச்சாலை முதலியவைகளிற் புகுந்து அவைகளையெல்லாம் நாசமாக்கினர். அங்கங்கே வீதிகளிலும், அரண்மனைவாயிலிலும், மதின்மேடைகளிலும், நகர்ப்புறத்திலும், யுத்தபேரிகை செவிடுபட முழங்கியது. அங்கங்கே சிற்சிலர் போஜனிடத்துற்ற அவாயின் மிகுதியால் ஆற்றாதவராய் அவரவர்கள் கையிலுள்ள ஆயுதங்களாலேயே ஆவி போக்கிக்கொண்டனர்.

இவ்விதம் தாராநகரமானது அன்றிரவில் எங்கும் பிணக்காடாக அழுகுரலால் நிறைந்துவிட்டது. இதையெல்லாந் தாதியர் மூலமா யறிந்துகொண்ட போஜன் அன்னையும் (சாவித்திரியும்)

முகத்தி லறைந்துகொண்டு, கோவெனக் கதறி; "அப்பனே! சிற்றப்பனால் உன் கெதி யென்னவாயினதோ? எங்கிருக்கின்றனையோ! ஐயோ! அப்பா! நின்பொருட்டாக யான் அநுட்டித்துவந்த நோன்புகளெல்லாம் வீணாய்விட்டனவே! எல்லாம் வல்ல தெய்வமே கெடுக்கப்புகுந்தால் யாரால் தடுக்கப்போகும்? ஆ என் கண்மணியே! இந்தப் பணியாட்களெல்லாம் தலையற்றவராய் எப்படி விழுந்து கிடக்கின்றார்கள்! பார்த்தையா!" என்று அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டனள்.

இப்படி யிங்கே இவ்வளவு அலங்கோலமாயிருக்கவும், போஜனைக் கொண்டுபோன வத்ஸன் செயலை நாடுவோம்.

போஜன் சிறுவயதிலேயே சீராக அநேக நூல்களை அழுத்தமாய்க் கற்று வல்லவனாகையால், அகண்ட கல்விக்குரியவனாய் ஆத்திரத்தையெல்லா முள்ளடக்கிக்கொண்டு, 'அடடா! நம்முடைய விதிப்பயனு மிப்படி யிருந்ததல்லவா! நமது பிதாவை நாம் அறியோம்; அப் பிதாவைவிட எத்தனையோ மடங்கு அதிகமாக அருமை பாராட்டி வந்தனர் நமதண்ணல். அப்படிப்பட்ட எண்ணங்கொண்டவரே இப்படிச் செய்தனரே! இக சுகத்திற்கு நாம் இவ்வளவுதான் கொடுத்துவைத்தோமோ! இல்லாவிட்டால் இவ் வாபத்து நமக்கேன்?' என்றிவ்வாறு எண்ணாது மெண்ணிப் பின்னும் சொல்லுகிறான் சின்னஞ் சிறுவனான போஜன்:—

ஸ்ரீ: ராமேப்ரவ்ராஜநம் பலேர்நியமநம் பாண்டோ: ஸுதாநாம் வநம்வ்ருஷ்ணீ
நாம், நிதநம், நளஸ்ய ந்ருபதே ராஜ்யாத்பரிப்ரம்ஸநம் ||
காராகார நிஷேவணம் ச மரணம் ஸம்சிந்த்ய லங்கேஸ்வரே,
ஸர்வ: காலவஸேந நஸ்யதி நர:, கோவா பரித்ராயதே ||
லக்ஷ்மீ கௌஸ்துப பாரிஜாத ஸஹஜ: ஸூநு: ஸுதாம்போநிதே
ர்த்தேவந ப்ரணய ப்ரஸாதவிதி நாமூர்த்நாத்ருத: ஸம்புநா ||
அத்யா ப்யுஜ்ஜதி நைவதைந ஸவிஹிதம் க்ஷைண்யம்க்ஷயாவல்லப:
கோநாந்யேந விலங்க்யதே விதிகதி: பாஷாண லேகாஸகீ ||
விகடோர்வ்யாமம் யடநம், சைலாரோஹண, மயாம்நிதே ஸ்தரணம் ||
நிகளம், குஹரப்ரவேஸோ, விதிபரியாக:தம்நு ஸம்தார்ய:? ||
அம்போதி: ஸ்தலதாம்ஸ்தலம் ஜலதிதாம் தூளீலவ: சைலதாம் ||
மேருர்ம்ருத் கணதாம், த்ருணம் குலிஸதாம் வ்ருஜம் த்ருணப்ராயதாம் ||
வஹ்நி: ஸீதலதாம், ஹிமம்தஹநதா, மாயாதியஸ்யேச்சயா,
லீலாதுர்லலிதாத்புதவ்யஸநிநே தேவாய தஸ்மைந்நம: ||

ஸ்ரீராமர் வனத்திற்குச் சென்றதையும், பலிச்சக்கரவர்த்தி பாதல முற்றதையும், பஞ்சவர்கள் வனம் உறைந்ததையும், யாதவர்கள் மரண மடைந்ததையும், நளபூபதி அரசிழந்து சாரதியானதையும், இராவணன் கார்த்தவீரியார்ச்சுனனால் சிறையிலிடப்பட்டதையும், அவனே ராமபாணத்தால் நொந்தழிந்ததையும் உற்று நோக்கினால் உலகத்தில் யாவர்தான் காலவசத்திற்குத் தப்பவல்லவர்? திருமகள், கௌஸ்துபம், பாரிஜாதம் இவைகளோடுங் கூடப் பிறந்தவனானாலும், பாற்கடற்கு மைந்தனாய்ச் சர்வாண்டபுவன லோக கர்த்தவ்யமாகிய சாக்ஷாத் காளகண்ட திரிநேத்திர தாரியால் சிரோபூஷணமாக அணியப்பெற்றும் தேவ நிர்ணயத்தை விலக்கக் கூடாதவனாய்ச் சந்திரனும் தேய்வை யின்னும் விடுகின்றனனில்லையே. அப்படியானால், வேறு எவன்றான் சிலைபோல நிலைபெற்ற வினைவலியை வெல்ல வல்லவன்? கடுங்கானந் திரிதலும் மலை யேறுதலும், தீவாந்தர மடைதலும், சிறைப்படுதலும், குகப்பிரவேசமாதலும் ஆகிய இவைகளெல்லாம் வினையின்வழியே ஒருவனுக்கு உண்டாகின்றன. எவனிச்சையால் கடல் தரையாகவும், தரை கடலாகவும், அணுக்கூட்டங்கள் மேருவாகவும், மேரு தூகளாகவும், புல் வச்சிராயுதமாகவும், வச்சிராயுதம் புல்லாகவும், ஜலம் அக்கினியாகவும், அக்கினி ஜலமாகவும் ஆகப்பெறுகின்றனவோ அத்தகைய கடவுளுக்கு நமஸ்காரம் (அதாவது, அபயம் சர்வபூதேஷு. எல்லாப் பூதங்களுள்ளும் நிறைந்திருக்கும் இறைவனுக்கு அபயம்) "ஹே! வத்ஸ!" என்று மறுபடியும் வத்ஸனை ஏறிட்டுப்பார்த்து "ஐயனே! என் சிறிய பிதா உனக்கு என்னென்று சொன்னார்? ஊரைவிட்டு ஓட்டிவிடச்சொன்னாரா; அல்லது, ஒரே தடவையில் ஒழித்துவிடத்தான் சொன்னாரா? உனக்குக் கிடைத்த உத்தரவுதான் என்ன? உள்ளபடியே சொல்!" என்றனன்.

வத்ஸராஜனும், "சிற்றரசே! நின் சிரசைச் சேதிக்கத்தான் சொன்னார்" என்று சொல்லிவிட்டு, ஒன்றுந் தோன்றாது அப்படியே ஸ்தம்பித்து நின்றனன். அப்போது போஜகுமாரனும் ஒப்பற்ற ஜகன்மாதாவை யுள்ளத்திருத்தித் தியானங் கொண்டு, பலவிதமாய்ப் பணிந்தெழுந்து, திடச்சித்தங்கொண்டு அருகிலிருந்த அடர்ந்த வோர் வடவிருக்ஷத்தின் இலைகளி லிரண்டை எடுத்து, அவைகளில் ஒன்றைத் தொன்னையாக்கி, அதில் தன்னிடுப்பிற் சொருகியிருந்த சுரிகையை வாங்கித் தொடையைக் கீறி அதினின்

றும் வெளிப்பட்ட இரத்தத்தைப் பிடித்துப் புல்லி னுனியால் மற்ருெ ரிலையில் ஒரு சுலோகத்தை யெழுதி அதை வத்ஸராஜன் கையில்கொடுத்து, அரசனுக்குச் சேர்த்துவிடும்படி சொல்லிவிட்டு, “அப்பா மந்திரீ! ஆகட்டும் உன் வேலை” என்றனன்.

அப்போது அங்கே இவைகளையெல்லாம் பின்ஞலிருந்து கவனித்துக்கொண்டிருந்த வத்ஸராஜன் தம்பியும் அப்படிப்பட்ட ஆபத்தானகாலத்திலும்— பிராணுவஸ்தையிலும்—போஜனுடைய முக கமலமானது ஒளிகெடாமலும் வேறுபடாமலும் ஒரே தன்மைப்பட்டு உதயதாமரையைப்போலப் பிரகாசிக்கக் கண்டு, மனங் கனிந்து, அண்ணனுகிய வத்ஸனைப் பார்த்து, “அண்ணு! நாம் இறந்த பிறகு நம்மோடுகூட வரக்கூடியது தர்மம் ஒன்றேயன்றித் தந்தை தாயரும், மனைவி மக்களும், நண்பர்களும், தாயத்தோரும், துணையாக வருவரோ? எவனொருவன் தருமநிலையின் உண்மையை யறியானே அவன் எவ்வளவு சமர்த்தனுனுலும் சக்தியற்றவனே யாகின்ருன்; சகலசம்பன்னனுனுலும் வறியவனேயாகின்ருன்; கலா சமுத்திரமானுலும் கல்லாத மூடனேயாகின்ருன்; நோயை நீக்கு மருந்துள்ள இகத்திலே (இவ்விடத்திலே) தனக்கு இயற்கையாயுற்ற நரைதிரையாதி நோய்களைக் காத்துக்கொள்ளாத ஒருவன் மருந் தகப்படாத பரத்திற்குச் சென்று அவ்விடத்திலென்னசெய்வான்? உனக்குச் சமதையான குலம் வயது உருவம் குணம் முதலியவற்ருற் சிறந்தோர் பலர் காலஞ்செல்லக் கண்கூடாகக் கண்டும் கலக்கமென்பது உனக்குக் கொஞ்சமு மில்லையே! ஆகா! உன்மனங் கல்லே போலும்” என்று கதறக்கேட்ட வத்ஸனும், மனமுடைந்து போகவும், கண்ணீர் ஆருக மல்கவும், ஓர்வித வைராக்கிய மடைந்தவனுய், அப்படியே தரையில் விழுந்து,போஜனைப் பணிந்து, “ஐயனே! அஞ்சேல்! உன் ஆருயிர்க்கு உபிரா யானிருக்கின்றேன். இவ்வாபத்து உன்னை நீங்கியதாகக் கொள்!” என்று சொல்லி, அவ்விருள் நிறைந்த நடுச்சாமத்திலேயே நகர்க்குப்புறம்பேயுள்ள ஓர் அரண்மனைக்குச் சென்று, அங்குள்ள ஓர் சுரங்கத்தில் போஜனைத் தங்கச் செய்து, தான் அதிவேகமாகக் கைதேர்ந்த ஒரு சிற்பியினிடம் சென்று செவ்வாழைக்கட்டை யொன்றினுல் கனககுண்டல காதோடே, கண்டவரதிசயிக்கு முகவொளியோடே, மூடிய கண்ணோடே கூடிய போஜகுமாரன் தலைபோலொன்றைச் செய்வித்து, செந்நீர் வடிந்துகொண்டிருக்கும் அதை யெடுத்துக்கொண்டு, தன் தம்பி

யோடுங்கூட அரசனரண்மனைக்குச் சென்று, முஞ்சனைப் பணிந்து, "சுவாமி பராக்கு! தேவர் கட்டளைப்படியே இதோ! போஜன் தலையைக் கொண்டுவந்தேன்" என்று காட்டினன்.

அதைக் கண்ட முஞ்சனும் புத்திரவாத்சல்யத்தால் மெத்தச் சோக மடைந்தாலும், வத்ஸனைப் பார்த்து, "சிரங் கொய்யும்போது என் சிறுவன் சொன்னதென்ன?" என, வத்ஸனும், "ஆண்டவனே! அப் போஜகுமாரனும் வாள் வீச்சுக்கு முன்னே என்னையுமழைத்து இதோ! இந்த இலையை என்னிடம் கொடுத்துத் தங்களிடம் சேர்த்து விடச் சொல்லினன்" என்றனன். அந்த இலையை வாங்கிக்கொண்டு தன் உள்ளமும் உடையச்செய்யும் அச் செந்நீர் வடியுஞ் சிரசை எங்கேயாவது கொண்டுபோய்ப் புதைக்கச் சொல்லிவிட்டு இத னிடையில் தன் பட்டமகிஷி தீபங்கொண்டுவந்து காட்டவும், அத் தீபவொளியில் அகண்டு பரந்து பச்சென்றிருக்கும் அவ்வாவிலையின் பேரில் செந்நீரா லெழுதப்பட்டுக் கறுத்த வரிகளில் தேவ பாஷையிலே திவ்வியமான சுலோகபூர்வமாக,

சு: மாந்தாதா ச மஹீபதிঃ க்ருதயுகாலங்காரபூதோ கதঃ
ஸேதுர் யேந மஹோததௌ விரசிதঃ க்வாஸௌ தஸாஸ்யாந்தகঃ?
அந்யே சாபி யுதிஷ்டிரப்ரப்ருதயோ யாதா திவம்; பூபதே,
நைகேநாபி ஸமம் கதா வஸுமதீ நூநம் த்வயா யாஸ்யதி.

(இ-ள்.) மகிபதியாய்க் கிரேதாவில் மாக்ஷிபெற வுலகாண்ட
மாந்ததா வாழ்வு மெங்கே?
அதிபதியாய்க் கடலடைத்தே அன்றரக்கர் பதிவென்றே
னப்பெரியோன் சீராம னிருக்கின்றானோ?
மிகவொளிசேர் பாண்டவரே முதலானோர் மேன்மையுற்றோர்
மேதினிவிட் டகன்றா ரன்றோ?
இதமெலிய நிலங்காக்கு மென்னிறையே இதுவுமுன்னோ
டிருப்பதுவு மெய்யே! மெய்யே!!
வெற்றிகொளும் வேந்தரெலாம் வினையுலப்ப வேறாகிப்
பற்றறுந்து போயினரே பாருலகில்—முற்றுமுணர்
கொற்றவனே! நீயுங் கோடிவரை நீடவோ
எற்றுமென்றா யென்றவலையை யீந்து.

என்னும் பொருள்பட எழுதியிருக்கக் கண்டு அதன் அர்த்த பாவத்தை யறிந்தவனாய், அப்படியே ஆவென்றலறிப் பூமியிற் சாய்ந்து மூர்ச்சைபோயினன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பட்டமகிஷியின் சைத்யோபசாரத் தால் சற்று மூர்ச்சை தெளிந்தவனாய்த், தன் பக்கத்திலிருக்கும்

இராஜமகிஷியைப் பார்த்து, "ஹே! பிரியை! என்னைத் தொடாதே! நானே மைந்தனைக் கொன்ற மாபாவி!" என்று சொல்லி, அழுத கண்ணுஞ் சிந்தையுமாய் வாயில் காப்போரால் புரோகித பௌராணிகர் முதலியவர்களை யழைப்பித்து, அவர்களைப் பார்த்து, "வேண்டுமென்று புத்திரஹத்தியைச் செய்தவற்குச் செய்யவேண்டிய பிராயச்சித்தம் ஏதாவது உண்டானால் சொல்லுங்கள்?" என்றனன்.

அவர்களும் சாஸ்திரங்களையெல்லாம் ஆராய்ந்து, "ஐயனே! அரைநிமிஷமும் தாமதியாது திசை பார்த்து வானுறவோங்கிய செந்தீயில் சித்திரம் போன்ற நின் தேகத்தைச் செல்லவிடுவதே—அக்கினிப்பிரவேசம்தான்—அதற் கமையும்" என்றனர்.

அதன்மேல் புத்திசாகரன் என்னும் முன் முதன் மந்திரியும் அரசனைப் பார்த்து, "நீர் எப்படி அரசப்பதமோ அப்படியே வத்ஸனும் அமைச்சப் பதாரவான். உன் முன்னோனை சிந்துலன் போஜனை உன் மடிமீதிற் கிடத்தி யிருக்கவும் நீ யவனுக்கு வஞ்சனையியற்றினை.

" தினையளவு நன்றி செயினு மதைப்
பனையளவாய்க் கொள்வர் பயனறிந்தோர்."

என்பதைக்கவனியாதவன் பிழைத்திருந்தும் பயனென்ன? பொருள், தானியம், இரத்தினம், பணம் முதலிய யாவும் குடிகளிடத்திருந்தே அரசர்களுக்கு வருகின்றன. அக் குடிகளும் அரசன் மறநெறி நிற்பவனாயின் அம் மறநெறியிலே நிற்பவராயும், அறநெறியில் நிற்பவனாயின் அவ் வறநெறியிலே நிற்பவராயும் அரசனையே அநுசரித்து வருகின்றார்கள். ஆகையால், அரசன் எவ்வழியோ அவ்வழியே அக் குடிகளும்" என்றனன்.

அதன்பிறகு, அம் முஞ்சன் அவ் விரவிலேயே அக்கினிப்பிரவேசம் செய்ய நிச்சயித்திருக்கையில், அவனருகிலுள்ளவர்களும் அந்நகரத்துள்ளவர்களுமாகிய யாவரும் அங்கே ஒன்று கூடினர். "மன்மதாகார மகனைக் கொன்ற பாவத்திற்காகப் பயந்து மன்னவன் தீக்குளிக்கப்போகின்றான்" என்ற செய்தி உலகமெங்கும் ஓடிப் பரவிற்று.

அதன்மேல் புத்திசாகரன் வாயில் காப்போரை விளித்து ஒருவரையும் உள்ளேவிடாமலிருக்கக் கட்டளையிட்டு, வேந்தனை அந்தப்புரத்தி லிருக்கச்செய்வித்துத், தானொருவனாகவே சபாமண்டபத்தி

விருந்துகொண்டிருக்கையில், மன்னன் மரணமடையப்போவதாய்க் கேட்ட வத்ஸன் ஓடோடியும் வந்து வேந்தன் அரண்மனையிற் புகுந்து, சபாமண்டபத்தில் தனிமையேயிருக்கும் புத்திசாகரனைக் கண்டு, விஷயங்களை யறிந்துகொண்டு, "யான் போஜகுமாரனைத் தீங்கின்றிக் காப்பாற்றி யிருக்கின்றேன்" என்று இரகசியமாய்ச், சொன்னான்.

அதைக் கேட்ட புத்திசாகரனும் வத்ஸன் காதிலே என்னவோ உபதேசிக்கவும், அதைக் கேட்டுக்கொண்டு அவன் போய்விட்ட முகூர்த்த நேரத்திற்கெல்லாம்,

கையில் தரிக்கப்பட்ட உத்தமமான யானையினுடைய தந்தத் தாலாகிய தடியோடும், செந்நிறமான ஜடையோடும், தேகமுழுவதி லும் கற்பூரம் சேர்ந்த விபூதி தூளிதத்தோடும், உடல்பெற்ற மன் மதாகாரத்தோடும், ஸ்படிககுண்டல மசைந்தாடுங் காடுகளோடும், வெண்பட்டுக் கோவணத்தோடும், சாக்ஷாத் சந்திரசேகரனைப் போலச் சகளீகரித்த திவ்வியமான ரூபத்தோடும், பிக்ஷான்னபாத் திரமாகிய கபாலத்தைக் கையி லேந்திகொண்டு காவலனரண்மனை வாயிலினேராக யாரோ ஒருவன் வந்தனன்.

அங்கே எங்குப்பார்த்தாலும் அழுகுரலும் அலங்கோலமு மாய்க் கூக்குரலிட்டுக் கும்புகூடி நாத்தழும்பேற நாநாவிதமாய் அங் குள்ளாரியாரும் புலம்பியிருக்கக்கண்டும், தான் பாராதவன்போல அபிநயித்து இரண்டடி அப்புறம் எடுத்துவைக்க ஆரம்பித்தனன்.

அதைக் கண்ட காவலாளியும் "ஹே! சந்நியாசி! நீ யார்? உனக்கு என்ன தெரியும்?" என்றனன். அதற்குச் சந்நியாசியும் "நாநா! பிரமசிருஷ்டிக்கு மேற்பட்டவன்; நான் வந்த ஊருக்கு வழி கிடையாது. நமக்குப் போக்கிடமுங் கிடையாது. ஆனால், நமக்கு எல்லாந் தெரியும்" என்றனர்.

அதைக் கேட்ட காவலாளியும் "தாங்கள் உள்ளே போகலாம்; விசேஷ மிருக்கிறது" என்னவும், உடனே சந்நியாசியும் அரண்மனை யுள் புகுந்து, சபாமண்டபத்துற்ற முதன் மந்திரியைக் கண்ணுற்ற னர். புத்திசாகரனும், "ஹே! தபசி! எங்கிருந்து வருகின்றீர்? எப் போதும் இருப்பதெங்கே? நீர் எதில் வல்லவர்? கல்விச் சிறப் புண்டோ? ஆயுர்வேத பரீக்ஷையுண்டோ? உரையும்!" என்ன, அப் படி வணக்கத்தோடும் கேட்ட மந்திரியைப் பார்த்து, அம் மகா யோகியும்,

கூ: தேஸே தேஸே பவநம் பவநே பவநே தஜைவ பிக்ஷாந்நம்
ஸரஸி ச நத்யாம் ஸலிலம், ஸிவஸிவ தத்வார்த்த வேதி நாம்பும்ஸாம் ||

க்ராமே க்ராமே குடீ ரம்யா நிர்ஜரே நிர்ஜரே ஜலம்
பிக்ஷாயாம் ஸுலபம் சாந்நம், விபவை: கிம் ப்ரயோஜநம்? ||

(இ - ள்) சிவசொரூபத்தை உண்மையாய்த் தெரிந்துகொண்டவர்களுக்குத் தேசங்கள்தோறும் வீடுகளும், வீடுகள்தோறும் பிக்ஷான்னமும், குளங்களிலும் நதிகளிலும் தண்ணீரும் நிறைந்திருக்கின்றன. கிராமங்கள்தோறும் குடிலும், அருவிகள்தோறும் ஜலமும், பிச்சையெடுப்பதால் சுலபமாக அன்னமும் கிடைப்பதால் (பாபத்திற்குக் காரணமாகிய) சம்பத்தா லென்ன பிரயோஜனம்? ஆகையால், ஐயனே! எமக்கென்றோர் நாடில்லை; நாம் திரிகின்ற பூமண்டலமெல்லாம் நம்முடையதே; குரு உபதேசித்ததைப்போல நடக்கின்றோம். உலகத்துள்ள எல்லா வஸ்துக்களையும் கரதலாமலகமாகக் காண்கின்றோம். பாம்பு கடித்திறந்தவர்களையும், விஷபாதை கொண்டவர்களையும், ரோகத்தால் பாதிக்கப்பட்டவர்களையும், கட்கத்தால் சேதிக்கப்பட்டுச் சிதிலமடைந்த சிரஸ்ஸுடையவர்களையும், அவரவர்களுக்குற்ற வியாதியினின்றும் நீக்கிச் சுகமடையச் செய்விப்போம்" என்றனர். இவற்றையெல்லாம் சுவர்ப்புறம்பே யிருந்து கேட்டுக்கொண்டிருந்த முஞ்சனும் உடனே சபைக்கு வந்து, யோகியைப் பணிந்து, "ஓ! யோகீஸ்வரரே! மகானுபாவா! பரோபகாரமே பெருந்தொழிலாய்க் கொண்டவரே! புத்ரஹத்தியை வகித்த மகாபாவியாகிய யான் கடைத்தேறும்படி என் மாண்ட மைந்தற்குப் பிராணனைத் தந்து என்னை ரக்ஷிக்கவேண்டும்! ரக்ஷிக்கவேண்டும்!" என்று பலவாறாக வேண்டி நின்றனன்.

அச் சந்நியாசியும், "ஐயனே! அஷ்டநாகத்தி லடங்கிய பிராணனேயானாலும் என் இஷ்டம்போலக் கொண்டுவர மாட்டுவேன். அமைப்பினால் இறந்தாலும் இமைப்பிலெழுப்பித் தரவல்லேன். வெட்டுண்ட சிரம் ஒட்டுண்டு முன் பொட்டென்று போனவுயிர் சட்டென்று வந்து கூடச் செய்வேன். ஆகையால், அரசனே! நீயொன்றுக்கும் பயப்படவேண்டாம். இதோ உன் குழந்தையை அதி சீக்கிரத்தி லெழுப்பித் தருகின்றேன். கடவுளருளால் அவனும் அரண்மனை வந்து சேருவன். ஆனால், அதற்கு வேண்டிய ஓமத்திரவியங்களையும் அதைச் சார்ந்த மற்றும் வேண்டிய யாவும் ஆயத்தப்படுத்தி, முதல் மந்திரியையுங் கூட அனுப்பிவையும்" என்றனர்.

அப்படியே அரசனனுப்பவும் இவைகளையெல்லாங்கொண்டு மயானத்துக்குச் சென்ற தபசியும் அங்கேயொரு ஓமகுண்டமமைத்து அதற்கு வேண்டிய சடங்குகளியாவும் செய்துகொண்டிருந்தனன். அமாவாசையும் அர்த்தராத்திரியும் ஒன்றுகூடிய அவ்வேளையில் யாரும் அறியாதபடி போஜனையும் ஆற்றங்கரை மயானத்திற்குக் கொண்டுவந்தனர். சில நாழிகைக்கெல்லாம் "யோகப்பயிற்சியிற் சிறந்த சித்தரொருவரால் பிழைத்தான் போஜன்; எழுந்தான் போஜன்" என்ற சொல் எங்கும் பரவியது.

## போஜன் சிம்மாதனம் ஏறுதல்

இதற்குள்ளாக இராஜாக்கினையால் அங்கு வந்த பட்டத்து யானையின் மேரில் போஜகுமாரனும் ஆரோகணித்தவனாய், அரசசின்னங்களெல்லாம் புடைசூழவும், இருமருங்கிலும் க்ஷாமரையிரட்டவும், வந்திகள் துதிக்கவும், பேரி டங்கா முதலிய அரச வாத்தியங்களெல்லாம் பேரொலிபோல் முழங்கவும், அந்தணர் முதலிய மறையோர் யாவரும் ஆசிகள் கூறவும், நகரவாசிகளும் அமைச்சரும் நாற்புறமும் சூழ்ந்துவரவும், உதயபானுவைப்போல ஒளிகொண்ட பேரழகோடும் நகர்வலம் வந்து, வைகறைப்பொழுதிலே நல்ல ஓரையிலே அரண்மனையுட் புகுந்து அரசனடியில் வணங்கினன்.

அப்போது அரசனும் இளவரசை வாறி யெடுத்து மார்போடணைத்து, வாய் குளறவும், கண்ணீர் மல்கவும், விம்மியகுரலோடே, ஒருவித தொனியோடே, "அப்பனே! ஒப்புவமையில்லாக் கண்மணீ! உன்னையுங் கொல்லச் சொன்னேனே! மகா பாபத்தை வகித்தேனே! அடாத பாதகம் செய்த நான் அருநரகி லாழாமல் விடாத யோகப் பழக்கத்தினல் வீடு பெறக்கருதிக் கலைமான்களோடித் திரியும் கானகம் செல்கின்றேன். நீயும் இப் பூபாரத்தைத் தாங்கவேண்டும்" என்று சொல்லித் தன் சிங்காதனத்திலே போஜனையு முட்காரவைத்து, மகுடாபிஷேகம் செய்வித்துத், தன் பிள்ளைகளுக்கும் தனித்தனி ஒவ்வொரு நாடளித்துத், தனக்கு மிகவும் பிரியசுதனை ஜயந்தனை போஜன் மடியில் கிடத்தினன்.

பிறகு முஞ்சன் போஜனைப் பார்த்து, "ஆதவனொளி பரவும் அவனியும் உன் வசமாகக் குழந்தாய்! நீ யாதொரு குறையுமின்

றிச் செல்வச்சிரஞ்சீவியாய்ச் செகமெலா முன்னைப் போற்றவும் செங்கோலோச்சி வருவாய்!" என்று ஆசீர்வதித்துச், சிறந்த பட்டாடைமுதலிய யாவையும் நீக்கிச், சீரை யுடுத்து, விபூதி தூளிதனாய்ச், சிவந்த ருத்ராக்கமாலை யணிந்த மார்பினனாய்த், தண்டு கமண்டல தாரியாய்ச், சண்டனை யுதைத்துத் தொண்டனைக் காத்து இரக்ஷித்த அண்டருமறியா அருமறைப்பொருளின் அருள் பெறுமாறு இருள் சூழ்ந்த குகைகளையுடையதாய்ப், பொருள் சூழ்ந்த புனிதர் சஞ்சரிப்பதாய், அருள் வாய்ந்த அநேக தவவான்களெல்லாம் அங்கங்கே யுறைவதற்கிடனாயுள்ள அறிய வனத்திற்குச் சென்றனன்.

அதுமுதல் போஜனும் தேவாநுக்கிரகத்தாலும், தேவ பிராமணப் பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும் இராச்சிய பாரத்தை வகித்தவனாய், முன் முக்கிய மந்திரியாயிருந்த புத்திசாகரனையே மறுபடியும் முதன் மந்திரியாக்கி, உலகமெல்லாந் துதிக்கும்படி ஒரு குடைக்கீழ் அரசாண்டுவந்தனன். இது போஜனுடைய புண்ணிய சரித்திரமாகும்" என்று ஆண்பக்ஷி கூறியது.

பெண் பக்ஷியும் அமோகமாக ஆர்ப்பரித்து, அழகிய தன் ரோமபந்திகளெல்லாம் அப்படியப்படியே சிலிர்க்கவும், தன்னுடைய இரண்டு இறக்கைகளையும் தாராளமாய் விரித்து, அவ் வாண் பக்ஷியை இறுகத் தழுவிக்கொண்டு, "என் மனோரதமே! இது காளிதாஸனுடைய விருத்தாந்தத்தை விட எத்தனையோ மடங்கு அதிகரித்த இனிப்பைத் தருகின்றதே! உதயபாநுவையும் ஒப்பற்ற தாமரைமலரையும் ஒத்த இவர்க ளிருவரும் ஒருவரையொருவர் நட்புப் பாராட்டிய விதத்தையும் விவரிக்கவேண்டும்" எனவே ஆண் பக்ஷியுஞ் சொல்லத்தொடங்கிற்று.

## காளிதாசன் தாரா நகரம் வருதல்

"ஆ! என் இன்பவாரிதியே! என்ன சொல்லப்போகின்றேன்? முடி பொறுத்த மன்னரெல்லாம் அடிதொழுது வணங்கும்படி கொடிக்குள்ளே அநேக சுலோகங்களை அபாரமாகப் பொழிந்து சபாரஞ்சிதமாக விளங்கும் காளிதாசமகாகவியும், சகலசத்குண விவேகியாகிய தன் நாயகியானவள் தன்னைக் கூடுதற்கில்லாத மனத் தளர்ச்சியால் மயங்கிவாடித் தாப மேலிடவும், தரையில் விழுந்து அப்படியே மூர்ச்சை போனதைக் கண்டு, அந் நிலையிலேயே அவ

ளுடைய பாதம் பணிந்து, அப்பெரிய மாளிகையினின்றும் எப்படியோ தப்பித்துக்கொண்டு வெளியே வந்து, 'வேறொருவர் கண்ணுக்குந் தென்படக்கூடாது' என்று வெகு வேகமாக நடந்து, அந்நகரத்தைக் கடந்து, விடியுமுன்னமே அநேககாத தூரம் சென்றனன். அப்படிச் சென்றவனும் அநேக திவ்விய தேசங்களை யெல்லாந் தரிசித்து, இப்படியாகச் சிலகாலம் தேசசஞ்சாரஞ் செய்து, அங்கங்கே அரசர்களாலளிக்கப்பட்ட சன்மானமாகிய அபூர்வ பணிகள், பட்டாடைகள், முத்தாரங்கள், யானை, குதிரை, தண்டிகை, பல்லக்கு, சாமரம், ஆலவட்டம், குடை கொடிமுதலிய யாவுந் தன்னைச் சூழவும், கஜாரூடனாய்த் தாராநகரம் வந்து சேர்ந்தனன்.

இது இவ்வாறிருக்க, முன் சொன்னதுபோலச் சிம்மாதனமேறி அரசாள ஆரம்பித்த போஜன் வெகுஜனப் பிரியனாய் விசாரணை நடத்தி வரவும் ஒரு நாள் சூரியாஸ்தமயச் சமயத்திலே வேடிக்கையார்த்தமாகப் பூஞ்சோலை யொன்றிற் புகுந்து அநேக விநோதங்களையெல்லாம் அங்கங்கே சுற்றிப்பார்த்துக்கொண்டிருக்கையில், ஓர் அந்தணனைக் கண்ணுற்றனன்.

அவ் விப்பிரனும் போஜனைப் பார்த்த அளவிலே கண்களை இரண்டு கரங்களாலும் பொத்திக்கொண்டனன். அதைக் கண்ட அரசகுமாரனும் அப்படியே துணுக்குற்றவனாய், "ஆ! அந்தணரே! இஃதென்ன ஆச்சரியம்; அரசனைப் பார்த்த நீர் ஆசீர்வாதம் பண்ணாமல் இப்படிக் கண்களை மூடிக்கொண்டீரே" என்றனன்.

அந்தண கவியும் "ஓ அரசனே! நீரோ தெய்வபக்தியிற் சிறந்தவரே, பிராமணாளிடத்திலும் பிரீதியையுடையவர்தான். நானும் அதனாலேதான் இவ்வளவு தாராளமாய்ப் பேசுகின்றேன்; ஆனால், நீர் ஒருவருக்கும் ஒன்றுந் தருகிறதில்லை. ஆகையால், உம்முடைய தாக்ஷண்யம் எனக்கேன்? மேலுக்கு உமக்கு ஆசீர்வாதம் செய்வதால் எனக்கென்ன பலன்?" என்று மறுபடியும், "மேலும், காலைப் பொழுதில் கொடாதவன் முகத்திலே விழித்தால் மற்றோரிடத்திலும் யாதும் அன்றைக்குக் கிட்டாதாகையால், உம்மைப் பார்க்க மனமில்லாமல் கண்களை மூடிக்கொண்டேன்" என்று சொல்லி, இதோடு விடாமல் அண்ணலைப் பார்த்து, "அன்றியும், எந்த மன்னனுடைய கோபமும் தயையும் கொஞ்சமும் பயன்படாதோ அவ்வரசனை, 'ஸ்திரீகள் பேடியை அடையாதவாறுபோல்' ஒருவரும் நாடார்கள். 'அவை நடுங்கும் கல்வியும், ஆதுலர்க்கிடாத செல்வ

மும், அமரில் மெய் விதிர்க்குந் தன்மையும் பயனற்றனவாம். அமைச்சர் சொல்லைக் கேட்டவனும், விடர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைப்போனும், பெண்டீர்சொற் கேட்போனும் ஆகிய அரசனைக் கனவிலும் நினையேல்' என்று என் தந்தை சொன்ன வார்த்தையை மறந்தேனில்லை. கொடாதவனுடைய தாட்சணியம் விரும்பத் தக்கனவன்று. ததீசி, கன்னன், விக்கிரமார்க்கன் முதலிய தாதாக்களெல்லாம் புகழுடம்பால் இன்று மிருப்பதற்குக் காரணம் அவர்களுடைய ஔதாரிய குணங்களே. ஆகையால், ஒவ்வொரு மனிதனும் அழியும் பூதவுடம்பின் சுகத்தைக் கருதாமல் அழியாப் புகழுடம்பின் காப்பாகிய அறத்தையே கருதல் வேண்டும். புலவனுனும், பூபாலனுனும், சமர்த்தனுனும், வலியில்லானுனும், செல்வனுனும், தரித்திரனுனும் காலக்கடவுள் முன்னே இவர்களெல்லோரும் சமமானவர்களே. ஆகையால், நிலையில்லாத காய மிருக்கும்போதே நிலைபெற்ற தருமத்தை நாடவேண்டும்," என்று சொன்ன வாக்கியத்தைக் கேட்ட இறைவனும் இதயம் பூரிக்கவும், இருகண்களிலும் ஆநந்த பாஷ்பம் பொழியவும், அவ்வேதோத்தமனை நோக்கி, "உத்தமரிற் சிறந்த சத்தியரே! உலகத்தில் உள்ளதை உள்ளபடியே எடுத்துச்சொன்ன உமக்கு நான் என்னமாய் உவமை கொள்வேன்! அறிவுள்ள நண்பன் இதமான அமிழ்தம் போன்றவனுகின்றான்," எனப் புகழ்ந்து கொண்டாடி, அவ் விப்பிரனுக்கு லட்சம் பொன்னை நன்கொடையாக அளித்தனன். அரசனும் அக் கவியின் நாமதேயத்தைக் கோவிந்த கவி என்றறிந்து கொண்டு, தன் ஆஸ்தானத்திலே அடிக்கடி வரவும், அநேக வித்துவான்களை யெல்லாம் இட்டுக்கொண்டு வரவும் ஏற்படுத்தினன்.

இவ்வாறு நடந்துகொண்டு வருகிறபோது போஜனைப் புலவர்கள் "பூஜிதையுடையான், கொடையாளன், தனசீலன்" என்று கூறிய புகழ் வார்த்தைத் தரணியெங்கும் பரவியது. அப்போது அரசனைப் பார்க்கும் அநேக வித்துவான்களெல்லாம் அந்தந்தத் திசைகளிலே யிருந்தும் வந்து நிரம்பினர். இதனால் அரசனும் தனத்தை வாரி அபாரமாக இவர்களுக்குச் செலவு செய்ய ஆரம்பித்தனன். இதைக்கண்ட தனரக்ஷகனும் "தேவனே! ஒரு விண்ணப்பம்: தனச் செருக்கால்தான் தரணியில் மன்னவர் எதிரிகளுக்குத் தளராதிருப்பது. ரத கஜ துரக பதாதிகளை ஸம்ரக்ஷிக்கிற அரசனை வேற்றரசர் கண்டால் நடுங்குவர். அவைகளுக்கு மூலபலம் தனமே யாம். ஐயனே! இவ் வுலகத்தைப் பார்த்தீர!

சு: ப்ராயோ தனவதா மேவ தனத்ருஷ்டா கரீயஸீ |
பஸ்யகோட்டித்வயா ஸக்தம் லக்ஷாய ப்ரவணம் தநு ||

(இ-ள்.) ஒருவில்லானது இரண்டு கோடிகளை யுடையதாயிருந்தும் ஓரிலக்கத்திற்காக எவ்வளவோ வணங்குகின்றதே! ஆகையால், செல்வமுடையோர்க்கே எல்லாச் சிறப்புமுண்டு" என்றனன்.

அதைச் செவியுற்ற போஜனும் "ஹே மந்த்ரீ! என்ன சொன்ணுய்! எந்தப் பொருளை ஒருவன் தான் அனுபவிக்காமலும் இதராளுக்கு உதவாமலும் பத்திரப்படுத்துவனே அந்தப் பொருள் அழியும் பொருளே. ஆகையால், பொருள் அவாக்கொண்ட நீ என் ஆஸ்தானத்தில் இருக்கப்போகாது" என்று அவனை நீக்கி வேறொருவனை அவ் வேலையில் வைத்து, அவனைப் பார்த்து, "மகா கவிகளாய் என் சகஸாக்கு வருவார்களானால் அவர்களுக்கு லக்ஷம் பொன்னும், புலவர்களுக்கு அதிற் பாதியும், அரை வித்துவானுக்கு ஓர் ஊரும், கால் வித்துவானுக்கு அரை ஊரும், தாராளமாய் வழங்கி வரவேண்டும். என்னுடைய மந்திராலோசனையி லிருப்பவர்களிலே லோபத்துவ முடையவன் கொல்லத்தக்கவனே. எது அநுபவித்தற்கும் அந்நியருக்கு இட்டுக் காட்டுவதற்கு முபயோகப்படுமோ அதுதான் தனம். அப்படியில்லாத தனத்தால் யாருக்குத்தான் நலம்? எப்படி லோகஜனங்கள் கடலை விரும்பாது அதிற் படிந்து மேலே கிளம்பி சரமாரியாகப் பொழியும் மேகத்தையே விரும்புகிறார்களோ அப்படியே, செல்வர்களைச் சட்டை பண்ணுது சிறந்த கொடையாளிகளையே விரும்புகிறார்கள். அதற்கு அடையாளமாகக் கொள்ளுங் குணமே மிகுந்துள்ள ஆழ்ந்த சமுத்திரமானது பாதலம் வரையில் கீழுக்குச் செல்லவும் கொடுக்குந் தன்மை வாய்ந்த மேகமன்றோ வானத்தின் மேற்கிளம்பிக் கர்ச்சனை செய்கின்றது என்றெடுத்துக் காட்டினன்.

இப்படிச் சிலநாள் செல்லவும் "போஜன் வித்வரத்னம், மகா கொடையாளன்" என்று கேள்வியுற்ற கலிங்கதேசத்துக் கவி யொருவன் காவலன் அரண்மனை யடைந்தும் ராஜாவைக் காணக் கிடைக்காமல் அவனுக்குப் பிண்டம் பெருங்காயமாய்விட்டது. அப்போது ஒருநாள் இக் கவியின் அதிர்ஷ்டமென்பது அரசன் வேட்டைக்குப் புறப்படவும், அப்படி வந்த அரசனைப் பார்த்து, மிக்க பேரவாவேரிடே அந்தக் கவியும்,

சு: த்ருஷ்டே ஸ்ரீ போஜராஜேந்த்ரே, களந்தி த்ரீணீ தக்ஷணாத், |
ஸத்ரோ: ஸஸ்த்ரம், கவே: கஷ்டம், நீவீபந்தோ ம்ருகீத்ருஸாம் ||

(இ-ள்) போஜபூபதியைக் கண்ட அப்போதே சத்துருக்களின் ஆயுதங்களும், கவிகளின் கஷ்டங்களும், மான்மிரட்சி கொண்ட மாதர்கள் கொசவங்களும் நழுவுகின்றன," என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லவும், அரசன் லக்ஷம் பொன் தந்தனன்.

அதன்பிறகு அரசன் அவ்வனத்தில் திரிந்து வருகையில் அங்கேயொரு புளிந்த (வேட)ச் சிறுவன் வேடிக்கையாகப்பாட அப்பாட்டின் இனிமைக்காக ஐந்துலக்ஷம் பொன்னை யளித்தனன். அது மனந்தாளாத கலிங்கதேசத்துக் கவியும் "பாடினவனோ வேடச் சிறுவன். பாட்டோ அவ்வளவு ரசனையுள்ளதல்ல; பரிசோ அபாரமாயிருக்கிறதே! ஐந்துலக்ஷமா!" என்று அரசனுடைய அஸ்தத்திலுள்ள தாமரையைச் சுற்றிச்சொல்வதுபோல அரசனைக் குறிப்பிட்டு,

சு: ஏதே குணா ஹி பங்கஜ ஸந்தோபி ந தே ப்ரகாச மாயாந்தி |
ய ல்லக்ஷ்மீவஸதே ஸ்தவ மதுபை ருபபூஜ்யதே கோஸ: ||

என்னும் சுலோகத்தைக் கூறினன்.

(இ-ள்) ஹே! கமலமே! ஸ்ரீதேவிக் கிருப்பிடமாகிய உன்னுடைய புஷ்பங்கள் (நிறைந்த உன் பொக்கிஷத்தின் திரவியங்கள்) மதுபானர்களாலே உண்ணப்படுகின்றது (அபாத்திரர்களாலே அநுபவிக்கப்படுகிறது); அதனால் நின் குணங்கள் நற்குணங்களாயிருந்தும் பிரகாசிக்கவில்லை.

அரசன் அதன் கருத்தை யறிந்துகொண்டு மறுபடியும் அக்கவிக்கு ஒருலக்ஷம் கொடுத்தனன். பிறகு அக்கவியைப் பார்த்து, "ஹே! கவி! பிரபுக்களால் மதிக்கக்கூடியது கல்வித்திறமே யல்லாது குலத்தைப்பற்றி யன்று. எத்தனைத் தேவர்க ளிருக்கவும் ஏன் இந்துவை இறைவன் சிரோபூஷணமாகக் கொண்டார்?" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே எங்கேயோவிருந்து ஐந்தாறு கவிகள் ஏககாலத்திலே வந்துவிட்டார்கள். இறைவன். என்ன செய்வான் பாவம்! "இப்போதே இவ்வளவு பொருள் செலவழிந்ததே" என்று கொஞ்சம் முகஞ் சுளித்தவனாயிருக்கவே, அதைக் கண்ட கலிங்க தேசக் கவியும், தாமரையைப் பார்த்துச் சொல்வதுபோல,

சு: கிம் குப்யஸி? கஸ்மைநா? நவ்ஸௌரபஸாராய ஹி நிஜமதுநே |
யஸ்ய ஸதபத்ர தேத்ய ப்ரதி பத்த்ரம் மருக்யதே ப்ரமரை: ||

(இ-ள்) "ஸததளத்தோடுங் கூடிய கமலமே! ஏன் கோபிக்கின்ருய்? உன்னிடத்துள்ள மணங் கமழும் புதிய தேனை யுண்டு களிப்பதற்காக வண்டுகள் தேடுகின்றன!!" என்று சொல்ல, அதனுல் அரசன் முகமானது கொஞ்சம் தெளிவுகொண்டது.

அதைக் கண்ட கவி மறுபடியும், "லோபியானவன், 'பேடி: பெண்களைத் தொட்டுப்பார்ப்பதுபோல'த், திரவியத்தைத் தானும் அனுபவியாமல் இதரார்களுக்குங் கொடாமல் சேமிக்கின்ருன். எவன் இரப்போர் எண்ணமறிந்து ஈந்தும் அப்படிக் கொடுத்தபிறகு குதூகலமுங்கொள்வனே அவனைப்பார்த்தவனும்கேட்டவனும் சுவர்க்கம் புகுவன்" என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்ல, போஜன் மனம் பூரித்து, அக் கலிங்கதேசக் கவிக்குத் திரும்பவும் லக்ஷம்பொன் மேரை யளித்தனன். அதைப் பெற்றுக்கொண்ட கவியானவன் தன் எதிரிலிருக்கும் ஆறு கவிகளையும் நோக்கி, "அரசன் இப் பெரிய குளக்கரையினின்றும் அரண்மனைக்குச் செல்லும் போது ஏதாவதொரு கவியைச் சொல்லுங்கள்!" என்ன, அரசனுடைய செய்கையை அதுவரையில் கவனித்திருந்த அம் மகா கவிகளுள் ஒருவன் அப்படியே தடாகத்தைப்பார்த்துச் சொல்வது போல மன்னவனைக் குறிப்பிட்டு,

சு: ஆகதாநா மபூர்ணாநாம் பூர்ணாநாம பயகச்சதாம் |
யதத்வநி ந ஸங்கஷ்டோ, கடாநாம் தத் ஸரோவரம் ||

(இ-ள்) "(தன்னிடத்தில்) வந்து நிறைந்தவைகளும் நிறைந்தும் போகாதவைகளுமான குடங்களுக்கு எந்த வழியிலே இடிபாடு இல்லையோ அதே சிறந்த குளமாம்" என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்ல, அக் கவிக்கு அரசன் லக்ஷம் கொடுத்தான். பின்பு கவிக்காகக் காவலனு லேற்படுத்தியிருந்த கோவிந்த பண்டிதன் அக் கவிகளைக் கோபித்துக்கொள்ளவும், அவனுடைய கோபாபிப்பிராயத்தை யின்னதென் றறிந்த இரண்டாவது கவி,

சு: கஸ்யத்ருஷம் ந க்ஷபயஸி? பிபதி ந க ஸ்தவ பய: ப்ரவி ஸ்யாந்த |
யதி ஸன்மார்க, ஸரோவர, நக்ரோ ந க்ரோட மதிவஸதி ||

(இ-ள்) ஓ தடாகமே! (உன்னிடத்தில் வருவதற்கோ) நல்ல வழி யுண்டாயிருக்கிறது. ஆனல், (க்ரோத குணமுள்ள) முதலை மாத்திரம் (உன்னிடத்திலே) வாசம் செய்யாவிட்டால், யாருடைய தாகத்தைத்தான் நீ தீர்க்கமாட்டாய்? உன் உள்ளே யிழிந்து எவன் தான் உன் ஜலத்தை அருந்தாமற்போவான்?

என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்ல, இறைவன் அவற்கு இரண்டிலக்ஷம் பொன் அளித்தனன். அக் கோவிந்த கவியை அவ்வதிகாரத்தினின்று நீக்கிவிட்டு, அவனைப் பார்த்து, "நீரும் மற்றவர்களைப்போல் என் அலங்காரசபைக்கு வந்துகொண்டிரும்; ஆனால், ஒருவர் மனமும் நோகச்செய்ய லாகாது," என்று சொல்லிப் பின் அவர்களுள் ஒவ்வொருவருக்குந் தனித்தனியே ஒரு லக்ஷம் கொடுத்துவிட்டு அரண்மனைக்குச் சென்றனன். அவர்களும் வந்த வழியே சென்றனர்.

பிறகு ஓர்நாள் நரபதி முக்கியமந்திரியை யழைத்து "மூடனாயிருக்கிறவன் எவனாயிருந்தாலும் என் நகரத்தில் இருக்கப்போகாது" என்றனன். அதனால் தாரா நகரமானது அறிவிற் சிறந்தோர்களாலேயே நிறைவுற்றிருந்தது. அதற்குப் பிறகு அப்போதைக்கப்போது அரசன் சபைக்கு வந்தவர்களெல்லாம் கலாசமுத்திரங்களாகவும், எல்லாமறிந்தவர்களாகவு மிருந்தார்கள். அப்படி வந்தவர்களாகிய வரருசி, பாண, மயூர, ரேபண, ஹரி, பூர, களிங்க, விநாயக, மதந, வித்தியாவிநோத, கோகில, தாரேந்திராதி ப்ரமுகாளான ஐஞ்ஞூறு கவிகளாலே போஜனுடைய புகழ்கொண்ட சபாமண்டபமானது சோபிதமுற்றிருந்தது.

கவிசிரோமணியாய்,கவிதாப்பிரியனாய்ப்,பிராமணர்க்குப் பிரிய பந்துவாய் விளங்கும் நரேந்த்ரனான போஜன்: வித்துவக்கூட்டமானது தன்னைச் சூழ்ந்து சேவிக்கும்படிச் சிம்மாதனத்திருந்தபோது, ஒருநாள் வாயிற்காப்போன் வந்து, "ஐயனே! பராக்கு! யாரோ ஒரு புலவன் தலைக்கடையிற் காத்துக்கொண்டிருக்கிறான்" என்ன, ராஜாக்ஞையால் அம் மகாகவியு முள்ளே விடப்பட்டவனாய் வலக்கையை உயரத் தூக்கிக்கொண்டு, அரசனே! "மங்கள முண்டாகுக" என, அரசன் "ஹே சங்கர கவி! இப் பத்திரிகையில் என்ன?" என்று வினவ, சங்கரகவியும் "பத்யம்" (பாட்டு) என்றனர். போஜனும் "யாருடையது?" என்ன, மகா கவியும் "ஹே! போஜபூபதி! உம்முடையதே" என, அரசனும் அதைப் படியும் என சங்கரகவி,

சு: ஏதாஸா மரவிந்தஸுந்தரத்ருஸாம் த்ராக்சாமராந்தோளநா |
உத்வேல்லத் புஜவல்லி கங்கணக்ஷத்காரா: க்ஷணம் வார்யதாம் ||

(இ - ள்) சாமரை வீசிக்கொண்டிருக்கும் பத்மளா லோசனிகளின் (தாமரைபோன்ற கண்களையுடைய மாதர்களின்) வேகமாகச் சாமரையை வீசுகிறதினாலே மேலாடிக்கொண்டிருக்கும் இளங்கொடி

போன்ற கரத்தி லணிந்திருக்குங் கங்கணங்களின் சப்தத்தைச் சற்றே நிறுத்தும் என்று சொல்லி,

சு: யதா யதா போஜயஸோ விவர்த்ததே
ஸிதாம் த்ரிலோகீ மீவ கர்த்து முத்யதம் |
ததா ததா மே ஹ்ருதயம் விதூயதே
ப்ரியாலகாளீ தவளத்வஸங்கமா ||

(இ - ள்) போஜனே! மூவுலகங்களையும் வெளேரென்று வெளுத்துப்போகச் செய்வதற்கு எத்தனித்ததுபோல எப்படி எப்படி உன் புகழானது விஸ்தரித்துக்கொண்டுவருகிறதோ அப்படியப் படியே என் காதலியின் அளகபாரமானது வெளுத்துக்கொண்டே வரும் என்னும் சங்கையால் என் மனமானது அயர்ந்துகொண்டே வருகிறது.

என்று கூறவும், அரசன் அதற்காகச் சங்கரகவிக்குத் துவாதச (பன்னிரண்டு) லக்ஷம்பொன் தான மளித்தனன். இது இப்படி யிருக்கவும், தாராநகரத்தை முன்ன மடைந்ததாகச் சொன்ன காளி தாசன் செயலை நாடுவோம்.

## காளிதாசன் விலாசவதியைக் காணல்

அவ்வாறு தாரா நகரத்தில் வந்து தங்கி அவ்வூரின் வளப்பத் தையும், அதி லமைந்திருக்கும் அநேக விநோத கட்டடங்களையும், அங்கங்கே இயற்கையாகவே யமைந்து விளங்கும் அழகிய காக்ஷி களையும், தினமொரு வேடிக்கையாகக் காளிதாசனுந் தரிசித்து வரு கையில், பௌர்ணமியும் வந்து, பூரணச்சந்திரனும் பொலிந்து தோன்றினன். அன்றையதினம் அருக்கன் மேற்கடலிலாழவும்மாலைக் கடன் முடித்து வந்த மகாகவியும், 'சோலைகளடர்ந்த அவ்வூரை யொருதரம் சுற்றிவரலாம்' என்றெண்ணி, அழகிய காதிற் கனக குண்டல மணிந்து, அரையிற் பட்டாடை யுடுத்து, முத்தாரம் பூண்டு, கதம்ப கஸ்தூரிமுதலிய கலவைச்சாந்தணிந்த மார்பின னாய், காஷ்மீரதேசத்து விலையுயர்ந்த வெண்பட்டுச் சால்வையைப் போர்த்து, விபூதி தூளித குங்கமதாரணனாய்க், குடுமியில் ஜாதி மல்லிகைசூடி, சர்வாபரணாலங்கிருதனாய்க், கையிற் றும்பூலம் பிடித் துக் கட்டழகமைந்த காமனை யொத்து, வெளியில் வந்து அநேக

வீதிகளையும் பார்த்துக்கொண்டே வருகையில், நிலவும் புறப்பட்டது.

அப்போதுதான் வேசியர் வீதியின் வழியாய் வருமிவனும், ஒப்பற்ற தேஜஸ்ஸோடும் உயர்ந்த நெற்றியும், உன்னத நாசியும், சிவந்த இதழும், செவ்வரி படர்ந்து விசாலித்தகண்களும் உடையவளாய்க் குதூகலத்தோடும் சில சகிமார்கள் தன்னைச் சூழவும் அங்கேயொரு வீட்டின் முன்னணியின் முகப்பில் உலாவிக்கொண்டிருக்கும் ஒரு அதிரூபவதியைக் கண்டு ஆச்சரியவசத்தனாய் அமோக மோகங்கொண்டு மனந்தாளாமல்,

சு: ஜடிதிப்ரவிஸ கேஹம் மாபஹிஸ்திஷ்டபாலே
க்ரஹண சமயவேளா ஜாயதே வீதாஸ்மே: |
தவமுக மகளங்கம் வீக்ஷிய நூநம் ஸராஹு:
க்ரஸதி தவமுகேந்தும் பூர்ணசந்த்ரம் விஹைவ ||

(இ - ள்) "ஓ பெண்ணே! சீக்கிரமாக உள்ளே ஓடிப்போ! நீயும் வெளியிலிருக்கப் போகாது; ஏனென்றால், இதோ! இராகுவும் களங்கத்தையுடைய சந்திரனை விழுங்கப்போகின்றான். அப்படிப்பட்டவனும் களங்கரஹிதமாகிய உன் முகத்தைப் பார்த்துவிட்டாலோ, உடனே அச் சந்திரனை விட்டு உன்னையும் விழுங்காமல் விடுவனோ?" என்றனன்.

அதைக் கேட்ட அப் பெண்ணாமுதும் ஆநந்தமுடையவளாய் அம் மகாகவியைப் பார்த்து அதிசயித்து, அதி மோகங்கொண்டு, "தேவர் யாரோ? தேசம் யாதோ?" என்றனள். உடனே காளிதாசனும் என் பெயர் காளிதாசன்; இவ் வுலகமுழுதும் என்னுடையதுதான்" என்றனன்.

அதற்கு அவ்வதிரூபவதியும் "அப்படி யுண்மையாகவே காளிதாசனானால், ஒருவராலும் வகை சொல்வதற்குக் கூடாத இந்த நான்காமடிக்குப் பிரதமாதி மூன்றடிகளையு முடித்து அதில் நான் கொண்ட அபிப்பிராயத்தை எடுத்துக் காட்ட வல்லையோ?" என்றனள்.

அதற்குக் காளிதாசனும், "அதென்ன சுலோகம்? அப்படிப்பட்டதா? ஏதோ அந்த அடியைச் சொல்! பார்ப்போம்! இதோ ஒரு நொடியில் மற்றவைகளையும் பூர்த்திசெய்து உன் எண்ணத்தையும் உள்ளபடியே எடுத்துக் காட்டுகின்றேன்" என்று அலக்ஷியமாய்ச்

சொல்லவும், அதைக் கேட்ட அப் பெண்மணியும் "ஆ! ஆ! அப்படியா! ஆரிய பூபதி! நான் கொடுக்கப்போகும் அடியை அவ்வளவு அலக்ஷியமாய் எண்ணுதிர். அதன் பெருமையைச் சொல்லுகிறேன் கேளும்!

இத் தாரா நகரத்துப் போஜனும் இவனுடைய சபாலங்காரமாக விளங்கும் வரருசி என்ன! பாணகவி என்ன! மயூரகவியென்ன! ரேபணனென்ன! ஹரி, பூர, விநாயக, மதன, களிங்க, வித்யாவிநோத, கோகில, தாரேந்த்ர, கோவிந்த, கௌடபாதாதி பிரமுகாளென்ன! இவர்களெல்லாம் என் கருத்தை எள்ளளவும் அறியாமற் போயினரே! நீயு மிதற்குப் பதிலளிக்கவல்லையேல், உன்னைவிட மனோரதன் எனக்கு வேறொருவரு மில்லை" என்றுசொல்லிச் சுலோகத்தின் நான்கா மடியையும்,

சு: விக்ரீதே கரிணி கிமங்குஸே விவாத:" ||

(இ - ள்) "யானையை விற்று அங்குசமென்னுடையதென்றாலெப்படி?" என்பதை யெடுத்துக் கொடுத்து, "ஏதோ பார்ப்போம்" என்றனள். உடனே ஒப்பற்ற மகாகவியும்,

சு: ஸம்பீதே தாமநுஸ்ஸ்தநே க்ருஹீதே
ஸஞ்சாதே கதவஸநே தவோ ருயுக்மே!
ஸம்போகேதருணி வ்ருதாஹட: கதஸ்தே
விக்ரீதே கரிணி கிமங்குஸே விவாத: ||

(இ-ள்) "ஒரு ஸ்திரியானவள் தான் கோரிய ஓர் புருஷனுக்குச் சர்வசுதந்தரத்தையு மளித்து மனோரதத்திற்கு மாத்திரம் ஏமாற்றியபோது, அப் புருஷனும், ஆகா நன்றாயிருக்கிறதே! இதென்ன சாமர்த்தியம்! இதனால் உன்னையும் விடுவேனோ! யானையை யொருவனுக்கு விற்றபிறகு அதனுடைய அங்குசம் என்னுடையதென்றால் லெப்படிக் கூடும்?" என்பதுதான் என்றெடுத்துச் சொல்லினன்.

அதைக் கேட்டவுடனே எங்குமில்லாத ஆநந்தங்கொண்ட அழகிய ரூபவதியும் அப்படியே தடாலென்று அம் மகாகவியின்பேரில் விழுந்து கட்டி யணைத்துக்கொண்டு முத்தமளிக்கப் போயினள். அப்போது 'சகிமார்கள் பக்கத்தி லிருக்கின்றார்களே' என்ற லஜ்ஜையினாலே காளிதாசனும் தன் முகத்தை உடனே பின்புறமாகத் திருப்பிக்கொண்டனன். அதனால் தான் கொண்ட எண்ணம் நிறை

வேறுமற்போகவே, அம் மோகனவதியும் அதி கோபங்கொண்டு, தூரத்தே போய் நின்று, அம் மகாபுருஷனைப் பார்த்து "அகோ! பிராமணா! ஆகா ஆச்சரியம்! நன்றாயிருக்கிறது! நீதானோ காளிதாசன்? நிச்சயமாய் நீயேயானால், கொச்சைமொழிகளைக் கொட்டிக் குதூகலிக்கச் செய்விக்கும் என்னிச்சைக்கும் வேறாய் இப்படியும் லஜ்ஜை கொள்வையோ? நீயும் இன்னும் யாரோ! போ! போ!" என்றனள்.

அதற்குக் காளிதாசனும் "ஹே ரூபவதி! என்ன சொன்னாய்? ஒப்பற்ற தேஜஸ்ஸோடுங் கூடிய உன்னுடைய முகமானது அகண்டு பரந்த ஆகாயத்தை அழகுபெறச் செய்யும் பூர்ணகலையோடுங்கூடிய சந்திரனைவிட எண்மடங்கு அதிகரித்த பிரபையோடேகூட ஒளிவிட்டுக் கதிர் பரப்பி உன்னதங்கொண்டதாய் என் கண்களிரண்டையுங் கவர்ந்துகொள்ளவே, உண்மையிலேயே சந்திரன்தான் இப்படிப் பிரகாசிக்கின்றானோ? அப்படியானால் நிலாவொளிக்கு அடையாளமாக நம்முடைய நிழலானது நமக்குப் பின்புறத்திலே பூமியிற் படிந்து காணவேண்டுமே; எங்கே அப்படிக் காண்கிறதா? பார்ப்போம் என்று திரும்பிப் பார்த்தேனே யொழிய வேறில்லையே" என்று வெகு சாதுர்யமா யெடுத்துச்சொல்லினன்.

அதைக் கேட்ட குணவதியும் இதயம் பூரிக்கவும், உதயபானுவைப்போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கு முகத்தினளாய் வேறொன்றும் பேசாமல் அவனுடைய இரண்டு கரங்களையும் இறுகப் பிடித்துக்கொண்டு அப்படியே உள்ளே அழைத்துச் சென்று தனக்கும் ஏற்ற மனோரதனாகத் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டனள்.

## காளிதாசன் போஜன் மைத்துனனை அவமானம் செய்தல்

விலாசவதியின் விநோதலீலைக்கும் மனோகரங்கொண்டு கலாசமுத்திரமாகிய காளிதாசனுங் கரைகாணாதவனாய்ச் சுகித்துக் கொண்டிருக்கையில், அந்நகர்க்கிறையாகிய போஜனும் வேதப்பிராமண பூஜிதையுடையவனாய், சமஸ்கிருதபாஷா சமுத்திரத்தைத் தன் இருதயகலசத் தடக்கி இறுமாந்து, அப் பாஷா வல்லவராய்த் தன்னை யடைவோர்க் கெல்லாந் தாராளமாய் அபாரமான பொன்னை

யளித்து, குபேரனைப்போலக் குறைவற்ற செல்வத்தாற் கீர்த்தியுற்றிருந்தனன்.

இவனுடைய வள்ளற்றன்மையை இதற்கு முன்னமே யடிக்கடி கேள்வியுற்றிருந்த மகாகவியும், ஒருநாள், சர்வாபரணாலங்கிருதனாய் இராஜவீதியின் வழியாக வந்துகொண்டிருக்கும்போது போஜனுடைய பட்டமகிஷியின் பின்னேனொருவன் சதுர்விதநடையில் சாமர்த்தியமுற்றுத் தீவிரகதியாய்ச் சாரி போகவல்ல திவ்வியமானவோர் பஞ்சகல்யாணியின்பேரில் ஆரோகணித்துக்கொண்டு அங்குமிங்குமாய் அதைத் துரத்தியடித்தும் எதிர்ப்பட்டவர்மேல் ஏற்றியும், தன்னிஷ்டம் போலத் திரிந்துகொண்டிருக்கையில், அவ்வழியாய்த் தன் அருகே வந்த காளிதாசனையும் சவுக்கினால் ஓரடி யடித்தனன். அது சகிக்காத மகாகவியுங் கோபங்கொண்டு,

சு: சதுரம் துரகம் பரிநர்த்தயத: பதிபௌரஜநாந் பரிமர்த்தயத: |
நஹிதே புஜபாக்யபவோ விபவோ பகிநீ பகபாக்யபவோ விபவ: ||

(இ - ள்) "குதிரையை வெகுசாமர்த்தியமாய் நடத்திக்கொண்டும், குறுக்கிட்டவரைச் சவுக்கினால் அடித்துக்கொண்டும், திரிகிற இந்த பாக்கியம் உன்னுடைய புஜபல பாக்கியமா? அல்லவே! உன்னுடைய கூடப்பிறந்தாளுடைய ஒப்பற்ற பாக்கியமல்லவோ?" என்றனன்.

அதைத் தூதுவரால் கேள்வியுற்ற அரசனும் ஆச்சரியங்கொண்டு அத்துஷ்டனை வரவழைத்துப் பார்த்து "நீ இனிமேல் இப்படி யொன்றும் செய்யாதே" என்று திட்டம் செய்து அந்த இராத்திரியே நகர்சோதனைக்கு வந்துகொண்டிருக்கையில், அங்கேயொரு ஆடறுப்பவன் கடையில் மாம்சம் வாங்கிக்கொண்டிருக்கும் ஒரு பிராமண சந்நியாசியைக் கண்டு, அவனை யழைத்தனன்.

## நகர் வலம் வரும் போஜன் முதல்முதல் காளிதாசனைக் கண்டு சம்பாஷித்தல்

சு: பிக்ஷோமாம்ஸ நிஷேவணம் கி முசிதம் ||

(இ - ள்) "ஓய்! அதிதி! நீர் மாம்ஸம் புசிப்பதும் உசிதமாமோ?" என்றனன். அதற்கு அப் பிராமண சந்நியாசியும்,

சு: கிம் தே ந மத்யம் விநா ||

(இ - ள்) "சாராய மில்லாத மாம்ஸபக்ஷணமும் ஒரு பக்ஷண மா?" என்றனன். அப்போது அரசனும்,

சு: மத்யம் சாபி தவ ப்ரியம் ||

(இ - ள்) "உமக்குச் சுராபானமும் இஷ்டந்தானே?" என்றனன். அதற்குப் பிராமண சந்நியாசியும்,

சு: ப்ரிய மஹோ வாராங்கநாபிஸ்ஸஹ ||

(இ - ள்) "வேசியர் குடித்து மீந்ததை அவரோடு கூடிக் குடிப்பதே எனக்கு அத்தியந்தப் பிரியம்" என்றனன். அதனால் ஆச்சரியங் கொண்ட அரசவள்ளலும்,

சு: வாரஸ்த்ரிரதயே குதஸ்வ தனம் ||

(இ - ள்) "வேசியரோடுங் கூடிக் குலாவுவதற்கு உனக்குக் காசு வேண்டுமே! நீயோ கரவோடுங் கையுமாய்க் காஷாயதாரியாய் விளங்குகின்றனையே! உனக்குக் காசு எப்படி கிடைக்கும்?" என்ன,

அதற்குப் பிராமண சந்நியாசியும் அரசனுடைய அதிசாதுர்ய வார்த்தைப்பாட்டுக்கு அகம் பூரித்து, 'ஆகா! இந்தத் தாரா நகரத்தின் பெருமையே பெருமை! சாதாரணரும் இப்படியாகச் சதுரந் தீர்ந்து சாதுர்யமாகச் சம்பாஷிக்கின்றனரே! இந்நகர்க்கிறையும் எவ்வளவு புத்திமானாயிருப்பனோ' என்று நிதானித்துக்கொண்டு, கேட்ட கேள்விக்கு உத்தரமாக, ஐயனே!

சு: த்யூதேந சௌர்யேண வா ||

(இ - ள்) "பகலில் பகடை யாடியும், பாதிராத்திரியில் கன்னமிட்டும் பொன்னைக் கொள்ளை கொள்வேன்" என்றனன்.

அதைக்கேட்ட அரசனும் அடங்கா மகிழ்ச்சியை யுள்ளடக்கிக் கொண்டு, பிர்மவித்யாபாரங்கத்தை அடைவதற்கு மேற்கொண்ட இந்தச் சந்நியாச வேஷத்திற்கு இதுதானா பலமென்று,

சு: சௌர்யத்யூத பரிஸ்ரமோஸ்தி பவத ||

(இ - ள்) "நீ சூதாடுவதிலும், சூரையாடுவதிலும் அவ்வளவு கெட்டிக்காரன்றானா?" என்னவும், அதற்கு அக் கவிசிரேஷ்டனும்,

சு: ப்ரஷ்டஸ்ய காவாகதி ||

(இ - ள்) "கெட்ட குடிக்கு வேறே கதி யென்ன (வர்ணாசிரம ஆசார ப்ரஷ்டனுக்கு யாருடைய ஆதரவு மில்லாதுபோவதால் லோகயாத்திரை நடப்பதற்கு வேறே கதி என்ன!)" என்றனன்.

அப்போது அரசன் அம் மகாகவிக்கும் விடைகொடுத் தனுப்பி விட்டு, தனக்குள் தானே, 'இம் மகாநுபாவன் தான் என் மைத் துனனை நேற்றையதினம் ஏளனம் பண்ணியிருக்கவேண்டும். இப் படிப்பட்ட சரசகவியை நம்முடைய பட்டணத்திலே நாமிதுவரை யில் பார்க்கவில்லையே! இவன் ஒருவேளை எல்லாராலுங் கொண்டாடக்கூடிய காளிதாசனா யிருப்பனோ!' என்று தன் மந்திரி யோடு சொல்லிக்கொண்டே அரண்மனை யடைந்தனன்.

மறுநாள் அரசன் தன் காலைக்கடனை முடித்துக்கொண்டு, சபைக்கு வந்து, கொலுக்கொண்டிருந்து, முன்னம் நாம் சொல்லி யிருப்பதுபோலச்சங்கரகவிக்குத் துவாதசலக்ஷம் பொன்னைத் தான மளித்து அந்தப்புரத்திலே சிவபூசையிலிருக்கும்போது, அரசன் சபையிலிருந்த வித்வான்களெல்லாம் சங்கரகவிக்கு அளித்த அபார திரவியத்தின்பொருட்டு அரசன்மேல் வெறுப்புற்றுச் சங்கரகவியை யிகழ்ந்துகொண்டிருந்தனர்.

அந்தச்சமயத்தில் அகிலலோகமாதாவாகிய இராஜராஜேஸ்வரி யின் அநுக்கிரக கடாக்ஷமுற்று அபாரமாகத்தானே விஷயாநுபவங் களைக்கொண்டு அண்டாண்டங்களிலும் நிறைந்து அநேகமாயிரம் வகைகளாகத் தோன்றியுள்ள அருமையான பொருள்களை யெல் லாம் அப்படியப்படியே தற்சொரூபமாக எடுத்துக் காட்டி விவ ரித்து வர்ணிக்க வல்ல விவேக புருஷனாகிய காளிதாசனும் காவல னுடைய அரண்மனை வாயிலை யடைந்து, அரிய வித்வான்களுடைய பெரிய பெரிய சுலோகங்களை யெல்லாம் ஏகசந்தக்கிராகியா யறிந்து தன்னுரிமை யாக்கிக்கொண்டு, "இதுதானா புது சுலோகம்? இது எனக்குத் தெரியுமே? பழைய சுலோக மாச்சுதே! வேண்டுமா! ஒப்புவிக்கட்டுமா?" என்று சொல்லி ஓரெழுத்துந் தவறாமல் அப் படியப்படியே திருப்பிச்சொல்லி வந்தவன் மனதைத் திடுக்கிடச் செய்வித்துத் திரும்பிப்பாராமல் தீவிரகதியாய் வந்தவழியே சொந்த மாகக்கொண்டு ஓட்டம் பிடிக்கும்படி அனுப்பிக்கொண்டிருக்கும் அதி சாதுரியவானாகிய வாயிற் காப்பாளனைக் கண்டு, அவனுடைய கபடத்தை முன்னமே யறிந்துகொண்டவனாகையால், சரசகவியும் ஜாடையாகத்தானே அவனைப் பார்த்து "ஐயா! அரசனை இப்போது பார்க்கப்போமோ?" என்றனன்.

அதற்கு அக்காவலாளியும், "அது முடியாது. ஆனால், நீ ஏதாவது சுலோகம் கொண்டுவந்திருந்தால் அதைச் சொல்லு! அரசனுக்கு அறிவிக்கின்றேன்" என்றனன்.

அப்போது காளிதாசனும் "ஆனால், சொல்லுகின்றேன் கேளும்!" என்று,

சு: அஸ்திவத் பகவச்சைவ சல்லவத்தெல்லகுக்கவத்
ராஜதேபோஜதே கீர்த்தி: புநஸ்ஸங்யாவலி தந்தவத்||

அதைக் கேட்ட காவலாளியும், 'இவன் யாரோ ஒரு மூர்க்கன். இல்லாவிட்டால் இப்படியும் அபசுரமாக ஆந்தரபாஷா மிஸ்ரமான சுலோகத்தையும் அரசனுக்கென்று கொண்டுவருவனோ? இவனுக்கு அரசனைக்கொண்டே அவமான முண்டாக்கவேண்டும்; ஏனென்றால், அரசனும் கவிகளைத் தன்னிடம் அனுப்புகிறதில்லை யென்று குறை கூறுகின்றனனே! இவனைக்கொண்டாவது அக் குறையை நீக்கிக் கொள்வோம்' என்று நினைத்து உள்ளே போகும்படி விடையளித்தனன்.

## காளிதாசன் போஜன் சபாமண்டபத்தை யடைதல்

இப்படியாகப் போஜனுடைய அரண்மனை வாயிலினுட் புகுந்து அரிய வித்துவக் கூட்டங்கள் நிறைந்துள்ள சபாமண்டபத்தை யடைந்த பெரிய வித்வசிரோமணியும் மகுடமன்னரைப் போல மான்மதக் குழம்பணிந்த மார்பினனாய்க், கனகமணி குண்டலந் திகழும் காதினனாய், பட்டாடை சூழ்ந்த அரையினனாய், அன்றலர்ந்த பூச்சூடிய மயிர்ச்செறிவினனாய், மகாபூரிப்புடனே கம்பீரமான பார்வையோடும் அசைந்தாடும் நடையினனாய், ஆஜாநுபாகுவாய், முத்தாரமானது முன்மார்பிற் புரளவும், விஸ்தாரமான கைவீச்சோடும் கவிப்ருங்கங்கள் நெருங்கிய அச் சபையை ஒருதரம் ஏறப்பார்த்து அதன் மத்தியிற் சென்றனன்.

அப்போது அங்குற்ற வித்வான்களெல்லாம் அச்சத்தையும் சந்தோஷத்தையுங் கொண்டவராய்ச், 'சிங்கத்தைக் கண்ட யானைக் கூட்டம்போல'த் திகைத்து, திடீரென்று அவரவர்கள் ஆசனத்தினின்று மெழுந்து தலைகவிழ்ந்து நின்றனர். அப்போது அம் மகாபுருஷனும் அவர்களையெல்லாங் கையமர்த்தி யுட்காரச்செய்வித்துத்

தானும் அவர்களி னடுவிலே ஓர் பெரிய ஆசனத்தி லெழுந்தருளி, 'தேவர்கள் மத்தியமுற்ற திருமாலைப்போலும்' விளங்கி அவர்களோடும் அளவளாவுவானாயினான்.

அப்படியிருக்கையில் அவ் வித்துவக் கூட்டத்தி லொருவித பரஸ்பரமான கலகமானது நடந்துகொண்டிருக்கக்கண்டு, புன்னகை கொண்ட காளிதாசனும் வித்வான்களைப் பார்த்து, "கலைமகளால் புகழ்கொண்ட கவீஸ்வரர்களே! நீங்க ளிதற்காக நெட்டுயிர்ப் புறுவதும் உங்கள் அறியாமையே; எப்படியென்றால், இச் சங்கரகவிக்கு இறைவனா லளிக்கப்பட்டது ஓரிலக்ஷமே; அப்பால் அரசனும் தான் செய்யும் சங்கரபூசையில் தானமளிக்கக் கருதி அப் பெயர் தரித்து அப் பூஜாகாலத்தில் தன்னிடம் வந்த அக் கவியின் நாம விசேஷம்பற்றியும், அக்காலத்திற் பதினொரு ருத்திராருக்கு அர்ப்பணம் செய்யவேண்டிய முறைமைபற்றியும், அப் பதினொரு ருத்திரரும் அக் கவியினிடத்திலேயே கண்கூடாக விளக்கி யிருக்கக் கண்டு அவர்கள் ஒவ்வொருவருக்கு மோவ்வோர் இலக்ஷமாக அளித்தது பதினோ ரிலக்ஷமாம். ஆக மொத்தம் பன்னிரண்டு லக்ஷம் பொன் அரசனளிக்க, அச் சங்கரகவி பெற்றதாக்கும்." என்று அரசனுடைய இருதயபாவத்தை அவ்வளவு எளிதாக அவர்களுக்கு எடுத்துக் காட்டி அதனால் அவர்களுக்கு ஓர்வித ஆச்சரியத்தை யுண்டாக்கினான்.

அதைக் கேட்ட வித்வான்களெல்லாம்: அக் கவிச்சிங்கத்தின் அதிநுட்ப புத்திக்கும், அரசனுடைய விவேகசிந்தைக்கும், தங்களுடைய அறியாமைக்கும் அதிசயித்துச் சந்தோஷங்கொண்டு, வெட்கமுற்று, வேறொன்றும் பேச வகைகாணாமல் தலைகுனிந்து மயங்கி இருந்தனர்.

பூசை முடிந்து, போஜனம் செய்து, வாசனைத் திரவியங்களணிந்து, வளமைபொருந்திய தாம்பூலம் தரித்து, காம்பிலிதேசத்துக் கனகமயப்பட்டாடை யுடுத்து, இரத்தினாபரணங்கள் பூண்டு, எழில் கொண்டு, விவேகிகள் பலருங் கூடிய வித்வசபையை நாடி விரைவாக வருகின்ற வேந்தனும், இக் காளிதாசனுடைய வாக் விசேஷத்தைக் கேட்டு நோக்கம் அவன்மேலாக, "ஆகா! இதென்ன ஆச்சரியம்! நமது ஆழ்ந்த கருத்தை அளவிட் டறிந்து வெளியிட்டுச் சொன்ன இவனும் நரன்றானோ? அல்லது, ஆயிரமகுடங்களை யுடைய மூாயிருனாலந் தாங்கு மகீபதியோ? அல்லது, மூவிருமுகன்

கள் வாய்ந்த முன்னவன்றானோ?' என்று ஐயுற்று 'அப்படிப்பட்ட மகானைத்தான் நாம் பார்க்கவேண்டும்' என்று ஐந்தாரடி முன்னுக்கு எடுத்துவைத்து அவசரமாய் வரும் அரசனுக்கு எதிராக வரிசை கொண்ட முத்தாரத்தாலும், வளமைபெற்ற ரத்தினாபரணங்களாலும், வாய்ந்து விளங்கு மகரகுண்டலங்களாலும், வாரி முடியிட்டு வாசனை கமழு மல்லிகையினால் பருத்து விளங்குங் குடுமையின் சாயலாலும், மனோகரத்தை விளைவித்து ஒவ்வொருவரையு மயங்கச் செய்விக்கும் மகாபுருஷனும் மன்னவனைக் காணும் வேட்கை முன்னுக்குத் தள்ளவும் ஓடிவரவே அவனைக் கண்ட அரசனும் அப்படியே இருகையாலு மிறுகப் பிடித்துக்கொண்டு, மேல்மாடிக்குச் சென்று, அங்கு ஓர் ஆசனத்தி லுட்காருவித்து, "ஓ மகாநுபாவா! உம்முடைய திருநாமத்தால் உன்னதங்கொண்ட திவ்வியாக்ஷரங்களெவையோ? உம்மையும் நீங்கியதால் ஒளி யிழந்து வாடிய தேசம் யாதோ? உம்முடைய பிரிவாற்றாமையால் உள்ளங் கவன்றா ரியாவரோ?" என்றனன்.

அதைக் கேட்ட காளிதாசனும் வேறொன்றும் சொல்லாமல் தன் பெயரை மாத்திரம் "காளிதாசன்" என்று அரசன் கையில் எழுதினன். போஜபூபதியும் அதைப் படித்துப் புளகாங்கிதங் கொண்டு, அடங்கா மகிழ்ச்சியுடனே ஆநந்த சாகரத்திலே மூழ்கினவனாய்க், கருணைநந்தம் பெருகவும், கண்களிரண்டிலுந் தாரை தாரையாய் நீர் வழிந்தோடவும், நேரலர் மௌலி தேய்க்கும் பூங்கழல் வேந்தும் பொருக்கென வெழுந்து அவ் விநோத புருஷனுடைய உபய தாமரைகளிலும் விழுந்து பணிந்து, "ஐயனே! வித்வரத்னங்களுக்கெல்லாஞ் சிரோரத்தினமாய்ச் சிறந்து விளங்கும் ஸ்ரீவரத்தினமே! உன்னோடு இன்று யான் கொண்ட நட்பும் உள்ளன்பு கொண்டதாய் நமது உயிருள்ளளவும் நாடி நிலைபெற்றதாய், நாள்தோறும் பூர்வ பக்கத்துப் பூர்ணமதியம்போலப் பூரிக்கக் கூடியதாய், இடையறாததா யிருக்கும்படி இதோ எங்கு நிறைந்த கடவுளை - அருட்பெருஞ் சோதியை - அநாதபூதரக்ஷகனை அடிமலர் பரவுகின்றேன்! பரவுகின்றேன்!!" என்றனன்.

## மாலை வர்ணனை

இப்படி இவர்க ளிருவரும் முகமன்கொண்டாடி முடிந்ததும், இந்திரனுடைய சுதர்மை சபையைப்போல் எழில் கொண்டதும், அழிவில்லாத புகழ் படைத்த அரிய வித்வான்களால் அலங்காரங் கொண்டதுமான விநோத சபைக்கும் வந்தனர். அப்போது அங்கிருந்தவரெல்லோரும் ஒருவர் தவறாமல் அப்படியப்படியே எழுந்து தலை குனிந்து நின்றனர்.

போஜபூபாலனும் பூமகள் விலாசத்தால் புகழ்கொண்டு ஆஜாநுபாகுவாய் விளங்கிய அக் காளிதாசமகா கவிக்கும் அரியாசனமொன் றளித்து, அதிலெழுந்தருளச் செய்வித்து, மற்றவர்களை யெல்லா மங்கங்கே யுட்காரும்படி கையமர்த்தி, மகா பூரிப்புடனே தானும் தன் சிங்காதனத்துற்றனன்.

நவீன கவியின் வரவால் நவீனமுற்ற அச் சபையின் வித்வான்களெல்லாம் குதூகலங்கொண்டு ஏதேதோ அருமையான விஷயங்களை யெல்லாம் அடுக்கித் தங்கள் தங்கள் சாமர்த்தியம் எவ்வளவோ அவ்வளவையும் எடுத்துக் காட்டி அச் சபை முழுவதையும் ரமிக்கச் செய்தனர். ஆனால், அப்படியே மெய்ம் மறந்து புளகாங்கிதங் கொண்டே போஜவள்ளலும் மாலைக்காலம் சமீபிக்கவே, அதை வர்ணிக்க மனங்கொண்டு:—

சு: பரிபததி பயோநிதௌ பதங்கঃ ||

(இ - ள்) "அருக்கனு மேற்கடலி லாழ்கின்றான்," என்றனன்.

அதைக் கேட்ட பாணன் என்னும் கவிசிரேஷ்டனும்,

சு: ஸரஸிருஹா முதரேஷு மத்த ப்ருங்கঃ ||

(இ - ள்) "மதுபானத்தால் மயக்குண்ட வண்டுகளெல்லாம் மலர்களி லடங்கின," என்றனன்.

அப்போது அருகிலிருந்த மயூரன் என்னும் மகாவித்வானும்,

சு: உபவன தருகோடரே விஹங்கঃ ||

(இ - ள்) "உத்தியானவனத்துப் பறவைகள் எல்லாம் உயர்ந்த மரங்களின் பொந்துகளி லடங்கின," என்றனன்.

அப்போது அரசவள்ளலும் அபாரகவியை (காளிதாசனை)ப் பார்த்து, "அடுத்த நான்காவதடியை உம்முடைய திருவாக்கால் வர்

ணித்தருளும்" என்று சமிக்ஞை செய்தனன். உடனே இயல் இசை நாடகத்தில் இணையில்லா இன்பகவியும்:—

சு: யுவதிஜநேஷு ஸநை ஸநை ரநங்க: ||

(இ - ள்) "மங்கைப்பருவ மாதர்களிடத்திலே மன்மதனும் மெல்ல வரத் தலைப்பட்டனனே" என்றனன்.

இப்படி இவர்கள் நால்வருஞ் சொல்லிய சுலோகமும்,

வெய்யவன் மேவினன் மேற்கடல் விம்மியே
செய்யவட் பூவினிற் சேர்ந்தன வண்டினம்
உய்யவே புட்குல மோளித்தன போர்ந்திடை
பையவே வோதியர் பற்றினன் காமனே. என்று முடிந்தது.

அப்படிப் பூர்த்திகொண்ட அச் சுலோகத்தின் நான்காமடியும் மற்ற மூன்றடிகளைவிட ரசபுஷ்டிகொண்டு விசேஷித்திருக்கக்கண்டு, மனோரதங் கொண்ட மன்னவனும், "கலைமகள் கடாக்ஷத்தாலே மாக்ஷிமை கொண்ட ஹே! மகாகவீ! உம்முடைய வாக்குக்கும் உவமை யுண்டோ? நான்காவதடியின் கடையிலே யமைந்துள்ள 'ஸநை ஸநை' என்ற வார்த்தைக ளிரண்டுமே போதாதா! இதற்கு மேரையாக என்னத்தை யளிக்கப்போகின்றேன்? பொன்னொத்த உமது வாக்கால் மாலைப்பொழுதை முற்றிலும் வர்ணித்தருளும்" என்றனன்.

அப்போது காளிதாசனும், "ஐயனே! அஜாத சத்ரு! மண்டலஞ் சூழ்ந்த எண்டிசையிலும் மகத்துவங் கொண்ட மன்னர் மன்னனே! உம்முடைய உளம் பூரிக்கும்படி இதோ ஒரு நொடியில் ஒரேயொரு சுலோகத்தால் மாலைப்பொழுதையும் உம்முடைய மன மகிழ வர்ணிக்கின்றேன். இதோ இம் மகா சந்நிதானத்திலே சதா சப்தித்துக்கொண்டிருக்கிற கலகலவென்ற வளையலின் ஓசையானது என்னுடைய இரண்டு காதுகளையுங் கொள்ளைகொள்ளுகின்றனவே! அதைச் சற்றே நிறுத்தினால், நிலமகளுக்கு நாயகனே! நிதானங் கொள்ளும்" என்றனன்.

அதுவரைக்கும் அதிரகசியமாகத் தன்னால் மாத்திரம் அறியப் பட்டதாய் மற்றத் தரணியிலுள்ள எவர்களுக்கும் எட்டாததா யிருந்த இத் தெய்வீக நிர்ணயத்தை இன்னதென் றறிந்துகொண்ட இவனைப்பற்றி ஆச்சரியங்கொண்ட போஜவள்ளலும் ஆகா இவனை இப் பூவுலகில் மனிதனென்று எப்படிச் சொல்லலாம்? இவனும் இந்திரன் பதியிலிருந்தோ, அல்லது அளகாபுரியிலிருந்தோ, அல்லது

இளநிலா நிலவு காலும் வளமை கொண்ட இயக்கர் பதியிலிருந்தோ இவ் வுருக்கொண்டு வந்திருக்கவேண்டும். இவன் சாக்ஷாத் ஈப்வர வரப்பிரசாதியே. இல்லாவிட்டால், என்னுடைய சபையில் எத்தனையோ வித்வரத்தினங்களெல்லா மிருக்கின்றனரே! அவர்களுக்கெல்லாம் இவ் அரியவொலி எவ்வளவுங் கேட்பதில்லையே! இம் மகா கவியும் இதைப்பற்றி எவ்வளவு கம்பீரமாய் எடுத்துரைத்தனன்," என்று தன்னுள்ளே மதித்தவனாய் ஏரெடுத்து மேலே நோக்கினன்.

உடனே உலகெலாம் விளங்கும் ஒப்பற்ற கலைமகளின் பணி மகளும் தூர்வாசரின் சாபவயத்தளாகித் தன் தலைவன் அம்சமாய் விளங்கும் அத் தராதிபனுக்குக் கவரி யிரட்டுதலைச் சற்று நிறுத்தினள். அதைக் கண்ட மகா கவியும் "ஆ! இதென்ன ஆச்சரியம்! இவ் வரசனும் ஆயிரம் இதழ்களையுடைய அரவிந்தத் தண்ணல் போலும்" என்று மதித்து இதயம் பூரித்தவனாய்ச் சுலோகத்தையும்,

சு: வ்யஸநிக இவ வித்யாக்ஷீயதே பங்கஜஸ்ரீ
குணின இவவிதே ஸேதைந்ய மாயாந்திப்ருங்கா |
குந்ருபதி ரிவ லோகம் பீடயத்யந்தகாரோ
தந மிவ க்ருபணஸ்ய வ்யர்த்ததா மேதிசக்ஷுஃ ||

செய்ய தாமரை சோதி மாய்ந்தது
    செல்வமற்றவர் கல்விபோ
லய்ய வேற்றிடை யுற்ற மானியி
    னுண்மை போன்றின வண்டினம்;
மெய்யி லாதவ ராவண போலிரு
    ளாதி யந்தமு மேவவும்,
நய்யும் லோபியர் நன்கொடை யென
    நாண முற்றன கண்களே!

என்று சொல்லினன்.

இதைக் காளிதாசன் சொல்லுந்தோறும் காவலனுக்கு உண்டாகிய களிப்பின் மிகுதியுங் கரைகண்டிலதாயது. அப்போது இறைவனும், "இதற்குக் கைம்மாறு என்ன செய்வேன்?" என்பான். அக் கவிச்சிங்கத்தை அப்படியே இறுகத் தழுவிக்கொள்வான். "உன்னோடு சமமாக யான் உட்காரப்போமோ" என்பான். அவ் வரகவியின் உபய பாதங்களிலும் அப்படியே விழுந்து பணிவான். பாதத்தண்டை யுட்காருவான். மறுபடியும் எழுந்து அநேகவிதமாய் யுபசரிப்பான். "என்னையும் நீ தேடிவர நான் என்ன தவம் செய்தேனோ!" என்பான். "யான் பெற்ற பேறு இவ் வுலகத்தில் யார் பெற்

ரூர்?" என்று இதயம் பூரித்த காவலனும் இன்னும் பலவாருக அக் கவிக்கரசை யிடைவிடாது புகழ வாரம்பித்தனன்.

இப்படியாக அரசன் தன்னை யடிக்கடி யுபசரிக்கவும் மனஞ் சகிக்காதவனுய்க் காளிதாசனும்,

சு: தத்தாதேந கவிப்யஃ பருத்வீஸகலாபி கனகஸம்பூர்ணு |
திவ்யாம் ஸுகாவ்யரசநாம் க்ரமம் கவீநாஞ்ச யோ விஜாநாதி ||
ஸுகவேஃ ஸப்தசௌபாக்யம் ஸத்கவிர்வேத்திநாபரஃ |
ந ஹி வந்த்யா விஜாநாதி பாரம் தௌஹ்ருத ஸம்பதம் ||

(இ-ள்) "எவனொருவன் நல்ல காவியங்களின் விபரங்களை யும் கவிகளின் வரிசைப்பாடுகளையும் தெரிந்துகொள்வானே அவ னுலே அக் கவிகளுக்குச் செல்வம் நிறைந்த இச் சகமுழுது மளிக் கப்பட்டது போலாம். கவியின் ரச புஷ்டியைக் கவியே யறிவ னன்றி, மக்கட் பெருமையை மலடி எப்படி யறியாளோ அப்படியே மற்றையோ னறியான்" என்று சொல்லிப் பின்னும்,

சு: உபசாரகர்த்தவ்யோ யாவதநுத்பந்ந ஸௌஹ்ருதாஃ புருஷாஃ!
உத்பந்நஸௌஹ்ருதாநா முபசாரஃ கைதவம் பவதி ||

"வந்திக்க நட்பு வருங்காறும் வந்தபின்
வந்திப்பு நிந்திப்பா மற்று."

(இ-ள்) "ஒப்பற்ற சிநேகபாவம் உண்டாகும் வரைக்கும் உப சாரணை வேண்டும்; அப்படி யுண்டான பிறகும் செய்யும் உபசாரம் அபசாரமாம்" என்று சொல்லினன். அதைக் கேட்ட போஜனும் அச் சுலோகங்களி லடங்கிய அக்ஷரம் ஒவ்வொன்றிற்கும் லக்ஷ மேரையாகப் பொன்னை வாரி வள்ளலாய் வழங்கிக் காளிதாசனைப் பார்த்து, "ஹே மகா கவி! நேற்றைய இராத்திரி நீரும் பிராமண சந்நியாசி வேஷம் பூண்ட காரணம் என்னை?" எனவும், அதற்குக் காளிதாசனும் "அரசர்க்கரசே! உம்மைக் கண்டு வார்த்தை யாட வேண்டியே அப்படிச் செய்தேன்" என்று சொல்லி வீட்டுக்குத் திரும்பிச் சென்றனன்.

அப்போது அரசனும் இதயம் பூரித்து, "இப்படிப்பட்ட மகா கவியை இச் சபைக்கு நாயகமாய்க் கொள்ளப் பூர்வம் நாம் என்ன தவம் செய்தோமோ!" என்று மதித்தவனுய், அக் கவியை அதிக அன்போடும் தனக்குள் தானே புகழ்ந்துகொண்டனன்.

இதையெல்லாம் மற்ற வித்துவான்கள் கண்டு வயிற்றெரிச்சல் கொண்டு காளிதாசனுடைய அந்தரங்க நடவடிக்கைகளை யாராய

ஆரம்பித்து, "அவன் வேசியாகாமி" என்றும், "வெறிகொள்ளும் படி சுராபானம் பண்ணுகிறவன்" என்றும், "மாம்ஸ பக்ஷணி" என்றும் அங்கங்கே சொல்லிக்கொண்டிருந்து, அரசனுக்கும் அதை எட்டவைத்துவிட்டு, அருசையினுல் அவனைத் தீண்டுதற்கும் அருவருப்புக் கொண்டவரைப்போல நடித்துவந்தனர்.

இவ் வித்துவான்கள் இவ்வாறு இம் மகா கவியின்பேரில் கொண்ட அருவருப்பை அறிந்துகொண்ட அரசனும் "ஓ வேதோத் தமர்களே! இய லிசை நாடகத்தி லிணை யில்லாத இம் மகாகவியை ஏனிப்படி இழிவாய்க் கூறுகின்றீர்கள்?" என்னவும், அவர்களெல் லாம்: "மகாப்பிரபு! மண்டலாதிபதி! இகபாக்கியத்திலே இவனைப் போல லஜ்ஜை கெட்டவன் எங்கு மில்லை" என்றனர்.

அதைக் கேட்ட அவனிபனும் ஆச்சரியங்கொண்டு, எல்லாந் தெரிந்தவன், ஈஸ்வர வரப்பிரசாதி, இவனு மிப்படிச் செய்வானே! இவனுக்கும் யார்தான் எடுத்துச்சொல்வது?" என்று சிந்தித்திருந் தான். அச்சமயத்தில் அங்கே வந்த காளிதாசனும் அரசனுடைய முகக்குறியால் அவனுள்ளத்தை யறிந்துகொண்டு,

ஸ்ரீ: சேதோ புவஸ்சா பலதாப்ரஸங்கே
காவாகதா மாஜஷலோக பாஜாம் |
யத்தாஹவீ லஸ்யபுராம் விஜேது
ஸ்ததாவிதம் பௌருஷமர்த்தமாஸீத் ||

அரணெரிய வமர்புரியு மரன்மேலு மன்றே,
உரனெளியப் பாண முந்திறேன்—கரநிறையு
மாநிலத்து மாந்தர்மேல் மருமல் வாளிவிடல்
கோமகனே நூதனமோ கூறு.

(இ - ள்) "பொன்மலையை வில்லாகக் கொண்டு திரிபுரங்களையும் பொடியாக்கிய புண்ணியனும், தன்னுடைய தேகத்தையும் தகித்து நீறுக்கிய நிமலனுமாகிய நித்தியனைப் பார்வதியின் விவாகமானதும் பாதியுடம்பாக்குவித்த பாதகனுகிய மன்மதனுடைய மலர்வாளிக் குத் தப்புந் திறமுடையரோ தராதலத்து மாந்தர்?" என்றனன்.

அதைக் கேட்ட அரசனும் எல்லையில்லா ஆநந்தங் கொண்டு தன் சம்சயம் தீரவும், அச் சுலோகத்தி லடங்கிய அக்ஷரமொவ் வொன்றிற்கும் லக்ஷமேரையாகப் பொன்னை வாறி யளித்தனன். அதைக் கண்ட மகா கவியும் அடங்காத மகிழ்ச்சி கொண்டனன்.

---

# காளிதாசன் போஜன் கீர்த்தியைப் புகழ்தல்

சு: மகாராஜ ஸ்ரீமந், ஜகதீ யஸஸா தே தவளிதே பய:
பாராவாரம் பரம புருஷோயம் ம்ருகயதே |
கபர்தீ கைலாசம், கரிவர மபௌமம் குலிஸப்ருத் களாநாதம்
ராஹு: கமலபவநோ ஹம் ஸமதுநா ||

(இ - ள்) "அஷ்டலக்ஷ்மீ விலாசனே! ஜெயவீரப் பிரதாபனே! புவி போற்றும் போஜனே! அண்டகோடியின் பித்திகை வரையிலும் உன்னுடைய கீர்த்தியானது பரவி ஒரேமயமாய், வெளுத்திருப்பதனாலன்றோ உலகமளித்தவன் அன்னவாகனத்தையும், உலகமுண்டவன் க்ஷீராப்தியையும், ஞானம் விண்டவன் (தக்ஷிணாமூர்த்தி) நல்ல ரிடபவாகனத்தையும், ஆயிரங்கண்களாற் கோலங் கொண்டவன் ஐராவதத்தையும், ஆலமுடையது (ராகுவும்) அழகிய கலாமதியையும் தேடுகின்றனர்" என்று சொல்லி, அதோடும் விடாமல் அன்பின் மிகுதியால்,

சு: நீரக்ஷீரே க்ருஹித்வா நிகில ககததிர்யாதி
நாளீக ஜந்மா தக்ரம் த்ருத்வாது ஸர்வாநடதி ஜலநிதீம்
ஸ்சக்ரபாணிர்முகுந்த: ஸர்வா நுத்துங்க சைலாந் தஹதி பஸுபதி:
பாலநேத்ரேண பஸ்யந் வ்யாப்தா த்வத்கீர்த்திகாந்தா
த்ரிஜகதி க்ருபதே போஜராஜ க்ஷிதீந்த்ர ||

(இ - ள்) "ஓ! நரபதி! போஜராஜா! பூலோக இந்த்ரா! மூவுலகும் நின் புகழால் நிறைந்து விளங்கவே, வெளுத்த வஸ்துக்களெல்லாம் வெளிகாணாமற்போயினவே! அம் மயக்கத்தாலன்றோ அரவிந்தத்தண்ணலும் பாலையும் நீரையும் கலந்துகொண்டு ஒவ்வொரு பக்ஷியின் மூக்கினிடத்திற் காட்டிக்கொண்டு தன் வாகனமாகிய அன்னத்தைத் தேடியும், பரமபுருஷனும் சரற்காலத்துச் சந்திரனையொத்து விளங்கும் வெள்ளிய எருமைத் தயிரை யெடுத்துக் கொண்டு தன் பாற்கடலைத் தேடியும், சிவபெருமானுஞ் சிறந்த தமது நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்துக்கொண்டு வெள்ளியங்கிரியைத் தேடியும் திரிகின்றனர்" என்று சொல்லி மறுபடியும்,

சு: வித்வத்ராஜஸிகாமணே துலயிதும் தாதாத்வதீயம் யச
கைலாசம் ச நிரீக்ஷ்ய தத்ரலகுதாம் நிக்ஷிப்தவாந் பூர்த்தயே |
உக்ஷாணம் ததுப ர்யுமா ஸகசரம் தந்மூர்த்நி கங்காஜலம்
தஸ்யாக்ரே பணிபுங்கவம் தது பரிஸ்பாரம் ஸுதாதீதிதிம் ||

(இ - ள்) "ஓ வித்யாபாரங்க ராஜரத்னமே! இப்படிச் சிறந்து எங்கும் நிறைந்துள்ள நின் புகழுக்கு ஓர் நிறை காணும்படி உந்தியங் கமலனும் அதைத் தராசின் ஓர் பெரிய தட்டிலிட்டு மற்றொரு தட்டில் மகத்தான கைலாசத்தைத் தூக்கிவைத்தனன். அதனால் அது உன் கீர்த்திக்கும் சமமாகாமை கண்டு, அழகிய இடப தேவரையும் தூக்கி வைத்தனன். அதனாலும் துலை யேறாமையால், உமாபதியையும் தட்டி லமைத்தனன். அப்படியும் தட்டானது தாழாமை கண்டு, அவர் சிரசில் கங்கையை யேற்றினன். அதுவும் போதாமையால், ஈற்றில் இரண்டாயிரம் நாவைப் படைத்த ஆதி சேடனையும் அத்தட்டி லமைத்தும் அதுவும் நிறைகொள்ளாமையால், எதுவும் விரும்பக்கூடிய இளஞ்சந்திரனையும் ஏற்றினன். இதுவும் சமமாகாமற் போயினதே" என்று சொல்லி, இதுவும் போதாதென்று, அம் மகாகவி மறுபடியும்,

சு: ஸ்வர்காத் கோபால, குத்ரவ்ராஜஸி? ஸூரமுநே பூதலே காமதேநோ
ர்வத்ஸஸ்யாநேது காமஸ்த்ருண சயமதுநாமுக்த துக்தம் ந தஸ்யாः? |
ஸ்ருத்வா ஸ்ரீபோஜராஜ ப்ரசுரவிதரணம் வ்ரீடஸூஷ்க ஸ்தநீஸாவ்யர்தோ
ஹிஸ்யாத் ப்ரயாஸ ஸ்தபி ததரிபிஸ்சர்விதம் ஸர்வமுர்வ்யாம் ||

(இ - ள்) "திரிலோக சஞ்சாரியாய் அங்கங்கே போய் அவ்வளவிலேயே எவ்வளவோ கலகத்தை மூட்டுவிக்கும் யாழ்வல்லோனும் யாதவனொருவனைக் கண்டு 'கோபாலா! நீ சுவர்க்கத்தை விட்டு எங்கே போகின்றாய்?' என்னவே, அவனும் 'ஐயனே! போஜனுடைய புகழைக் கேட்ட எங்கள் ராஜனுடைய காமதேநுவும் ஏங்கி மெலிந்துபோனமையால், தாங்கிய மடியில் தாராளமாய்ப் பால் சுறவாதொழிந்தது. (மடியானது உலர்ந்துபோயிற்று.) அதனால் அதன் கன்றிற்குப் புல்தேடப் பூலோகம் போகின்றேன்' என்றனன். அதைக் கேட்ட அந்தணக் கிழவனும் 'ஆ! மூடா! உன் பிரயாசை உண்மையில் வீண்பிரயாசையே யாம். குவலயத்தின் செய்தியறியாய் போலும். பூலோகத்துப் புல்லெல்லாம் போஜனுடைய சத்துருக்களால் கவ்வப்பட்டனவே (நீ இதை யறியாததும் ஆச்சரியமே!)," என்னும் இச் சுலோகத்தையும் பாடிப் புகழ்ந்தனன்.

இவைகளைக் கேட்ட அரசன் எங்குமில்லா ஆச்சரியவசத்தனாய்த் தங்கக்கட்டுக ளமைந்த தந்தங்களையுடைய தந்திக ளிரண்டைப் பரிசாகவளித்தது மல்லாமல் குந்தளதேசத்துக் குருமணியொன்றையுங் கொடையாக அளித்தனன்.

# சதுர்வேத சம்பன்னர் நால்வர் வேந்தனிடத்தில் காளிதாசனால் சன்மானம் பெறுதல்

இவ்வாறு சிலநாட்கள் செல்லவும், ஒருநாள் சகல சாஸ்திரப் பிரவீணரான சதுர்வேத சம்பன்னர் நால்வர் சர்வகலா வல்லவனாகிய போஜனுடைய உதாரகுணங்களைக் கேள்வியுற்று, ஒப்பற்ற தாராநகர மடைந்து, உன்னத சிகரங்களையுடைய புவனேஸ்வரியின் ஆலயம் வந்து போஜனைக் காணக் காணிக்கையாக ஒரு சுலோகம் செய்யும்படி யாரம்பித்து, அவர்களில் தன்னையே புலவனாக நினைத்திருக்கும் ஒருவன்,

சு: "போஜநந்தேஹி ராஜேந்த்ர!" என்றனன். மற்றொருவன்:

சு: "க்ருதஸூப ஸமந்விதம்" என்றனன்.

இரண்டடியாகிய இவ்வளவிலேயே இவர்களுடைய வித்தியா சாமர்த்தியமெல்லா மொழிந்துபோகவே, உத்தரார்த்தமாகிய மற்ற இரண்டடிகளையு முற்றுவிக்க வகை தோன்றாது ஒருவரை யொருவர் விழித்துப் பார்த்துக்கொண்டு, ஒன்றும் புலப்படாமையால், "இது இன்றைக்கு முடியாது; நாளைக்குத்தான் பார்ப்போம்" என்று காலைத் தூக்கிவைத்து ஐந்தாறடி வெளியே வரும்போது, சிங்காரப் பூங்குடலையைச் சிறந்த தோளிற் றூங்கிச் சிந்துரத்தின் நடைகொண்டு, பொங்கு மெழில்கொண்ட புவனேஸ்வரியின் ஆலயத்தை நோக்கி அவளது தரிசனார்த்தமாகத் தங்களுக்கு எதிரே வரும் ஓர் தாஷ்டீக புருஷனைக் கண்டு, அவனுடைய அசைந்தாடிவரும் நடையினாலும், ஆழ்ந்த கல்வியின் அளவை யெடுத்துக் காட்டும் அழகிய நெற்றியிலே விளங்கும் ஓர் அபூர்வ குறியினாலும், கம்பீர பார்வையாலும், ஒப்பற்ற முகதேஜஸ்ஸாலும், 'இப் படியில் இவன் ஒருவேளை காளிதாசனாயிருக்கலாம்' என்றெண்ணிய இவர்கள் நால்வரும் அம் மகாகவியை யடுத்து, மங்கள ஆசிகள் கூறி, "உத்தம கவியே! நாங்கள் உத்தரதேசத்தேம்; கல்விக் கடலைக் கரைகண்டுள்ளோம்; நான்கு வேதங்களிலும் நாங்களறியாத பாகமு மொன்றில்லை; இச்செல்வ மெமக்கிருந்தும் பூர்வ ஜன்மத்தில் யாங்கள் செய்த எந்தத் தவக்குறைவோ எங்களைப் பொருட் செல்வமற்றவராக்கிப் போஜனத்திற்கும் பூச்சியாரா யலைவிக்கின்றது. எமக்கோ கவி செய்யும் வல்லபம் இல்லை. உன்னைப்போன்ற

உத்தம கவிகளுக்கே யுவந்து பரிசளிக்கும் புத்தியின் மிக்க போஜனுக்குங் கர்ணபூஷணமாகக் கவியொன்று கொண்டு செல்லக் கருதி எங்கள் கருத்திற் கெட்டிய அளவில் எவ்வளவோ பிரயாசையினால் இரண்டடியாகிய பூர்வபாகத்தையே முடித்துள்ளோம். அதற்கடுத்த உத்தரபாகத்தை முடிக்க எமக்கொன்றுந் தோன்றவில்லை. ஆகையால், அகண்ட கல்விக்கிறைவனே! முற்று முணர்ந்த நீயே மற்றதையு முடித்துத் தரவேண்டும்," என்றிரைஞ்சினர்.

அப்போது காளிதாசனும், "ஆரிய மணிகாள்! அப்படியே ஆகட்டும்; நீங்கள் செய்துள்ள பூர்வபாகம் ஏதோ அதையும் என் செவியிற் போடுங்கள் பார்ப்போம்" என்றனன். உடனே அவர்களும் ஒப்பற்ற கவீஸ்வரா! "இதோ அப் பாகமும்" என்று,

சு: போஜனந்தேஹி ராஜேந்த்ர, க்ருஸூபஸமந்விதம்ঃ ||

இச் சுலோகபாகத்தைச் சொல்லினர். அதைக் கேட்ட காளிதாசனும் "ஆகா! இது நன்றாகவிருக்கிறது. இன்னமிரண்டடியையும் சொல்லுகின்றேன்; எழுதிக்கொள்ளுங்கள்!" என்று,

சு: மாஹிஷஞ் ச சரஸ்சந்த்ர சந்த்ரிகா தவளம்ததிঃ ||

என்ற இப்பாகத்தை எடுத்துச் சொல்லினன். அதை அவ்வேதோத்தமர்களும் கவனம் செய்துகொண்டு அரசன் அரண்மனைவாயிலையடைந்து, வாயிற் காப்போரை நோக்கி "நாங்கள் சுலோகம் செய்துகொண்டுவந்தோம். நரபதியைப் பார்க்கவேண்டும்," என்றனர். அவர்களும் குதூகலத்தோடே போய் அரசனை வணங்கி,

சு: ராஜ மாஷனி பைர்தந்தைঃ கடிவிந்யஸ்த பாணயঃ |
த்வாரி திஷ்டந்தி ராஜேந்த்ர ச்சாந்தஸாঃ ஸ்லோக சத்ரவঃ ||

(இ-ள்) "எங்கள் ஆண்டவனே! பாட்டுக்குச் சத்துருக்களாகிய மறையவர்கள் மொச்சைக்கொட்டை போன்ற பற்களைக் காட்டிக்கொண்டு இடுப்பின்மேற் கை வைத்தவர்களாய்க் கடைவாயிலில் நின்றுகொண்டிருக்கின்றனர்" என்றனர்.

அப்போது அரசாக்கினையால் உள்ளே விடப்பட்டு, அரசன் சபையை யடைந்து, அவனால் உபசரிக்கப்பட்டு மனம் பூரித்தவராய் மன்னவனைப் பார்த்து "ஓ ராஜேந்திரா! மகாமண்டலேஸ்வரனாகிய உமது பேரால் ஒரு சுலோகம் செய்து வந்தோம்; சிரவணம் செய்தருளவேண்டும்," என்னவும், அரசனும் அதற்கு "ஆம்" என்று

ஆக்ஞாபித்தனன். அவ் வேதியரும் 'இன்றோடே நமது அஷ்ட தரித்திரமும் ஒழிந்தது'' என்றெண்ணிக் கொண்டு,

சு: போஜனம் தேஹி ராஜேந்த்ர க்ருதசூபஸமந்விதம் |
மாஹிஷஞ்ச சரஸ் சந்த்ர சந்த்ரிகா தவளம் ததிः ||

பூச்சிய ரேங்களுக்குப் போஜன மரசே தாரும்;
ஆச்சியம் பருப்புஞ் சேர்ந்த தாகவே யிருத்த னன்றும்;
காய்ச்சிய தயிரு மைய்யா கார்மேதி யளித்த பாலாய்
மாக்ஷிமை கொண்ட பூர்ண மதியம்போ லிருப்ப தாமே.

(இ - ள்) "ஓ இராஜாதிராஜனே! எங்களுக்குப் போஜனந் தர வேண்டும். அது பருப்பும் நெய்யும் சேர்ந்ததா யிருக்கவேண்டும். அதோடு கூட சரற்காலத்துப் பூரணச்சந்திரன் போலுந் தாவள் ளிய முற்ற எருமைத்தயிருஞ் சேர்த்துக் கொடுக்கவேண்டும்,'' என் றெடுத்துக் கூறிப் போஜனுடைய இதயம் பூரிக்கச் செய்தனர்.

அரசன் அதைக் கேட்டு புன்னகை கொண்டு "நீங்கள் செய்து வந்த கவியில் முன்னேய இரண்டடியினையும் முடித்தவர்க்கு மூன்று ஜன்மமெடுத்தாலும் கவிசெய்யு மாற்ற லுண்டாகவேமாட்டாது. மற்ற இரண்டடிக்கே மட்டற்ற பொன்னளிப்பேன்'' என்று அக்ஷ ரத்துக்கு லக்ஷமேரையாக அளக்கச் சொல்லினன். வேதியரும் "குருடனுக்கு வேண்டியது கண்தானே; எப்படியாயினு மாகுக; எமக்கு வேண்டியது திரவியமே'' என்று மதித்துப் பொன்னை வாங் கிப் பொதி கட்டிக்கொண்டு தங்கள் தங்கள் வீடுபோய்ச்சேர்ந்தனர்.

அப்பால் காளிதாசனும் அரசன் சமுகம் வரவே, அவனைப் பார்த்த அரசனும் தலை யசைத்துப் புன்னகைகொண்டவனாய், "ஹோ! இன்ப கவி! இச் சுலோகத்தின் பின்னிரண்டடிகளும் உம் முடைய வாக்கன்றோ?'' என்றனன். அதைக்கேட்ட காளிதாசனும்,

சு: அதரஸ்ய மதுரிமாணம் குசகாடிந்யம் த்ருசோஸ்ச தைக்ஷிண்யம் ச |
கவிதாயாம் பரிபாகம் ஹ்யநுபவரஸிகோ விஜாநாதி ||

(இ - ள்) "அதரத்தின் மதுரத்தையும், குசகாடிந்யத்தையும், கடைக்கண்ணின் வேகத்தையும், கவிதாரசத்தையுங் கண்டு அநுப வித்தவர்களே அறிவர்,'' என்னுங் கருத்துள்ள சுலோகத்தைக் கூறினன். அதைக் கேட்ட அரசன் "அமையும் அமையும்'' என்று மெச்சி அவனையும் அவன் சுலோகத்தையும் உச்சிமேற் கொண்டு, "ஹோ! இன்ப கவி! நீர்சொல்வதும் உண்மையே.

சு. அபூர்வோ பாதி பாரத்யஃகாவ்யா ம்ருதபயே ரஸஃ |
சர்வணே ஸர்வஸாமாந்யே ஸ்வாநுவித் கேவலம் கவிஃ ||

சு: ஸஞ்சிந்த்ய ஸஞ்சிந்த்ய ஜகத்ஸமஸ்தம் த்ரயஃ
பதார்த்தாஃ ஹ்ருதய ப்ரவிஷ்டாஃ |
இக்ஷோர் விகாரா மதயஃ கவிநாம்
முக்தாங்கநா பாங்க தரங்கிதாநி ||

(இ - ள்) "சர்வலோக வியாப்தமாகிய சராசர வஸ்துக்களில் யோசித்துப் பார்க்குமிடத்தில் ஒப்பற்று விளங்கி யுளம் பூரிக்கச் செய்வனவு மூன்றும். அவை யாவையெனின்,

மகா இனிப்பைத் தரும் கணுக்களையுடைய கரும்பின் ரசமும், வெகு சாதுரியமாக வார்த்தையாடி மனங் களிக்கச்செய்யு மகா வித்வான்களுடைய கவிதாரசமும், அதி பால்யத்தினால் அங் கங்கே அவயவங்களெல்லா மழகுகொள்ளவும் தளதளப்புற்றுக் கண்ணைப் பறிக்குங் காக்ஷியினாலும் கனங் கொண்ட ஒய்யார நடையினாலும் உளம் பூரிக்கச் செய்யும் உத்தம ஸ்திரீகளின் அச்சத் தோடுங் கூடிய நாணத்தா லுண்டாகும் அபிநயரசமும் அதிசயிக் கத்தக்கதே" என்று சொல்லவும், அம் மகாகவியும் அத்யானந்த பரிதனாய் அரசனுடைய அதிசூக்ஷ்மபுத்திக்கும் வாஞ்சலியத்திற் கும், வாசாவல்லபத்திற்கும் மெச்சித் தலையசைத்து, "இப்பேர்ப் பட்ட அரசனிடத்திலல்லவோ நம்முடைய அருமைக்கல்வியும் பெருமைப்படவேண்டும்" என்று அருமை கொண்டாடினன்.

---

## லக்ஷ்மீதர கவி

இப்படிச் சிலநாள் செல்லவும், தென்தேசத்திலிருந்து வந்த லக்ஷ்மீதரன் என்னும் ஓர் கவி அரசன் அரண்மனைக்கு வந்து, ராஜாக்கினையால் உள்ளே விடவும், அரசனைப் பார்த்து ஆசி கூறி, அவனாணையால் அங்கு ஓராசனத்தெழுந்தருளி, "வித்வாத்தினங் களால் நிறைந்துள்ளது நின் சபை; நீயோ விஷ்ணுவைப்போல விளங்குகின்றாய்; ஒருவனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவன் கோரிக்கையைத் தெரிந்துகொண்டு நிறைவேற்றி இன்பவார்த்தை களால் சுகமளிக்கின்ற உனக்கு என் பாண்டித்யம் எவ்வளவு? ஆகி லும் கொஞ்சம் சொல்லுகிறேன்; கேளும்! அரசே!" என்று,

சு: போஜப்ரதாபம் துவிதாய தாத்ரா ஸேஷைர் நிரஸ்தைঃ பரிமாணுபிঃ கிம் |
ஹரேঃ கரே பூத் பவிரம்பரே ச பாநுঃ பயோதே ருதரே க்ருஸாநுঃ ||

(இ - ள்) "வானவர்கோமான் வலக்கரத்துற்ற வச்சிராயுதமும், ஆகாயத்துற்ற அழற்கதிரும், ஆழாழியின் மத்தியத்துற்ற வடவைக்கனலும் ஆகிய இவைகள் போஜனுடைய ப்ரதாபத்தைச் செய்த பிரமனால் வழித்தெறியப்பட்ட சேஷமாகிய பரமாணுக்களேயன்றி வெறென்ன?" என்றனன்.

இதைச் செவியுற்ற சபைமுழுதும் ஆச்சரிய மடைந்தது. அரசனும் அடங்கா மகிழ்ச்சியுடனே அக்ஷரத்துக்கு லக்ஷமாக மேரை யளித்தனன். பிறகு கவியும், "தேவ! நான் இந்த நகரத்திலேயே வசிக்கவேண்டும் என்று குடும்பத்தோடும் வந்திருக்கின்றேன். க்ஷமையும், கொடையும், நற்குணங்களையுமுடைய நல்ல எஜமானன் கிடைப்பதெப்படி அருமையோ அப்படியே இணக்கமும் நல்லொழுக்கமும் கல்வியுமுடைய வித்வன்மணியும் அரியவனே" என்றனன்.

அப்போது அரசன் முக்கிய மந்திரியைப் பார்த்து "இவ் அந்தண கவிக்கும் ஓர் விடுதி யமைப்பாய்?" என்ன, அவன் நகரமுழுதும் தேடியும் ஒரு வீடும் சாதாரணமானதா யில்லாமல் கவிகளாலேயே நிறைந்திருக்கக் கண்டு, கடைசியாக ஓர் சாலியன் வீட்டைக் கண்டு அதனுட் புகுந்து, "ஹே குவிந்த! இவ் வீட்டை யொழித்துக் கொண்டு வெளியே போய்விடு! இதற்கும் ஓர் பண்டிதன் வரப் போகிறான்" என்ன, உடனே அவன் உலகபாலகனிடம் வந்து தொழுத கையினனாய்த் "தேவ! நினது முதன் மந்திரி என்னை அறிவிலியாக நினைத்து என் வீட்டினின்றும் அகன்றுபோகச் சொன்னான். நான்மூடனென்பதையும் பண்டிதனென்பதையும் நீயே கண்டறி.

சு: காவ்யம் கரோமி; நஹி சாருதரம் கரோமி |
யத்நாத்கரோமி யதி சாருதரம் கரோமி ||
பூபால மௌளிமணி ரஞ்ஜித பாதபீட |
ஹேஸாஹஸாங்க கவயாமி வயாமி யாமி ||

"பூபாலருடைய மணிமுடி யிறைஞ்சும் பாதபங்கயனே யானோ காவியம் பண்ணுவேன்; கவனித்துச் செய்தால் கனமுடைகாய்ப் பண்ணுவேன். ஆகையால், கவனம் செய்கின்றேன், நெய்கின்றேன், ஏகுகின்றேன்," என்னவே, இறைவனும் 'நீ யென்று வார்த்தை சொல்லும் குவிந்தனைப் பார்த்துப் புன்னகையோடே,

"உன்வார்த்தைகளின் வளமை எளிமையானதே; பாட்டின் இனிமையோ அதற்கு மேலாயிருக்கிறது. ரொம்ப அழகுதான்! ஆனாலும், அரச சபையிலே கவனத்தை ஆராய்ந்து சொல்லவேண்டும்," என்றனன்.

குவிந்தனும் கோபங்கொண்டவனாய், "ஐயனே! இராஜ தர்மத்துக்கும் வித்வதர்மத்துக்கும் வித்தியாச முண்டு. அதன் விவரத்தை யானெடுத்துச் சொல்லக் கூடாதவனாயிருக்கிறேன்" என்றனன். போஜன் "அப்படி ஏதாவதிருந்தால் சொல்!" என்னவே, குவிந்தனும், "புகழ்ப் பிரதாபனே! கவனத்தின் நுண்மையறியக் காளிதாசனையன்றி நின் சபையிலே எப்புலவ னிருக்கின்றான்? திருந்திய சொல்லி னினிமையைக் கொண்ட என்னுடைய வாக்கின் விசேஷத்தைக் கவிகள் பயனுள்ளவையாகவும், மற்றையோர் பயனில்லாதனவாகவும் கொள்ளுகின்றனர். அழகிய பெண்ணின் கடைக்கண்ணோக்கம் ஆடவர்க்கே பேரானந்தத்தை விளைவிக்கக் கூடியது. இதுவுமல்லாமல்,

> சு: பால்யே ஸுதாநாம், ஸுரதேங்கநாநாம்
> ஸ்துதௌ கவீநாம், ஸமரே படாநாம் |
> த்வங்கார யுக்தா ஹி கிர: ப்ரஸஸ்தா:
> கஸ்தே ப்ரபோ! மோஹபர:? ஸ்மர த்வம்॥ ||

"ஹே! இராஜாதிராஜா! போஜபூபதி! பால்யத்திலே புத்திரர்களும், சயனத்திலே ஸ்திரீகளும், துதிப்பதில் கவிகளும், யுத்தத்தில் படர்களும், நீயென்று விளித்தல் சம்மதமாயிருக்கவு மகப் பிரபு! இதி லுனக்குண்டான மயக்கமென்ன? சற்றாலோசித்துப் பார்!" என்னும் சுலோகத்தைச் சொல்ல, அப்போது தோன்றல், "குவிந்த! நீ சொல்வது சரியானதே" என்று சொல்லி அக்ஷரத்துக்கு லக்ஷம் தந்தனன்.

---

## பாண கவியின் வறுமை நிலை

இவ்வாறு கவிகளின் சமூகத்தால் மனங் களிக்கும் மன்னர் மன்னனும் சில நாளைக்குப் பிறகு ஓர் நாள் இரவில் மாறுவேடம் பூண்டு விதிகள்தோறும் தான் ஒருவனாகவே போய்க்கொண்டிருக்கையில், வித்வசிரேஷ்டனாகிய பாணகவியின் வீட்டுத் தலைக்

கடையை யடைந்து நிதானிக்கையில், ராஜசன்மானத்தால் அடிக்கடி பெருமையுற்றிருந்தும் பூர்வகர்மவிசேஷத்தால் மூத்தவள் குடிகொண்டவனாய் வறுமையால் மெலிவுற்ற புலவர் ஏறுன பாணகவி கலங்கிய மனத்தோடே அப்போது தன் மனைவியை நோக்கி, "ஹே! பிரியை! என்ன சொல்லப்போகிறேன்! இறைவன் போஜன் எத்தனை தடவை என்னிஷ்டம்போலெனக்குப் பரிசளித்தனன். இன்னமும் யான் வாய்திறந்தால் எவ்வளவோ கொடுக்கப்போகிறான். என்றாலும் என்ன? இடைவிடாமல் அடிக்கடி யாசிப்பதனால் மூர்க்கனுடைய நாவும் மறுத்துப்போய்விடுகிறது," என்று சொல்லி ஒரு முகூர்த்தகாலம் அப்படியே அசைவற்றிருந்து பிறகு,

சு: ஹாரஹார புரஹார பருஷகஹாலாஹலபல்குயாசஞ வசஸோ: |
ஏகைவ தவ ரஸக்ஞா ததுபயரஸதாரதம்யக்ஞா: ||

(இ-ள்) "அரனே! புரமெரித்தவனே! ஆலகால விஷத்தினுடையவும் யாசகத்தினுடையவும் சுவையின் தாரதம்யத்தை நினது நாவே நன்று யறியக்கூடியது (விஷத்தை யுண்டவரும் பிக்ஷான்னங் கொண்டவருமாகையால்,) என்று சொல்லினதோடு பின்னும் "யாசித்தலே வறுமையின் மேலான சொரூபம். பணமில்லாமையல்ல. கோவணமொன்றேயுடையார் சம்புவானவர்; ஆனால், பரமேசுவரர். சுகத்திற்கு அடிமைத்தனமும், தனத்திற்கு விசனமும், குணத்திற்கு இரத்தலும், குடிகளுக்கு குணமில்லா அரசனும், குலத்துக்கு ஒழுக்கமில்லாத மைந்தனும், வேரோடு வெட்டக் கூடிய வலிய கோடாலியாம். என் வறுமையை இறைவனுக்குத் தெரிவிக்க வலியற்றவனாயிருக்கின்றேன். க்ஷணப்பொழுது பிரகாசித்தாலும் சந்திரன் நன்மையைச் செய்கின்றான்; நாளெல்லாம் பிரகாசித்தாலும் சூரியன் சுடுகின்றான். மேலும், நாயகி! வைஸ்வதேவம் பண்ணும் சமயத்தில் வந்தவர்கள் பசியோடே போய்விட்டார்கள் என்பதே என் மனதைப் பிளக்குகின்றது. வறுமையென்னுந் தீயைக் களிப்பென்னும் நீர்தான் அவிக்கும். ஆகையால், யாசகனது விருப்பம் அழியும்படியா யமைந்த உட்கொதிப்பைத் தணிப்பது எதனாலே?" என்று சொல்லச் செவியுற்ற போஜன், "இவனுக்கு இப்போது நாம் செய்வதென்ன விருக்கிறது? நாளை யுதயத்திலேயே பாணனை மனோபூர்த்திகொள்ளச் செய்கிறேன்" என்று தீர்மானித்துக்கொண்டு, 'சொற்செல்வனாகச் செய்யாத காவியத்தினாலும், இரப்போர் குறை நீக்காத இருநிதியத்

தாலும், தன் வழிக்கு வாராத பலத்தினாலும், என்ன பயனுடைத்தாம்' என்று எண்ணிக்கொண்டே மறுபடியும் போய்க்கொண்டிருந்தனர்.

---

## கள்ளர்க ளிருவரின் மனத் தூய்மை

வழியிற் கண்ட கள்ளரிருவரி லொருவன் சகுந்தன் என்பவன் மற்றவனைப் பார்த்து, "ஹே நண்ப! உலகமெல்லாம ஒரே இருளாய் மூடிக்கொண்டிருந்தும் அங்கேயுள்ள அணுவளவாகிய வஸ்துக்களைக் கூட அஞ்சனத்தின் விசேஷத்தால் நன்றாய்ப் பார்க்கின்றேன். ஆனாலும், உக்கிராணசாலையினின்றுங் கொணர்ந்த தனப் பெருக்கால் எனக்குச் சுக மில்லை" என்றனன்.

மருளன் என்னும் மற்றொரு கள்ளன் "ஏன் அப்படிச் சொல்லுகின்றாய்?" என்ன, அதற்குச் சகுந்தனும் பட்டணத்துத் தலையாரிகள்: பாதுகாப்புக்காக எங்கும் உலாவிக்கொண்டிருக்கின்றனரே! அவர்கள் அடிக்கும் பறைமுதலிய வாத்திய வொலியால் யாவர்தான் விழித்துக்கொள்ளார்கள்! ஆகையால், இதுவரையிலும் நாம் கொணர்ந்ததைப் பங்கிட்டுக்கொண்டு இப்போதே போய்விடுவோம்" என்றான்.

அப்போது மருளன்: "சிநேகனே! உன் பங்குக்கு உண்டான இரண்டு கோடியளவுக்கு ஏற்படும் நவமணிகளையும் பொன்னையும் என்ன செய்யப்போகின்றாய்?" என்றனன். அதற்குச் சகுந்தனும் "ஆ! நண்பனே! இவ்வளவு பொருளையும் வேதங்களை நன்குணர்ந்த ஓர் பிராமணோத்தமனுக்கு அவன் வேறொருவரையும் அதுமுதல் யாசிக்காதபடி என் மனதாரக் கொடுப்பேன்," என்றதைக் கேட்ட மருளன், "என் மனதிற் கினியனே! எடுத்துரைப்போர்க்கும் கேட்போர்க்கும் மனம்பூரிக்கச் செய்வது மகா தானமும் வீரத்துவமேயாம். ஆகிலும், துணைவ! எப்படி யுனக்கு இந்தத் தானத்தால் புண்ணியம் ஏற்படும்?" என, "சகுந்தா! ஏன்! திருடிக்கொண்டு வந்தவைகளை இப்படிச் செலவழித்துவந்ததே என் முன்னோர்களின் தருமமாகும்," என்று தாராளமாய்ச் சொன்னான்.

அதற்கு மருளன் புன்னகையோடும், "தலை கொடுக்கக் கூடிய தாய்ச் சம்பாதித்த பொருளை யெல்லாம் எடுத்த வாக்கில் ஒருவனுக்

குத் தானமா யளித்துவிடுவதா?" எனவும், சகுந்தன், "'அறிவில்லாதவன் கஷ்ட மநுபவிக்கவேண்டுமே' என்று தனத்தைச் செலவிடுகிறதில்லை; அறிவாளியோ தரித்திரம் தன்னை யடையும் என்னும் ஐயத்தினுல் பொருளைத் தானம் பண்ணுகின்றான். வேதமயமாய் விளங்குவோர் சிலர்; தவமயமாய் விளங்குவோர் சிலர்; சூத்ரபோஜனத்தை யுட்கொள்ளாதவரே உத்தம பாத்ராளம். நண்ப! உனக்கு வந்த இந்தப் பொருளைக்கொண்டு நீ என்ன செய்யப்போகிறாய்?" என்றான்.

மருளன், "பிரியனே! காசியில் வசிப்பதா லுண்டாம் பலனை யறிந்துகொண்ட என் தந்தை குடும்ப சகிதராய்க் காசிக்குப்போய்த் தான் இதுவரையிலும் செய்துவந்த திருட்டுத்தொழிலா லுண்டான பாவங்களை யொழிக்கப்பார்க்கிறார். இப்பொருளை அவருக்காகத் தான் கொண்டுபோகிறேன்" என்றனன்.

அதைக் கேட்ட சகுந்தன் உன் தந்தையின் பாக்கியமே பாக்கியம். அந்தக் காசியிலே வசிக்கும் நாய்க்கும் சமானமாவனோ தேவராஜாவும். சண்டாளனுக்கும் பண்டிதனுக்கும் சமமாக மோக்ஷத்தைத் தரவல்ல காசிக்ஷேத்திரமானது பூர்வகர்மவினைகளாகிய பயிர்களுக்கு உவர்நில மல்லவோ? மரணம் மங்களமாயும், விபூதி ஆபரணமாயும், கோவணம் வெண்பட்டாயும் இருப்பது எந்த க்ஷேத்திரமோ அப்படிப்பட்ட காசியின் மகிமையைக் கண்டுரைப்பவர் யார்?" என்று உரோமம் சிலிர்க்கச் சொன்னான்.

இப்படி இவர்கள் சொன்ன வார்த்தையால் போஜன் புளகாங்கிதங்கொண்டு இவ்வுலக விசித்திரமே விசித்திரம். கள்ளர்களாகிய இவர்க ளிருவருக்கும் இப்படிப்பட்ட நல்ல ஹ்ருதயம் எப்படி யுண்டாயிற்று?" என்று ஆச்சரியமுற்றனன்.

அதன் பிறகு, அரசன் அப்படிச் சுற்றிக்கொண்டிருக்கையில் அங்கும் ஓர் அந்தணன் வீட்டை யடைந்து, தந்தையும் மகனும் விந்தையாகப் பேசிக்கொண்டிருக்கக் கண்டு, அங்கே சற்றுத் தங்கினன். அப்போது விருத்தப் பிராமணனும் தன் சிறுவனை நோக்கிப் "போஜன் புலவர் திலகமாய் எல்லா நூல்களி னுணுக்க மறிந்தவனாயிருந்தும், கிருபண சிரோமணியாய்க் கேட்பவர்க்கு ஒன்றுங் கொடுக்கின்றிலன். அப்படி யிருந்தும் யாசகனுன கவி கவனம் செய்தால், இவனும் கவனம் செய்கிறான்; படித்தால், இவனும் படிக்கின்றனனே! துதித்தால், இவனும் துதிப்பானு! பிறகு அவன்

போகிறேனென்றால் இவனும் மௌனமாய்க் கண்ணை மூடிக் கொள்ளுகின்றான்," என்னுங் கருத்தமைந்த,

ஸு: அர்திநி கவயதி கவயதி, படதி சபடதி, ஸ்தவோந்முகே ஸ்மெளதி |
பஸ்சாத்யா மீத்யுக்தே, மௌனீத்ருஷ்டிம் நிமீலயதி: ||

என்னும் இந்தச் சுலோகத்தைச் சொல்லக் கேட்ட அரசனும் அவர்களை யணுகி "இனி யிவ்வாறு செல்லாதீர்!" என்று அப்போது தானணிந்திருந்த ஆபரணங்களை யெல்லாங் களைந்து அவர்களுக்குத் தானமளித்து அரண்மனைக்குத் திரும்பினன். இப்படிச் சில நாள் செல்லவும், ஒருநாளன்று புலவர் குழாத்துற்ற போஜன் காளிதாசனைப் பார்த்து,

ஸு: கவீநாம் மாநஸம் நௌமி தரந்திப்ரிதி பேஜஸா: ||

"கவிகளின் மனதைப் புகழ்கின்றேன், எது தாண்டுகிறதோ பிரதிபையின் பலத்தால்" என்னும் பொருள்படும் அடியைச்சொல்ல அதற்குக் கவீந்திரனும்,

ஸு: யத்போதேந பயாம்ஸீந புவநாநி சதுர்தஸ: ||

"எது தண்ணீரைக் கப்பலினாற்போல லோகங்கள் பதினான்கையும்" என்னும் அடியைப் பூரிக்கவே, அச் சுலோகக் கருத்தும்: எப்படித் தண்ணீரைக் கப்பல் கடந்து போகின்றதோ அப்படியே புவனம் பதினான்கையும் பிரதிபையின் பலத்தால் தாண்டுகிற கவிகளின் மனதைப் புகழ்கின்றேன்" என்று முடிந்ததைக் கண்ட போஜனும் புளகாங்கிதனாய் அக்ஷரத்துக்கு லக்ஷக்கணக்காய்த் தாளங்களை (முத்துக்களை)த் தானமாக அளித்தனன்.

---

## க்ரீடாசந்த்ரன் வருதல்

இப்படிச் சிலநாள் செல்லவும், ஒருநாள் துவாரபாலகன் அரசனிடம் வந்து தொழுத கையினனாய்த் "தேவ! கோவணமாத்திரமே உடையாகவுடைய வித்துவானொருவன் கடைவாயிலில் நின்று கொண்டு எதிர்பார்க்கின்றனன்" என்றனன்.

அதற்குப் போஜனும் 'அவனை யுட்புகுவி!" என்ன, அப்படி வந்த புலவர்பெருமானும் அரசனுக்கு மங்கள ஆசிகள் கூறி அநுக்ஞைபெருமலே இருந்துகொண்டு,

சு: இஹ நிவஸதி மேருஃ ஸேகரோ பூதராணு
மிஹ ஹி நிஹிதபாராஃ ஸாகராஃ ஸப்தசைவ |
இத மதுல மநந்தம் பூதலம் பூரிபூதோ
த்பவதரண ஸமர்த்தம் ஸ்தாந மஸ்மத்விதாநாம் ||

(இ-ள்) "மலைகளுக்கெல்லாம் சிரோபூஷணமாகிய மேருபர்வதம் இங்கேயே வசிக்கிறது; நிலைபெற்ற பாரங்களைக் கொண்ட சப்த சாகரங்களும் இங்கேயேயிருக்கின்றன; அகண்டபஞ்சபூதங்களி னுற்பவங்களுக்கு ஆதாரத்தை வகித்து நிர்வகிக்கும் விசாலித்த பூமியு மிங்கேயே யிருக்கின்றது," என்னும் சுலோகத்தைக் கூறினன்.

புரவலனும், "ஹே! மகா கவீ! உம்முடைய நாமதேயம் என்ன?" என மகாவித்வானும், தம் பெயரைத் தாமே சொல்லுதல் பண்டிதர்களுக்கு அழகன்று; ஆனால், அறிந்துகொள்ளப் பிரியமானல், சொல்லுகிறேன். அகண்ட கடலி னுழத்தை அங்கங்கே கணுக்களையுடைய மூங்கிற்கோலானது கண்டறியமாட்டாதது போல, கவிகளின் கம்பீர வசனத்தை இளம்புத்தி ஆழ்ந்தறியமாட்டா. அரசே! கேட்டருளும்" என்று,

சு: ச்யுதா மிந்தோ ர்லேகாம் ரதிகலகபக்நம் ச வலயம்
ஸமம் சக்ரீக்ருத்ய ப்ரஹஸிதமுகீ ஸைலதநயா |
அவோச த்யம் ப ஸ்யே த்யவது கிரிஸஃ ஸா ச கிரிஜா
ஸ ச க்ரீடாசந்த்ரோ தஸ ந கிரணுபூரிததநுஃ ||

(இ-ள்) "நழுவி விழுந்த மூன்றும் பிறையையும் ஊடலினல் ஒடித்த வளையலையும் ஒன்று கூட்டி வட்ட வடிவாக்கி, எந்தச் சிவனைப் பார்த்துப் பார்வதியானவள் சிரித்துக்கொண்டே "இதைப் பாரும்" என்றனளோ, அந்தப் பார்வதியும் அந்தச் சிவனும், தந்த காந்திகளால் நிறைந்த தேகத்தினனுகிய க்ரீடாசந்திரனும் இரக்ஷிக்கக்கடவர்கள்," என்றனன்.

இதைக் கேட்ட காளிதாசன், "ஹே! நண்ப! க்ரீடாசந்திரா! வெகு நாளைக்குப் பிறகு உன்னைப் பார்க்கும்படியாயிற்று; தேசங்கள் தோறும் அரசர்கள் செழித்திருந்தும் உனக்கு இத் துர்த்திசை வந்ததற்குக் காரணமென்ன?" என்றனன். அதற்குக் கோவணதாரியும்,

சு: தபிநோ ப்யதாநவிபவா கண்யந்தே துரி மகாதரித்ராணும் |
ஹந்தி ந யத; பிபாஸா மதஃ ஸமுத்ரோபி மரு ரேவ ||

(இ - ள்) "தாருட்யத்திற் சிறக்காத மன்னர்களும் மகா தரித்திரர்களாகவே எண்ணப்படுகிருர்கள். விரும்பி யடைந்தவர் தாகத்தைத் தீர்க்காத பரவை (கடல்)யும் பாலை வனமாம். மேலும், அநுபவிக்கப்படாமல் மேன்மேலும் விருத்தியாகும் தனம் பிறர்க்காக வீட்டில் வளரும் கன்னிகையைப் போன்றது. சுவர்ன ரத்ன கேயூரம் (தோளணி) முதலியவைகளால் மற்றைய அரசர்களெல்லாம் மனம் பூரிக்கவும் ரஸக்ஞை யறிந்த போஜன் சுலோகங்களாலேயே சோபிக்கின்றனன்" என்ன, அதற்கு மயூரகவி,

சு: தே வந்த்யா, ஸ்தே மகாத்மாந, ஸ்தேஷாம் லோகேஸ்திரம், யஸ: |
யை ர்கிபத்தாநி காவ்யாநி, யே ச காவ்யே ப்ரகீர்த்திதா: ||

என்றனன். அப்போது வரருசி என்னும் மகாபண்டிதனும்,

சு: பதவ் யக்திவ்யக்தீக்ருத ஸஹ்ருதயா பந்தலலிதே
கவீநாம் மார்கேஸ்மிந் ஸ்புரதி புதமாத்ரஸ்யதிஷ்ணு |
ந ச க்ரீடாலேசவ்யஸநபிஸுநோயம் குலவதூ
கடாக்ஷாணும் பந்தா: ஸ கலு கணிகாநா மவிஷய: ||

(இ - ள்) "குலஸ்திரீயானவள் கடைக்கண் ஜாடையினாலேயே தன் அபிப்பிராயத்தை வெளியிடுவதுபோலவே மகா கவிகளும் பக்குவமான பதக்கூட்டங்களாலேயே—சாதுர்யமான வாக்கியங்களாலேயே—தெளிவாயெடுத்துக் காட்டுகின்றனர். க்ரீடாசந்த்ரன் மகாகவியாகையாலே தன்பெயரைச் சொல்லாமலே சொல்லித் தெரிவித்தனன்" என்றனன். அப்போது போஜன் க்ரீடாசந்த்ர மகாகவிக்கு இருபது லக்ஷமமைந்த அரசயானைகளையும் ஐந்து கிராமங்களையும் தான மளித்தனன். அதை வாங்கிக்கொண்ட கவி மறுபடியும் போஜனைப் பார்த்து,

சு: கங்கணம் நயநத்வந்த்வே, திலகம் கரபல்லவே |
அஹோ! பூஷணவைசித்ரம்! போஜப்ரத்யர்த்தி யோஷிதாம்: ||

(இ - ள்) "கண்க ளிரண்டினும் (ஜலபாஷ்பம்) பைந்துளிர் போன்ற கையில் திலகம் (திலோதகம்) போஜனுடைய சத்துருக்களின் ஸ்திரீகளுக்கிருக்கும் ஆபரண விசித்திரமே, விசித்திரம்" என்றனன்.

அதைக் கேட்ட தாரா நகர்க்கிறை ஆநந்தங் கொண்டு அக்ஷரத்துக்கு லக்ஷம் பொன் அளித்தனன்.

# ராமேஸ்வர கவி வருதல்

பின்னொருநாள் மூப்பினாலே சர்வாங்கங்களுந் தளர்ந்த சரீரனான ராமேஸ்வரன் என்னும் புலவன் ராஜசபைக்கு வந்து சுககவியென்னும் சிங்கத்திற்கு அபாரத்திரவியம் என்னும் யானைமாம்சமானது எங்கேயோ ஓரிடத்திற்றான் கிடைக்கும்;(சிங்கம் சாதாரண மாம்ஸத்தை அபேக்ஷிக்காது, தக்கவிடத்தில் கஜமாம்ஸத்தையே நாடும்; அதுபோல, நல்ல கவியும் ராஜசன்மானத்தையே நாடுவன்) மற்ற விடத்திலெல்லாம் உபவாசம்தான். பரிகளையும் பண்டிதர்களையும் பலரும் காப்பாற்றலாம். ஆனால், கஜேந்திரங்களையும், கவீந்திரர்களையும் நரேந்திரனே காக்கவல்லவன். பொது மாதர்கள் அழகினாலும் ஆபரணங்களாலும் பட்டாடைகளாலும் சோபிக்கின்றனர். இராஜகுமாரர்களோ (பராக்கிரமத்தாலும்) பேராண்மையாலும் தாருட்யத்தாலும் ஜொலிக்கின்றனர்'' என்றனன். அதைக் கேட்ட போஜபூபதி அக் கவிக்குத் தன் ஆபரணம் எல்லாவற்றையும் கழற்றிக் கொடுத்தனன்.

சு: போஜ, த்வத்கீர்த்தி காந்தாயாநப: பாலஸ்திதம் மஹத் |
கஸ்தூரி திலகம் ராஜந் குணகா விராஜதே: ||

(இ - ள்) "போஜனே! உன் புகழென்னும் பெண்மணிக்கு ஆகாயம் நெற்றியிலணியும் பெரிய கஸ்தூரித் திலகம்போல விளங்குகின்றது,'' என்று பின்னும் அக் கவி அறிவிற் சிறந்த புலவன் தானே அறிந்துகொள்ள வல்லவனாகையால், அவனிடத்தில் குணங்களைப்பற்றிப் பேசவேண்டிய அவசிய மில்லை; மூர்க்கன் சொன்னாலுந் தெரிந்துகொள்ளமாட்டானாகையால், அவனிடத்திலும் சொல்ல வேண்டிய அவசிய மில்லை'' என்னுங் கருத்தமைந்த,

சு: புதாக்ரே ந குணாந் ப்ரூயாத் ஸாது வேத்தி யத; ஸ்வயம் |
மூர்காக்ரே பி ச நப்ரூயாத் புதஃ, ப்ரோக்தாந் ந வேத்தி ஸஃ ||

என்னும் சுலோகத்தைச் சொன்னபோது, சபையிலுற்ற எல்லோரும் ஆச்சரிய முற்றனர். மறுபடியும் அந்தக் கவி "நல்ல கவியானவன் காவியத்தைச் செய்கின்றனன்; சுஜனனே அதற்கு மேலான புகழை யுண்டாக்குகிறான்; தாமரையைத் தண்ணீர் உண்டாக்குகின்றது; சூரியனே அதற்குச் சோபையை யுண்டாக்குகிறான்,'' என்னுங் கருத்தமைந்த,

சு: க்யாதிம் கமயதி ஸுஜநஃ ஸுகவிர்விததாதி கேவலம் காவ்யம் |
புஷ்டாதி கமல மம்போ, லக்ஷ்ம்யாது ரவிர்ஹி யோஜயதி: ||

அதைக் கேட்ட அரசன் அக்ஷரத்திற்கு லக்ஷந் தந்தனன். அப்போது அங்கிருந்த ராஜேந்த்ரகவியும்,

சு: கவித்வம் ந ஸ்ருணே த்யேவ க்ருபண: கீர்த்தி வர்ஜித: |
நபும்ஸகஃ கிம் குருதே புரஸ் ஸ்தித ம்ரு கீத்ருஸாஃ ||

(இ-ள்) "புகழை விரும்பாத லோபியானவன் கவனத்தைக் கேட்காததும்,எதிரிலிருக்கும் ஸ்திரீயானவள் மான் மிரட்சிகொண்ட கண்ணினளாயினும் அவளை யொருபேடி விரும்பாததும் போலாம்" என்றனன். அதைக் கவனித்த சீதை என்பவளும்.

சு: ஹஸ்தா ஹை வேந கவயோ வாராகா ஸ்தே கஜா அபி |
ஸோபாந ஜாயதே ஏஷாம் மண்டலேந்த்ரத்ருஹம் விநாஃ ||

(இ-ள்) "யானைகளும் கவிகளும் அரசனை அடுத்திருந்தாலன்றிப் பிரகாசிக்கிறதில்லை" என்னவும், காளிதாசன்,

சு: அதாத்ரு மாநஸம் க்வாபி நஸ்ப்ருஸந்தி கவேர்கிரஃ |
து: காயை வாதிவ்ருத்தஸ்ய விலாஸா, ஸ்தருணீ க்ருதாஃ ||

(இ-ள்) "பார்வையற்ற கண்ணை விளக்கொளி கிட்டாதவாறு போல'க் கொடாதவனது மனதைக் கவிகளின் வாக்கு மணுகாது" என்றனன். அப்போது அரசன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோரிலக்ஷம் தந்தனன்.

---

## போஜன் காளிதாசன் மேல் வெறுப்புறல்

இப்படியாக மைப்படியுஞ் சிகர கூடங்களையுடைய மேன்மாடங்களாற் சிறப்புற்ற தாராநகரத்தின் வித்வரத்னங்களால் நிறைந்த சபாமண்டபத்திலே சர்வ மங்களகரமாய் விளங்கும் சாக்ஷாத் விண்டுவைப்போல் புகழ்கொண்ட வேந்தனுக்கும் சகல சாஸ்திரப்ரவீணனாய் அகிலலோகமும் அடி பணியும் புவனேஸ்வரியின் பூரண கடாக்ஷ முற்ற அபார கவிக்கு முண்டாகிய நட்பும் நாளடைவிலே 'பூர்வபக்ஷத்துச் சந்திரன்போலும்' விருத்தியாய் வந்தும், மற்ற வித்வான்களின் கலகத்தால் காளிதாசனை ஸ்திரீலோலனாக எண்ணிச் சஞ்சலப்பட்டுக்கொண் டிருப்பதையும், தனக்கு வழக்கமாய்ச் செய்யவேண்டிய மரியாதையையும் செய்ய

மறந்தவனாய் மன்னவன் முகம் வாடியிருப்பதையும், அப்போது தான் சபைக்கு வந்த அபார கவியும் கண்டு முகம் வேறுபடவும் "ஆ! இதென்ன! கொடுமை! அரசன் நம்மை இப்படி அவமதிப்பானேன்? நாமொன்றும் செய்யவில்லையே" என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், அதைக் குறிப்பா லுணர்ந்த சீதை யென்னும் க்ஷாமரை இரட்டுபவளும்,

சு: தோஷமபி குணவதி ஜநேத்ருஷ்ட்வாகுணராகிணோ நபித்யந்தே |
ப்ரீத்யைவ ஸஸிநி பதிதம் பஸ்யதி லோகஃ களங்கமபிஃ ||

(இ-ள்) "குணமொன்றை நாடுவோர் அக்குணத்தையுடையோனிடத்தில் சிறிது துர்க்குணம் காணப்பட்டாலும் அதைக் கவனியார்; பூரண கலையோடுங் கூடிய சந்திரனைப் பார்க்க விரும்புவோர் அவனிடத்துள்ள களங்கத்தைக் கவனியார்" என்றனள்.

இதைக் கேட்ட அரசன் இதயங் களித்தவனாய், அவளுக்கும் ஓர் லக்ஷம் தந்தனன். ஆனால், காளிதாசனை மாத்திரம் அகம் பூரிக்கச் செய்தவனல்லன். அதைக் கலாசமுத்திரமும் இதயமெலிந்து, முகவொளி யிழந்து, "ஆகா! இதுவெல்லா மிங்கிருக்கும் மட்டி வித்வான்களின் குட்டிக்கலகமே யல்லாமல் வேறில்லை. இதை எவ்வளவும் அரசன் அறிந்தானில்லையே! நாமே யிதை அரசனுக்கு எடுத்துரைப்பதும் சரியல்லவே! ஆகிலும், அரசனே அறியட்டும்; கவலையி லாழட்டும்' என்று தனக்குள் தானே சமாதானஞ்செய்து கொண்டு, சபையை விட்டுத் திரும்பும்போது அங்கே யொரு தராசிருக்கக்கண்டு அதைப்பார்த்துச் சொல்வதுபோலச் சிலேடையாக,

சு: ப்ராப்ய ப்ரமாண பதவீம் கோ நாமாஸ்தே துலே லவேபஸ்தே |
நயிஸி கரிஷ்டமதஸ்தா, ல்லகுத்தர முச்சை ஸ்தராம் குருஷே: ||

(இ-ள்) "ஓ! தராசே! உன் செயலோ வியக்கத்தக்கது; நடுநிலைமையிலிருக்கும் பதவியை யுற்ற நீ பாரமானதை ஒரு கொடியிற் கீழாக்கிப் பாரமற்றதை மேலாக்குகின்றையே!"

ஒத்துநின் றவைகளுக்கு முசிமுவண விலக்கால்
இத்தகைய வென்றே யெடுத்துரைக்கும் வித்தகமே
பத்திகொண்ட பாரமதைப் பாரறியக் கீழாக்கி
எத்தகையா லற்பமதை யேத்துவைநீ யீங்கு?

என்று சொல்லி, மனந்தாளாதவனாய் மறுபடியும் அரசனுக்குப் படும்படி,

சு: யஸ்யாஸ்தி ஸர்வத்ரகதிஃ ஸ கஸ்மாத்
ஸ்வதேஸ ராகேண ஹி யாதி பேதம்? |
தாதஸ்ய கூபோய மிதி ப்ருவாணாஃ
க்ஷாரம் ஜலம் கே புருஷா: பிபந்திஃ ||

தந்தை தோட்டத் தடாகமென் றேயுவர்
முந்து நீரையு மொண்டுகொண் டுண்பரோ?
அந்த மாக வயற்றேசம் செல்லுவோர்
சொந்த வூரென்றுஞ் சோம்பித் திரிவரோ?

(இ - ள்) "எங்கும் போய் மேன்மையடைய விரும்புவோன் சுதேசத்தாசையால் சேத மடைகின்ருனில்லை. 'தந்தை தோண்டிய கிணறு' என்று யார்தான் உவர்நீரை யுண்பர்?"

என்று சொல்லிவிட்டு அரசனல் தனக்குண்டான அவமானத்தை அணுவளவும் சகிக்கலாற்றதவனய், அதை நினைக்குந்தோறும் துக்க மதிகரிக்கவும், வருந்திக்கொண்டே வாய்விட்டலருத குறையாய்ச் சபாமண்டபத்தினின்று மகன்றுபோய்த் தன் சரசியின் வீட்டை யடைந்தனன். போஜனும் மனவருத்தத்தோடே,

சு: அவஜ்ஞா ஸ்புடிதம் ப்ரேம ஸமீ கர்த்தும் க ஈஸ்வர,? |
ஸந்திம் நயாதி ஸ்புடிதம் லாக்ஷாலேபேந மௌக்திகம் ||

(இ-ள்)"அவமானத்தால் பிரிக்கப்பட்ட சிநேகத்தை யொன்றுபடுத்தக் கடவுளாலு மாகுமோ? பிளவுபட்ட முத்துக்களை எப்படி அரக்கின் சம்பந்தத்தால் முன்போலப் பொருத்த முடியும்?"

பிளவுற்ற முத்தம் பிடிபடவே முன்போல
அளவுற் றிருக்க அரக்கினு லமையுமோ?
தொலையுற்ற நட்புந் தொடர வேநாளும்
நிலைபெற்ற தாக்க நேர்வாரு மியாரே?

என்னும் பொருள் கொண்ட மேற் சுலோகத்தைச் சொல்லித் துக்கிக்கக்கண்ட லீலாதேவியும் தேவரீர் துன்ப முறவேண்டியதென்?" எனப், போஜன் நடந்தவற்றைச் சொல்லக்கேட்ட பட்டமஹிஷியும்! "தேவ! பிராணநாத! தாங்களோ சர்வக்ஞாள்,

சு: ஸ்நேஹோ ஹி வர மகடிதோ ந வரம் ஸஞ்சாத விகடிதஃ ஸ்நேஹஃ |
ஹ்ருத நயநோஹி விஷாதீ நவிஷாதி பவதி ஸ கலு ஜாத்யந்தஃ ||

(இ - ள்) "ஒருவரோடு சிநேகம் செய்யாமலிருப்பதே நலம்; செய்தபின் விட்டு நீங்குதல் நலமன்று; கண்ணுனது கொஞ்சநாள்

பிரகாசித்து அழிந்துபோவதால் ஒருவனுக்கு உண்டாகும் துக்கம் பிறவிக் குருடனாயிருப்பவனுக்கு இல்லை; மேலும், காளிதாசனோ, சாதாரண கவியல்ல; சாக்ஷாத் சரஸ்வதியின் அம்ஸமான ஓரவதார புருஷன்; வித்வரத்தினங்களுக்கெல்லாம் இவன் ஜீவரத்தினம் போன்றவன்; ஆகையால்,இவனை விசேஷமாகச் சன்மானிக்கவேண்டும்; பிரபு! இதுவுமல்லாமல், தோஷாகரனாய், குடிலமுள்ளவனாய், களங்கனாய், மித்திரனுடைய சாவகாசகாலத்திலே குதூகலங் கொள்ளுவோனாயிருக்கிற சந்திரனுமல்லவோ மகாதேவனுக்கு மகிழ்ச்சியை யுண்டாக்குகிறான். இப்படியிருப்பதால் ஆசிரயித்தவர்களிடத்தில் குணதோஷங்களை யேற்படுத்தல் இதமல்லவே" என்றவுடனே, போஜனும், "ஹே! பிரியை, நீ சொன்னதெல்லாம் சத்தியமே. நாளைக் காலையிலேயே காளிதாசனையும் மனங்களிக்கச் செய்விக்கிறேன்" என்று, 'எப்போது அருக்கன் குணகடலுதிப்பானோ?' என்று எதிர்பார்த்தவனாய் எப்படியோ நித்திரை போயினன்.

இரவெல்லாங் கழிந்து விடியுந் தருணமாகவே, இறைவனுடைய கருணாரசமானது எப்படி பக்திவிசேஷமென்னு மத்தினால் கடையப்பட்டு வெளிக்கிளம்பி, அஞ்ஞானமென்னு மிருளைப்போக்கி, இதய கமலத்தைமலரச்செய்து, எல்லாவற்றையும் தன்மயமாக்கிக் காட்டுமோ அப்படியே அருக்கனும் ஆழ்ந்த கடலினின்று மேலே கிளம்பி அவனியிலுள்ள ஆரிருளைநீக்கி, அழகிய தாமரை மலரையும் மலரச் செய்வித்து, தன்னுடைய ஆயிரங் கதிர்களையும் பரப்பி,அகிலலோகமும் தன்மயமாய்ப் பிரகாசிக்கும்படி அழகிய குணதிசையையு மலங்கரித்தனன்.

இப்படிச் சூரியனும் கீழ்த்திசையிற் றோன்றி தன்னாயிரங் கதிர்களையும் பரப்பி வெளிக்கிளம்பு முன்னமே,போஜனும் நித்திரை நீங்கிக் காலைக்கடன் முடித்து, வித்வசபைக்கு வந்து, அங்கே வித்வான்களெல்லாம் காளிதாசனில்லாக் குறையால் வாடியிருக்கக் கண்டு, மந்திரியைப் பார்த்துச் சரசகவி யில்லாக் குறையால் சபையினழகைப் பார்த்தையா? உடனே ஒரு ஆளை யனுப்பி உத்தம கவியை வரவழைப்பாய்?" என்றனன்.

அப்போது மந்திரியும் பிரதானியை நோக்கினன். நோக்கமறியும் நுண்ணறிவாளனாகிய அவனும் நொடிக்குள்ளே விசாலவதியின் வீட்டை யடைந்து கர்ணாமிர்தமான கவிகளைப் பாடித்தன்

காதற்கிழத்திக்கும் களிப்பூட்டிக்கொண்டிருக்குங் கவிச்சிங்கத்தைக் கண்டு, "மகாநுபாவா! மகத்தான மன்னவன் சபையும் தங்களை நீங்கியிருப்பதால் மங்களமின்றி மாழ்கலுற்றது. மன்னவன் ஒரு வேளை தங்களை மதியாதிருந்தாலும் அதுவும் ஏதோ இறைவன் ஆழ்ந்த சிந்தையால் மனம் வேறிடத்திற் செல்லவும் அப்படியிருக்கக்கூடுமே! எப்படியிருந்தாலும் இதைப் பொறுத்துத் தாங்கள் இறைவன் சபைக்கு எழுந்தருளவேண்டும்" என்றனன்.

காளிதாசனும் புத்திமானாகிய பிரதானியின் சொல்லைக் கேட்டதும், 'கத்திரியினடுவி 'லகப்பட்ட பிராணியைப்போல'ப் பிரசவ வேதனையி லகப்பட்டு உயிர் துடிக்கும் ஒரு ஸ்திரீயானவள் அடுத்த நிமிஷத்திலேயே "உனக்கு ஒருபாலன் பிறந்தான்" என்றால் எப்படி அந்த ஸ்திரீ இதயம் பூரிப்பளோ', அப்படியே மகாகவியும் மனம் பூரித்தவராய்க் கருணைவள்ளலாகையால், காவலன்மே விருந்த கவலை நீங்கவும், கோபந் தணிந்து, சர்வாபரணாலங்கிருதனாய், பர்வதாகிருதியாய், அசைந்தாடும் நடையோடு மகா கம்பீரத்தோடே மன்னவன் சபையை நோக்கி வருகையில், 'நேற்றுத்தானே நிருபன் நம்மை நிந்தித்தனன். இன்றைக்கு நாமங்கே போகப்போமோ? யாது காரணத்தால் அரசன் நம்மை யழைப்பிக்கின்றான்? ஒருவேளை யுண்மை யுணர்ந்தவனாய் ஒப்பற்ற தன் சபையின் வித்வான்களையெல்லாம் என் பொருட்டாய் மோடனம் பண்ண நினைந்தனனோ' என்று எண்ணாது மெண்ணி,

சு: யம் யம் ந்ருபோநுராகேண ஸம்மாநயதி ஸம்ஸதி |
தஸ்ய தஸ்யோத்ஸாரணாய யதந்தே ராஜவல்லபா: ||

(இ-ள்) "சபையில் எவனெவனை அரசன் ஆசையோடே ஆதரிக்கின்றானோ அவனவனை நீக்குவதற்கு அரசனிடத்திருக்கிறவர்கள் எத்தனிக்கின்றனர். அரசன் எனக்களிக்கும் விசேஷ சன்மானத்தால் பொறாமை கொண்டோர் புரவலனுக்கும் என்மேல் வெறுப்புண்டாகச் செய்கின்றனர்," என்று மறுபடியும்,

சு: அவிவேகமதிர்ந்ருபதி, மந்த்ரிஷு குணவத்ஸு வக்ரிதக்ரீவ: |
யத்ர கலாஸ் ச ப்ரபலாஸ்தத்ர கதம் ஸஜ்ஜனாவஸர: ||

(இ-ள்) "எவ்விடத்தில் அவிவேகியான அரசன் குணமுடையோர்களான அமைச்சர்களின் வார்த்தையை விசேஷமாகக் கேட்கானோ அவ்விடத்திற்கு நல்லவர்கள் எப்படி வருவார்கள்?" என்று சொல்லிக்கொண்டே சபைக்கு வரும் காளிதாசனைத் தூரத்திற்

கண்டபோதே காவனும் ஆசனம்விட் டெழுந்து ஐந்தாறடி எதிர் சென்று உபசரித்து, அவனுடைய இரண்டு கரங்களையும் பிடித்துக் கொண்டு அழைத்துக்கொண்டுபோய், "ஹே சுக கவீ! இன்றைக்கு ஏன் இந்நேரம்?" என்றனன்.

அப்போது அரசன் சிங்காதனத்தினின்று மெழுந்து நின்ற தால், எல்லோரும் அப்படியப்படியே தங்கள் தங்கள் ஆசனங்களி னின்று மெழுந்து நின்றனர். அங்கிருந்த எல்லோருக்கும் ஆச்சரி யமா யிருந்தது. வைரிகளாகிய வித்வான்களெல்லா முகங் கருக லாயினர். அப்போதரசனும், "உள்ளபடியே சொல்லுகிறேன்: உத்தம கவி! உம்மை நீங்கி யிருக்கவென்றால் ஒரு நொடியும் எனக்கு ஓர் யுகமாயிருக்கிறதே!" என்றனன்.

பிறகு போஜன் அம் மகாகவியைத் தன் சிங்காதனத்தி லிருக் கச் செய்து அவனுத்தரவால் தானும் அமர்ந்தனன். இப்படி இவர்க ளிருவரும் அவ்வளவிலேயே 'வெட்டுண் டநீரானது எப்படி வேகமாக ஒன்று கூடுமோ' அப்படியே ஒத்த மனதாய்ச் சிநேகங் கொண்டனர்.

இப்படிக் காளிதாசன் போஜனுடைய சிம்மாதனத்திலே சிறந்து விளங்கக் கண்ட பாணகவியும் மனக்கொதிப்போடே வலது கையை உயரத் தூக்கிக்கொண்டு,

சு: போஜஃ களாவித்ருத்ரோ வா காளிதாஸஸ்யமாநநாத் |
விபுதேஷு க்ருதோ ராஜா யேந தோஷாகரோப்யஸெள ||

(இ - ள்) "தேவர்களுக்குள்ளே தோஷாகரனை (இரவை யுண்டுபண்ணுவோனை) சந்திரனை யுத்கர்ஷனுகக்கொண்டு எவர் பெருமைப்படுத்தினரோ, அதுபோல, புலவர்களுக்குள்ளே தோஷா கரனைவனென் றறிந்திருந்தும் இக் காளிதாசனைப் பெருமைப் படுத்த இந்தப்போஜனும் அந்தச் சிவனே?" என்னுங் கருத்தடங்கிய சுலோகத்தைச் சொன்னான்.

அப்போது வித்வான்களெல்லாம் பாணகவியின் தைரியத்தை மெச்சி அதுமுதல் அவர்களுக்குக் காளிதாசனிட முண்டான பொறாமையானது மேன்மேலும் அதிகரித்துக்கொண்டிருந்தது. இது இப்படியிருந்தும், நராதிபனுக்கும் மகாகவிக்கு முண்டான நட்பு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே யிருந்தது. இதனால் நாட கப்பிரியனான காளிதாசனுடைய வைரிகளிற் சிலர் தங்களுக்குள்ளே

ஆலோசித்து, அரண்மனையின் அந்தப்புரத்துத்தாதியருள் ஒருத்தியைக் கண்டு, "அறிவிற் சிறந்தவளே! அசாத்தியமானவைகளை யெல்லாம் அநாயாசமாகவே முடித்துக் காட்டுபவளே! வெகுகாலமாகப் பேறெடுத்துவந்த எங்கள் பிழைப்புக்கும் இடையூறாக இக் காளிதாசனும் எங்களுக்கு ஏற்பட்டனன். இவனளவில் அரசனுக்குண்டாயிருக்கு மன்பின் மிகுதியை அளவிடப்போகாது. இவை யாவு முனக்குந் தெரியுமே! இதற்கு எங்களால் ஒருவித சூழ்ச்சியுஞ் செய்யச் சாத்திய மில்லை. இதுவு முன்னால்தான் ஆகவேண்டும். அவனும் ஊரைவிட்டு ஓடவேண்டும். இதற்கென்ன சொல்லுகிறாய்? இதற்காக நீ என்ன கேட்டாலும் கொடுக்கின்றோம்" என்றனர்.

இதைக் கேட்ட தாதியும் "அப்படியே உங்களெண்ணத்தை யீடேற்றுகிறேன். அதற்கடையாளமாக உங்கள் மார்பி லணிந்திருக்கும் விலையுயர்ந்த முத்தாரம் ஒன்றைத் தாருங்கோள்" என்று வாங்கி யதைத் தன் முன்மார்பி லணிந்துகொண்டு, அவர்களுக்கு விடையளித் தனுப்பிவிட்டுச் சமயம் பார்த்திருந்து, 'அமையும் வேளை யிதுதான்' என்று தான் கொண்ட கருத்தை நிறைவேற்றும்படி அரசன் அரை நித்திரையாயிருக்குஞ் சமயத்திலே அவனுக்குக் கால் வருடிக்கொண்டிருக்குந் தான் நித்திரைச் சோர்வினால் இடையிடையே விட்டுப் பிடிப்பவள்போல நடித்து நித்திரை யதிகரிப்பால் கனவில் உளறுவதுபோல, "ஆ! சகி! மதனமாலினி! இதென்னடி கொடுமை!! துராத்மாவாகிய காளிதாசனும் பாங்கிவேஷம் பூண்டு அந்தப்புரத்திலே அரசபத்தினியாகிய லீலாதேவியோடே சொந்தமாக வார்த்தையாடுகின்றனனே!" என்று உளறினள்.

இதைக்கேட்ட அரசனும் எடுத்துப்போட்டவனுய்த் திடுக்கிட்டெழுந்து, "ஹே! தரங்கவதீ! தரங்கவதீ!" என்று அடுத்தடுத்துக் கூப்பிட்டு "என்ன தூக்கமா?" என்றனன். அதற்கவள் ஒன்றும் சொல்லாமல் மௌனமாய் நித்திரிப்பதாக நடிக்கவே, நிருபனும், உண்மையிலேயே தூங்குகிறதாகவெண்ணி, "ஆகா! இஃதென்ன விந்தை! இவளோ அயர்ந்து ஆழ்ந்த நித்திரையிலிருக்கின்றாள். அதில் காளிதாசனுடைய காமவிகாரத்தைப்பற்றிக் கலவரிக்கின்றனளே! நனவில் முன்னங் காணாத வொன்றுங் கனவில் வருமோ? என்னுடைய லீலாவதியோ பத்மினி ஜாதிப்பெண்; கற்பின் மிகுந்தவள்; சிற்பன்ன முடையவள்; சிற்பிகளின் இலக்ஷியத்திற்கு இலக்

கான சித்திரம் போன்றவள். ஒருக்காலும் உடன்படமாட்டாள் தான். ஆனால், காளிதாசனே, அறிவிற் சிறந்த அபாரகவியானு லும் அதி காமி. ஆள் மாறி ஸ்திரீவேஷம் போடவும் ஒருப்படுவன். அரசபத்தினியென்றும் பாரான். ஆகையால், இதனுண்மையை நாம் உள்ளபடியே யறியவேண்டும்' என்று அடுத்தநாட் காலையிலே தனக்குத் தலைநோய் என்பதாகக் காளிதாசனுக்குச் சொல்லியனுப் பித் தன்னை வந்து பார்க்கும்படி ஆக்ஞாபித்தனன்.

அப்படி வந்த காளிதாசனும் அரசனைக் கண்டு, ஆசிகள் கூறி, இனிய வார்த்தைகளாடிக்கொண்டிருக்கையில், லீலாவதியும் அங்கு வர, உடனே அரசனும் "தேவி! இப்போதே நான் பத்தியம் பண்ண வேண்டும்" என்ன, லீலாவதியும் பச்சைப்பருப்போடுங் கூடிய அன் னத்தைக் கொண்டுவந்து அரசனுக்கு வட்டித்தனள். அப்போது அரசன் அவர்க ளிருவருடைய அபிப்பிராயத்தை யறிய விரும்பி,

சு: முத்கதாளீ கதவ்யாளீ கவீந்த்ர விதுஷாகதம் ||

(இ - ள்) "வியாதிகளுக்கெல்லாம் சர்ப்பம் போன்ற பச்சைப் பருப்பின்மூட் டவிழ்ந்ததற்கு (மேற்றோல் நீங்கியதற்கு)க் காரண மென்ன?" என்றனன்.

அதைக் கேட்ட மகாகவியும் அரசன் பக்கத்தில் நிற்பவள் பட்டமகிஷி யென்பதையும் பாராமல் கம்பிரமாகத்தானே,

சு: அந்தோ வல்லப ஸம்யோகே ஜாதா விகத கஞ்சுகாஃ ||

(இ - ள்) "அன்னமென்னுங் கணவனோடே கூடினபோதே அதன்மூட் டவிழ்ந்தது (மேற்றோல் நீங்கியது)" என்று சொல்லி னன். அதை அரசன் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த லீலாவதியும் ஸரஸ்வதியின் அவதாரமாதலால், அர்த்த பாவத்தை யறிந்தவளாய்ப் புன்னகை கோட்டினள். அப்போது அரசன் போஜன் தன் தேவி சமீபத்திலிருக்கிறுளென்ற அச்ச மில்லாமல் காளிதாசன் சொன்ன வார்த்தைகளையும் அதற்கு லீலாவதி சிரித் ததையுஞ் சிந்தித்துத் தான் கொண்ட சந்தேகம் சரியாய்விட்ட தாகக் கொண்டு மகா மனவருத்தத்தோடே,

சு: அஸ்வப்லுதம் வாஸகர்ஜிதம் ச ஸ்த்ரீணாம் ச சித்தம்புருஷஸ்ய
பாக்யம் அவர்ஷணஞ் சசராப்யதிவர்ஷணஞ்ச்ச |
தேவோநஜாநாதி; குதோ மநுஷ்ய? ||

(இ - ள்) "குதிரைகள் குதூகலித்து மேற் கிளம்புவதையும், மேகம் கர்ச்சிப்பதையும், ஸ்திரீகள் மனதையும், புருஷருக்கு உண்டாம் பாக்கியத்தையும், வருஷம் (மழை) இல்லாமையும், அதிவருஷம் (மழை) உண்டாதலேயும் தேவனுக்கே தெரிந்துகொள்ளக் கூடாதென்றால், மனிதன் எப்படி யறிவன்?"

அன்னத்தைப் பார்க்கலா மத்திப்பூக் கோய்யலாம்
மின்னுெத்த மீன்காலை மேதினியிற் காணலாம்
போன்னுெத்த மேனியார் பூணும் பெருஞ்சூழ்ச்சி
என்னத்தா னுய்ந்தாலு மின்னதென் றறிவோமோ!

என்ற பெரியோர் வாக்கியம் வீண்போமா!

'இத்தகைய கொடுஞ் செய்கைக்கு இப்போதே என் வாளுக்கு இரையாக்குவேன். இவனே மகா கவி; அதிலும் அந்தணன்; அந்தணர்கள் என்ன குற்றஞ் செய்யினும் கொல்லத்தக்கவ ரல்லரே! ஆகையால், சாக்ஷாத் சரஸ்வதியைப்போல விளங்கு மிவனை வேறொன்றும் செய்ய லாகாது,' என்று, "ஹே! மகா கவி! நீ யினிமேல் என்னுட்டி லெவ்வளவு மிருக்கப்போகாது; (இவ்விடம் விட்டு இப்போதே போய்விடு!) மறுத்தொன் றுஞ் சொல்லாதே!" என்னவும், உடனே அரசனைவிட்டகன்ற கவீந்த்ரனும் கனவருத்தத்தோடே தன் காதலியின் வீட்டையடைந்து, கலங்கிய மனதோடே, கம்மிய குரலோடே, ஒருவித கடுப்போடே, விம்மிதத்தோடே, "ஹே! பிரியை! என்ன சொல்லப்போகிறேன்! எனக்குச் செலவுதா! இறைவன் என்மேற் கோபங்கொண்டவனாய் என்னை இந்நாட்டை விட்டு இப்போதே ஓடிப்போகச் சொன்னான். ஆகா!

சு: அகடிதகடிதாநி கடயதி கடிதகடிதாநி தூர்கடீகுருதே |
விதி ரேவ தாநி கடயதி யாநி புமாந்நைவ சிந்தயதி ||

(இ-ள்) "யோசித்துப் பார்க்குமிடத்தி லொருவன் ஒன்றையும் நினையாம லிருக்கும்போதே கூடாதவைகளைக் கூட்டிவைப்பதுவும், கூடியவைகளை நீக்கிவைப்பதுவும் விதியின் கூறுதான்" என்பதைச் சொல்லி, மறுபடியும் மகாகவியாகையால், மனந் தாளாதவனாய், "ஆகா! இதுவும் இங்கிருக்கும் வித்துவக் கூட்டத்தின் சேஷ்டையாகவே தோன்றுகிறது. ஆ! என்ன என் தௌர்ப்பாக்யம்!

சு: பஹூநாமல்ப ஸாராணாம் ஸமவாயோ துரத்யய: |
• த்ருணைர்விதீயதே ரஜ்ஜு: பத்யந்தே தேந தந்திந: ||

(இ - ள்) "அற்பவஸ்துக்களானாலும் அவைகள் ஒன்று சேரின் அவைகளை வெல்லுதற்குக் கூடாமையே. காற்றிற் பறக்கும் புல்லானாலும் அதைக் கயிறாகத் திரித்தபோது எப்படி அதன் சமூகத்தால் மதங்கொண்ட யானையும் கட்டுண்டுபோகுமோ, அப்படியே இந்தக் கேவல வித்துவக்கூட்டத்தால் எனக்கும் இவ்வாபத்து உண்டாயிற்றே" என்றனன். அதைக் கேட்ட விலாசவதியும் வியர்த்து வாடி, மனதை யொருவாறு திடம் செய்துகொண்டு,

ஸ்ரீ: ததேவாஸ்யபரம் மித்ரம், யத்ர ஸங்க்ராமதி த்வயம்; |
த்ருஷ்டே ஸுகம் ச து:கஞ் ச ப்ரதிச்சாயேவ தர்ப்பணே ||

(இ - ள்) "கட்பின் சுகாசுகங்களை, அடுத்தவைகளை யப்படியப்படியே எடுத்துக் காட்டும் ஆடியை (கண்ணாடியை)ப்போல எடுத்துக் காட்டாத சிநேகமும் சிநேகமா? ஹே, இன்பகவீ! துன்பம் உனக்கேன்? அரசனுக்கினையால் அந்நிய தேசம் போக அடியாளையும் விடை கேட்க வந்தீரோ! ஆகா! அழகாயிருக்கிறது? உயிர் உடலை விட்டுப் பிரிந்தாலல்லவோ உம்மை விட்டு யான் பிரிவேன். அப்படி யரசன் கட்டளையிட்டால்தானென்ன? அடியாளிருக்கும் போது தங்களுக்கு ஆபத்தேன்? இதற்காக அதைரியம் வேண்டாம். இதுவரைக்கும் அரசன் அளித்த தனம் எத்தனையோ தலைமுறையாக அனுபவிக்கலாமே. அளவு கடந்த செல்வ மிகுதியும், தேவரீர் ஆக்ஞைப்படி நடக்க அடியாளு மிருக்கையில், இனி இக் கவலையே வேண்டாம்; இனி என்றும் உமதிஷ்டம்போ லிருக்கலாம்; அரசனுக்கும் தாங்க ளிங்கிருப்பதுவும் தெரியப்போகிறதில்லை" என்றனள். அதைக் கேட்ட காளிதாசனும், 'ஸ்திரீகளாய்ப் பிறந்த பேர்களைச் சிறிதும் நம்பொணாது; அதிலும் தாசிகளையா! விபரீதம்! விபரீதம்!!' என்று சாஸ்திரவாயிலா யெவ்வளவோ அறிந்துள்ளோம். அதற்கு மாறாகத்தானே இவளிடத்தில் இப்படிப்பட்ட சற்குணங்களைக் கண்டோமே! இதுவும் நாம் செய்த பூர்வபுண்ணியந்தான்' என்று தலையசைத்து, "உத்தம ரத்தினமே! உன்னெண்ணமும் அப்படியானால் உன்னிஷ்டம்போல அப்படியே ஆகட்டும்" என்று அவள் வீட்டிலேயே யிருந்துவிட்டனன்.

# லீலாவதியின் கற்பினிலைமை
## (போஜன் சந்தேகந் தெளிதல்)

எவ்வளவு அருமையான விஷயமானாலும் இதுதானே யென்று எளிதிலெடுத்துக் காட்டி இதயம்பூரிக்கச்செய்வதிலும், அபாரமாகத் தானே சுலோகங்களைக் கொட்டி அவரவர்கள் முக கமல மலரச் செய்விப்பதிலும் இணையில்லாத கவிச்ரேஷ்டனாகிய காளிதாசனும் காவலனுடைய கோபத்திற்கு இலக்காகிக் கன்றிய முகத்தோடே 'அரசனுடைய நட்பை யின்றோடே யிழந்துவிட்டோமே!' என்ற ஏக்கத்தால் பொறுக்கென எழுந்து போய்விடவே, சிறிது நேரத்திற்குப் பிறகு லீலாவதியும் "பிராணநாதா! என்ன காரணம்? இன்றைக்கும் ஏதோ மகாகவியின்பேரில் என்றைக்கும் வராத கோபக் குறியைக் காட்டிவிட்டீர்களே! மன்னுயிர்க்குயிரே! "கவிசிரேஷ்டன் காளிதாசன்; புவிபாலன் போஜராஜன்; இவர் நட்பே நட்பு" என்று எல்லோரும் மகாவாக்கியமாக வழங்குகிறார்களே? அப்படியிருக்க அவ் வுத்தம கவியை ஊரைவிட்டு ஓடிப்போகச் சொன்னீர்களே! அப்படியும் சொல்லச் சித்த முவந்ததோ!

சு: இக்ஷோ ரக்ராத் க்ரமஸ: பர்வணி யாதா ரஸ விசேஷ: |
தத்வத் ஸஜ்ஜநமைத்ரீ; விபரீதாநாம் து விபரீதா ||

சு: சோகாராதி பரித்ராணம், ப்ரீதி விஸ்ரம்ப பாஜநம், |
கேந ரத்ந மிதம் ஸ்ருஷ்டம் மித்ர மித்ய க்ஷரத்வயம்? ||

(இ - ள்) "கரும்பு கெடையின் முனையிலிருந்து கணுவுக்குக் கணுவு எவ்விதமாய் அதிக ருசியாயிருக்குமோ அப்படியே சாதுக்களின் நட்பு. துஷ்டர்களுடைய நட்போ விபரீதமே (என்றால், கரும்பி னடியிலிருந்து கணுவுக்குக் கணு ருசி குறைவதுபோலக் குறைந்துவிடும்). சோகத்தை நீக்கக்கூடியதாய், அன்புக்குரியதாய், நம்பிக்கைக்கு இருப்பிடமாய், இரண்டே அக்ஷரங்களால் அமைந்துள்ள மித்ர நட்பு என்னும் இரத்தினம் யாரால் சிருஷ்டிக்கப்பட்டதோ?" என்றனள்.

அப்போதரசனும் நெடுமூச்செறிந்தவனாய், "அறிவிற் சிறந்து பெருமை வாய்ந்து மறுவில்லாத மன்னவர் குலத்து வந்த மாமணி விளக்கே! உள்ளதை யொளியாது சொல்லுகிறேன். "காளிதாசன் தாசிவேஷம் பூண்டு அந்தப்புரம் போந்து சொந்தமாக ராஜமகிஷி

யோடும் வார்த்தையாடுகின்றனனே" என்ற சொல் என் காதில் விழுந்ததும் அதினுண்மை யறியும்படி இன்று காலையில் எனக்குத் தலைநோய் என்று சொல்லி மகாகவியையும் வரவழைத்தேன். உன்னையும் பத்தியம் கொண்டுவரச் சொன்னேன். அப்படி வந்த போது காளிதாசன் சொன்ன உத்தரார்த்தத்தை (சுலோகத்தின் பின்பாகத்தைக் கவனித்த நீயும் மந்தகாசம் செய்தனை; அதனால் நடந்த வர்த்தமானத்தை யறிந்துகொண்டவனாய்க் காளிதாசன் பிராமணனாகையால் கொல்லாது, "என்முன் நில்லாதே! சொல்லாமல் என் நாட்டைவிட்டு ஓடிப்போ என்றேன்" என்றனன்.

இதைக் கேட்ட தேவியும், சிரித்துக்கொண்டே சொல்லுகிறாள். "ஹே பிராணநாதா! அவ்வளவு சந்தேகமா? பெருமை பெற்ற பட்டத்தரசியென்ற பெயரை வகித்த பாக்கியமு மிதற்குத்தானோ? ஹே நாதா! ஸ்திரீகளாய்ப் பிறந்தவர்களிலே சிறந்த பத்மினியாய்ச் சிரோரத்னம் போல விளங்கும் தங்களுக்கே தலை குனிந்த (மனையாளான) என்னைப்போன்ற பாக்கியசாலியு முலகி லுண்டோ? சகலகலாவிற்பன்னமுற்றுப் புவி போற்றும் புகழ்கொண்ட தங்களையே யனுபவித்த என் மனமும் இன்னொருவரை நாடவோ? ஹா! நாதா! இத் தாரா நகரத்துத் தாராக்கணம் போன்ற ஸ்திரீ ஜாதிகளெல்லாம் தத்தம் நாயகரைக் கூடும்போது தங்களை நினையாதவருமுண்டோ? அழகெலாந் திரண்ட வுருவாய், அகிலத்தவர்க்கெல்லாம் ஆநந்தத்தை விளைவிக்கும் பூரண நிலவானாலும், காரணமின்றியும் ஸ்திரீகள் எங்கே நம்மைக் கண்டு மயங்குவார்களோ வென்ற சங்கையால், பொற்குடையி னிழலிற் செல்லும் புண்ணிய புருஷராகிய தங்களைக் கூடும் பாக்கியம் பெற்ற நானா இன்னொருவரை நாடவேண்டும்? நன்றாயிருக்கிறது! நாதா இன்றைக்கும் தாங்க ளறியும்படியும், எல்லோருங் கண்டு அதிசயிக்கும்படியும், இதோ! என் கற்பின் நிலையை நிறுத்துகிறேன். அப்படி யில்லையானால், இன்றே என் பிராணனை விடுகிறேன்" என்றனள்.

அதற்கரசன் "ஹே! பிரியை! உண்மைவார்த்தையே புகன்றனை. பிரமாணத் திரயங்களில் ஒன்றால் ஒப்பற்ற உன் கற்பினிலையை உதயத்திற்கெல்லாம் காப்பாற்றிக்கொள்" என்று சொல்லிவிட்டு, உள்ளத்தி லிதுவே வாதித்துக்கொண்டிருக்கவும், உஷத்காலத்தை யெதிர்பார்த்தவனாய் எப்படியோ நித்திரை போய்விட்டனன். விழித்த கண் மூடாது வேறு வேறான விஷயங்களை மனத்

திற் கொண்டு நெடுநேரம் கண்மேற்கண் போடாதிருந்து நித்திரையிலாழ்ந்த நிருபனும் விழிதுயில் நீங்குமுன்னமே மேற்கடற் குளித்து மேருவை வலம் வரும் சூரியனும் செவ்வரி படர்ந்த கண்களையுடைய ராஜசெல்வியின் கற்பினிலையை நாட்டுவதற்கே யோடி வந்தவனைப்போல உதயகிரியில் வந்து ஒளிவிட்டுக் கதிர் பரப்பினன்.

அப்போது அரசனும் தன் அரிதுயில் நீங்கிக் காலைக்கடனை முடித்து, மூலப்பொருளின் மோனவெழுத்தின் தியானுபரணனாய் ஆலமுண்டவனடி வணங்கி, ஆசாரக்கட்டில் வந்தமர்ந்து, ஏவலாளரால் இருப்புப் பாளங்களைக் கொண்டுவரச்சொல்லிப் பழுக்கக் காய்வித்து, "ஹே, பிரியை! என்னுடைய இடது கையில் என்ன பார்த்தையா! இந்திர தனுசுக் கொப்பான வில்; வலது கரத்திலோ வலுத்த பாறைகளையும் மலைகளையும் உடைக்கக்கூடிய வச்சிராயுதம்போன்ற பாணம்; வில்லை வளைக்கின்றேன்; நணேறிடுகின்றேன்; ஏதோ உனக்குங் கற்பைக் காக்குந் திற முண்டானால் காத்துக் கொள்வாய் என்றனன்.

பத்தினி நீயே யானால் பழியொன்று மறியா யானால்
சித்தமேன் கலங்க வேண்டும்? செந்தீயிற் காயு மிந்த
பத்திகொள் பாள மீதே பலதரம் வலமே வந்தேன்
உத்தமி நீயே யென்றிவ் வுலகுளோ ரறியச் செய்வாய்.

என்றன னரச னப்போ திருந்தபே ரவையோ ரெல்லாம்
நன்றுநன் றென்ற ரந்த நரபதி யமைச்ச ரானோர்
ஒன்றுமே தேரா ராகி யோவிய மெனவே யுற்றார்
குன்றின்மேல் விளக்கே யன்ன கோமகள் குறித்து வந்தே.

தேவி அவ்வளவுக்கு முட்பட்டவளாய் அரசனையே தியானஞ் செய்து கொண்டு, ஸ்நானமாடி, வெண்பட் டுடுத்து, மகாதேஜஸ்ஸோடுங் கூடினவளாய்த், தன்குலதேவதையையுங் கோரிக் கும்பிட்டு, இருப்புப் பாளங்களி னெதிரேவந்து நின்று, சூரியனைப் பார்த்து நமஸ்காரஞ் செய்து, தொழுத கையினளாய், "ஓ ஜகத் சக்ஷுஸ்! சர்வகலாரூபி! கதிராயிரம் படைத்த கடவுளே! காவலன் கொண்ட கவலை தீரும்படிக்குக் கனல் மிதிக்க வந்த அடியாள் கருத்தும்,

சு: ஜாக்ரதி ஸ்வப்நகாலே ச ஸுஷுப்தௌ சாபிமே பதி: |
போஜ யேவ பரம் நாந்யோ மச்சித்தே பாவி நோபிந ||

விழித்தினி திருக்கும் போதும் விழியது துயிலும் போதும்
சுழுத்தியி லடங்கும் போதும் சொப்பனங் காணும் போதும்

பழுத்தநல் லறிவின் மிக்க பார்த்திபன் போஜ னல்லால்
இழுத்துமே வேமுேர் மாந்த ரேன்மனங் கோள்வ தாமோ?

என்று சொல்லி யிறைவனைத் தொழுது,

ஏறினுள் பாள மீதே யெடுத்தனள் சிரமேற் கைகள்
கூறிஞ ளரசன் முன்னே குறையொன்று மறியே னென்ருள்:
ஆறினுன் ஜலம்போ லய்ய னதவனயு மரச ஞேர்ந்தே
சீறினுன் தாதி சென்னிச் சிதைப்பனேன் றெடுத்தான் வாளை.

அறுதோழி லமைச்ச ரப்போ தடுத்தன ரரசன் றன்னை
சிறுதொழிற் பூண்ட மாதின் சென்னியைச் சிதைக்கப் போகா
வுறுதோழி லிதுவா மின்றே வூரைவிட் டகலச் சேய்வாம்
போறு போறு மரசே யென்ருர் போஜனு மாமேன் ருனே.

அப்படி "ஆம்" என்ற அரசர்க்கரசனும், தன் பட்டமகிஷியாகிய லீலாவதியும் தன்னிஷ்டம்போல இருப்புப்பாளத்தின் மேலேறி மூன்றுதரம் வலம் வந்து, யாதொரு குறைவுமின்றித் தன் கற்பை நிலைநிறுத்திக்,காவலனும் காசினியோருங் கண்டு மகிழச்செய்வித்து, அந்தப்புரம் போனவுடனே, அவ் வுத்தமியின் கற்பினிலையை யுணர்ந்து தலைகுனிந்தவனுய்த் தான் செய்த பரீக்ஷைக்காகத் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, மகா கவியை மோடனஞ் செய்ததற்காக மனஞ் சகிக்காதவனுய் வாய் விட்டு,

உத்தம கவியே யுன்வண யூரைவிட் டகல்வா யென்றேன்;
சித்தமுங் கலங்க லானேன்; சீரியோய் நீயு முன்போல்
இத்தல மடைவை யோ!என் னிதயமு மலரு மோதான்
வித்தக கவிஞ ரேறே! வேற்றவை நாடும் நீயே!

என்று சொல்லி, 'ஆகா! அபிப்பிராயமாய்ப் பழி சுமத்தி அறிவிற் சிறந்த மகாகவியை அந்நிய தேசம் செல்ல விடுத்தோமே! யாரிடத்திற் சொல்வோம்? ஆ ஈசா! இதுவும் உன் செயலோ! என்ன செய்வேன்? இன்னமும் ஒருதரம் உன்னையுங் காண்பேனே? அடாத வார்த்தைகளை அபாரமாகக் கொட்டினேனே! அவ்வளவையும் பொறுத்துச் சென்றனையே! மகா பாதகனுல் என்று லுண்டான இவ் வவமானத்தால் உன் மனம் எப்படிக் கொதித்ததோ? உன் மனத்தை யப்படி நோகச் செய்து உன்னையும் பிரிந்த நான் உயிரோடிருக்கவோ' என்று சோர்ந்து, "ஹா! காளிதாசா! கவிசிரேஷ்டா! கவிகோடிமகுடமணி!"

என்றன னரச னப்போ தேழுந்தனர் தூத ரானோர்
குன்றுசூ ழலகுங் காடுங் குவலய மெங்குந் தேடிக்

கன்றிய முகத்த ராகிக் காவலன் முன்னே போந்து
இன்றியாந் தேடிச் சென்றே னெதிருற வில்லை யென்றார்.

இதைச்செவியுற்ற போஜனும் அப்படியே மூர்ச்சைபோயினன். இப்படி அந்தப்புரத்தில் மூர்ச்சைபோன அரசனை அருகிலிருந்த லீலாவதியும் அப்படியே தாங்கிக்கொண்டு பனிநீரால் மூர்ச்சை தெளிவிக்கவும், அப்போது சிறிது கண்விழித்த அரசவள்ளலும் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு, ஆகாராதி நித்திரையும் அற்றவனாய், மகாகவியின் நாமத்தையே ஸ்மரணை பண்ணிக்கொண்டிருந்தனன்.

இப்படிச் சிலநாட் செல்லவும் புகழ்கொண்ட போஜனுடைய வித்வசபையானது காளிதாச னில்லாக் குறையால், 'இந்துவை நீங்கிய இரவுபோலும்', 'இரவி யில்லாப் பகல்போலும்'; 'தலைவனில்லாத் தலைவிபோலும்', 'வாசவனி(இந்திரன்)ல்லாச்சுதர்மைபோலும், 'பீஷ்மரில்லாக்கௌரவசேனைபோலும்' சோபிதமற் றிருந்தது.

அப்போது ஒருநா ளிரவில் அரசன் மேல் உப்பரிகையில் தன் தேவியோடு மிருக்கும்போது பூர்ணமான சந்திரமண்டலத்தையும், புன்னகையோடு விளங்கும் லீலாவதியின் முகமான சந்திர மண்டலத்தையும் நோக்கி,

சு: துளணம் அணு அணுஸா இக்லெளமுஹ சந்தஸ்ஸக்கு ஸோ எதாயேః |

(இ - ள்) "இவளுடைய முகசந்திரனுக்குச் சமத்துவத்தை அந்தச் சந்திரனும் அணுமாத்திரமே யநுசரித்து வருகின்றனன்," என்ற ஓரடியைச் செய்து மறுநாட் காலையில் சபாமண்டபத்தை யடைந்து, வித்வான்களைப் பார்த்து "ஹே! கவிகளே! இந்த ஸமஸ்யைப் பூர்த்தி செய்யுங்கள்" என்றனன். அப்போது சபையிலுள்ளார்க்கு ஒன்றுந் தோன்றாது விழிக்கவே, அரசனும் "நீங்களிதைப் பூர்த்தி செய்யாத பக்ஷத்தில் என் பட்டணத்தில் எவ்வளவு மிருக்கப்போகாது" என்னவும், "அக் கவிகளெலலாம் மனந் திடுக்கிட்டுத் தங்கள் தங்கள் மனை புகுந்து எவ்வளவோ சிந்தித்தும் அதன் உட்கருத்து ஒன்றும் ஏற்படாமல் 'என்ன செய்வோம்,என்று ஏங்கி, எல்லோரும் ஒன்று கூடிப் பாணகவியை யனுப்ப, அவனும் மன்னவன் சபைக்கு வந்து, "தேவ ரளித்த ஸமஸ்யைப் பூர்த்திசெய்ய எட்டுநாள் தவணை கொடும்; ஒன்பதாம் நாள் காலையில் பூர்த்தி செய்கின்றோம்; அப்படிச் செய்யாமற்போனால் நாங்களே

ஊரைவிட் டோடிப்போகின்றோம்' என்று பண்டிதர்கள் உம்க்குச் சொல்லும்படி யென்னை யனுப்பினார்கள்'' என்றனன்.

இறைவனும் "அப்படியேசெய்யுங்கள்,'' என்றனன். பாணனும் அதை மற்றவர்களுக்குத் தெரிவிக்கவும், எல்லோரும் அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தனர். அப்படி அரசனளித்த திவசங்களில் ஏழு திவசங்கள் சென்றுபோகவும், எட்டாம்நாள் இராத்திரி வரவே, இவர்கள் எவ்வளவோ வருந்தியும் சுலோகத்தின் கருத்து எட்டாமற் போகவே, என்ன செய்வார்கள் பாவம்! வித்வரத்தினத்தை வேறுபடுத்திய வினைவலி வாட்டவும், வேறு வகை தோன்றாத வித்துவக் கூட்டத்திலே ஒருவனான பாணகவியும், "ஐயோ! நம்முடைய அகம் பாவக்கொழுப்பல்லவா! அற்பவித்தையின்மதமல்லவா! அரசனளிக்கும் அபாரமான திரவியச்செறுக்கல்லவா! கவீந்த்ரனைக் காவலன் சபையைவிட்டு அகலச் செய்வித்தது. சீரானவிடத்தில் (கேட்கும் கேள்வி சுலபமானால்) நாமெல்லாஞ் சிறந்த கவிகள்தான். சீர் கெட்ட விடத்தில் (கஷ்டமான பாகம் வந்தபோது) அவன் ஒருவனல்லவோ கவி. அவனைத் துரத்திவிட்டு நாம் அடைந்த பெருமை என்ன! அவன் மாத்திரம் இப்போது இங்கிருந்தால் நமக்கேன் இந்த அவஸ்தை! முன்நாம் அவனைத் துரத்தியடிக்க யத்தனித்ததின் பயனை நாமே இப்போது அனுபவிக்கின்றோம்'' என்று,

சு: ஸாமாந்ய விப்ரத்வேஷே ச குலநாசோபவேத் கில: |
உமாரூபஸ்ய வித்வேஷ நாச: கவிகுலஸ்யஹி ||

(இ-ள்) "சாமானிய பிராமணத்வேஷமே குலநாசத்தைச் செய்யும்; அதிலும் தேவிசொரூபனாகிய மகாகவியின் விசேஷத்வேஷத்தால் கவிகுலம் நாசமாகக் கேட்பானேன்!'' என்று வியாகூலித்துச் சொல்லினன். அப்போது ஆங்கிருந்த மயூரகவி முதலானவர்களெல்லோரும் கலங்கிக்க, சிலர் அதைத் தடுத்துச் சமாதானம் பண்ணி அரசனுக்கிட்ட அவதி நாட்களும் இன்றோடே முடிந்துவிடுகிறது. மகாகவி காளிதாசனைத் தவிர மற்றவர் யாவர் நம்மவரில் இச் ஸமஸ்யைப் பூர்த்திசெய்யக்கூடிய சாமர்த்திய முடையவர்?

---

சு: ஸங்க்ராமேஷு படேந்த்ராணும் கவீநாம் கவிமண்டலே, |
தீப்திர்வா, தீப்திஹாநிர்வா, முஹோர்த்தே நைவ ஜாயதே.

(இ - ள்) "யுத்த முனையிலே சேவகர்களுக்கும், கவிப்ருந்தத்திலே கவிகளுக்கு முண்டாகக்கூடும் வெற்றி தோல்விகள் (ஜயாபஜயங்கள்) ஒரு முகூர்த்தத்திலேயே யாம். இனி நீங்களு மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், அரசாக்கினையால் நமக்கு அவசியம் ஆபத்தை விளைவிக்கக்கூடிய ராஜகார்யாரிகளின் கோபத்திற்கு இலக்காகாமல் ஆள் மீறுவதே உத்தமம். இப்படிச் செய்யாவிட்டால் காலைப் பொழுதிலேயே நாமெல்லோரும் தேகமாத்திரம் நம்முடையதாய்க் கட்டின உடையும் அவர்கள் வசமாக வெறுங் கையோடே வெளியே போகும்படியாகும்" என்றதைக் கேட்ட மற்றவர்களெல்லாம் அப்படியே செய்ய நிச்சயித்து, அந்த க்ஷணமே தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்து, அவரவர்களுக்குரிய ஆடையாபரணங்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும், கையிருப்புகளையும், எருதுகள் பூட்டியவண்டிகளில் எற்றிக்கொண்டு பிரயாணமாகி, அந்த அர்த்தராத்திரியிலேயே புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில், விலாசவதியின் உத்யாநவனத்தின் ஓரமாய் வந்தனர். அப்போதங்கே உலாவிக்கொண்டிருந்த மகா கவியும் அவ் வழியாய்ச் செல்லு மிப் புலவர்கள் வார்த்தையைக் கவனித்து, அவ் விலாசவதியின் சேடியை (வேலைக்காரியை)ப் பார்த்து, "அடி ! பிரியை! இவ் விரவில் இவ்வழியாய்ச் செல்லு மிவர்கள் யாவர்?' என்பதை நீ போய்ப் பார்த்துவா!" என்று சொல்லவும், அவள் அப்படியே போய்ப் பார்த்துவந்து,

சு: ஏகேந ராஜ ஹம்ஸேந யாஸோபாஸரஸோபவத் |
ந ஸா பக ஸகஸ்ரேண பரித ஸ்தீரவாஸிநா ||

(இ - ள்) "ஐயா! ஒரு ராஜ ஹம்ஸமானது வந்து தங்கியதால் தடாகமானது எவ்வளவு சோபிதங் கொள்ளுமோ அவ்வளவு ரமணீயத்தை ஆயிரங்கொக்குகள் வந்து தங்குவதால் கொள்ளுமோ?" பாண மயூராதிப் பிரமுகாளெல்லாம் கால்நடையாய்ச் செல்லுகின்றார்கள். இதிற் சந்தேகமா?" என்னவே, காளிதாசனும், "ஹே! பிரியை! வேகமாய்ப் போய், பறந்துபோகும் இவ் வந்தணர்களை யான் ரக்ஷிக்கும்படி, என்னுடைகளைக் கொண்டுவா!" என்று கூறினன்.

# காளிதாசன் வித்துவான்களின் இடர் தீர்த்தல்

சு: கிம் பௌருஷம் ரக்ஷதி யேந நார்த்தாந் |
கிம் வாதநம், நார்திஜநாய யத் ஸ்யாத்? ||
ஸாகா க்ரியாயா ந ஹிதா நு பத்தா? |
கிம் ஜீவிதம் ஸாதுவாரோதி யத்வை? ||

(இ-ள்) "வருந்துகிறவர்களை ரக்ஷிக்காத வைராக்கியம் என்ன? யாசிப்பவர்க்கு அளிப்பதற்கில்லாத தனமிருந் தென்ன? பலபேர்க்கும் இத முண்டாகும்படிச் செய்யாதவன் செய்கை யென்ன? ஸாதுக்களை விரோதிப்பவன் வாழ்நாளென்ன? இவையெல்லாம் பயனற்றவாம்."

என்று சொல்லிக்கொண்டே அவள் கொண்டுவந்த வஸ்திரங்களால் தானொரு சாரணனைப்போ லுடுத்திக்கொண்டு, கட்கதாரியாய் உத்தரபாகமாக அரைகுரோசதூரம் (ஒருநாழிவழி) முன்னே சென்று, அவர்களுக்கு எதிர்முகமாக வந்து வந்தனம், செய்து, "ஜயம் பெறுவீராக!" என்று கூறிக், "கலாசமுத்திரம் போன்றவர்களே! மகத்தான கீர்த்தி பெற்றவர்களே! புகழ்கொண்ட போஜன் சபையிலே பிதாமகனைப்போல விளங்கும் நீங்கள் இப்போது எங்குச் செல்கின்றீர்கள்? நீங்களெல்லாம் க்ஷேமந்தானா? உங்களரசன் க்ஷேமமா? நானோ காசி தேசத்திலிருந்து வருகின்றேன். எனக்குத் தனத்தின்மேல் ஆசை யுண்டு. உங்கள் அரசனைப் பார்க்கவேண்டு மென்று போகிறேன்" என்றனன்.

அதைக் கேட்ட அவர்களெல்லோரும் பரிகாசம் செய்து கொண்டே போகையில், அவர்களிலொருவன் காளிதாசனைச் சாரணனாகவே எண்ணிக்கொண்டு, "ஓ! சாரணா! இவர்கள் விஷயம் பின்னால் எப்படியும் வெளிப்படத்தான் போகிறது. அதை நான் இப்போதே உனக்குச் சொல்லுகிறேன். அரசன் கொடுத்த ஒரு ஸமஸ்யை பூரிக்கமாட்டாதவர்களாய், இம் மகாவித்துவான்களெல்லோரும் மன்னவன் கோபத்திற் கிலக்காகிப் பயந்து, பரதேசம் போகின்றார்கள். இதுதான் சங்கதி" என்றனன்.

அதற்குச் சாரணவேஷதாரி, "அதென்ன ஸமஸ்யை?" என்ன, அதற்கு அப்புலவன் அதை யெடுத்துச் சொல்ல, "இதுதானா? இந்தச் சுலோகவடி கூடார்த்தமா (பொருள் மறைந்து கிடப்பதாய்) யிருக்கிறபடியால், இதரர்களுக்கு அவ்வளவெளிதில்

பொருள்விளங்காது. பூரணநிலவைப் பார்த்துப் போஜன் சொன்னதாக ஏற்படுகிறது. இதற்கு உத்தரார்த்தம் நான் சொல்லப்போகிற இதுதான்" என்று,

சு: அணு இதி பம்ண யதி; கஹம் அணுநிதி தஸ்ஸப்படி படி சந்தஸ்ஸ ||

(இ - ள்) "அணுமாத்திரமென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது; அந்த அணுமாத்திரத்தைப் பிரதமை சந்திரன் அநுசரிப்பதெப்படி?" என்று எடுத்துச் சொல்லினன். இதைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியங்கொண்டு அப்படியே மெய்ம்மறந்தவரானார்கள். சாரணாய் வந்த காளிதாசனும் அவர்களுக்கு வந்தனம் செய்து விடைகொண்டு போய்விட்டனன்.

பிறகு அவர்களெல்லோரும்: "ஆஹா! நம்மைக் காக்கும்படியல்லவோ சாக்ஷாத் சரஸ்வதியே இப்படிப் புருஷரூபமாய்ச் சகளீகரித்து வந்தனள்போலும். இப்போதிங்கு நடந்தவைகளை யார் அறியப்போகிறார்கள்? ஆகையால், இப்போதே நாம் திரும்பி வீட்டுக்கு போய்ப் பண்டங்களை யிறக்கிவிட்டு உதயத்திற்கெல்லாம் அரசன் சபாமண்டபத்தை யடைவோம். அப்படியில்லாவிட்டால் சாரணன் முந்திக்கொள்வான்" என்று தீர்மானித்துக்கொண்டு, அவரவர்கள் வீட்டுக்குத் திரும்பிச் சென்று, விடிந்தவுடனே ராஜசபையை யடைந்து, அரசனை யாசிர்வதித்து, அவரவர் ஆசனங்களில் அமரவும், அப்போது அவர்களில் பாணகவி எழுந்து, "தேவ! சர்வகலா சம்பூரணனை உன்னால் உதகரித்ததை (சொல்லியதை) உள்ளபடியே யறிந்து சொல்ல மகாதேவனுக்கே யன்றி மற்றெவர்க்குத்தான் சாத்தியமாகும்? ஆகிலும், என்னறிவிற் கெட்டியவாறே உரைக்கின்றேன்."

சு: துலணம் அணு அணுஸர இக்லெள முஹ சந்தஸ்ஸ ஸோக்கு எதாயே |
அணு இதி பம்ண யதிகஹம் அணுநிதி தஸ்ஸ ப்படி படி சந்தஸ்ஸ ||

(இ - ள்) "முகசந்திரனுடைய சோபிதத்தின் சாமானியத்தை அணுமாத்திரம் அநுசரிப்பன் சந்திரன்; அணுமாத்திரம் அநுசரிப்பன் என்று வர்ணிக்கப்படுகிறது. சந்திரனுக்குப் பாட்யமியிலே எப்படிச் சமானத்துவ முண்டாம்?"

என்று சொல்லக் கேட்ட அரசன் அந்தப் பாகம் தன் கருத்திற் கிசைந்திருக்கக் கண்டு களிப்புற்றுக் 'காளிதாசன் எப்படியும் தன்னூரிலேயேதான் இருக்கின்றான்' என்பதை யறிந்துகொண்டு,

'உபாயத்தால் சர்வமும்சாத்தியமாம்' என்று அந்தப் பாணகவிக்குப் பதினைந்து லக்ஷம் வராகனைத் தானமளித்து, கவிப்ருந்தத்தைச் சந்தோஷத்தால் நன்கு மதித்தவன்போல் உபசரித்து, விடை கொடுக்கவும், அவரவர்கள் விடைகொண்டு சென்றனர்.

அரசனும் காவலாளரை யழைத்து, "நீங்கள் இவர்களுக்குப் பின்னே சென்று இவர்களில் யாதேனும் கலகமானால், இவர்களெல்லோரையும் அப்படியே கொண்டுவாருங்கள்" என்றனன். அவ் வித்துவான்களெல்லோரும் பாணனொருவனே அரசனளித்த அவ்வளவு திரவியத்தையுந் தன் வீட்டுக்குக் கொண்டுபோவதைப் பார்த்து வயிற்றெரிச்சல் கொண்டனர்.

அவர்களில் சிலர் கோபதீப்தராய் "இதை யரசனுக்கு அறிவிப்போம்" என்று அந்தப்புரம் போந்து நடந்தவைகளை யெல்லாம் ஒன்று தவறாம லொப்புவித்தனர். அதைக் கேட்ட அரசனும் காளிதாசன் தன் நகரத்திலேயே இருக்கிறதாக ஊகித்து அவ்வித்துவான்களெல்லா மொன்று கூடிய இடத்திற்குச் சென்று அங்கிருந்து போயிருக்கும் ஒற்றையடிப்பாதையைக் கள்ளர்களின் காற்சுவட்டைக் கண்டு பிடிக்குஞ் சேவகர்களுக்குக்காட்டித் "தனிப் பிரிந்து போயிருக்கு மிப்பாதை வழியாய்ப் போனவன் பாத அடையாளமும் நன்றாய் விளங்குகிறது. இதைக்கொண்டு அவனைக் கண்டு பிடித்து வாருங்கள்" என்று கூறித் தன் அரண்மனை போய்ச் சேர்ந்தனன்.

## போஜன் காளிதாசனைக் காணல்

பிறகு இச் சேவகர்கள் அவ்வழியே சென்று தேடியும் எங்குங் காணாமல் விசனத்தோடே சிந்தித்திருக்கையில், மாலைக் காலமும் சமீபித்தது. அப்போது ஒரு வேலைக்காரியும் வாரறுந்த பாதுகை யொன்றைக் கையி லேந்தி அவ் வழியாய்ப் போகக் கண்டு, அவளை யணுகி, நல்ல வார்த்தையால் அதைவாங்கித் தாங்கள் கொண்டுபோயிருந்த காற்சுவட்டின் அளவுக்கு ஒத்திருக்கக் கண்டு மனக்களிப்புற்று, அதைத் திரும்பவும் அவளிடம் கொடுத்துவிட்டு, அவளுக்குத் தெரியாமலே அவளைப் பின்தொடர்ந்து அவள் விலாசவதியின் வீட்டில் நுழையவும், தாங்கள் தேடிப்போனவன் அவ் வீட்டிலிருக்கிறதாக அறிந்துகொண்டு, அதை யரசனுக்குத் தெரிவித்தனர்.

அதைக் கேட்ட அரசனும் ஆநந்த வாரியி லாழ்ந்தவனாய்ப் புரஜனங்களு மமைச்சர்களும் புடைசூழும்படிப் பாதசாரியாய் விலாசவதியின் வீட்டுக்கு வருமுன்னமே ராஜகார்பாரிகளும் சேவகர்களும் அவ் வீட்டின் முன்னணியில் வந்து சூழ்ந்தனர்.

இவ் அரவத்தால் காளிதாசனும் பலகணி (சன்னல்) வழியாயெட்டிப் பார்த்து, ஏராளமான ஜனங்களோடே போஜன் வருவதைக் கண்டு மனம் பூரித்து, விலாசவதியின் மனநிலை யறியும்படி, "ஹே! இன்பரஸகி! என்ன ஆபத்து நமக்கு! கோபத்தைக் கொண்ட கோமகன் ஆணையால் ஆபத்தை விளைவிக்கும்படி அரசசேவகரெல்லோரும் நம் முன்னணியில் வந்து கூடினரே! ஆ! பிரியை! உனக்கென்ன கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன்! பார்த்தையா!" என்னவும், விலாசவதியும், சுக கவீ!

சு: பஸ்திதே விப்லவ ஏவ பும்ஸாம் ஸமஸ்தபாவ: பரிமீயதேஸ: |
அவாதி வாயௌநஹி தூலராஸேர்கிரேஸ் சகஸ் சித் ப்ரதியாதிபேத: ||

சு: மித்ர ஸ்வஜந பந்தூநாம் புத்தேர் வித்தஸ்ய சாத்மந: |
ஆயாந் நிகஷபாஷாணே ஜநோஜாநாதி ஸாரதாம் ||

சு: அப்ரார்திதாநி து:காநீயதை வாயாந்தி தேஹிந: |
ஸுகாநி ச ததா மாந்யே தைந்ய மத்ராதி ரிச்யதே ||

(இ-ள்) "ஆபத்து வந்தபோதே அதன் மூலமாக மனிதர்களின் சிநேகத்தின் அளவை யிவ்வளவென்று தெரிந்துகொள்ளலாம். காற்று அடிக்காமற்போனால் பஞ்சுப்பொதிக்கும் பர்வதத்திற்கும் ஒருவித வேறுபாடு முண்டாகாதல்லவா? மேலும், மித்திரர்-சொந்தமானவர் - சுற்றத்தார் ஆகிய இவர்களுடைய பேரறிவையும் பெருஞ்செல்வத்தையும் அறிந்துகொள்வதற்கு அடுத்தவர்களுக்கு வரும் ஆபத்தே உரைகல்லாகும். உலகத்திலே ஆன்மாக்கள் விரும்பி எதிர்பார்க்காமலிருக்கவும் சுகமானது தானாகவே யடைகிறதுபோலத் துக்கமும் வந்து சேருகிறது. அதனால் உமக்கேன் சிந்தனை? உத்தம கவியே! உள்ளபடியே சொல்லுகிறேன். ஒருவேளை யப்படி அரசனால் உனக்கு மொரு துன்பம் வருமாயின், நானும் உயிரோடிருக்கவா! இந்தத் தாசிக் கூட்டங்களோடே இப்படியே வானமளாவிய பெருந் தீயில் வீழ்ந்து பிராணனை விடுவது நிச்சயம்" என்னவும், காளிதாசனும், "ஹே இன்ப சகி! இப்படி நினையாதே. உன் மனவுறுதியைச் சோதிக்குமாறு இப்படிச் சொன்னேன். கவலை யுனக்கேன்? உள்ளதைச் சொல்லுகிறேன்.

போஜனே புத்திமான்; என்னிடத்திலே மிகுந்த ஆசையையும் பக்தியையு முடையவன்; மகா வுத்தமன். ஒருபோதும் எனக்குத் தீங்கு நினையான். இதனுண்மையை யிப்போதே நீ யறியப்போகின்றாய். இதோ! போஜன் வருகின்றான். இன்பமேற் கொண்டவனாய் என்னையு மிறுகத் தழுவிக்கொண்டு இரு கண்களிலும் ஆநந்தக் கண்ணீர் பெருகவும், என்னடிகளில் விழுந்து தாராளமாய்ச் சேவித்துக்கொள்ளப் போகின்றான். ஆ! என் மனோரதமே! அவனைப்போல என்னுள்ள மறிந்தவர் இவ் அவனியிலே யாரிருக்கப் போகின்றார்கள்?" என்றிப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே போஜனும் வந்து விலாசவதியின் மாளிகையினுட் புகுந்து, உள்ளபடியே தன்னைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கும் உத்தமகவியின் உள்ளத்திற்கும் உவமை காணாது அப்படியே கட்டிக்கொண்டு ஆநந்தத்தினால் மெய்ம் மறந்தவனாய் அநேக விதமாய்ப் புகழ்ந்து கொண்டாடி, அவன் பாதங்களில் விழுந்து பணிந்து எழுந்து தலை குனிந்தவனாய்,

சு: கச்சத ஸ்திஷ்டதோ வாபி ஜாக்ரத ஸ்ஸ்வபதோபிவா |
மாபூந்மந: கதாசிந்மே த்வயா விரஹிதம் கவே: ||

(இ-ள்) "ஹே! மகா கவி! நானடக்கும் போதும், நடைதளர்ந்து உட்காரும்போதும், படுக்கும்போதும், அப்படிப் படுத்துறங்கும்போதும், அப்படி யுறங்கிக் கனவுகாணும்போதும், காடநித்திரை கொள்ளும்போதும், உன்னைக் கணமேனும் மறந்தேனா?" என்று சொல்லி, வெட்கத்தால் தன் தலைகுனிந்திருக்கும் அம் மகா கவியின் முகத்தை யெடுத்துப் பார்க்கச் செய்து, ஓ! கவி நாயகமே! அறவிந்தத்துறை மகளின் ஆஸ்தானமே! தாசனைப் போலத் துறத்தப்பட்டாலும் ராஜமார்க்கத்தில் செல்லு முனக்கு இதனால் இதரர்களாலே என்ன அவமானம்?'பக்ஷியைப்பஞ்சரத்தில் (கூட்டில்) வைத்துக் காப்பதுபோல' உன்னையும் பாதுகாத்துவந்த இவ் விலாசவதியின் பாக்கியமே பாக்கியம்!" என்று சொல்லித் தாரைதாரையாய்க் காளிதாசன் கண்களினின்றும் புறப்படுங் கண்ணீரைத் தன் கைத்தாமரையால் துடைத்து, அநியாயமாய் மகா கவியைத் துறத்திவிட்டு இத்தனை நாள் கஷ்டப்பட்டோமே, கஷ்டப்படுத்திவைத்தோமே' என்ற பாதையால் துக்கம் ஒரு பக்கமும், 'இனியும் பார்க்கப்போகிறோமா' என்றிருந்த கவீந்திரனை மறுபடியுங் கண்டதா லுண்டான பேராநந்தம் ஒருபக்கமும் நிறைந்த மன

தோடே அம் மகாகவியைத் தான் மறுபடியு மடைந்ததற்காக ஒவ்வொரு பிராமணனுக்கும் லக்ஷக்கணக்காய்ப் பொன்னைத் தானம் செய்து தன் பட்டத்துக் குதிரையின்பேரில் அவனையு மூட்கார வைத்துக்கொண்டு பரிவாரங்களோடே அரண்மனை யடைந்தனன்.

---

## தோற் கமண்டலம்

இப்படிச் சிலநாட் செல்லவும் ஒருநாள் வேந்தன் உத்யாந வனத்துட் செல்லுகையில், தோற் கமண்டலத்தைக் கையி லெடுத்துக்கொண்டு வரும் ஓரந்தணனை இடையிற் கண்டு, "ஐயனே! தோற்பாத்திரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஏன்திரிகின்றாய்?" என்ன, வேதியன், முக தேஜஸ்ஸாலும், கம்பீரமான நய வசனங்களாலும் தன்னைக் கேட்டவன் தராதிபன் என்று ஊகித்துக்கொண்டு, "தேவ! கொடையாற் சிறந்த போஜன் உலகத்தை யாளுகிறதில், செம்பு இரும்பு இவைகள் கிடைப்பதருமை. இதனாலன்றோ தோற்பாத்திரம் சுமக்கலாயிற்று" என்றனன்.

அதற்கரசனும்,"போஜனுளுகையில் அவைகள் கிடையாமைக்குக் காரணம் என்ன?" என்றனன். அப்போது பிராமணனும், "பகைவர்களுக்கு விலங்கிடுவதால் இரும்பும், ஆஸ்ரயித்தவர்களுக்குச் சாசனபத்திரம் எழுதிக்கொடுப்பதால் செம்பும் ஆகிய இரண்டுமே போஜராஜனுடைய ராஜ்யத்திலே கிடையாதனவாம்" என்னுங் கருத்தடங்கிய,

சு: அஸ்ய ஸ்ரீபோஜராஜஸ்ய த்வயமேவ ஸுதுர்லபம் |
ஸத்ருணாம் ஸ்ருங்கலைர்லோகம் தாம்ரம் ஸாஸன பத்ரகை: ||

என்ற இந்தச் சுலோகத்தைச் சொன்னதும் அரசன் அகமகிழ்ந்தவனாய் அக்ஷரத்துக்கு லக்ஷம் பொன்னளித்தனன்.

இதற்குப் பிறகு ஒருநாள் வாயிற் காப்போன் அரசனிடம் வந்து "சுவாமி! பராக்கு! தூரதேசத்திலிருந்து ஓர் வித்வான் தன் பத்தினியோடும், புத்திரனோடும், புத்திரனுடைய பத்தினியோடும்—குடும்ப சகிதமாய் வாயிலில் வந்து காத்துக்கொண்டிருக்கிறான்" என்ன, காவலனும், 'ஆ! கலைவாணியின் கருணை வீக்ஷண்யம் மிகச் சிறப்புற்றதே,' என்ன, அப்போது யானைச்சாலை காப்போன் வந்து நமஸ்கரித்து, "போஜேந்திரா! ஸிம்ஹளதேசத்து அதிபதி நூற்றிரு

பத்தைந்து யானைகளேயும் பதினறு ஜீவரத்தினங்களையும் அனுப்பி யிருக்கின்ருர்" என்ன, அருகிலிருந்த பாணகவி,

சு: ஸ்திதிः கவீநா மிவகுஞ் சராணும் ஸ்வ மந்திரம் வாந்ருப மந்திரம்வா |
க்ருஹே க்ருஹே கிம் பக்ஷகா யிவை தேபவந்தி பூபால விபூஷிதாங்காः ||

(இ - ள்) "கவிகளி னிலைமை கரிகளி னிலைமை போன்றதே யாம். அவைகள் தத்தம்மிடத்திலாவது தராதிபனிடத்திலாவது வசிக்கக் கூடியவைகளே யன்றி நாய்களைப்போல ஒவ்வொரு வீட்டின் வாயிலிடத்தும் நிற்கக்கூடியவையல்ல" என்ன, அதைக் கேட்ட போஜன் கஜங்களைப் பார்வையிட வெளியில் வந்து நிற்கையில், சோளபண்டிதன் அவ் வித்துவக் குடும்பத்தைப் பார்த்து "நீங்கள் அரசனைப் பார்க்க முடியவில்லையே; இதோ நான் போகிறேன் பாருங்கள்" என்று மேன்மாடிக்கு வந்து, செறுக்கினல் "அரச! யான் தடையின்றி மேன்மாடிக்கு வந்துவிட்டேன்; அவ் வித்வக் குடும்பமோ வெளிவாயிலிலேயே நின்றுகொண்டிருக்கிறது" என்றனன்.

போஜன் அவனுடைய மமதையைக் கண்டு அவனை வெளிப் படுத்திவிட்டு, யோசித்துக்கொண் டிருக்கும்போது, தண்டேலன் என்னும் வித்வான் இராஜ சபைக்கு வந்து அரசனுக்கு ஆசிகள் கூற, அரசனும், "சுக கவி! நீர் வசிப்பதெங்கே?" என்ன, கவியும், "தரித்திரம் என்னும் செடிக்கு அரிவாளாகிய வித்தையானது வசிக்கும் க்ஷேத்திரம் (காசிக்ஷேத்திரம்) எதுவோ அதில்தான் ஸ்ரீமந்தனே! மாளவபூபதி! யான் வசிப்பது" என்றனன். அதற்கரசன் அவனுக்கு ஏழு யானைகளைத் தந்தனன்.

## பிராமணச் சிறுவன்

அதன்பிறகு பும் பும் என்னும் சப்தத்தால் அவ் வரசசபை நடுங்கும்படி வந்த ஒரு பிராமணச் சிறுவன் அரசன்முன் போந்து, "உன்னுடைய ஈகை (தானம்)என்னும் சமுத்திரத்திலே தாரித்திரியம் முழுகிப்போகவும், அதற்குக் கைகொடுத்துத் தூக்குவதற்கு யானைக்கு அதிபனுலும் (அவன் ஏறியிருக்கும்) யானையினுலும் கூட வில்லையே" என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லினன். அவனுக்கு அரசன் முப்பது கஜங்களை யளித்தனன்.

பிறகு ஒருநாள் பத்தினிசமேதனுய் வந்த அந்தகக்கவி அரசனுக்கு ஆசிகள் கூறி,

"கணக்கில்லாமல் கஜங்களைப் போஜன் கவிகளுக்கெல்லாம் தானம் செய்வதைப்பார்த்த பார்வதியும் அந்த கஜேந்த்ர முகத்தையுடைய தன்புத்திரனையும் எங்கே போஜன் தானமாக வழங்கிவிடுவனே என்னும் சங்கையால் ரக்ஷிப்பின் பொருட்டுத் தன் குழந்தையை யடிக்கடிப் பார்க்கின்ருள்" என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லினன். அதற்கு அரசன் எழு யானைகளைத் தத்தம் செய்தனன்.

பின்பு அவ் வித்வக் குடும்பம் தன்னெதிரில் வரவும், அதின் தலைவனை நோக்கி,

சு: க்ரியாஸித்திஃ ஸத்வே பவதி மஹதாம் நோபகரணே ||

(இ - ள்) "பெரியோர்களுக்குக் காரியசித்தி மகிமையினு லுண்டாகிறதே யன்றிக் கருவியினு லன்று" என்னும் ஓரடியைக் கொடுத்து "இதைப் பூர்த்தி செய்யும்" என்ன,

சு: கடோ ஜன்மஸ்தாநம் ம்ருகபரிஜநோ பூர்ஜவசனோ |
வநேவாஸஃ கந்தாதிக மசந மேவம்விதகுணஃ ||
அகஸ்த்யஃ பாதோதிதம் ய தக்ருத கராம்போஜகுஹரே |
க்ரியாஸித்திஃ ஸத்வே பவதி மகதாம் நோபகரணே ||

(இ - ள்) "ஜன்மஸ்தானம் மட்குடம்; விலங்குகள் பரிஜனம்; மரவுரி உடை; வாசஸ்தானம் வனம்; கந்தமூல பலங்கள் ஆகாரம்; இத்தகைய ஸ்திதியையுடைய அகஸ்தியர் கடலை உள்ளங்கையிற் கொண்டு உண்டாரென்ருல், காரியசித்தி பெரியோர்களுக்கு மகிமையினு லுண்டாகிறதே யன்றி கருவியினுலல்ல" என்று பூரித்தனன்.

அதைக் கேட்ட அரசன் விலையேறப்பெற்ற அந்தப் பதினுறு மணிகளையும் அவ்வேதியனுக் களித்தனன். பிறகு அவ்வந்தனன் மனைவியைப் பார்த்து "அம்மணீ! நீரும் இவ்வடியை "பூரியும்" என்ன, அதற்கவளும்,

சு: ரத ஸ்யைகம் சக்ரம், புஜகயமிதாஃ ஸப்த துரகா |
நிராலம்போ மார்க, ஸ்சரணவிகலஃ ஸாரதி ரபி ||
ரவி ர்யா த்யே வாந்தம் ப்ரதிதிந மபாரஸ்ய நபஸஃ |
க்ரியாஸித்திஃ ஸத்வே பவதி மஹதாம்; நோபகரணேஃ ||

(இ - ள்) "தேருக்குச் சக்கரமோ ஒன்று; பாம்பைக் கடிவாள மாகக் கொண்ட குதிரைகளோ ஏழு; வழியோ அந்தரம்; தேர்ப் பாகனோ காலில்லாத முடவன். இந்த ஸ்திதியையுடைய சூரியன் பிரதிதினமும் எல்லையில்லாத ஆகாயத்தின் அந்தத்தை வலம்வரு கின்றனனென்றால், பெரியோர்களுக்குக் காரிய சித்தி மகிமையினு லுண்டாகிறதேயன்றிக் கருவியா லன்று" என்றனள்.

அதைக்கேட்ட அரசன் அவ்வந்தண மாதுக்கு ஏழு ரதங்களை யும் ஏழு யானைகளையு மளித்து, அதன்மேல் பிராமணச் சிறுவனை நோக்கி, "நீயும் அப்படியே பூரிப்பாய்" என்னவும், அவன்,

சு: விஜேதவ்யா லங்கா, சரணதரணீயோ ஜலநிதி |
ர்விபக்ஷ: பௌலஸ்த்யோ ரணபுவி, ஸஹாயா ஸ்ச கபய: ||

பதாதிர் மர்த்யோஸௌ, ஸகல மவதீ த்ராக்ஷஸகுலம் |
க்ரியாஸித்தி: ஸத்வே பவதி மஹதாம்; நோபகரணே: ||

(இ-ள்) "ஜெயிக்க வேண்டியதோ இலங்கை; காலால் தாண்ட வேண்டியதோ ஆழ்ந்த சமுத்திரம்; எதிரியோ இராவணன் (புலஸ் தியன்பேரன்); ரணகளத்தில் சகாயம்செய்பவர்களோ வானரங்கள்; தானோ பாதசாரி; (அதோடு) மனிதஜன்மம். இப்படிப்பட்ட ஸ்ரீரகு நந்தனன் இராக்ஷசகுலத்தை வேரறுத்தனனென்றால், பெரியோர் களுக்குக் காரியசித்தி மகிமையினாலேயேயன்றிக் கருவியினாலன்று"

என்று சொல்ல, அரசன் அவனுக்குப் பதினெட்டு யானைகளைக் கொடுத்தனன். பிறகு அரசன் அவ் விப்பிரகுமாரன் மனைவியைப் பார்த்து, "அம்மா! நீயும் இதைப் பூர்த்திசெய்?" என்ன, அப் பெண் மணியும், "தேவ! கேளும்!"

சு: தநு: பௌஷ்பம், மௌர்வீ மதுகரமயீ, சஞ்சலத்ருஸாம் |
த்ருசாம் கோணோ பாண: ஸுஹ்ருதபி ஜடாத்மா ஹிமகர: ||

ஸ்வயம் சைகோ நங்க: ஸகல்புவநம் வ்யாகுலயதி |
க்ரியாஸித்தி: ஸத்வேபவதி மஹதாம்; நோபகரணே ||

(இ - ள்) "வில்லோ புஷ்பம்; வில் நாரியோ வண்டின் கோர்வை; பாணமோ மாதர்களின் கடைக்கண் நோக்கம்; துணைவ னோ மந்த மதியையுடைய சந்திரன்; தானோ தனியன்; தேகமில் லாதவன். இந்த ஸ்திதியிலிருந்தும் மன்மதன் புவனங்களை யெல் லாங் கலக்கிவிடுகிறான். ஆகையால், பெரியோர்களுக்கு மகிமையினு லேயேயன்றிக் கருவியினு லில்லை" என்று பூரிக்க, அரசன் மகிழ்ந்து

அவளுக்கு அரசபத்தினியின் ஆபரணங்களை யெல்லாங் கழற்றிக் கொடுத்ததோடு விலை யில்லாத ரத்தினவிராசிகளையும் வழங்கினன்.

## சீமந்த கவி

பிறகு ஒருநாள் சீமந்தகவி வந்து அரசனை ஆசீர்வதித்து, "ஓ மார்க்கமே! உன் தூரத்தைக் குறை; கதிரவனே! உன் கடூரத்தை விடு; ஓ சீமந்தனே! விந்த்யமே! கடாக்ஷி! இப்போதே தயவுசெய்து என்னருகே வா! ஏனென்றால், இப்படித் தூரமானது (நீண்டு காட்டுவதால்) ஓடுகிறதினாலே ஆயாசமடைந்த தங்கள் பிரிய நாயகிகளைப் பார்த்து, ஸ்ரீ போஜபூபதி! உன்னுடைய சத்துருக்கள் தினந்தோறும் முறையிட்டு மூர்ச்சையாகின்றனர்" என்றனன்.

அப்போதொரு சுவர்னவேலைசெய்வோன்: ஓரங்களிலெல்லாம் பத்மராக மிழைத்த சுவர்னமய போஜனபாத்திரத்தை அரசன் முன்னே கொண்டுவந்து வைக்க, அப்போது அரசன், சீமந்தகவியைப் பார்த்து "இதைப் பாரும்" என்றனன். அதற்குக் கவி,

"தராதிபதே! உன்னுடைய கீர்த்திக்குப் பின்வாங்கிய குபேரன் இந்தச் சுவர்னபாத்திர ரூபமாக வந்து உன்னைச் சேவிக்கின்றான்" என்ற சுலோகத்தைச் சொல்ல, அரசன் அப் பாத்திரம் நிறைய முத்துக்களைக் கொட்டி அப்படியே தான மளித்தனன்,

## பயிர் வர்ணனை

பிறகு ஒருநாள் போஜன் வேட்டையாட வெளியேபோய், அங்கே முன்பு தன் குறிக்குத் தப்பித்துக்கொண் டோடிப்போன ஒருபன்றியைக் கண்டு பின்தொடர்ந்து வேகமாகச் சென்றும், அது மறைந்துபோகவே, அங்கிருந்து திரும்பி வரும்போது, ஒரு பிராமணனைக் கண்டு "எங்கே போகிறாய்?" என்றனன். அதற்கவன் 'தாராநகரம்' என்றனன். அப்போது போஜன் "என்ன காரியமாய்?" என்னவும், பிராமணனும், "திரவிய ஆசையால் போஜனைக் காணப் போகிறேன்; நல்ல பண்டிதனை யாசிக்கிறேன்; மூர்க்கனை யாசிக்கிறதில்லை" என்றனன். இதைக்கேட்டு இதயங் களித்த ஏந்தலும் அப்படியானால், "ஆரிய! நீ வித்துவானா? கவியா?" என்னவே, பிராமணனும் "நீண்ட கரங்களையுடையானே! நான் கவி" என்றனன்.

அப்போது போஜன் "அப்படியானல் எதாவதொன்றை வர்ணியும்" என்ன, விப்பிரனும் "என் பதவரிசைகள் போஜனைத் தவிர மற்ற யாரையும் வர்ணியாது" என்ன, அரசன் உளம் பூரித்து எனக்குத் தேவபாஷாக்ஞான முண்டு; போஜனும் எனக்குச் சிநேகன்றான்; உன் வர்ணனையைக் கேட்க விரும்புகிறேன். இதோ இப் பயிரையே வர்ணியும்" என்ன, கவியும்,

"நெற்பயிரானது முதிர்ந்து வளைந்து தாழ்ந்து அங்கிருக்கும் செங்கழுநீரின் பரிமளத்தைக் கிரகித்துக் காற்றினல் அசைந்தாடித், தன் ஒவ்வொரு சாகையினலும் அப் பரிமளத்தைச் சிறப்பிக்கின்றது." என்ற கருத்தடங்கிய சுலோகத்தால் வர்ணித்தனன். அதைக் கேட்ட அரசன் தன் ஆபரணத்தை யெல்லாங் கழற்றிக் கொடுத்தனன்.

---

## குலாலன் மனைவி

இப்படிச் சிலநாள் செல்லவும், ஒருநாள் ஒரு குசவன் மனைவி அரண்மனைக்கு வந்து, "துவாரபாலகா! அரசனைப் பார்க்கப் போமோ?" என்ன அதற்கவன், "என்ன காரியம்?" என்ன, 'உன்னிடத்தில் சொல்லமாட்டேன்; போஜனிடத்தில் சொல்வேன்," என்ன, இதை யவன் அரசனுக்கறிவிக்கவே, அவளை உள்ளேவிடச் சொல்லவும், அப்படி வந்தவ ளிறைவனை வணங்கி, "தேவ! மண்ணைத் தோண்டுகையில் என் கணவன் நிக்ஷேபத்தைக் கண்டனன்; அவன் அங்கேயே பார்த்துக்கொண்டிருக்கிறான்; அதை யுனக்குத் தெரிவிக்க வந்தேன்" என்றனள். அதைத் தன்சேவகரால் வரவழைத்து, அதன் மேல்மூடியைத் திறந்து, அதனுள்ளிருக்கும் யாவற்றையும் பார்க்கும்போது, அதனுள்ளிருந்த திவ்வியமான ரத்தினராசிகளின் ஒளியால் சந்தோஷித்த குலாலன் தேவியும்,

"இராஜா! சந்திரனே உன் ரூபமாகப் பூலோகத்துக்கு வந்துவிடவே அவனுடைய தேவிமார்கள் (நட்சத்திரங்களெல்லாம்) எல்லோரும் இந்த ரத்தினராசிகளாக உன்னை யடைந்தனர்" என்று சுலோகபூர்வமாகச் சொல்லினள். அரசன் அதைக் குதூகலத்தோடுங் கேட்டு அவளுடைய சமத்கார வாக்குக்காக அந்தப் பொற்கலத்தை யப்படியே அவளுக்களித்தனன்.

---

## போஜ விக்கிரமார்க்க தாரதம்மியம்

ஒருநாள் போஜன் உலகவிஷயங்களை யறியும்படி இரவில் ஏகாங்கியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், ஒரு வைசியன் வீட்டை யடைந்து கவனிக்கும்போது அவ்வீட்டு வைசியனும் மனைவியைப் பார்த்து, "பிரியை! அற்பதானத்தைச் செய்துவிட்டு அதனால் அக மகிழும் நமதரசன் போஜன் உஜ்ஜயினி நகர்க் கதிபனான விக்கிர மார்க்கனுடைய விஸ்தாரமான கொடையின் புகழை விரும்பு கின்றனனே! அப் புகழ் போஜனுக்கு வருமோ? முகபாடகரான மயூராதிகவிக ளிவனைப் புகழாவிட்டால் போஜன் போஜனே. ஹே! நாயகி! கோரகங்கள் தாடி மீசை முதலியவற்றால் என்னதான் நாயைச் சிங்காரித்து நிறுத்திவைத்தாலும் மதத்த யானைகளின் மத்தகங்களைப் பிளந்தெறியும் கதித்த புருவங்களையுடைய மிருகேந் திரனாகுமா? பிதாமகனுக்குள்ள பெருமை குலாலனுக்கு வருமானால் விக்கிரமார்க்கன் பெருமை போஜனுக்குண்டாம்" என்று சொல்லக் கேட்டு, துணுக்குற்ற போஜனும் 'லோகத்திலே ஜனங்களெல்லாம் தங்கள் தங்கள் வீடுகளிலே நிர்ப்பயமாய் உண்மையானதையே பேசிக்கொள்ளுகிறார்கள். நானாவது இன்னும் எவனாவது விக்கிர மார்க்கன் புகழையடைய சக்தி யுண்டோ' என்று சிந்தித்துக் கொண்டே அரண்மனைக்குச் சென்றனன்.

பிறகு ஓர்நாள் கர்னாடக தேசத்திலிருந்து சென்ற ஒரு கவி, அரசனிடம் வந்து ஆசிகள் கூறி, "கவித்வத்திலும், வாக் பரௌ டகத்திலும், போகத்திலும், தேகசுந்தரத்திலும், திரவியோபகாரத் திலும், தனத்திலும், தாருட்யத்திலும், தர்மசிந்தையிலும், இந்த நிலவுலகத்திலே போஜனுக்குச் சமானமான அரசர்கள் கிடையா" என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லினன். அதைக் கேட்ட அரசன் உள்ள முவந்து அவனுக்கு ஒருலக்ஷம் பொன் தந்தனன்.

---

## வேடச் சிறுமி

ஒருநாள் போஜன் உத்தியான வனத்திற்குப் போகும்போது ஒரு அழுக்கு ஆடையைத் தரித்தவளாய்ச், சூரிய காந்தியினால் வாடியு முகத்தாமரையை யுடையவளாய், அதிலே நிலோற்பலம்

போன்ற கண்களினால் பிரகாசிப்பவளைப் பார்த்து "நீ யாருடைய புத்ரி?" என்றனன். அதற்கவள் போஜனுடைய முகவொளியால் அரசனென் றறிந்துகொண்டு, "நரபாலா! நானொரு வேடப் பெண்" என்றனள். அதனால் அவளை விவேகசாலியென்று ஊகித்த போஜன் உன் கையி லிருப்பதென்ன?" என்றனன். அதற்கவள் "மாம்சம்" என்ன, அரசன் "ஏன் அவ்வளவு கொஞ்சமாயிருக் கிறது?" என, அவ் வேடமாது கூறலுற்றனள்.

"தாராதிபனே! தயை செய்து கேட்கும்பக்ஷத்தில் உண்மை யாய்ச் சொல்லுகிறேன். உன்னுடைய சத்துருக்களின் பத்தினிமார் களின் கண்ணீர் நிறைந்த தடாகதீரத்திலே கந்தர்வ ஸ்திரீகள் கானம் பாடவே அப் பாடலி னுருக்கத்தாலே தம்மை மறந்தவைக ளாய் மிருகங்களெல்லாம் புல்மேயா தொழிந்தன. அதனால் அவை கள் மெலிந்துபோகவும் மாம்ஸம் அகப்படுவதில்லை" என்னும் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லினள், அதைக் கேட்ட அர சன் அவளுக்கு அக்ஷர லக்ஷந் தந்ததோடு, சர்வாபரணத்தையுங் கழற்றிக்கொடுத்துத், தான் ஏறிவந்த குதிரையையு மளித்தனன்.

## ஸ்ரீ காந்தன்

பிறகு அரசன் அரண்மனைக்கு வந்து வாயிற்படியில் நின்று பார்த்துக்கொண்டிருக்கையில் அங்கு வந்த வித்வா னொருவன், "தேவ! சகலமகீபாலனே! உன்னுடைய யானைகளுக்கும் குதிரைக ளுக்கும் ஐயத்தை விரும்பி யெடுக்கப்பட்ட ஆலத்தி நீரானது சமுத்திரக்கரையை அங்கங்கே உடைத்துக்கொண்டு செல்லவும், மற்றொரு பக்கத்தில் சேறு அடர்ந்து பனிமலைபோலாய்விடவும் உன்னுடைய சத்துருக்களுக்கு வழி தெரியாமற்போயினதே" என் னும் பொருள்கொண்ட சுலோகத்தைச் சொல்ல, அரசன் அதற் காக ஐந்து யானைகளைக் கொடுத்தனன்.

## ஜாநுதக்நம் (முழங்கால் ஆழம்)

வேறொருநாள், அரசன் வேட்டை மார்க்கமாய்ச் சவாரி போய்க்கொண்டிருக்கையில் தலையில் விறகு சுமையோடுங் கூடிய ஒரு பிராமணனைப் பார்த்து, அங்கே செல்லும் ஒரு ஓடையைக்

குறிப்பிட்டு, "கியந் மாநம் ஜலம் விப்ர?" "ஓபிராமணு! எவ்வளவு அளவு ஜலம்?" என்றனன். அதற்கவன் "ஜாநுதக்நம் நராதிப" "முழங்காலாழம் நராதிபனே!" என்றனன். அந்த வார்த்தையினுல் தான் சொன்னதிலுள்ள சொற்பிரட்சியை "ஆழம்' என்று சொல்வதற்கு 'அளவு' என்றதை வெளிப்படுத்தியதற்காக உள்ள மகிழ்ந்து, "ஈத்ருசீ கி மவஸ்தா தே" "உனக்கேன் இந்த அவஸ்தை?" என்ன, அதற்கவன் "நஹீ ஸர்வே பவாத்ருஸா", "உன்னைப் பார்த்தபிறகு எனக்கொரு கஷ்டமுமில்லை" எனப் போஜன் புளகாங்கிதனுய், "ஹே! விப்பிர, என்னுடைய தனாக்ஷகனிடம் (Cashier) போய் நான் சொன்னதாக லக்ஷம் பொன் வாங்கிக்கொள்" என்றனன்.

அப்போது பிராமணன் தான் அதுவரைக்கும் சுமந்துகொண்டிருந்த விறகு சுமையைக் கீழே போட்டுவிட்டுப் பொக்கிஷதாரியிடம் போய் "மகாராஜா எனக்கு லக்ஷம் பொன் தரச்சொன்னுர்" என்றனன். அதற்கவன் "விப்ர! உன் முகத்தழகுக்கா லக்ஷம்? போ! போ!" என்றனன். அதனுல் பிராமணன் அரசனிடம் ஓடி வந்து "தேவ! அவன் கொடேன் என்கிருன்" என்ன, அதற்கரசன் குறுநகையோடே "இரண்டு லக்ஷம் கொடுக்கச்சொன்னேன் என்று பெற்றுக்கொள்!" என்ன, அதைப் பிராமணன் கோசாதிகாரிக்குச் சொல்ல, மறுபடியு மவன் மறுக்க, அவ் வேதியன் அரசனிடம் வந்து, "தேவ! அவன் பாபிஷ்டி, எனக்கொன்றுந் தந்திலன்" என்னத், தராதிபன் புளகாங்கிதனுய், "விப்ர லக்ஷத்ரயம் யாசஸ்வ அவஸ்யம் ஸ தாஸ்யதி" "விப்ர, உனக்கு மூன்று லக்ஷம் தரச் சொல்லுகிறேன்; அவசியம் அவன் கொடுப்பன்" என, பிராமணன் மறுபடியும் போய்க் கேட்க, பொக்கிஷாதிகாரியும் மறுபடியு மறுக்கப், பிராமணன் மிகவும் வேஷ்டையோடே அரசனிடம் வந்து,

"தாரேந்த்ரா! கனகதாரையாய் நீ யெங்கும் பெய்தும் தொளர்ப்பாக்கியம் என்னும் குடையினுல் கவிந்துகொள்ளப்பட்ட என்பேரில் ஒருதுளியாவது விழப்போகாதா" என்னுங் கருத்தடங்கிய சுலோகத்தையும்; "மேகமானது பெய்துகொண்டிருக்கையில், எல்லாச் செடிகளு மரங்களுந் துளிர் விட்டன எருக்கன்மரத்திற்குச் சமானமாகிய எங்களுக்கு முன்னிருந்த இலைகளுக்கே (என் விறகு சுமைக்கே) சந்தேகமாகிறது" என்னுங் கருத்துக்கொண்ட சுலோகத்தையும்; "மேலும், இவனுடைய (போஜனுடைய) எண்ணம் ஒன்று, செய்கை வேறென்று; இவனிடத்தில் இதரர்களுக்கு

(தனரக்ஷகனுக்கு) வேலையிலே அச்சமென்பதில்லை. சதா சூரிய ஞலே (போஜஞலே) துறத்தப்பட்டுக்கொண்டே யிருக்கிறது (இருக் கிறேன்) சதா இருளும் (நானும்) ஓடிக்கொண்டே யிருக்கிறது (இருக்கிறேன்)" என்றனன்.

அப்போது விப்பிரனைப் பார்த்துக் "கோபிக்க வேண்டாம்" என்று தன் அங்கரக்ஷகன் மூலமாய் ஜாநுமாத்ரமென்றதை (அப்படி யல்ல வென்று) ஜாநுதக்ந மென்றெடுத்துக் காட்டியதற்காகப் போஜன் புளகாங்கிதனாய் லக்ஷமும், லக்ஷமும், அப்புறம் லக்ஷமும் ஆக மூன்று லக்ஷமும் பத்து மதத்த யானைகளும் விப்பிரனுக்குத் தானமாகக் கொடுத்தனன்" என்று எழுதி யனுப்பி அவ் விப்பிரனுக் குக் கொடுப்பித்தனன்.

## சுகதேவ கவி

மற்றொருநாள் நரபதி தன் ஸிம்மாதனத்தை அலங்காரம் செய்துகொண்டிருக்கும்போது துவாரபாலகன் வந்து, "மகீபதி! தாரித்திரத்தால் வஞ்சிக்கப்பட்ட சுகதேவன் என்னு மகாகவி தலை வாயிலில் வந்திருக்கின்றார்" என்றனன்.

அப்போது மாளவபூபதி பாணகவியைப் பார்த்து "பண்டித சிரேஷ்டனே! நீர் அக் கவியை யறிவீரா?" என்ன, பாணனும், "தேவ! சுகதேவனுடைய விவேகமும் வித்தியாசாமர்த்தியமும் காளிதாசனைத்தவிர வேறொருவருக்கும் வராது, உலகப்பிரசித்தன்" என்றனன். அப்போது அரசன் "ஹே! சுக கவீ! நண்ப! காளிதாசா! சுகதேவ கவியைப்பற்றி உமக்கேதாவது தெரியுமா?" என்னக், காளி தாசனும்,

> சு: சுகவித்விதயம் ஜாநே நிகிலேபி மஹீதலே!
> பவபூதிः சுக ஸ்சாயம் த்ருதீயோ நைவ வித்யதே ||

(இ - ள்) "மகாகவிகளாக மகிதலத்திலே இருவரை யான் அறி வேன். அவர்களைத் தான் பவபூதி என்றும், சுகதேவன் என்றும் சொல்வார்கள். இவர்களுக்குச் சமானமான மூன்றாவது கவியை யானறியேன்" என்றனன். அப்போது வித்துவக் கூட்டத்தாற் புகழ்கொண்ட சீதை யென்பவள்,

"காக்கைகள் க்ரோங்காரத் தொனியோடே எங்குங் கத்திக் கொண்டிருக்கும்; ஆனால், திவ்வியமான கிஞ்சுகமோ (கிளியோ)

அப்படிக்கில்லாமல் அரசனுடைய கரத்திலே விளங்கி அவன் சீராட்டுவதால் கொஞ்சுகிறது," என்றனள்.

அப்போதங்கிருந்த மயூரகவியும், "ராஜசபையிலே யாதொரு காரண மில்லாமலே யொன்றைச் சொல்வதால் ஒருவன் கேவலம் அவமானத்தை யடைகிறதோடு அவலம்பிக்கப்படுகிறான். தேவ! அப்படியிருந்தாலும், நான் கொஞ்சம் இங்கே சொல்லவேண்டிய திருக்கிறது. என்னவென்றால், சுகதேவன் சந்தோஷிக்காத சபையு மொரு சபையா? அவன் புகழாத கவிக்ஞானமும் ஒரு கவிக்ஞானமா? அவன் தலையசைக்காத ரசக்ஞையும் ஒரு ரஸக்ஞையா? அவனுக்குக் கொடாத தானமும் ஒரு தானமா?" என்றனன்.

அப்போது துவாரபாலகன் வந்து சுகதேவகவி சபைக்கு வருவதாகச் சொல்லவே, நரபதி விசாரத்தோடே சுகதேவனுடைய சாமர்த்தியத்தை மகாகவிகளெல்லாம் புகழ்வதால் சந்தோஷத்தையும், "என்னத்தை யளிப்பது இம் மகா கவிக்கு?" என்பதால் ஏக்கத்தையு மடைந்தவனாய், "மகா கவியாச்சுதே! சத் கவிகோடி மகுடமணியாச்சுதே! என்னத்தைக் கேட்பனோ?" என்று யோசித்து, "ஆனாலு மாகட்டும், உள்ளே வரட்டும்" என்றனன்.

மகா தேஜஸ்ஸோடே, கம்பீர பார்வையோடே, கண்டவர் அதிசயிக்கும்படியான காக்ஷியோடேகூட அப்படி வந்த சுகதேவனைப் பார்த்தவுடனே, போஜனுக்கு ஒருவித புளகாங்கித முண்டாகவே, அச்சத்தோடே அப்படியே சிம்மாதனத்தினின்று மெழுந்து நின்றனன். அப்போது அங்கிருந்த எல்லாப் பண்டிதர்களும் எழுந்து நின்றுகொண்டு கரங்குவித்தவராய் அம் மகாகவியை வணங்கினர்.

அவர்களையெல்லாங் கையமர்த்தி யுட்காரச்சொல்லிப் போஜனுடைய சிம்மாதனத்தில் அமர்ந்தவனாய் அவன் அநுக்ஞையால் அரசனும் ஆசனத் தமர்ந்தனன். அதன்பிறகு சுகதேவன் அந்தச் சபையை யொருதரம் சுற்றிப் பார்த்து, எங்குப் பார்த்தாலும் வித்வன்மயமாய் விலையுயர்ந்த ரத்னங்களாலும் பட்டாடைகளாலும் அலங்காரங் கொண்ட அவர்களுடைய விநோத காக்ஷியால் சபையானது சுதர்மைபோல் விளங்கவும், விக்கிரமார்க்கனுடைய சபாலங்காரத்தையு மீறியிருக்கக்கண்டு தலை யசைத்து,

"தேவ! தாரேந்த்ரா! தான லக்ஷ்மியானவள் ஸ்ரீ விக்கிரமார்க்கனிடத்திலிருந்து உன்னை யடைந்தவளாய் உன்னையே சேவிக்கின்

றனளே! தேவ! மாளவேந்த்ரா! மஹீபாலா! உலகத்திலே நீதான் தந்யன்; மற்றப் பூபாலரெல்லாம் தந்யாளல்ல; ஏனென்றால், உன்னுடைய புகழ்பெற்ற ஆஸ்தானத்திலே அப்படிப்பட்ட காளிதாசாதி மகாகவிகளெல்லோரும் கயிற்றினாற் கட்டுண்ட பக்ஷிஜாதிகளைப் போலாகிச் சதா உன் வித்வசபையிலேயே வசித்துக்கொண்டிருக்கின்றனரே!" என்று சொல்லி மறுபடியும்,

ஶ்ரு: ப்ரதாப பீத்யா போஜஸ்ய தபநோ மித்ரதா மகாத்; |
ஔர்வோ பாட பதாம் தத்தே, தடித் க்ஷணிகதாம் கதா ||

(இ - ள்) "போஜனுடைய பிரதாபாக்கினிக்குப் பயந்தவனாய்ச் சூரியன் அவனுக்கு மித்திர னாகிறான். வடவாமுகாக்கினியும் தன் உஷ்ணத்தைக் காட்டப் பயந்து தன் அனலைத் தணித்துக் காட்ட கடல் நீரை யுண்டுகொண்டே யிருக்கிறது. மின்னலும் இவனுடைய காந்திக்குப் பயந்து க்ஷணநேரமே மின்னுகிறது; உடனே மறைந்துபோகிறது" என்றனன். இதைக் கேட்ட போஜன் "ஹே சுகக்வீ! பொறும். விசேஷமாகச் சுலோகத்தைச் சொல்லவேண்டாம்" என்று அதுவரைக்குமே நிறுத்திவிட்டு,

சுகதேவனிடத்துண்டான சந்தோஷத்தால் பொக்கிஷத்திலுள்ள திவ்வியமான ரத்தின ராசிகளால் நிறைந்த பொற்கலசத்தையும், நானூறு மதத்த யானைகளையுங்கூடத் தான மளிக்கின்றனன்" என்று எழுதி யெல்லாவற்றையும் தான மளித்துப் புளகித்தனன். அதைத் தனரக்ஷகனிடம் காட்டி அவைகளையெல்லாம் பெற்றுக் கொண்டு சந்தோஷத்தோடே சுதேசம் சென்றனன். அதைக் கண்டு போஜன் அகமகிழ்ந்தனன்.

## வாசுதேவ கவி

அதன் பிறகு மாரிகாலம் வந்தது. அப்போது ஒருநாள் வாசுதேவன் என்னும் ஒருகவி வந்து அரசனைக்கண்டு ஆசீர்வதித்தனன். அப்போது போஜன் "சுக கவீ! ஒரு சுலோகம் சொல்லும்" என, அக் கவியும்,

"சிந்தாமணி, கற்பகவிருக்ஷம், காமதேநுவாதிகளெல்லாம் உன்னுடைய பரோபகாரத்தைக் கண்டு தங்கள் தேக மெலிந்து சூக்ஷ்மமாய்விடவும், அவைகளால் உலகம் ஜீவிக்கிறதில்லை. ஆனால், எப்

போதும் ஜலபாரத்தால் ஜலதோஷங் கொண்ட பூமியை நனைத்துக் கொண்டிருக்கும் பாரத்தை வகிக்கும்படியான இப்போதிய பாரத்தை வகிக்கின்ற மேகமான உன்னாலேயே உலகம் ஜீவிக்கிறது என்று நினைக்கிறேன்'' என்று கூறினன்.

அதற்கரசன் அக்ஷரத்துக்கு லக்ஷம் அளித்தனன். இப்படி அரசன் கவிகளுக்கு அபாரமாக வழங்கிவரக் கண்ட மந்திரியும் ஆலோசித்து, அரசன் சயன அறையின் சுவற்றில் "ஆபத்துக்காகத் தனம் ரக்ஷிக்கப்படவேண்டும்'' என்று எழுதிவைத்தனன். அதை பார்த்த அரசன் "ஸ்ரீமான்களுக்கு ஆபத்தேது'' என்றடுத்த அடியை எழுதிவைக்க, அதற்கு மந்திரி "லக்ஷ்மி போய்விட்டாலோ'' என்ற மூன்றா மடியை யெழுதியிருக்கக் கண்ட காவலன், "(அப்படிப் போகும்போது) புதைத்துவைக்குந் தனமுங் கூடப் போய்விடு கிறது'' என்று நான்காமடியைப் பூர்த்திசெய்யக் கண்ட மந்திரி, அரசனுடைய அபார புத்திக்குத் தலையசைத்துத், தன் அறி யாமைக்காகத் தலை குனிந்தவனாய், அரசனை வணங்கி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டனன்.

பின்பு ஓர்நாள் பிராமணனொருவன், போஜனால் கள்ளனுக் களிக்கவும் அவனால் தான் பெற்ற விலையேறப் பெற்ற வீரவலயத்தை விற்றுப் பட்டாடைகளையும் ஆபரணங்களையும் வாங்கிக்கொண்டு போகையில், ராஜசேவகர்கள் அவனைப் பிடித்துப் போஜன் முன்பு விட, அரசனும் "அந்தண! நேற்றுவரைக்கும் நிர்ப்பாக்கியனான உனக்கு இவ்வளவு பொருளேது?'' என்றனன்.

அதற்கு வேதியன், "எந்தக்குளத்தில் மண் மறைவில் தவளை கள் சவம்போற் கிடந்தனவோ, ஆமைகள் சேற்றிற் புதைந்து வரால் மீன்கள் புரளுவதால் மூர்ச்சைபோயினவோ, அந்தக் குளத் தில் அகால மேகத்தால் கும்பஸ்தலமாய்வருஷிக்கவும்; காட்டானைக ளெல்லாம் வந்து முழுகி ஜலங் குடிக்கும்படி நிறைவுற்றது'' என்ன வும், அரசன் தான் கள்ளனுக்குக் கொடுத்த வீரவலயத்தை அவன் இவனுக்குக் கொடுத்திருக்க வேண்டுமென்று ஊகித்துத் தானும் லக்ஷந் தந்தனன்.

வேறொருநாள் விஷ்ணுகவி என்போன் வந்து வேந்தனைப் புகழ வும், சோமநாதகவி செய்த கலகத்தால் போஜன் அவனுக்கு ஒன் றுங் கொடுத்திலன். அதனால் வருந்திய விஷ்ணுகவியும் ஒரு சுலோ கத்தை யெழுதி அதைச் சோமநாதகவியின் கையில் வைத்துவிட்

டுப் போய்க்கொண்டிருக்கையில், அதை வாசித்துப் பார்த்து மனம் வாடித் தன் பொருள்களையெல்லாம் அவ் விஷ்ணுகவிக்குத் தானளித்தனன். அதைப் பெற்றுக்கொண்டு போய்க்கொண்டிருக்கையில், வேட்டையாடி வரும் வேந்தன் கண்டு, "உனக்கு இவ்வளவுபொருள் ஏது?" என, "உன் ஆஸ்தான பிச்சைக்காரன் சோமநாதகவி கொடையாகத்தந்தது" என, அரசன் ஆச்சரியமுற்று, முன் இவன் சபையில் சொன்ன சுலோகத்துக்கு அக்ஷர லக்ஷம் தந்தனன். சோமநாதகவியையும் புகழ்ந்து அவனுக்கும் அநேக சன்மானம் செய்தனன்.

அதற்குப் பிறகு காஷ்மீரதேசத்து முசுகுந்தகவி யென்ன, க்ஷாமமிரட்டுபவனென்ன, குண்டிணபுரத்திருந்து வந்த கோபால கவியென்ன, மேற்குச் சமுத்திரத்திலே பிரபாஸ தீர்த்தசமீபத்திலிருந்து வந்த பாஸ்கரகவியென்ன, ஏகசிலா நகரத்திருந்து வந்த சாகல்யகவியென்ன, ஜாஹ்னவிதீர வாசியான விருத்தப்பிராமண பண்டிதை யென்ன, சாம்பவகவியென்ன, இவர்களெல்லாம் அப்போதைக்கப்போது வந்து போஜனைப் புகழ்ந்து கொண்டாடி லக்ஷக் கணக்காவும், அக்ஷரலக்ஷமாகவும், ரத்னகலசங்களாகவும் பரிசுபெற்றுச் சென்றனர்.

வேறொருநாள் தாரேசன் சிவாலயமடைந்து சிவதரிசனம்செய்யும்போது அங்கே யொரு விப்பிரகவி அரசனைப் பார்த்து,

"மோகனுவதாரியான விஷ்ணுவினுல் பாதிதேகமும், பர்வத ராஜன்புத்திரியால் பாதிதேகமும் கொள்ளை கொள்ளவே, ஓ மகீபதீ! மாளவேந்த்ரா! உலகத்திலே புரமெரித்தவன் உருவில்லாமற் போகவும், கங்காநதி சமுத்திரத்தையும், கலாமதி ஆகாசத்தையும், நாகேந்த்ரன் பாதலத்தையும், சர்வக்ஞத்துவமும் ஈஸ்வரத்துவமும் உன்னையும், பிக்ஷாடனம் என்னையும் அடைந்தன" என்று கூறினன். அதற்கு அரசன் அக்ஷர லக்ஷம் தந்தனன்.

---

## பவபூதி

பிறகு ஒருநாள் போஜவள்ளல் கவிகளோடே கொலுவிலிருக்கும்போது ஆஜாநுபாகுவாய், பீதாம்பரதாரியாய், கோபிச்சந்தனுதிகளால் அலங்கிருதமுற்ற முகத்தினனுய், கம்பீர பார்வை

யோடே ஸ்படிகமாலிகை பளிச்சென்று விளங்கு மார்பினனாய், உன்னதங் கொண்ட மகாபுருஷனொருவன் காசிதேசத்திருந்து வருபவன், போஜன் புகழைக் கேட்டு அவனைக் காணும்படி அரண்மனை வாயிலை யடைந்து, அவ்விடத்துக் காவலாளரெல்லாங் கண்டு மயங்கவே, அவர்களைச் சட்டை செய்யாது தாராளமாய் உள்ளேசென்று போஜனைக் கண்டு ஆசிகள் பல கூறி,

"பாரிஜாத புஷ்பங்களைத் தேனீக்கள் தேடிவருவதுபோலவும், 'சந்திரனுடைய சந்திரிகையைச் சகோரப்பக்ஷிகள் எதிர்கொள்வதுபோல'வும், எங்களுடைய வாக்கின் மாதுரியத்தையும் எதிர்பார்க்கிறார்கள் மகாபண்டிதர்கள்" என்று சொல்லி, மறுபடியும், எங்களுக்கோ சவாரிப் பல்லக்குக் கிடையாது; நவமணித் தோடாக்களு மில்லை; பூஷணாதிகளும் பூச்சியம்; பாரிய குதிரைகளு மில்லை; ஆள் மாகாணங்களு மில்லை; அழகிய விலையுயர்ந்த ஆடையோ! அது தான் கிடையாது; உணவு முபாயமே. ஆனால், பின்னை யென்ன விசேஷ மென்பீரோ? இம் மகிதலத்திலுள்ள எல்லா வித்துவான்களும் கல்விக்கடலைக் கரைகண்டோரும் கண்டதிசயிக்கும்படிக் கவிமழை பொழிய வல்லேம்" என்றனன்.

அதைக் கேட்ட பாணனென்னும் பண்டிதரத்னமும் "அகோ! பிராமணா! எண்ணிப் பார்த்துப் பேசும். இந்தத் தாராநாதன் மகா சபையிலா உமக்கு அகங்காரம்? வேண்டாம்.

> சு: நிஸ்வாஸோபி ந நிர்யாதி பாணே ஹ்ருதயவர்த்தினி |
> கிம்புந: ப்ரகடாடோப பதபந்தா ஸரஸ்வதீ ||

(இ-ள்) "பாணகவி (பாணம்) உன் மனதிலே (மார்பிலே) பிரவேசிக்க உஸ்வாச நிஸ்வாசங் கூடவா? அப்படியிருக்க, விசேஷித்த ஆடம்பரத்தோடுங்கூடிய அடுக்குப் பதங்களாலாகிய சுலோகவரிசைகளெல்லாம் வெகு முடுக்காய் உன் வாக்கினின்றும் வெளிப்படுவதெப்படி" என்றனன். அப்படிப் பாணகவி செய்த அவமானத்தை அரைக்ஷணமும் சகிக்கப்போகாத புண்ணியப் பதியிலிருந்து வந்த பவபூதியும் கோபத்தோடே,

பலாத்காரமாய் இழுத்திழுத்துச் சில பதங்களைக்கொண்டு கவிபாட வல்ல சாதாரணமநுஷனாகிய நீ, ஆகா! கலாசமுத்திரமான கவியோடே, வசியவாக்கையுடையவனோடே, ஈடுகொடுக்கிறதென்றால், இன்றைக்கோ நாளைக்கோ, ஏன் இங்கே அதிக வார்த்தை?

பாபம் நிறைந்த கலியிலே குடம்முதலானவைகளை யுண்டுபண்ணும் குசவனுக்கும் திரிபுவனங்களையும் யுண்டுபண்ணும் சிருஷ்டிகர்த்தாவுக்கும் கலகம்தான்" என்று சொல்லி, அதோடுங் கோபம் தணியாது,

சு: காளிதாஸகவே ர்வாணீ கதாசி ந்மத்கிரா ஸஹ |
கலய த்யத்ய ஸாம்யம் சே த்பீதா பீதா பதே பதே: ||

(இ-ள்) "கவிகளுக்குட் சிறந்து விளங்கும் காளிதாசன் வாக்கு ஒருவேளை என்னுடைய வாக்கையொத்திருக்கலாம்; அதுவும், என்னுடைய வாக்குக்குச் சமத்துவத்தைக் கொண்டாட அடிக்கடிப் பீதியை (அச்சத்தை)க் கொள்ளும்" என்றனன். அப்போது காளிதாசன், "நண்ப! பவபூதி! என்ன சொன்னாய்? இதுவோ மகா கவிகளால் மதத்து விளங்கும் ஹேமசபை! இங்கேயா உன் கவித்துவம்!

சு: ஏஷா தாரேந்த்ர பரிஷந் மஹாபண்டிதமண்டிதா |
ஆவயோ ரந்தரம் வேத்து ராஜா வா சிவஸங்கிப:

(இ-ள்) "இந்தத்தாரேந்திரனுடைய மகாபண்டிதர்கள் நிறைந்த சபையிலேயா உனக்குப் புகழ் கிடைக்கப்போகிறது? நம்மிருவருடைய தாரதம்மியத்தை சாக்ஷாத் சிவசொரூபனாகிய இத் தாரேசனே யறியவல்லன்" என்று மௌனமுற்றனன். அதைக் கேட்ட ராஜன் "நீங்க ளிருவரும் ரத்யாந்த (சுரதக்காலாந்த) த்தை வர்ணியுங்கள்!" என்ன, அப்போது பவபூதியும்,

சு: முக்தாபூஷண மிந்துபிம்ப மஜநி, வ்யாகீர்ண தாரம் நப: |
ஸ்மாரம்சாப மபேதசாபல மபூ, திந்தீவரே முத்ரிதே ||
வ்யாலீநம் கலகண்ட்ட மிந்தாணிதம் மந்தாநிலை ர்மண்டிதம்,
நிஷ்பந்தஸ்தபகா ச சம்பகலதா ஸாபூ, ந்ந ஜாநே தத: ||

(இ-ள்) "சந்திர பிம்பம் (முகம்) முத்தா லலங்கரிக்கப்பட்டது (வியர்வை தட்டினது). ஆகாசமோ (இடுப்போ) விதை விதைக்கப்பட்ட நட்சத்திரங்களை யுடையதாய் (ஒட்டியாணத்தின் சதங்கைகள் நிறைந்ததாய்) ஆயிற்று. மன்மதனுடைய வில்லோ (புருவமோ) அசைதலை யொழிந்தது. நீலோற்பலங்கள் (கண்கள்) குவிந்தன (மூடிக்கொண்டன.) குயிலின் மெதுவான தொனியும் (கண்டத்தினுண்டாம் ஒருவித தொனியும்) அடங்கிவிட்டது. மந்தமாருதமும் (நிஸ்வாசமும்) சாந்த மடைந்தது. சம்பங்கிக்கொடியானது (தோகையும்) அசைத லில்லாத பூங்கொத்துக்களை (தனபாரங்களை) யுடையதாயிற்று. அதற்குப் பிறகு (நடந்தவை) அறியேன்," என்

பதைச் சொல்லினன். அப்போது காளிதாசனும் "பூவலயம் காக்கும் புண்ணியனே! இதோ என் சுலோகத்தையுங் கேட்டருளு மென்று,

சு: ஸ்விந்நம் மண்டல மைந்தவம் விலுலிதம் ஸ்ரக்பாரநத்தம் தமஃ
ப்ரா கேவ ப்ரதமாந கைதகசிகாலீலாயிதம் ஸுஸ்மிதம் |
சாந்தம் குண்டலதாண்டவம், குவலயத்வந்த்வம் நிரோமீலிதம்
வீதம் வித்ருமவீத்க்ருதம், ந ஹி ததோ ஜாநே கி மாவீ திதி ||

(இ-ள்) சந்திரமண்டலம் (முகம்) சிறுசிறு பனித்துளிகளால் (வியர்வையால்) மூடப்பட்டது. புஷ்பசரத்தால் கட்டுண்ட இருளானது (கூந்தலானது) குலைந்தது (அவிழ்ந்தது). தாழம்பூவினுடைய முனையிலுள்ள தாவள்யமும் (புன்னகையின் விசாலமும்) கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து கடைசியாக இதழினடியிலே (அதரத்திலே) நின்று அதிலேகூட மறைந்துவிட்டது. குண்டல தாண்டவம் (காதி லணிந்த குண்டலங்களி னசைவு) நின்றுவிட்டது. நீலோற்பலங்கள் (கண்கள்) இரண்டும் குவிந்தன. பவழத்தின் மேனியானது (அதரத்தின் சிவந்த நிறம்) அழிந்தது. அதன் பிறகு என்ன வாயினவோ அறியேன்" என்பதைச் சொல்லினன்.

குறிப்பு.—இது சுரதக்கால வர்ணனை யாதலால் ஸ்திரீயின் முகமுதலிய உறுப்புக்களை ஷை காலத்திற்குரிய பொருள்களின் மேல் ஆரோகணித்துச் சொல்லப்பட்டன.

அப்போது அரசன் காளிதாசனைப் பார்த்துத் தலையசைத்து, "சுககவீ! பவபூதியின் கவியை யுன்னுடைய கவிக்கு ஒப்பிடப் போமா?" என்றனன். அப்போது பவபூதி: "தேவ! இதில் என்ன வித்தியாசம்?" என்னவும், "எல்லாவிதத்திலும் கவி ரசனைதான்" என்றனன் போஜன். அப்போது பாணகவி,"பூபாலா! பாணகவியின் கவித்வம் காளிதாசன் வாக்காகுமா?" என்ன, அரசன், "ஹே பாண கவி! பாரதியே புருஷாவதாரமாகக் காளிதாசனென்ன வந்ததற் கென்ன தடை?" என்றனன். அப்போது பவபூதி முகத்திலே சிவப்பேறவும், உதடு துடித்துப் படபடக்க உறத்த சத்தத்தோடே, "தேவ! என்ன அதில் அவ்வளவு சிறப்பு?" என்றனன்.

அதற்கரசன், "என்ன விசேஷமா? ஏன்! காளிதாசன் சுலோகத்தில் கைதகசிகா லீலாயிதம் என்றதிலுள்ள ரசனையே போதாதா?" என்னப், பவபூதியும், "காளிதாசன் ஆஸ்தானத்து வித்துவானென்றோ பக்ஷபாதமாய்ப் பேசுகின்றாய். அப்படியானல்,

இக் காளிதாசனை யாருக்குத்தான் ஒப்பிடுகின்றாய்?" என்ன, போஜன் "பூமகளாகிய நாமகளுக்கே ஒப்பானவன்" என்றனன். அதைக் கேட்ட பவபூதி அடங்காத கோபத்தோடே "ஓ மகீபதி! உள்ளபடியே சொல்லும்! உமக்குக் காளிதாசனிடமிருக்கும் ஆசை மிகுதியாலல்லவா இப்படிச் சொல்லுகின்றீர்?" என்ன, அதுவரைக்கும் மனம் பொறுத்த காளிதாசன், "தேவ! தாராநாதா! உமக்கேன் இந்த அபவாதம்? தங்க மிழைத்த கபாடவாயிலிற் சிங்கக்காவல் பூண்ட ஜெகன்மாதாவின் ஆலயத்திற்குப் போவோம்; அவ் வம்மணியின் முன்னே எங்கள் தாரதம்யம் ஏற்படட்டும்" என்றனன்.

அப்படியே வித்துவக்கூட்டத்தோடும் போஜன் ஸ்ரீ புவனேஸ்வரியின் ஆலயத்திற்கு வந்து அங்கே இரண்டு சமமாகக் கத்தரித்த தாளபத்திரங்களிலே இவர்களிருவர் சுலோகங்களையு மெழுதித் தராசில் வைக்கவும், அப்போது பவபூதியின் சுலோக மடங்கிய தட்டானது இலேசுற்று மேலே கிளம்புகிறதைக் கண்டு பக்தவத்ஸலியும், தன் பக்தனான பவபூதிக்கு அவமானம் வரவொட்டாது காக்கும்படித் தன் செவியின்மே லிருக்கும் செங்கழுநீர்ப்பூவிலிருக்குந் தேனைத் தன் இடது கரத்தின் நகமுனையால் தெளித்தனள். அதனால் அத் தட்டானது கீழுக்குத் தாழ்ந்துவருகிறதைக் கண்ட காளிதாசனும் துணுக்குற்று இராஜராஜேஸ்வரியை யேறெடுத்துப் பார்த்து,

சு: அஹோ! மே ஸௌபாக்யம்! மம ச பவபூதே ஸ்ச பணிதிம்
தடாயா மாரோப்ய, ப்ரதிபலதி தஸ்யாம் லகிமநி, |
கிராம் தேவீ ஸத்ய: ஸ்ருதிகலிதகல் ஹார கலிகா
மாதூளீமாதுர்யம் க்ஷிபதி பரிபூர்த்யை பகவதீ! ||

(இ-ள்) "ஹே பக்தவத்ஸலீ! என்னென்று புகழ்வேன் உன்னை? ஆகா! என் பாக்கியமே பாக்கியம்!! (எங்கள் தாரதம்யத்தை எடுத்துரைக்க இறைவனாலும் ஆகாமல்)என்னுடையவும் பவபூதியுடையவும் சுலோகங்களைத் தராசிலிட்டு அதில் பவபூதியின் சுலோகமடங்கிய தட்டானது இலேசாகவும், அவனிடத்தில் நீ வைத்திருக்கும் அன்பை இவ்வளவென் றெடுத்துக் காட்டும்படி இதோ உன்னிடது செவியின்மே லிருக்கும் செங்கழுநீரின் இனிய தேனை, (தட்டானது தாழும்படி) அதன் பூர்த்திக்காகத் தெளிக்கின்றனையே! 'இகத்திலே உனக்கு மீடாவார் இனியுண்டோ?' என்று வாக்களித்த நீயீடுண்டாக்குகின்றையே!" என்றனன்.

அதைக் கேட்ட அகிலாண்டநாயகியும் ஆநந்த பரிதளாய் அங்கிருந்த எல்லோருங் கண்டு களிக்கும்படிப் பிரசன்னமாகிக், காளிதாசனைப் புகழ்ந்து கொண்டாடி மறைந்து போயினள். அரசன்முதலிய எல்லோரும் ஆச்சரியமுற்றனர். பவபூதியும் 'அடியற்ற பனைபோல'க் காளிதாசன் பாதங்களில் விழுந்து பணிந்து பலவாறுகப் புகழ்ந்து போற்றினன். காளிதாசனும் கரைகடந்த ஆநந்த பாஷ்பத்தி லாழ்ந்தவனுய்ப் பவபூதியை யப்படியே வாரி மார்போடு அணைத்துக்கொண்டு "ஹே மகாநுபாவா? எத்திக்கிலும் புகழ்பெற்ற இன்பகவீ! இன்றைக்கு உம்மாலன்றோ உலக மாதாவைக் கண்குளிரக் கண்டு களித்தேன். உம்முடைய பெருமையே பெருமை. உமது சித்தத்தில் வேறு சிந்தனை வேண்டாம்; சுரதக்காலத்தை வர்ணித்துக்கொண்டு வந்த உம்முடைய சுலோகத்திலே அக்காலத்துக்குரிய பொருளாகிய தாழம்பூவை மறந்தீரே. அதனாலன்றோ உம்முடைய சுலோகமும் என் சுலோகத்திற்கு ஈடாகாமல் இலேசற்று மேலே கிளம்பியது" என்றனன்.

அதைக் கேட்ட பவபூதியும் "அமையும் அமையும்" என்று அப்படியே ஆநந்தவாரியி லாழ்ந்தனன். அரசனும் பவபூதியை விசேஷ ஞானவானாக மதித்துப், பட்டாடைகளையும் அநேக ரத்னாபரணங்களையும்-இரண்டு பஞ்சகல்யாணி குதிரைகளையும்-பல்லக்கையும்-பரிசாக அளித்ததோடு, நூறு மத்த கஜங்களையும் வழங்கினன். காளிதாசனுக்குங் களிப்புண்டாம்படி கனகாபிஷேகம் செய்வித்தனன்.

---

## உத்தரராம சரித்திரம்

கேட்டாயோ வஞ்சியர் கொஞ்சுங் கிஞ்சுகமே! போஜன் சபையிலேயே இவ்வளவு புகழ்கொண்ட இம் மகாகவி பவபூதியால் எழுதப்பட்ட மகவீரசரித்திர நாடகமும், மாலதீபிரகரணமும் இன்னும் மற்ற கிரந்தங்களும் விமரிசையுற்றனவாய் இவ் வுலகத்திலே ஒவ்வொருவராலு மதிசயிக்கக்கூடியவையாய் இம் மகாகவிக்கு நிலைத்த புகழை யுண்டாக்குகின்றனவே." என்றதிசயித்த ஆண்பக்ஷியும், மறுபடியும் பெண்பக்ஷியைப் பார்த்து "ஹே! மனோரதமே, பிறகு ஒருநாள் காளிதாசன் காசிக்குச் சென்றான்" எனவே, பெண்பட்சியும் "அதை விவரிக்கவேண்டும்" என, ஆண்பக்ஷியும், ஆநந்தத்

தோடே சொல்ல ஆரம்பித்தது. அப்போது இவைகளையெல்லாம் ஒன்று விடாது கவனித்திருந்த சதானீகனும் தன்னுடைய மனைவி தன் துடையின்மீது உறங்காநிற்க, சரித்திரத்தின் சுவாரசியம் இனிமையாயிருக்கவே கதையை அணுவளவும் விடாது கவனித் திருந்தனன்.

---

## காளிதாசன் காசியாத்திரை - வேதவியாசரைக் காணல்

ஆண்பக்ஷியும் சொல்ல ஆரம்பித்து. ஆன்மகோடிகளின் அஞ்ஞானத்தை நீக்கி விஞ்ஞானத்தை யளிப்பதாய் மந்தாகினி யென்னும் பெயரால் மகாயோகிகளெல்லாம் மதிக்கக்கூடியதாய், நங்கை யென்று உலகேத்திய கடவுள் மாநதியாய்ச், சரயு - யமுனைமுதலிய உபநதிகளையுடையதாய், உன்னதமாகிய இமோத்கிரியின் கொடுமுடியினின்று மிழிந்து வருவதால் பொற்சன்னங்களை யொதுக்கிப் படிப்படியாய்ச் சரிந்து விளங்கு மணற்சாய்வால் கண்ணுக்கெட்டிய தூரம் மாக்ஷிமை கொண்ட காக்ஷியாய் விளங்கும் கங்காநதியையும் கருவமைப்பி லமைந்த கர்மவினையாறனும் கணத்திலே போக்க வல்ல காசிப்பதியைக் கண்டு களிக்கும்படி காவலன் விடை பெற்றுக் கடிநகர் நீங்கிய காளிதாசனும் வடகுண திசையாய்ச் சென்று வாரணசியைக் கண்டு, அங்கங்கே வேள்வியியற்று மந்தணர்கூட்டங்களையும், அநேக ராஜவிதிகளையும், மாடமாளிகைகளையும் விநோதமாகத் தானே பார்த்துக்கொண்டேபோன மகாகவியும் ஆர்த்தெழுந்து, அநேக இரத்தின ராசிகளை வாறியெறிந்து மநோரதங் கொண்ட மகாபுருஷனைப்போல் அகமகிழ்ந்து பொங்கி விஸ்தாரமாகத் திவலைகளை வீசிக் கரைகளை மோதித் திரும்பிச்செல்லும் அலைகளையுடைய கங்கையிற் படிந்து களிப்புற்றுக், காசி விஶ்வேசனைக் கண்டு சேவிக்கும்படிப் பூஜிதையுடைய விபூதி தூளித ருத்திராக்கதாரியாய் முன்கையில் ஜபமணிகொண்டு மோனவெழுத்தின் தியானபரணாய்க் கோவிலை நாடிவருகையில் மாமணி விளக்காய் மகத்துவமுற்ற நான்கு வேதங்களையும் மன்னுயிர்க்களித்த மகா தபோதனராகிய ஸ்ரீ வியாசபகவானுடைய நல்ல உருவம் ஒன்று வழியிலிருக்க, அதனருகிற்சென்று அதை ஆர அமரப் பார்த்து, அங்கங்கே புருஷலக்ஷணங்களெல்லா மமையவும், ஆருயிர்பெற்ற அவசரமாகத்தானே விளங்கக் கண்டு ஆச்சரியங்கொண்டு, "ஐயனே! எத்தனையோ புரா

ணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் இன்றியமையா இகச்செல்வமே! வேத வித்தகனே! நல்ல தெளிவளிக்கும் ஞானசிரியனே! ஓ சகார குக்ஷீ! அல்லலணுகா உன் அகண்ட வயிற்றில் இன்னம் எத்தனை ஆயிரம் சகாரங்களிருக்கின்றனவோ, ஏதோ பார்ப்போம்!" என்று அதன் அழகிய உந்தியிலே தன் ஆள்காட்டும் விரலால் ஆழ்ந்தக் குத்தினன்.

அப்போது பராசரமுனியின் புதல்வன் அரிய தவத்தின் பெருமையென்பது அவ் விரலை அப்படியே அவ் வழகிய விக்கிரகத்தின் உந்தியினின்று மீளாமற்போகச் செய்விக்கவே, மகாகவியு மனந் திடுக்கிட்டு, ஒன்றுந் தோன்றாமல் தியங்கி வாடித் தன் பலங் கொண்டமட்டும் எவ்வளவோ பிரயாசைப்பட்டும் அவ் விரல் மீளாமல், தான் வலிக்குந்தோறும் உள்ளுக்கே செல்லக்கண்டு, அப்படியே அசைவற்று மரம்போல நிற்கையில், மகா தவசிரேஷ்டனாய் உலகெலாம் போற்றும் தேவபாஸ்கரனும் மனதிரங்கி, விருத்த வேதிய வேடம் பூண்டு,

"குடையினனிமிர்கோலன் குண்டிகை யினன் முரிச்
சடையினனுரிமானின் சருமனன் மரநாரின்
உடையினன் மயிர்நாலு முருவினனெறிபேணும்
நடையினன் மறைநாலு நடனவி றதுநாவான்.

செந்தழல் புரிசெல்வன் திசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயி ரேனநல்கும்
அந்தணனுல்கேழ மமையெனி னமரேசன்
உந்தியினுதவாமே யுதவிடு தொழில்வல்லான்."

என்று சொல்லும்படியாய் வந்து, தலை குனிந்தவனாய்த் தரையைக் காலால் கீறிக்கொண்டு மயங்கியிருக்கும் மகாகவியைப் பார்த்து, "ஹே! பிராமணோத்தமா! ஏன் இப்படி மயங்குகின்றனை?" என்னவே, காளிதாசனும், "ஐயனே! இம் மகாநுபாவர் மகாபாரதத்திலே அளவுகடந்து சகாரப்பிரயோகம் பண்ணியிருக்கின்றார். அதனால் அடியேனும், "உன் அகண்ட வயிற்றில் இன்னும் எத்தனை சகாரம் இருக்கிறது பார்ப்போம்" என்று என் ஆள் காட்டும் விரலால் இவ் வுந்தியிலே யூன்றினேன்; அவ்வளவிலேயே, இவ்வளவாபத்தும் எனக்கு உண்டாயிற்று. என்னாண்டவனே! இதற்கு என்ன செய்வேன்?" என்று அப்படியே யேங்கி நின்றனன்.

அதைக் கேட்ட வேதபாஷிகனும் அப்படியானால், ஏதோ உன் திறத்தைப் பார்ப்போம்! அப் பாரதத் தலைவரான பாண்டவர் ஐவ

ருக்கும் பஞ்சாலிக்கு முண்டான பந்தத்துவத்தை யோரே யொரு சுலோகத்தி லடக்கிச் சகாரப்பிரயோக மில்லாமலே சொல்லமாட்டு வையோ?" என்ன, உடல் பூரித்த உத்தமகவியும்,

சு: த்ரௌபத்யா பாண்டுதநயா பர்த்ருகேவல பாவுகா: |
நதேவலோ தர்மராஜஸ்ஸஹ தேவோந பாவுகா: ||

பாண்டவர்க்குப் பாஞ்சாலிப் பத்தினியேன் பார்பாரோர்
ஆண்டங்கே பார்த்தா லவர்மூத்தார் மைத்துனராம்
பூண்டபுகழ்த் தருமன் பூங்கொடிக்கு மூத்தோராம்
காண்டகுநற் சாதேவன் கடையாகு மைத்துனன்காண்.

"இதுவே இவர்களுக்குள்ள சம்பந்தம்" என்றனன். அதைக் கேட்ட அந்தணக்கிழவனும் அம் மகாகவியின் அதிசூக்ஷ்மபுத்திக் கும் அரியவித்தியாசாமர்த்தியத்திற்கும் அளவு கடந்த ஆநந்தங் கொண்டு 'உதயகிரியின் பாநுவைப்போல' ஒளிவிட்டுக் கதிர் பரப் பும் தமது ஒப்பற்ற நிஜசொரூபத்தோடே அவ் வரகவிக்குச் சுப்பிர சன்னமாகி, அவ் விரலை அவ்வுந்தியினின்றும் விடுவிக்கவே, வட பாஷா சமுத்திரத்தை வாரியுண்டு வளமை கொண்ட சுலோகங் களைச் சோனுமாரியாகப் பொழிந்து இறுமாந்து ஒருவரையு மதி யாது ஒப்பற்று விளங்கு முத்தமகவியும் சித்தங் களிகூர்ந்து சிர மேற் கரங்களைக் கூப்பி யஞ்சலியஸ்தனுய், அம் மகாதவசியின் சர ணாரவிந்தங்களி லப்படியே சாஷ்டாங்கமாய்ச் சேவித்துக்கொண்டு புகழ்ந்து கொண்டாடவே, பராசரன் புதல்வனும் கருணைபூத்தவ ராய்க் காளிதாசனைப் பார்த்து, "ஹே! பக்தா! இனி நீ என்னுடைய கடாக்ஷ வீக்ஷணியத்தால் இக் காசினியில் கவீந்த்ரனுகக் கடவை! காவலரெல்லாங் கண்டு களிக்கும்படி அங்கங்கே உன் வரவுக்கு மெதிர்ப்பார். உன்னைக் கண்ணுரக் கண்டவரெல்லோரும் மகா கவிக ளாவார்கள்," என்று ஆசீர்வதித்து, "ஹே கவீந்திரா! நான் வட கைலாயத்தினின்று மகா பாரதத்தை ஏகசந்த கிராகியாய் மனப் பாடம் பண்ணிவந்து அதற்கேற்ற லேககனை அவனியெங்குந் தேடி யும் அகப்படாமல், அஞ்சலென்றவர்க் கருள்புரியுஞ் செஞ்சடாதாரி களாய் வஞ்சமற்ற மனதோடும் அஞ்செழுத்தையு மாதரவாகக் கொண்டு, அநுதினமும் பாடிப் புகழ்ந்து குஞ்சிதபாதத்தில் மனங் குழையவும் அதையே யாதரவாக நாடியிருக்கும் நல்ல பெரியோர்க ளால் நிறைந்த கைலாயத்தை யடைந்து, அதன் சிகரத்தை யலங் கரித்துக்கொண்டிருக்கும் அரவாபரணனைக் கண்டு, அநேகவிதமாய் உபசரித்து, "தேவ தேவ! அடியேனு மகாபாரதத்தை மனப்பாடம்

பண்ணி வந்தேன். அதை யெழுதி முடிக்க லேககர் எவருங் கிடைக்காமையால் தங்களிடம் வந்தேன். தேவரீரே யாரையாவது தயை செய்யவேண்டும்" என்றேன்.

அதற்கு அம் மகாதேவனும் அருகிலிருக்கும் ஐங்கரக்கடவுளைச் சுட்டிக் காட்டி "இதோ இருக்கிற நம்முடைய பெரிய பையனைக் கூட்டிக்கொண்டுபோய் உம்முடைய குறையை முடித்துக் கொள்ளும்" என்றனர்.

உடனே யானும் அவ் வுமாபதியைப் பணிந்து விடைபெற்று விநாயகரை யழைத்துவருகையில், அசைந்த நடைகொண்டு வரும் அவரோடு கூட அதிவேகமாகப் பின்னங்காற் புட்டத்திற் படும்படியோடி அங்கோரிடத்தில் நாங்க ளிருவரும் தங்கினபோது, அவரும் சுலோகத்தின் ஆரம்பத்திலேயே என்னைப் பார்த்து "அறனெறி வழாத அந்தணர்க்கரசே! அதிவிரைவாக யான் சப்தமாத்திரையாக சுருங்கியுள்ள (Shot-hand) சுலோகங்களை யெழுதிக்கொண்டு போவேன்; அரை க்ஷணமும் தாமதித்தல் கூடாது. தாமதித்தால் அப்படியே ஏட்டைப் போட்டுவிடுவேன்; உம்மையும் எட்டிக் குத்திவிடுவேன். அப்புறம் என் வழியே போய்விடுவேன்" என்னவே, அதற்குத் தபோநிதியும் "ஐயனே! அடியேன் ஒரு விண்ணப்பம். அப்படித் தாங்கள் எழுதிவரும்போது சுலோகங்களின் அர்த்தங்களைக் கவனித்தெழுதவேண்டும்" என்றதற்கு "ஆம்" என்று ஒப்புக்கொள்ளவே யானும், அப்படியே ஆயிரக்கணக்காய்ச் சுலோகங்களைச் சொல்லிவரும்போது அங்கங்கே அவருக்கும் யோசிக்கக்கூடிய அரிய சுலோகமொன்றை வரவழைத்து, அதையவர் கவனித்து எழுது முன்னமே ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக் கணக்காகவும் சுலோகங்களை ஆவாகனம் பண்ணிக்கொண்டு அதிவிரைவாகச் சொல்லிக் கொண்டுபோனபோது, நீ சொல்லியதுபோலவே சகாரப்பிரயோகங்கள் ஸஹஸ்ரக்கணக்காய் அதிகரித்தனவேயன்றி வேறில்லை" என்று வேதபாஷிகன் கூறவும், "காளிதாசனும், ஐயனே! அகண்ட பாற்கடற்கிறையே! அவனியிலே கவிகளாகவுள்ள அடியேங்கள் தேவர் திருவாய்மலர்ந்தருளிய திவ்விய பாசுரங்களைப்போல ஒன்றேனும் செய்ய வல்லோமோ? திவ்விய மங்கள சொரூபியாகிய சாக்ஷாத் பகவானே தேவர் திருவவதாரமென்றால், வேறே என்னவேண்டும்" என்று, அவர் உபய பாதங்களிலும் விழுந்து பணிந்து விடைபெற்றுச் சில நாளைக்கெல்லாம் சிறப்புற்றோங்கிய தாராநகரம் வந்து,

போஜன் சபையிற் புகுந்து, தான் போய்வந்த யாத்திரையின் பெருமையையும், அதில் தான் கண்ட அற்புதக்காக்ஷிகளையும், விற்பன்ன விவேகயோகிகளாலும் ஞானிகளாலும் அளவிடற்கு அரியவராய், எத்தனையோ கோடி ஜன்மங்களெல்லாம் பவசாகரத்தினின்றும் நீங்கி வீடடைவதற்கு வேண்டிய யாவும் குறைவறத் தேடிவைத்த நிறைபொருளாய், வண்டுகளெல்லாம் ரீங்காரித்து வட்டமிட்டுலவும் வளமை கொண்ட துளபமாலை யணிந்த மகாயோகியின்(வேதவியாசரின்) பெருமையையும், அவரால் வெளிப்பட்ட அற்புதங்களையும் ஆதியோடந்தமாய் எடுத்துச் சொல்லினன்.

அதைக் கேட்டு அப்படியே புளகாங்கிதத்தால் மெய்மறந்து, சற்று நேரத்திற்கெல்லாம் "உத்தமகவியே! உம்முடைய பாக்கியமே பாக்கியம்! உம்மைக் காண்பவர் சிலாக்கியமே சிலாக்கியம்! ஒப்பற்ற அம் மகாநுபாவரே-பாராசரன் புதல்வரே-உம்முடைய சுலோகத்திற்கு முவமை காணுது உள்ளங் களித்தனரென்ருல், உலகோர்க்கும் உம்மைப் புகழத் தரமோ?" என்று உபசரித்தனன்.

## மன்னன் மகாகவிக்கு மரண தண்டனை விதித்தல்

இப்படியாகச் சிலநாள் செல்லவும், போஜன் இந்திராணியைப் போலச் சுந்தரங் கொண்ட லீலாவதியின் மோகத்தால் ராஜ்ய விவகாரங்களைக் கவனியாது அந்தப்புரத்திலேயே யிருக்கவும், அதைக் கண்ட மந்திரியின் முயற்சியால் மன்னன் மந்திராலோசனை சபைக்கு வரவே, அங்கே அவன் மனது ராஜகாரியங்களிற் செல்லாது எங்கேயோ கவனித்திருந்து "மந்த்ரீ!" என்றனன்.

அப்போது அரசனுடைய குறிப்பறிந்த மந்திரியும், "தேவ! இப்படி அந்தப்புரமே கதியானல், இராச்சியம் எப்படி நடக்கும்? ஆகையால், இராஜ மகிஷியின் உருவப்படமொன் றெழுதி நினைக்குந்தோறும் அதைப் பார்த்துவரலாமே" என்றனன். அதற்கரசன் "ஆம்" என்று அருளவும், அப்போது அமைச்சன் ஆக்கினையால் சிற்பியொருவன் அந்தப்புரம் போந்து அரசபத்தினியின் இடது காத்தின் அஸ்தத்தை மாத்திரம் திரைக்கு வெளிப்புறத்தே கண்டு தரிசித்துக் குறிப்பெடுத்துச் சென்று அதனலேயே எல்லா அவயவங்களையும் அப்படியப்படியே யமையும்படிப் பாதத்தளவும் வரைந்துவந்து அப் பட மமைந்த அழகுக்காக ஆநந்தங்கொண்டு,

அப்படியே மயிர்வனப்பின் அந்தமெல்லாம் சொந்தமாகக் கொள்ளை கொண்டு அகண்டு பரந்த அழகிய நெற்றியின் அலங்காரமாக அமைக்கும் பொருட்டு கறுத்துப் பளபளத்துத் திரண்டு துளித்து உருண்டு நிற்கும் ஒப்பற்ற திலதத்தை உயரத்தூக்கி நெற்றிக்கு நேராகக் கொண்டுபோகும்போது உன்னதங் கொண்ட இடதுபக் கத்து முன்னங் தொடையிலே ஒருதுளி மைவிழவும், துணுக்குற்று "அரசன் என்ன சொல்வானோ? இந்தப்பட முதவாது; இன்னொரு படம்தான் எழுதவேண்டும்" என்று ஆரம்பித்து எழுதி முடிக்கும் போது முன்போலவே அந்த விடத்தில் மை விழுந்தது. அதைக் கண்டசிற்பி மனமருண்டு, இது எத்தனைப்பிரதிகளானாலும் சரியாய் வருகிறவரையில் விடுகிறதில்லை" என்று மறுபடியும் எழுத ஆரம் பித்து, எத்தனை எழுதினாலும் அத்தனையிலும் அந்த மை தப்பாமல் அங்கே விழக்கண்டு என்ன செய்வான் பாவம்! அப்படியே அசந்து, "ஐயோபாவமே! யாரிட்ட சாபமோ? எவர் கொண்ட திருஷ்டியோ? என்ன செய்வோம்?" என்று ஏங்கியிருக்கையில், பூங்கையிற் புஷ்பக் குடலையைத் தாங்கி அவ்வழியே செல்லும் காளிதாசனும் அப்படங் களின் வரிசையையும், சிற்பியினிலையையும் பார்த்து "ஹே! மகா சிற்பி? ஏன் முகவாட்டம்? என்ன "இப்படங்கள்?" என்ன, அதற்குச் சிற்பியும் "ஐயனே! அரசனுக்கினை இராஜ மகிஷியின் படத்தை எழுதிவரும்படி; இயற்கைப்பொருள்களின் பிரிவை இப்படிப்பட்டது என்று அறியும் அபாரகவீ! உமக்குச்சொல்லாமல் யாருக்குச்சொல் லப்போகிறேன்? அதற்காகஎத்தனைப் படமெழுதினாலும் அத்தனை யிலும் அதோ! அந்தவிடத்தில் மை தப்பாமல் விழுகிறது. 'அர சன் அதைக் கவனித்தால் என்ன செய்வானோ?' என்று எண்ணமிட் டிருக்கின்றேன். இது தான் என் கதி" என்றனன்.

அதற்கு மகாகவியும் புன்சிரிப்போடே, "ஹே! சிற்பி! அறி வில்லாமல் ஏன் இதற்காக இப்படிக் கலங்கினை? எப்போது மை அந்தவிடத்தில் தப்பாமல் விழ ஆரம்பித்ததோ, அப்போதே அது பிரமசிருஷ்டியால் அவ்விடத்தி லியற்கையாகவே யமைந்துள்ள வோர் மச்சமென்று கொள்ளலாகாதா! அதுவுமல்லாமல் அவள் கற் பின் மிகுந்த பத்மினிஜாதிப்பெண்; சகல லக்ஷணங்களோடுங் கூடி யிருக்கு மிவளுக்கு இது இன்றியமையாததாக இவனது செல்வ மிகுதியைக் காட்டிக்கொண் டிருக்கிறது. இதுதான் இதன் மர்மம். இதற்காக நீ அச்சப்படவேண்டாம். இதை நீ யிறைவனுக்குக்

காட்டலாம்" என்றதைக் கேட்ட படமெழுதுவோனும், "ஐயனே! அரசன் ஒருவேளை 'இது உனக்கெப்படித் தெரியும்?' என்றால் அதற்கு ஒப்பனையாக உம்மை யெடுத்துச் சொல்லலாமோ?" என்னவும், "ஆகா! தடையின்றி யப்படியே காளிதாசன்தான் சொன்னதாகச் சொல்லிவிடு!" என்று சொல்லிப்போயினன்.

உடனே சிற்பியும் உள்ளங் களிக்கவும் அப் படத்தை யெடுத்துச் சென்று அரசன்முன் வைத்து வாய்பொத்தி நின்றனன். அதைப் போஜன் வாம ஹஸ்தத்தில்வைத்து அதன் அழகைப்பார்த்துக்கொண்டேவருபவன், மைப்படிந்திருப்பதைக் கண்டு, "மந்திரீ!" என்றனன். உடனே மந்திரியும் "முச்சீ! ஏன் அந்த இடத்தில் மைப் பட்டது?" என்றனன். அதற்கு முச்சியும் அஞ்சிச் சொல்லுகிறேன்; அவ்விடத்தில் அம்மாளுக்கு ஓர் அழகிய மச்ச மிருக்கிறது" என்றனன்.

உடனே போஜனும் உறுத்த பார்வையோடே "உனக்கு அது எப்படித்தெரியும்?" என, அச்சித்திர லேககனும் அப்படியே அசந்து, உறை தடுமாறவும், வாய் பொத்திக்கொண்டு, "இது தங்கள் சமஸ்தானத்துக் கவி காளிதாசனால் எனக்குத் தெரியவந்தது" என்றனன்.

அதைக் கேட்டதும் அரசன் முன்னமே காளிதாசனைப்பற்றி யிதுவிஷயமாய்க் கலவரித்திருப்பவனாகையால், ஸ்திரீமானமென்பது சிந்தையி லுறுத்தவும், வேறொன்றும் யோசியாமல் காளிதாசனைக் கொலையாளிகள் வசம் ஒப்புவித்துச் சிரச்சேதம் செய்துவிடச் சொல்லினன்.

அப்படி அவர்கள் கையி லகப்பட்ட கலாரத்னமும் தன் அறியாமைக்குத் தன்னைத்தானே நொந்துகொண்டு 'அத்து மீறி இரகசியத்தை வெளியிடுவதால் அநர்த்தம் விளையும்'என்பதை நினைந்து, இதயங் கலங்கி, "ஹா ஜகதீசா! என்ன செய்தேன்? எனக்கு இந்த ஆபத்தா! ஆ! என் அம்மணீ! அரசன் வீணாகப் பிரமஹத்தியை வஹிக்கப்போகின்றானே! என்ன செய்வேன்? அவன் ராச்சியம் என்ன பாடு படுமோ! அவனுக்கென்ன கெடுதி வருமோ! அநேக பக்ஷிஜாதிகளெல்லாம் தங்கிப் பசியாற்றும் தழைந்த ஆலமரமாச்சுதே! அடியோடே பட்டுப்போமே! அவனுக்கேற்ற வார்த்தை சொல்லி ஆதரிப்பார் யாரோ? அவனிதயம் பூரிக்கும்படி யெடுத்ததற்கெல்லாம் சுலோகமாகவே கொட்டி இதம்செய்வாரும் உளரோ?

ஆ! ஜகதீசா! அநாத ரக்ஷகா! அழகிய தாராநகரமும் அடியோடே யழிந்துபோகுமே! இதுவும் யாரிட்ட சாபமோ? என்ன செய்வேன்? என்னாலும் அரசனுக்கு இக் கதி நேரிடவா?" என்றிப்படிக் கதறிக் கதறிப் புலம்பிக்கொண்டே போகும்போது, இருபுறத்திலும் சூழ்ந்து வந்த கொலையாளிகளின் கல்லான மனமுங் கரைந்து போகவே, இரக்கங்கொண்டவர்களாய் ஒருவரை யொருவர் பார்த்து சமிக்ஞையாகக் கூறிக்கொண்டனர்,

---

## கொலையாளிகளின் மனத் தளர்வு

"அடே அண்ணே! அரசர் புகழும் அபார கவி! போஜன் சபையின் புகழாபரணம்! கவிமழை பொழியும் காளமேகம்! இம் மகாகவியால்தான் மாதமும்மாரி பொழியவும் நாடெலாஞ் செழித்திருப்பது. ஓ மாமா! அடா தம்பி! உத்தம பிராமணன் சித்தங் கலங்கலாகா! வரகவி ஓடிப்போகட்டும்! விட்டுவிடுவோம்" என்று சொல்லிக்கொண்டே, கட்டை யவிழ்த்துக் காளிதாசனைப் பார்த்து, "ஹே கவீ! இதுதான் எங்களாலான வுதவி; எங்கேயாவது ஓடிப் பிழை! போ!" என்று சொல்லி விட்டுவிட்டனர்.

சதை புரளும்படிக் கட்டியிருந்த கட்டினின்றும் விடுபட்ட காளிதாசனும் அவர்களை வாழ்த்திக்கொண்டே அரசனுடைய க்ஷேமத்தையும் தேசச் செழிப்பையும் கோரினவனாய்ச் சரேலென்று போய்விட்டனன். அவர்களும் முயலின் இரத்தத்தால் கறைப்படுத்திய கத்தியைக் காவலனுக்குக் காண்பித்துச் சென்றனர்.

பட்டமகிஷியின் கற்பிற்குச் சங்கையைக் கற்பித்துச் சிந்தை வருந்திய பார்த்திபனும், 'இதுவும் பூர்வ கர்மமா? அறிவிற் சிறந்த நாம் இவ் வவமானத்தை யெப்படிச் சகிக்கிறது? இம் மகாகவிக்கு நாம் தண்டனை வகுத்ததும் சரிதான். நாம் இவன் ஸ்மரணையின்றி யிருப்பதே நலம்' எனக் கொண்டனன் நராதிபன்.

---

## காட்டு மிருகங்களின் உபத்திரவம்

குடிகள் முறையிட்டனர். இதன் பிறகு இளவேனிற் காலம் வந்தது. எங்கே பார்த்தாலும் இலைகளுந் துளிர்களுமாய்ப் பசச் சென்று விளங்கியது. துஷ்டமிருகங்களெல்லாந் தமதிஷ்டம்போல வெளியே வந்து திரிய ஆரம்பித்தன. ககனவாசிகளும் அங்கங்கே கிளைகளிலே தங்கிக் கீதம் பாடின. மந்தமாருதமு மலர்களின்மேற் புரண்டுவருவதால் மணம் எங்கும் பரவியது. அக்காலத்தில் அரணியவாசிகளெல்லாம் நாட்டிற் புகுந்து நரர்களை வருத்தவும், ககனவாசிகளெல்லாம் பயிர்களை யழிக்கவும், செய்வகை தேருது சிந்தை வருந்திய அந்த மாளவநாட்டு ஜனங்களெல்லாம் இராஜ தர்பாரில் கொலுவிலிருக்கும் போஜன்முன் போந்து விழுந்து பணிந்து தங்கள் குறைகளைச் சொல்லினர். அதைக் கேட்ட அரசன் அவர்களை யாதரித்து, அமைச்சரை நோக்கினன். அக் குறிப்புணர்ந்த அவர்களும்,

"கூட்ட வேடருங் கோலும்வை வேலுநா
யீட்ட முங்கொடு கானகத் தெய்திநீ
வேட்டை யாடி விலங்கின மாய்த்துப்பின்
நாட்டை யோம்ப னலனெனக் கூறினர்."

அதற்கரசன் "ஆம்" எனவே,

ஓடி னார்க ளுயர்வரைக் கானகம்
நாடி னார்கணந் நாயக னுங்களைத்
தேடி னனென்று செப்பலும் வந்தவன்
கூடி னோர்கள் குணங்குறி கூறுவாம்.

## வேடுவர் வருதல்

அரசன் பறைகொண் டறிவிக்கவே ஆயுதபாணிகளாய் முன் மயிரைவாரிக் கொண்டையிட்டு, முத்துமுதலிய சரங்களைத் தொங்கவிட்டுப், புஷ்பமணிந்து, கீற்றணிகொண்ட திலதமிட்டு, மணிவட மணிந்து, தட்டி ஜல்லடம் அரையி லிறுக்கிக், காலிற் செருப்பணிந்து, கூரிய வேலெடுத்துக் குலவி வந்தவர் வெகு பேர். அம்புப் புட்டிலிலே அநேக விநோதபாணங்களை நிறைத்துப், பரந்த மார்பில் பாரிய வில்லைத் தாங்கி, வெகுண்டபார்வையோடும்

விரைந்து வந்தவர் பலராம். பலகரையின் பத்திக்கொண்டு வெட்டுக்குங் குத்துக்கும் அசையாது, துஷ்டமிருகங்களின் தாக்குக்கும் சளையாது, வெற்றியைத் தரவல்ல வீரகவசம் பூண்டு, பலவித பிராணிகளையெல்லாம் சதைசதையாகப் பெயர்த் தெரியும் விதம் விதமான குணில்கொண்டு அணியணியாக வந்தவர் அநேகர். மதத்த யானைகளின் வெளுத்த தந்தங்களில் விளைமுத்தமும் உயர்ந்த மலைகளின் ஓரங்களிலே ஓங்கி வளருஞ் சிவந்த மூங்கில்களின் சிறுமுத்தமும் செறிந்த மாலை தாழ்ந்த மார்பினராய்க் காட்டுப்பன்றிகளின் கதித்தெழுந்த தந்தங்களாலாகிய மகரகண்டிகையைக் கண்டத்திற் றூங்கிக் கொன்று தின்பதையே கோரி வந்தவர் பலராவர்.

## வேட்டை நாய்கள் வருதல்

அங்கங்களிற் பூட்டியிருக்கும் சங்கிலிகளை யெல்லாம் அதஞ்செய்து, உறுமி, ஊளையிட்டுச், சினத்துத் தீப்பொறி பறக்கு விழியனவாய் நெறுங்கிவந்த வெண்சுணங்கு அனந்தமாம். சார்காலத்து மேககர்ச்சனை கொண்டு கனன்றுபேராழியின் முழக்கொலிகொண்டு உறுமி இருகால் மடக்கி யெதிரே தாவி முறுமுறுத்துச் சீறி வந்த செஞ்சுணங்கு அநேகமாம். கழுத்திற் கனகமயப் பட்டையணிந்து, தண்டை கிண்கிணி காலில் விளங்கவும், சிறுத்த இடையும் - சுருண்ட வாலும்-கதித்த முகமும்-நெறித்த புருவமுமாய்க் கண்டவர் கலங்கும் துண்டவெண்பிறைகள் இருபுறமும் விளங்கவும், நான்குபக்கமும் பார்வையைச் செலுத்தி நாடிவந்த ஞாளிகள் பலவாம். வாய் நீண்டு-வளமைகொண்ட மார்பகன்று-இடை சிறுத்து-மேலுயர்ந்து-செவி வளைந்து-கால் பருத்து-கண் சிவந்து-உறுமி வந்த கரிய நாய்கள் அனந்தமாம்.

## ஜயபூபாலன் வேட்டைக்குச் செல்லல்

இத்தகைய கிராம சிம்மங்களைக் கையடையாகக் கொண்டு காவலன் முன்னே போந்து சிரமேற் கரங் கூப்பி, "ஜெய! விஜயீபவா!" என்றனர். இப்படி வந்தவர்களோடு இளவரசாகிய ஜயபூபாலனும் வேட்டைக்குப் புறப்படவே, அகாலவருஷம் வருஷித்தது. அநேக துர்ச்சகுனங்க ளுண்டாயின. அப்போது மந்திரிகுமாரனும்,

"ஐயனே! அச்சத்தைக் கொடுக்கும் துர்ச்சகுனங்கள் உண்டாகின்றனவே! இவ் வுத்பாதங்களா லென்ன விளையுமோ? வேட்டைக்கு நாம் போகவே வேண்டாம்; வேடுவர் மாத்திரம் போகட்டும்" என்றனர். இளவரசும் புன்னகையோடே, இங்கு வந்திருக்கு மிவ்வளவு பேருக்கும் ஆவது நமக்கும் ஆகட்டுமே; இதற்காக அச்சத்தைக் கொள்வானேன்? அரசகுலத்திற் பிறந்த எனக்கு ஆலசியமேன்? புறப்படத்தான்வேண்டும்" என்றனன்.

அப்போது மந்திரிகுமாரனும் மனந் தளர்ந்து "மன்னவன் மகனே! இன்னமும் சொல்லுகிறேன். இவ் விஷயம் நாம் எவ்வளவும் பரீக்ஷிக்கத் தக்கதல்ல. எப்படி யொருவன் விஷத்தைச் சாப்பிடானோ, சர்ப்பத்தைத் தீண்டானோ, அப்படியே நாமும் அபாயத்தை முன்னிட்டு இதை நிறுத்துவதே சரி" என்றனன்.

அவைகளை யணுவளவும் சட்டைபண்ணாத இளவரசும் வில் அம்பு ஏந்தி, வேந்தன் சொல்லையுங் கடந்து, வேட்டைக்குப் புறப்படக்கண்ட வசந்தனும், மறுபடியும் தடுத்து, "மாளவ வேந்தன் மகனே! மதி மயங்கினையோ! ஏதோ இதில் உனக்கு ஓர் ஆபத்து இருக்கிறதுபோ லிருக்கிறது. இஃதென்ன பிடிவாதம்? சிற்றரசே! முன்னொருகாலத்திலே கெடி பெற்ற ரவிகுலோத்பவனான தசரதன் தவமே யுருவாய் வந்த ஸ்ரீரகுநந்தனனும் பூர்வகர்ம விசேஷத்தாலன்றோ பொன்மானையும் பின்தொடர்ந்து போனார். ஆகையால், வினைவலியை வெல்ல வல்லார் யாவர்? விபரீத காலத்திற்கும் விவேகத்தாழ்வென்பது விட்டுப் பிரியாத்துணை" என்று சொல்லி மௌனமுற்றனன்.

இவைகளை யெவ்வளவும் சட்டை செய்யாது இருமருங்கிலும் சேனை சூழ்வுற அடர்ந்த கிளைகளை யுடையனவாய்த் தொடர்ந்த நிழலைத் தரவல்ல மா, பலா, ஆல், அரசு, அத்தி, நாவல் முதலிய திவ்விய விருக்ஷங்கள் மலிந்து மிருக சிரேஷ்டங்களின் ஆசிரமங்கள் அடர்ந்த அரணியத்தை யடைந்து, சூரியன் மேலேகிளம்பி உஷ்ணத்தைக் கொள்ளுமுன்னமே, விதம் விதமான குரலெடுத்து விநோதமாகப் பாடவல்ல பக்ஷிஜாதிகளையெல்லாம் அதம் செய்து, கண்டவுடனே காற்றாய்ப் பறப்பனவும், தண்டாகாரமாய் வளைந்தோடி மறைவனவும், செண்டுபோற் கிளம்பிச் செல்வனவும், பாணத்தின் வேகத்திற்குப் பஞ்சாய்ப் பறப்பனவும், தூரத்திற் கண்டு உறுமித் தூரத்தி வருவனவும், பாரத்தையெல்லா முன் னோர்

பிற் றுங்கிப் பகைத்தெழுந்து பாய்ந்து வருவனவும், பார்த்தவுடனே பயங்காரூபத்தைக் காட்டிப் படீரென்று மேலே பாய்ந்து சேர்த்துப் பிடித்துச் சின்னபின்னம் செய்வனவும், எதிர்ப்பவர்களுக்கு அண்டுகொடாது அரைக்ஷணத்திலேயே யோடி மறைவனவுமாகிய துஷ்டமிருகங்களை யெல்லாம் இஷ்டம்போல வேட்டையாடி, அங்கே யொரு சோலையிற் றங்கி யிளைப்பாறிச், சேனையோடுந் திரும்பும்போது அருக்கனு மேற்கடலிலாழும் சமயமா யிருந்தது.

அப்படியவர்கள் சிறிது தூரம் போகும்போது, பார்க்கும் போதே பயங்கரத்தை விளைவிக்கும் பதினறடி வேங்கையொன்று பாய்ந்து வந்து படை நடுவில் விழவே, பதாதி யொருபுறமும் பார்த்திபன் மதலைஓர்புறமுமாகப் படையானது தட்டுத் தடுமாறிப் பட்டணம் போய்ச் சேர்ந்தது. ஜயபூபாலனும் தான் ஏறியிருந்த குதிரையோடே கூடப் புலியாற் றுரத்தப்பட்டு அதிவேகமாகப் போய்க்கொண்டிருக்கையில், அங்கே யொரு தழைந்த நாவன் மரத்தின் கிளையொன்றைப் பற்றினன். உடனே குதிரையும் ஓடிப்போய்விட்டது. தன்னைத் தொடர்ந்து வந்த வேங்கையோ, அம் மரத்தடியிற் றுனே தங்கி அரசன் புதல்வனையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தது.

எமன் கையினின்றுந் தப்பியதாய் எண்ணிய ஏந்தலுக்கு அப்படி எண்மடங்கு அதிக பயத்தை விளைவிக்கும் பாரிய ஜந்துவும் அப் பாதவத்தின் உச்சியினின்றும் இறங்கிவரக் கண்டனன். என்ன செய்வான் பாவம்! இறைவன் மகன், மேலே பார்த்தாலோ, கூறிய நகங்களையுடைய கறுத்த கரடி; கீழே பார்த்தாலோ காத்திரமெல்லாம் நடுங்கச் செய்யும் வியாக்கிரராஜா; நடுநடுங்கிப் பிடித்த பிடியோடே அப்படியே யிருந்துவிட்டனன்.

அப்போது அக் கரடியும் இறங்கி வந்து, இராஜகுமாரனைப் பார்த்து, அருள் சுரந்து, "அப்பா! இராஜகுமாரா! அஞ்சாதே! அபாய மில்லை. அப் பாரிய புலியி னிலக்குக்குத் தப்பித்துக்கொண்டாய்" என்று கருணாநிதியாய்ச் சொல்லியது.

காவலன் மகனுக்குக் கவலை யொழிந்தாலும் அச்சத்தோடே உள்ள முடைந்தவனாய், உரை தடுமாறவும், மெல்லிய குரலோடே, "ஹே! கானகவாசி! கார் குஞ்சிகமே! 'அபயதானம் ஆயிரம் வேள்விகளைவிட அதிகரித்தது' என்ற இளவரசின் சொல்லைக் கேட்டு இத

யம் பூரித்த கரடியும், அவனுக்கு அநேக விதத்திலும் நம்பிக்கை யுண்டாக்கியது. அடிமரத்தி லிருந்த வேங்கையு மவைகளையெல் லாங் கவனித்திருந்தது. அப்போது அருக்கன் மேற்கடலி லாழவும் இருள் மூடியது.

வேந்தன் மகனும் வேட்டையாடிய களையினுலும், வேங்கை துரத்திவந்த பயத்தினுலும், கரடியைக் கண்டு கலங்கியதாலும், அப்படியே களைவந்து மூடவும், கரடியைப் பார்த்து, "ஜீவகாருண யனே! இதோ யான் அமோகமான நித்திரையி லாழ்கின்றேன்; உனக்கு அபயம்! அபயம்!" என்றனன்.

அப்படிச் சோர்ந்து விழுந்த ஜயபூபாலனை அப்படியே அணைத் துப் பிடித்துத் தன் தொடையின்மேல் படுக்கவைக்கவே, அயர்ந்து தூங்கினன். அப்போது புலியும் கருமேனியைப் பார்த்து, "நண்ப! இவன் யார் தெரியுமா? எப்போதும் நம்மை வேட்டை யாடவல்ல வேந்தன் மகன்; நம்மை வதம் செய்யும்படி வனத்திற்கு வந்தவன். எப்படி நீ யிவனை உன் தொடையில் நித்திரிக்கச் செய்கின்றனை? என்ன உபகாரத்தைச் செய்தாலும் இவன் எழுந்ததும் உன்னை யுயி ரோடே விடப்போகிறதில்லை. நரர்களுக்கும் நன்றியுண்டோ? ஆகை யால், இவனை நீ கீழே தள்ளிவிடு; நான் அவனை ஆகாரமாகக் கொண்டு செல்கின்றேன்" என்றதைக் கேட்ட கரடியும், "ஹே நண்ப! என்ன சொன்னுய்? இவனை நான் கீழே தள்ளவும், நீ ஆகார மாய்க் கொண்டு செல்லவா? என்னையு மிவ்வளவு கேவலமாய் நினைத்துவிட்டையே! என்னைச் சரணுகதி யடைந்த இவன் எப்ப டிப்பட்டவனுனுலும், இவனுக்கு எவ்வளவும் அபாயத்தைக் கரு தேன். ஓ மிருக சிரேஷ்டனே! நன்றி மறப்போர்க்கும், நாடினே ரைக் கைவிடுவோர்க்கும், நல்லவர்க்குக் கெடுதலை நினைப்போர்க்கும் மீளாத நரகப்பிராப்தமே என்பதை யறிந்திருந்தும் எப்படி நான் இவனைக் கீழே தள்ளப்போகும்?" என்றது.

இப்படி இம்மிருகசிரேஷ்டங்களிரண்டும் வாதாடிக்கொண்டிருக் கையில், வேந்தன் மகனும் விழித்துக்கொண்டனன். அப்போது கரடி, அற்பப்பிராணியாகிய நாம் இவ்வளவு தர்மத்தை யொட்டி வாதித்தோமே. இவனே பகுத்தறிவுற்ற மானிடன்; அதிலும் அர சன் புதல்வன்; தர்மத்தைப் பரிபாலிக்கவேண்டியவன்; இவன் எண் ணத்தை யறிவோம்" என்று, "ஹே! இராஜ புதல்வா! இவ்வளவு நேரம் என் தொடையில் படுத்துறங்கினையே; இதோ எனக்கும் நித்

திரை வருகிறது; எதோ! உன் துடையின்மேல் நித்திரிக்கட்டுமா?" என்றது.

உடனே இளவரசும், "இதுவோ துஷ்டப்பிராணி; இஷ்டம் போல நடவாவிட்டால் என்ன செய்யுமோ?" என்று பயந்து, "ஐயா! மிருகசிரேஷ்டனே! அப்படியே சித்தம்" என்றனன். அப்போது கரடியும், "நண்ப! யாதொரு பயமும் வேண்டாம். இதோ நான் நித்திரை போகின்றேன். பிறர் சொல்லால் மனம் பேதியாதே" என்று சொல்லி இறைவன் மகனுடைய தொடையின்மேல் தலை வைத்துக் குறட்டை விட ஆரம்பித்தது.

அப்போது மரத்தடியிலிருந்த வியாக்கிரமும், "இறைவன் மகனே! இந்தக் கருமேனியை என்னென்று நினைக்கிறாய்? சபல சித்தத்தால் ஆபத்தை விளைவிக்கக்கூடியது. இதை நம்பி மோசம் போகாதே. எழுந்ததும் உன்னைப் பக்ஷித்துப்போடும். சந்தேகம் வேண்டாம். ஆகையால், இக்கரடியை இப்படியே தள்ளிவிடு! இதை என் ஆகாரமாகக் கொண்டு எங்கேயாவது போய்விடுகிறேன்" என்றது.

அவ் வார்த்தையால் மதிமயங்கிய ஜயபூபாலனும் முன்பின் யோசியாமல் அக் கரடியை அப்படியே தள்ளிவிட்டனன். அதற்கு முன்னமே ஆபத்தை யுன்னி அதிஜாக்கிரதையி லிருந்த அக் கரடியும் தலைகீழாக வருகிறபோது அங்கே தட்டுப்பட்டக் கிளையொன்றைப் பற்றிக்கொண்டு தொத்தி மேலே வரவே, இன்னது செய்வதென்று தோன்றாது அப்படியே அசந்து மெய்ம்மறந்தனன்.

உடனே, மேலேறி வந்த அக் கரடியும் அவனுடைய வலது கரத்தைப் பிடித்துக்கொண்டு, ஏற இறங்கப் பார்த்துக், கோபக்குறியைக் காட்டி, "அடா பாபி! அரசப்பதரே! ஹே துஷ்டா! என்ன வேலை செய்தாய்? எதையும் பிடுங்கித் தின்னவல்ல யானுமல்லவோ உன்னைப் பக்ஷிக்கும்படி துரத்தி வந்த பாரிய புலிக்குத் தப்புவித்தேன். அபயாஸ்தங் கொடுத்தேன். ஹே துராத்மா! இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தையா? ஏ பரமதுஷ்டா! ஏன் இப்படி நடுங்குகிறாய்? இதுவும் உன்னுடைய பூர்வஜன்ம விசேஷமாக்கும். நாவை நீட்டு என்று கூறி அதிலே நாவலிலையின் காம்பினுனியால், ஸஸேமிரா என்று எழுதியது.

---

இவ்வாறு எழுதியதும், "ஹே! மித்திரத் துரோகி! இதுமுதல் இவ்வெழுத்துக்களையே ஸ்மரித்துக்கொண்டு இக் காட்டிலேயே திரிந்துகொண்டிருக்கக்கடவாய்" என்று சபித்து, அப்போது அருணோதய தருணமாயிருக்கவும், அவ்விடம் விட்டு அகன்றுபோய்விட்டது. புலிப்போத்தும் நிராசையாய்ப் புதரில் விழுந்தோடி மறைந்தது. அதுமுதல் தனக்கிருந்த மாநுஷகிருத்தியங்களெல்லா மாறி விகார ரூபத்தோடே ஆகாராதிநித்திரையு மற்றவனாய் 'ஸஸேமிரா' என்று சொல்லிக்கொண்டே அரணியத்திலே சஞ்சரிக்கையில், அங்கிருக்குந் துஷ்டப் பிராணிகளும் கிருமி கீடங்களும் இவனைக் கண்டவுடனே "இவன் மகாபாபி" என்று மறைந்துகொள்ள ஆரம்பித்தன. இப்படி எல்லாப் பிராணிகளாலும் இகழப்பட்டவனாய் நிர்ப்பயமாய்த் திரிய ஆரம்பித்தனன்.

இது இப்படியிருக்கவும், இவன் ஏறிச் சென்ற குதிரையானது கடைசியாகத் தனித்துப் பட்டணம் வரவே, அதை அரசனுக்கு அறிவித்தனர். போஜனும் தனித்து வந்த குதிரையால் சிந்தை வருந்தி, அமைச்சர்களைக் கூவி மூர்ச்சித்தனன். பிறகு மூர்ச்சை தெளிந்து அதிநுட்பசாலிகளாகிய அமைச்சர்களும் அநேக வீரத் தலைவர்களும் சூழும்படி ஜயபூபாலனைத் தேடிச் செல்லும்போது அங்கேயொரு மூலையினின்று அதிதூரத்துச் சத்தமாய்த் தங்குதடங்கலில்லாமல் "ஸஸேமிரா" என்ற சொற்கள் செவியில் வந்து அடிபடவே சற்று நிதானித்தனர்.

அப்போது போஜனும் "அதோ வருகிற அந்தச் சப்தம் என் மைந்தன் குரலாகத்தான் இருக்கிறது. அமைச்சர்களே! வீரர்களே! அதி விரைவாய் நாடுங்கள்! தேடுங்கள்! என்னைக் கூவுங்கள்!" என்று அனுப்பினன். அப்படிச் சென்றவர்களை அலக்ஷியம் செய்தவனாய் அவர்களுக்கு முன்னே விழுந்தோடி அங்கே யொரு ஆலமரத்தினீழலிலே அங்கமெல்லா மாறித் தங்கநிறச் சாயல் குன்றவும் புழுதி கொண்ட மேனியனாய்க் கிழிபட்ட பட்டாடைகளெல்லாம் விழுதுகள்போல நான்கு பக்கங்களிலும் அலையவும் மகரிஷியைப்போலத் தோன்றிய கான்முளையைக் கண்டு ஆநந்தங் கொண்டு, கவலை மிகுதியால் உள்ள முடைந்தவனாய், வரைபோன்ற புஜத்தில் வாரியணைத்துக்கொண்டு, தாரைதாரையாகக் கண்ணீர் மல்கவும், "அப்பவே

சொன்னேனடா! அபாயம் வரு மென்றேனே! அசட்டை பண் ணிச் சென்றையே! அநேக துன்பங்களை யனுபவித்தையோ? கோபத்தைக் கொண்ட கொடிய மிருகங்கள் துரத்தவும் என்ன துய ரங் கொண்டையோ? வாய் திறந்து சொல்லடா!" என்று உறுத்திக் கேட்கவும், இப் புவியின் வாழ்க்கையை யடியோடே மறந்தவனுய் மோனமுற்றிருந்த ஜயபூபாலனும் தன் தந்தை கேட்ட கேள்விக்கு உத்தரமாக, "ஸஸேமிரா" என்றனன்.

அதைக் கேட்ட அரசன் முதலிய எல்லோரும் ஆச்சரிய முற்று "அப்படியென்றல் என்ன?" எனவும் அதற்கும் "ஸஸேமிரா" வையே சொல்ல, மனவருத்தமுற்ற மன்னவனும் கடவுளைத் தொழுது அவ்விடம்விட் டகன்று, அரண்மனை வந்து, அநேக மந் திரவாதிகளாலும் பயன்படாமற்போகவே, செய்வகை தோன்றது சிந்தை வருந்தி, "மந்திரீ! இன்பகவியாகிய காளிதாசன் மாத்திரம் இப்போது இங்கே யிருப்பானுனல் இதை இன்னதென்று இப்போதே வெளிப்படுத்துவனே! கோபத்தாலன்றே அவனைக் கொலையாளிகள் கையி லொப்புவித்தேன். விளக்கொளிபோ லெதையும் விவரிப்ப னே. உள்ளக் கருத்து அறியும் வள்ளலாச்சுதே! மந்திரி! என்ன செய்வேன்? மாயையினு லல்லவா மகா வித்துவானை மரணதண்ட னைக்கு உள்ளாக்கினேன். மகா பாபம்! மகா பாபம்!! என்னவோ உளறிக்கொண்டிருக்கும் என் கான்முளையின் வினை தீர்ப்போர்க்கு என் இராச்சியத்தில் ஓர் பாகம் சொந்தமாகவும், எல்லாச் சுகத் தையு மநுபவிக்கலாம். இப்படியே பறையறைவிப்பாய்" என்னவே, அப்படியே அங்கங்கே அரசன் கருத்தை யறிவித்தனர்.

இறைவன் கருத்தை இன்னதென்றறிந்துக்கொண்ட இணையில் லாத கவீந்திரனும் 'இதுதான் சமயம்' என்று முண்டிதத் தலை யினளான அமங்கலையின் வேஷம் பூண்டு, வெள்ளைத் துகிலுடுத்து, வெளியே வந்து எப்படியோ வேந்தன் சபையை யடைந்து, திரை மருங்கி லிருந்துகொண்டு, தாராளமாய் வாய் திறந்து, "பாராளும் வேந்தே! உம்ம பாலனுக்கு ஏதோ வியாதி என்றர்கள். எனக்கும் உபாயம் தெரியும். உம்முடைய பாலனுக்கு உற்ற அபாயத்தைப் போக்குவேன். உத்தாரம் தாரும். உத்தமனே!" என்றனள்.

அதற்குப் போஜனும் குலுங்க நகைத்து, ஆயுர்வேத பண்டிதர் களுக்கும், அநேக தேவதைகளை யெல்லாம் ஆட்டிப் படைக்கு மந் திரவாதிகளுக்கும் பிடிபடாத வொன்றும் உனக்குப் பிடிபடவா?

இதுவும் உன்னு லாகக்கூடிய காரியமல்லவே" என்று சொல்லி மௌமுற்றனன்.

அப்போது அமைச்சனும் "அப்படியல்ல; ஏதோ இவள் கைராசிக்காரிபோலத்தான் காணப்படுகிறது. அப்படியில்லாவிட்டால் இவளுக்கு இவ்வளவு தைர்யமோ; எந்தப் புத்தில் எந்தப் பாம்பிருக்குமோ? ஏதோ இதையும் பார்த்துவிடுவோமே" என்ன, மன்னன் அதற்கு "ஆம்" எனவும், அரசன் ஆக்ஞையால் திரையொன்று போடப்பட்டு அதற்கு வேண்டிய யாவும் சித்தமாயின. அறிவிற் சிறந்த பிரமுகாளும் பெரியோர்களும் இவ் வாச்சரியத்தைப் பார்க்கும்படி ஒன்று கூடினர். பால யௌவன விருத்தராயுள்ள புர ஜனங்க ளெல்லோரும் போஜன் சபையை யடைந்தனர். அப்போது இந்திர சபைபோல விளங்கிய போஜன் சபாமண்டபத்திற்கு ஜய பூபாலனைக் கொண்டுவந்தனர். அவனும் ஓர் பொற்பீடத் தமர்ந்து ஏதோ ஒன்றைக் கவனமாய் உற்றுப்பார்ப்பவன்போ லிருந்தனன்.

தற்பவமாக வெளிப்படப்போகும் சுலோகங்களாலேயே தராதிபன் மகனுக்கு வினை தீர்க்க வந்து திரைப்புறத்திருக்கும் விதவைப் பிராமணத்தியும் வேந்தன் சபை யமைந்த லக்ஷணத்திற்கும், கற்றோர்களின் கூட்டத்திற்கும், மற்றோர்களின் ஆட்டத்திற்கும் சந்தோஷித்துச், சபையை யொருதரம் அடங்கப் பார்த்து, 'இறைவனுக்கு நம்மை இன்னாரென் றெடுத்துக் காட்ட இதுதான் சமயும்' என்று எதிர்ப்பார்த்திருந்தனள்.

அரசனும் சபையி லெழுந்தருளினன். அப்போது சிந்தை யழிந்து மோனமுற்றிருக்கும் சிற்றரசைப் பார்த்துத் திரைப்புறத் திருக்கும் மறைக்குலத்து மாமணி விளக்கும் "ஹே இராஜகுமாரா!" என்றனள். அதற்கு உத்தரமாக, "ஸஸேமிரா" என்றனன் ஜயபூபாலன். அப்போது பார்ப்பன விதவையும்,

> சு: ஸத்பாவம் ப்ரதி பந்நாநாம் வஞ்சநே கிம் விதக்ததா |
> அங்கமாருஹ்ய ஸுப்தாநாம் ஹநநே கிந்து பௌருஷம் ||

(இ - ள்) "ஹே இராஜகுமாரா! சுபாவத்திலேயே நல்ல மனதை யுடையவர்களிடத்திலே வஞ்சனை என்னடா? தொடையிற் படுத்துத் தூங்குவோரைத் தொலைக்க நினைத்ததும் கெட்டித்தனமோ?" என்னும் சுலோகத்தைச்சொல்லக் கேட்டதும் இளவரசன் சொல்லிக்கொண்டிருந்த ஸஸேமிராவில் ஸ வொழிந்துபோக

வும், "ஸமிரா" என்று சொல்ல ஆரம்பித்தனன். உடனே அங்கிருந்த எல்லோர்க்கும் ஒருவித மயிர்க்கூச்சிடவே தேகமெல்லாம் புளகித்தது. அவர்களில் சில பெரியோர்கள், "இவள் சாக்ஷாத் சரஸ்வதியே" என்றனர். மறுபடியும் அப் பிராமண விதவை "இருநிலங் காக்கு மிறைவன் மகனே?" என விளித்து,

ஸ்லோ: ஸேதுந் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய கங்கா ஸாஹர ஸங்கமம் |
ப்ரஹ்ம ஹத்யா ப்ரமுச்சேத மித்ரத்ரோஹோ நமுச்யதே ||

(இ - ள்) "என் அப்பனே! என்ன செய்வேனடா! சேதுவையும், கங்கையையும் சமுத்திரங் கூடுமிடத்தையும், பார்க்கக்கூடிய ஒருவனுக்கு ப்ரஹ்மஹத்தியாதி பாதகங்களெல்லாம் பறந்துபோகுமே! ஆனால், நீ செய்த மித்ரத்ரோகத்திற்கு உண்டாம் பாதகத்தைப் போக்க யாதொரு சாதகத்தையுங் காணேமே" என்ற சுலோகத்தைச் சொல்லினள்.

இந்தச் சுலோகம் காதில்விழவும் இரண்டாவதெழுத்து மறைந்தது. ஜயபூபாலனும் "மிரா" வென்று சொல்ல ஆரம்பித்தனன். அங்கிருந்த எல்லோர்க்கும் அத்தியாச்சரியமாய்விட்டது. சில பெரியோர்களாயுள்ளவர்கள் இவளை முதலில் கேவலம் ஸ்திரீயாகவே எண்ணினோம். இப்போது பார்த்தாலோ, எப் புவனமுங் காக்கும் ஒப்புவமை யில்லா உலகமாதாவாக விளங்குகின்றனளே! இவளுடைய கண்டத் தொனியும், வாசாருடியும் சுஸ்ஸ்வரமாகத்தானே வெளிப்படுவனவும் தெளிவுற்றனவுமான சுந்தரங் கொண்ட பதத் தொடர்ச்சியையும் அவைகளில் இயற்கை யமைப்பையும் - ஆழ்ந்த கருத்தையும் - கெம்பீர நடையையும் கவனித்தால் காவலர் புகழும் காளிதாசனே காவலனுடைய கடுந் தண்டனையால் காய மிழந்தவன் மாயமா யிவ்வுருக்கொண்டு வந்ததாகத் தான் யூகிக்கவேண்டும்" என்றனர். அப்போது மறைவிலிருக்கும் அந்தணமாதும், பொன்னணியாரம் பூணும் புகழ்போஜன் மகனே! இன்னும் நீ செய்த குற்றம் எப்படிப்பட்டதென்றால்,

ஸ்லோ: மித்ர த்ரோஹீ க்ருதக்நஸ்ச யஸ்து விஸ்வாஸகாதுகః |
த்ரயஸ்தே நரகம் யாந்தி யாவச்சந்த்ர திவாகரோ ||

(இ - ள்) "மித்திரத் துரோகியும், செய்ந்நன்றி மறப்போனும், நம்பினோரைக் கைவிடுவோனும் இவர்களடா! ஹே குழந்தாய்!

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்பதற்கு இலக்காகி உவாமதியமும் திவாகரனுமுள்ளளவு மொழியாத நாகவேதனையி லுழலுவர்'' என்றனள்.

இந்தச் சுலோகமானது இளவரசின் காதில் விழவும் காடியின் சாப வலுவு குறைந்து மூன்ருவதெழுத்தாகிய மி மறையவே ரா வைமாத்திரம் ஸ்மரித்துக்கொண்டிருந்தனன். ஒவ்வொரு வார்த்தையும் ஒப்பற்ற ஜீவரத்தினம்போல் வெளியாகி அங்கிருந்தவர் ஆகமெல்லாங் கொள்ளைகொள்ளவும் அப்படியே மெய்ம்மறந்தனர். அறிவிற்சிறந்த பெரியோர்களெல்லாம் மற்றதையுங் கவனிப்போமென்று ஆவலா யெதிர்பார்த்திருந்தனர். மன்னவனுடைய பொன்மயமாகிய சபாமண்டபமும் மகா சோபிதங் கொண்டது. அப்போது அவ்வேத வித்தகியும் அரசனைப் பார்த்து,

சு: ராஜந் போதவ புத்ரஸ்ய யதிகல்யாணி மிச்சஸி |
தாநந்தேஹி த்விஜாதிப்யோ வர்ணாநாம் ப்ராஹ்மணோகுரு: ||

(இ - ள்) "ஹே இராஜாதிராஜா! ஹிரணிய பூபதி! அருமையான உன் குழந்தைக்கும் க்ஷேமத்தை விரும்பினுல் வருணாசிரமங்கள் நான்கிலும் சிறந்தது பிரமத்துவம். அதை யநுசரித்தவர்கள் பிராமணாள். அப்படிப்பட்ட பிரமக்ஞானிகளுக்குப் போதுமான அளவுக்குப் பொன்னை வாரித் தானம் செய்வாய்'' என்ற சுலோகத்தைச்சொல்லக்கேட்ட ராஜகுமாரன் சொல்லிக்கொண்டிருந்தா "ரா" வும் மறைந்தது. சபை முழுதும் இதயம் பூரித்தது. கொற்றவன் மகனுக்குற்ற குணதோஷங்களெல்லாம் நீங்கவும், ஒளிவிட்டுப் பிரகாசித்தனன். அப்போது தனக்கு முன்பு அறிவு உண்டாகவும் தான் வேட்டைக்குச் சென்றதுமுதல் தன் தந்தையைக் கண்ட வரையிலும் நடந்தவைகளை யொன்றொழியாம லெடுத்தோதினன். அதைக்கேட்ட அங்கிருந்தோரெல்லோரும் அப்படியே திகைத்துப் போயினர். அப்போது அழகிய தாமரைபோன்ற கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் பெருகவும், ஆகமெல்லாம் புளகிக்கவே உரை தடுமாறும்படிப் பிராமண ஸ்திரீயைப் பார்த்துப் போஜன்:

சு: க்ராமே வஸஸி கௌமாரி விபிநம் நைவகச்சஸி |
ருக்ஷ வ்யாக்ர மநுஷ்யாணாம் கதம் ஜாநாஸி பாஷிதம் ||

(இ - ள்) "விப்ரகுலம் விளங்க வந்த சுப்ரதீப சுகுணரத்னமே! நீயோ நாட்டிலிருப்பவள். அதிலும் அரைவீட்டி லிருப்பவள். அப்படிப்பட்ட உனக்கும் அகாதமான அடர்ந்த காட்டிலே அகோரமாகிய காடியென்ன, பயங்கரத்தை விளைவிக்கும் பூதிநறடி

வேங்கையென்ன, இன்னது செய்வதென்று வகைதோணுது இதயங் கலங்கிய என்கண்மணியென்ன, இவர்களுக்குள் நடந்த சம்பாஷணை யுனக்கெப்படித் தெரியவந்தது? தாயே!" என்று கூறினன்.

இதைக் கேட்டதும் அவ் வேதோத்தமிக்கு எங்கு மில்லாத ஆசைப்பெருக்கானது அணை கடந்த வெள்ளம்போலாய்விடவே ஆநந்த பாஷ்பமானது அபாரமாய்த் தன் கண்களினின்றும் புறப் படவும், தன் கவலையைச் சொல்லளவி லமைக்கமாட்டாது தேம் பித் தேம்பி கண்ணீரளவி லெடுத்துக்காட்டுந்தன்மைபோலத் தனக் குற்ற ஆத்திரத்தையெல்லாம் உள்ளடக்கினவளாய், விம்மிய குர லோடே ஒருவிதசலிப்போடே, "உத்தமருள் நித்தியனே! உவராழி சூழும் இவ் வுலகை ஒரு குடைக்கீழ் ஆளும் சத்தியனே! இத் தேவ ரகசியமும் எனக்கெப்படித் தெரியுமென்று கேட்கின்றீர்? எப்படி யென்றால்,

சு: தேவத்விஜா ப்ரஸாதேந வாணீ ஜிஹ்வா மமாஸ்ரிதா |
தேநாக மநு ஜர்நாமி பாநு மத்யா யதாங்கிதம் ||

(இ - ள்) "தேவப் பிரஸாதத்தாலும், பிராமணப் பெரியோர்க ளின் ஆசீர்வாதத்தாலும், திவ்வியமான அறவிந்தத் துறையும் அம்ஸ வாஹனியும் என் நாவை ஆச்ரயித்திருக்கின்றனள். அவ ளுடைய பூரண கடாக்ஷமாக்கும் ஆதவனைப்போல முகவொளி கொண்ட லீலாவதியின் உன்னதத்தொடையின் மத்தியிலே மைப் பட்டிருந்ததும், முன்னொரு காலத்திலே புகழ்கொண்ட மகாகவிக்கு எப்படித் தெரியவந்ததோ அப்படியே இதுவும் எனக்குத் தெரியவந் தது என் ஐயனே!" என்று சொல்லவே, அரசன் எடுத்துப்போட் டவனாய்ச் சிம்மாதனத்தினின்றுங் கீழே குதித்துத் திரையைக் கிழித்துக்கொண்டு உள்ளே சென்று, அந்தணவிதவை யென்பதை யும் கருதாமல் அப்படியே அவள்மேல் விழுந்து கட்டிக்கொண்டு, ஆருத துயரத்தை யப்படியே யுள்ளடக்கி அதனு லுண்டாம் விம் மிதத்தாலே தேம்பித் தேம்பி அப்படியே மூர்ச்சைபோயினன். அப்படித் தன்னைப் போஜன் அணைத்துப் பிடிக்கவே, அபாரமான தன் அன்பெல்லா மவன்மேலாகவும் அம் மகாகவியு மப்படியே அயர்ந்து ஆவிபோனவன்போ லாயினன். இவர்க ளிருவரும் வெகு நேரம் வரைக்கும் இப்படியிருந்து மூர்ச்சை தெளியவும், ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு க்ஷேமம் விசாரித்துத் தேறித்தெளிய வே, "ஹே என்னுயிர் நண்ப! மகா கவி! எப்படி நீ யுயிர் தப்பினுய்?

இத்தனை நாளும் எங்கே யிருந்தாய்? என்னைப் பிரிந்திருக்க உன் மன மெப்படி மொப்பியது? உன்னை மறுபடியுங் கூட்டுவிக்கத் தானோ என் இளவரசுக்கு இத்தனைக்கஷ்டம் வந்தது. என்னுடைய பூர்வபுண்ணியமாக்கும் உன்னை நான் உயிரோடுங் காணப்பெற்றது. இனி என்னை விட்டுப் பிரியேனென்று ஏதோ கைபோட்டுத் தாரும் பார்ப்போம்'' என்றனன்.

இதைக் கேட்டதும் மகாகவி மன்னவனை யேறெடுத்துப் பார்த்துப் புன்னகையோடே, "என்னை இவ்வளவென் றறிந்துகொள்ளாத வுன்னை நம்பி எப்படிக் கைபோட்டுக் கொடுப்பேன்? சந்தேக புருஷனுச்சுதே! உன்னையும் நம்பவோ?'' என்றிப்படி வேடிக்கையாய்ச் சொல்லவும், அரசன் வெட்கித் தலைகுனிந்தவனாய், "ஹே! அபார கவி! என்ன அபாரதத்தை நான் செய்திருந்தாலும் இதயத்தில் வைக்கவேண்டாம்'' என்று சொல்லி, மந்திரியைப் பார்த்து, என் இக பாக்கியத்தைத் திரும்பவும் எனக்களித்த உன்னைப்போன்ற வுத்தமன் உலகிலுண்டோ? உன்னுடைய ஒப்பற்ற யூகைத்திறத்தாலன்றோ உய்வகையானேன்'' என்று பலவாது புகழ்ந்தனன.

புர ஜனங்களெல்லாம் ஒருவாக்காக "ஆ! இவ் விளவரசுக்கு என்ன பாக்கியம்! இப் போஜன் என்ன புண்ணியவான்! இந்தப் பிராமண ஸ்திரீயாய் வந்த காளிதாசன் என்ன கருணாநிதி! ஆகா! இவன் யாரோ முன் ஜன்மத்தில் நல்ல தவம் செய்திருக்கவேண்டும்; இல்லாவிடில் இப்படி யமைவது அருமை! அருமை!!'' என்று சொல்லிப் போயினர். இவ்வற்புதமானது எங்கும் பிரசித்தியா யெல்லாராலுங் கொண்டாடப்பட்டது.

## ஸ்ரீரங்கநாதர் கருடாருடராகக் கவீந்திரனுக்குக் காக்ஷி யளித்தல்

இவ்வாறு சிலநாள் செல்லவும், காளிதாசன் சேதுவுக்குப் பிரயாணமாகிப் போகும்போது வழியில் ஸ்ரீரங்கத்தையடைந்து அதன் வைபவங்களையெல்லாங் கவனித்துக்கொண்டே கோயிலினுள்ளே சென்று சந்நிதிக்கு நேராக வரும்போது அர்ச்சகர்கள் கோவிற் கதவங்களைச் சாத்துக்கொண்டிருக்கப்பார்த்துச் "சுவாமியைச் சேவிக்க வேண்டும்; சந்நிதியைத் திறவுங்கள்!'' என்றனன்.

அதற்கவர்கள் "கதவங்களைத் தாளிட்ட பிறகு திறக்கப் போகாது; எம்பெருமான் நித்திரை சாதிப்பர்; உதயத்திற்கு வாரும்; இம்போது போம்!" என்றனர். அதைக் கேட்ட நிக்கிரகாநுக்கிரக வல்லவனும் "அப்படியா! அரங்கன் நித்திரை போகிறார்" என்று,

சு: ஐந்த்ரீம் பாடல யந்லக்த க்ருசா மங்கிரித் விஷாஞ்சால கைரா சாம் ரத்ந கிரீடகாந்தி கிகரைஃ பாசாயு தீயாமபி | பரியங்கே பவமானதூல பரிதே பாரேக வே ராத்மஜம் முத்ராகாசந முக்தி தாந குசலா நித்ராதி ||

(இ - ள்) "சிவந்த தன் பாத காந்தியால் கீழ்த்திசை சிவந்து காட்டவும், சிறந்த தன் ரத்தின மிழைத்த மகுட காந்தியால் மேற்றிசை ஜ்வலிக்கவும் காவேரிநதி தீரத்திலே வாயுவாகிய பஞ்சினால் நிறைந்த ஆதிசேடனாகிய பாயலிலே வலக்கரமே தலையணையாகக் கொண்டு மோக்ஷநாதனாகிய இரங்கன் நித்திரையா போகிறார்" என்னும் சுலோகத்தைச் சொல்லவே,

உலகரக்ஷகனும் "ஓகோ! வந்தது மோசம் நமக்கு. உத்தமன் வாக்கு ஒருபோதும் பொய்யாதே! நாம் சும்மா யிருந்துவிட்டால் நாளைக்கே இந்தவிடம் உறங்கிப்போமே!" என்று உடனே தரிசன மளித்து, அதை மாற்றிக்கொள்ளும்படி அழகிய கருடன்மீது தேவிய ரிருவரும் சாமரை யிரட்டவும் சர்வபரனு லங்கிருதனாய் அம்மகாகவிக்கு எதிரே வந்து சேவைசாதித்து, "ஹே! மகாகவி மம ஜாக்ரதி நான் விழித்துக்கொண்டுதா னிருக்கின்றேன்" எனவே, அகமகிழ்ந்த ஆரிய சிரேஷ்டனும் தான் முன் சொன்ன சுலோகத்தை மாற்றி, "ஜாகர்திவா" "விழித்துக்கொண்டுதானிருக்கிறார்" என்று சொல்லி, இரு கண் குளிரக் கண்டு களித்து, அப்போது கதவங்களெல்லாம் அங்கங்கே அப்படியப்படியே திறந்துகொள்ளவே, உட்புகுந்து மூல விராட்டுவைத் தரிசித்துச் சேதுவுக்குச் சென்றனன்.

அப்படிச் சென்றவன் அங்கே இரண்டொரு நாளிருக்கையிலேயே "போஜன் லக்ஷம்பிராமணருக்குப் போஜனம் செய்விக்கப் போகிறான்" என்று கேள்விப்பட்டுச் சேதுவை நீங்கித் தாராநகர மடைந்து, போஜனுக்குத் தான் போய் வந்தது யாவும் ஒன்றொழியாது ஒப்புவித்தனன். அதைக்கேட்ட அரசனும் "ஹே! விநோத கவி! நீர்விரும்பியபடி சிலகாலம் சேதுவிலிருந்து வரலாம்" என்னக், காளிதாசனும் "ஆகா! அரசே! நன்றாய்ச் சொன்னீர்! லக்ஷப்பிர

மணியத்திற்கும் லக்ஷியமாக இச் சேது வொன்றைத்தானு எதைத் தா னொப்பிடப்போகும்?

ஃ: "கோடிலிங்கம் ப்ரதிஷ்டாயாம் காஸ்யாம் ஏகம் ப்ரதிஷ்டிதம் |
காஸ்யாம் ஸதஸஹஸ்ரேஷு ப்ரஹ்ம மேகம் ப்ரதிஷ்டிதம் ||

என்றுசொல்லி "ஐயனே! இதுமாத்திரமா? யுதிஷ்டிரர் இராஜசூயயாகத்திலே லக்ஷப்பிராமண போஜனத்தை நடப்பித்தபோது ஆஜாநு பாகுவாகிய அடல் வீமனே அன்னம் பரிமாறவும், அர்ச்சுனுதியர் அதற்கேற்றவைகளை அங்கங்கே உதவிவரவும், இவைகளையெல்லாங் கவனியாது எச்சிலையின்மேல் நாட்டமாக சாக்ஷாத் பகவான் கிருஷ்ணன் அவைகளை யெடுத்துப் போடவும், அப்படி லோக சரணியன் பரிசமுற்ற இலைகளிற் பற்றியிருந்த உச்சிஷ்டமாகிய பருக்கைகளைக் கிளிரூபமாய் வந்து கோதி யுண்டு தவச்சிரேஷ்டரான சுகப்பிரம ரிஷியும் சுகாநந்தமுறவே அதனு லொருமுகூர்த்த நேரம் ஓயாதடித்த ஆராய்ச்சி மணியின் சப்தத்தைக் கேட்டதரும பூபதியும் அப்படியே மெய்ம்மறந்தன ரென்ருல் அதையெடுத்துரைக்க யார்க்குத்தான் திறம்" என்றனன். இதைக் கேட்ட எல்லோரும் இதயம் பூரித்தனர்.

## காளிதாசன் மாநசயோகிக்கு ஸ்ரீசக்கரமகிமை யுரைத்தல்

இப்படிச் சிலநாட் செல்லவும், ஒருநாள் காளிதாசன் உத்யானவனத்திலிருக்கும்போது அங்கே நீராழி மண்டபத்திலே யொரு மாநசயோகி தேவியி னுருவத்தை மனதினுல் பூர்த்திசெய்து, ஆபரணங்களை யணிவிப்பவன்: முன்னதாகக் கொண்ட மாலையைத் தேவியின் சிரசிற் சூட்டி, அதின்மேல் மணிமுடியைப் பதிக்கவும், அது பொருந்தாது மேலெழக் கண்டு வருந்தும்போது "மூடா! முடி துளக்கி முடி கவிப்பாய்" என்ற சொல் காதில்விழவும், உடனே அப்படியே மாலையை யெடுத்துவிட்டு முடியைக் கவிக்கவும், அப்போது அது பொருந்தியது கண்டு அதின்மேல் மாலையைச் சூட்டி மனமகிழ்ந்து, பூசை முடிந்ததும் வெளியேவந்து, "நம்முடைய மனோபாவத்தை இப்படி யறிந்து சொன்னவர் யாவர்?" என்று அங்குமிங்கும் பார்க்கும்போது அநேக ஸ்திரீகளின் மத்தியில் விநோதமாகப் பேசிக்கொண்டிருக்கும் அபாரகவியும், "முன்னே மாலையைச் சூட்டி முடி கவித்தால் பொருந்துமோ?" என்ன, "அம் மாநச

யோகியும் அப்படியே காளிதாசனைப் பணிந்தெழுந்து, ஸ்திரீகள் மத்தியமுற்ற தங்களை அலக்ஷியம் செய்த அடியேனை ஆண்டருள வேண்டும்; ஐயனே! தேவர் வாக்கால் அம்பிகையி னிருப்பிடத்தை யறிய விரும்பினேன்" எனக் காளிதாசனும்,

சு: பிந்து த்ரிகோண வசுகோண தசாரயுக்மம்
மந்மஸ்ர நாகதள ஸையுத சோடசாரம் |
வ்ருத்தத்ரயஞ்ச்ச தரணீசுத பூபுரஞ்ச்ச
ஸ்ரீ சக்ரமே ததுதிதம் பரதேவதாயாம் ||

என்றனன். அதைக்கேட்ட தபசியு மப்படியே ஆநந்தவாரியில் மூழ்கினவனாய் அவ்விடம்விட் டகன்றனன்.

## மூடவித்வான் காளிதாசனால் போஜனிடம் சன்மானம் பெறல்

மற்றொருநாள் ஒரு மூடப்பிராமணன் காளிதாசனிடம் வந்து காவலனிடமிருந்து தனக்குப் பரிசுவாங்கித் தரச் சொல்லவும், அவனுக்கு அசுவினியாதி 27 நட்சத்திரங்களையும் பாடம் பண்ணிவைத்துப் போஜனுக்குத் தன் குரு வந்திருக்கிறதாகச் சொல்லவே, அநேக காணிக்கைகளோடேவந்து காண,அவ்வரசனுக்கு ஆசீர்வாதமாகத் தான் வரப்படுத்தியிருந்த நட்சத்திரங்களின் வரிசையை மறந்து,ஞாபகத்துக்கு வந்தவரையில்,"அஸ்வினி,புனர்வஸு, ரேவதி, கிருத்திகா" என்றனன். அப்போது அரசன் மந்திரியைப் பார்க்கவும், மந்திரி மகாகவியைப் பார்த்தனன். உடனே காளிதாசனும்,

சு: அஸ்வினி பவது தே து மந்துரா மந்திரே பவதுதே புநர்வஸு |
ரேவதிபதி கனிஷ்டஸேவயா கிருத்திகாதநய விக்ரமோபவாந் ||

(இ - ள்) "குதிரைச்சாலையில் குதிரைகள் விசேஷிக்கக்கடவன; பொக்கிஷத்தில் திரவியம் வளரக்கடவது; ரேவதி கணவனான பலராமனுக்கு இளவலாகியகண்ணனைச் சேவிப்பதால் காசினியோர் போற்றக் குமாரக்கடவுளைப் போலப் பராக்கிரமத்தில் விளங்கக்கடவாய் என்று ஆசீர்வதிக்கிறார்" என்றனன். அதனால் போஜன் பூரித்து விசேஷமாகக் காணிக்கை செலுத்தி அரண்மனைக்குத் திரும்பினன். அப் பிராமணனும் அத் தனத்தைப் பெற்று அபார கவியைப் புகழ்ந்துகொண்டே வீடுபோய்ச் சேர்ந்தனன்.

## சந்திர வர்ணனை

ஒருநா ளிரவில் போஜன் சந்திரனைப் பார்த்து, அதன் களங்கத்தைக் குறிப்பிட்டு, "அங்கம்" என்று சங்கை கொண்டனர் சிலர்; "கடலின் சேறு" என்றனர் மற்றுஞ் சிலர்; "மான" என்றனர் வேறு சிலர்; இதைப் "பூமியின் சாயலே" என்றனர் இன்னும் சிலர்" என்ற பூர்வபாகத்தை எழுதிக் காளிதாசன் கையில் வைக்க, உடனே கவீந்த்ரனும், "எது சந்திரனிடத்தில் சாணை தீர்ந்த இந்த்ர நீலக்கல்லின் துண்டமாகக் காணப்படுகிறதோ அதை அச் சந்திரன் இரவில் குடித்து வயிற்றி லடக்கிய ஆரிருள் என்றே யாம் சொல்வோம்" என்றனர்.

அவ் வுத்தரார்த்தத்திற்குப் போஜன் அகமகிழ்ந்து அக்ஷர லக்ஷம் தந்தனன். பிறகு போஜன் காளிதாசனுடைய கவிசாதுர்யத்திற்குத் தலையசைத்துச், "சரஸகவீ! இச் சந்திரனையே களங்கமில்லாதவனாக வர்ணியும்" எனக் காளிதாசனும், (சந்திரனும்) ஸ்ரீதேவியின் மாநச தடாகம்; வெண்மையாகிய காந்திக்கு இருப்பிடம்; திக்குகளென்னும் ஸ்திரிகளுக்குத் திவ்வியமான முகக் கண்ணாடி; இரவு (வாலிபப்பெண்) என்னுங் கொடியினுடைய புஷ்பம்; ரதிகாந்தனுடைய பூங்கொடை; மகாதேவனுடைய சிரிப்பின் பிண்ட ரூபம்; தேவநதியின் திவ்வியமான வெண்டிரை; சந்திரிகை என்னும் அமுததாரை பொழிவதற்குத் தாயகம்; தாரகை என்னுங் கோளகை களின் சமூகத்திரக்ஷி," என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லினன். அதனால் அரசன் மகிழ்ந்து அக்ஷர லக்ஷம் மறுபடியும் தந்தனன்.

## பிரமசாரி

அப்பால் ஒருநாள் ஒருபூசுரன் வந்து போஜனுக்கு ஆசிகள் கூறி, "ஐயனே! எனக்கு ஓர்வித ஆசையுங் கிடையாது" என்னவும், "போஜன் அப்படியானால் அடியேனால் ஆகவேண்டியதென்?" என்ன, "உன் சபை நிறைந்த கவிகளையெல்லாம் என்னோடு காசி யாத்திரைக்கு அனுப்பவேண்டும்" என, அப்படியே அரசனாணையால் அனைவரும் அப் பிராமண சந்நியாசியோடு காசிக்குச் சென்ற

னர். காளிதாசன் மாத்திரம் அப்படிப் போகாமல் காவலன் சபைக்கு வரவும், "ஹே! மகா கவி! நீர் ஏன் அவர்களோடும் போகவில்லை" எனக், கலாசமுத்திரமும், "எவனுக்கு ஈஸ்வரானுக்கிரக மில்லையோ அவன்தான் தீர்த்தமென்றும் புண்ணிய ஸ்தலமென்றுந் தேடித் திரியவேண்டும். எவனுடைய மனதிலே கௌரீநாதன் குடிகொண் டிருப்பரோ அவனுடைய ஹிருதயமே புண்ணிய தீர்த்தமாம்" என்றனன்.

அப்பால் ஒருநாள் அரசன் அலங்காரசபையிலே வித்வான்க ளில்லாமையாலும், காளிதாசனும் வேசியாகாமியா யிருந்துவிட்ட தாலும், கவலைகொண்டவனாய்க் காளிதாசனையும் வெறுத்தவ னானன். அதைக் கண்ட காளிதாசனும் அத் தாராநகரத்தை நீங்கி அல்லாளதேசம் சென்று அரசன் அரண்மனையை யடைந்தனன்.

அப்போது அவ்வரசன் மாளவேந்த்ரனுடைய சபாலங்கிருத மான காளிதாசகவி வந்ததாகக் கேட்டதும் உள்ளே விடச்சொல்லி, அப்படி வந்த கவியைப் பார்த்துத் தன் சிம்மாதனத்தினின்று மெழுந்து, "சுககவீ! போஜசபையின் பண்டிதரத்தினங்களிலே ஜீவ ரத்தினமே! உம்முடைய மகிமையே மகிமை; சுககவி! உம்மை சாக்ஷாத் சரஸ்வதியே யென்று சொல்லக் கேட்டுள்ளேன். ஏதோ ஒரு சுலோகம் சொல்லும்" எனக் காளிதாசனும்,

"அல்லாள ராஜா! உன்னுடைய சத்துருவின் பட்டணத்திலே திரிகின்ற வேடப்பெண் (அடுப்புக்கு நெருப்புக்காக) அங்கங்கே சித றிக் கிடக்கும் தேஜோமயமான பாரிய ரத்னங்களைப் பார்த்துப் பெரிய கரிநெருப்பென்றெண்ணி அதன்பேரில் சந்தனக் கட்டை களைப் போட்டு ஊத ஆரம்பித்து, அப்போது அவளுடைய சுவாச பரிமளத்தால் வந்து கூடிய வண்டுகளை நெருப்பிலிருந் தெழுந்த புகையென் றெண்ணிக் கண்களை மூடிக்கொண்டு நெருப்பு கனிவதற் காகப் பின்னும் ஊதுகின்றுளே," என்னுங்கருத்தமைந்த சுலோகத் தைச் சொல்ல, அரசன் அக்ஷரலக்ஷம் தந்து "ஏகலிலா நகரத்தை யே வர்ணியும்" என்ன, காளிதாசனும்,

"மான்மிரக்ஷி கொண்ட மாதர்களின் கடைக்கண்ணேக்கால் ஆடவரெல்லோரும் அடியெடுத்து வைக்கமாட்டாதவராய் கிரப ராதிகளாகவே தளை பூண்டவரானர்." என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லினன். அரசன் அதற்கும் அக்ஷரலக்ஷம் தந்தனன். பிறகு காளிதாசன்,

"இந்த ஏகசிலா நகரத்திலே சமுத்திரம்போல விசாலித்த நடபாவியிலே தோன்றுந் தாமரைத்தளத்தை யொத்த விசால நேத்திரங்களை யுடைய ஸ்திரீகளின் வளைந்த கடைக்கண் பார்வை யென்னு மன்மதபாணத்தால் ஆடவரெல்லா மடியுண்டனர்." என்னும் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்லி அரசனால் அக்ஷர லக்ஷம் பெற்றனன். இது இவ்வாறிருக்க,

ஒருநாள் போஜனைப்பார்த்துத் துவாரபாலன், "தேவ! கூர்ஜர தேசத்திலிருந்து வந்த மாக பண்டிதர் நகரத்துக்கு வெளியே வந்திருக்கிறார்; அவருடைய பத்தினி இங்கே வந்திருக்கிறாள்" என்ன, அரசாக்கினையால் உள்ளே வந்தவளும் இராஜனுடைய அஸ்தத்தில் ஒரு சுலோகத்தை வைத்தனள். அதில் அடங்கிய உஷத்கால வர்ணனைக்காகப் போஜன் லக்ஷத்ரயம் தந்து, "அம்மணீ! இது போஜனத்துக்காகக் கொடுத்தது. காலையில் நான் அங்கே வந்து உபசரித்து அவருடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்கிறேன்" என்று சொல்லி யனுப்பினன்.

அவள் வரும் வழியில் தன் நாயகனைப் புகழ்ந்து கொண்டாடிய யாசகருக்கு அவ்வளவு பொருளையுங் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு வந்து நடந்ததைச் சொல்ல, மகா பண்டிதன் விசாரமாயிருக்கையில், இவனை யாசிக்க வந்தவருளொருவன், "மேகமே! மலைச்சிகரங்களின் சூரிய வெப்பத்தை ஆற்றியும், காட்டுத்தீயால் வாடிய மரங்களைத் துளிர்க்கச் செய்தும், நூற்றுக்கணக்கான நதிகளையும் நதங்களையும் நிரப்பியும் வெறுமையாயினை; என்றாலும், உன் கீர்த்திக்குக் குறைவில்லை." என்னுங் கருத்தமைந்த சுலோகத்தைச் சொல்ல, அவனுக்குக்கொடுக்க வொன்றுமில்லாமையால் சோர்ந்து அப்படியே சுவர்க்கம் புகுந்தனன்.

அதைக் கேட்ட போஜன் அங்கு வந்து மாகபண்டிதனுக்கு வேண்டிய ஹீமகிரியைகள் யாவும் நர்மதா நதிதீரத்திலே முடிக்கவே, மாகபத்தினியும் புருஷனோடு தீக்குளித்து உயிர் துறந்தனள். அவர்களிருவருக்கும் புத்திரனைப்போலப் போஜன் செய்யவேண்டிய கடன்களைச் செய்து முடித்தனன்.

## காளிதாசன் மறுபடியும் காவலனை யடைதல்

பிறகு போஜன் மாகபண்டிதன் தன்னகரில் வந்து மடிந்ததா லும், புலவர்களெல்லோரும் காசிக்குப் போய்விட்டதாலும், காளி தாசனுந் தன் நகரத்தை நீங்கியதாலும், மிகவும் வருந்திய மன தோடே அமரபக்ஷத்துச் சந்திரன்போலாகிறதைக் கண்ட மந்திரி கள் சிந்தித்து, "அல்லாள தேசத்திலிருக்கிறானும் காளிதாசன்; அவன் வந்தால்தான் அரசன் சுகப்படுவான்" என்று, தெரிந்து கொண்டவர்களாய் ஒரு சுலோகத்தை யெழுதி யதைத் தக்கவ னொருவன் மூலமா யனுப்பவும் அதை வாசித்து அதில்,

"இனிய குயிலே! திவ்வியமான மாமரத்திலே வெகுநாள் சுகித் திருந்த நீ இப்போது அந்நிய மரங்களிற் போய்த் தங்கியிருக்க லஜ்ஜை யில்லையா? கோகிலமே! நீ யந்த மாமரத்திலிருந்தபோது உனக்குண்டாயிருந்த கண்டத்தொனி கருங்காலி மரத்தினிடத்தி லும் முருக்கமரத்தினிடத்து முண்டாயிருக்கிறதா வென்பதை யோசித்துப்பார்" என்றெழுதியிருக்கக் கண்டு உடனே அவ்வரச னிடம் விடைபெற்று மாளவதேசம் வந்து போஜனுடைய உத்யான வனத்தில் தங்கினன். அதை யறிந்த அரசன் பரிவாரங்களுடனே போய் அழைத்துவந்து விசேஷமாக உபசரித்தனன். பிறகு நாள டைவிலே வித்துவான்களும் வந்து நிறையவே போஜனுடைய சபா மண்டபமானது முன்போல விளங்கியது.

## மாம்ஸ மூட்டை ராமாயணமானது

"அப்போது ஒருநாள் நடந்த அற்புதத்தைக் கேள்!" என, ஆண்பக்ஷியும் சொல்லத் தொடங்கியது:—

"ஆதியில் இம் மகாகவியும் புவனேஸ்வரியின் அநுக்கிரகமுற்ற போது அத்தேவியு மவக்குமாறு உவாமதிதோறும் மாம்ஸாதிகளை நிவேதித்து வந்தவனாகையால் அப் பழக்கத்தா லடிக்கடி மாம்ஸக் கடைக்குப் போவதைத் தெரிந்துகொண்ட இவனுடைய வைரிகளிற் சிலர் இதை மன்னனுக்கு அறிவிக்கவும், அவன் அதை நம்பாமல் "அப்படி யவன் வாங்கிப் போம்போது பிடித்துவாருங்கள்!" என்ற னன். அதற்கவர்கள் "ஆம்" என்று சென்று, அப்படி யவன் மாம்

ஸாதிகளை வாங்கிப்போவதைக் கண்டு குசல வார்த்தைகளால் அவனையு மடக்கிக்கொண்டு மன்னனுக்குத் தெரிவித்தனர்.

மன்னனும் ஆச்சரியங்கொண்டு அங்கே வந்து காளிதாசனைக் கண்டு "ஹே! மகாகவி! "கக்ஷே கிம் தவ?" "கக்கத்தில் காணப்படுவதென்ன?" என்றனன். அதற்குக் கவீந்திரன் "புஸ்தகம்" என்னவே, போஜனும் "கிம் முதகம்?" "அதில் ஜலம் என்ன?" என்றனன். அப்போது மகாகவியும் "காவ்யார்த்த சாரோதகம்" "காவ்யத்தின் சாரமெல்லாஞ் சலமாய்க் கொட்டுகின்றனவே" என்னலும், அரசன் அடங்கா மகிழ்ச்சியுடனே "கந்த: கிம்?" "ஐயனே! அதில் துர்க்கந்தம் வீசுவதென்ன?" என, அபாரகவியும் "கனராமராவண மகா சங்கராம ரங்கோத்பவ:" "மகப்பிரபு! மகத்தான ராம ராவணர்களாலுண்டான வலுத்த யுத்தத்திலே மடிந்த பிணங்களெல்லாம் வடியாம லோடிக்கொண்டிருந்த ரத்தவெள்ளத்தில் மூழ்கி யழுகிய துர்க்கந்த மாக்கும்" என்றனன்.

அப்போது போஜனும் "புச்ச: கிம்?" இதற்கு "வாலென்ன?" என்றனன். அதற்கு உத்தரமாக மகாகவியும் "கனதாளபத்திர லிகிதம்" "நீண்ட பனையோலைகளி லெழுதியிருப்பதால் நுனிப்புறம் நீண்டு தெரிகின்றன" என்றனன். அதைக் கேட்ட மன்னன் போஜனும் "கிம் புஸ்தகம் ஹே மகா கவே!" என்றனன். அதைக் கேட்டு ஆநந்தமுற்ற வித்வரத்னமும் "ராஜந்! பூசுர தைவதைஸ்ச படிதம் ராமாயணம்" "அரசனே! என்ன புஸ்தம் என்று கேட்கிறீர்? சொல்லுகிறேன் கேளும்! எல்லாத் தேவதைகளாலும் பிராமணர்களாலும் மற்ற வருணத்தாராலும் இரண்டு காலங்களிலுமெடுத்துப் பாராயணம் பண்ணும்படியான ராமாயணமாக்கும் இது" என்று அந்த மாம்ஸக்கட்டை அப்படியே அரசன் முன்பாகக் கீழே போட்டனன்.

இன்றைக்கும் ஏதோ வகை தப்பி அகப்பட்டுக்கொண்டோமே; அரசனால் என்ன மானக்கேடு வருமோ? அம்மணீ! இம் மன்னவனால் ஏதொரு பங்கமும் வாராமல் காத்தருளுந் தாயே" என்று தியானித்து அப்படிப் போட்ட கட்டானது அவிழவும், அதில் ராம ராவணாதிகளின் யுத்தம் நடக்கிறதையும், அழுகித் துர்க்கந்தங் கொண்ட பிணக்குவியல்கள் வெள்ளத்தில் புரண்டுகொண்டிருக்கிறதையும், இவைகளின் மேல் ராமாயணம் என்னும் புஸ்தகம் விளக்கமுற்றிருப்பதைவும் கண்ட அரசனு மற்றவர்களும் துணுக்குற்று,

அம் மகாகவியை அநேகவிதமாய்க் கொண்டாடி விநோதமாகிய இச் செய்கையை வெகுநாள் வரைக்கும் மறவாதிருந்தனர்.

பிறகு ஒருநாள் அரசன் மகாகவியைப் பார்த்து, "காளிதாசா! கவீந்த்ரா! "ஏதோ! இந்த க்ஷாமமை யிரட்டுகிறவளை வர்ணியும்" என்ன, அப்போது கவியும்,

"ஹே தந்த்ரமுகி! என்ன உன் சாமர்த்தியம்! உன் கூந்தலால் குசங்கள் அஞ்சுகின்றன; குசங்களால் கூந்த லஞ்சுகின்றது; இவ் விரண்டினையுங் கண்டு ப்ருஷ்டங்க ளஞ்சுகின்றன" என்னுங் கருத் தமைந்த சுலோகத்தைச் சொல்லவும், அரசன் சந்தோஷித்துத் தானும், "இம் மனோகரியின் பாதங்கள் முகத்தைக் கண்டு அஞ்சு கின்றன. அதரங்களும் தந்தவரிசைகளும் வார்த்தைகளைக் கண்டு அஞ்சுகின்றன, கூந்தல் குசங்களைக் கண்டு அஞ்சுகின்றது." என்றனன்.

---

## பதிவிரதா மகத்துவம்

ஒருநாளிரவில் போஜன் நகர்சோதனை வரும்போது அங்கே ஓர் அந்தணன் வீட்டின் அதிசயத்தால் அங்கேயே நின்று கவனிக் கும்போது தன் பத்தினியின் தொடையில் அப் பிராமணன் உறங் குவதையும், அப்போதவன் குழந்தை ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நெருப்பண்டையிற் போய் அதில் விழப்போவதையுங் கண்ட அம் மாது பதிதர்மத்தைப் பரிபாலித்தவளாய்த் தன் புருஷனுக்கு நித் திரை பங்கத்தைக் கருதாது அக்கினி தேவனைப் பிரார்த்தித்து, "என் பர்த்தாவுக்கு வேண்டிய பணிவிடைகளில் குறையில்லாதவ ளாய்க் குழந்தையைத் தடுக்க முடியாது தயங்குகின்றேன்; குழந் தையைக் காப்பது உன் கடமை" என்று துதிக்கையில் அக் குழந்தை அவ்வனலில் விழுந்தும் அபாயமின்றி விளையாடிக்கொண்டிருந்ததை யும், அப்போது உடனே விழித்துக்கொண்ட கணவன் குழந்தை நெருப்பிலிருக்கக் கண்டு அப்படியே போய்த் தூக்கிக்கொண்டதை யுங் கண்ட போஜன் ஆச்சரியமுற்று, "என் பட்டணத்தில் இப் படிப்பட்ட பதிவிரதையிருக்க நாம் என்ன தவம் செய்திருக்கவேண் டும்?" என்று சொல்லிக்கொண்டே அரண்மனை சேர்ந்து உதயத்திற் கெல்லாம் சபைக்கு வந்து காளிதாசனைப் பார்த்து, "வந்தன மெனத் தீ சந்தன மாச்சே" என்ற நான்காவதடியைக் கொடுத்துப் "பூர்த்தி செய்யும்" என, கவியும்,

சேந்தழல் வீழிய சிறுகுழ விக்கே
சிந்தைசே யாதுதன் செய்பணி யாவுங்
கோந்தலர் கோதைதன் கொழுனனுக் காற்றி
வந்தன மேனத்தீ சந்தன மாச்சே.

என்னும் பொருள் கொண்ட சுலோகத்தைச் சொல்லக் கேட்டுத் தன் அபிப்பிராயம் அதிலமைபவும், ஆலிங்கனம் செய்துகொண்டு பாதம் பணிந்தனன்.

---

## நாவற் பழங்கள்

ஒருநாள் போஜன் வேட்டையாடி அலுத்து ஒரு குளக்கரையிலுள்ள நாவல் மரத்தின் கீழ் வந்து படுக்க, அம் மரத்தின் கிளையைக் குரங்குகள் உலுக்கவும், அப் பழங்கள் ஜலத்தில் விழும் சத்தத்தைக் கவனித்து ஒருகடிகை நேரம் அங்கிருந்து ஆயாசத்தைப் போக்கிக்கொண்டு, பட்டணம் போந்து சபைக்கு வந்து, நாவற்பழம் விழுந்த சத்தத்தை யநுசரித்து, "குளு குக்குளு குக்குளு" என்று சொல்லிப் பூர்த்திசெய்யச் சொல்லக் காளிதாசனும்,

சு: ஜம்பூ பலானி பக்வானி பதிந்திவிமலே ஜலே |
கபிகம்பித சாகாப்யோ குளு குக்குளு குக்குளு || என்றனன்.

இதைக் கேட்ட போஜன், "சுககவி! இதராளுடைய மனதை எப்படித் தெரிந்துகொள்ளுகிறாய்? உன்னை ஸாக்ஷாத் சரஸ்வதியென்றே சொல்லவேண்டும்" என்று சொல்லி அவன் பாதங்களி லடிக்கடி விழுந்தனன்.

ஒருநாளிரவில் அரசன் நகர் சோதனை வருகையில் ஒருவீட்டில் ஓர் உத்தமி நெல்லுக்குத்திக்கொண்டிருப்பதைக் கண்டு மனம் பொறுத அரசனும், 'வல்லிக்கொடி போன்ற உத்தம ஸ்திரீயின் அஸ்தங்களாற் றழுவியும் இவ் வுலக்கையானது துளிர்க்கவில்லையே' என்றுள்ளத்திற் கொண்டு மறுநாள் சபைக்கு வந்து காளிதாசனைப் பார்த்து, "முஸல கிஸல யந்தே தத்க்ஷணாத்யந்ர ஜாதம்" என்றனன். உடனே கவியும்,

சு: ஜகதி விதித மேதத் காஷ்டமேவாஸி நூநம்;
ததபி ச கில ஸத்யம் காநநே வர்திதோஸி |
நவகுவலய நேத்ரபாணி ஸங்கோதஸ லேஸ்மிந்
முஸல கிஸலயந்தே தத்க்ஷணாத்யந்ர ஜாதம் ||

(இ-ள்) "ஓ முசலமே! (உலக்கையே!) காட்டிற் பிறந்த வுனக்கு வீட்டினருமை தெரியுமோ? கிட்டுதற்கரிய உத்தமி கையிற் பட்டும் நீ பச்சென்று துளிர்க்காமலிருக்கின்றையே" என்று சொல்லிப் பூர்த்திசெய்து இறைவன் மனமகிழச் செய்வித்தனன்.

மற்றொருநாள் மன்னன் மாறுவேடம் பூண்டு மத்தியான வேளையிலே திரிந்துகொண்டு ஒரு விப்பிரன் வீட்டு முன்னணியில் நிற்கையில், விருத்தவேதியனும் வைஸ்வதேயம் செய்து காக பலியை ஒருசுத்தமான விடத்தில் வைத்து "கா கா" என்றனன். உடனே அநேக காகங்கள் கூடவும், அதிலொன்று கர் என்று சப்திக் கவே, "அப்பா செத்தேன்" என்று அப்படியே புருஷனைக் கட்டிக் கொண்டு ஒரு ஸ்திரீ மூர்ச்சைபோயினள். உடனே அப்பிராமணனு மவளை மூர்ச்சை தெளிவிக்கவே, "நாயகா! என்ன கடூரத்தொனி! கர்ப்பங் கலங்கிற்றே!" என்றனள்.

அதைக் கேட்ட அந்தணன் அவளுக்கு வேண்டிய தைரியம் சொல்லவும், இதை யெல்லாங் கவனித்த அரசன், "இவள் சாமா னிய ஸ்திரீயல்ல; இவள் உண்மை நிலையை யறிவோம்" என்று சிந் தித்திருக்கையில், இரவு பட்டது. பிராமணனும் நித்திரை போய் விட்டனன். பிராமணத்தியும் வேலைக்காரியின் தலைமேல் மாம்ஸ துண்டங்களை யெடுப்பித்துக்கொண்டு நர்மதையாற்றங்கரையை யடுத்தனள். அரசனும் பின்னே போய், அவள் ஆற்றிலிறங்கி இடை யிலே தன்னைக் கவ்வ வந்த முதலைகளுக்கு மாம்ஸத்துண்டங்களைப் போட்டுக்கொண்டே அக்கரை போய் அங்கேயுள்ள விகாரபுருஷ னோடும் பேசிக்கொண்டிருந்து மீண்டும் வீடுபோய்ச் சேர்ந்ததைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, மறுநாளுதயத்துக்கெல்லாம் சபைக்கு வந்த காவலனும்,

குலவுவெண் டிரைகள் சூழுங் குவலயங் காக்குங் கோமான்,
அலகுநுண் டேளிகள் வீழ வசைதரு மருவி தோய்ந்தே
பலபவப் பிணிகள் போக்கும் பஸ்மதா ரணனு யங்கே
கலைமகட் போற்றி வந்த காளிதா சனுக்கே சொல்லும்.

"ஹே கவி! "திவாகருதாத் பீதா" (பகலில் காகங் கரையப் பயந் தாள்) என்னக், கவி, "ராத்ரௌ தரதி நர்மதாம்" (தாண்டுகிறாள் நள்ளிரவில் நர்மதையை) என்றனன். அப்போது போஜன் "தத் ரஸந்த்தி ஜலேக்ராஹா: (அந்த ஜலத்தில் முதலைக ளிருக்கின்றன வே) என்னக், காளிதாசனும் "மர்மக்ஞானேவ சுந்தரீ" (உபாய

மறிந்தவளே அம்மாது)" என்றனன். போஜன் அப்படியே அம் மகா கவியின் பாதங்களில் விழுந்து புளகித்தனன்.

## கனற்சட்டியை வர்ணித்தல்

இப்படிச் சிலகாலம் செல்லக் குளிர்காலம் வரவே போஜனும் கனற் சட்டியில் குளிர்காய்ந்துகொண்டிருக்கையில், அங்கே வந்த காளிதாசனைப் பார்த்து "இந்த கணப்புச் சட்டியை வர்ணியும்" என மகாகவி, பின்வருமாறு வர்ணித்தனர்.

"(கனற்சட்டியும்) வித்துவான்களுடை விஸ்தாரமான யூகையை (லோகத்தை) யுடையதாய் நன்றாகச் சேர்க்கப்பட்ட சக்ரவாகப் பட்சிகளை (சக்கரங்களை) யுடையதாய், சந்திரன் பார்வதி அக்கினி இவர்களோடுங் கூடிய சிவனைப்போல் (புகையில்லாத நெருப்பினால்) சிரித்துக்கொண்டு பிரகாசிக்கிறது" என்னுங் கருத்தடங்கிய சுலோகத்தைச் சொல்லினன். அதற்கரசன் அக்ஷரலக்ஷம் தந்தனன்.

## செப்புக்குட வர்ணனை

அரசன் பாதசாரியாய் அடுத்த ஓர் கிராமத்திற்குச் சென்று அங்கே தன் முன்னே வரும் ஒரு மங்கையின் மறுங்கிலிருக்குங் குடத்தின் ஜலத்தி லுண்டாம் ஒலிக்குறிப்பைக் கவனித்துச் சபைக் குச் சென்று, "கூஜிதம் ரதிகூஜிதம்" என்றனன். உடனே காளி தாசனும்,

சு: விதக்தே ஸுமுகே ரக்தே நிதம்போபரி ஸம்ஸ்திதே |
காமிந்யா ஸ்லிஷ்ட ஸுகளே கூஜிதம் ரதி கூஜிதம் ||

(இ - ள்) "நன்றாகச் சுடப்பட்டதும், அழகான வாயை யுடையதும், சிவந்ததும், இடுப்பின்மே லுள்ளதும், காமக்கிழத்தியால் அணைக்கப்பட்ட சுந்தரமான கழுத்தையுடையது மாகியதிலே யுண்டாகுந் தொனி லீலாதொனியாம்" என்றனன். இறைவனு மற்ற வரும் இதயம் பூரித்தனர்.

# ஹநுமான் ராமாயணம்
## நர்மதையி லகப்பட்ட சிலாகண்டம்

வேனிற்காலத்திலே நர்மதா நதியிலே ஓர் பெரிய மடுவிலே வலைவீசிக்கொண்டிருக்கும்போது ஒரு சிலையின் துண்டமொன்றகப் படவும், அதைக் கரைக்குக் கொண்டுவந்து பார்க்கும்போது, கை தேர்ந்த சிற்பிகளால் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் மறைந்திருக்கக் கண்டு, மன்னவனிடங் கொண்டுவர, அதைக் கண்ணுற்ற போஜன் "பூர்வத்திலே மகிமை கொண்ட ஹநுமாராலே அருளிச் செய்யப் பட்ட இராமாயணம் இதில் போடப்பட்டிருக்கிறதாகப் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இவ் வெழுத்துக்களை யான் அவசியம் ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்று பண்டிதர்களைக்கொண்டு அக்ஷ ரங்களைச் சோதித்துப் பார்க்கிறபோது அதில்,

சு: அயி கலு விஷமஃ புராக்ருதாநாம் |
பவதி ஹி ஜந்துஷு கர்மணும் விபாகஃ ||

(இ - ள்) "ஐயனே! ஜீவர்களுக்குப் பூர்வம் செய்த கர்மங்களின் பரிபாவங்கள் கொடுமையாகவே முடிகிறதே!" என்ற இரண்டடிகள் மாத்திரம் தெரிய, போஜன் பவபூதியைப் பார்த்து "மற்ற இரண் டடிகளையும் பூரியும்" எனப் பவபூதியும்,

சு: க்வ நு குல மகளங்க மாயதாக்ஷ்யாஃ |
க்வ நு ரஜநீசரஸங்கமாபவாதஃ || என்றனன்.

(இ - ள்) "விசால நேத்திரியின் களங்கமற்ற குலமெங்கே? இராக்ஷதனுடைய சேர்க்கையால் வந்த அபவாதமான உலகச் சொல் எங்கே?" என்றதை உத்தரார்த்தமாகப் பூர்த்தி செய்ய, அதில் தொனிதோஷ மிருக்கக் கண்டு, தானே,

சு: க்வ ஜநகதநயா க்வ ராமஜாயா |
க்வ ச தசகந்தர மந்திரே நிவாசஃ ||

(இ - ள்) "எங்கே ஜனகன் பெண்? எங்கே ராமன் மனையாள்? எங்கே தசகண்டன் வீட்டில் வாசம்?" என்பதைச் சொல்லிக் காளி தாசனைப் பார்த்து "சுககவீ! கவியினுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும் என, கவிரத்னமும்,

சு: சிவசிரஸி சிராம்ஸி யாநி ரேஜுஃ
சிவ சிவ தாநி லுட்டந்தி க்ருதபாதைஃ |

அயி கலு விஷம: புராக்ருதாநாம்
பவதி ஹி ஜந்துஷு கர்மணாம் விபாக: ||

(இ - ள்) "எந்தத் தலைகள் சிவனுடைய தலையிலே (புஷ்பங்களாகப்) பிரகாசித்தனவோ சிவ! சிவ!! அந்தத் தலைகள் (அநியாயமாய்க்) கழுகுகளின் கால்களிலே புரளுகின்றனவே! ஐயோ! ஜீவர்களுக்குப் பூர்வம் செய்த கர்மவினைகளின் வகைகள் கொடியனவேயாகும்."

என்று சொல்லிச் சுலோக பூர்த்தி செய்தனன். அப்போது சிலையிலிருந்த பூர்வபாகத்தைப் பரிசோதித்தபோது அதில் இதே அபிப்பிராயம் அமைந்திருக்கக் கண்டு போஜன் அடங்கா மகிழ்ச்சியோடும் காளிதாசனைக் கட்டிக்கொண்டு ஆநந்தித்தனன்.

## காளிதாசனும் பிரமராக்ஷசும்

ஒரு காலத்தில் போஜன் வேடிக்கையாய்ப் பொழுது போக்குவதற்காக நூதன கிருகமொன்று கட்டி அதில் கிருகப்பிரவேசம் செய்யப் போகும்போது தான் குடியிருந்த மரத்தை வெட்டிவிட்ட கோபத்தால் முன்னமே அக்கிருகத்தில் பிரவேசித்த பிரமராக்ஷசு விறட்டவும், வேந்தன் பயந்து அநேக மாந்த்ரீகர்களை அனுப்பவே, அவர்களாலான வித்தையையெல்லாங் காட்டி அப் பிரமராக்ஷஸின் அபார கேள்விகளுக்கும் விடையளிக்கமாட்டாது விண்ணுலகடைந்தனர். இப்படி வருபவர்களை யெல்லாம் இலேசாக விழுங்கி ஏப்பமிட்டுக்கொண் டிருப்பதைக்கண்ட போஜன் 'இதை எப்படி நீக்குவது?' என்று யோசித்துக்கொண்டிருக்கையில், காளிதாசன், "தேவ! இவ் விராக்ஷசன் சகல சாஸ்த்ரப்ரவிணனாகவும் சுக கவியாகவும் காணப்படுகிறான். நானே போய், பூரணமாகக் கற்று வல்ல பூசுர சிரேஷ்டனாயிருந்தும் புவனேஸ்வரியின் அநுக்கிரகக் குறைவால் இந்த ஸ்திதியிலிருக்கு மவனை எப்படியாவது களிப்பித்துக் காரிய சாதனம் பண்ணி வருகிறேன்" என்று சொல்லி விடைபெற்று அம் மாளிகைக்குட் சென்று கதவை மூடிக்கொண்டு அங்கேயே படுத்துக் கொண்டனன்.

அப்போது அந்த முதல் ஜாமத்திலேயே அங்கு வந்த பிரமராக்ஷஸும் தனக்கு முன்னமே அங்கு வந்து படுத்திருக்கு மகா புருஷனைப் பார்த்து "வந்திருப்பவன் வல்லவனாகக் காணப்படு

கிறான்; இவனை இப்படியல்ல; ஒவ்வொரு ஜாமத்திற்கு மொவ்வொரு சமஸ்யையாகப் பாணினி சூத்திரத்தையே கொடுப்போம். பூரியா மற் போனால் தின்றுவிடுவோம்'' என்று தீர்மானித்து "ஸர்வஸ் யத்வே'' "எல்லாவற்றுள்ளும் இரண்டு'' என்றதைச் சொல்லக், காளிதாசனும்,

சு: ஸுமதிகுமதி ஸம்பதாபத்தி ஹேது ||

(இ - ள்) "சம்பத்துக்கும் ஆபத்துக்கும் காரணங்கள் நல்ல புத்தியும் கெட்டபுத்தியுமாம்'' என்றனன்.

அதைக் கேட்டுக்கொண்டு இரண்டாம் ஜாமத்தில் வந்து "வ்ருத்தோ யூநா'' "வ்ருத்தனும் வாலிபனோடு'' என்று சொல்ல, மகாகவியும்,

சு: ஸஹ பரிசயாத் த்யஜ்யதே காமிநீபி ||

(இ - ள்) "கூடிப் பழகுவதால் மங்கையரால் விடப்படுகின்றான்'' என்று சொல்ல, அதைக் கேட்டுக்கொண்டுபோய் மூன்றுவது ஜாமத்தில் வந்து "ஏகோகோத்ரே'' "ஒருவனே கோத்திரத்தில்'' என்று சொல்ல, அப்போது கவி,

சு: ப்ரபவதி புமாந் யஃ குடும்பம் பிபர்தி ||

(இ - ள்)"குடும்பத்தைத் தாங்கக்கூடிய புருஷன் ஒருவனே ஒரு குடும்பத்தில் பிறப்பன்'' என்றனன்.

அதைக் கேட்டுக்கொண்டு போய் நான்காம் ஜாமத்தில் வந்து "ஸ்த்ரீபும் வச்ச "ஸ்த்ரீ புருஷனைப்போல'' என்று சொல்ல, கவியும்,

சு: ப்ரபவதி யதாத த்தி கேஹம் விநஷ்டம் ||

(இ - ள்) "எந்த வீட்டில் ஸ்த்ரீயானவள் புருஷனைப்போல ஸ்வதந்திரமாக வியவகாரம் செய்வளோ அந்த விடு நிச்சயமாய்ப் பாழாகும்'' என்று பூரிக்க, பிரமராக்ஷசனும் அதில் தன் அபிப்பிராயம் அமைந்திருக்கக்கண்டு சந்தோஷித்து, பிரத்தியக்ஷமாகி, "நல்ல மனதை யுடையவனே! நான் உன்னிடத்தில் வைத்த அன்புக்கும் எல்லை யில்லை. ஆகையால், நீ கோரியதைக் கேள்!'' என்றனன். "ஐயனே! நீர்இதைவிட்டு வெளியே போனால் போதும்'' என்றனன்.

அதற்கு "ஆம்'' என்று அருளி, "உத்தம கவி! எப்படிப்பட்ட ஆபத்துக்களையும் நீக்கவல்ல அபூர்வவித்தை யொன்று என்னிட

முண்டு; அதை யுனக்களிக்கிறேன்" என்று அளித்துவிட்டுப் போய் விட்டது. மறுநாள் உதயத்துக்கெல்லாம் மன்னவன் சபைக்கு வந்த காளிதாசனும் போஜனுல் சன்மானிக்கப்பட்டு அங்கிருந்த எல்லோ ராலும் "இவன் சாக்ஷாத் மந்த்ரமூர்த்தியே" என்று புகழ்ந்து கொண்டாடப் பட்டனன்.

பிறகு ஒருநாள் சகல பூபாலர்களுக்கும் சிரோமணியாகிய ஸ்ரீ போஜன் சிம்மாதனத்தை யலங்காரம் செய்துகொண்டிருக்கும் போது தக்ஷணதேசத்திலிருந்து வந்த மல்லிநாதன் என்போன் போஜனை ஆசீர்வதித்துப் புகழ்ந்து கொண்டாடி விசேஷ சன் மானத்தை யடைந்தனன்.

---

## கவிசேகரன்

பிறகு ஒருநாள் துவாரபாலகன் அரசனிடம் வந்து கவிசேகரன் என்னுங் கவி வந்திருக்கிறதாகச் சொல்ல, போஜன் உள்ளேவரச் சொல்லவும், அப்படி வந்த மகாகவி அரனே ஆசீர்வதித்து,

சு: ராஜந் தௌவாரிகா தேவ ப்ராப்தவா நஸ்மி வாரணம் |
மதவாரண மிச்சாமி த்வத்தோ ஹம் ஜகதீபதே ||

(இ - ள்) "ஓ ராஜா! பூமீஸ்வரா! வாயிற்காப்போனுல் வார ணத்தை (உன்சமுகம் வருதலை) யடைந்தேன்; உன்னுல் மதவார ணத்தை (மத்தகஜத்தை)ப் பெற இச்சிக்கிறேன்" என்றனன்.

அதைக் கேட்டு ராஜா சிம்மாதனத்தில் கிழக்கு முகமாயிருந்த வன் அச் சுலோகத்திற்குச் சந்தோஷித்துத் தன் ஆக்ஞையி லடங் கிய அத்திசை முழுவதையும் அக் கவிக்குக் கொடுத்துவிட்டதாக நினைத்துக்கொண்டு தெற்கு முகமாகத் திரும்பிக்கொண்டனன். அப்போது, கவி, 'என்ன! போஜன் என்னைப் பார்த்து இப்படித் திரும்பிக்கொண்டானே' என்று சிந்தித்து அவனுக்கெதிரே வந்து,

சு: அபூர்வேயம் தநுர்வித்யா பவதா சிக்ஷிதா கதம் |
மார்கணௌக: ஸமாயாதி, குணோ யாதி திகந்தரம் ||

(இ - ள்) "பாணங்களின் (யாசகர்களின்) சமூகம் (உன்னிடத் ற்கு) வருகின்றது குணம் (கீர்த்தி) திக்கின் எல்லைகளுக்குப் ாகின்றது. அபூர்வமாகிய இந்த வில்வித்தை, போஜ! உன்னுல் படி அப்யசிக்கப்பட்டது?" என்றனன்.

அப்போது அரசன் தக்ஷிண தேசத்தையெல்லாம் அக் கவிக்குக் கொடுத்துவிட்டதாக நினைத்து, மேற்குமுகமாகத் திரும்பிக் கொண்டனன். கவி மனமுடைந்தவனாய் அந்தத் திக்கிலும் அரசனெதிரில் வந்து,

சு: ஸர்வக்ஞ இதி லோகோயம் பவந்தம் பாஷதே ம்ருஷா |
பத மேகம் ந ஜாநீஷே வக்தும் நாஸ் தீதி யாசகே ||

(இ - ள்) "இவ் வுலகத்தோர் உன்னை யெல்லா மறிந்தவனென்று சொல்லுகிறார்களே; அது உண்மையல்ல; ஏனென்றால், இரப்போர்களுக்கு இல்லையென்று சொல்லுஞ் சொல்லொன்றை நீ யறியாமலிருக்கின்றாய்" என்றனன். அந்தப் புகழ் நிறைந்த சுலோகத்தைக் கேட்டு அம் மேற்கு நாட்டையெல்லாம் அவ் வர கவிக்கு அளித்துவிட்டதாயெண்ணி உத்தரமாகத் திரும்பிக் கொண்டனன். அங்கேயும் அக் கவி விடாது எதிரே வந்து,

சு: ஸர்வதா ஸர்வதோவீதி மித்யா த்வம் கத்யஸே புதைঃ |
நாரயோ லேபிரே ப்ருஷ்டம், ந வக்ஷ: பரயோஷித: ||

(இ - ள்) "சத்துருக்கள் உன் முதுகைக் கண்டதில்லை; இதர ஸ்திரீகள் உன் இதயத்தை யடைந்தவர்க ளில்லை. சத்துருக்களுக்கு முதுகையும் பரஸ்திரீகளுக்கு மார்பையும் கொடுக்காமலிருக்க, எக்காலத்திலும் எல்லாவற்றையு மளிப்பவனென்று வித்வான்கள் புகழ்வதும் வீணே" என்றனன்.

அதற்குப் போஜன் அவ் வுத்திரதிக்கின் தேசத்தைக் கவிக்குக் கொடுத்துவிட்டதாகச் சர்வத்தையும் தத்தம் செய்தவனாய்த் தனக்காக வோரிட மில்லாமற்போகவும் சிம்மாதனத்தை விட்டெழுந்தபோது அரசன் அபிப்பிராயத்தை யறிந்துகொள்ளாத அக் கவி மறுபடியும், "அரசனே! கனகதாரையாக நீ யெங்கும் வருஷித்தும் அபாக்கியமென்னும் குடையின் கீழிருக்கும் என் மீது ஒருதுளியும் விழவில்லையே" என்று சொல்லிக்கொண்டே வெளியே போய்விட்டனன்.

போஜனும் அந்தப்புரம் போந்து லீலாவதியைக் காட்டுக்கு அழைக்கும்போது, கவிசேகரனை வழியிற் கண்ட முதன் மந்திரியும் "அரசன் என்ன கொடுத்தான்?" என்ன, அதற்கவன் "ஒன்றுங் கொடுக்கவில்லை" என, அப்போது அமைச்சன் "நீர் சொன்ன சுலோகத்தைச் சொல்லும்!" என, அவன் அவைகளைச் சொல்லவும்,

அமைச்சன் "சுககவி! நான் ஒருகோடி திரவியம் கொடுக்கிறேன்; போஜன் உனக்கென்ன கொடுத்தானோ அதை எனக்குக் கொடு" என்னவே, கவியும் சம்மதிக்க, அமைச்சன் பொன்னைக் கொடுத்தனுப்பிவிட்டு அந்தப்புரம் வந்து போஜனைக் கண்டனன். போஜன், "புத்திசாகர! ஓர் கவிக்கு என் இராச்சியத்தையெல்லாம் தத்தம் செய்துவிட்டேன். சுபத்தினியோடு காட்டிற்குச் செல்கிறேன். உனக்கும் இஷ்டமானால் வரலாம்" என்றனன்.

அதற்கமைச்சன் "தேவ! கோடி திரவியத்துக்கு இவ் வீராச்சியத்தை விக்கிரயம் செய்து பொன் பெற்றுக்கொண்டு போய்விட்டான். இராச்சியம் தங்களுடையதே; வனம் போகவேண்டுவதில்லை" என்றனன். அரசன் அமைச்சனைப் புகழ்ந்து கொண்டாடி விசேஷ சம்மானம் செய்தனன்.

வேறொருநாள் போஜன் வேட்டையாடி விடாய்த்துத் தாக வேட்கையால் தழைந்தவோராலமரத்தின்கீழ் வந்து குதிரையினின்று மிழிந்து படுத்து யோசித்துக்கொண்டிருக்கையில், மோர்ப்பானையோடும் வந்த ஓர் ஆயர்குலத்தாளைக் கண்டு, தாகவிடாயால், "ஹே தருணீ! என்ன கொண்டு போகிறாய்?" என்ன, அவள் முகவொளியால் அவனை அரசனென் றறிந்துகொண்டு, "ராஜேந்த்ரா! பனி மல்லிகை சந்திரன் இவைகளின் காந்திகொண்டு சங்கத்தை யொத்த தாவள்ளியமாய் விளங்கனியின் வாசனையோடும் இளம்பெண்ணால் கடையப்பெற்றுச் சர்வரோகத்தையும்போக்கவல்ல இதை ஓ ராஜா! சாப்பிடும்" என்றனள். அரசன் அம் மோரையருந்திக் களை தீரவும், அக் கன்னிகையை நோக்கி "ஹே! சுலோசனீ! உன் அபீஷ்டம் என்ன?" என, அவள் யௌவனத்தால் லஜ்ஜை கொண்டவளாய்த் தலைகுனிந்து, போஜனைக் கடைக்கண்ணால் பார்த்துத் "தேவ! நான் கன்னிகை;'சந்திரனை அல்லியும், சூரியனைச் சக்கரவாகமும், மேகத்தைச் சகோரபக்ஷியும், பூங்கொத்தை வண்டும், மாமரத்தைக் குயிலும், கணவனை கற்புடையாளும் எப்போதும் விரும்பியிருப்பது போல' என்மனமும் உம்மையே நாடுகின்றது" என்னவே, வேந்தன் சந்தோஷித்து, "ஹே! சுகுமாரீ! என் பட்டத்துத் தேவியின் அநுமதியால் உன்னையும் மணம்புரிவேன்" என்று அப்படியே யழைத்துக்கொண்டு போய் மணம் புரிந்தனன்.

---

# போஜனுக்குத் தலைநோய் காணல்

அநேக மகான்களுடைய அநுக்கிரகமுற்ற போஜனும் விநோத முற்ற யோகப்பயிற்சியால் நாசியின் வழியாகவும் அபானவழியாக வும் ஜலத்தை உள்ளுக்கிழுத்து நாடி நரம்புகளையும் குடல்களையும் சுத்திசெய்துவரும் நாளில் ஓர் நாள் எப்படியோ அமுததாரையின் வழியாய் ஒரு தேரையின் சினை மண்டைக்குட் சென்று மூளையிற் றங்கி அது நாளுக்குநாள் பருக்கவும், போஜனுக்குத் தலைநோய் அதிகரித்தது. இதற்காகச் சிகிச்சை செய்ய வந்த ராஜபண்டிதர்க ளும் மாந்த்ரீகரும் 'இன்னது செய்வது' என்று வகை தோன்றாது இருந்தவிடந் தெரியாமற் போயினர். இச் செய்தி பூலோகமெங்கும் பரவியது.

இஃதிங்ஙனமிருக்கவும், தேவசபையிலே சுரேந்திரன் நாரத ரைப் பார்த்து, "மகரிஷி! உம்மைப் பார்த்து வெகு நாளாயிற்றே; உலகத்திலே விசேஷ மென்ன?" எனவே; யாழ்வல்லோனும் "தேவ! வேறொரு விசேஷ மில்லை; பூலோகத்திலே போஜன் தலைநோய் கொண்டானும்; தக்க பண்டிதர்கள் அதை நீக்குவதற்கில்லையாம்" என்றனர்.

உடனே இந்திரனும் தேவவைத்தியனைப் பார்த்து,

"தாரா நகர்க்குஇறை தலைநோய் கொண்டனன்
மேலா யொருவரு மீட்போ ரிலையாம்
காலா காலம் கண்டுரை பெரியோய்
மூலா தார மிதுவெனக் கொண்டே
தோலா வந்தத் தொகைபெறு மருந்துளும்
மேலா மருந்தை மேன்பட வருளிக்
கேளா திருக்கும் கெடிபெறும் பிணியையும்
வாலோ டறுத்தே வளம்பெறச் செய்வாய்." என்றனன்.

அதைக்கேட்ட பண்டிதனும் புருவுருவோடும் பூலோகத்திற்கு வந்து, போஜனுடைய சபாமண்டபம்புகுந்து, அவன் முன்னே புரு ஷரூபமாய்த் தோன்றித், தான் வந்த காரணத்தைச் சொல்லி, அர சனுடைய கரத்தைப் பிடித்து நாடிகளைப் பரீக்ஷித்தும், அநேக வுறுப்புகளையெல்லாம் உய்த்துணர்ந்தும், 'பிணி யின்னது' என்று பிடிபடாமற்போகவே அகஸ்தியரை நினைத்தனர்.

அதற்கு முன்னமே இதைப்பற்றி,

மாபெருஞ் செல்வன் மன்னவன் போஜன்
தாயினு மினியன் தாரதிப னந்தோ!
மாயிரு ஞால மன்பதை காப்போன
பாயினிற் படுக்கும் பாதைகொண் டனனே
பார்த்திபற் குற்ற பாதையை யுன்னியே
நேர்த்தியா மருந்தை நேர்பட வருளிப்
பூர்த்தியே செய்யப் போகுநா ளுண்டு
காத்தினி திருப்பாய் கண்டுநா முரைப்போம்.

என்று சொல்லியிருந்தபடியே அகத்தியரும் தமது மாணுக்கனோடு போஜசபைக்கு வந்தனர்.

அவரைக் கண்ட அமரர் பண்டிதனும் கும்பமுனியைப்பார்த்து,

"ஆர்கலி யுண்ட அகத்திய முனிவா
வேர்கவளந் திப்பிணி வேதிக்கப் படுமோ?"

என்னவே, அவரும் அரசனுக்குற்ற பிணியை அநேக நாடி நரம்புகளின் ஆராய்ச்சியாலுங் கண்டு பிடிப்ப தருமையாகவே "கபால சோதனைதான் செய்யவேண்டும்" என்றனர். உடனே அரசன்: பிராணனை ஆக்ராணித்துக்கொண்டு மண்டையின் மேலோட்டை நீக்கவும், அதிசயிக்கும்படியான பெரிய தேரை யொன்று அங்கேயிருக்கக்கண்டு, என்னென்னவோ உபாயத்தாலும் அதை வெளிப் படுத்தச் சாத்தியமாகாமற் போகவே, தத்தளிக்கையில், அடுத்து நின்ற மாணுக்கனும் "ஐயரே! உத்தரவானுல் ஒருநொடியில் அதை அப்புறப் படுத்துகிறேன்" என்றனன்.

அதற்கு "ஆம்" என, அப்போதே ஒரு ஜலம் நிறைந்த பாத்திரத்தைக் கொண்டுவந்து தேரைக் கெதிரில் காட்டி, அதிலே ஒருவிதமான சளசளவென்ற சப்தத்தை யுண்டாக்கவே, தேரையும் உடனே அதிற் குதித்துவிட்டது. உடனே கபாலத்தை மூடி ஒன்றுப்படச் செய்து, சந்தானகரணி யென்னும் சஞ்சீவியால் காயத்தை யொருநொடியில் மாற்றிப் பிராணனை வரும்படி செய்து, உள்ள மகிழ்ந்த பொதிகை நாதனும் அப்படியே தன் மாணுக்கனைத் "தேரையா!" என்று தழுவிக்கொண்டு, "தேவபண்டிதரே! சிறுவனுடைய புத்தியின் தெளிவைப் பார்த்தீரோ!" என்றனர். அவரும், "ஐயனே! இவனுல் லோகத்திற்கு எவ்வளவோ சுக முண்டாகப் போகிறது" என்று மூவருமாய்ப் புறப்படும் சமயத்தில் போஜனும் அவர்களை நோக்கி, "இதற்குச் செய்யவேண்டிய பத்தியம் என்ன?" என,

சு: அசிதே நாம்பஸா ஸ்நாநம் பய: பாநம் வயஸ்த்ரிஸ்ய:
ஏகத்வோ மாநுஷா: பத்யம் ||

(இ - ள்) "வெந்நீரில் ஸ்நானமாடுதலும், பால் அருந்துதலும், ஓ மானிடரே! உங்களுக்குப் பத்தியம்" என்று சொல்லிச், "சுலோகத்தின் குறையைக் காளிதாசன் பூரிப்பான்" என்று மறைந்தயினர். அப்போது அங்கு வந்த காளிதாசனுக்கு இவைகளையெல்லா மெடுத்துச் சொல்லிச் "சுலோகத்தை முடியும்" என, அவனும் "ஸ்நிக்தம் உஷ்ணஞ்ச்ச போஜநம்" என்று கூறவே, போஜன் மகா கவியை தேவாம்சமாக நினைத்துச் சன்மானித்தனன்.

## டம்டம்ட டம்டம்ட டம்டம்ட டம்டம்

ஒருநாள் போஜன் ஸ்நானஞ் செய்யும்போது அவனுக்கு நீர் சொரிந்துகொண்டிருந்த அவனழகால் மயங்கிய மங்கையின் கை நழுகிய பொற்குடமானது விழுந்த சப்தத்தைக் கவனித்த காவலனும் சபைக்கு வந்து, காளிதாசனைப் பார்த்து, "ஹே சுககவி! இதைப் பூர்த்தி செய்யும்" என்று, டம்டம்ட டம்டம்ட டம்டம்ட டம்டம்" என்றனன். அப்போது காளிதாசனும்,

சு: ராஜாபிஷேகே மத விஹ்வலாயா
ஹஸ்தா ச்யுதோ ஹேமகடோ யுவத்யா |
ஸோபாந மார்கேஷு கரோதி ஸப்தம்
டம்டம்ட டம்டம்ட டம்டம்ட டம்டம் ||

என்று பூரிக்க, அரசன் அக்ஷரலக்ஷம் தந்தனன்.

## உஷத்கால வர்ணனை

ஒருநாள் போஜன் வேட்டையாடிக் களையாகி ஒருதடாகத்திற்கு வந்து தாகந் தீர்ந்து, அங்கேயே யோரிடத்திற் றங்கியிருந்து, அருணோதயத்திற்கு முன்னமே சபைக்கு வந்து வித்துவாத்தினங்களை நோக்கி "சரமகிரிகதம்பே சந்த்ரபிம்ப லலம்பே" என்று "இதைப் பூர்த்திசெய்யும்" என, அங்கிருந்த பவபூதியும்,

சு: அருணகிரணஜாலே ரந்தரிக்ஷே கதர்க்ஷே ||

(இ - ள்) "சூரியனுடைய கிரண சமூகத்தால் நட்சத்திரங்கள் மறையவும்." என்றனன். அப்போது தண்டியும்,

சு: சலதி சிசிரவாதே மந்தமந்தம் ப்ரபாதே ||

(இ-ள்) "உஷத்காலத்திலே குளிர்ந்த காற்றும் மெல்ல மெல்ல விசவும்" என்றனன். அப்போது காளிதாசனும் புன்சிரிப்புடனே,

சு: யுவதி ஜனகதம்பே நாதமுக்தோஷ்டபிம்பே |
சரமகிரிநிதம்பே சந்த்ர பிம்ப லலம்பே ||

(இ - ள்) "யௌவன ஸ்திரீகளின் கூட்டமானது நாயகர்களாலே விடப்பட்டு கொவ்வைக்கனி போன்ற அதரங்கள் தாழம் பூவைப்போல வெளுத்து வருவதை யொத்தது அஸ்தமான கிரியிலமர்ந்த சந்த்ரபிம்பம்" என்றனன்.

அப்போது அரசன் எல்லோர்க்கும் சன்மான மளித்துக் காளிதாசனை விசேஷமாகக் கொண்டாடினன். வித்வான்களும் காளிதாசனை அதிகமாய்ப் புகழவே அவர்களில் தண்டி மாத்திரம் பொறுமையினாலே போஜனைப் பார்த்து "கவிரஸக்ஞை யறிந்த காவலனே! காளிதாசன் சொன்னதில் என்ன விசேஷம்? ஏன் இப்படி எங்கள் தாரதம்யத்தை யறிவதில் உமக்குப் பக்ஷபாதம்?" என்றனன்.

அதனால் போஜன் அப்படியே அசந்துவிட்டனன். சபையும் மோன முற்றது. அப்போது பவபூதியும் அரசனைப் பார்த்து, "தேவ! உமக்கேன் வேறு சிந்தை? உலகமாதாவின் சந்நிதி இருக்கவே இருக்கிறது. அங்கே போனால் எல்லாம் வெளியாகிறது" என்னவே, எல்லோரும் அதற்கு "ஆம்" என்று போகும்போது, வெய்யிலின் வேகத்தால் ஒருசோலையிற் றங்கி அதிலிருக்கும் விசித்திர மாளிகையின் முன்னணியில் உலாவிக்கொண்டிருந்த ஒரு ஸ்திரீயைப் பார்த்துத் தண்டியும்,

சு: சூர்ணமாநீயதாம் தூர்ணம் பூர்ணசந்த்ர நிபாணநே ||

(இ - ள்) "முழுமதி முகத்தாளே! கொஞ்ச முத்துச் சுண்ணங் கொண்டுவா!" என்றனன். உடனே காளிதாசனும்,

சு: பர்ணானி ஸ்வர்ந வர்ணாநி கர்ணாந்தாயதலோசநே ||

(இ - ள்) "காதளவும் நீண்ட கண்ணாளே! பத்தரைமாற்றுத் தங்கம் போன்ற பசுமைகொண்ட வெற்றிலையுங் கொண்டுவா!" என்றனன்.

சு: பர்ணாநி தீயதாம் சூர்ணம் தூர்ணம் சந்த்ராநிபாநநே |
காளிதாசாய கவயே தண்டினே பண்டிதாயச ||

அதைக் கேட்ட அம் மகா ரூபவதியும் தன் பாங்கியைப் பார்த்து,

(இ - ள்) "ஹேசந்த்ரமுகி! வேகமாகக் கவியாகிய காளிதாசனுக்கு வெற்றிலையும், வித்வானாகிய தண்டிக்குச் சுண்ணமுங் கொடு!" என்றனள்.

அங்கிருந்தோர் யாவரும் "ஒருவனைக் கவி யென்பானேன்; மற்றொருவனை வித்வான் என்பானேன்; இதில் ஏதோ மர்மமிருக்கிறது" என்று நிதானிக்கு முன்னமே அந்த ரூபவதியும் அவள் மாளிகையும் மறைந்துவிட்டது. அப்போது அவர்களெல்லாரும் ஆச்சரியமுற்று, "இது சரஸ்வதியின் மாயமே" என்றனர். பிறகு அவர்களெல்லோரும் புவனேஸ்வரியின் ஆலய மடைந்து, தேவியைத் துதிக்கவே, அத் தேவியும் பிரசன்னமாகி;

சு: கவீர்த்தண்டி கவீர்த்தண்டி ந ஸம்சயః ||

(இ - ள்) "தண்டியே கவி; தண்டியே கவி" அதற்கென்ன சந்தேகம்" என்னவே, அப்போது காளிதாசன் ஆத்திரத்தோடே,

சு: அம்பே! கோஹம்?

(இ - ள்) "அடி முண்டே! அப்படியானால் நான் யார்?" என்ன, "நித்திய சுமங்கிலியாகிய என்னை 'முண்டை' என்ற உன் வாயடைக்க" என்று சொல்லி அவன் கேட்ட கேள்விக்கும் உத்தரமாக,

சு: த்வமே வாஹம் த்வமே வாஹம் த்வமே வாஹம் ந ஸம்சய;

(இ-ள்) "நீயே நான், நீயே நான், நீயே நான், சம்சயம் வேண்டாம்" என்றனள். "அம்மணீ! உன் அந்தரப்பாவ மறியாது அவசரப்பட்டுச் சொல்லிவிட்ட என் அபசார வார்த்தையை மன்னிக்க வேண்டும்" எனப், "புவனேஸ்வரியும் நானிட்ட சாபம் பொய்யாதடா! நீ யிவ்வளவு கேட்டுக்கொள்வதால், இந்த ஜன்மத்தில் இது உன்னை வாதிக்காமல் இதற்கடுத்த ஜன்மத்திலே வாயடைத்தவனாய்ச் சிறிதுகால மிருந்து அப்போதும் என் அநுக்கிரகத்தால் சாபம் நீங்கிச் சாரதாவைப்போலக் கவிமாரி பொழியுங் கவீந்த்ரனாவாய்" என்று சொல்லி மறைந்துபோயினள்.

அப்போது தண்டியு மப்படியே யசந்து காளிதாசனுடைய பாதங்களில் விழுந்து புகழ்ந்து கொண்டாடினன்" என்று சொல்லிய, ஆண்பக்ஷியைப் பார்த்துப் பெண்பக்ஷியும் "ஹே நாதா! இவ்

வளவையுந் தாங்கள் ஏகஸந்தக்கிராகியாய் எப்படிக் கவனித்துவந் தீர்களோ?" என்னவும், ஆண்பக்ஷியும் சந்தோஷித்து "இதுவும் மகாநுபாவனாகிய காளிதாசனுடைய முகதரிசனத்தாலும், அகண்டிதலக்ஷ்மீ பிரசன்னனான போஜனுடைய முகதேஜஸ்ஸாலும் எனக்கு இதை யெடுத்துச் சொல்லும் பெருமை யுண்டாயிற்று" என்ன, பெண்பக்ஷியும் "மற்ற வரலாற்றையும் விவரிக்கவேண்டும்" என்ன, ஆண்பக்ஷி கூறத் தொடங்கிற்று.

## போஜன்மேல் சரமகவி பாட மறுத்த காளிதாசன் வேறூர் புகல்

"மனோரதமே! மற்றொருநாள் போஜன் காளிதாசனைப் பார்த்து "ஹே! மகா கவி! என்பேரில் ஒரு சரமகவி சொல்லும் பார்ப்போம்; இவ்வளவு பிரியனான நீயும் என்னை என்னமாய் வர்ணிப்பையோ அதைக் கேட்கவேண்டும்" என்னக் காளிதாசனும், "அப்படியே எடுத்துப்போட்டவனாய் ஆ! என்ன சொன்னீர்? "ஆண்டவனே! ஆலமரத்தை யொத்து நீர் தழைத்திருப்பதாலன்றோ இத்தனைப் பாடும் பக்ஷிகளெல்லாந் தங்கி வாழ்தற் கிடமாயிற்று. நீ பட்டுப்போனால் அப்புறம் என்ன இருக்கிறது? உன்னைச் சாகும்படிபாடி நானும் உயிரோடிருக்கவா! ஆகையால், அதை யடியோடே மறக்கவேண்டும்" என்னவே, போஜனுங் கோபிக்க, அப்போதே பொறுக்கென எழுந்து "உன்னை யிறக்கப் பாடிப் பிழைப்பதிலும் எங்கேயாவது போய் இரந்து பிழைப்பதே சரி" என்று இறைவனை நீங்கி ஏகசிலா நகரம் சென்று அங்கேயே தங்கியிருந்தனன்.

இப்படிச் சிலநாட் செல்லவு மிதைப் பொறுக்காத போஜன் எங்கெங்கேயோ காளிதாசனைத் தேடியும் அகப்படாமல் கடைசியாக ஏகசிலா நகரமடைந்து, பரதேசி வேஷத்தோடே எல்லா வீதிகளையும் பார்த்துக்கொண்டு காளிதாசனிருக்கும் வீதிவழியாய் வரவும், தன்னால் முன்னம் அவ் வூரில் காணப்படாத காஷாயதாரியைக் கண்ட காளிதாசனும் "நீ எந்தவூர்?" என்னவே, அதற்கவன், "நான் தாராநகரம்" என்றனன்.

## காளிதாசன் சரமகவி பாடக் காவலன் மரித்தல். அதையே திருப்பிப் பாட அரசன் உயிர்த்தெழல்

அதைக் கேட்ட காளிதாசன் "அரசன் க்ஷேமமா" என்றனன். அதற்குக் கபடசந்நியாசியும் தான் அதுவரைக்கும் வழியில் நேரிட்டவர்க்குச் சொல்லிவந்த வழக்கம்போல் "காவலன் போய் வெகு நாளாயிற்றே" என்றனன்.

அதைக்கேட்ட கவீந்திரனும் அப்படியே பதைபதைத்து மூர்ச்சித்து விழுந்து மெய்ம்மறந்து பிணம்போலாகி, மறுபடியு மூர்ச்சை தெளியவும், கடகடவென்று புரண்டு களைத்து விழுந்து கொஞ்சந் தெளிவு வரவும் வாய்விட்டுக் கத்தி, "ஆ! போஜபூபாலா! பூலோக நாதா! நீ போயும் நானிருக்கவா!" என்று புலம்பாதும் புலம்பி வருந்தி முன்னே ஒருகாலத்தில் அரசன் தன்னைச் சரம கவி பாடச் சொன்னதை நினைத்துக்கொண்டு, நெடுமூச்சுவிட்டு,

சு: அத்யதாரா நிராதாரா நிராலம்பா ஸரஸ்வதீ |
பண்டிதா; கண்டிதா ஸர்வே போஜராஜே திவங்கதே ||

"தாரை யின்று தழைந்தில தாயது
சீரை யற்றுச் சிறந்தில ளுமகள்
ஊரை விட்டன ரோடின ருத்தமர்
காரை யொத்தவன் காசினி நீங்கவே." என்றனன்.

இப்படிச் சொன்னதும் பொய்யாப்புலவன் வாக்காதலால் எதிரில் நின்ற போஜன் அப்படியே பொட்டென்று கீழே விழுந்து பிராணனை விட்டனன். அதைக் கண்ட காளிதாசனும் அப்படிக் கீழே விழுந்தவன் காவலனென் றறிந்துகொண்டு முன்னிலும் பதின்மடங் கதிகமாக வியர்த்து நடுங்கி, "ஆ! என் ஐயனே! என்னை யொரு பொருட்டாய்த் தேடி வந்த வுனக்கும் இவ்வாபத்தா!" என்று அக்காஷாயதாரியை யப்படியே யெடுத்து மார்போடணைத்துக்கொண்டு, ரத்ன க்ரீடத்தின் பதிவானது அவன் முன்னெற்றியில் விளங்குஞ் சுந்தரத்தைக் கண்டு துணுக்குற்றுக் கதறியழுது, தான் முன் பாடின சுலோகத்தையே திருப்பி அரசன் உயிர்பெற்றெழுந்திருக்குமாறு சாபாநுக்கிரக வல்லவனுகிய சாரதாநந்தனும்,

சு: அத்யதாரா ஸதாதாரா சதாலம்பா ஸரஸ்வதீ |
பண்டிதா மண்டிதா: ஸர்வே போஜராஜே புவங்கதே ||

"தாரை யின்று தழைந்தது தாழ்விலாச்
சீறை யுற்றுச் சிறந்தன ணுமகள்
ஊரை யுற்றன ருத்தம ரோடினர்
காரை யோத்தவன் காசினி யெய்தவே." என்றனன்.

அப்போதே மாறுவேஷமாய் வந்து மறித்த போஜனும் வித்திரையிலிருந்தெழுந்தவன்போ லெழுந்தனன். அப்போது காளிதாசன் நடந்தவற்றைச் சொல்ல ஒருவரை யொருவர் அப்படியே கட்டிக்கொண்டு புகழ்ந்து கொண்டாடித் தாராநகரம் வந்தனர்.

## அந்தப்புர ரகசியம்

## லீலாவதி ஹூ ஹூ ஹூ என்றல்

மற்றொருநாள் மன்னவன் தேவி ஸ்நான மாடிக் கண்ணாடியில் சிக்காற்றிக்கொண்டு நிற்கும்போது தன் சுந்தரத்தைத் தானே பார்த்து 'இப்போது நம்மைக் கண்டால் அரசனுக்கு என்னவாயிருக்குமோ' என்று நினைக்கிறதற்கு முன்னமே போஜனும் அவள் மனோபாவத்தை யெப்படியோ அறிந்துகொண்டு, அந்தப்புர மடைந்து அவள் முதுகுக்கு நேராக அவளுக்குத் தெரியாமலே யருகிற் போந்து அவளுடைய பசுமை கொண்டு சரிந்து விழுந்து பாந்த மயிரைப் பற்றப்போகையில் பார்த்துவிட்ட பட்டமகிஷியும் லஜ்ஜையினால் "ஹூஹூஹூ" என்றனள்.

அப்போதரசன், அப்படியே திரும்பிச் சபைக்குவந்து தொனி மாத்திரையாகத்தானே "ஹூ ஹூ ஹூ ஹூ ஹூ ஹூ | ஹூ ஹூ ஹூ ஹூ ஹூ ஹூ ||

என்று சொல்லி "இதைப் பூர்த்தி செய்யுங்கள்!" என்ன, அப்போது அங்கிருந்தோ ரெல்லோரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தனர். அதைக்கண்ட காளிதாசனு முடனே, அரசனைநோக்கி,

சு: கிர்வாண சீலா முகசந்த்ர பிம்பா பாதாந்த தேசி பத்மாய தாக்ஷி |
ஏகாந்தகாலே பதிநாஸமேதா ஹூ ஹூ ஹூ
ஹூ ஹூ ஹூ ஹூ ஹூ || என்றனன்.

அதைக் கேட்ட அரசனும் அடங்கா மகிழ்ச்சியுடனே அப்படியே காளிதாசனைத் தழுவிக்கொண்டு தன்மார்பிலணிந்த மாணிக்கப் பதக்கத்தைக் கழற்றி அம் மகாகவியின் மார்பி லணிவித்தனன்.

## காளிதாசன் ஆகாச கங்கையை வரவழைத்தல்

ஒருநாள் தாராநகரத்துள்ள ஓர் விப்பிரமாது தனக்குக் காலமாய்விட்டதை யுணர்ந்து, தன் மைந்தனை யழைத்து, "எனக்கோ காலமாயிற்று! இதோ போகப்போகிறேன்; எனக்குரிய சிராத்த காலத்திலே ஈஸ்வரப்பிரசாதியான காளிதாசனை பிதுர்ஸ்தானத்திலே வைத்து அன்ன மளிப்பையேல் பின்ன மில்லாமல் எனக்குப் பிதுர்லோகப் பிராப்த முண்டாம்" என்று சொல்லிக்கொண்டே உயிர் துறந்தனள்.

உடனே அப் பிராமணச்சிறுவன் அவளுக்கு வேண்டிய சடங்குகள் யாவு முடித்துச், சிராத்த தினத்திற்கு முன்னு ளிரவே விலாசவதியின் வீட்டுக்கு வந்து காளிதாசனை யுபசரித்து, மறுநாட் காலையில் சிராத்தத்துக்கு வரச்சொல்லிச் சென்றனன்.

அப்படியே மறுநா ளுதயத்துக்கெல்லாம் மகாவித்துவானும் இரவி லணிந்த பச்சைக்கற்பூராதிப் பரிமளத் திரவியங்களெல்லாம் அப்படியப்படியே மார்பில் விளங்கவும் காஷ்மீரதேசத்துச் சால்வை போர்த்துச் சரேலென்று வந்து சிராத்த வீட்டிற் புகுந்து தனக்கென் றேற்படுத்திய ஸ்தானத்திற் போய் அமர்ந்தனன். இதற்கு முன்னமே ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு அங்கெழுந்தருளியிருக்கும் அநேக பிராமணர்களையும் அலக்ஷியம் செய்து அந்தணச் சிறுவனைப் பார்த்து "ஆலசியமேன்? ஆகட்டும் வேலை" என்றனன்.

அப்போது அப் பிராமணச் சிறுவனும் கோபத்தோடே 'சிராத்தம் சிதறிப்போம்" என்பதையுங் கருதாது, வெகு துக்கத்தோடே, "ஹே! பிரஷ்டப் பிராமணா! எனக்கென்று நீ யெங்கிருந்தாய்? என்னவோ என் தாயார் சொன்னதும் போதும்! அவளை நான் ஈடேற்றியதும் போதும்! உன் உடம்பில் ஒரு சொம்பு தண்ணீரை யாவது ஊற்றி வரலாகாதா? பாசி பிடித்த பல்லைக்கூடத் துலக்க வில்லையே! நன்றாயிருக்கிறது! போதும் போதும்" என்றனன்.

அப்போது அபாரபுத்தியையுடைய காளிதாசனும் அப் பிராமணச் சிறுவனைப் பார்த்து, "என்ன சொன்னாய்? என் பல்லா பாசி பிடித்திருக்கிறது? நிதானித்துப் பார்! நீ தினந்தோறும் ஸ்நானம் ஆட எடுக்கும் நீரின் கிணற்றில் பாசி இல்லையா? அதைக் கொண்டு

சமைக்கும் அன்னபதார்த்தங்களெல்லாம் பாசிபிடித்தவையல்லவா? இதோ இருக்கிற இத்தனை பேர்களிலும் யார் பல்லிற் பாசியில்லை. ஆகையால், இப்படிப் பாசி பிடித்த உனக்கும் இங்கிருப்பவர்க்கும் எப்படிப் புனித முண்டாகும்?" என்றிப்படிக் கவீந்த்ரனுவிடித்திடித்துச் சொன்ன வார்த்தைகளுக்குப் பதில் சொல்ல மாட்டாதவரா யெலலோருந் தலைகவிழ்ந்திருந்துவிடவே, மன மிரங்கிய மகாகவியும் தன் மனதிலே மகா வேகத்தையுடைய மந்தாகினியை (தேவகங்கையை)த் தியானித்து, நடுவாசலில் வந்து அவளுடைய அளவு கடந்த பிரபாவத்தைச் சுலோக பூர்வமாக அபாரமாக வர்ணித்தனன்.

அதனால் ஆநந்தங் கொண்ட பாகீரதியும் உடனே ஆகாயத்தில் கறுத்த மேக வடிவாய்த் தோன்றி அவ்வீட்டி னடுவாசலிலே யானைத் துதிக்கைகொண்டு ஓயாது தாரைதாரையாய்ப் பொழியவும், அதில் அங்கிருந்தோ ரெல்லாரும் ஸ்நான மாடியபிறகு முன்னம் செய்திருந்த பதார்த்தவகைகளெல்லாவற்றையும் நீக்கி அக்கினியி னுதவியாலும் வாயுவினுதவியாலும் அப்போதே ஒரு க்ஷணத்தில் எல்லாம் ஆயத்தமாகவும், அங்கு வந்த பிதிர்த்தேவதைகளுக்குத் திவ்வியமான பிண்டப்பிரசாத மியற்றுவிக்கவே, அவர்களெல்லாம் அப்படியப்படியே தற்சொரூபமாக நேரில் வந்து பிரசாதத்தை யேற்றுக்கொண்டு போகிறவர்கள் தங்கள் புத்திரனை அழைத்து, "அப்பா! அநேக நாளாய் அந்தரத்திலே பிதுர்லோகத்திலேயிருந்த நாங்கள் இன்று உன் கையால் இந்த்ரபதவிக்குச் செல்கின்றோம்; இவ்வளவுக்குங் காரணம் அம் மகாநுபாவனைப் பிதுர் ஸ்தானத்திலிருத்திப் பிண்டப்பிரசாத மியற்றுவித்த பலமாக்கும்" என்று சொல்லிக்கொண்டே இந்த்ரலோகம் சென்றனர்.

அங்கிருந்த பிராமணரும் மற்றவரும் இவனைத் "தேவனே" என்று புகழ்ந்து கொண்டாடினர். கேட்டாயோ மனோரதமே! கெடிபெற்ற இக் காளிதாசனுடைய கடைமுடிவையுங் கண்டுணர்ந்து வந்ததை வுனக்குச் சொல்லுகிறேன்" என்று சொல்ல ஆரம்பித்தது. அப்போது சதாநீகனும் தன் தேவியின் தலையைத் தன் தொடையினின்றும் மணற்குன்றின்மேல் சேர்த்துவிட்டு அவளுக்குநித்திரைப் பங்கம் வரவொட்டாமற் செய்து, தானும் அப்பக்ஷிகள் தங்கிய அடிமரத்திற் கொஞ்சத் தூரம் ஏறிக் கதையைக் கவனித்திருந்தனன். அப்போது ஆண்பக்ஷியும் சொல்லத் தொடங்கிற்று.

# நவீன தாசியால் நாவலன் மரணம்

இப்படி இம் மகாகவி சிலநாள் கழிக்கவும், இறைவன் இவனை "வேசியாகாமி" என்று தன்னுட்டினின்றும் அகலச்சொல்லவும், அதனால் ஆயாசங் கொள்ளும் அபாரகவியும் வேறோர் நாட்டை யடைந்து அங்கும் ஓர் வேசையின் வீட்டில் கேளிவிலாசமா யிருப்பன். இப்படிச் சிலநாட் செல்லவும் அவன் பிரிவாற்றாத அரசனும் அவனிருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளும்படி,

சு: குஸுமே குஸுமோத்பத்தி ஸ்ஸ்ரூயதே நத்ருஸ்யதே ||

(இ - ள்) "புஷ்பத்திலே புஷ்பம் புஷ்பித்திருப்பதைக் கேட்டதுமில்லை, பார்த்தது மில்லை," என்றெழுதிச் சபையிற் கொடுத்துப் பூரிக்கச் சொல்வன். அவர்களதைப் பூரியாமற்போகவும் அதைப் பூரிப்போர்க்குப் பாதி ராஜ்யம் கொடுப்பதாகப் பறை யறைவிப்பன். இச் செய்தியைக் கேள்வியுற்ற நவீன தாசியும் தன்னிடம் வந்திருப்பவன் மகாகவியென்று அறிந்திருப்பவளாதலால் அந்தச் சுலோகத்தைத் தன் சையாக்கிரகத்தின் சுவற்றிலே அவன் சிரசுக்கு எதிராக எழுதி வைப்பள். அதைக் கவனிக்கு மகாபண்டிதனும்,

சு: பாலே தவமுகாம் போஜே சக்ஷு ரிந்தீவரத்வயம் ||

(இ - ள்) "ஹே! பாலே! போஜனுடைய முகமாகிய தாமரை புஷ்பத்திலே இரண்டு நீலோற்பலங்கள் மலர்ந்திருக்கின்றனவே" என்றெழுதிப் பூர்த்திசெய்வன். அதைக் காணும் அவ்வேசியும் 'இம் மகாகவி யுயிரோடிருக்க நமக்கெப்படி ராஜ்யம் வரும்? எப்படியு மிவன் செய்ததாகவே யிறைவன் அறிந்துகொள்வன். அப்போது நமக்கென்ன வுண்டு? ஆகையால், இவனைத் தொலைத்துப்போட்டே அரசனிடம் போகவேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்டு, அன்றிரவே காளிதாசனைக் கடுகித்திரையில் கரகரவென்று மிகவுங் கூர்மையான கைவாளால் சிரத்தைச் சேதித்து நடுவாசலிலேயே புதைத்துவிட்டு, மறுநாளுதயத்துக்கெல்லாம் மன்னனிடம் போய்ச் சுலோகத்தைக் கொடுப்பள். அந்தச் சுலோகத்தைக் கண்ணுற்ற போஜன் அதன் ஆரம்பத்திலேயே 'பாலே' என்று கூறியிருக்கக் கண்டு "அடீ! பாதகீ! அநியாயமாய்க் கொன்றையா அபார கவியை!" என்று மனதிற் கொண்டு அதை வெளிகாட்டாமலே அவ

ளைப் பார்த்து "இது வுன்னுடைய சுலோகமா?" என்று கேட்பன். அதனால் பயந்த தாசியும் "இது ஓர் அபாரகவியின் வாக்கு; என்னுடையதல்ல" என்பள். அதைக் கேட்கும் போஜன் "அடீ பாதகீ! தொலைத்துவிட்டையா! ஐயோ! அபாரகவியும் ஆவி யிழந்தானே!" என்று அப்படியே மூர்ச்சிப்பன். மறுபடியு மூர்ச்சை தெளிந்து அவளைச் சிறைப்படுத்தி, அவள் வீட்டைச் சோதனைபோட்டு, நடு வாசலில் புதைத்திருக்கும் சிரசையும் முண்டத்தையும் வெளிப் படுத்தித், தனக்கு முன்னமே கிடைத்திருக்கும் ஓர் தெய்வீக வரத்தால் அச் சிரசைத் தனது இடது கரத்தில் ஏந்தி "நடந்த விருத்தாந்தத்தைச் சொல்!" என்று கேட்பன். அப்போது அச் சிரசும் அசைவுற்றுக், கண்விழித்துக் கலகலவென்று பேச ஆரம்பித்து, நடந்தவற்றை ஆதியோடந்தமாய்ச் சொல்லி, "அரசே! உன் ஆயுட் பாவமும் இன்னம் இரண்டு முகூர்த்தந்தான்" என்று சொல்லும். அரசனும் அதிற் பாதியை அச் சிரசுக் களித்து, அந்த முகூர்த்த நேரத்திலேயே போஜசம்பு என்னும் இராமாயணத்தை எழுத ஆரம்பித்து, சுந்தரகாண்டத்தோடே அக்கால அளவு முடிவு பெறவும், அச் சிரசும் பேசுத லொழியும். அரசனும் ஆவி யிழப்பன். அவைகளை யெல்லாங் கேள்வியுற்ற விலாசவதியும் புவனேஸ்வரியைத் தியானித்துக் கவீந்திரனுடைய காயம் சாய்ந்திருக்கும் இடத்திற்கு வந்து அப்படியே களைத்து விழுந்து ஆவி போக்குவள். இப்படி யிவர் மூவர்க்கு முண்டான மரணத்தை யறிந்து அந்தப்புரத்தில் லீலாவதியும் தேக மிழப்பள். இவர்கள் நால்வரையுங் கொண்டு செல்ல விமானம் வரும். அதில் ஆரோகணித்துச் செல்லு மிவர்கள் அவரவர்கள் அம்சத்தை யடைவர். இதுதான் இவர்கள் முடிவு" என்று கூறியது.

பின்னுங் கூறியதாவது, "இவ்வளவுங் கேட்ட இன்பசுகமே! இக் கதையின் சாராம்சத்தைக் கவனித்தையோ? பிரமசபையில் முன்னமே வெளியிட்ட ஸ்ரீமஹாலக்ஷ்மியின் வாக்கு நிறைவேறும் படி புவனேஸ்வரியும் அடிக்கடி அரசனுக்கும் அபார கவிகளுக்கு முண்டாம் அபூர்வ சமஸ்யைகளை யெல்லாம் தீர்த்துவந்தனள்.

புவனேஸ்வரியின் கடாக்ஷமுற்ற காளிதாசனும் போஜப்பிரியனாய்த் தன் விநோத கவிகளால் வேந்தனை மகிழ்வித்து, அவ்வரசன் கை மேலாகவும் தன் கை கீழாகவு மிருந்தாலும் அவனளித்த அபார தனத்தால் அளவு கடந்த சுகங்களை யெல்லாம் அநுபவித்து

வருகின்றனன். ஸ்ரீலக்ஷ்மீ கடாக்ஷமுற்றுத் தன் சபை நிறைந்த வித்வான்களுக்கெல்லாம் லக்ஷக்கணக்காய்ப் பொன்னை வாரி யளித்து அக்ஷயமாக விளங்கும் போஜன் கை மேல்தானே! இதனாலேயே அம் மஹாலக்ஷ்மியின் ஏற்றத்தாழ்வும் இன்னதென்று விளங்கவில்லையா?

## பள பப்பள பப்பள (கண்ட சுத்தி)

இப்படிப்பட்ட போஜனும் ஒரு காலத்தில் வேட்டைக்குச் சென்றதைச் சொல்ல மறந்தேன். அந்த விர்த்தையைக் கேட்பாயாக! அப்படி வேட்டைக்குச் சென்ற போஜன் வெகுநேரம் வரைக்கும் வேட்டையாடி அங்கே குலுங்கக் காய்த்திருக்கும் ஒரு புளியமரத்தினடியிற் றங்கி, அதில் அநேக குரங்குகள் அங்கங்கே கிளைகளில் தாவிக் குதூகலத்தோடே கிளைகளையசைக்கவே அதனால் அப்பழங்கள் விழுந்த சப்தத்தைக் கவனித்துக்கொண்டுவந்து, வித்வசபையையடைந்து, காளிதாசனைப் பார்த்து,

சு: .............பள பப்பள பப்பளః என்றனன்.

அதைக் கேட்ட கவீந்திரனும்,

சு: திந்த்ரிணீ பல பக்வானி பதிந்தே கடிநஸ்தலே |
கபிகம்பித ஸாகாப்யாம் பளபப்பள பப்பளః || என்றனன்.

இதைக் கேட்ட போஜனும் பாண பவபூதாதி பண்டித ரத்தினங்களெல்லாரும் "இவன் சாக்ஷாத் தேவ பிண்டமே" என்று புகழ்ந்து கொண்டாடினர்" என்று சொல்லிக்கொண்டு வரும்போது அக் கதையின் சுவாரசியம் அதிகரிக்கவும், இரவு அநேக நாழிகை வரையிலும் விழித்திருந்ததால் அவ் வுத்தம பக்ஷிக ளிரண்டும் உடனே உறங்கி விடிந்து ஒரு முகூர்த்த நேரமாகியும் அப்படியே அசந்து தூங்கின.

## பக்ஷிகள் இரண்டும் வலையிற் படுதல்

ஷை பக்ஷிகள் நித்திரையினின்று விழித்துக்கொண்டு வேடரா விட்ட வலையில் சிக்கியிருப்பதை யுணர்ந்து மனம் வருந்தி, பக்கத்திலிருக்கு மற்ற மரங்களிலுள்ள பக்ஷிகளை யெல்லா முரித்துப் புட்டியில் போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு மரம்போலாயின. அதற்கு

வெகு நேரத்திற்கு முன்னரே எழுந்து சென்று காலைக்கட்னை முடித்து வந்த சதாநீகனும், தனக்கு முன்னரே அங்கு வந்த வேடத் தலைவன் பக்ஷிகளை நாடி வந்தவன் பார்த்திபன் மனைவியைக் கண்டு காமவிகாரனாய்த், தன்னைச் சார்ந்த வேடர்களை யெல்லாம் கூவி, அவர்களைப் பார்த்து, "இதோ இவ்வரசனை அதஞ் செய்யுங்கோள்! இவ்வரச மாதை யான் கொண்டுபோகிறேன்'' என்றனன்.

அப்படி யெதிர்த்த அவர்களை யெல்லாம் அரசன் அரைநொடியில் அதமாக்கி, அவ் வேடராஜனையு மெதிர்த்து அநேக நாழிகை வரையில் அவனுடன் போராடி, கடைசியாக அவ்வேடன் மல்யுத்தத்திற்கு வரவே, அவனை மதர்த்து விளங்கு மலைபோற் றிரண்ட தன் புஜங்களின் மத்தியி லிறுக்கி, மடமடவென்று நெரித்து முரித்துவிடவே, கலகலத்துக் கண்விழி பிதுங்கி, பல்லை யிளித்து, "பரதாரகமனம் பலநாளும் வசனம் சரியா யெனக்கே சந்தித்தது'' என்று சஞ்சலங் கொண்டு, நாமுழும் நீளவும், நாடி தளரவும், காய மிழந்து காலனைத் தொடர்ந்தனன்.

## பட்சிகளின் மீட்சி

இவ்வாறு வேடனைத் தொலைத்த ரணரங்க சூரனைக் கண்ட இராஜபுதல்வியும் 'இப்படிப்பட்ட மகாவீரனை மணந்தும் நாம் என்னவாயினோம்' என்று கவலை கொண்டிருக்கும் அம் மங்கையைப் பார்த்து, அவள் கருத்துணர்ந்த ஆண்பக்ஷியு மரசனைப் பார்த்து, "ஐயனே! உன்னால் எங்கள் உயிர் தப்பினோம்; இவ் வலையினின்று மெங்களை வெளிப்படுத்தவேண்டும்'' என்னவே, அவைகளை அப்படியே விடுவித்தனன்.

அப்போது ஆண் பக்ஷியும் "உத்தமனே! உனக்கென்ன பதிலுபகாரத்தைச் செய்யப்போகிறேன்? உங்களிருவர்க்கும் ஏதோ தெய்வ சங்கற்பம் உள்ளதுபோல் தோற்றுகிறது. அதன் விவரம் என்ன?'' என வினவியது.

அரசனும் தன் பத்தினிக்கு நேரிட்ட சாபத்தின் விவரத்தைச் சொல்லக் கேட்ட ஆண் பக்ஷியும் அதற்கு ஓர் உபாயம் தேட உத்தேசித்து, அவர்க ளிருவரையும் அழைத்துச் சென்று தாரா நகரத்தின் சமீபத்தில் தங்கியிருக்கச் செய்து, தான் மாத்திரம் நகரத்துட் பிரவேசித்து, நகரவளப்பத்தைப் பார்த்துக்கொண்டே வரும்

போது மேன்மை பெற்ற சிற்பிகளின் லக்ஷியமாகிய சித்திரக் கட்டடம் ஒன்றைக் கண்டு, அதன் தோட்டத்திற் புகுந்து, அங்கு ஒரு மாமரத்தில் தங்கியிருந்தது.

## பக்ஷியைப் பிடித்துத் தருமாறு விலாசவதி காளிதாசனைப் பிரார்த்தித்தல்

அப்போது அங்குவந்த விலாசவதியும் காளிதாசனைப் பார்த்து, "இதோ காண்கிற இப் பக்ஷியை எனக்குப் பிடித்துத் தாரும்! நீர் இல்லாத வேளையில் இதோடு விளையாடிக்கொண்டிருப்பேன்" என்றனள்.

காளிதாசனும் ககனவாசியை யடுத்துக் கரதலத்தை நீட்டினன். அதைக் கண்ட பக்ஷியும் ஐந்து ஆறு அடி நகரலாயிற்று. இப்படி அது நகரவும் இன்பகவி தொடரவும் கொஞ்சத் தூரஞ் சென்று அப் பக்ஷியும் வாய்திறந்து "ஓ கலா சமுத்திரமே! உன் கைக்கு நான் அகப்படவென்றால், நீயு மிப்போது க்ஷவரம் செய்து கொண்டு சுராபான சோபிதனை யிங்கே வருவாயானால் உன் கைக்கும் வருவேன்" என்ன, அப்படியே அவ் வுத்தமனும் செய்து கொண்டு அப் பக்ஷியை யடுத்து அதைக் கையிலேந்திவந்து விலாசவதிக்களித்து, அவளகம் பூரிக்கவும், அரசன் சபைக்குப் போயினன்.

## காளிதாசன் அமாவாசையைப் பௌர்ணிமியாகத் தோற்றுவித்தல்

அப்படி வந்த கவீந்திரனைக் கண்ட போஜனும்,

சு: காளிதாஸா கவிஸ்ரேஷ்டா குதஃபர்வணீ முண்டனம்?

(இ-ள்) "ஹே கவீந்திரா! அமாவாசையில் க்ஷவரமென்ன?" என்றனன். அதற்குக் காளிதாசனும்,

சு: ராஜா கார்த்தப காரோ பூத்ததஃ பௌர்ணமி முண்டனமஃ

(இ-ள்) "அரசனே! கார்த்தபசுரங்கொண்டு பாடவே பௌர்ணமியில் க்ஷவரம் செய்துகொண்டதும் பாவமாமோ?" என்றனன். அதனால் அரசன் வெட்கினவனானாலும் மகா கவியைப் பார்த்து, "இன்றைக்கு அமாவாசையாயிருக்கப் பருவமென்றீரே; அஃதெப்

படி?" என்றனன். அதற்குக் கல்விக் களஞ்சியமும் "இன்றைக்குப் பௌர்ணமிதான்" என்றனன். "அப்படியானால் இன்றைக்கும் பூர்ண நிலவு புலப்படுமோ?" என்ன, அதற்குக் காளிதாசனும் அஞ்சாதவனாய், "அப்படியே அவசியம் பூர்ண நிலவைப் பார்க்கலாம்" என்றனன். அதற்கு அரசனும் "அப்படிப் பூர்ண நிலவு புறப்படாவிட்டால் உமது தலை போய்விடும்" என்றனன். அதற்கு அபாரகவியும் "அப்படியே" என்றனன்.

அப்படிச் சொல்லிவிட்டு அரச சபையை விட்டு வீட்டுக்குச் சென்ற வித்துவரத்னமும் தான் கொண்ட வெறிமயக்கந் தெளியவும் மனந் திடுக்கிட்டு, "ஆ! என்ன விபரீதத்தை விளைவித்துக் கொண்டோம்! இது எப்படி முடியுமோ?" என்று கவலை மேலாடினவனாய்க் காளிகாதேவியின் ஆலயமடைந்து, தேவியைப் பணிந்து, சிரமேற் கரங் குவித்து, சிந்தையைச் சிதறவிடாது ஒருவழிப் படுத்தி, உள்ளம் நெக்குவிடவும்-உரோமம் சிலிர்க்கவும்-உரை தடுமாறவும்-உள்ளபடியே அவ்வுத்தமன் பத்தியோடும் தியானித்தனன்.

அதைக் கண்ட பக்தவத்ஸலியும் அடங்கா மகிழ்ச்சியோடு கருணைபூத்தவளாய், அபாரகவியைப் பார்த்து, "அப்பனே! உன் இஷ்டம்போல அப்படியே நிலவு புறப்படும்; ஐயம் வேண்டாம்," என்னவே, அவ் வம்மணியைப் பலதரந் துதித்துப் பணிந்தெழுந்து புகழ்ந்து கொண்டாடிக்கொண்டு போய் அங்குள்ள ஓர் மண்டபத்தில் தங்கிக் கவலை கொண்டவனாய், இதே கலவரமாயிருந்தனன்.

இதற்குள்ளாக அரசனவையில் நடந்த செய்தி அப் பட்டணமெல்லாம் பரவியது. திருமகள் கடாக்ஷத்தாலே செல்வச் செறுக்குற்றுக் கலைமகளின் கருணைப்பூரிப்பால் களிப்பெய்தி முகவிலாசங் கொண்ட ஜனங்களெல்லாம் அங்கங்கே கும்பல் கூட ஆரம்பித்தனர். அவர்களிற் சிலர் "ஆகா இம் மகா கவி யென்ன சாமானியனா! மச்சமுட்டையைத் தன்னிச்சைபோல இராமாயண காவியமாகக் காண்பித்தவனல்லவா? அது மாத்திரமா! முன்னம் இவனொரு ஏழைப் பிராமணன் வீட்டு சிராத்தத்தில் தேவ கங்கையாகிய பாகீரதியை வரவழைத்து அவ் வீட்டில் வந்திருந்த எல்லோரையும் பரிசுத்தபாவனராக்கிப் பிண்டப் பிரசாதத்தால் பிதுர்த் தேவதைகளைத் திருப்திசெய்துவைத்தவனுமல்லவோ. அப்படிப்பட்டவன் இதற்கும் ஏதோ ஒருவகை தேடியிருப்பான்" என்றனர்.

மற்றும் சிலர், "இவன் சாக்ஷாத் சாமுண்டியின் வரப்பிரசாதி; இவனுக்கு இது ஒரு பெரிய காரியமல்ல" என்றனர். அரசன்முதலிய பெரியோர்களெல்லோரும் மேன் மாடிகளுக்குச் சென்று அங்கிருந்து மிவ்வதிசயத்தை எதிர்பார்த்திருந்தனர். அந்தப்புரவாசிகளெல்லாம் சாளரமுதலிய சன்னல் வழியாகச் சந்திரோதயத்தை எதிர்பார்த்தனர். புர ஜனங்களெல்லாம் கூடகோபுரங்கள் மேலேயும், அங்கங்கேயுள்ள உன்னதசௌதங்களின் உபரி பாகங்களிலும் தாவிச் சென்று மிகு ஆவலோடும் மேலே கிளம்பி வரப்போகும் நிலா வொளியை நிமை கொட்டாமல் பார்த்திருந்தனர்.

அப்போது அகிலாண்டேஶ்வரியும் அன்பன் மனங் குளிரவும், அவன் வாக்குப் பொய்யாதிருக்கவும், அரசன்முதலிய அறிவிற் சிறந்தவர்களெல்லோரும் அத்தியாச்சரியவந்தாளாய் அப்படியே ஆநந்தவாரியி லாழ்ந்துபோகவும், புர ஜனங்களெல்லாம் பிரமித்துப் புகழ்ந்து கொண்டாடும்படித் தன் மார்பி லணிந்திருக்கும் சாமந்திப் புஷ்பத்தை யுருவி ஆகாயத்தி லெறிந்தனள். அவைகளெல்லாம் அங்கங்கே ஆகாயத்திற்றங்கி நிலா வொளி வீசின. அப்போது தன் வலது காது ஜீவரத்தினக் குழையை வாங்கிப் பூர்வ திக்கிலே போம்படி விட்டனள். அதுவும் அங்கிருந்து புறப்பட்டு மேலே கிளம்பிக் கண்டவ ரதிசயிக்கும்படி பூர்ண நிலவாய்ப் பொலிந்து தோன்றியது. அதற்குப் பிறகு அத் தயாபரியால் விசும்பி லெறிந்த மெல்லிய தாழம்பூ இதழ்களானவை சந்திரிகையைப் பரப்பி அத் தாரா நகரமும் அதை யடுத்த பிரதேசங்களும் நில வொளி கொள்ளும்படிச் செய்தன.

அப்படிப் பூர்ண நிலவில் சோபிதங் கொண்ட அந்தத் தினமானது சாதாரண பௌர்ணமி தினத்தைவிட ஆயிரமடங்கு அதிகமாகச் சிறந்து விளங்கியது. அதைக் கண்ட போஜனும் அவன் ஆஸ்தானத்து வித்வரத்தினங்களும் காளிதாசனை நாடிச்சென்று, அவனைக் கண்டு அப்படியே அவன் பாதங்களில் விழுந்து பணிந்து அநேகவிதமாகக் கொண்டாடினார்கள். அத் தாரா நகரவாசிகளெல்லோரும் ஒருவர் தவறாமல் இவ் வாச்சரியத்தைக் கண்டு களித்து ஆநந்தப்பெருக்கால் பரவசமாயினர். இப்படித் தெய்வீகமாக வுண்டானநில வொளியானது அத் தாரா நகரத்தைச் சுற்றிலும் இருபது குரோச தூரத்திற்குப் பிரகாசித்தது.

---

## உலோமகையின் சாப நிவிர்த்தி

அப்படி அமாவாசையிற் பூர்ண நிலவு புறப்பட்டதென்று பட்டணமெல்லாம் ஒரே ஆரவாரமாகக் கோஷிக்கவே, விலாசவதியும் "இதென்ன" என்று பார்க்கும்படி வெளியே வரவும், 'இதுதான் சமயம்' என்று அவள் கையினின்று கீழே விடப்பட்ட ஆண் பக்ஷியும் சிவ்வென்று பறந்து அவ் வீட்டினின்று வெளிக்கிளம்பிச் சதாநீகனிடம் வந்து "ஐயனே! நம்மிஷ்டம்போல அமாவாசையும் பூர்ண நிலவு மொன்றுகூடியது. நீயு முன்தேவியைக் கூடும் சமயம் இதுவேயாகும்," என்று சொல்லி அவ்விடத்திற்குச் சற்றுத் தூரத்திலுள்ள அழகிய வேரர் வட விருக்ஷத்தின் கிளைகளி லொன்றில் தங்கியிருந்தது.

சதாநீகனும் தன் பத்தினியோடே அந்த அடர்ந்த தோப்பின் ஒருபுரத்திலே அநேகவித புஷ்பராசிகளாலும் இளந்துளிர்களாலும் சயனமொன்றைச் செய்து, அதனிடத்திலே பொருந்தி, அத் தெய்வீக நிலவொளியிலே,

"ஒருவர்மன மோருவருரை யோத்துடல மெங்கும்
இருவருயி ரோன்றியெழி லோன்றென நயந்தே
உருவிருவ ரானவகை யோண்விழியி லோட
மருவிவளர் காதலெனு மாயவலை பட்டே."

உருவிரண் டாங்கு மீங்கி யோருவரை யோருவர் நோக்கி
இருவரும் தம்மி லேதா மின்பமற் றினிய சோல்வான்
மருவியே யிருந்தா ராங்கே மனமலர்ந் துவகை போங்க
திருவிண நீகர்த்த மாதின் தீவிண யகன்ற தம்மா!

## சதாநீகன் மறுபடியும் அரசாக்ஷியை யடைதல்

இப்படி யிவர்கள் சாபம் நீங்கவும் இதயம் பூரித்த இன்ப வள்ளலாகிய சதாநீகனும் உதயத்திற்கெல்லா மெழுந்து உலோமகையை எழுப்பிக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, கடவுளைத் தொழுது நின்றனர். இதற்குள்ளாக ஆண் பக்ஷியும் தன் பேடோடு கூடிக் கொண்டு அங்கே வரவும், அவைகளி னுதரவால் அநேக காடுகளை

யும்-வின வனாந்தரங்களையும்-நாடுநகரங்களையும் - பாரிய பட்டணங்களையுங் கடந்து சென்று தனது நாட்டை யடைந்து, மந்திரிப் பிரதானிகளெல்லோரும் எதிர்கொண்டு வரவும் பட்டணப் பிரவேசம் செய்து, நல்ல முகூர்த்தத்திலே சுபவேளையிலே இராச்சியம் தன் வசமாகவும் சிம்மாதனத் தமர்ந்து, செங்கோற் கையிற்கொண்டு, தேசம் செழிக்குப்படித் தேவியுந் தானுமாய்ச் சகல சம்பத்தோடு மகா வைபவத்துடனே ஷடி பக்ஷிகளிரண்டையும் அன்போடு மாதரித்து உலகாண்டுவந்தனன்.

ஓம் சுபம்.

முற்றும்

திருமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1929.

ஸ்ரீமத்

## தாயுமானசுவாமிகள்

# திருப்பாடற்றிரட்டு

### மெய்கண்ட விருத்தி யுரையுடன்

[730-பக்கம்: ஸ்வாமிகளின் திருவுருவப்படத்துடன்
உயர்ந்த காலிகோ பைண்டு: விலை ரூபா **4.**]

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபராகிய சிவபெருமானு
பூரண திருவருட்பிரகாசப் பரமபுருஷராகியும், அறுபான்மும்மை நாயன
ளொருவராகிய திருமூலநாயனர் பரம்பரையில் அவதரித்து மௌனதே
டம் ஞானேபதேசம் பெற்றவராகியும், எண்ணிறந்த வடமொழித் தெ
ழிச் சாத்திரங்களில் வல்லவராகியும், சிவஞானபோதச் செல்வராகியும,
முத்தனுகிய முதல்வன் அநாதியில் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்
சாரமாக விளங்கும் **ஞானசாத்திரங்களின்** அருங்கருத்தினையே தோத்
கிச் சிவஞானத் தபோதனர்களாகிய சமயகுரவர்களையும், அத்துவித மெ
டார் முதலிய சந்தான குரவர்களையும் வாய்நிரம்பத் துதித்த திருவருட்
செல்வராகிய **தாயுமானசுவாமிகள்** தமது சுவாநுபூதியினிற் பிறந்த
சின்மய மதுரமான செம்பாடற்றிரட்டினுக்கு அநேகர் பதவுரையும் பெ
ரையும் எழுதியிருக்கின்றனர். அவை **தாயுமானர்** உண்மைக்கருத்தைத்
விப்பனவல்ல. **தாயுமானசுவாமிகள்** வேதாந்த சித்தாந்த சமரசபாவ
யவராதலால் அவருடைய உண்மைக்கருத்து ஈதென்று ஒவ்வொரு
களிலும் விளங்கும்படி, மதுரைத் தமிழ்ச் சங்கத்து மகா வித்வான் சித்து
டம் அஷ்டாவதானம் **பூவை. கலியாணசுந்தர முதலியாரால்** பதவு
விசேடவுரையும், பிரமாணங்களும், உபநிடத கருத்துக்களும் எடுத்து
ஒவ்வொரு பாடலுக்கும் இன்றியமையாத பெரியோர்களுடைய ஞான
ரங்களிலிருந்து மேற்கோட்பாக்கள் உதகரிக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரையில் தாயுமானருடைய பாடலுரையைப் படித்த அறிஞ
மெய்கண்ட விருத்தியுரையையும் படிப்பார்களானல் மற்ற வுரைகளுக்
வுரைக்கும் உள்ள தாரதம்மியம் இன்னதென விளங்கும்.

இந்நூலிற் பலவிடங்களில் பலவகையான உபநிடதக் கருத்துகளை
வென விளக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் மூன்றுபதிப்புகள் விரைவில் செலவழிந்துவிட்ட
போது நான்காம்பதிப்பு வெளிவந்திருக்கிறது. உடனுக்குடன்செலவழி
தால் உடனே புஸ்தகத்திற்கு முந்துவது மிக நன்று.

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்**
20. வைத்தியநாதமுதலி தெரு

# விநோதரசமஞ்சரி.

[உயர்ந்த கிளேஸ் கடிதம்: காலிகோ பைண்டு விலை ரூபா **2.**]

சென்னை துரைத்தன வித்தியாசாலையில் சென்ற நூற்றாண்டின் இடைக் காலத்தில் திராவிடாந்திர பாஷா போதகராயிருந்த **பேர்ஸிவல்** துரையவர்களுடைய அனுமதிக்கொண்டு, அவ்வித்தியாசாலையில் பிரதம தமிழ்ப்பண்டிதராயிருந்த **அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார்**வர்கள், ஆடவரும் மகளிரும் அவசியமாக அறியவேண்டிய நூற்களிலுள்ள கருத்துக்களைவகுப்பினுட் படுத்தியெடுத்து விளக்கியும், அவற்றின் இடையிடையே சமயோசிதமும் சாதுரியமுமாகிய பற்பல மொழிகளைச் சேர்த்தும், வாசிப்பவர்களுடையநாவிற்கு நயமும், செவிக் கின்பமும், மனதிற்கு மகிழ்ச்சியும், அறிவுக்கு விருத்தியும், பொழுதுபோக்கற்கு உல்லாசமும் தரத்தக்க இனிய செந்தமிழ் நடையில் அவ்விஷயங்களை ஒன்றன்பின்னொன்றாக தொகுத்து ஒரே புத்தகமாய் அச்சிட்டு அப்புத்தகத்திற்கு **'விநோதரசமஞ்சரி'** என்னும் பெயருமிட்டார். ஆயினும் இக்காலத்து வெளிவந்துலவும் பதிப்புக்களிற் காணப்படும் பலவிதவழுவுக்களைக் களைந்து விஷயங்கள் முன்பின் நிற்கவேண்டிய முறைமையு மனுசரித்து வேறு விநோதக் கதைகளையுஞ் சேர்த்து ஒரு நூதனப்பதிப்பு வெளிக்குக் கொண்டுவரவேண்டுமென்று விரும்பிய பல நண்பருடைய விருப்பத்திற்கிசைய 'காளிதாஸப் புலவருடைய சரித்திர'மும் 'ஓர் பதிவிரதை சரித்திர'முஞ் சேர்த்து வெளியிட்டனம்.

## இதிலடங்கிய விஷயங்கள்:

1. தெய்வங் கொள்கை
2. கற்பு நிலைமை
3. இதவாத்திய விநோதம்
4. கற்றாய்ந் தொழுகல்
5. பயனிலுழவு
6. மகாபண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது
7. காலபேத வியல்பு
8. நன்றி மறவாமை
9. கம்பர் சரித்திரத்தின் ஒருபகுதி
10. கம்பர் இராமாயணம்பாடி அரங் கேற்றியது
11. ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடியது
12. ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண்பேசியது
13. புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடியது
14. காளமேகப்புலவர் சரித்திரம்
15. ஏகம்பவாணன் சரித்திரம்
16. ஔவையார் சரித்திரம்
17. அவிவேக பூரணகுரு கதை
18. சிறுகூனன் கதை
19. ஓர் பதிவிரதை சரித்திரம்
20. காளிதாஸப்புலவர் சரித்திரம்

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

20, வைத்தியநாதமுதலி தெரு, சென்னை.